University of Madras.

B. A. EXAMINATION OF 1897.

A TAMIL TEXT BOOK

CONTAINING

Tirukkural, Kandapuranam, Kambaramayanam, and Bhagavatham,

WITH

Copious Notes and Explanations

BY

V. M. SATAKOPARAMANUJACHARIAR,
Head Tamil Pandit, Ch. of Scot. Miss. College, Madras,

AND PUPIL OF

P. M. SRINIVASACHARIAR,
Tamil Pandit, Presidency College, Madras.

Price—Rs. 2 per Copy. Postage—One Anna Extra.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS · MADRAS · 23 MAR. 95

Madras:
PRINTED AT THE MEMORIAL PRESS.
1895.

N. B. The remaining portion of this Text Book will be ready in April its price is Re. **1-8-0** *per copy. Postage—One Anna extra.*

1064
494·8146

ஸ்ரீ

முகவுரை.

அருந்தமிழறிந்த அன்பர்களே! மகாகனம் பொருந்திய சென்னை யூனிவர்சிடியாரால் பி - ஏ பட்டப்பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நூல்களுக்குச் சென்ற ஆறேழு வருஷங்களாக உரையெழுதிப் பதிப்பித்துப் பிரசுரஞ்செய்து வந்த யான், சென்ற மூன்றுவருஷங்களிற்போலவே இவ்வருஷமும், ௧௮௯௭ - ம் வருஷத்து பி - ஏ பாடபுத்தகத்துடனே ௧௮௯௯ - ம் வருஷத்து எப் - ஏ பாடபுத்தகத்துக்கும் மாணாக்கர்களுக்குத் தெளிவாகப் பொருள்விளங்கும்படி மிகஎளிய நடையில் ஒருஉரைசெய்து அச்சிட்டு வெளிப்படுத்தலானேன்.

அவற்றுள் பி - ஏ பாடபுத்தகத்துப் பாகங்களுள் கந்தபுராணம் கம்பராமாயணம் பாகவதம் என்னும் இவற்றிற்கு, பெரியோரிடத்துக் கற்றுங் கேட்டும் உள்ளவற்றில் மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டதொழிய அவன்கையில் அகப்படாதபடி நெஞ்செனுந்துணைவன் நிறுத்திவைத்தவற்றைக்கொண்டு, ஆங்காங்கு அவசியமான பதப்பிரயோஜநங்களையும் இன்றியமையாத இலக்கணக்குறிப்புக்களையும் முக்கியமான புராணகதைகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருளும் கருத்தும் விசேஷார்த்தங்களும் சொற்சுவை பொருட்சுவை முதலியனவும் யாப்பிலக்கண அணியிலக்கணங்களும் அங்கங்கே இனிது விளங்குமாறு, சைவ வைஷ்ணவ சம்பிரதாயங்களுக்குப் பொருந்த, முதனூல்களோடு முரணபடாதபடி உரைஎழுதலாயிற்று.

திருக்குறளுக்குப் பரிமேலழகருரையே பாடமாதலால், அதற்கு இலக்கணம்முதலியவிசேஷங்களை நன்றாகஎடுத்துக்காட்டிக் குறிப்பு எழுதப்பட்டது.

கந்தபுராணத்திற் சிலசைவசமயக்கோட்பாடுகளை யாழ்ப்பாணத்துநல்லூர் ம - ா - ா - ஸ்ரீ. சதாசிவப்பிள்ளையவர்கள் மிக்க அன்புடன் எனக்குத் தெரிவித்தது பெரிய உதவியாயிருந்தது.

இராமாயணவுரையிற் சேஷித்தபாகமும், பாகவதவுரையும் அச்சிலிருக்கிறது; இன்னும் இரண்டுமாதத்தில் வெளியாகும்.

பரீக்ஷைக்குப்படிக்கும் மாணாக்கர்களுக்குப் போதுமான அளவு எனது சிற்றறிவுக்கு எட்டியமட்டிற் செய்த இவ்வுரைகளில் உள்ள குற்றங்குறைகளையாயினும், எனக்குப்புலப்படாத அரிய பெரிய வேறுபல விஷயங்களையாயினும் எடுத்து எவராயினும் எனக்குத் தெரிவிப்பாராயின், அவரைப் பேருதவிசெய்தவராக நன்குமதித்து மகிழ்வோடு அவர்பக்கல் நன்றிபாராட்டுவதுடன், அவ்விஷயங்களை அவர்பெயருடனே பிரசுரஞ்செய்து மாணாக்கர்களுக்குக் கொடுத்துப் பயன்படும்படி செய்யசித்தனாயிருக்கின்றேன்.

ஜய ௵ }
தை ௴ }

வை - மு - சடகோபராமாநுஜாசாரியன்.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

நூலாசிரியர்கள்வரலாறு.

க. திருக்குறள், அறத்துப்பால்:—

			செய்யுள்.
உக-ம்	அதிகாரம்.	தீவினையச்சம்	க0
உஉ-ம்	,,	ஒப்புரவறிதல்	க0
உந-ம்	,,	ஈகை	க0
உச-ம்	,,	புகழ்	க0
உரு-ம்	,,	அருளுடைமை	க0
உசு-ம்	,,	புலான்மறுத்தல்	க0
உஎ-ம்	,,	தவம்	க0
உஅ-ம்	,,	கூடாவொழுக்கம்	க0
உகூ-ம்	,,	கள்ளாமை	க0
ந0-ம்	,,	வாய்மை	க0

உ. கந்தபுராணம், உற்பத்திகாண்டம்:—

(நக) திருவவதாரப்படலம் ... ... கஉஎ

ந. கம்பராமாயணம், பாலகாண்டம்:—

(அ) வேள்விப்படலம் ... ... ருக

(கூ) அகலிகைப்படலத்தில் ... ... சுரு

ஆக நருச.

இனி வரவேண்டியவை.

(கூ) அகலிகைப்படலத்தில் ... ... உக

(க0) மிதிலைக்காட்சிப்படலம் .. .. கருஎ

(கக) குலமுறைகிளத்துபடலம் ... ... உகூ

ச. பாகவதம், (முதற்கந்தம்):—

பாயிரம்.. ... ... சு

(க) மாயவனவதாரமுரைத்தவத்தியாயம். ... சக

(உ) நாரதர்தோற்றமுரைத்தவத்தியாயம் ... கரு

(ந) தன்மபுத்திரனரசியலடைந்தவத்தியாயம் ... சரு

(ச) கண்ணபிரான்றுவரையடைந்தவத்தியாயம் ... சுச

(ரு) பரீட்சித்துவின்றோற்றமுரைத்தவத்தியாயம் ... உ0

ஆக நகஅ.

1669

494 : 1186

திருவள்ளுவர்.

திருக்குறள் செய்தருளிய தெய்வப்புலவராகிய திருவள்ளுவர், பிரமதேவரது அம்சமாய், சோழியப்பிராமணராகிய பகவனென்பவருக்குங் கருவூர் ஆதியென்பவளுக்குந் திருமகனாய்த் தோன்றி, தொண்டைமண்டலத்தில் மயிலாப்பூரில் ஒரு வள்ளுவர்மனையில் வளர்ந்து வந்தனர். அங்ஙனஞ் சிலநாட்சென்றபின், போகர்முதலியசித்தர்கள் வசிக்கும் மலையிற் சென்று தவஞ்செய்யலுற்றனர். அக்காலையில், தொண்டைநாட்டில் ஒருவேதாளம் பயிர்களை அழித்து உயிர்களைவதைத்துவர, காவேரிப்பாக்கத்திலிருந்த மார்க்கசகாயரென்பவரது வேண்டுகோளால் அவ்விடஞ்சென்று அதனைவென்று அனைவரையுங்காத்தனர். அவரது பெருமையைக் கண்டு அம்மார்க்கசகாயர் தம்மகள் வாசுகியென்பவளை விவாகஞ்செய்துகொடுக்க, அவர்சிலநாள்அங்கிருந்து பின் மனைவியுடனே மயிலைக்கு வந்து, செய்தொழிலிற் பாவமில்லது நெய்தொழிலென நிச்சயித்து, அங்கிருந்த ஏலேலசிங்கனென்னும் வணிகனிடத்து நூல்வாங்கி ஆடைநெய்து காலங்கழித்து, பலர்க்கு ஞானோபதேசஞ்செய்து மிக மகிமையுற்று வாழ்ந்திருந்தனர். அங்ஙனமிருக்க ஒருநாள் ஏலேலசிங்கனது மகனாகிய அழகானந்தன் முதலியோர் திருவள்ளுவரைநோக்கி, 'கற்றற்கு எளிதாய் இம்மைமறுமை இரண்டையுந்தருவதாகிய ஒரு நூலை இயற்றித்தரல்வேண்டும்' எனவேண்ட, அவர் 'அங்ஙனமே ஆகுக' என்று அனைவர்க்கும் பயன்படுவதாக வேதாகமசாரங்களைத் திரட்டி அறம் பொருள் இன்பமென முப்பாலாக்கி ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது குறள் வெண்பாக்களால் ஓர்நூல்செய்து அதற்குத் திருவள்ளுவரென்னுந் தம்பெயரைநிறுத்தி, அதனை மதுரைக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றஎண்ணி எடுத்துக்கொண்டு புறப்பட்டு இடைக்கழிநாட்டின்வழிச்செல்ல, வழியில் தம்உடன்பிறந்தவளாகிய ஔவையும், இடைக்காடரும் எதிர்ப்பட, அவர்களையும் அழைத்துச்சென்று மதுரையை அடைந்து, தாம் இயற்றிய நூலை எடுத்தோதி அரங்கேற்றினர். அதனைக்கேட்ட உக்கிரப்பெருவழுதியார்முதலானவர்கள் மகிழ்ந்து வள்ளுவரைப் புகழ்ந்து துதித்தனர். அவர் அப்பொழுது நக்கீரர் முதலிய சங்கப்புலவர்கள் வினவிய வினாக்களுக்குச் செந்தமிழ்ப்பாவால் விடையளித்து அவர்களை வென்றனர். அந்நூலுக்கு இணை எதுவுமில்லையெனச் சங்கப்பலகையும் இடங்கொடுக்கவே, சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் வள்ளுவரையுந் திருக்குறளையும் புகழ்ந்து நாற்பத்தொன்பது வெண்பாப் பாடி அதனை மிகச் சிறப்பித்தனர்; அது 'திருவள்ளுவமாலை' எனப் பெயர்பெறும். இவ்வாறு தாம் இயற்றிய அரியபெரியநூலை அரங்கேற்றி அவர் திருமயிலைக்குத் திரும்பித் தமதில்லஞ்சேர்ந்து பழையபடியே நெய்தொழிலைக் கைக்கொண்டு பலநாள் சிறக்க இல்லறநடத்திவந்தனர்.

அங்ஙனமிருக்க, ஒருவர் அவரில்லின்கட்சென்று 'இல்லறமோ, துறவறமோ, சிறந்தது? அருளல்வேண்டும்' என்று பலநாள்காத்திருக்க, அவர் உத்தரமொன்றுஞ் சொல்லாமல் வந்தவரே அறிந்துபோம்படி ஒருநாள் தமதுமனையாள் கிணற்றிற் சலந் தூக்கிக்கொண்டிருக்கையில் அவளை அழைக்க அவள் பாதிக்கிணற்றளவில் தூக்கினகுடத்தை அவ்வாறேநிறுத்திவிட்டு வந்ததையும், அவள் தமக்குப் பழையதுபரிமாறிநிற்கையில் தாம் 'இது சுடுகின்றது' என அவள் சீக்கிரத்தில் விசிறிகொண்டுவிசிறியதையும், தாம் பகலில் நெய்யும்போது கையிலிருந்தகுழல் தவறிவீழ்ந்ததை எடுக்க மனைவியை 'தீபங்கொண்டுவா' என அவள்கொண்டுவந்ததையும் வந்திருந்தவர்கண்டு, 'கற்புடைமனையாள்வாய்க்கின் இல்லறமே சிறந்தது, இல்லையேல் துறவறமே சிறந்தது' என்று எண்ணி வள்ளுவரை வணங்கிப்போயினரெனவும்;

ஒருநாள் சாயங்காலம் அவர் தாம் நெய்த ஆடையை விற்றற்பொருட்டுக் கடைத்தெருவிற்கொண்டுபோய்க் கையிற்பிடித்துக்கொண்டு நிற்கையில், அவரது திருக்குறளைப் படித்த சிறுவனொருவன் அவர் கூறியபடி அவரிடத்து அனுஷ்டானமுளதாவென்று அறியவேண்டுமென ஆவல்கொண்டு அவரிடஞ்சென்று, அவரிடத்திலிருந்த கோடியைக் கையில்வாங்கி 'இதன் விலையென்ன' என வினவியதற்கு, அவர் ஒருபணமெனக்கூற, அவன் அதைக் குறுக்கேகிழித்து 'இப்பாதியின் விலையென்ன' என்றுகேட்க, அவர் 'அதன் விலை அரைப்பணம்' என்ன, மறுபடியும் அந்தப்பையல் அந்தப் பாதியையும் இரண்டாய்க்கிழித்து 'இப்பொழுது இதன்விலை யாது' என, அவர் 'கால்பணம்' என்ன, அதகேட்டு அச்சிறுவன் அவரது பொறுமையைக் கண்டு மகிழ்ந்து விலகிப்போய், பின்னும் அவர்பொறுமையைப் பரிசோதிக்கவேண்டுமென்று மறுநாள் அவர் வீட்டில் நெய்துகொண்டிருக்கையில் அங்குச்சென்று அவரில்லாளைச் சண்டைக்கிழுக்க, அவர் அதனைப்பார்த்துப்பொறுது வேலையைவிட்டு எழுந்து சென்று அவனைப் பிடித்து இறுக்கிக்கட்ட, அது கண்டு அச்சிறுவன் 'உமது புலமை பிறர்க்கு உபதேசித்தற்காகவே அமைந்ததுபோலும்; "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யிகழ்வார்ப் பொறுத்தல் தலை" என நீர் உமது நீதிநூலிற் கூறியது என்ன பயனுடையது' என, அவர் 'நீ எனது நீதிநூலை முற்றும் படித்திலைபோலும்; "செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க, செய்யாமை யானுங் கெடும்" என மேல் அந்நூலிலேயே கூறப்பட்டிருப்பதை ஆய்ந்து அறிவாயாக' என்ன, அதனைக் கேட்டு அவன் அவரது திறத்துக்கு வியந்து, செய்தபிழையைப்பொறுக்கும்படிவேண்டி, ஒவ்வொரு நீதியுங் காலதேசவர்த்தமானங்களை அனுசரித்து உணரத்தக்கதென அறிந்துகொண்டு, அவரிடம் விடைபெற்றுச் சென்றனனென்னவும் ஐதிஹ்யங்கள் வழங்குகின்றன. இவ்வாறு பல அற்புதங்களைச் செய்துகொண்டிருந்து, அம்மயிலாப்பூரிலேயே வள்ளுவனார் ஒரு மாசிமாதத்தில் உத்திரநட்சத்திரத்தில் முத்தியடைந்தனரென்பர்.

உக்கிரப்பெருவழுதியார்காலத்துக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றியதெனவே, இவர்காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருஷமானதென விளங்குகின்றது. இவ்வரியபெரிய நூலினது சொற்பொலிவுபொருளமைவுமுதலிய பெருமைகளை இத்தன்மையவென எடுத்துரைக்க இயலாமல் ஔவையே "அணுவைத்துளைத்தேழ்கடலைப்புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என வியந்து கூறியிருத்தலின், இதன்பெருமை இத்துணைத்தென அளவிடுதற்கு அருமையானது. நாற்பத்தொன்பதின்மர்புலவருங்கூடி மனத்தாலும் வாயாலும் வாழ்த்திய மாலையின் சாரமொன்றுமே, இந்நூலின்பெருமையை நன்குபுலப்படுத்தும். இனி, "பல்காற் பழகினுந் தெரியா வுளவேல், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கும்" எனப் பிற்காலத்தாரும் இதன் பெருமையை ஓதியிருத்தல் காண்க.

இத்திருக்குறள், "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல, மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே, கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" எனக் கூறப்பட்ட பதினெண்கீழ்க்கணக்குக்களுள் ஒன்றுமென அறிக.

இனி, இத்திருக்குறளுக்கு உரைசெய்தவர்கள் - தருமர், மணக்குடையர், தாமத்தர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் எனப் பதின்மர். இப்பதின்மருரையுள்ளும் பின்னர்ச் செய்யப்பட்டதும் மிகச் சிறந்ததும் பரிமேலழகருரையே யாதலின், இதுவே இக்காலத்து மேலாகவழங்கிவருகின்றது. அவ்வுரையாசிரியராகிய

பரிமேலழகர்

இத்தொண்டைநாட்டிற் சிறந்த காஞ்சீபுரத்திற் பிறந்தவர். இவரது சொற்போக்கினாலும், உரைத்திறத்தாலும் இவர் அந்தணரெனத் துணியப்படுகின்றது. இவரை வைஷ்ணவரெனப்பலருஞ் சைவரெனச்சிலருஞ் சொல்லுகின்றனர். இவர் இளமையிலேயே வடமொழியில் தருக்கம் வியாகரணம் முதலிய சாஸ்திரங்களைக் கரைகண்டுணர்ந்து, தென்மொழியிலும் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய நூல்களிற்பல்காற்பயின்று புலவர் திலகமாய்ப் புகழ்பெற்றிருந்தனர். இங்ஙனமிருப்பவர், தமது புலமைபுலப்படுமாறு பெரியதோருரையியற்றக்கருதி, அதற்குத் திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளே ஏற்றதென அறிந்து, முன்னரே அந்நூலுக்கு நச்சினார்க்கினியர்முதலியோர் ஒன்பதின்மரும் இயற்றிய உரைகளை உற்றுநோக்கி, அவற்றின்கண் உளவாய குற்றங்களைந்து குறைபெய்து சிறந்ததோருரையியற்றி, அதனைப் பாண்டியனவைக்களத்து அரங்கேற்றச் சென்று தமதுகருத்தை அரசனுக்கு அறிவிக்க, 'ஏனையோருரைக்கும் உமது உரைக்கும் உள்ள வாசி விளங்குமாறு அற்புதமொன்று காட்டுவீராயின், உமது உரை ஏற்றமுடையதாக அங்கீகரிக்கப்படும்' என வேந்தன் கூறியதற்கு, அவர் 'அங்ஙனமேஆகுக' எனச் சம்மதிக்க, அரசன் 'மற்றையுரைகளைப்போலன்றி நுமதுரையே நூலாசிரியரது கருத்துக்கு இணங்கி ஏற்றமுடையதாயின், நீர் இவ்வெண்கலப்பரிமேல் ஏறியிருந்து அரங்கேற்றுவீராக: அப்பொழுது இப்பரி இடம்பெயர்ந்து இயங்குமாயின், நும் உரை மெய்யுரையா மெச்சப்படும்' என்று தனது சபையில் இருந்ததோர் வெண்கலக்குதிரையைக் காட்ட, அவர் அவ்வாறே அப்பரிமேலிருந்து தமது உரையை அரங்கேற்றியதாகவும், அப்பொழுது அப்பரி இருப்பிடம்விட்டு இயங்கியதாகவும், அதனால் அவர்க்கு 'பரிமேலழகர்' எனச் சிறப்புப்பெயர் அமைந்ததாகவுங் கூறுகின்றனர். அங்ஙனம் அரங்கேற்றுகையில், அங்கு இருந்த நச்சினார்க்கினியர் அவ்வுரையுள் ஆங்காங்குள்ள நயங்களைக் கேட்டு வியந்ததன்றியும் "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, யுடம்போ டுயிரிடை நட்பு" என்னுந் திருக்குறளில் 'குடம்பை' என்பதற்கு ஏனையோர் கூறியவாறு கூடெனப் பொருள்கூறாது உயிர் மீண்டும்உட்புகுதற்கேலாததாய் உடன்பிறந்ததாகிய உடலோடு உவமைபொருந்த முட்டையெனப் பொருளுரைத்ததுகேட்டு உவப்புஉள்ளடங்காமல் உடனே அவரை ஆலிங்கனஞ்செய்து ஆமோதித்தனரென்கிறார்கள்.

அக்காலத்தவர் இவ்வுரைக்குச் சிறப்புப்பாயிரமாகக் கூறிய "திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங், கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான், பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனு, பன்னு முயர்நாமன் வந்து," "பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள, நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற், பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன், றெரித்தவுரை யாமோ தெளி" என்னுஞ் செய்யுட்களாலும் இவ்வுரையின் பெருமை நன்கு விளங்குகின்றது.

இந்நூற்கு இவர் உரையெழுதி ஆயிரத்திருநூறுவருஷத்திற்குறையாது.

ஆசிரியர்பெயர்.		நூலின்பெயர்.	
திருவள்ளுவர்.	செந்நாப்போதார்.	திருக்குறள்.	தெய்வநூல்.
தேவர்.	பெருநாவலர்.	முப்பால்.	திருவள்ளுவர்.
முதற்பாவலர்.	நான்முகனார்.	பொய்யாமொழி.	தமிழ்மறை.
மாதானுபங்கி.	புலவர்.	வாயுறைவாழ்த்து.	பொதுமறை.
		உத்தரவேதம்.	திருவள்ளுவப்பயன்.

ஸ்ரீ

கடவுள் துணை.

திருக்குறள்.*

பரிமேலழகருரை.

அறத்துப்பால்.

உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள், நான்கு; அவை - அறம், பொருள், இன்பம், வீடு என்பன: அவற்றுள், வீடென்பது - சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது, இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன, ஏனை மூன்றுமேயாம். அவற்றுள், அறமாவது - மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்; அஃது - ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்: அவற்றுள், ஒழுக்கமாவது - அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளில் நின்று அவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்; வழக்காவது - ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார் அதிகாரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற் சொல்வது: அது கடன்கோடல் முதற் பதினெட்டுப் பதத்ததாம்; தண்டமாவது - அவ்வொழுக்க நெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்தற் பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல். இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்தற் பயத்தவாயவல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பிலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும்,

---

* (குறிப்பு.) சிறுமையுணர்த்துங் குறளென்னும் பண்புப்பெயர் - ஆகுபெயராய் வெண்பாவிற் சிறுமையுடையதாகிய இரண்டடிப்பாவை உணர்த்தி, பின் கருவியாகுபெயராய் அக்குறள்வெண்பாவாலாகிய நூலை உணர்த்தி, இந்நூற்குக் காரணப்பெயராயிற்று; இது, இருமடியாகுபெயர்.

குறள்வெண்பாவாவது - இரண்டடியாய், ஈற்றடி முச்சீரடியாகவும் ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர்வெண்டளையுங் கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெறாது, காசு பிறப்பு நாள் மலர் என்னும்வாய்பாடுகளில் ஒன்றால் முடிந்து, ஒருவிகற்பத்தாலாயினும் இருவிகற்பத்தாலாயினும் வருவதாம். அகவற்சீர் என்றது, ஈரசைச் சீர்களை. வெண்சீர் வெண்டளையாவது - காய்முன் நேர் வருவது; இயற்சீர்வெண்டளையாவது - மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது: "காய்முன் நேரும் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது வெண்டளை."

இத்திருவள்ளுவரையுந் திருக்குறளையும் பற்றிக் கல்லாடத்திலும் மணிமேகலையிலுங் கூறப்பட்டிருத்தலாலும், இறையனாரகப்பொருளினதுரையில் திருக்குறட்பாக்கள் எடுத்து ஆளப்பட்டிருத்தலாலும், இந்நூல் கல்லாடம், மணிமேகலை, (சிலப்பதிகாரம்,) இறையனாரகப்பொருளுரை என்னுமிவற்றிற்கு முந்தியதென நன்கு அறியக் கிடக்கின்றது.

இவர் துமதம் ஜைநமாயிருக்கலாமென்று சிலர் ஊகிக்கிறார்கள்.

அவற்றை ஒழித்து, ஈண்டு, தெய்வப் புலமைத் திருவள்ளுவரால், சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப்பட்டது. அது தான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி, இல்லறம், துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது; அவற்றுள் இல்லற மாவது - இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத் துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவது.

(கு-பு.)இந்திரன்முதலியஇறையவர்பதங்கள்-போகஸ்தானங்கள்; இறையவர் - தேவர்கள், பதம் - இடம். அந்தமில் இன்பத்து அழிவில் வீடு - நலமந்தமில்லதோர் நாடு. அந்தம் - முடிவு: அந்தமிலின்பம் - நிரதிசய ஆனந்தம். எய்துதல் - அடைதல். மாந்தர் - மனிதர். உறுதி - நிலையான நன்மை; உறுதி தருவதனை 'உறுதி' என்றது, காரிய வாகுபெயர். பொருள் - புருஷார்த்தம்; சிலரால் வேண்டப்படும் பயன். அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை முறையே வடநூலார் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்பர். சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்து - மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதது. 'மெய்யுணர்தல்'என்னும் அதிகாரத்தால் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார். நூல் - சாஸ்திரம். அறம் - இன்னவை செய்யத்தக்கவை என நூல்களினால் வரையறுக்கப்பட்டது; அற - பகுதி, அம்-செயப்படுபொருள் விகுதி. இதற்கு எதிர்மொழி, மறம்: அதருமம்; அதற்கு - மறுக்கப்பட்டதென்பதுபொருள். ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்பவற்றை வடநூலார் முறையே ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம் என்பர். அந்தணர் - பிராமணர். வருணம் - ஜாதி. முதலிய என்றதனால், க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் முதலியோரைக் கொள்க. பிரமசரியம் - ஆசிரியனிடத்து ஓதிக் கற்று விரதங்காத்து விவாகமின்றி யிருக்கும் நிலை. நிலை-ஆச்சிரமம். முதலிய என்றதனால், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன கொள்க. கிரகஸ்தம் - இல்லறத்தின் வழுவாது மனையாளோடும் இல்லத்திற் கூடி வாழும் நிலை. வானப்பிரஸ்தம் - இல்லந்துறந்து இல்லாளோடாயினும் தனித்தாயினும் வனத்தில் தவஞ் செய்யும் நிலை. சந்நியாசம் - முற்றத்துறந்த நிலை. கடன்கோடல் முதற் பதினெட்டுப் பதத்தது - கடன் வாங்குதல், புதையல், உடையவ னல்லாதவன் விற்றல், கூடி மேம்படுதல், கொடுத்ததை மீண்டுங் கொடாமை, கூலி கொடாமை, கட்டுப்பாடு கடத்தல், விற்றுங்கொண்டும் உள்ளம் ஒப்பாமை, ஒப்பிப் பணி செய்யாமை, எல்லைவழக்கு, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, திருடு, வன்செய்கை, மாதரைக் கவர்தல், மாதர் ஆடவர் தருமம், தாயபாகம், சூது எனப் பதினெட்டு வகையது. வழீஇயினார் - தவறி நடந்தவர். ஒப்ப நாடி - பக்ஷபாதமில்லாமல் ஆராய்ந்து. அதற்குத்தக ஒறுத்தல்- அந்தந்தக் குற்றத்திற்குத் தக்கபடி தண்டித்தல். உலக நெறி நிறுத்தற் பயத்த வாய வல்லது - இவ்வுலக வழியிலே உயிர்களை நிலைநிறுத்துதலாகிய பிரயோசனத்தைக் கொண்டிருப்பனவே யல்லாமல். உறுதிபயத்தற் சிறப்பில - நன்மைதருஞ் சிறப்பை உடையனவல்ல. தேய இயற்கை - நாட்டுநடத்தை. ஈண்டு - இங்கே. புலமை-அறிவு. "மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற், றோன்றுமொழிப் புலவரது பிண்டமென்ப" என்னுந் தொல்காப்பியத்துச் செய்யுளியற் சூத்திரத்தால், இத்திருக்குறள், பால் இயல் அதிகாரம் என்னும் மூன்று உறுப்புக்களையும் அடக்கியதொரு பிண்டமாமெனவுணர்க.

இல்லறவியல்.

"இல்லறமல்லது நல்லறமன்று" என்று ஔவையார் கூறினபடி இருவகைஅறத்துள்இல்லறந் தலைமையானதாதலால், அதனைமுதலில்வைத்தார்.

உக-ம் அதிகாரம்.—தீவினையச்சம்.

அஃதாவது - பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனான் மெய்யின்கண்ணிகழும் பாவங்களெல்லாந் தொகுத்துவிலக்குகின்றாராகலின், இது பயனிலசொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - பு.) வினை - தொழில், கருமம்; அது - நல்வினை, தீவினை என இருவகைப்படும்: என்றது - புண்ணியபாவங்களை. தீவினையச்சம் - பாப பயம். பாவங்களாயின - பாவத்தைத்தரும்படியான கொடுந் தொழில்களை. அச்சம் - தொழிற்பெயர்; அஞ்சு - பகுதி, அம் - விகுதி, வலித்தல்- விகாரம். "அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும், எச்ச மிலவே பொருள்வயினான" என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய விதிபற்றி, தீவினையச்சம் என்பதை - தீவினையினின்று அஞ்சுதல் எனவும், தீவினையை அஞ்சுதல் எனவும் ஐந்தாம் வேற்றுமையாகவும் இரண்டாம்வேற்றுமையாகவும் விரிக்கலாம்; இவற்றுள், ஐந்தாம்வேற்றுமையாகவிரித்தல், வடநூல்மரபு: தீவினைக்கு அஞ்சுதல் என நான்காம்வேற்றுமையாகவிரித்தல், உலகவழக்காம். இதனான்- இவ்வதிகாரத்தால். மெய்யின்கண்ணிகழும்- உடம்பினாற் செய்யப்படுகின்ற. பயனிலசொல்லாமை - கீழ் இருபதாம் அதிகாரம். அஃதாவது - தமக்கும் பிறர்க்கும் அறம்பொருளின்பமாகிய பயன்களுளொன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பயனிலசொல்லாமையென்னும் அதிகாரத்தின் பின் தீவினையச்சமென்னும்அதிகாரத்தை வைத்ததற்குக் காரணம் என்னை யோவெனின்;—மனம் மொழி மெய் என்னும் திரிகரணங்களுள் முதலதாகிய மனத்தின் குற்றத்தைக் கீழ் அழுக்காறாமை, வெஃகாமை என்னும் இரண்டுஅதிகாரங்களாற் கூறி, அதன்பின் இரண்டாவதாகிய வாக்கின் குற்றத்தைப் புறங்கூறாமை, பயனிலசொல்லாமை என்னும் இரண்டுஅதிகாரங்களாற் கூறியவர், அதன்பின் மிச்சமாய்நின்ற மூன்றாவதாகிய காயத்தின் குற்றத்தைக் கூறவேண்டுவது முறைமை யெனக.

அதிகாரம் - அதிகரித்தல்; அது, இருவகைப்படும்: அவற்றுள் ஒன்று- அரசன் தான் இருந்த இடத்திலே இருந்து தன் நிலமுழுவதும் தன் ஆஜ்ஞையில் நடப்பச் செய்வதுபோல, ஒரு சொல் நின்ற இடத்தே நின்று பல செய்யுட்கள் தன் பொருளையே சொல்லிவருமாறு செய்வது; மற்றொன்று- சென்று நடத்துந் தண்டத்தலைவர்போல ஓரிடத்து நின்ற சொல் பல செய்யுட்களோடுஞ் சென்று இயைந்து தன் பொருளையே பயப்பிப்பது: இவற்றை முறையே வடநூலார் யதோத்தேச பக்ஷமென்றும், காரியகால பக்ஷமென்றுங் கூறுவர்; அவற்றுள் இங்கு அதிகாரம் என்றது, முதலிற் கூறியவாறு ஒரு பொருளையே குறித்துவரும் பல செய்யுட்களின் தொகுதியாகிய நாற்கூறுபாட்டை. பால் இயல் என்பவற்றிற்கும் இதுவே பொருளாயினும், இந்நூலிற் சங்கேதத்தால், பால் என்றது-பெரும் பிரிவுக்கும், இயல் என்றது - அதற்கு உட்பட்ட சிறு பிரிவுக்கும், அதிகாரம் என்பது - அதன் உட்பிரிவுக்குமாகக் கொள்ளப்பட்டது.

உ0க. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(இதன்பொருள்.) தீவினை என்னும் செருக்கு- தீவினையென்றுசொல்லப்படும் மயக்கத்தை. தீவினையார்-(முன்செய்த) தீவினையுடையார், அஞ்சார்—; விழுமியார் - (அஃது இலராகிய) சிரியார், அஞ்சுவர்—; (என்றவாறு.)

'தீவினையென்னுஞ்செருக்கு' எனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது. மேற்றொட்டுச்செய்து கைவந்தமையான் 'அஞ்சார்' என்றும், செய்தறியாமையான் 'அஞ்சுவர்' என்றுங் கூறினர்.

(கு - பு.) 'தீவினையென்னுஞ்செருக்கு' என்பதற்கு - பாவத்திற்குக்காரணமான அவித்தையென்று பொருள்; இதிலே, தீவினை - அவித்தையின் பயனாதலால், காரியம்: செருக்கு-அவிச்சை [மனமயக்கம்]; இது-காரணம்: [illegible]ாகிய தீவினை காரணமாகிய செருக்காகக் கூறப்பட்டது. செருக்கு, மயக்கம், விபரீதஞானம், அவிச்சை என்பன - ஒருபொருட்சொற்கள். அவிச்சையாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையெனவும் மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்கநூல்வழக்குக்களை மெய்ந்நூல்வழக்கென்று துணிதல்: குற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றைப் பிறிதொன்றாகத்துணிதலும் அது. அதுவாகிய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருளினிடத்துச்செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலையினிடத்துச் செல்லுங் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்து என்றார்; இவை-அவித்யா, அஸ்மிதா, ராகம், அபிநிவேசம், த்வேஷம் என்னும் பஞ்சக்கிலேசமெனப்படும்: இவற்றுள் அகங்காரம் அவிச்சையிலும், அவாவுதல் ஆசையிலும் அடங்குதலால், தமிழ்நூலார் காமம் [ஆசை], வெகுளி [கோபம்], மயக்கம் [அவிச்சை] எனக் குற்றம் மூன்று என்பர். இந்த ஐவகைக்குற்றங்களுள் அவிச்சை மற்றையநான்கிற்குங் காரணமாதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி, அதனையே தீவினைக்குக் காரணமாக்கிக் கூறினார்; மேல் "பிறப்பென்னும் பேதைமை" என்பதுபோல. மயக்கம் [அவிச்சை] கருமத்துக்குக்காரணமாதலை "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற, னாமங் கெடக்கெடு நோய்" என மேல் மெய்யுணர்தலென்னும் அதிகாரத்திற் கூறுவதனாலும் அறிக. இனி, தீவினையென்னுஞ் செருக்கு என்பதற்கு - கொடுந்தொழில் செய்தலினால் வருங் களிப்பு எனப்பொருள்கொண்டு, தீவினையென்னுங் காரணம் செருக்கென்னுங் காரியமாகக் கூறப்பட்டதென்றார், பிரயோகவிவேகநூலுடையார்; அதனை அந்நூலில் "மருளறு காரணங் காரியம் பேரொடு வந்தியையு, மிருளறு மொண்குணப் பேர்குணிப் பேர்வினை யோடியையும், பொருள்வினை மற்றோர் பொருளினுந் தோன்றும் புலத்தொடுமோர், தெருளுறு பண்பு புலனிவை மாறியுஞ் சேர்ந்திடுமே" என்னும் பாட்டின் உரையிற் காண்க. இவையெல்லாம் இலக்கணநூலில் உபசாரவழக்கு எனப்படும்; அஃதாவது - காரணம் காரியமாகவும், காரியம் காரணமாகவும், குணம் குணியாகவும், குணி குணமாகவும், ஒருபொருளின்வினை மற்றொருபொருளின் வினையாகவும், இடத்துநிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேலாகவும், சினைவினை முதல்வினையாகவும், முதல்வினை சினைவினையாகவும் இவ்வாறு ஒன்றின்தன்மை மற்றொன்றில்ஏற்றிக் கூறப்படுதல்: இது, ஆகுபெயரென்கிற இலக்கணைக்கு இனமாம்; இதனை வடநூலார் ஔபசாரிகப்பிரயோகம் என்பர். முன் - முற்பிறப்பில். அஃது இலர் - அப்பாவமில்லாதவர். சீரியார் - சிறப்புடையவர். மேற்றொட்டுச்செய்து கைவந்தமையான் - முன்பிறப்புக்களில்தொடங்கிச் செய்து பழக்கமாயிருத்தலால். அஞ்சார் - எதிர்மறைப்பலர்பால் முற்று; எதிர்மறை ஆகார இடைநிலை, புணர்ந்துகெட்டது. விழுமியார் - விழுமம் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பலர்பாற்பெயர்: பகுதி, அம்கெட்டு 'விழும்' என நின்றது; இ - சாரியை, ய் - சந்தி, ஆர் - விகுதி: விழு

மம் என்பது உரிச்சொல்லாதலை "விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பை யும்" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. அஞ்சார், அஞ்சுவர் என்னும் இர ண்டுவினைமுற்றுக்களுக்கும் செருக்கு என்னுஞ் செயப்படுபொருளை எடுத் துத் தனித்தனிசேர்த்துக்கொள்க. "தவமுந் தவமுடையார்க் காகு மவ தனை, யஃதிலார் மேற்கொள் வது" என்பதனால் ஒருவன் ஒருபிறப்பிற் செய் யும் நல்வினைக்கு அவன் முற்பிறப்பிற் செய்துள்ள நல்வினையே காரணமா வதுபோல ஒருவன் ஒருபிறப்பில் தீவினைசெய்தற்கும் அவன் முற்பிறப்பிற் செய்துள்ள தீவினையே காரணமாம்; நல்வினைசெய்தற்கு முன்னைத் [illegible] காரணமாகாதவாறுபோல, தீவினைசெய்தற்கும் முன்னைநல்வினை கா[illegible] மாகாது என்றது கருத்து. இது, நூல்வழக்குக்கூறியது. இனி, இக்குற ளுக்கு - 'கொடுந்தொழில்செய்பவர் பாவத்துக்குஅஞ்சார்; நற்செருழில்செய் பவர் அதற்குஅஞ்சுவர்' என, உலகவழக்கைக் கூறியதாகவும் பொருள் கொள்ளலாம். இதனால், விழுமியாரது குணமாகிய தீவினையச்சமே சிறப் புடைத்தென்றதாயிற்று. (க)

உ0உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(இ - ள்) தீயவை - (தனக்கு இன்பம்பயத்தலைக் கருதிச் செய்யுந்) தீவினைகள், தீய பயத்தலான் - (பின் அஃதொழியத்) துன்பமேபயத்தலான, தீயவை - (அத்தன்மையவாகிய) தீவினைகள், தீயினும் அஞ்சப்படும் - (ஒரு வனால்) தீயினும் அஞ்சப்படும்; (எ - று.)

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென் று சுடுதல் தீக்கு இன்மையின், 'தீயினும் அஞ்சப்படும்' என்றார்.

(கு - பு.) தீவினைகள் - கொடுஞ்செயல்கள். தீய - கெட்டபயன்களை. பயத்தல் - தருதல். பின் - மறுமையில். அஃது ஒழிய - இன்பந்தருதலில் லாமல். தீயினும் - அக்கினியினும் அதிகமாக. நெருப்பு, எந்தக்காலத்தில் எந்தஇடத்தில் எந்தஉடம்பிற் படுமோ, அந்தக்காலத்தில் அந்தஇடத்தில் அந்தஉடம்பில்மாத்திரமே சுடும்; தீவினையோ, எந்தக்காலத்தில் எந்தஇட த்தில் எந்தஉடம்பிற் செய்யப்பட்டதோ, அவற்றில்மாத்திரமேயன்றி மறு மைக்காலத்திலும் வேறொருஉலகத்திலும் மற்றொருசரீரத்திலும் போய் உயிரைவருத்தும்: ஆதலால், தீவினை தீயினுங் கொடிது என்பது கருத்து. இனி, அகமாகிய உயிரை வருத்துகின்ற தீவினைகள் புறமாகிய உடம்பை வருத்துகின்ற நெருப்பினும் பயங்கரமானவை என்றுங் கருத்துக்கொள்ள லாம். தீயவை - தீமையென்னும் பண்பின் அடியாகப் பிறந்த பலவின் பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்; தீய என்பதும் இவ்வாறே. இவற் றுள், தீயவையென்பதில், [illegible] - பாலுணர்த்தும் விகுதி, அ - சாரியை; தீய என்பதில், அ என்பதே பாலுணர்த்தும்விகுதி: தீய என்பது பெயரெச் சமாய் நிற்றலும் உண்டு. பயத்தல், பய - பகுதி. தீயவை யென்னுஞ் சொல் இரண்டனுள், பின்னது - அவையெனச் சுட்டுப்பெயர்மாத்திரையாய் நின் றது. தீயின், இன் - ஐந்தனுருபு, எல்லைப்பொருளது; உபமானஉபமேய சம்பந்தமாகவந்ததனால், உறழ்பொருவு எனப்படும். உம்மை - உயர்வுசிற ப்பு. அஞ்சப்படும் - செய்யுமென்னும்வாய்பாட்டுச் செயப்பாட்டு முற்று; இது - பலர்பாலொழிய மற்றைநான்குபால்களுக்கும் பொதுவாதலால், இங்குப் பலவின்பாலுக்குவந்தது. இரண்டாவதாய்நின்ற 'தீயவை' என் பது, அவசியமில்லாமல் அதிகமாயிருப்பதாயினும், வந்தசொல்லும் பொ ருளும் பின்னும் பலமுறை வருகிற சொற்பொருட்பின் வருநிலை யென்னும்

அணியை நோக்கி வந்தது. 'தீயவைதீயினுமஞ்சப்படும்' என்பது, பிரதான வாக்கியம்; 'தீயவைதீயபயத்தலான்' என்பது, அதற்குச்சார்பான காரண வாக்கியம். (௨)

௨0௩. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(இ - ள்.) அறிவினுள் எல்லாம் - (தமக்கு உறுதிநாடும்) அறிவுகளெல்லாவற்றுள்ளும், தலை என்ப - தலையாய அறிவென்று சொல்லுவர், (நல்லோர்); செறுவார்க்கும் - (தம்மைச்) செறுவார்மாட்டும், தீய - தீவினைகளை, செய்யா விடல் - செய்யாது விடுதலை; (எ - று.)

விடுதற்குக்காரணமாகிய அறிவை 'விடுதல்' என்றும், 'செயத்தக்குழியுஞ் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராது' என உய்த்துணர்தலின் அதனை 'அறிவினுளெல்லாந்தலை' என்றுங் கூறினார். 'செய்யாது' என்பது, கடைக்குறைந்து நின்றது.

இவைமூன்றுபாட்டானும், தீவினைக்குஅஞ்சவேண்டுமென்பதுகூறப்பட்டது.

(கு - பு.) உறுதிநாடும் - நன்மையைத்தேடுகின்ற. தலைஆய - முதன்மையான. நல்லோர் - நற்குணமுடையோர். செறுவார்மாட்டும் - பகைப்பவரிடத்திலும். செய்யாதுவிடுதலை என்பது - செய்யாதுவிடுதற்குக்காரணமாகிய அறிவை என்றபடி; இங்கே காரியங் காரணமாக உபசரிக்கப்பட்டது: ஆனதுபற்றியே, செய்யாது விடுதலை 'சிறந்தஅறிவின் பயன்' என்னாமல் 'அறிவினுளெல்லாந்தலை' என்றார். செயத்தக்குழி - செய்யத்தக்க இடம்; அதாவது - பகைவர்பக்கல். உய்த்துணர்தல் - ஆராய்ந்தறிதல். செய்யா - ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்; இவ்வாய்பாட்டுச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமும், அஃறிணையெதிர்மறைப் பலவின்பால்முற்றும், அத்தன்மைய வினையாலணையும்பெயரும், அம்முற்றெச்சமும், ஈறுகெட்ட எதிர்மறை ஒன்றன்பால்முற்றும் ஆகவும் வரும்: இங்குக்காட்டிய எழுவகைகளுள் முதல்மூன்றிலும் வருமொழிமுதல்வலி மிகும்; மற்றையவற்றில் மிகாது: இவையெல்லாம் இடம்நோக்கியும் பொருள்நோக்கியும் உணர்க. அறிவு - தொழிற்பெயர்; வு - விகுதி: உ - விகுதியென்றால், வ் - எழுத்துப்பேறு. இன் - சாரியை; அதன்மேல், உள் - ஏழாம்வேற்றுமையுருபு. எல்லாம் என்னும்பெயர், இருதிணைக்கும்பொது. தலைமையானதைத் தலையென்றது - பண்பாகுபெயர். தலை - உத்தமம்; உத்தம அங்கமாகிய சிரசுபோலச் சிறந்ததென்றுங் கொள்ளலாம். என்ப - இடைச்சொல்லடியாகப்பிறந்த பலர்பால்முற்று; என் - பகுதி, ப - விகுதி: விகுதியே, பாலையுங் காலத்தையுங் காட்டிற்று; [நன்னூல், பதவியல்- ௧௮, வினையியல்-௮.] இது, அன்சாரியை பெறாதுவந்த பலவின்பால்வினைமுற்றும்பொழுது, ப்-எதிர்காலவிடைநிலையும், அ-பால் குறிக்கும் விகுதியுமாய் நிற்கும்; அப்பொழுது, என்பனவென்று பொருள். தீய-பெயர். நான்காம்வேற்றுமையின் பொருளாகிய ஏற்றுக்கொள்ளுதலும் ஏழாம்வேற்றுமையின் பொருளாகிய இடமாய்நிற்றலும் ஒருசாரொத்திருத்தலைநோக்கி, செறுவார்க்கும் என்னும் நான்காம்வேற்றுமையை 'செறுவார்மாட்டும்' என ஏழாம்வேற்றுமையாக விரித்தார்; இதனை உருபுமயக்கமெனினும் அமையும்: கொடைப்பொருளில்வந்த நான்காம்வேற்றுமையெனினும் இழுக்காகாது. செறுவார் - எதிர்காலவினையாலணையும்பெயர்; வகரவிடைநிலை காலமுணர்த்தாமல் தன்மையுணர்த்திற்று. உம் - இழிவுசிறப்பு: இறந்தது தழுவிய எச்சவும்மையாகக் கொண்டு, பகைவா

ல்லாதார்க்குச்செய்யாதொழிதலையும் உடனமைத்தலும்ஒன்று. விடல்-தொழிற்பெயர். "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, யிகழ்வார்ப் பொறுத்த றலை," "இணரெரி தோய்வன்ன வின்னா செயினும், புணரின் வெகுளாமை நன்று" என முன்னும்பின்னுங் கூறுமவற்றிற்கு ஏற்ப, இங்கே 'தீய, செறுவார்க்குஞ் செய்யா விடல்' என்றார். நல்லோர் என்றது தருமநூலுணர்ச்சியோடு உலகவழக்கறிதலு முடையாரை. (௩)

உ௦௪. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(இ-ள்.) (ஒருவன்), பிறன் கேடு - பிறனுக்குக் கேடுபயக்கும் வினையை, மறந்தும்--, சூழற்க - எண்ணாதொழிக; சூழின் - எண்ணுவனாயின், சூழ்ந்தவன் கேடு - தனக்குக் கேடுபயக்கும் வினையை, அறம் - அறக்கடவுள், சூழும் - எண்ணும்; (எ - று.)

'கேடு' என்பன - ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின் இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படும் என்பது பெறப்பட்டது. அறக்கடவுள் எண்ணுதலாவது - அவன்கெடத் தான்நீங்க நினைத்தல். தீவினை யெண்ணலும் ஆகா தென்பதாம்.

(கு - பு.) கேடுபயக்கும்வினை - கெடுதியைத்தருந் தீத்தொழில். தனக்கு - எண்ணினவனுக்கு. அறக்கடவுள் - தருமதேவதை. கேடு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர்கள் - அதனைத்தரும் வினைகளைக் குறித்தலால், காரியவாகுபெயர்; தொழிற்பெயர்விகுதி புணர்ந்துகெட்டபொழுது, பகுதி முதல் நீண்டது - விகாரம். ஒருமனிதன் மற்றொருவனுக்குத் தீங்குசெய்யநினைத்தால், நினைத்த அம்மனிதனுக்குத் தீங்குசெய்யத் தருமதேவதை கூடவே நினைக்கும்; இவற்றுள் மனிதனதுமுயற்சி இடையூற்றின் மிகுதியால் நிறைவேறாதாயினும், அல்லது நிறைவேறக் காலஞ்செல்லுமாயினும், தேவதையினதுமுயற்சி அங்ஙனந்தடைப்படாமல் உடனே நிறைவேறிவிடும்: ஆதலால், ஒருவன் பிறனுக்குத் தீங்குநினைத்தமாத்திரத்திற் பாவம் உண்டாகி அதனால் தான் தீங்கையடைவான் என்பது தாத்பரியம். அவன்கெடத் தான் நீங்க - எண்ணியவன் கெடும்படி அவனைவிட்டுத் தான்விலக. எண்ணலுமாகாது என்றதனால், சொல்லுதலும் செய்தலுமாகாமை கூறாமல் தானே அருத்தாபத்தியாற் பெறப்படும். 'மறந்தும்' என்றதனால், மறவாதிருக்கையில் எண்ணாதொழியவேண்டுமென்பது சித்தம். மறந்தும், உம் - இழிவுசிறப்பு. சூழற்க - எதிர்மறைவியங்கோள்; வியங்கோள், இருதிணையைம்பால்மூவிடத்திற்கும் பொதுவாம். சூழின்-இன்விகுதிகாலங்காட்டும் எதிர்காலவினையெச்சம். பிறன், பிற - இடைச்சொல், பகுதி; ன் - ஆண்பால்விகுதி. (௪)

உ௦௫. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

(இ-ள்.) இலன் என்று - (யான்) வறியனென்று கருதி, தீயவை செய்யற்க - (அதுதீர்தற்பொருட்டுப் பிறர்க்குத்) தீவினைகளை (ஒருவன்) செய்யாதொழிக; செய்யின்-செய்வனாயின், பெயர்த்தும் இலன் ஆகும் - பெயர்த்தும் வறியனாம்; (எ - று.)

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனா மென்பதாம். அன்விகுதி - முன் தனித்தன்மையினும், பின் படர்க்கையொருமையினும் வந்தது. தனித்தன்மை - "உளனா வென்னுயிரை யுண்டு" என்பதனானும் அறிக. மற்று - அசைநிலை. 'இலம்' என்று பாடமோதுவாரும் உளர். 'பொருளான் வறிய

னெனக் கருதித் தீயவை செய்யற்க; செய்யின், அப்பொருளானேயன்றி நற்குணநற்செய்கைகளானும் வறியனாம்' என்று உரைப்பாரும் உளர்.

(கு - பு.) வறியன் - தரித்திரன்; நுகரப்படும்பொருள்கள் யாவும் இல்லாதேன். அது - வறுமை. பெயர்த்தும் - மறுபடியும். 'இலன்' என்னும் எதிர்மறைக்குறிப்புவினைப்பகுபதங்கள் இரண்டனுள், முன்னது - தன்மையொருமை. அன்விகுதி தன்மையொருமைக்கு வருதல், புதியனபுகுதல்; இதற்கு விதி தொல்காப்பியத்தில் இல்லை: உரையாசிரியர்கள் எதிரதுபோற்றலென்னும்உத்தியால்அமைத்திருக்கிறார்கள்;அவர்கருத்தைப்பற்றி,பின்னூலாராகிய நன்னூலார் விதிகூறினார்: பழையஇலக்கணநூலார் இங்ஙனஞ் சிறுபான்மை தன்மைக்கு வருவதைத் தன்மையிற்படர்க்கைவந்த இடவழுவமைதியாகக் கொண்டார்போலும். அருமையாகவருதற்கு இலக்கியத்தினின்று உதாரணங்காட்டுகிறார், 'உளனா' என்றுதொடங்கி; இம்மேற்கோள்-கலித்தொகை, குறிஞ்சிக்கலி,உஉ-ஆம் செய்யுளில் உள்ளது: இதற்குப்பொருள்-'யான் சிறிது உயிருடனேயிருக்கும்படி என் உயிரை வாங்கிக்கொண்டு' என்றுஉரைத்தார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். உளனா - உள்ளேனாக; இலன் என்று - இல்லேனென்று. எதிர்மறையில்வந்ததற்குப்போல உடன்பாட்டில் வந்ததற்கும் ஆசிரியவசனம் எடுத்துக்காட்டினார். இலன் ஆகும் - இல்லாதவனாவன்; இங்கே இலன் என்பது - ஆண்பாற்படர்க்கையொருமை. பெயர்த்து என்பது - மீண்டு என்னும் பொருளைத் தந்ததனால், மற்று-அசைநிலையாயிற்று; அசைநிலையாவது - ஒருபொருளையும் உணர்த்தாமல் பெயர்ச்சொல்லோடாயினும் வினைச்சொல்லோடாயினுஞ் சார்த்திச்சொல்லப்பட்டுநிற்றல். 'மற்று - அசைநிலை' என்றதனால், அதிலுள்ள உம்மையை எடுத்து 'பெயர்த்து' என்பதனோடுகூட்டுக. 'தனித்தன்மை' என்றவாக்கியத்தின்பின் எழுதாமல்'மற்று- அசைநிலை' என்றதன்பின் 'இலம்என்று பாடமோதுவாருமுளர்' என்றதனால், இரண்டடியிலும் இலம் என்று பாடமென அறிக. அப்பாடத்தில், முதலடியில் இலம் என்பதற்கு-யாம் பொருளில்லோம் என்றுபொருள்;இலம்-தனித்தன்மைப்பன்மை:ஒவ்வொருவனும் தன்னைப்பற்றித் தான்நினைக்கும்பொழுது பன்மையாகவே நினைத்தல் இயல்பு; இதனை நினைத்துப்பார்த்து அறிக:இனி,இயற்கைப்பன்மையாகவுங்கொள்ளலாம்.இரண்டாம்அடியில்,இலம் ஆகும் என்பதற்கு-வறுமைஉண்டாம் என்றுபொருள்; இலம் - வறுமையுணர்த்தும் உரிச்சொல்: "இலம்பாடொற்கமாயிரண்டும் வறுமை" என்றார் தொல்காப்பியனார்; இச்சூத்திரத்தில் 'இலம்' என்பது உரிச்சொல்லேயொழிய 'இலம்பாடு' என்பது உரிச்சொல்லன்று என்பதை இச்சூத்திரத்தின் உரையைக்கொண்டும், எழுத்ததிகாரத்தில் "இல்லென் கிளவிக்குப் படுவரு காலை" என்ற சூத்திரத்தைக்கொண்டும் உணர்க: நன்மை என்னும் பண்புப்பெயர் மைவிகுதிகெட்டு அம்விகுதிபெற்று நலம்என நிற்றல்போல, இன்மையென்பது இலம் என நின்றது போலும். மற்றும்பெயர்த்து-என்பதை ஒருபொருட்பன்மொழியாகவுங் கொள்ளலாம். 'மற்றும் - மீண்டும், பெயர்த்து - வேறுபட்டு, இலன் ஆகும்' என்று பொருளுரைத்தார் இராமானுசகவிராயர். பெயர்த்து - இறந்தகாலவினையெச்சம். இனி, 'இலனென்று' என்பதையும் படர்க்கையொருமையாகவேகொண்டு,இவன்பொருளில்லாதவனென்று அலட்சியஞ்செய்து வறியவனுக்குத் தீயவைசெய்யற்க என்று உரைத்தலும் அமையும். (ரு)

உ0ரு. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

(இ - ள்.) நோய் பால - துன்பஞ்செய்யுங் கூற்றவாகிய பாவங்கள், தன்னை—, அடல் - (பின்வந்து) வருத்துதலை, வேண்டாதான் - வேண்டாதவன், தீ பால - தீமைக்கூற்றவாகிய வினைகளை, தான்—, பிறர்கண் - பிறர்மாட்டு, செய்யற்க - செய்யாதொழிக; (எ - று.)

செய்யின் அப்பாவங்கள் அடுதல் ஒருதலையென்பதாம்.

(கு - பு.) கூற்ற - பகுதியுடையன. பின் - மறுமையில். வேண்டுதல் - விரும்புதல். தீமைக் கூற்ற - தீமையென்னும் பகுதியிற் பட்டவை. அடுதல் - வருத்துதல். ஒருதலை - நிச்சயம். பால - பான்மையென்னும் பண்பின் அடியாகப் பிறந்த பலவின்பாற்குறிப்பு வினையாலணையும்பெயர். "மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும்" என்னும் இலக்கியத்தைநோக்கி, நோய்ப்பால என்பதற்கு - 'வியாதியின்பகுதியினலாந்துன்பங்கள்' என்று பொருள்கொள்ளுதலும் அமையும். அடல் - தொழிற்பெயர். வேண்டாதான் - எதிர்மறைவினையாலணையும்பெயர்; த்-எழுத்துப்பேறு: அல்லது, து - சாரியை, உகரங்கெட்டது. இதுவும், மேல் ஒன்பதாங்கவியும் ஒருகருத்தின்வகைப்பட்டது. (௬)

௨௦௭. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(இ - ள்.) எனை பகை உற்றாரும் - எத்துணைப் பெரிய பகையுடையாரும், உய்வர் - (அதனை ஒருவாற்றால்) தப்புவர்; (அவ்வாறன்றி), வினை பகை - தீவினையாகிய பகை, வீயாது - நீங்காது, பின் சென்று அடும் - புக்குழிப்புக்குக் கொல்லும்; (எ - று.)

"வீயா,துடம்பொடு நின்ற வுயிரு மில்லை" என்புழியும் வீயாமை நீங்காமைக்கண் வந்தது.

(கு - பு.) எத்துணை - எவ்வளவு. அதனை - அப்பகையை. ஒருவாற்றால் - ஒருவிதத்தால்; ஒரு ஆறு எனப்பிரிக்க: வ் - உடம்படுமெய். புக்குழிப்புக்கு - சென்றவிடத்திற்சென்று; சன்மந்தோறும் பின்தொடர்ந்து. வீயாதுபின்சென்றடுதற்கு மேற்பாட்டில் உவமைகூறுவர். "பல்லாவுளுய்த்து விடினுங்குழக்கன்று, வல்லதாந்தாய்நாடிக்கோடலைத் - தொல்லைப், பழவினையுமன்னதகைத்தேதற்செய்த, கிழவனைநாடிக்கொளற்கு" என்னும் நாலடியாரையும் அறிக. 'வீயாது' என்றதற்குதாரணத்து மேற்கோள் - புறநானூறு, ௩௬௩-ஆஞ் செய்யுளில் உள்ளது; அதற்கு-நீங்காமல் உடம்புடனே எப்பொழுதுங்கூடி நின்ற உயிர் ஒன்றும் இல்லை என்றுபொருள். என்புழியும் - என்றவிடத்தும். நீங்காமைக்கண் - நீங்காமையென்னும் பொருளில். பகைமையென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய பகையென்பது, ஆகுபெயராய், பகைவரை உணர்த்திற்று. எனை - எத்தனையென்பதன் மரூஉ. பகுதல் - மனம் வேறுபடுதல் என்பதன்மேற் பகை என வந்ததென்பர். உற்றார் - பெற்றவர்; உறு என்னுங் குறிவினைப்பகுதி, ஒற்றிரட்டி இறந்தகாலங்காட்டிற்று. உம்மை - இழிவுசிறப்பு. வீயாது - வீ என்னும் பகுதியடியாப் பிறந்த எதிர்மறைவினையெச்சம்; து - விகுதி, ய் - சந்தி: இதனால், வீய் - பகுதியன்று என உணர்க. பின் என்னும் இடைச்சொல், இங்கே இடப்பொருளது; 'வீயாது' எனவந்ததனால், காலப்பொருளதன்று. பின் அடும் என இயைத்தால், காலமுணர்த்துவதாம். புறப்பகைகளினும் உட்பகையாகிய வினைக்கு உள்ள உறுதியை இதனாற்கூறினார். அடும் - வருத்துமென்றபடி. (எ)

௨௦௮. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

(இ - ள்.) தீயவை செய்தார் - (பிறர்க்குத்) தீவினைகளைச் செய்தார், கெடுதல் - (தாம்) கெடுதல், (எத்தன்மைத்தெனின்), நிழல் - (ஒருவனை) நிழல், தன்னை வீயாது - (நெடிதாகப்போயும்) அவன்தன்னை விடாது (வந்து), அடி உறைந்தற்று - அடியின்கண் தங்கிய தன்மைத்து; (எ - று.)

இவ்வுவமையைத் தன்காலம்வருந்துணையும் புலனாகாது உயிரைப்பற்றி நின்று அதுவந்துழி உருப்பதாய தீவினையைச் செய்தார் பின் அதனால் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர்; அஃது உரையன்றென்பதற்கு, 'அடியி, லுறைந்தநிழல் தன்னைவீந் தற்று' என்னாது 'வீயாதடியுறைந்தற்று' என்ற பாடமே கரியாயிற்று. மேல் "வீயாது பின்சென் றடும்" என்றார், ஈண்டு அதனை உவமையான் விளக்கினார்.

(கு - பு.) எத்தன்மைத்து எனின் - எந்தத்தன்மையையுடையதென்றால். அடியின் கண் - அவனது பாதத்திலே. ஒருவனது நிழல் அவன் எவ்வளவுதூரஞ்சென்றாலும் தான் எவ்வளவு நீண்டு சென்றாலும் அவனைவிடாமல் அவன்சென்றவிடமெல்லாந் தானுஞ்சென்றுகொண்டே வந்து அவனடியில் தங்குதல் தவறாததுபோல ஒருவன் செய்ததீவினை அவனுயிர் எவ்வளவுதூரஞ்சென்றாலும் தான் எவ்வளவுவிலகியதாகத்தோன்றினாலும் அவ்வுயிரைவிடாமல் அதுசென்றவிடமெல்லாஞ் சென்றுகொண்டேவந்து அவ்வுயிரை வருத்துதல் தவறாது என்பது பரிமேலழகருரையின்கருத்து. வருந்துணையும் - வருமளவும். புலனாகாது - வெளிப்படாமல். அது வந்துழி - அக்காலம்வந்தவிடத்து. உருப்பதாய - வெளித்தோன்றுவதாகிய. பிறருரையின் கருத்து:—ஒருபொருளினது நிழல் வெயில் நிலா விளக்கொளி முதலியன வருமளவும் வெளிப்படாமல் அப்பொருளின் அடியைப் பற்றியிருந்து அச்சுடர்கள் வந்தவளவில் அதனைவிட்டு வெளிப்பட்டுத் தோன்றுதல்போல ஒருவன் செய்த தீவினை பலித்தற்கு உரிய காலம் வருமட்டும் வெளிப்படாமல் உயிரைப்பற்றியிருந்து அக்காலம்வந்தபொழுது வெளிப்பட்டு அழிக்குமென்பதாம்; இங்ஙனம் உரைப்பதற்கு 'அடியி, லுறைந்தநிழல் தன்னைவீந் தற்று' எனப்பாடமிருந்தாலொழியப் பொருந்தாதென்று மறுத்தார் பரிமேலழகர்; அடியிலுறைந்தநிழல்தன்னைவீந்தற்று என்றபாடத்திக்கு - ஒருவனது பாதத்தின்கண் தங்கியநிழல் அப்பாதத்தைவிட்டு வெளிப்பட்ட தன்மைத்து என்று பொருள்படும். கரியாயிற்று - சாட்சியாயிற்று. 'மேல்' என்றதற்றொடக்கத்துவாக்கியம், முதலுரைக்குச் சாதகமானது. உறைந்தற்று - உறைந்த அற்று எனப் பெயரெச்சவிகாரமாகவாயினும், உறைந்தால் அற்று என வினையெச்சத்திரிபாகவாயினும், உறைந்ததற்று எனத் தொழிற்பெயர்விகாரமாகவாயினுங் கொள்க. இம்மூன்றனுள், முதல்வகையில், அற்று - சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; அ - பகுதி, ற் - சந்தி, று - விகுதி: அத்தன்மைத்தென்று பொருள். மற்றைவகைகளில், அற்று-அன் என்னும் உவமவுருபிடைச்சொல்லடியாப் பிறந்தது; போன்றதென்றுபொருள். இத்திருக்குறளைத் தர்க்கத்தில் எடுத்துக்காட்டுப்போலிக்கு உதாரணமாகக்காட்டினர் வீரசோழியவுரையாசிரியர். (அ)

௨௦௯. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந் துன்னற்க தீவினைப் பால்.

(இ - ள்.) (ஒருவன்), தன்னை தான் காதலன் ஆயின் - தன்னைத்தான் காதல்செய்த லுடையனாயின், தீவினை பால்- தீவினையாகிய பகுதி, எனைத்து ஒன்றும் - எத்துணையுஞ் சிறிதொன்றாயினும், துன்னற்க - (பிறர்மாட்டுச்) செய்யாதொழிக; (எ - று.)

நல்வினை, தீவினை என வினைப்பகுதி இரண்டாகலின், 'தீவினைப்பால்' என்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம்பயத்தல் விளக்கிறாகலின், 'தன்னைத்தான்காதலனாயின்' என்றார்.

இவையாறுபாட்டானும், பிறர்க்குத் தீவினைசெய்யின் தாங்கெடுவர் என்பது கூறப்பட்டது.

(கு - பு.) காதல்செய்தல் - விரும்புதல். 'தன்னைத்தான்காதலனாயின்' என்றது - தனக்கு ஒன்றுந் துன்பம்வராமல் இன்பமே வந்தடைய விரும்புவனாயின் என்றபடி. பகுதி - பகுப்பு. தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கியமை மேழ்ஐந்துபாட்டுக்களிற் காண்க. காதலன் - காதல் என்னும் பெயர்ச்சொல் லடியாப்பிறந்த ஆண்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்; இதன் பெண்பால் - காதலி; பலர்பால் - காதலர். காதலன் என்பது, விரும்புபவனெனப்பொருள்பட்டு, 'தன்னை' என்பதற்கு முடிக்குஞ்சொல்லாய்நின்றது. எனைத்து - எத்தனைத்து என்பதன் மரூஉ. தன்னைக்காக்கவிரும்பினாற் பிறனுக்குத் தீமைசெய்யலாகாது என்பது கருத்து. (கூ)

உகO. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

(இ - ள்.) மருங்கு ஓடி தீவினை செய்யான் எனின் - (ஒருவன் செந்நெறிக்கண் செல்லாது) கொடுநெறிக்கண் சென்று (பிறர்மாட்டுத்) தீவினைகளைச் செய்யானாயின், அருங்கேடன் என்பது அறிக - (அவனை) அரிதாகிய கேட்டை யுடைய னென்ப தறிக; (எ - று.)

அருமை - இன்மை. அருங்கேடன் என்பதனை "சென்றுசேர் கல்லாப் புள்ள புள்ளி, லென்றூழ் வியன்குளம்" என்பதுபோலக் கொள்க. 'ஓடி' என்னும் வினையெச்சம், 'செய்யான்' என்னும் எதிர்மறைவினையுட் செய்தலோடு முடிந்தது.

இதனால், தீவினைசெய்யாதவன் கேடிலனென்பது கூறப்பட்டது.

(கு - பு.) செந்நெறிக்கண்செல்லாது கொடுநெறிக்கண்சென்று - சன்மார்க்கத்திற்போகாமல் துன்மார்க்கத்திற் போய்; 'மருங்கு' என்பதற்கு - 'பக்கத்திலே' என்று பொருளாதலால், 'நேர்வழியைவிட்டுவிலகிக் கோணல்வழியிற் சென்று' என்று இங்ஙனம் உரைத்தார். ஓடுதல் - விரைந்து செல்லுதல். மருங்கோடுதல் - தீவினைசெய்தற்குக் காரணமாதலின், ஓடி என்பதற்கு - செய் என்னும்பகுதி, முடிக்குஞ் சொல்லாம். என்பதுஅறிக - என்பதாக அறிக, என்றுஅறிக என்றபடி. அரிதாகிய - இல்லாத; அருமை - இன்மையாதலை "மனக்கவலைமாற்றலரிது," "உறற்பால, தீண்டாவிடுதலரிது" என்றவிடங்களிலுங் காண்க; இதனால், இங்கே அருமை - சிறுபான்மை நேர்தலன்றென்க. "சென்றுசேர்கல்லா" என்னும் மேற்கோளுக்கு - சென்று சேராத பறவைகளையும் அப்பறவைகள்போலவே (சென்றுசேராத) வெயிலையுமுடைய பெரியகுளமென்று பொருள்; பட்சிகளுஞ் சூரியகிரணமுஞ் சேராத குளமென்று கருத்து. 'அருங்கேடன்,' 'சென்றுசேர்கல்லாப் புள்ள' இவை - வடமொழிநடை; 'வீதராக:', 'ஜிதேந்திரிய:' என்றவற்றைக் காண்க. இனி, இதனை 'கேடரியன்' என விகுதிபிரித்துக்கூட்டுவர் பிரயோகவிவேகநூலார். (கO)

உஉ - ம் அதி—ஒப்புரவறிதல்.

அஃதாவது - உலகநடையினை அறிந்து செய்தல். உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யுக்

தன்மைத்தாகலின், 'ஒப்புரவறிதல்' என்றார். மேல் மனமொழிமெய்களால் தவிரத்தகுவன கூறினார், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சினின்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

(கு-பு.) உலகநடை-லோகத்திலுள்ள ஜனங்களின் நடத்தையின் இயற்கை. செய்தல் - உபகாரஞ்செய்தல். வேதநடை-வேதங்களிற்கூறிய வழிகளிலே நடத்தல்; வைதிகவொழுக்கம். நூல்களுள் - தருமசாஸ்திரங்களில். 'ஒப்புரவுசெய்தல்' என்னாமல் 'ஒப்புரவு அறிதல்' என்றதற்குக் காரணங்கூறுகிறார், 'உலகநடைவேதநடைபோல' என்று தொடங்கி. ஒப்புரவு என்பதை ஒப்பு உரவு எனப்பிரிக்க; உலகத்தாரோடு ஒத்துச்செய்யுஞ் சிறந்ததொழிலென்றபடி. மனம் மொழி மெய்களால் தவிரத்தகுவன கூறினார் - மனோவாக்குக்காயமென்னும் மூன்றுகரணங்களாலுஞ் செய்யத்தகாத விலக்கத்தக்க தொழில்களைக் கீழ் ஐந்து அதிகாரங்களாற் சொல்லியவர். எஞ்சினின்றன - மிகுந்துநின்றவை; சொல்லவேண்டியவையாய்ச் சேஷித்தவை: மிச்சம். விதி விலக்கு என்னும் இரண்டில், முன்னே விலக்கைக்கூறிவிட்டுப் பின்பு விதியைக்கூறுதல், அதிகாரமுறைமைக்குக் காரணம்.

௨௧௧. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

(இ - ள்.) மாரிமாட்டு - (தமக்கு நீர்உதவுகின்ற)மேகங்களினிடத்து, உலகு - உயிர்கள், என் ஆற்றும் - என்ன கைம்மாறு செய்யாநின்றன? (ஆகலான்), கடப்பாடு - (அம்மேகங்கள்போல்வார் செய்யும்) ஒப்புரவுகளும், கைம்மாறு வேண்டா - கைம்மாறுநோக்குவனவல்ல; (எ - று.)

'என் ஆற்றும்' என்ற வினா 'யாதும்ஆற்றா' என்பது தோன்ற நிற்றலின், அது வருவித்து உரைக்கப்படும். தவிருந்தன்மைய அல்ல என்பது, 'கடப்பாடு' என்னும் பெயரானே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேல் ஏற்றினார்.

(கு - பு.) கைம்மாறு செய்யாநின்றன - பிரதியுபகாரம் பண்ணுகின்றன. கைம்மாறுநோக்குவனவல்ல - எதிருதவியை விரும்பாவாம். யாதும் ஆற்றா - ஒன்றையுஞ்செய்யாவாம். தவிருந்தன்மைய அல்ல - நீங்கத்தக்கனவல்ல; அவசியஞ்செய்யவேண்டுங் கடமையுடையவை. கடப்பாடு கைம்மாறுவேண்டா என்றது - பிறர்க்கு உதவிசெய்பவர்கள் தாம் பிரதியுதவியைப்பெற அபேக்ஷியார் என்றபடி. கடப்பாடு - கடமைப்படுதல்; கடம் படு என்னும்இரண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல்தன்மைப்பட்ட 'கடப்படு' என்னும்பகுதி விகாரமடைந்த தொழிற்பெயர். கைம்மாற்றை எதிர்பார்த்துச்செய்யும் உதவியைக் கடப்பாடென்று பெயரிட்டுவழங்குதல் கூடாதென்க. கைம்மாறு - தாம் ஒருவர்க்குச்செய்த உபகாரம் அவர்கையினின்றும் மீண்டுந் தம்கைக்கு மாறுவது என்பதுபற்றி வந்த பெயர். வேண்டா - பலவின்பால் எதிர்மறைமுற்று; ஆ - விகுதி: "ஆவேயெதிர்மறைக் கண்ணதாகும்" என்றதனால், விகுதியே பாலையும் எதிர்மறைப்பொருளையுங் காட்டுமென்க. கடப்பாடு என்பது, பால்பகா அஃறிணைப்பெயராதலால், 'வேண்டா' என்னும் பன்மைவினையைக் கொண்டது. மாரிமாட்டு, மாட்டு - ஏழனுருபு. எ என்னும் வினாவெழுத்து அடியாப்பிறந்த எவன் என்னுங் குறிப்புவினையாலணையும்பெயர், என் என்று இடைக்குறைவிகாரமாய், இங்கே இன்மைகுறித்துநின்றது: இந்த எவன் என்பது, அஃறிணையிருபாலுக்கும் பொது; உயர்திணையன்று. இது வினாப்பொருளைக் காட்டிவிட்டதனால், கொல் ஓ என்னும் இரண்டும்-அசைநிலை. உலகு-லோகம் என்

னும்வடமொழித்திரிபு; இந்தச்சேனாவரையர்கொள்கையை மறுத்து, 'தமிழ்ச்சொல்லேயாம்' என்பது, நச்சினார்க்கினியர்மதம்: இது இடத்தையுணர்த்தும்பொழுதிற்போல உயிர்களை உணர்த்தும்பொழுதும் ஆகுபெயரன்று இயற்பெயரேயாம் என்பது, இருவர்க்கும் ஒப்பமுடிந்தது; வடநூலார்கொள்கையும் இதுவே. உலகு என்னும் பலபொருளொருசொல் சீவான்மாக்களை உணர்த்துதலை "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" என்னுந் திருமுருகாற்றுப்படையிலுங் காண்க. இது எடுத்துக்காட்டுவமையணி: அஃதாவது - உபமானத்தையும் உபமேயத்தையும் வேறுவேறு வாக்கியங்களாக நிறுத்தி இன்னது உபமானம் இன்னது உபமேயம் என்பது தோன்ற இடையில் உவமவுருபுகொடாமற் கூறும் அணி; இதனை உவமையணியில் அடக்குதல் தமிழ்நூலார்கொள்கை: வடநூலாருட் பலர் திருஷ்டாந்தாலங்காரம் என வேறாகக் கூறுவர்; ஆசிரியர் தொல்காப்பியனார், வேறுபடவந்தஉவமத்தோற்றத்தில் அடக்குவர். இதில், மேகத்திற்கும் பெரியோருக்கும் உயிர்களிடத்துக்கைம்மாறுவேண்டாமையாகிய பொதுத்தன்மைபற்றி உவமைகூறப்பட்டது. (௧௧)

௨௧௨. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ - ள்.) தக்கார்க்கு - தகுதியையுடையார்க்காயின், தாள் ஆற்றி தந்த பொருள் எல்லாம்-முயறலைச்செய்து ஈட்டிய பொருள்முழுதும், வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற் பயத்தவாம்; (எ - று.)

பிறர்க்குஉதவாதார்போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்து இழத்தற்பொருட்டும் அன்றென்பதாயிற்று.

(கு - பு.) தகுதி - கல்விகேள்விகளினாலாகிய உரிமை; ஒழுக்கத்திற் பெருமை: யோக்கியதை. ஆயின் - ஆனால். முயறல் - முயற்சி: பிரயத்தினம்; தொழிற்பெயர். ஈட்டிய - சேர்த்துவைத்த. பொருள் - செல்வம். வேளாண்மை, ஒப்புரவு, உதவி, உபகாரம் என்பன - ஒருபொருட்சொற்கள். செய்தற்பயத்தவாம் - செய்தலாகியபிரயோசனத்தையுடையனவாம். 'பொருட்டு' என்பதை - பொருள் என்னும் பகுதியின்மேல் டு விகுதிபெற்று வந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்றாக வைத்து, செய்தலாகிய பயனையுடையது என்றாயினும்; நான்காம்வேற்றுமைச் சொல்லுருபாக வைத்து, செய்தனிமித்தம் என்றாயினுங் கொள்க. பொருளெல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். பாடுபட்டுத்தேடியபொருளைப் புதைத்துவைத்து இழந்துபோகாமலும் தாம்மாத்திரமே அனுபவியாமலும் பிறர்க்கு உபகரிப்பவரே மேலோரென்று கருத்து. பிறர்க்கு உதவாதார் - தகுதியில்லாதவர். இனி, தக்கார்க்கு வேளாண்மைசெய்தற்பொருட்டு என இயைத்து, ஒருவன் முயற்சியைச் செய்து தொகுத்த பொருள்முழுவதும் எதற்காக எனின் சான்றோர்க்கு உதவிசெய்தற்காக என்றும் ஒரு உரை கூறலாம். தக்கார்-பகுதியிரட்டி இறந்தகாலங்காட்டிற்று. வேளாண்மை-பண்புப்பெயர். (௧௨)

௨௧௩. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(இ - ள்.) புத்தேள் உலகத்தும் - தேவருலகத்தும், ஈண்டும் - இவ்வுலகத்தும், ஒப்புரவின் - ஒப்புரவுபோல, நல்ல பிற - நல்லன பிறசெயல்களை, பெறல் - பெறுதல், அரிது—; (எ - று.)

ஈவாரும் ஏற்பாரும் இன்றி எல்லாரும் ஒருதன்மையராதலின், புத்தேளுலகத்து அரிதாயிற்று; யாவர்க்கும் ஒப்பது இதுபோற் பிறிதொன்று

இன்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று. 'பெறற்கரிது' என்று பாடமோதி, 'பெறுதற்குக்காரணமரிது' என்று உரைப்பாருமுளர்.

இவை மூன்றுபாட்டானும், ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பு.) பெறுதல் - ஒருவன் அடைதல். அரிது - அருமையானது. ஈவாரும் ஏற்பாரும் இன்றி-தானஞ்செய்பவர்களும் அதனைப் பெற்றுக்கொள்பவர்களும் இல்லாமல். யாவர்க்கும் - எல்லோர்க்கும். இதுபோல் - ஒப்புரவுபோல. ஈண்டு - சுட்டுநீண்டபெயர். ஒப்புரவின், இன் - ஐந்தனுருபு, உவமப்பொருவு; உறழ்பொருவாயின், ஒப்புரவினும் நல்ல என்று பொருள்படும். ஒப்புரவுக்கு ஒப்பில்லை யெனவே, உயர்வில்லையென்பது தானேவிளங்கும். நல்ல - அன் சாரியைபெறாத பலவின்பால் வினையாலணையும்பெயர்; பெயரெச்சமாகவுங் கொள்ளலாம். பிற - சுட்டடியாப்பிறந்த பலவின்பாற்பெயர்;விகுதிபுணர்ந்துகெட்டது. அரிது - பண்படியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. ஏ - தேற்றம்; ஈற்றசையுமாம். உம்மைகள் - எண்ணுப்பொருளன. தேவலோகத்திற் கொடுப்பவரும் வாங்குபவரும் இல்லாமல் எல்லாரும் ஒருதன்மையராதலை "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" எனப் பிறர்கூறியவாற்றாலும் அறிக. (கந)

உகச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(இ - ள்.) உயிர் வாழ்வான் - உயிரோடுகூடி வாழ்வானுவான், ஒத்தது அறிவான் - உலகநடையினை அறிந்து செய்வான்; மற்றையான்-அஃது அறிந்து செய்யாதவன், செத்தாருள் வைக்கப்படும் - (உயிருடையவனேயாயினுஞ்) செத்தாருள் ஒருவனாகக் கருதப்படும்; (எ - று.)

உயிரின் அறிவுஞ் செயலுங் காணாமையின், 'செத்தாருள்வைக்கப்படும்' என்றார்.

இதனால், உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறனுடைத்தன்றென்பது கூறப்பட்டது.

(கு - பு.) வாழ்வான் - வாழ்பவன். ஒத்தது - உலகத்தார் சம்மதித்து ஒழுகும் ஒழுக்கம். "ஒப்புரவொழுகு", "தேசத்தோடொத்துவாழ்" என்றார் ஔவையாரும். அறிதல் - அறிந்து செய்தலைக் குறித்தலால், காரணவாகுபெயர். வைதிககாரியங்களில் வழுவினால் அவ்வழுத்தீர்ந்து உய்தற்கு யாதாயினும் ஒருபிராயச்சித்தம் உண்டு; உலகநடைக்கு வழுவினனோ அவ்வழுத்தீர்தற்கு ஒருவழியுமில்லை என்றது தாற்பரியம். உயிரின்அறிவுஞ் செயலும் - உயிருக்கு உரிய உணர்வுஞ் செய்கையும். தீர்திறன் - தீரும் வழி. அறிவான், வாழ்வான், மற்றையான் - பெயர்கள். மற்றையான் - மற்றைஎன்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்தது; "மற்றையதென்பது சுட்டியதற்கினம்." செத்தார், சா - பகுதி. உள் - ஏழனுருபு. உலகநடையறியாமல் உயிர்வாழ்பவன் நடைப்பிணமாவா னென்று கருத்து. (கச)

உகரு. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(இ - ள்.) உலகு அவாம் - உலகநடையை விரும்பிச்செய்யும், பேர் அறிவு ஆளன் - பெரிய அறிவினை யுடையவனது, திரு - செல்வம், ஊருணி - ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம், நீர் நிறைந்து அற்று - நீர்நிறைந்தாற்போலும்; (எ - று.)

நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவு மென்பதாம்.

(கு - பு.) உலகு - உலகநடைக்குப் பொருளாகுபெயர். அவாவும் என்னும் செய்யுமெனெச்சம், ஈற்றுயிர்மெய்கெட்டு 'அவாம்' என நின்றது; [நன் - வினை - உஉ.] அறிவாளன் - அறிவையாள்பவன். ஊருணி - காரணப்பெயர் ; 'ஊர்' - ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர்: 'உண்' என்னும்வினைக்கு 'நீர்' என்னுஞ் செயப்படுபொருளை வருவிக்க; உண் என்பது - உண்பன தின்பன பருகுவன நக்குவன எனப் பிரித்துக்கூறுமிடத்துச் சிறப்புவினையும், அங்ஙனங்கூறாதவிடத்துப் பசிதாகந்தீர வாயால் உண்ணப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாதலின் பொதுவினையுமா மாதலால், 'ஊர்பருகி' என்னமல் 'ஊருணி' எனப்பட்டது: உண்ணப்படுவது என்று பொருளாதலால், இ - செயப்படுபொருள்விகுதி. 'ஊருணியில் நிறைந்த நீரற்று' என்னாது 'ஊருணிநீர்நிறைந்தற்று' என்றதில், குளமென்னும் இடத்தில் நிகழ்கின்ற நீரென்னும்பொருளின் நிறைதலாகியதொழில் அதற்கு இடமாகிய குளத்தின்மேல் நின்றது. பேரறிவு - பெருமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் இடைநின்ற உகரமுங் கெட்டு ஆதிநீண்டது. நெடிது - நெடுங்காலம். உபமானம், உபமேயம், உவமவுருபு, பொதுத்தன்மை என்னும் நான்கனுள் பொதுத்தன்மைமாத்திரந் தொக்கு மற்றவை தொகாதுவந்ததனால், தொகையுவமையணி; வடநூலார், லுப்தோபமை யென்பர்: வருமிரண்டுபாட்டுக்களும் இவ்வணியே. (௧௫)

௨௧௬. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(இ - ள்.) செல்வம்—, நயன் உடையான்கண் படின் - ஒப்புரவுசெய்வான்கண்ணே படுமாயின், (அது), பயன் மரம் - பயன்படுமரம், உள் ஊர் - ஊர்நடுவே, பழுத்து அற்று - பழுத்தாற்போலும்; (எ - று.)

உலகநீதிபலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே 'நயன்' என்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்கு மென்பதாம்.

(கு - பு.) படுமாயின் - உண்டானால். பயன் - பிரயோசனம். எல்லா நீதிகளுக்கும் பொதுவாகிய 'நயன்' என்பது, இங்கே சிறப்பாய் ஒப்புரவை உணர்த்திற்று. பயன், நயன் - பயம், நயம் என்பவற்றின் ஈற்றுப்போலிகள்; [நன் - எழுத்தியல் - ௬௭.] ஊருள் என்பது உள்ளூர் என முன்பின்னாகத்தொக்குவந்த ஏழாம்வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலியென்பர். ஆல் - ஈற்றசை; செய்யுளின் இறுதியில் நிற்பதுமாத்திரமேயன்றி அடியிறுதியிலும் வாக்கியத்திறுதியிலும் அர்த்தமில்லாமல்வருவதும் ஈற்றசையேயா மெனக் கொள்க. பயம் - பலம் என்னும் வடமொழித் திரிபு. நயனுடையான் என்பதற்கு - நீதியை யறியான் என்றும்பொருள்கொள்ளலாம். "நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க, படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார், குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்க, ளிடுகாட்டு ளேற்றைப் பனை" என்னும் நாலடியார்ச் செய்யுளிலும் இக்கருத்துக் காண்க. இவ்வதிகாரத்தில் முதல் ஐந்து ஆறு இம்மூன்றுபாட்டுக்களின் கருத்தைத் தொகுத்துக் கவிச்சக்கரவர்த்தியாகியகம்பர் இராமாயணத்தில் "ஊருணி நிறையவு முதவு மாடுயர், பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும், கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி, வார்புனல் பெருகவு மறுக்கின் றார் களியார்" எனக்கூறியவாறு உணர்க. "கற்றையஞ் சடாமணி கனக மே

ஜைய, பிற்றைநயென் றுதருள் பெரியர் வண்மைபோன், மற்றவ னுள்ளபன் மாமுந் தம்பய, னெற்றையு முலப்புறு நீகை சான்றவே" என்னுங் கந்த புராணச்செய்யுளையும் அறிக. (௧௬)

௨௧௭. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(இ - ள்.) செல்வம்—, பெருந்தகையான் கண் - (ஒப்புரவுசெய்யும்) பெரியதகைமையையுடையான்கண்ணே, படின் - படுமாயின், (அஃது), மருந்து ஆகி தப்பா மரத்து அற்று - (எல்லாவுறுப்பும் பிணிகட்கு) மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும்; (எ - று.)

தப்புதலாவது - கோடற்கு அரிய இடங்களில் நின்றுதல், மறைந்து நின்றுதல், காலத்தான்வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறைநோக்காது எல்லார்வருத்தமுந்தீர்க்கு மென்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

(கு - பு.) தகைமை - தன்மை. எல்லாவுறுப்பும் - கொழுந்து, இலை, பூ,பட்டை, வேர், காய், பழம், கொட்டை, கட்டை முதலியன. எல்லாவுறுப்பும்பிணிகட்குமருந்தாமரம் - வேம்புமுதலியன சில. தப்புதல் - தவறுதல். கோடற்கு அரிய - கொள்ளுவதற்கு அருமையான. தப்புதல் - சிலவியாதிகளைத் தீர்க்காமையுமாம். யாவரும் தனது இலை இலை முதலிய உறுப்புக்களை முறித்தும் பறித்துஞ் செய்கின்ற தனதுகுறையையும் வருத்தத்தையும் நோக்காமலே அவர்களது நோய்களை மருந்துமரந் தீர்ப்பதுபோல, பெருந்தகையானுடைய செல்வமும் மா... ஒன்றும் இல்லாமல் எளிதாகவெளிப்பட்டுநின்று கொடுக்கக்குறைவுபடுதலும் வருத்தமும் நோக்காமல் அனுபவித்தற்குரியபற்பலபொருள்களையும்உதவுதல்தப்பாமல் அடைந்தவர்வருத்தங்களை யொழிக்கு மென்க. கடப்பாட்டாளன்-பிறர்க்குதவிசெய்பவன். தப்பா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். மரத்து - இரண்டாம்வேற்றுமைத்தொகை; "அத்தி னகர மகரமுனை யில்லை" என்றதனால், அத்துச்சாரியையின்முதலகரம் மவ்வீறொற்றழிந்த அகரத்தின்முன் கெட்டது. செல்வம் - ஒருவரிடத்தும் நிலைத்திராமல் நீங்கிப்போவோம் என்பதுபற்றிவந்த பெயரென்பர். ஆகி என்பதில், ஆகு-பகுதி என்றாயினும், ஆ - பகுதி,கு-சாரியை என்றாயினுங் கொள்க. பெருந்தகை - பெருமையாகிய தகையென விரியும். தகை - தகுதி, ... தகு - பகுதி, ஐ - விகுதி; இசை - தொழிற்பெயராய்ப்பிறந்ததாயினும், பொருளாற்பண்புப்பெயர். மரத்து - சாரியைநிற்கஇரண்டனுருபுதொக்கது (௧௭)

௨௧௮. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ - ள்.) இடன் இல் பருவத்தும் - செல்வம் சுருங்கியகாலத்தும், ஒப்புரவிற்கு - ஒப்புரவுசெய்தற்கு, ஒல்கார் - தளரார்; கடன் அறி காட்சியவர்-தாம்செய்யத்தகுவனவற்றை அறிந்த இயற்கையறிவுடையார்; (எ- று.)

பிறவெல்லாம்ஒழியினும் இஃதொழியார் என்பதாம்.

(கு - பு.) கடன் - முறைமை. இடம் - செல்வம்; அது, ஈற்றுப்போலியாய் 'இடன்' என நின்றது. செல்வமில்லாத எனக்கொண்டால், இன்மை - செயப்படுபொருள்குன்றியதும்; செல்வத்தையுடைத்தாகாத எனக்கொண்டால், இன்மை - செயப்படுபொருள்குன்றாததுமாம். இல்பருவம்-

பண்புத்தொகை; இன்மையாகிய பருவமென்க: இல்லாத பருவம் என விரித்தாலும், காலங்காட்டாதாதலால், வினைத்தொகையாகாது. பருவத்தும், உம் - இழிவுசிறப்பு. ஒல்கார், ஒல்கு - பகுதி. கடன் - கடமென்பதன்போலி. காட்சி - தொழிற்பெயர்; காண் - பகுதி, சி - விகுதி. கண் பொருள்களை எதிரிற் பார்த்தல்போல, அறிவு பொருள்களை ஊகித்தறிதுப்பார்த்தலால், 'காட்சி' எனப்பட்டது. இடமென்பது செல்வமென்னும்பொருளதாதலை மேல் இரவச்சமென்னும்அதிகாரத்தில் "இடமில்லாக், காலு மிரவொல்லாச் சால்பு" என்றவிடத்துங்காண்க. (௧௮)

௨௧௯. நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(இ - ள்.) நயன் உடையான் - ஒப்புரவுசெய்தலையுடையான், நல்கூர்ந்தான் ஆதல் - நல்கூர்ந்தானாதலாவது, செயும் நீர செய்யாது அமைகலா ஆறு - (தவிராது) செய்யும் நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப்பெறாது வருந்துகின்ற இயல்பாம்; (எ - று.)

தான்நுகர்வனநுகரப்பெறுமையன்று என்பதாம்.

இவையிரண்டுபாட்டானும், வறுமையான் ஒப்புரவு ஒழிதற்பாற்றன்று என்பது கூறப்பட்டது.

(கு - பு.) நல்கூர்ந்தானாதல் - தரித்திரப்பட்டவனாதல்; நல்கு ஊர் என்னும் இரண்டுசொற்கள் நல்கூர் என ஒருசொல்லின் தன்மைப்பட்டுப் பகுதியாய்நின்று, பிறன் கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளுதல் என்னும் பொருளதாய், வறுமையைக் குறித்தது. தவிராதுசெய்யும்நீர்மையையுடைய - அவசியமாய்ச்செய்யப்படுந்தன்மையையுடைய. அமைகலா ஆறு - மனஞ்சமாதியாதவழி. தான்நுகர்வனநுகரப்பெறுமையன்று - ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும்பொருள்களுள் ஒன்றையுந் தான் அனுபவிக்கப்பெறுந் தன்மையன்று. ஒழிதற்பாற்றன்று - நீங்குந்தன்மையையுடையதன்று. பிறர்க்கு உதவிசெய்பவன் அதனால் தனக்கு வறுமைநேர்ந்தாலும் அதற்குவருந்தான்; பிறர்க்கு மீண்டும் உதவிசெய்தற்கு இல்லையேயென்று வருந்துவான் என்றுகருத்து. செயும் - செய்யும் என்பதன்தொகுத்தல். நீர - நீர்மையென்னும்பண்பினடியாகப்பிறந்த பலவின்பாற்பெயர்; இரண்டாம் வேற்றுமைத்தொகை. அமைகலா என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தில், ஆ என்னும் இடைநிலை எதிர்மறைகுறித்ததனால், கு, அல் - சாரியைகள்; அல் - எதிர்மறைஇடைநிலையென்றால், ஆ - சாரியையாம்: இனி, கில் என்பதைப்போலக் கல் என்பதையும் ஆற்றலுணர்த்தவதோர் இடைநிலையெனக் கொள்ளினும் அமையும். (௧௯)

௨௨௦. ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(இ - ள்.) ஒப்புரவினால் - ஒப்புரவுசெய்தலான், ஒருவன் - ஒருவனுக்கு, கேடு வரும் - பொருட்கேடு வரும், எனின் - என்பார் உளராயின், அஃது - அக்கேடு, விற்றுக்கோள் தக்கது உடைத்து - (தன்னை) விற்றாயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து; (எ - று.)

'தன்னைவிற்றுக்கொள்ளப்படுவதொருபொருள் இல்லையன்றே, இஃதாயின் அதுவுஞ்செய்யப்படும்' என்றது, புகழ்பயத்தல் நோக்கி.

இதனான், ஒப்புரவினாற்கெடுவது கேடன்று என்று கூறப்பட்டது.

(கு - பு.) என்பார் உளராயின் - என்று சொல்வார் உண்டானால். விற்றாயினும் - விலையாகக்கொடுத்தாயினும். கொள்ளும் - வாங்கும். இல்

லையன்றே, அன்றே - தேற்றமுணர்த்திற்று. இஃதாயின் - ஒப்புரவி
னால் வருங் கேடாயின். அதுவுஞ் செய்யப்படும் - தன்னைவிற்றுங்கொள்
ளப்படும். இங்ஙனங்கூறியது, அவ்வொப்புரவு செய்தலினால் உண்டா
கும் பெரும்புகழைக் கருதி யென்க. 'விற்று' என்பதற்கு 'தன்னை'
எனச் செயப்படுபொருள்வருவித்தார், தன்னினுஞ் சிறந்த தொருபொருள்
இல்லையாதலின்; இதனால், பிறவற்றைவிற்றல் கூறாதே பெறப்பட்டது.
கீழ் "கெடுவாக வையா துலக நடுவாக, நன்றிக்கட் டங்கியான் றாழ்
வு" என்றதனோடு இதனை ஒப்பிடுக. 'எனின்' என்றதனால், ஒப்புரவினாற்
கெடுதிவாராதென்பதும், அதனாற்கெடுதிவரு மென்பார் உலகத்தில் இல
ரென்பதும் பெறப்படும். அஃதொருவன் - ஆய்தம் மெய்போல் ஒலித்தது; உயி
ர்போல ஒலித்தது எனக்கொண்டால், 'கேடெனின்' என்னும் கூவிளச்
சீர்முன் நிரைவருதல் வெண்டளைக்குவழுவாம். விற்று, வில் - பகுதி.
கோள் - முதனிலைதிரிந்ததொழிற்பெயர். கோட்டக்கது - கொள்ளுதற்குத்
தக்கது என நான்காமுருபு விரிக்க; இனி, கொள்ளத்தக்கது என்பது செய
வெனெச்சம் ஈறுகெட்டு முதல்நீண்டு நின்றதெனக் கொள்ளலுமாம். தக்
கது - இறந்தகாலத்தொழிற்பெயர். உடைத்து - உடைமையென்னும் பண்
பி னடியாகப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; இது, பிறவினை இறந்தகால
வினையெச்சமாய்வரும்பொழுது, உடையச்செய்து எனப்பொருள்படும். கே
டன்று என்றதனால், செல்வமென்றுகருதப்படும் எனக. (௨௰)

௨௩-ம் அதி.—ஈகை.

அஃதாவது - வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். இது,
மறுமைநோக்கியதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்க
ப்பட்டது.

(கு-பு.) ஏற்றார்க்கு - யாசித்தவர்களுக்கு. மாற்றாது - இல்லையென்று
சொல்லாமல்; கைம்மாறுநோக்கியல்லாமல் என்றும் பொருள்படும். இம்
மை - இப்பிறப்பு. மறுமை - மரணத்தின்பின்வரும்நிலை. இம்மை மறுமை
என்னும் இரண்டனுள், இம்மையைக்குறித்த ஒப்புரவறிதலின் பின் மறுமை
யைக்குறித்த ஈகையை வைத்தல் அதிகாரஅடைவுக்கு ஏது. ஈகை - தொ
ழிற்பெயர்; ஈ - பகுதி, கை - விகுதி. "ஈ தா கொடு வென மூன்று முறை
றே, யிழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை" என்றதனாலும், ஈதல் -
தன்னினுமிழிந்த பொருளில்லாதவனுக்கு அவனினுமுயர்ந்த பொருளுடை
யோன் ஒன்றைத் தானஞ்செய்தலாம் என்றறிக.

௨௨௧. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(இ-ள்.) வறியார்க்கு - ஒருபொருளும் இல்லாதார்க்கு, ஒன்று -
(அவர்வேண்டியது) ஒன்றை, ஈவதே - கொடுப்பதே, ஈகை - (பிறர்க்குக்)
கொடுத்தலாவது; மற்று எல்லாம் - அஃது ஒழிந்த எல்லாக்கொடையும்,
குறி எதிர்ப்பை நீரது உடைத்து - குறியெதிர்ப்பைகொடுக்கும் நீர்மையை
யுடைத்து; (எ-று.)

ஒழிந்த கொடைக ளாவன - வறியரல்லாதார்க்கு ஒருபயன்நோக்
கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது - அளவுகுறித்துவாங்கி அவ்வாங்
கியவாறே எதிர்கொடுப்பது. 'நீரது' என்புழி 'அது' என்பது, பகுதிப்பொ
ருள்விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், 'குறியெதிர்ப்பைகொடுக்கும்
நீரது உடைத்து' என்றார்.

இதனான், ஈகையது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - பு.) ஒன்றை - ஒருபொருளை. அஃதிழிந்த - அங்ஙனங்கொ
டுத்தல்தவிர்ந்த. நீர்மை - தன்மை. ஒருபயன்நோக்கி - ஒருபிரயோசன
த்தையெதிர்பார்த்து. நீர் - நீர்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம்.
அது என்பது, வேறுபொருளைத்தாராமல், மைவிகுதிபோல அப்பகுதியின்
பொருளையேதந்ததனால், பகுதிப்பொருள்விகுதி; இதை வடநூலார் ‘சுவா
ர்த்தபாவதத்திதப்பிரத்தியயம்’ என்பர். பின்னும் தன்பால் வருதலின் - மீ
ண்டும் தன்னிடத்துவருதலால். “குறியெதிர்ப்பையென்பது - இறந்தகால
“வினைத்தொகைத்தொடர்மொழி. எதிர்காலத்திலே பெறும்படியாகக் குறி
“த்த எதிர்ப்பை என விரியும்; எதிர்ப்பை என்பதனுள், எதிர் - எதிர்காலம்;
“அது தொழிற்பெயராங்கால் இறப்பு, நிகழ்பு என்றாற்போலப் பகுதிப்
“பொருள் விகுதியோடு நின்று விகாரப்பட்டு “ஐயீற் றுடைக்குற் றுகரமு
“மூளவே” என்னுஞ்சூத்திரத்தால் ஐகாரத்தை ஈற்றிலேபெற்று, எதிர்கால
“த்திலே பெறும்படியாகக் குறித்து நிகழ்காலத்திலே இடப்படுகின்றதற்
“குப் பெயராய் வழங்கிவருகின்றது; ‘அவன் எதிர்ப்பையிட்டு உறவாடி
“னான்’ என வழங்கிவருவதைச் செந்தமிழ்நாட்டுவழக்கு நோக்கிக் காண்க:
“இது - கடன்கொடுத்தலிலே நின்றும் வேறுபாடுடையது; இதனை இக்
“காலத்து ‘வரிசை’ என்றும்வழங்குவர்”—இது, இராமானுசகவிராயருரை.
இரவல்,கடன், எதிர்ப்பை என்பன ஒன்றோடொன்று பொருளிற் சிறிதுவேறு
பாடுடையனவென அறிக. இத்திருக்குறளின் கருத்தை “ஏற்றகை மாற்றா
மை யென்னானுந் தாம்வரையா,ராற்றாதார்க்கீவதா மாண்கடன்-ஆற்றின்,
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல், பொலிகட னென்னும் பெயர்
த்து” என நாலடியாரிலுங் காண்க. வறியார் - பண்படியாகப்பிறந்த
பலர்பாற்பெயர்; வறுமை என்னும்பண்பு ஈறுபோய் இடையுகரம் இ ஆயி
ற்று. ஒன்று-ஒருபொருளைக்குறித்தலால், எண்ணலளவாகுபெயர்; இது
போல்வனவற்றை எண்ணுக்கும் எண்ணுடைப்பொருளுக்கும் பொதுவெ
ன்பாருமுளர். ஈவது - எதிர்காலத்தொழிற்பெயர். ஏ - பிரிநிலை. மற்றை
யெல்லாம் என்பது, மற்றெல்லாம் என விகாரப்பட்டுநின்றது; “மற்றெ
ன் கிளவி வினைமாற் றசைநிலை, யப்பா லிரண்டென மொழிமனார் புலவர்”,
“மற்றைய தென்னுங் கிளவி தானே, சுட்டுநிலை யொழிய இனங்குறித் தன்
றே” என்னுந் தொல்காப்பியச்சூத்திரங்களினால், மற்று என்னும் இடைச்
சொல்லுக்குப் பிறிதென்னும்பொருள் இல்லையென்றும், அப்பொருள் மற்
றை என்னும் இடைச்சொல்லுக்கு உண்டென்றுந் தெரிதலால், இங்ஙனங்
கொள்ளவேண்டியதாயிற்று: இதனைக் கீழ் வெஃகாமை என்னும் அதி
காரத்தில் “சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே, மற்றின்பம்
வேண்டு பவர்” என்றதன் உரையில் ‘மற்றை யின்பம் என்பது மற்றின்பம்
எனநின்றது’ எனப் பரிமேலழகர் இலக்கணம் எழுதியவாற்றால் அறிக;
பின்னூல்செய்தவராகிய நன்னூலாசிரியர் “வினைமாற் றசைநிலை பிறிதெனு
மற்றே”எனச் சூத்திரஞ்செய்தது புதியனபுகுதலாமென்று உணர்க. எல்லாம்
உடைத்து - பன்மையொருமைமயக்கம்; [நன் - பொதுவியல்-உக:] தனித்
தனி உடைத்து என்க. வறியரல்லாதார் - செல்வவான்கள். குறியெதிர்ப்பை
நீர் - குறியெதிர்ப்பையினது நீர்மை; ஆறும்வேற்றுமைத்தொகை. குறி
யெதிர்ப்பையென்பது - குறித்த எதிர்ப்பை யென இப்பொருளில் வருதலை
“நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும், ** எல்லோர்க்குங் கொடு”
எனப் புறநானூற்றிலுங் காண்க. (உக)

உஉஉ. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

(இ - ள்.) கொளல் - ஏற்றல், நல் ஆறு எனினும் - (வீட்டுலகிற்கு) நல்ல நெறி என்பார் உளராயினும், தீது - (அது) தீது; மேல் உலகம் இல் எனினும் - (ஈந்தார்க்கு) அவ்வுலகெய்துதல் இல்லையென்பார் உளராயினும், ஈதலே நன்று—; (எ - று.)

'எனினும்' என்பது, இருவழியும் அங்ஙனங் கூறுவாரின்மை விளக்கி நின்றது. பிரிநிலையேகாரத்தால், பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றும். நல்லதுகூறுவார் தீயதும் உடன்கூறினர்.

(கு - பு.) ஏற்றல் - யாசித்தல். அவ்வுலகு எய்துதல் - முத்தியுலக மடைதல். இருவழியும் - இரண்டிடத்தும். தீயதை விளக்கினாலல்லது நல்லது விளங்காதாதலால் இரண்டையும் உடன் கூறினர். யாசித்தல் தீயதாதலை மேல் இரவச்சம் என்னும் அதிகாரத்தில் விரித்துக்கூறுவர். தீது, நன்று - பண்படியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்றுக்கள். மேலுலகம்- எல்லாவுலகங்களிலும் மேம்பட்டதாகிய உலகம்; பரமபதம்: இவ்வுலகத்துக்கு மேலிடத்துள்ள வுலகமெனச் சுவர்க்கமுமாம். இல் - இல்லையென்னும் எதிர்மறைப்பொதுக்குறிப்புமுற்றின் விகாரம்; தனிச்சொல்லென்றுங் கொள்ளலாம். ஈதலே என்ற பிரிநிலையேகாரத்தை எடுத்து 'கொளல்' என்பதனோடும் இயைத்தால், கொடியவையெல்லாவற்றினும் இரத்தல் கொடியதாமென்பதும் பெறப்படும். "இன்றாமை வேண்டி னிரவெழுக," "இலமென்னும், வன்மையின் வன்பாட்ட தில்," "இரத்தலி னின்னாத தில்லை" என்பன காண்க. 'இச்செய்யுளில் தீதென்றும் நன்றென்றும் வந்தமையான் முரணென்னும் அலங்காரமாயிற்று' என்பது, வீரசோழியவுரை.

௨௨௩. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(இ - ள்.) இலன் என்னும் எவ்வம் உரையாமை - (யான்) வறியனென்று (இரப்பான்) சொல்லும் இளிவரவை (தந்தான்பிறர்கண்) சொல்லாமையும், ஈதல் - (அதனைத் தன்கண்சொன்னார்க்கு மாற்றாது) ஈதலும், (இவையிரண்டும்), உள - உளவாவன, குலன் உடையான்கண்ணே - குடிப்பிறந்தான்கண்ணே; (எ - று.)

மேல் "தீது" என்றது ஒழிதற்கும், "நன்று" என்றது செய்தற்கும் உரியவனை உணர்த்தியவாறு. இனி, 'இலனென்னுமெவ்வ முரையாமையீதல்' என்பதற்கு, அவ்விளிவரவை (ஒருவன் தனக்குச்) சொல்வதற்குமுன்னே (அவன்குறிப்பறிந்து) கொடுத்தல் எனவும், அதனை(ப்பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவன்) உரையாவகையாற் கொடுத்தல் எனவும், (யான் இதுபொழுது) பொருளுடையே னல்லேனென(க்கரப்பார்) சொல்லும் இளிவரவைச் சொல்லாது கொடுத்தல் எனவும் உரைப்பாருமுளர்; அவர், 'ஈதல்' என்பதனைப் பொருட்பன்மைபற்றிவந்த பன்மையாக உரைப்பர்.

(கு - பு.) இப்பாட்டிற்கு நான்கு உரை. இளிவரவு - இழிமொழி. அதனை - அவ்விழிமொழியை. குடிப்பிறந்தான் கண்ணே - உயர்குடியிற் பிறந்தவனிடத்தே. ஏ - அசை. முன்பாட்டில் 'தீது' என்ற யாசகத்தை நீங்குதற்கும், 'நன்று' என்ற தானத்தைச் செய்தற்கும் உரியவன் யாரெனில் உயர்குடிப்பிறந்தவனென இதிற் கூறினர். இலன் என்பதற்கு இலக்கணம் - கீழ் ௨0௫-ஆங் கவியிற் காண்க. எவ்வம் - துன்பம்; அதனை உணர்த்தும் மொழிக்கு ஆகுபெயர். உரையாமை - எதிர்மறைத்தொழிற்பெயர்; மை - விகுதி. உரையாமை, ஈதல் என்னும் ஒருமையெழுவாயிரண்டும், உள என்னும் அஃறிணைப்பன்மைக்குறிப்புமுற்றைக் கொண்டன. குல

ன் - குலம் என்பதன் போலி. பொதுப்படக்கூறியதனால், நல்ல குலத்தை உணர்த்திற்று; குணம், ஒழுக்கம், அறிவு, பொருள் என்பவை முதலாகப் பிறசொற்களும் பொதுப்படக்கூறினாற்பெரும்பாலும் நன்மையேகுறிக்கும். உடையான் என்பதை எதிர்மறைவினையாலணையும்பெயராக்கொண்டு, தான் பிறந்த குலத்தின்பெருமையை யழிக்காதவனென்றும் பொருள்கொள்ளலாம். கண்-ஏழனுருபு. ஏகாரத்தைப் பிரிநிலையாகக்கொண்டால், உயர்குடிப் பிறவாதானிடத்து இவ்விரண்டுகுணங்களுள் ஒன்று உண்டாயினும் உண்டாகுமேயன்றி இரண்டுமுண்டாவது அருமையென்பது கருத்தாம். குலனுடையான் - சாதியொருமை. இரண்டாவது உரைக்கு - இல்லையென்னும் வார்த்தையைத் தன்முன் ஒருவன்சொல்லாதபடி அவன்சொல்லுதற்குமுன்னே அவன்கருத்தைக் குறிப்பாலறிந்து கொடுத்தலென்றும், மூன்றுமுரைக்கு - இல்லையென்னும் வார்த்தையை யாசகன் தன்னிடந் தானம்வாங்கினபின்பும் வேறொருவனிடம்போய்ச் சொல்லாதபடி அவனது வறுமை நீங்கவும் அவனுக்குச் செல்வம் சிறப்பும் இருப்புண்டாகவுங் கொடுத்தலென்றும், நான்காமுரைக்கு - இல்லையென்று (இயல்வதுகரப்பாராய) உலோபிகள் சொல்லும் வார்த்தையைத் தான்சொல்லாமற் கொடுத்தலென்றும் பொருள்; இவ்வுரைகளுக்கு, ஈதல் என்பது - பலர்க்குத் தானஞ்செய்தல் பற்றி வந்த பன்மையையுணர்த்தும் பால்பகாவஃறிணைப் பெயராதலால், உள என்னும் பன்மைமுற்றைக் கொண்டதென்க: உரையாமை - எதிர்மறைவினையெச்சம். இதுபொழுது - இப்பொழுதில். கரப்பார் - கொடுக்கக்கூடிய பொருளைக் கொடாமல் மறைப்பவர். இனி, இலன் என்பதை ஆண்பாற்படர்க்கையொருமைவினைமுற்றாகக் கொண்டால், இவன்இல்லாதவனென்னும் நிந்தைச்சொல்லை யாசகனைக் குறித்துத் தான்சொல்லாமலீதலென்றும், இவன் இல்லாதவனென்னும் இகழ்சொல்லைத் தன்னைக்குறித்து யாசகனாவது பிறராவதுசொல்லாதபடியீதலென்றும், தன்னிடம் வந்துபோன யாசகனைக்குறித்துப் பிறர் இவன் இல்லாதவனென்று சொல்லாமற் பொருளால் மிக்கவனென்று சொல்லும்படி யீதலென்றும், இவன் நமது இல்லினிடத்தே [வீட்டில்] வந்துள்ளானென்று இகழ்ந்து கூறுமலீதலென்றும் பொருள்படும். இன்னோரன்ன விசேஷார்த்தங்கள் பலவற்றையும் ஒருங்கேதருகின்ற சிறப்புப்பற்றியன்றே, இடைக்காடர், "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என இந்நூலின்சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் விளங்கச் சிறப்பித்துக்கூறியது. குலனுடையான் என்பதில்- குலத்தை உடைமையாகப்பெற்றவனென்னும் பொருளுந் தோன்றும். ஈதல்தொழில் ஒன்றேயினும் ஈயப்படும்பொருள்கள் பலவாதலால் அப்பொருளின்பன்மைபற்றி ஈதலும் இங்கே பலவாயின; அன்னதானம், கன்னிதானம், சொர்ணதானம், பூதானம், கோதானம், வித்யாதானம் முதலிய பலவகைத்தானங்களென்றபடி. இலன் என்னுஞ் சொல்லை எவ்வமென்றது, அதனைச்சொல்வோருங்கேட்போருந் துன்புறுதலாலென்க் காண்க. முதலுரைக்கு 'உரையாமையீதல்' என்னுஞ் செவ்வெண்ணின் ஈற்றில் 'இரண்டும்' என்னுந்தொகை விகாரத்தால்தொக்கது; [நன் - இடையியல் - ௯.]

இவ்வருமைத்திருக்குறளினது கருத்தின்பெருக்கத்தைத் தொகுத்துத் திருவாவடுதுறையாதீனத்துக் கச்சியப்பமுனிவர் விநாயகபுராணத்தில் அரசியற்கைப்படலத்திற் கூறியுள்ள செய்யுட்களைக் கீழே காண்க.

௩௮. "இரப்பவன் வாளா தேக விலனெனு மெவ்வங் கூறு
திரப்பினை யிரப்ப னன்று மதனினன் றுவ தாகு

மிரப்பவ னிலனென் றூர வியம்பிய வெவ்வஞ் சொல்லெண்
ணிரப்பினும் பிறர்பாற் கூறு திரக்கமோ டிதன் மைந்தா.

௧௯. அருத்தியி னில்லெனன் றுழு னளித்தலு மில்லெனென் றப்பா
லுரைத்தில னச் சால வுதவலு மேற்கின் றூனும்
வருத்தற விலனென் றுமை வழங்கிட வரைவில் செல்வம்
பொருத்தலு மொன்றி னென்று புகழ்மிக விளங்கி நிற்கும்.

௨௦. நலமிகு செல்வம் பெற்றுந் நல்குர வினரைக் காத்த
லின்னற மாதி சீர்த்தி யிலனெனப் பிறர்சொ லெவ்வ
வலனுளைக் கஞ்சியேனும் வறியனை யிலனென் றெள்ளா
தலர்புகழ் பயனும் வேண்டி னீக்கையு மளிக்க மைந்தா."

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா, னீதி வழுவா நெறிமுறையின் - மேதினியி, லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர், பட்டாங்கி லுள்ள படி" என்னும் ஔவையார் பாடலுக்கும் இக்குறளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை யங்களை உய்த்து உணர்க. (௨௩)

௨௨௪. இன்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

(இ-ள்.) இரக்கப்படுதல் - (இரத்தலேயன்றி) இரக்கப்படுதலும், இன்னாது - இனிதன்று; இரந்தவர் இன்முகம் காணும் அளவு - (ஒரு பொருளை) இரந்தவர் (அதுபெற்றதனால்) இனிதாகிய (அவர்)முகங் காணுமளவும்; (எ-று.)

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தால் தொக்கன. இரக்கப்படுதல் - இரப்பார்க்கு ஈவலென்று இருத்தல். அதனை 'இன்னாது' என்றது, "எல்லா, மிரப்பார்க்கொன் றீயாமை" கூடுங்கொல்லோ என்னும் அச்சம் நோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டுமென்பது பெறப்பட்டது.

(கு-பு.) இரக்கப்படுதல் - ஈதல். 'இரக்கப்படுதலும்' என்கிற இறந்ததுதழுவிய எச்சவும்மையும், 'காணுமளவும்' என்கிற முற்றும்மையுந் தொக்கது-விகாரம். ஈவல் - அவர்வேண்டுவதைக் கொடுப்பேன். எல்லா மிரப்பார்க்கு ஒன்றீயாமை கூடுங்கொல்லோ என்னும் அச்சம் - தமக்கு வேண்டும் பலபொருள்களை இரப்பவர்களுக்கு அப்பொருள்கள்பலவற்றுள் யாதாயினுமொன்றைக் கொடுக்கக்கூடாதிருத்தல் தருமோ என்று அதற்குக் குடிப்பிறந்தார் அஞ்சவேண்டுதல். இம்மேற்கோள் - நாலடியாரில் "கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சம், சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்—எல்லாம், இரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம், மாணுக் குடிப்பிறந் தார்" என்பதி லுள்ளது. இன்முகம் - பண்புத்தொகை. காணும் - விகுதியெதிர்காலங்காட்டும் பெயரெச்சம். திருப்தியுண்டாகக் கொடுத்தல் வேண்டுமென்பது இதன்கருத்து. இன்னாது - எதிர்மறைப்பன்மையாகப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று. இப்பாட்டில் 'இரக்கப்படுதல்' என்பதைச் செயப்பாட்டுவினைத் தொழிற்பெயர்க்கு உதாரணங்காட்டினர் இலக்கணக்கொத்துநூலாசிரியர். (௨௪)

௨௨௫. ஆற்றுவார்க் காற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(இ-ள்.) ஆற்றுவார்க்கு - (தவத்தான்) வலியார்க்கு, ஆற்றல் - வலியாவது, பசி ஆற்றல்-(தம்மையுற்ற) பசியைப் பொறுத்தல்; அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - (அவ்வலிதான்) அங்ஙனம் பொறுத்தற்கு அரிய பசியை (ஈகையான்) ஒழிப்பாரது வலிக்குப் பின்; (எ-று.)

தாமும்பசித்துப் பிறரையும் அதுதீர்க்கமாட்டாதா ராற்றலின் தாமும் பசியாது பிறரையும் அதுதீர்ப்பா ராற்றல் நன்று என்பதாம்.

(கு - பு.) வலி - பலம். உற்ற - அடைந்த. அது - பசியை. ஆற்றலின் - வலிமையினும். ஆற்றல் - ஆற்று என்னும் பகுதியின்மேல் வந்த தொழிற் பெயர். தவஞ்செய்பவர் உண்டிசுருக்கல் முதலியவற்றால் தமக்குவருந் துன்பங்களைப் பொறுத்தலை மேல் "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறு கண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு" என்பதனாலும், துறவறத்தார்க்கு இல்லறத்தார் உண்டிமுதலியன உதவிப் பசிமுதலிய இடையூற்றினை ஒழித்தலை மேல் "துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல், மற்றை யவர்க டவம்" என்பதனாலும், கீழ் "இல்வாழ்வா னென்பா னியல் புடைய மூவர்க்கும், நல்லாற்றி னின்ற துணை" என்றதனாலும் அறிக. "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார், பெருமை பிறங்கிற் றுலகு" என்றதுமுதலாகக் கீழ் நீத்தார்பெருமையென்னும் அதிகாரத்திற் கூறிய முற்றத்துறந்த முனிவரது பெருமையினுந் தானஞ்செய்வாரதுபெருமையே மிக்க தென்பது கருத்து; எனவே, எல்லாப்பெருமையினும் இதுசிறந்த தென்பதாம். 'நான்கு ஆச்சிரமிகளுள் வேதமுதலியவற்றிற் சொல்லுகிற கர்மாநுஷ்டானஞ்செய்கிற கிரகஸ்தன் மற்றை மூவரையும் பிக்ஷைகொடுத்துக்காக்கிறபடியால் உயர்ந்தவனென்று சொல்லப்படுகிறான்' என்பது, மநுதருமசாஸ்திரம். 'ஆற்றுவா ராற்றல்' என வேற்றுமைத்தொகையாகவும் பாடமுண்டு. (உரு)

உஉசு. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி.

(இ - ள்.) அற்றார் - வறியாரது, அழி பசி - மிக்க பசியை, தீர்த்தல் - (அறன்நோக்கித்) தீர்க்க; பெற்றான் - (பொருள்) பெற்றானொருவன், பொருள் வைப்பு உழி - அதனை (த்தனக்கு உதவ) வைக்கும் இடம், அஃது - அவ்வறம், (ஆகலான்); (எ - று.)

எல்லாநன்மைகளும் அழியவருதலின், 'அழிபசி' என்றார். 'அறனோக்கி' என்பது, எஞ்சிநின்றது. அற்றாரழிபசிதீர்த்த பொருள் பின் தனக்கே வந்து உதவுமென்பதாம்.

(கு - பு.) அற்றார் - பொருள்களில்லாதவர். அழி பசி - எல்லா நன்மைகளையும் அழிக்கின்ற பசி; வினைத்தொகை, இங்கே பிறவினைப்பொருளது: அன்றிக்கே, எல்லாநன்மைகளும் அழிதற்குக்காரணமான பசியென்று காரியப்பொருளில்வந்த வினைத்தொகையெனவுங் கொள்ளலாம். பசி எல்லாநன்மைகளையும் அழித்தலை "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின், கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்பறந்து போம்", "பிறந்தகுல மாயும் பேராண்மை மாயுஞ், சிறந்ததங் கல்வியு மாயுங் - கறங்கருவி, கன் மேற் கழூஉங் கணமலை நன்னாட, வின்மை தழுவப் பட் டார்க்கு" என்பவற்றாலும் அறிக. அழிக்கும்பசி எனவே, மிக்கபசியென் றாயிற்று. அழித்தல் - வருத்துதலுமாம். பசி - உணவில் விருப்பம். அறன் நோக்கி - தருமத்தைப் பார்த்து; இது தருமமென்று எண்ணி. தீர்க்க - நீக்குக. தீர்த்தல் - தல் விகுதி பெற்றுவந்த வியங்கோள் வினைமுற்று. அதனை - அப்பொருளை. அறனோக்கி என்பது - சொல்லெச்சம்; அஃதாவது - வேண்டியசொல் குறைந்துநிற்பது: எஞ்சுதல் - குறைதல்; அங்ஙனங் குறைந்துநின்றது, வருவித்து முடிக்கப்பட்டது. பின் - மறுமையில். ஏழைகளுக்குப் பொருளைத் தானஞ்

செய்தவன் அதன்பயனால் மறுமையில் இன்பமும் வருபிறப்பிற் பொருளுந் தவறாமற்பெறுவா னென்பது கருத்து. அஃதொருவன் - ஆய்தம் உயிர் போல ஒலித்தது; ஆதலால், தீர்த்த என்னுந் தேமாவின்முன் லஃ என நிரைவந்தது: மெய்போல் ஒலித்ததெனக் கொண்டால், மாமுன் நேர் வந்தது வெண்பாவுக்கு உரிய வெண்டளைக்கு வழுவாம். வைப்பு - வைத்தல்; தொழிற்பெயர்: பு - விகுதி. வைப்புழி என்பதை - வைத்தற்கு உரிய இடம் என நான்காம்வேற்றுமைத்தொகையாக விரிக்க; வைப்ப உழி எனப் பிரித்துச் செயவெனெச்சம் ஈறுதொக்கதெனக் கொள்ளினும் அமையும். இனி, இக்குறளினை ஒருவாக்கியமாகக்கொண்டு, வறியவரதுபசியை யொழித்தலாகிய அத்தருமம் அதனை ஒருவன் பெற்றானாயின் அவன் பொருளைச் சேமித்துவைக்கும் இடமாம் என்றும் உரைக்கலாம். (உ௬)

உஉ௭. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(இ - ள்.) பாத்து ஊண் மரீஇயவனை - (எஞ்ஞான்றும்) பகுத்துஉண்டல் பயின்றவனை, பசிஎன்னும் தீ பிணி - பசி யென்று சொல்லப்படும் தீய நோய், தீண்டல் அரிது - தீண்டுதல் இல்லை; (எ-று.)

இவ்வுடம்பில்நின்று ஞானஒழுக்கங்களை அழித்து அதனால் வருமுட்டம் புகட்குந் துன்பஞ்செய்தலின், 'தீப்பிணி' எனப்பட்டது. தனக்கு மருத்துவன் தானாகலின் பசிப்பிணி நணுகாது என்பதாம்.

இவையாறுபாட்டானும், ஈதலின்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பு.) எஞ்ஞான்றும் - எப்பொழுதும். பகுத்து உண்டல் - பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி என்னும் மூன்று ஆச்சிரமத்தார்க்கும், அகதி, தரித்திரன் முதலானவர்க்கும், பிதுருக்கள், தேவர், விருந்தாளிகள், பந்துக்கள் முதலியோர்க்கும் தான் சம்பாதித்தபொருளைப் பங்கிட்டுக்கொடுத்துத் தான்உண்ணுதல்; கீழ் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் "பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" என்றார். பயிலுதல் - பழகுதல். தீய - கொடிய. பசியென்கிற நோய்க்குத் தீமை - பலநன்மைகளையும் அழித்து இம்மை மறுமை என்னுமிரண்டுக்குந் துன்பஞ்செய்வதாதல். மருத்துவன் - வைத்தியன்; மருந்தின்தன்மையை அறிந்து கொடுப்பவன். நணுகாது - சேராது. பிறர்க்கு இட்டுஉண்ணும் ஈகையுடையானுக்கு எப்பொழுதும் வறுமைநோய் சேராதென்பது கருத்து. பாத்து என்னும் இறந்தகாலவினையெச்சத்தில், பகு என்பதன்மரூஉவாகிய பா - பகுதி. ஊண் - உண் என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். மருவியவன் என்பது, மரீஇயவன் என விகாரப்பட்டு அளபெடுத்தது; இது - சொல்லிசையளபெடையின்பாற்படும்: மாத்திரை - மூன்று. தீப்பிணி - பண்புத்தொகை; தீமையாகிய பிணி யென விரியும்: தீயோடொத்த பிணி யென விரித்து, உவமத்தொகை யெனவுங் கொள்ளலாம்: ஜாடராக்கினி எனப் பசிக்குப் பெயராதலால். தீண்டல், தீண்டு - பகுதி. தன்பசிநோயை எப்பொழுதும் ஒழித்தற்கு வேறொருவைத்தியனைத் தேடாமல் தானே ஒருபிறப்பில் ஒழித்துக்கொள்ளுதலால், கொடையாளியைக்குறித்து 'தனக்கு மருத்துவன் தானாகலின்' என்றார். பிறர்பசியை ஒழித்தல் தன்பசியை எப்பிறப்பிலும் ஒழிக்கும் மருந்தா மென்க. (உ௭)

உஉ௮. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(இ - ள்.) தாம்—, உடைமை - உடைய பொருளை, வைத்து - (ஈயாது) வைத்து, இழக்கும் - (பின்) இழந்துபோம், வன்கணவர் - அருளிலாதார், ஈத்து - (வறியார்க்கு வேண்டியவற்றைக்) கொடுத்து, உவக்கும் - (அவர்) உவத்தலான் (அருளுடையார்) எய்தும், இன்பம் - இன்பத்தினை, அறியார்கொல் - (கண்டு) அறியார்கொல்லோ ? (எ - று.)

'உவக்கும்' என்பது, காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது, 'இன்பம்' என்னுங்காரியப்பெயர் கொண்டது. அறிந்தாராயின் தாமும் அவ்வின்பத்தை எய்துவதல்லது வைத்திழவார் என்பது கருத்து.

(கு - பு.) வன்கண்மை - கொடுமை, அருளின்மை. அவர் உவத்தலான் - யாசகர் மகிழ்தலால். எய்தும் - தாம் அடைகிற. உவக்கும் இன்பம் - உவத்தலாற் பெறும் இன்பம்; பெயரெச்சம் - காரணப்பொருளது: "சங்கு சுட்ட சுண்ணாம்பு", "உண்ட இளைப்பு", "வந்த வெயர்வு" என்பவற்றிற்போல. ஈந்து என்பது,எதிகைநோக்கி ஈத்து என விகாரப்பட்டுநின்றது;வலித்தல். கொல்-வினா. உடைமை-உடைத்தாயிருக்கும்பொருளுக்குப் பண்பாகுபெயர். பொருளைத் தேடி வைத்து இழப்பவர் கொடுத்துமகிழும் இன்பத்தை அறியா ரென்பது கருத்து; இதனால், பணஞ்சம்பாதித்தற்குப் பயன் பிறர்க்குத் தானஞ்செய்தலே யென்றும், அதனலாகுமின்பம் மற்றையெல்லா வின்பங்களினுஞ் சிறந்த தென்றும்,தானஞ்செய்யாதவர்களுக்கு "ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடுந்துன்பங்-காத்தல், குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக், குறைபதி மற்றைப் பொருள்" என்பதிற் கூறிய துன்பங்கள்மாத்திரம் உள்ளனவேயன்றி இன்பமென்பது சிறிதும் இல்லை யென்றும் அறிக. (உஅ)

உஉகூ. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(இ - ள்.) நிரப்பிய - (பொருட்குறை) நிரப்பவேண்டி, தாமே தமியர் உணல் - (வறியார்க்கு ஈயாது) தாமே தனித்துஉண்டல், இரத்தலின் இன்னாது - (ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று) இரத்தலினும் இன்னாது: மன்ற - ஒருதலையாக; (எ - று.)

பொருட்குறை நிரப்பலாவது - ஒரோ எண்களைக் குறித்து அத்துணை ஈட்டுதும் என ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல் - பிறரை ஒழித்தல். இரத்தற்குஉள்ளது அப்பொழுதைஇளிவரவே, பின் நல்குரவு இல்லை, தமியருண்டற்கு அவையிரண்டும் உளவாம் ஆகலின், 'இரத்தலின்இன்னாது' என்றார். 'நிரப்பிய' என்பதற்கு, 'தேடிய உணவுகளை' என்று உரைப்பாருமுளர்.

(கு - பு.) இன்னாது- துன்பந்தருவது ; இனிதாகாதது. ஒருதலையாக - நிச்சயமாக. ஒரோஎண்கள்-சிலதொகைகள் ; ஆயிரம், பதினாயிரம், லட்சம் முதலிய கணக்குக்கள். அத்துணை ஈட்டுதும் என ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல் - அவ்வளவுசம்பாதிப்போமென்று சம்பாதித்தலையே முக்கியமாகக்கொண்டு பேராசைப்பட்டுப் பிறர்க்குக்கொடுக்கக்கூடியதையுங் கொடாமல் உலோபஞ்செய்து பணஞ்சேர்த்தல். இளிவரவு - அவமானம்; ஈனத்தனம். நல்குரவு-வறுமை. அவைஇரண்டும் - அவமானமும், வறுமையும். இரத்தலின்-இரத்தல்போல என்றும் பொருள் கொள்ளலாம். மன்ற - தெளிவுப்பொருளுணர்த்தும் இடைச்சொல்; "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" இது, தொல்காப்பியம். நிரப்பிய - செய்பிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம் ; நிரம்பு என்பதன்

பிறவினையாகிய நிரப்பு - பகுதி, இய - காலங்காட்டும் வினையெச்சவிகுதி. சம்பாதித்து நிறைத்துவைத்த உணவுகளை என்கிற இரண்டாவது உரையில், நிரப்பிய என்பது - அன்சாரியைபெறாத இறந்தகாலப் பலவின்பால் வினையாலணையும்பெயர்; இரண்டாம்வேற்றுமைத்தொகை. இனி, இறந்தகாலப் பெயரெச்சமாகக் கொண்டு, பொருள்களைநிறைத்துவைத்த தாம் மாத்திரமே என்றும் உரைக்கலாம். இம் மூன்று பொருள்களிலும் வருமொழிமுதல்வலி மிகாமைக்கு விதி, "செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப், பெயரி னெச்சமுற் றாறனுருபே, யஃறிணைப் பன்மை யம்மமுனியல்பே" என்பது. 'தாமே'—பிறரையொழித்தலால், ஏ - பிரிநிலை. தமியர் - தனிஎன்னும்பொருளுணர்த்தும் தமி என்பதன் அடியாப் பிறந்த பலர்பாற்குறிப்புவினைமுற்றெச்சம். மிகத் துன்பந்தருவதாகிய யாசித்தலினுந் துன்பந்தருவது தானஞ்செய்யாமல் தானே தனித்துண்பது என்று கருத்து: "மருந்தே யாயினும் விருந்தோ டுண்" என்றதனாலும் தனித்துண்ணுதல் தவறாம். (௨௯)

௨௩௦. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
ஈதல் இயையாக் கடை.

(இ - ள்.) சாதலின் இன்னாதது இல்லை-(ஒருவர்க்குச்)சாதல்போலஇன்னாதது(ஒன்று)இல்லை; அதூஉம்-அத்தன்மைத்தாகிய சாதலும்,ஈதல் இயையாக்கடை- (வறியார்க்கு ஒன்று) ஈதல் முடியாதவழி, இனிது—; (எ-று.)

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், 'இனிது'என்றார்.

இவைமூன்றுபாட்டானும், ஈயாமையின் குற்றம் கூறப்பட்டது.

(கு - பு.) உடற்பொறை - உடம்பாகிய பாரம். பாவிகளுடைய உடம்பைப் பாரமென்பது நூற்கொள்கை. இன்னாதது - எதிர்மறைக் குறிப்புவினையாலணையும்பெயர்; இன்னா - எதிர்மறைப்பண்படி, பகுதி: இதில், இனிமையென்பதன் விகாரமாகிய இன் - பகுதி, ஆ - இடைநிலை என்பாருமுளர்; த் - எழுத்துப்பேறு, அ - சாரியை: து, அ - சாரியைகள், உகரங்கெட்டது-சந்தி எனினுமாம்; து-ஒன்றன்பால்விகுதி. இல்லை- இருதிணையைம்பால்மூவிடத்திக்கும் பொதுவான குறிப்புமுற்று: வேறு, உண்டு என்பனவும்இவ்வாறே; [நன்-வினை-௨௦.] "மூற்றுமற்றொரோவழி" என்ற விதியால், அது என்னும் முற்றியலுகரத்தின்மேல் இழிவுசிறப்பும்மையின் உயிர் ஏறி அதும் என நின்று, பின் இன்னிசைநிறைக்க வேண்டிக் குறில் நெடிலாய் 'அதூஉம்' என அளபெடுத்தது. இயையாக்கடை என்பதை - ஒருசொல்லாகவைத்துக் கடைஎன்னும் விகுதிபெற்ற எதிர்மறையெதிர்காலவினையெச்சமென்றாயினும், இயையா கடை என இருசொல்லாகவைத்து ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தொடராகவாயினுங் கொள்க. ஒருபொருளைக் கேட்டவர்க்கு வைத்துக்கொண்டே கொடாமற்போவது மரணவேதனையினும் மிகக்கொடிதென்பது தாற்பரியம். இப்பாட்டைக் குறள்வெண்பாவுக்கு உதாரணங்காட்டினர் வீரசோழியவுரைகாரர்.

"ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்"என்னுங் கலித்தொகை மேற்கோளாலும் இல்லறத்திற்கு ஈகை சிறந்ததாதலறிக; இதற்குப் பொருள்-இல்வாழ்க்கைநடத்துதலென்றுசொல்வது மிடித்தவர்க்கு யாதாயினுமொன்றை யுதவுதலே யென்பது. (௩௦)

௨௪-ம் அதி.— புகழ்.

அஃதாவது - இல்வாழ்க்கைமுதல் ஈகைஈறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து

இறவாது நிற்குங் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றிவருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

(கு-பு.) இல்வாழ்க்கை-இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு; இது, இந்நாலின் ஐந்தாமதிகாரம்: அதுமுதல் இதுவரையிற் பத்தொன்பது அதிகாரங்களில் இல்லறவொழுக்கம் கூறப்பட்டது. வழுவாதார் - தவறாமல் நடந்தவர்கள். இம்மைப்பயன் - இப்பிறப்பிலடையும் பிரயோசனம். இவ்வுலகின்கண்நிகழ்ந்து - இந்தவுலகத்திற்பரவி. இறவாதுநிற்கும் - என்றும் அழியாமலிருக்கிற.

௨௩௧. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) ஈதல்-(வறியார்க்கு) ஈக; இசை பட வாழ்தல்- (அதனால்) புகழ் உண்டாக வாழ்க: அது அல்லது - அப்புகழல்லது, உயிர்க்கு - (மக்கள்)உயிர்க்கு, ஊதியம் - பயன், இல்லை - (பிறிதொன்று) இல்லை, (ஆகலான்); (எ - று.)

இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும், "உணவின் பிண்ட முண்டி முதற்று" ஆகலின் ஈதல் சிறந்தது எனபதற்கு ஞாபகமாக, 'ஈதல்' என்றார். 'உயிர்க்கு' என்பது, பொதுப்படக் கூறினாரேனும், விலங்குஉயிர்கட்கு ஏலாமையின், மக்கள் உயிர்மேல் நின்றது.

(கு - பு.) ஆண்மை - வீரத்தன்மை, பராக்கிரமம், பௌருஷம். "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" என்பது, புறநானூறு - ௧௮ - ஆஞ் செய்யுளில உள்ளது; 'உணவை முதலாகவுடையது அவ்வுணவாலுளதாகிய உடம்பு' என்று உரை. ஞாபகம் - நினைப்பு. விலங்கு-மிருகங்கள். ஏலாமையின் - ஈதலு மிசைபட வாழ்தலும் பொருந்தாமையால். 'சோற்றுலெடுத்தசுவர்' என்றபடி உணவைக்கொண்டே வளருகின்ற உடம்பை ஓம்புதற்கு வேண்டியபொருள்களைக் கொடுப்பதுவே புகழுண்டாதற்கு முக்கிய காரணமென்றும், மற்றைக்காரணங்கள் அவ்வளவு சிறந்தனவல்லவென்றும், மனிதசன்மத்திற்பிறந்ததற்குப்பயன் அங்ஙனம் ஈந்து புகழ்பெறுதலேயாமென்றும் இதன்கருத்து. ஈதல், வாழ்தல்- தல் ஈற்று உடன்பாட்டுவியங்கோள் முற்றுக்கள்; இவற்றுக்கு- மன்னர்எனத் தோன்றாஎழுவாய் வருவிக்க. இப்பாட்டு, உரையாசிரியர்கருத்துப்படி மூன்று வாக்கியம். இதனை ஒரேவாக்கியமாகக்கொண்டு, பிறர்க்குஈதலினாற் புகழ்பெறவாழ்தலாகிய அத்தொழிலல்லது உயிருக்குலாபம் வேறில்லையென்றும் உரைக்கலாம். அல்லது - எதிர்மறைக்குறிப்புவினையெச்சம்; அல் - பகுதி: இதுவே எதிர்மறையைக் காட்டிற்று; அ - சாரியை, து - விகுதி. 'உயிர்' என்றது இங்கே மனிதருயிரைக் குறித்தது அதன் சிறப்பினாலெனக் காண்க. (௩௧)

௨௩௨. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

(இ - ள்.) (உலகத்து), உரைப்பார் - (ஒன்று)உரைப்பார், உரைப்பவை எல்லாம் - உரைப்பனவெல்லாம், இரப்பார்க்கு - (வறுமையான்)இரப்பார்க்கு, ஒன்று - (அவர் வேண்டியது)ஒன்றை, ஈவார்மேல் - ஈவார்கண், நிற்கும்—, புகழ் - புகழாம்; (எ - று.)

புகழ்தான், உரையும் பாட்டும் என இருவகைப்படும்; அவற்றுள் 'உரைப்பாருரைப்பவை' என எல்லார்க்கும்உரிய வழக்கினையே எடுத்தாராயினும், இனம்பற்றி, புலவர்க்கே உரிய செய்யுளுங் கொள்ளப்படும்: பட

வே, 'பாடுவார்பாடுவனவெல்லாம்புகழாம்' என்பதூஉம் பெற்றும். ஈதற்காரணஞ்சிறந்தமை இதனுள்ளுங் காண்க. இதனை 'பிறர்மேலும் நிற்குமென்பார்தாம் எல்லாஞ் சொல்லுக; புகழ் ஈவார்மேல் நிற்கும்' என்று உரைப்பாருமுளர்; அது புகழதுசிறப்புநோக்காமை அறிக.

(கு - பு.) உரைப்பார் உரைப்பன - சொல்லுவார் சொல்லுவன. வழக்கு - உலகவழக்கு; அதாவது - உரை. இனம் - ஒருவருக்கமாயிருத்தல். ஈதற்காரணஞ்சிறந்தமை-புகழின்காரணமாகிய கல்விமுதலியபலவற்றுள் ஈதல் சிறந்ததாதல். இதனுள்ளும் - மேற்பாட்டில்மாத்திரமேயன்றி இப்பாட்டிலும். இரண்டாமுரையில் - 'உரைப்பாருரைப்பவையெல்லாம்' என்றது வரையில் ஒருவாக்கியமும், மற்றது ஒருவாக்கியமுமெனக் காண்க. அவ்வுரை புகழின்சிறப்பைக்குறியாமல் ஈகையின் சிறப்பையே குறித்தலாற் பொருந்தாதென்றார். எல்லாம் என்பது - பன்மைகுறிக்கும்பெயர்; புகழ் - பால்பகாவஃறிணைப்பெயராதலால், 'உரைப்பவையெல்லாம் புகழ்' என்னும் முடிபு அமைந்தது. 'இரப்பார்க்கொன்றீவார்மேனிற்கும்' என்ற இடைப்பிறவரல், புகழுக்குச் சிறந்தகாரணமின்னதென்பதை நன்குவிளக்க வந்தது. உலகத்தில் பேசுவார் பேசுபவையும், பாடுவார்பாடுபவையுங் கொடையாளிகளின் புகழேயென்றது கருத்து. நிற்கும் என்னும் எதிர்காலப்பெயரெச்சத்தில், கு -சாரியை. புகழ் உரையும்பாட்டுமென இருவகைப்படுதலை "வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து, வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை, யுரையும் பாட்டு முடையோர் சிலரே, மரையிலை போலமாய்ந் திசினோர் பலரே" என்னும் புறநானூற்றைக்கொண்டும் அறிக. (௩௨)

௨௩௩. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

(இ - ள்.) ஒன்றா - (தனக்கு) இணை இன்றாக, உயர்ந்த - ஓங்கிய, புகழ் அல்லால் - புகழல்லது, உலகத்து—, பொன்றாது நிற்பது - இறவாது நிற்பது, ஒன்று - பிறிதொன்று, இல் - இல்லை; (எ - று.)

இணை இன்றாக ஓங்குதலாவது - கொடுத்தற்கு அரிய உயிர் உறுப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னொடு ஒப்பதின்றித் தானே உயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவதென்பதாம். இனி, 'ஒன்றா'என்பதற்கு-ஒருவார்த்தையாக(ச்சொல்லின்)எனவும், ஒருதலையாகப் பொன்றாது நிற்பது எனவும் உரைப்பாருமுளர்.

இவைமூன்றுபாட்டானும், புகழது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பு.) ஒன்றா - ஒப்பற்றதாக. ஆ - ஆகவென்பதன் விகாரம்; ஆய் என்பவையும் இங்ஙனம் விகாரப்பட்டு வரும். இறவாது - அழியாமல். உயிரைக்கொடுத்ததற்குத் ததீசிமுனிவரும், உறுப்பைக்கொடுத்ததற்குச் சிபிச்சக்கரவர்த்தியும், பொருளைக்கொடுத்ததற்குக் கர்ணனும் முதலியோரை உதாரணமாகக்கொண்டு அவர்கள்புகழ் இப்பொழுதும் எங்கும்பிரசித்தமாய் வழங்கிவருவதைக் காண்க. இரண்டாமுரைக்கு, சொல்லின் என்பது - இசையெச்சம். மூன்றுமுரைக்கு, ஒன்றா என்பதற்கு - நிச்சயமாக என்று பொருள். முதலுரைக்கு ஒன்றா உயர்ந்த என இயையும். ஒன்று - ஏகம், அத்விதீயம். இனி, ஒன்றா என்பதை - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாகக்கொண்டு, உலகமென்பதனோடு இயைத்து, எப்பொருள்களும் நிலைத்தலில்லாத இவ்வுலகத்திலே புகழல்லது நிலைத்துநிற்பது வேறில்லையென்றும் உரைக்கலாம். ஆதாரமாகிய உலகம் அழிய ஆதேயமாகிய புகழும் அழிதல் கூடுமாதலால், 'உலகத்துநிற்பது' என்றார். புகழினது அழியா

ததன்மையை "இந்நிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநடுக" எனப் பிறர் கூறியவாற்றாலும் அறிக. அல்லால்-எதிர்மறைவினையெச்சம்; ஆல் - விகுதி. நற்கருமங்களின் பயனாய் மறுமையிலுண்டாகின்ற இன்பங்கள் அழிந்தாலும் இம்மையிலுண்டாகின்ற புகழ் அழியா தென்பது கருத்து. (௩௩)

உ௩௪. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு.

(இ-ள்.) (ஒருவன்), நிலம் வரை - நிலஎல்லைக்கண்ணே, நீள் புகழ் - பொன்றாதுநிற்கும் புகழை, ஆற்றின் - செய்யுமாயின், புத்தேள் உலகு - புத்தேளுலகம், புலவரை போற்றாது - (அவனையல்லது) தன்னையெய்தினின்ற ஞானிகளைப் பேணாது; (எ - று.)

புகழுடம்பான் இவ்வுலகும், புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே எய்தாமையின், 'புலவரைப்போற்றாது' என்றார். அவன் இரண்டு உலகும் ஒருங்கே எய்துதல், "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வானவூர்தி,யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து" எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது.

(கு-பு.) நிலஎல்லைக்கண்-பூமியினிடத்தில். நீள் புகழ்- நீளும்புகழ் என எதிர்காலவினைத்தொகை; நெடுங்காலம் நிற்கும் புகழ் என்றவாறு: இனி, நீட்சியாகிய புகழ் எனப் பண்புத்தொகையாகக்கொண்டால், பெருங்கீர்த்தியென்று ஆகும். செய்யுமாயின் - உண்டாக்குவனானால், சம்பாதித்தால். புத்தேள் உலகம் - தேவலோகம். ஞானிகளைப்பேணாது - தத்துவஞானமுடையவரை விரும்பிநன்குமதியாது. என்றது-இம்மையிற் புகழையீட்டாமல் அறிவைமாத்திரம்பெற்று யோகமுயற்சியால் மறுமையில்தேவசரீரத்தைப் பெற்றவர்களினும் இம்மையிற் புகழையும் ஈட்டித் தானமுதலியவற்றின் பயனால் மறுமையில் தேவசரீரத்தைப்பெற்றவர்களுக்குச் சுவர்க்கலோகத்தில் மிக்க சிறப்பு நடக்குமென்பது கருத்து. இம்மையில், உடம்பு இரண்டு; பூதவுடம்பும் புகழுடம்பும் என: பூதவுடம்பாவது-பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலுண்டான சரீரம்; புகழுடம்பாவது - கீர்த்தியால் என்றும் பேர் நிலைபெற்றிருத்தல்: பூதவுடம்புக்கு அழிவு உண்டு; புகழுடம்புக்கோ அது இல்லை. தேவவுடம்பு - தேஜோமயமானது; இதற்கும் அழிவுண்டு. இவற்றுள் பூதவுடம்பைமாத்திரம் பெற்றுநின்ற மண்ணுலகத்தாரினும், தேவவுடம்பைமாத்திரம் பெற்றுநின்ற விண்ணுலகத்தாரினும், புகழுடம்பு தேவவுடம்பு என்னும் இரண்டையும் இரண்டுஉலகத்திலேஏககாலத்திற்பெற்றவர்களது பெருமை சிறந்ததாம். ஒருங்கே எய்தாமையின்- தத்துவஞானிகள் ஒருசேர அடையாமையால். "புலவர்பாடும்" என்னும் மேற்கோள்-புறநானூறு, உ௭-ஆம் பாட்டில் உள்ளது: புலவராற்பாடப்படும் புகழையுடையோர் ஆகாயத்தின்கண் பாகனாற் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவார் என்றுசொல்லுவார் அறிவுடையோர் தாம்செய்யும் நல்வினையை முடித்து என்று உரை; தாஞ்செய்வினை முடித்து வானவூர்தியெய்துப என்று அந்வயம். இதனால், புகழுடையவன் தேவலோகத்தையும் அடைதல் விளங்குகின்றது. பிறர் என்றது - அப்பாட்டுப்பாடிய உறையூர்முதுகண்ணன்சாத்தனார். நிலவரை - நிலத்தின் எல்லையென உடைமைப் உடையதும் வேறாகாத ஒற்றுமைக்கிழமைப் பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத்தொகை யென்றாயினும், நிலமாகிய எல்லையென இருபெயரொட்டுப்பண்புத்தொகை யென்றாயினுங் கொள்க. புலம் அல்லது புலமை - அறிவு; அதனையுடைய ஞானிகள், புலவர்: இது-விபுதர் என்னும் வடசொல்லின் பொருள் கொண்டது. (௩௪)

௨௩௫. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

(இ - ள்.) நத்தம் (ஆகும்) கேடும் - (புகழுடம்பிற்கு) ஆக்கமாகுங் கேடும், உளது ஆகும் சாக்காடும் - (புகழுடம்பு) உளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க்கு அல்லால் - சதுரப்பாடுஉடையார்க்கல்லது, அரிது - இல்லை; (எ - று.)

நந்து என்னுந் தொழிற்பெயர், விகாரத்தால் 'நத்து' என்று ஆய், பின் 'அம்' என்னும் பகுதிப்பொருள்விகுதி பெற்று, 'நத்தம்' என்று ஆயிற்று. 'போல்' என்பது - ஈண்டு, உரையசை. 'ஆகும்' என்பதனை முன்னும் கூட்டி, 'அரிது' என்பதனைத் தனித்தனி கூட்டி உரைக்க. ஆக்கமாகுங் கேடாவது - புகழுடம்பு செல்வ மெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்காடாவது-புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றான் நிலையின எய்துவார் வித்தகராகலின், 'வித்தகர்க்கல்லால் அரிது' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், புகழுடையாரதுமேன்மை கூறப்பட்டது.

(கு - பு.) புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடு - கீர்த்திவிருத்தியடைதற்குக் காரணமான செல்வச்செலவு. புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடு - கீர்த்தி நிலைத்திருக்க மரணமடைதல். சாக்காடு - சாவு; தொழிற்பெயர்; காடு - விகுதி. சதுரப்பாடு உடையார் - சாமர்த்தியமுடையவர். தொழிற்பெயர் - வினைப்பகுதி யென்றபடி; முதனிலைத்தொழிற்பெயரொன்றுமாம். விகாரம் - இங்கே வலித்தல். பொருந்தல் திருந்தல் என்னுந் தொழிற்பெயர்கள் பொருத்தம் திருத்தம் என நிற்றல்போல, நந்தல் என்னுந்தொழிற்பெயர் நத்தம் என நின்றது. ஈண்டு-இங்கே. 'போல்' - ஒப்பில்போலி; "ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்" என்னுஞ் சூத்திரத்தால் இது உரையசைப்பொருளதாயின்றது: உரையசையாவது-சிறிதுபொருளுணர்த்தி வாக்கியத்தை அலங்கரித்துநிற்பது; 'மங்கலமென்பதோரூருண்டுபோலும்' என வரும் இவசப்தமாகிய ஒப்பில் போலியையும், 'அயங்கலூராஜாஸீத்' என வடமொழியிலும்வரும் வேண்டாவென்னுங் கலுவென்பதனையும் வாக்கியாலங்காரமென்பர் எனப் பிரயோகவிவேகவுரையிற் கூறியவாற்றையும் அறிக. நத்தம்போற்கேடு - வளர்தல்போலக்கெடுதல்; புகழ்வளரச் செல்வங்குறைதலென்றபடி. செல்வமெய்த -சிறப்பை யடைய. நல்கூர்தல்-வறுமைப்படுதல். நிலையில்லாத செல்வத்தையு முடம்பையுங் கொண்டு நிலையானபுகழைப் பெறுவது மிக்கசாமர்த்தியமென்பது கருத்து. வித்து-ஞானம்; அது-வித் என்னும்வடமொழித்திரிபு: அதனை மனத்தி லுடையவர், வித்தகர். (௩௫)

௨௩௬. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(இ - ள்.) தோன்றின் - (மக்களாய்ப்) பிறக்கின், புகழொடு தோன்றுக - புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அஃது இலார் - அக்குணம் இலாதார், தோன்றலின் - (மக்களாய்ப்) பிறத்தலின், தோன்றாமை - விலங்காய்ப் பிறத்தல், நன்று—; (எ - று.)

புகழ் - ஈண்டு, ஆகுபெயர். 'அஃதிலார்' என்றமையின் 'மக்களாய்' என்பதூஉம், 'மக்களாய்ப்பிறவாமை' என்ற அருத்தாபத்தியான் 'விலங்காய்ப்பிறத்தல்' என்பதூஉம் பெற்றாம். இகழ்வார் இன்மையின், 'நன்று' என்றார்.

(கு - பு.) பிறக்கின் - பிறந்தால். புகழ் என்பது - இங்கே, புகழுக்குக் காரணமான குணத்தைக் குறித்ததனால், காரியவாகுபெயர். 'அஃதிலார்'

என மேல் உயர்திணைப்பலர்பாலாற் கூறினமையால், 'தோன்றின்' என்றவிடத்து 'மக்களாய்' என வருவித்து உரைக்கப்பட்டது. அருத்தாபத்தியாவது-வெளிப்படையாகவன்றிக்கே மறைந்துநின்று வேறொருசொல்லின் குறிப்பினால்தோன்றும் பொருள்; இதனைத் தமிழ்நூலார் குறிப்பெச்சமென்பர். 'மக்களாய்ப்பிறவாமை' என்றதனால் 'விலங்காய்ப்பிறத்தல்' என்பது குறிப்பிக்கப்பட்டதெனக் கொண்டார். கீர்த்திபெறாத மனிதப்பிறப்பினும் விலங்குமுதலிய பிறப்பு நல்லது இகழ்வாரில்லாமையால் என்று கருத்து. அஃதிலார் என்றதில், ஆய்தம் மெய்போலொலித்தது. (௩௬)

௨௩௭. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

(இ - ள்.) புகழ் பட வாழாதார் - (தமக்குப்) புகழ் உண்டாக வாழ மாட்டாதார், (அதுபற்றிப் பிறர் இகழ்ந்தவழி), தம் நோவார் - (இவ்விகழ்ச்சி நம் மாட்டாமையான் வந்ததென்று) தம்மை நோவாதே, தம்மை இகழ்வாரை நோவது—, எவன் - என்கருதி? (எ - று.)

புகழ்படவாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறர் இகழ்தல் ஒருதலையாகலின், 'இகழ்வாரை' என்றார்.

(கு - பு.) புகழ்படவாழாதார் - நெறிவழிநின்று முயற்சியைச்செய்து தொகுத்துவைத்த அறப்பொருளினாலே தென்புலத்தார்முத லிறந்தார் கடையாக மேலே சொல்லப்பட்டவர்களைப் பாதுகாத்து அதனாலே தமக்குப் புகழுண்டாக இல்லறத்திலே இனிதுவாழாதவர். பிறர் இகழ்ந்த வழி - அப்படி வாழ்வார் கண்டுநிந்தித்தபொழுது. இவ்விகழ்ச்சி நம்மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே - இந்தநிந்தை நாம்புகழ்படவாழாததனாலே வந்ததென்று தம்மை நொந்துகொள்ளாதவர்களாய். நோவது - வெறுப்பது. என்கருதி - யாதுபயனையுத்தேசித்து? என்றது, பேதைமை யென்றபடி. நோவார் - எதிர்மறைமுற்றெச்சம்; இது உடன்பாட்டிற்கும்வரும்: வருந்துவார் என்று பொருள்; இது - ஒருவகைப்பொதுவினை. இகழ்வார் - இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமாகவந்த வழுவமைதி. புகழ்பெறாதவர் தம்மைப் பிறரிகழ்ந்தால் அவரிகழ்ந்தது பிழையன்றுஎனக் கருதி அதற்கு ஏது தமதுகுற்றமேயென அறிந்து தம்மைத்தாம் வெறுத்துக்கொள்ளவேண்டும்; அதோடு, அவர் தம்மைநிந்தித்தது தாம்இனியாயினும்புகழ்படவாழ்தற்கு ஏதுவாகிய உபதேசமாமெனக் கொள்வது, விசேஷம்: அங்ஙனங்கருதாது அவரையிகழ்வது தாம்புகழ்படவாழாத குற்றத்தின்மேலும் தம்மைநிந்தித்துப் புத்திசொன்னவரை நொந்துகொண்ட குற்றமும் வருதற்கு ஏதுவென அறிக. நோவது - எதிர்காலத்தொழிற்பெயர்; நோ -பகுதி. எவன் - வினாவடியாய்ப்பிறந்த அஃறிணைக்குறிப்பு முற்று: இது அத்திணையிருபாலுக்கும் பொதுவாதலை "எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்" என்பதனாலறிக. (௩௭)

௨௩௮. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின்.

(இ - ள்.) இசை என்னும் எச்சம் பெறாஅ விடின் - புகழென்னும் எச்சம் (பெறலாயிருக்க, அது) பெறாதொழிவாராயின், வையத்தார்க்கு எல்லாம் - வையத்தோர்க்கெல்லாம், வசை என்ப - (அதுதானே) வசையென்று சொல்லுவர், (நல்லோர்); (எ - று.)

'எச்சம்' என்றார், செய்தவர் இறந்துபோகத் தான் இறவாதுநிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொருகுற்றம் வேண்டாவென்பது கருத்து.

(கு - பு.) புகழ் என்னும் - புகழென்று சிறப்பித்துச்சொல்லப்படும். எச்சம் - சேஷித்திருப்பது; எஞ்சு - பகுதி, அம் - கருத்தாப்பொருள் விகுதி, வலித்தல்-விகாரம். வையத்தோர்க்கெல்லாம் - நிலவுலகத்திலுள் ளவரெல்லாருக்கும். வசை - நிந்தை. புகழ்ச்சியைப்பெறுமாற்போலவும் இகழ்ச்சியைப்பெறுதிருத்தல் கூடாதோ எனின் புகழ்ச்சியின்மையே பெரி யஇகழ்ச்சியாதலின் கூடாது என்பது கருத்து. வையம் - எல்லாப்பொருள் களையும் வைக்குமிடமெனப் பூமிக்குக் காரணப்பெயர். பெறுஅ - மொழி யிறுதியிற் செய்யுளோசை நிறைத்தற்கு வந்த அளபெடை. இனி, இசை யென்னுமெச்சம் பெறாவிடின் என்பதற்கு-(இல்வாழ்க்கையென்னும் மனைவி யைத்தழுவிப்) புகழ் என்னும் பிள்ளையைப் பெறாவிட்டால் என்றும் பொரு ளுரைக்கலாம்; தந்தையிறந்ததன்பின் மிருந்து நிற்பதாதலால், எச்சமெ ன்று சந்ததிக்குப் பெயர். வையத்தார்க்கெல்லாம்வசை யென்பதற்கு- உல கத்தார்க்கெல்லாம் நேரும் நிந்தை யென்றும், உலகத்தாரெல்லாராலுஞ் சொல்லப்படும் நிந்தை யென்றுங் கருத்துக்கொள்க. (௩௮)

உ௩௯. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(இ - ள்.) இசை - புகழ், இலா - இல்லாத, யாக்கை - உடம்பை, பொறுத்த - சுமந்த, நிலம்—, வசை இலா - பழிப்பில்லாத, வள் - வளப்பத் தையுடைய, பயன் - விளையுள், குன்றும்—; (எ - று.)

உயிர் உண்டாயினும் அதனாற் பயன்கொள்ளாமையின் 'யாக்கை' என வும், அது நிலத்திற்குப் பொறையாகலின் 'பொறுத்த' எனவுங் கூறினார். விளையுள் குன்றுதற்கு ஏது, பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. 'குன்றும்' என, இடத்துநிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது.

இவைநான்குபாட்டானும், புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

(கு - பு.) விளையுள் - நெல்முதலியவற்றின் விளைவு. குன்றும் - கு றையும். பொறை - பாரம். நிலமென்னும் இடத்திற் பொருந்திய பய னென்னும் பொருளினது குன்றுதல் என்னுந் தொழில் அந்த நிலமென்னும் இடத்தின்மேலேற்றி 'நிலம் பயன்குன்றும்' எனப்பட்டது; நிலத்திற் பய ன் குன்றும் என்று சொல்வது, நேர். வண்பயன் - வண்மையாகிய பயன் எனப் பண்புத்தொகை. யாக்கை - இரதம், இரத்தம், எலும்பு, சுக்கிலம், தசை, தோல், மூளை என்னும் எழுதாதுக்களாலும் யாக்கப்பட்டது என உடம்புக்குக் காரணப்பெயர்; யாத்தல் - கட்டுதல்: யா - பகுதி, க் - சந்தி, கு - சாரியை, ஐ - செயப்படுபொருள்விகுதி; இனி, கை-விகுதியெனக் கொண்டால், யாக்கை - தொழிலாகுபெயராம். புகழுக்குக்காரணமான நற்குணநற்செய்கைக ளில்லாதவர்களுள்ளவிடத்தில் பூமிவளங்குறைவு படுதலை "நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப், புல்லுக்கு மாங் கே பொசியுமாந் - தொல்லுலகில், நல்லா ரொருவ ருளரே லவர்பொரு ட், டெல்லார்க்கும் பெய்யு மழை," "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந், தவமிலா ரில்வழி யில்லை," "நிமத்தியல்பு, வான முனைத்து விடும்" என்பனகொண்டும் அறிக. (௩௯)

உ௪0. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

(இ - ள்.) வசை ஒழிய வாழ்வாரே - (தம்மாட்டு) வசை உண்டாகா மல் வாழ்வாரே, வாழ்வார் - உயிர்வாழ்வாராவார்; இசை ஒழிய வாழ்வா ரே-புகழ் உண்டாகாமல் வாழ்வாரே, வாழாதவர்-இறந்தாராவார்; (எ - று.)

‘வசைஒழிதலாவது - இசையென்னும் எச்சம் பெறுதல்’ ஆயினமையின், இசை ஒழிதலாவது - வசைபெறுதலாயிற்று. மேல் ‘இசையிலாயாக்கை’ என்றதனை விளக்கியவாறு.

இதனான், இவ்விரண்டும் உடன்கூறப்பட்டன.

மறுமைப்பயன், ‘வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்’ என மேலே கூறப்பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும், தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்.

இனி, மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம், இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக்கொள்க: யாம் உரைப்பின் பெருகும்.

(கு - பு.) வசை - இகழ்ச்சிச்சொல். ‘இசைதோன்ற,’ ‘வசைதோன்ற’ என்றுசொல்லவந்தவர் அருத்தாபத்தியால் ‘வசையொழிய,’ ‘இசையொழிய’ என்றாரல்லது அவையிரண்டும் முன்புஉளவாய்ப் பின்புநீங்க என்றாரல்லர். ‘வசையொழிதலாவது’ என்ற வாக்கியத்தின் கருத்தைக் கீழ் “வசையென்ப வையத்தார்க் கெல்லாம்” என்னுந் திருக்குறளைக்கொண்டு அறிக; புகழ் பெறுதலே பழியின்மை புகழ்பெறாமையேபழி என்றவாறாம். “இசையொழிய வாழ்வாரே வாழாதவர்” என்றதனால், ‘புகழில்லாதவர் உற்றறிபுலனொன்றுமில்லாத ஜடப்பொருளோடு ஒப்பர்’ என்று கூறி, கீழ்ப்பாட்டில் ‘இசையிலாயாக்கை’ என்றதன் இகழ்ச்சியை வெளிப்படுத்தினார். இவ்விரண்டும் - புகழுடையாரது மேன்மையும் புகழில்லாதாரது கீழ்மையும். ஏகாரங்கள் - பிரிநிலையோடு தேற்றம். இவ்வதிகாரத்தால், இல்லறத்திற்கு இம்மைப்பயன் புகழ் எனப்பட்டது; இல்லறத்திற்கு மறுமையிலடையும் பயன், கீழ் இல்வாழ்க்கையென்னும் அதிகாரத்தில் “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்” என்றதனால், இல்லறத்தோடுகூடிவாழுமியல்பினால் நிலவுலகத்தில் வாழ்பவன் பின் அவ்வறப்பயனைச் சுவர்க்கத்தில் அனுபவித்தல் நிச்சயமாதலின் தேவலோகத்தில் வசிக்குந்தேவருள் ஒருவனாக வைத்து நன்குமதிக்கப்படுவானென்று கூறப்பட்டது: அப்பாட்டின் உரையில் ‘இதனான் இல்நிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது; இம்மைப்பயன் புகழ்: அதனை இறுதிக்கண் கூறுப’ என்று கூறிப்போந்ததை இங்கே அனுவதித்தார். போகம் - சுகானுபவம். மனு - அவராற்செய்யப்பட்ட ஸ்மிருதியை உணர்த்தியதனால், கர்த்தாவாகுபெயர். அறநூல் - தருமசாஸ்திரம். இல்லறங்கள் - கிரகஸ்தாச்சிரமதருமங்கள். மற்றொன்றுவிரித்தல் என்னுங் குற்றம் நேருமென்றுஅஞ்சி இங்ஙனங்கூறினார்.

இல்லறவியல் முற்றிற்று.

இரண்டாவது

துறவறவியல்.

இனி, முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது - மேற்கூறிய இல்லறத்தின் வழுவாது ஒழுகி அறிவுடையாராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் - வினைமாசுதீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற்காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும்.

விரதம்.

அவற்றுள் விரதங்களாவன - இன்னஅறஞ்செய்வல் எனவும், இன்னபாவம் ஒழிவல் எனவும் தம்ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்வன. அவைதாம் வரம்பிலவாகலின் பெருகுமென்று அஞ்சி, அவைதம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்துநிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

(கு-பு.) முறையானே - இல்லறம் துறவறம் என முன்னேசொல்லிநிறுத்தியகிரமத்தின்படியே. கூறிய-சொல்ல. அறிவுடையராய் - உலகியலையும் இல்லறவாழ்க்கையின் நிலையில்லாமையையும் கடவுளின் தன்மையையும் அறிந்து. வீடுபெறற்பொருட்டு-முத்தியையடையும்பொருட்டு. துறந்தார்-தேகஅபிமானம் முதலிய எல்லாப்பற்றுக்களையும் முழுவதும்விட்டவர். வினைமாசுதீர்ந்து-கருமசம்பந்தத்தாலாகிய குற்றம் நீங்கி. அந்தக்கரணம் - அகத்துறுப்பு; அது, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என நால்வகைப்படுதலால், பன்மையாகக்கூறினார். தூயவாதற்பொருட்டு - பரிசுத்தியுடையனவாதற்கு. அவற்றான் - விரதங்களால். அவை - அந்தக்கரணங்கள். தூயவாயவழி-பரிசுத்தியுடையனவானபொழுது. உதிப்பது - உண்டாவது. செய்வல் - செய்வேன். ஒழிவல் - நீங்குவேன். ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்வன - தத்தமது சக்திக்குப் பொருந்த ஏற்படுத்திக்கொள்பவை. வரம்பில - அளவில்லாதன. பெருகும் - அவற்றையெல்லாம் கூறின் நூல்விரிந்துபோம். அகப்படுத்து - உள்ளடக்கி. கூறுவான் - சொல்ல. முதற்கண் - முதலில்.

௨௫-ம் அதி.—அருளுடைமை.

அஃதாவது - தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கள்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் சிறந்தமையின் முன் கூறப்பட்டது.

(கு-பு.) தொடர்புபற்றாது-ஒருசம்பந்தமுமில்லாமல். கீழ்அன்புடைமையென்கிறஅதிகாரத்தில்'அன்பாவது-வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கண் காதல்' என்று உரைத்தாராதலால், இங்கே 'அருளாவது-தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கள்மேலுஞ் செல்வதாகிய கருணை' என்றார். 'அளியாவது - அன்புகாரணத்தால் தோன்றும் அருள்; அன்பாவது - மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனமகிழ்ச்சிநிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம்' எனப் பொருளதிகாரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதனாலும் இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாட்டை அறிக. ஒருசம்பந்தமுமில்லாமலே வருத்தமுற்றவர்களின்மேற்செல்வதாகிய அருள் யாதாயினுமொருசம்பந்தம்பற்றிச்செல்லும் அன்பு முதிர்ந்தவிடத்து உண்டாவதை மேல் பொருள்செயல்வகையென்னும் எழுபத்தாறுமதிகாரத்து "அருளென்னு மன்பீன் குழவி" என்பதனால் அறிக; இம்மேற்கோளுக்கு-அன்பினாற் பெறப்பட்ட அருளென்னுங் குழந்தையென்றுபொருள். இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்தகுணமாதலை முன்கூறிப்போந்தாராதலால், அதனை இங்கு உவமையாக்கினார். இது - அருளுடைமை. முன் - முதலில். உடைமை-பண்புப்பெயர்; மை - விகுதி.

௨௪௧. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்
பூரியார் கண்ணு முள. [வம்

(இ - ள்.) செல்வத்துள்-செல்வங்கள்பலவற்றுள்ளும், செல்வம்-(ஆராய்ந்தெடுக்கப்பட்ட) செல்வமாவது, அருள் செல்வம் - அருளான்வருஞ் செல்வம்: பொருள் செல்வம் - (அஃது ஒழிந்த) பொருளான்வருஞ் செல்வங்கள், பூரியார்கண்ணும்-இழிந்தார்கண்ணும், உள-உளவாம், (ஆகலான்); (எ - று.)

அருளான்வருஞ் செல்வமாவது - உயிர்களை ஓம்பி அவ்வறத்தான் மேம்படுதல், உயர்ந்தார்கண்ணேயல்லது இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், ஏனைநீசர்கண்ணும் உளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில என்பதாம்.

(கு - பு.) அருளான்வருஞ்செல்வம்-அருள்காரணமாகத்தோன்றுஞ் செல்வம். இழிந்தார்கண்ணும் - கீழ்மக்களிடத்தும். ஓம்பி - பாதுகாத்து. அவ்வறத்தான்மேம்படுதல்-அங்ஙனம்பாதுகாத்தலாகிய தருமத்தாற் சிறப்படைதல். நீசர் - தாழ்ந்தவர். அருளாகியசெல்வம் அறிவுமுதலியவற்றால் உயர்ந்தோரிடத்துமாத்திரமேஉண்டாகி அவருயிரையும் பிறவுயிர்களனைத்தையும் பாதுகாத்தற்கு ஏதுவாம்; பொருளாகிய செல்வம் அறிவுமுதலியனஇல்லாத தாழ்ந்தோரிடத்தும் உண்டாகி அவர்களுயிரையும் பிறவுயிர்களையும் பாதுகாக்க உதவாது: ஆதலால், பொருளினும் அருளே சிறந்தது என்பது கருத்து. உம் - இழிவுசிறப்பு. இத்திருக்குறளை 'இன்னதல்லதிதுவெனமொழிதல்' என்னுந் தந்திரவுத்திக்கு உதாரணமாகக்காட்டினர் வீரசோழியவுரைகாரர். (௨௪௧)

௨௪௨. நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
தேரினு மஃதே துணை.

(இ - ள்.) நல் ஆற்றான் நாடி - (அளவைகளானும் பொருந்துமாற்றானும்) நன்றான நெறியிலே (நின்று, நமக்குத்துணையாம் அறம் யாதென்று) ஆராய்ந்து, அருள் ஆள்க - அருளுடையராக; பல் ஆற்றான் - (ஒன்றை ஒன்று ஒவ்வாத) சமயநெறிகள் எல்லாவற்றானும், தேரினும் - ஆராய்ந்தாலும், துணை - துணையாவது, அஃதே - அவ்வருளே, (பிறிதில்லை); (எ - று.)

அளவைகளாவன - பொறிகளாற் காணுங் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அனுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று; ஒப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனம் அன்றாயின் இது கூடாது என்று உணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையும் என இவற்றையுங் கூட்டி ஆறென்பாரும் உளர்: இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறாவது - இது கூடும் இதுகூடாது எனத் தன்கண்ணே தோன்றுவது. இதனை வடநூலார் 'யுத்தி' என்ப. 'ஆற்றான்' என்பது - வேற்றுமைமயக்கம். ஒன்றை ஒன்று ஒவ்வாமையாவது - மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறுகோடல். அன்னவாயினும், அருள் துணையென்றற்கண் ஒக்குமென்பதாம். உயிரைவிட்டுநீங்காது இருமையினும் உதவலின், 'துணை' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பு.) அளவைகள் - ஒருபொருளின் உண்மையை அளவிட்டு அறிதற்குக் கருவியான பிரமாணங்கள்: அவை எட்டுவகைப்படும்; அவையாவன - பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், ஆகமம், அர்த்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம் என்பன. அவற்றுள், காணல் - பிரத்யக்ஷம்; புகையைக்கண்டு நெருப்பு உண்டெனல் - அநுமானம்; மரைபசுப்போல்எனல் - உபமானம்; பெரியோர்வாய்ச்சொல் - ஆகமம்; 'பகலுண்ணானருந்திருப்பான்'

என்றவிடத்து 'இரவில் உண்கிறான்' என உணர்தல்- அருத்தாபத்தி; 'முன்னுமில்லை,பின்னுமில்லை,ஒன்றினொன்றில்லை,ஒருகாலத்துமில்லை'எனல்- அபாவம்; இம்மரத்திற் பேயுளதென்பது - ஐதிக்யம்; ஆயிரத்தில் நூறு உண்டெனல் - சம்பவம்: இவற்றுள் ஐதிகியம், சம்பவம் என்பவற்றைப் பலர் வேறுபிரமாணங்களாகக் கொள்ளார். இவையெட்டையும் காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் மூன்றில் அடக்குவர் ; உபமானம் பிரதியக்ஷத்திலும், அருத்தாபத்தியும் சம்பவமும் அநுமானத்திலும், ஐதிகியம் ஆகமத்திலும், அபாவம் மூன்றிலும் அடக்கப்படும்: இதன்விரிவைத் தர்க்கநூல்களிற் காணலாம். பொருந்துமாறு - யுக்தி. நன்றானநெறி - சந்மார்க்கம். அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஆராய்ந்து என இயையும். ஆராய்தல் - ஆலோசித்தறிதல். நமக்குத் துணையாம் அறம் - நமது உயிருக்கு உதவியாகுந் தருமம். அருள் ஆள்க - அருளுடைமை யென்னும் விரதத்தையே உறுதிப்பொருளாகக்கொண்டு காக்க. சமயநெறிகள் - மதவழிகள். 'அஃதே' என்னும் பிரிநிலையேகாரத்தால், வேறில்லையென்பது பெறப்பட்டது. பொறிகளாற் காணுங் காட்சி - மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பஞ்சஇந்திரியங்களினாலும் அறியும் அறிவு; இது, பிரதியக்ஷமெனப்படும். குறிகளான் உய்த்து உணர்தல் - அடையாளங்களாலாராய்ந்தறிதல். கருத்தாமொழி - கடவுளதுவாக்கியம். ஆகமம் என்றது - கடவுளால்நேரேவெளியிடப்பட்ட வேதங்களும், அவனருள்வழிப்பட்டோரால் வெளியிடப்பட்ட ஸ்மிருதி இதிகாச புராணங்களும் முதலியவற்றை; இது, சப்தப்பிரமாணமெனவும் படும். மாறுகிய - எதிரான. இன்மை - அபாவம். ஒருவாற்றான் - ஒருவகையால். கருத்து - சித்தாந்தம். ஆற்றான் - ஆற்றில் என்றுபொருள்: கருவி கருத்தா உடனிகழ்ச்சி என்னும் பொருள்களுக்கு உரிய மூன்றாம்வேற்றுமையுருபு ஏழாம்வேற்றுமையிடப்பொருளில்வந்ததனால் உருபுமயக்கம்; "யாத னுருபிற் கூறிற் றாயினும், பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்" என்பதுவிதி: வேற்றுமைமயக்க மெனினும், உருபுமயக்கமெனினும் ஒக்கும். பொருள்கள் - பதார்த்தங்கள்; இவை, பிரமாணங்களைக்கொண்டு அளவிட்டு அறியப்படுதலால், பிரமேயமெனப்படும். மாறுகோடல் - பேதங்கொள்ளுதல். அன்னவாயினும் - அப்படிப்பட்டவையானாலும். இருமையினும் - இம்மை மறுமை யென்னும் இரண்டிடத்தும். எவ்வளவு ஆலோசித்துப்பார்த்தாலும் எல்லாச்சமயத்தாராலும் உயிருக்கு இம்மைமறுமைகளில் உறுதிதருவதாக விரும்பி யொப்புக்கொள்ளப்படுவது அருளே யாதலால் உயிருக்கு உறுதி வேண்டுபவர் அருளுடையாராக வென்பது கருத்து. தேரினும், உம்மை-உயர்வுசிறப்பு. அஃது - ஆய்தம் இங்கு மெய்போல நின்றது. (௪௨)

௨௪௩. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்.

(இ - ள்.) இருள் சேர்ந்த - இருள்செறிந்த, இன்னா உலகம் - துன்பவுலகத்துள், புகல் - சென்றுபுகுதல், அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு - அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கு, இல்லை—; (எ - று.)

'இருள்செறிந்த துன்பவுலகம்' என்றது, திணிந்த இருளையுடைத்தாய்த் தன்கண்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாகலின் 'உலகம்' எனப்பட்டது.

(கு - பு.) இருள் - அந்தகாரம். செறிந்த - நிறைந்த. துன்பவுலகம்- நரகம். திணிதல் - நிறைந்தடருதல். இருள்செறிந்த இன்னாவுலகம் -

தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் என்னும் நரகபேதம். அருளுடையார்க்கு நரக
வேதனையில்லை யென்பது கருத்து. (௪௩)

உ௪௪. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இ - ள்.) மன் - நிலைபேறுடைய, உயிர் - உயிர்களை, ஓம்பி - பேணி,
அருள் ஆள்வாற்கு-(அவற்றின்கண்) அருளுடையனுவானுக்கு, தன் உயிர்
அஞ்சும் வினை - தன்உயிர்அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள், இல் - உளவா
கா, என்ப - என்று சொல்லுவர், (அறிந்தோர்); (எ - று.)

உயிர்களெல்லாம் நித்தமாகலின், 'மன்னுயிர்' என்றார். அஞ்சுதல் - து
ன்பம்நோக்கி அஞ்சுதல். அன்ன அறத்தினோன் கொலைமுதலிய பாவங்கள்
செய்யா னெனவே, மறுமைக்கண் நரகம்புகாமைக்கு ஏது கூறியவாறா
யிற்று.

(கு - பு.) பேணி - பாதுகாத்து. நித்தம் - நித்தியம்; ஆதி மத்திய
அந்தம் இல்லாமல் என்றும் ஒருபடிப்பட்டு இருப்பது. பரமாத்துமாவைப்
போலவே ஜீவாத்துமாவும் நித்தியமென்பது நூற்றுணிபு. வினையென்னும்
பொதுமொழி, 'தன்னுயி ரஞ்சும்' என்ற விசேஷணத்தால், தீவினை
யெனச் சிறப்பை யுணர்த்திற்று. அஞ்சும் வினை - அஞ்சுதற்குக் காரண
மாகிய வினை யெனப் பொருள்படுதலால், பெயரெச்சம் காரியப்பொருள
து; "நின்முகங் காணு மவா," "நோய்தீர் மருந்து" என்றவிடங்க
ளிற்போல. தன்உயிர் - உடைமையும் உடையதும் வேறுகாத ஒற்றுமைக்
கிழமைப்பொருளில் வந்த ஆறாம்வேற்றுமைத்தொகை; இதனை 'அபேத
ஷஷ்டீ' என்பர் வடநூலார். அன்ன அறத்தினோன் - அருளுடைமையா
கிய அந்தத்தருமத்தை யுடையவன். மன்னுயிர் - வினைத்தொகை. அருளு
டையார் தீவினைசெய்யா ரென்று இதன்கருத்து. கீழ்ப்பாட்டிற் கூறிய சித்
தாந்தத்திற்கு இப்பாட்டு ஏது. இவையிரண்டுபாட்டுக்களாலும் அருளு
டையார்க்கு மறுமையில் துன்பமின்மை கூறப்பட்டது; இம்மையில் அன்ப
மின்மை அடுத்தபாட்டாற் கூறப்படும். (௪௪)

உ௪௫. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(இ - ள்.) அருள் ஆள்வார்க்கு - அருளுடையார்க்கு, அல்லல் இல்
லை - (இம்மையினும்) ஒருதுன்பம் உண்டாகாது; (அதற்கு), வளி வழங்கும்
மல்லல் மா ஞாலம் - காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய
ஞாலத்து வாழ்வார், கரி - சான்று; (எ - று.)

சான்றுவார் - தாம்கண்டு தேறிய பொருளைக் காணாதார்க்குத் தேற்
றுதற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லல்உண்டாக ஒருகாலத்தும் ஓரி
டத்தும் ஒருவரும் கண்டறிவார் இன்மையின் இன்மைமுகத்தால் ஞாலத்
தார்யாவருஞ் சான்று என்பார், 'வளிவழங்கு மல்லன்மா ஞாலங் கரி' என்
றார்; எனவே, இம்மைக்கண் என்பது பெற்றும். ஞாலம்-ஆகுபெயர்.

இவைமூன்றுபாட்டானும், அத்திணையுடையார்க்கு இருமையினுந்
துன்பமில்லாமை கூறப்பட்டது.

(கு - பு.) ஞாலம் - நிலவுலகம். இயங்குகின்ற - சஞ்சரித்தற்கிடமா
ன. சான்று - சாட்சியாவர். தேறிய - ஐயந்திரிபில்லாமலறிந்த. தேற்று
தல் - அங்ஙனம் அறிவித்தல். ஞாலம் - பூமியில்வாழ்வார்க்கு இடவாகு
பெயர்; இது "உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே" என்றதனாற் பெரியா
ரை உணர்த்துமெனவுங் கொள்ளலாம். அத் திணை யுடையார்க்கு - அரு

ளாகிய துணையை யுடையவர்களுக்கு. வளிவழங்கும் ஞாலம் - பெயரெச்சம் இடப்பெயர்கொண்டது. வழங்கும் மல்லல் மா என்னும்மூன்றும், ஞாலத்துக்கு அடைமொழி. "மல்லல்வளனே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், மல்லலென்பது வளமென்னும் பொருளுணர்த்திவதோருரிச்சொல்லா மென அறிக. மா - மஹா என்னும் வடமொழியின் திரிபு; இதுவும், பெருமையாகிய குணத்தை உணர்த்தலால், உரிச்சொல்லின் பாற்படும். (௪௫)

௨௪௬. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(இ-ள்.) அருள் நீங்கி - (உயிர்கள்மாட்டுச் செய்யப்படும்) அருளைத் தவிர்ந்து, அல்லவை செய்து ஒழுகுவார் - (தவிரப்படுங்) கொடுமைகளைச் செய்து ஒழுகுவாரை, பொருள் நீங்கி பொச்சாந்தார் என்பர் - (முன்னும்) உறுதிப்பொருளைச் செய்யாது (தாம்துன்புறுகின்றமையை) மறந்தவர் என்றுசொல்லுவர், (நல்லோர்); (எ-று.)

உறுதிப்பொருள் - அறம். துன்புறுதல் - பிறவித்துன்பம் மூன்றனையும் அனுபவித்தல். மறந்திலராயின் அவ்வாறு ஒழுகார் என்பது கருத்து.

(கு - பு.) முன்னும்-முற்பிறப்பிலும். உறுதிப்பொருள் - புருஷார்த்தம்; இங்கே, அவைநான்கனுள் முதலாவதான தருமம். துன்புறுகின்றமை - வருத்தமடைகிறதை. பிறவித்துன்பம்மூன்றாவன - தன்னைப்பற்றிவருவனவும், பிறவுயிர்களைப்பற்றிவருவனவும், தெய்வத்தைப்பற்றிவருவனவும் என மூவகையால் வருந் துன்பங்கள்; தன்னைப்பற்றிவருவன - சரீரத்தைப்பற்றி வருந் தலைநோய் முதலியனவும், மனத்தைப்பற்றிய காமம் கோபம் முதலியனவும்: இவை ஆத்தியாத்துமிகம் எனப்படும்; பிறவுயிர்களைப்பற்றிவருவன-மனிதர், விலங்கு, பிசாசு முதலியவற்றால் நேர்பவை: இவை ஆதிபௌதிகமெனப்படும்; தெய்வத்தைப்பற்றிவருவன - காற்று மழை இடி வெயில் முதலியவற்றால் நேர்பவை; இவை ஆதிதைவிக மெனப்படும்; இவற்றை வடநூலார்: தாபத்திரய மென்பர். அவ்வாறொழுகார்- அப்படிநடவார். பொச்சாந்தார், பொச்சா - பகுதி. முன்னே 'அருள்' என்றதனால், பின்னே 'அல்லவை' என்றது - கொடுந்தொழில்களாயிற்று. தாம்அனுபவிக்கும் பிறப்புத்துன்பத்தை அறியாதவர்களே பிறவுயிர்களிடத்து அருளின்றியொழுகுவாரென்று கருத்து; அறிந்தவர்களோ அத்துன்பம் ஒழியும்பொருட்டு அருளுடையராவ ரென்றதாம். 'என்பர்' என்னும் வினைமுற்றுக்கு, 'நல்லோர்' என்பது தோன்றாஎழுவாய்; 'ஒழுகுவார்' என்பது, செயப்படுபொருள்: இதில் உயர்திணையில் இரண்டாம்வேற்றுமையுருபு இறுதியில் தொக்கது. இனி, 'என்பர்' என்பதைச் செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினையாகக் கொண்டு, அருளினின்றும் நீங்கி அறமல்லவற்றைச் செய்தொழுகுபவர் முன்பிறப்பிலும் உறுதிப்பொருளினின்றும் நீங்கி மறந்தவ ரெனப்படுவர் என்றும் உரைக்கலாம். (௪௬)

௨௪௭. அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

(இ-ள்.) அருள் இலார்க்கு - (உயிர்கள்மேல்) அருளில்லாதார்க்கு, அ உலகம் - வீட்டுலகத்து இன்பம், இல்லை—; பொருள் இலார்க்கு - பொருளில்லாதார்க்கு, இ உலகம் - இவ்வுலகத்து இன்பம், இல் ஆகி ஆங்கு - இல்லையாயினாற்போல; (எ-று.)

'அவ்வுலகம்,' 'இவ்வுலகம்' என்பன - ஆகுபெயர். இவ்வுலகத்து இன்பங்கட்குப் பொருள்காரணமாதற்போல அவ்வுலகத்து இன்பங்கட்கு அருள்காரண மென்பதாயிற்று.

(கு - பு.) பொருள் - செல்வம். அவ்வுலகம், இவ்வுலகம் என்பவை - அந்தந்த வுலகத்து இன்பங்களைக் குறித்தலால், இடவாகுபெயர்; அ, இ என்னுஞ் சுட்டுப்பெயர்கள் முறையே தூரத்திலுஞ் சமீபத்திலு முள்ள பொருள்களைக் குறிப்பனவாதலால், முத்தியையும் பூமியையும் உணர்த்தின. "பொருளுடையான் கண்ணதே போக மறனும், அருளுடையான் கண்ணதே யாகும்" என்றதனோடு இக்குறளையொப்பிடுக. 'ஆனால்' என்னும் எதிர்கால வினையெச்சம் 'ஆகி' என இறந்தகாலவினையெச்சமாத் திரிந்தது; "சொல்திரியினும் பொருள்திரியா வினைக்குறை" என்றவிதியால். ஆங்கு - உவமவுருபு. 'இல்லாகியாங்கு' என்பதுவே சரியானபாடமாதலை 'இல்லையாயினாற்போல' என்ற பரிமேலழகருரையாலும், இலக்கணக்கொத்தில் "பகுபதத்திலக்கணம்" என்னுஞ்சூத்திரத்தில் 'ஆகியாங்கு' என இதனையே உதாரணமெடுத்துக்காட்டியிருத்தலாலும், 'கண்டாங்கு,' 'நட்டாங்கு', 'விழுங்கியற்று' எனப் பிறவும் இவ்வாய்பாடுபற்றிவருவனவற்றாலும் அறிக; 'இல்லாதியாங்கு' என்றபாடத்துக்கு - இல்லையாயினாற்போல என்று பொருள்படாமையும், விலைமொழிவருமொழிகள் ஏற்படாமையும் முதலிய குற்றங்களை உய்த்துணர்ந்து அதனைவிலக்குக. இத்திருக்குறளைப் பொருட்படலத்தில் முதுமையென்னுங் காஞ்சித்திணைப்பொருட்டுறைக்கும், அலங்காரப்படலத்தில் தர்க்கத்தி லெடுத்துக்காட்டுப்போலிக்கும் உதாரணங் காட்டினர் வீரசோழியவுரையாசிரியர். (சஎ)

உசஅ பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது.

(இ - ள்.) பொருள் அற்றார் - (ஊழான்) வறியராயினார், ஒரு கால் பூப்பர் - (அதுநீங்கிப் பின்) ஒருகாலத்து (ச்செல்வத்தாற்) பொலிவர்; (அவ்வாறன்றி), அருள் அற்றார் அற்றார் - அருளிலாதார் (பாவம்அறாமையின்) அழிந்தாரே; மற்று ஆதல் அரிது - பின் ஒருகாலத்தும் ஆதல் இல்லை; (எ-று.)

மற்று - வினைமாற்றின்கண் வந்தது. மேல் பொருளின்மையோடு ஒருவாற்றான் ஒப்புமைகூறினாராகலின், அதுமறுத்து, பிறவாற்றான் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு.

(கு-பு.) ஊழான் - விதியால். ஊழாவது - இருவினைப்பயன் செய்தவனையே சென்றுஅடைதற்கு ஏதுவாகிய நியதி; ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன-ஒருபொருட்சொற்கள். அது - அவ்வறுமை. பொலிவர் - விளங்குவர். அறாமையின் - நீங்காமையால். ஆதலில்லை - விருத்தியடைதலில்லை. 'மற்று' என்னும் இடைச்சொல், 'அற்றார்' என்னும் வினையை மாற்றி 'அழியாமல்' என்னும் பொருளைத் தந்ததனால், வினைமாற்றாயிற்று. மேல் - முன்குறளில். பூப்பர் - பூ என்னும் பகுதியடியாகப் பிறந்த எதிர்காலமுற்று. ஒருகால் - ஒருஎன்பது விகாரப்பட்ட எண்ணுப்பெயராகிய முற்றியலுகரமாதலால், அதன்முன் வலிமிகவில்லை; [நன் - உயிரீற்றுப்புணரியல்-உகூ:] ஒருக்கால் எனச் சிலர்வழங்குதல், இலக்கண வழுவேயாம். 'அற்றார்' என்னுஞ்சொல் மூன்றனுள், முன்னதிரண்டும் -வினையாலணையும்பெயர்; பின்னது - வினைமுற்று. வினைமுற்றாகிய 'அற்றார்' என்பது-தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி; [நன்- பொது- நந.] பொருளினும் அருள் சிறந்ததென்பது இதன்கருத்து.

ஒருகால் மீண்டும் ஆக்கம்பெறும் பொருளின்மையினும் எக்காலமும் ஆக்கம்பெறாத அருளின்மை மிகக்கொடியதெனக. (௪௮)

௨௪௯. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

(இ - ள்.) அருளாதான்-(உயிர்கள்மாட்டு) அருள்செய்யாதவன், செய்யும்—,அறம் - அறத்தை, தேரின் - ஆராயின், தெருளாதான் - ஞானமில்லாதவன், மெய் பொருள் கண்டு அற்று - (ஒருகால்) மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும்; (எ - று.)

மெய்ப்பொருள் - மெய்ந்நூலிற்சொல்லும் பொருள். நிலைபெற்றஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளைஉணர்ந்தால் அதனைத் தன்ஞானமின்மையால் தானே அழித்துவிடும்; அதுபோல, அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன் அருளாமையால் தானே அழித்துவிடும் என்பதாயிற்று: ஆகவே, பிற அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றாம்.

இவைநான்குபாட்டானும், அத்துணையிலாதார்க்கு வருங் குற்றம் கூறப்பட்டது.

(கு - பு.) மெய்ப்பொருள் - தத்துவசாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட அர்த்தம். இடையே - நடுவிலே. அருளாதான் - அருளிலாதான். அத்துணை-அருட்டுணை. தெருளாதான், அருளாதான் - எதிர்மறை வினையாலணையும் பெயர்கள். தேரின் - எதிர்காலவினையெச்சம். நூற்பொருளை அறிதற்கு அறிவுபோல அறஞ்செய்தற்கு அருள்இன்றியமையாக்காரணமென்பதுகருத்து.

௨௫0. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(இ - ள்.) வலியார் முன் தன்னை நினைக்க - (தன்னின்) வலியார் (தன்னைநலியவரும்பொழுது அவர்)முன் தான் அஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க: தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து - (அருளில்லாதவன்) தன்னின் எளியார்மேல்(தான் நலியச்) செல்லும்பொழுது; (எ - று.)

'மெலியார்' எனச் சிறப்புடைய உயர் திணைமேற் கூறினாராயினும், ஏனை அஃறிணையுங் கொள்ளப்படும்: அதனை நினைக்கவே, இவ்வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாம் என்று அறிந்து அதன்மேல்அருளுடையனாம் என்பது கருத்து.

இதனான், அருள்பிறத்தற்கு உபாயங் கூறப்பட்டது.

(கு - பு.) வலியார் - பலசாலிகள். நலிய - வருத்துதற்கு. "ஒருமொழியொழிதன் னினங்கொளற் குரித்தே" என்ற சூத்திரத்திற் கூறிய உபலக்ஷணவிதியால், மெலியார்மேல் என்பதற்கு - மெலியவற்றின்மேல் என்றுங் கருத்துக்கொண்டார்; இதனால், மேல் 'புலான் மறுத்தல்' என்னும் அதிகாரத்துக்குத் தோற்றுவாய்செய்கிறார். எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமையே அருள் என்றபடி. முன் - இடமுன். (௫0)

௨௬-ம் அதி.—புலான்மறுத்தல்.

அஃதாவது - ஊனுண்டலை ஒழிதல். கொலைப்பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனான் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்கு உடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றாகலின், அதனை விலக்குதற்கு, இஃது, அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(கு-பு.) ஊனுண்டல்-மாம்சபோசனம். ஒழிதல்-நீங்குதல்; செய்யாதிருத்தல்: விலக்குதல். கொலைப்பாவம்- பிராணிகளைக்கொல்லுதலால் வருந் தீவினை. அதற்கு- கொலைப்பாவத்துக்கு. அதனை-கொலைப்பாவத்தால். அதன்- கொலைப்பாவத்தின். ஒருங்கு உடைத்தாய - ஒருசேர உடையதான. இயைவதன்று - பொருந்துவதன்று. ஒருவன் இறைச்சியை யுண்ணுவானாயின் அது, மீண்டும் பலபிராணிகளைவதைத்தற்குக் காரணமும் முன்னே சில பிராணிகளை வதைத்ததனாலாகிய காரியமும் ஆமெனக் காண்க. இவ்வதிகாரத்தை அருளுடைமையின்பின் வைத்ததற்குக் காரணம் - அருளுடையவர் பிராணிகளைக்கொன்று ஊன்தின்னார்; அருளில்லாதவரோ கொன்று தின்பர்; ஆதலால், அருளுடைமையின் பயன் புலான்மறுத்தல் என்பதாம். புலால் - ஊன். மறுத்தல் - உண்ணாதுதவிர்தல். 'கொலைப்பாவத்தை' என்றதற்றொடக்கத்துவாக்கியம் உள்ளவிடத்தில் 'அருளுடைமைக்கு மாறாங் கொலை பிறத்தலுந் தூய்தன்மையும் நோக்கிப் புலாலுணவு மறுத்தல் கூறினார்; அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்' என்ற வாக்கியஞ் சில பிரதிகளிற் காணப்படுகிறது.

௨௫௧. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(இ-ள்.) தன் ஊன் பெருக்கற்கு - தன் உடம்பை வீக்குதற்பொருட்டு, தான் பிறிது ஊன் உண்பான் - தான் பிறிதோருயிரின் உடம்பைத் தின்பவன், எங்ஙனம் - எவ்வகையான், ஆளும் - நடத்தும், அருள் - அருளினை? (எ-று.)

பயனில்லாத ஊன்பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமைசெய்வானே அறிவில்லாதகொடியோன்என்றவாறாயிற்று. 'எங்ஙன மாளு மருள்' என்பது, ஆளானென்பதுபயப்பநின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

(கு-பு.) வீக்குதல் - பருக்கச்செய்தல். ஊன்பெருக்கல் - தன்னுடம்பைவளர்த்தல். எங்ஙனம் என்னும் வினா, இங்கு எதிர்மறைகுறித்துநின்றது. ஊன், ன் - சாரியை; "ஊவெ னொருபெய ராவொடு சிவணும்" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. பெருக்கற்கு - குவிகுதிகாலங்காட்டும் எதிர்காலவினையெச்சம்; பெருகுஎன்பது தன்னொற்றிரட்டிய பெருக்கு - பிறவினைப்பகுதி: அல் - சாரியை; இனி, பெருக்கல் என்னுந் தொழிற்பெயரின்மேல் வந்த நான்காம்வேற்றுமையெனினும் தவறாகாது. பிறிது - பிற என்னும் இடைச்சொல் லடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். "ஆத்மவத் ஸர்வபூதாநி" என்றபடி தன்னுயிரைப்போலவே எல்லாவுயிர்களையுங் கருதவேண்டுவது கடமையாயிருக்க அதுசெய்யாமல் தன்னுயிரையே தான்விரும்பி அதைப்போஷிக்கப் பிறவுயிரை வதைப்பவன் ஒருகாலும் அருளுடையவனென்று சொல்லத்தக்கவனல்லனென்பது கருத்து. "ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே" என்றார் இனியவைநாற்பதிற் பூதஞ்சேந்தனாரும். (௫௧)

௨௫௨. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(இ-ள்.) பொருள் ஆட்சி - பொருளாற் பயன்கோடல், போற்றாதார்க்கு - (அதனைப்) பாதுகாவாதார்க்கு, இல்லை—; (அதுபோல), அருள் ஆட்சி - அருளாற் பயன்கோடல், ஊன் தின்பவர்க்கு - ஊன் தின்பார்க்கு, இல்லை—; (எ-று.)

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமைபோல, அருட்பயன் இழத்தற்கு ஊன்தினல் காரணமென்பதாயிற்று.

ஊன்தின்றாராயினும் உயிர்கட்கு ஒருதீங்கும்விளையாதார்க்கு அருளாடற்கு இழுக்கில்லையென்பாரை மறுத்து, அஃது உண்டென்பது இவையிரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு-பு.) கோடல் - கொள்ளுதல். அதனை - பொருளை. பொருட்பயன் - பொருளாலடையும்பயன். அருட்பயன் - அருளாலடையும்பயன். அருளாடற்கு இழுக்குஇல்லை - அருளுடையராவதற்குத்தடையில்லை. அஃது - இழுக்கு; குறைவு. மாம்சபோசனஞ்செய்பவர் பிறவுயிர்களிடத்து அருளுடையவராகவெளிக்குக் காட்டினாலும் உண்மையாக உள்நோக்குமிடத்து அவர்களுக்கு அருளென்பது சிறிதுமில்லையென்று கருத்து. உவமையணி. ஆட்சி - தொழிற்பெயர்; ஆள் - பகுதி, சி - விகுதி. “ஊன்தின்றாராயினும்' என்ற வாக்கியம்உள்ளவிடத்தில் 'இவையிரண்டுபாட்டானும்அருளுக்குமாறுதல் கூறப்பட்டது' என்ற வாக்கியஞ் சிலபிரதிகளிற் காணப்படுகிறது.

௨௫௩. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொ
னுடல்சுவை யுண்டார் மனம். [ன்ற

(இ-ள்.) படைகொண்டார் நெஞ்சம் போல் - கொலைக்கருவியை(த்தம்கையிற்)கொண்டவர்மனம் (அதனாற்செய்யுங்கொலையையேநோக்குவதல்லது அருளைநோக்காதவாறு)போல, ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் - பிறிதோருயிரின் உடலைச் சுவைபட உண்டவர் மனம், நன்று ஊக்காது - (அவ்வூனையேநோக்குவதல்லது) அருளை நோக்காது; (எ-று.)

சுவைபட உண்டல் - காயங்களான் இனியசுவைத்தாக்கி உண்டல்.

இதனான், ஊன்தின்றார்மனம் தீங்குநினைத்தல் உவம அளவையாற் சாதித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

(கு-பு.) கொலைக்கருவி - ஆயுதம். சுவைபட - இனியருசிஉண்டாக. காயங்கள் - இன்சுவையைஉண்டாக்கித்தரும்பொருட்டுச் சேர்க்கப்படுகிற பலபொருள்கள்; காரசாரங்கள். உவம அளவை - உபமானப்பிரமாணம்; அதாவது-ஒன்றைஉபமானமாகக்காட்டி அதனால்விளக்குதல். மேலது-முன்னே சொன்ன அருளில்லாமை. படை-படுத்தற்குக்கருவியானது;படுத்தல் - கொல்லுதல், ஐ - கருவிப்பொருள்விகுதி. நன்று - ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயராய், எல்லாக்குணங்களிலும் நல்லகுணமாகிய அருளைக் குறித்தது. ஊக்குதல் - முக்கியமாகக்கருதுதல். ஒன்று - எண்ணலளவாகுபெயர்; ஒரு பிராணியைக் குறித்தலால். மனம் - மநஸ்என்னும் வடமொழித்திரிபு. ஊன்தின்பவரது மனம் அருளை நினைத்தலுஞ் செய்யாதென்பது கருத்து. (௫௩.)

௨௫௪. அருளல்லது யாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(இ-ள்.) அருள் யாது எனின் கொல்லாமை—; (அருள்) அல்லது (யாது எனின்) கோறல்—; (ஆகலான்), அ ஊன் தினல்-அக்கோறலான்வந்த ஊனைத் தின்கை, பொருள் அல்லது-பாவம்; (எ-று.)

உபசாரவழக்கால் 'கொல்லாமை' 'கோறல்' ஆகிய காரியங்களை 'அருள்' 'அல்லது' எனக் காரணங்களாக்கியும், 'ஊன்தின்கை' ஆகிய காரணத்தை 'பாவம்' எனக் காரியமாக்கியுங் கூறினார். அருளல்லது -கொடுமை. சிறப்புப்பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் 'பொருள

ல்லது' எனப்பட்டது. 'கோறல்' என முன்நின்றமையின், 'அவ்வூன்' என்றார். இனி, இதனை இவ்வாறன்றி 'அருளல்லது' என்பதனை ஒன்றாக்கி, 'கொல்லாமைகோறல்' என்பதற்கு, கொல்லாமையென்னும் விரதத்தை அழித்தல் என்று உரைப்பாருமுளர்.

(கு - பு.) அருளல்லது - கருணைப்பண்பல்லாதது. கோறல் - கொல்லுதல். யாதெனின் என்னும் வினாவைப் பின்னும் எடுத்துக்கூட்டுக; அல்லது, அருளும் அல்லதும் யாதெனில் முறையே கொல்லாமையும் கோறலுமாம் எனமுறைநிரனிறைப்பொருள்கோளாகக்கொள்ளினும் அமையும். 'அருளின் காரியம் - கொல்லாமை, அருளில்லாமையின்காரியம் - கொல்லுதல்: ஆதலால், மாம்சபோசனம் பாவத்துக்குக்காரணம்' என்று சொல்லவேண்டியவர் இங்ஙனஞ் சொன்னது, காரியத்தைக் காரணமாகவுங் காரணத்தைக் காரியமாகவுங் கூறுவதொரு உபசாரவழக்கென்னும் இலக்கணத்தைக் குறித்தென்க. அறம்பொருளின்பம்வீடென்னும் புருஷார்த்தங்கள்நான்கும் உறுதிப்பொருளெனப்படுமாதலால் இங்கே அறத்தைப் பொருளென்றாரெனக்கொள்ளினும் அமையும்; கீழதிகாரத்தின் ஆரம்பபாட்டிலுங் காண்க. பொருளல்லது - தருமமல்லாதது; எனவே, தீவினையாயிற்று. அவ்வூன் என்பதில், சுட்டெழுத்து - காரணப்பொருளை யுணர்த்திற்று. அல்லதியாது - குற்றியலிகரம்; [நன் - எழுத்து - ௯௩: உயிர் - ௧௪.] கோறல் - தொழிற்பெயர்; கொல் - பகுதி, தல் - விகுதி, பகுதிமுதல் நீண்டது - விகாரம், லகரங்கெட்டதும் தகரம்றகரமாகத்திரிந்ததும்-சந்தி. (௫௪)

௨௫௫. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு.

(இ - ள்.) உயிர் நிலை - ஒருசாருயிர் (உடம்பின்கண்ணே) நிற்றல், (ஊன்) உண்ணாமை உள்ளது - ஊனுண்ணாமையென்கின்ற அறத்தின்கண்ணது; ஊன் உண்ண - (அந்நிலைகுலைய ஒருவன்) அதனை உண்ணுமாயின், அளறு அண்ணாத்தல் செய்யாது - (அவனைவிழுங்கிய) நிரயம் (பின்உமிழ்தற்கு) அங்காவாது; (எ - று.)

உண்ணப்படும்விலங்குகள் அதனால் தேய்ந்து சிலவாக, ஏனைய பலவாய் வருதலின், 'உண்ணாமையுள்ள துயிர்நிலை' என்றார். 'உண்ணின்' என்பது, 'உண்ண' எனத் திரிந்து நின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தால் நெடுங்காலம் நிரயத்துள் அழுந்துமென்பதாம்.

'கொலைப்பாவம் கொன்றார்மேல் நிற்றலின், பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லை' என்பாரை மறுத்து, அஃது உண்டென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - பு.) ஒருசார்உயிர் - மிருகங்கள், பட்சிகள், நீர்வாழ்ஜந்துக்கள் இவற்றுட் சிலவகைகள். அந்நிலைகுலைய - அங்ஙனம் உயிர் உடம்பில் நிற்றல் அழியும்படி. அதனை - அவ்வுடம்பை. விழுங்கிய - மறுமையில்உட்கொண்ட. நிரயம் - நரகம். பின்உமிழ்தற்கு அங்காவாது - பின்பு அவனை வெளிவிடுதற்கு வாய்திறவாது. ஊன்தின்பவன் ஆழ்வயிற் றடக்கிமீட் டுமிழ்கலா வெரிவாய் வெம்மைகூர்நரக மடைவன் என்பது கருத்து. தேவர், மக்கள், விலங்கு, நரகர் என்னும் நால்வகைக் கதிகளுள் விலங்குகதியிலே பறவைகளும் நீர்வாழ்வனவும் அடங்குதலால், 'உண்ணப்படும் விலங்குகள்' என்றார். ஏனைய பலவாய் வருதல் - மற்றையனவாகிய [illegible]டம்புகள் அதிகமாய்வளர்ந்து மிகுதல். உண்ணாமையுள்ளதுயிர்நிலை யென்பதற்குக் கருத்து - மாம்சபோசனஞ்செ

ய்தல் கொலைத்தொழிலின்றிமுடியா தென்பது. உண்ண-எச்சத்திரிபு; [நன்-வினை - உஎ.] தானேகொன்றுதின்னுமற்போனாலும் பிறன்கொன்றுதந்ததையுண்பதும் பாவமே; அவன்கொல்லுதற்கு இவன்போலியர்தின்பரென்னும் உறுதியானஎண்ணமே காரணமாதலின் என்பது இதன்பயன். இது பற்றியே "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம், விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ், சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங், கொலைப்பாலுங் குற்றமே யாம்" என்றார் நான்மணிக்கடிகையிலும். நிலை - தொழிற்பெயர்; நில்-பகுதி. ஐ-விகுதி. இப்பாட்டில் இடையிலேநின்ற ஊன் என்றசொல் 'ஊனுண்ணாமை' எனமுன்னும் 'ஊனுண்ண' எனப் பின்னுஞ்சென்றுகூடுதலால், தாப்பிசைப்பொருள்கோள்; இதனைமத்திமதீபமென்றுங்கூறுவர். அஃது-கொலைப்பாவம். அண்ணாத்தல், அண்ணா-பகுதி;இது,ஒருசொல்: இறுமா, சோகா, அல்லா, செம்மா, அலமா, தெருமா, ஏமா என்பனபோல. அளறு- நரகக்குழி. உள்ளது - உண்மையென்னும்பண்பின்அடியாகப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. (ருரு)

உருசு. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

(இ-ள்.) தினல் பொருட்டால் - (பேதைமைகாரணமாக அல்லது) ஊன்தின்கைகாரணமாக, உலகு - உலகம், கொல்லாது எனின் - கொல்லாதாயின், விலை பொருட்டால் ஊன் தருவார் - பொருள்காரணமாக ஊன் விற்பார், யாரும் - யாவரும், இல் - இல்லை; (எ-று.)

'உலகு' என்பது - ஈண்டு, உயிர்ப்பன்மைமேல் நின்றது.

'பின்நிகழுந் தின்கை முன்நிகழுங் கொலைக்குக் காரணமாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான்வரும்பாவம் இல்லை' என்ற வாதியைநோக்கி; அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனுள் மேலது வலியுறுத்தப்பட்டது.

(கு-பு.)பேதைமை காரணமாகவல்லது ஊன்தின்கைகாரணமாக உலகங்கொல்லாதாயின் - அறியாமைபற்றிக்கொன்றாற்கொன்றதல்லது மாமிசபோஜனத்திற்காக உலகத்திலுள்ளோர் பலஉயிர்களைக் கொலைசெய்யாராயின். விலைப்பொருட்டு - கிரயமாகக்கொடுக்குந்திரவியத்திற்காக. உயிர்ப்பன்மைமேல் - பலவுயிர்களென்னும்பொருளில். 'காரணம் காரியம் என்னும் இரண்டனுள் காரணம் முற்பட்டிருப்பதுங் காரியம் பிற்பட்டிருப்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளுமிலக்கணமா மாதலால், ஒருவன் முன்னே செய்கிற கொலைத்தொழிலுக்கு மற்றொருவன்பின்னே ஊன்தின்பது காரணமாகாது; ஆதலால், கொலைப்பாவம் கொன்றவனைச்சேருமேயல்லது பின்பு அதனிறைச்சியைத் தின்றவனைச்சேராது: ஆதலின், தானே கொன்றுதின்னக்கூடாதேயல்லது பிறன்கொன்றுவிற்றதை விலைகொடுத்துவாங்கித் தின்னத் தடையில்லை' என்று வாதஞ்செய்பவனைநோக்கி, 'இவன்வாங்குவான் என்னும் நம்பிக்கையே அவன் கொல்லுவதற்குக் காரணமாதலால், கொலைப்பாவம் ஊன்தின்பவனையுஞ் சேரும்' என்று நியாயங்காட்டித் தன்கருத்தை நிலைநிறுத்தினார். இவன் தின்னுதற்கு வாங்குவானல்லனாயின் அவன் கொன்றுவிற்றல்செய்யான் என்றது, அருத்தாபத்திப்பிரமாணம். ஆல் இரண்டும்-அசைகள். யாரும், உம்மை - முற்றுப்பொருளது. மேலது - முன்னிரண்டுபாட்டுக்களிற் சொன்னது; பாவமுண்டென்பது. ஊனை வாங்குவாரில்லையாயின் விற்பாரில்லையென்று கருத்து. (ருசு)

௨௫௭. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) புலாஅல் - புலாலாவது, பிறிது ஒன்றன் புண் - பிறிதோருடம்பின் புண்; அது உணர்வார் பெறின் - அது (தூய்து அன்மை) அறிவாரைப் பெறின், உண்ணாமை வேண்டும் - (அதனை) உண்ணாதொழியல் வேண்டும்; (எ - று.)

'அஃது' என்னல்வேண்டும் ஆய்தம் விகாரத்தால் தொக்கது. அம்மெய்ம்மை உணராமையின் அதனை உண்கின்றா ரென்பதாம்.

பொருந்துமாற்றானும் புலாலுண்டல் இழிந்ததென்பது இதனாற் கூறப்பட்டது.

(கு - பு.) புண் - மாமிசம். அது தூய்து அன்மை - அவ்விறைச்சி சுத்தமுடையதல்லாமை. அறிவாரைப்பெறின் என்றதனால், அவ்வுண்மையையறிந்தால்உண்ணார் என்பது கருத்து. அறிதலின் அருமை தோன்ற 'பெறின்' என்றார். அஃது இஃது உஃது என ஆய்தத்தொடர்க்குற்றியலுகரமாகவருஞ் சுட்டுப்பெயர் வேறென்றும், அது இது உது என முற்றியலுகரமாக வருஞ் சுட்டுப்பெயர் வேறென்றும், அவற்றுள் அது என்பது அதனை அதனொடு என இவைமுதலாக அன்சாரியை வருமிடத்துமாத்திரமே உகரங்கெடுமென்றும், சிறப்புவிதியிற் சொல்லாத மற்றவுயிர்முதல்மொழிகள் வந்து புணரும்பொழுது உகரங்கெடாமல் வகரவுடம்படுமெய்பெற்றேவருமென்றும், அஃது என்பது குற்றியலுகரமாதலால் வருமொழிமுதலுயிர்வரும்பொழுது ஈறுகெடுமென்றும், வருமொழிமுதலில் மெய்யெழுத்து முதன்மொழி வரும்பொழுதுமாத்திரமே ஆய்தங்கெட்டு அது என நிற்குமென்றும், உயிர்முதன்மொழிவரும்பொழுது ஆய்தங்கெடாதிற்குமென்றுந் தொல்காப்பியத்து எழுத்ததிகாரத்து உருபியல், உயிர்மயங்கியல், குற்றியலுகரப்புணரியல்களைக்கொண்டும் அவற்றின் உரையைக்கொண்டும் விளங்குதலால், இங்கே 'அதுணர்வார்' என்னுந்தொடரில் அஃதென்பது அதுவெனநின்றது தொகுத்தல் என்னுஞ் செய்யுள்விகாரம் எனக்கொண்டார்; அது என்பதை முற்றியலுகரமாகக்கொண்டால் 'அதுவுணர்வார்' என வரவேண்டுதலானும், அஃதென்பது உயிர்முதல்மொழிப்புணர்ச்சியில் ஆய்தங்கெடுதற்கு விதியின்மையானும், இது, புணர்ச்சிவிகாரத்தில் அடங்காதாயிற்று: இனி, "முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி, மன்னல் வேண்டு மல்வழி யான" என்னுஞ் சூத்திரத்து இலேசினால் அஃது என்பது அது என நின்றதென்று கொள்ளுதலும் ஒன்று. பொருந்துமாற்றானும் - யுக்தியினாலும். இனி, இத்திருக்குறளுக்கு, புலாலுண்ணாமை வேண்டும் ஏனெனின் உணர்வார்ப்பெறின் அது பிறிதொன்றன்புண் ஆதலால் என்று அன்வயித்து முடித்து உரைத்தலும் அமையும். வேண்டும் - ஒருவகைவியங்கோள்வினைமுற்று. "தக்கத்துட் டேங்கித் அறவின்கட் சேர்கலா, மக்கட் பிணத்த சுடுகாடு - தொக்க, விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட, புல்லறி வாளர் வயிறு" என்னும் நாலடியார்ப்பாட்டு இங்கே அறியத்தக்கது. (௫௭)

௨௫௮. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(இ - ள்.) செயிரின் - (மயக்கமாகிய) குற்றத்தின், தலைப்பிரிந்த - நீங்கிய, காட்சியார் - அறிவினையுடையார், உயிரின் தலைப்பிரிந்த ஊன் - ஓர் உயிரின் நீங்கிவந்த ஊனை, உண்ணார் —; (எ - று.)

தலைப்பிரிவு என்பது - ஒருசொல. பிணம் என ஊனின்மெய்ம்மை தாமே உணர்தலின், 'உண்ணார்' என்றார்.

(கு - பு.) மயக்கம்-விபரீதஞானம். மெய்ம்மை - உண்மையானதன்மை. ஐயம் திரிபு அறியாமை யென்னும் மூன்றுகுற்றங்களும் நீங்கிய பரிசுத்தமான புத்தியையுடையவர்கள் பிணந்தின்னா ரென்பது இதன்கருத்து. தலை என்பது - உபசர்க்கமாய், பிரி என்னும் வினைச்சொல்லோடு வந்தது; கைகூடல், கால்சீத்தல், கண்ணூறுதல், மேற்கொள்ளுதல் என்பவற்றில் கை, கால், கண், மேல் என்பன போல. (௫௮)

௨௫௯. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

(இ - ள்.) அவி சொரிந்து - (தீயின்கண் நெய்முதலிய) அவிகளைச் சொரிந்து, ஆயிரம் வேட்டலின் - ஆயிரம்வேள்விவேட்டலினும், ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை- ஒருவிலங்கின் உயிரைப் போக்கி (அதனின்ற ஊனை) உண்ணாமை, நன்று—; (எ - று.)

அவ்வேள்விகளான்வரும் பயனினும் இவ்விரதத்தான்வரும் பயனே பெரி தென்பதாம்.

(கு - பு.) தீயின்கண் - நெருப்பிலே. அவி - தேவர்க்கு இடும் உணவு; ஹவிஸ்என்னும் வடமொழித் திரிபு. சொரிந்து - பெய்து; போகட்டு. வேள்வி - யாகம். ஆயிரம் என்பது, பலவென்னுமாத்திரையாய் நின்றது; இவ்வெண்ணுப்பெயர், யாகங்களைக்குறித்தலால், எண்ணலளவாகுபெயர். வேட்டலினும் ஓமஞ்செய்தலினும். செகுத்தல்-உடம்பினின்றும் ஒழித்தல். நன்று- நல்லது; குறிப்புமுற்று. 'எந்தப்பிராணியையுங்கொல்லுதல்கூடாது' என்ற விதிக்கு 'யாகத்தில்மாத்திரஞ் சிறுபான்மை சில உயிரைக் கொல்லுக' என்ற விலக்கு வேதத்திற் கூறப்பட்டிருப்பினும், இந்நூலாசிரியர் இங்ஙனங்கூறியது, புலான்மறுத்தலென்னும் அறத்தினது சிறப்பை வற்புறுத்தும் பொருட்டென்க; 'நூறுவருஷகாலம் வருஷந்தோறும் அசுவமேதயாகஞ் செய்த பலமும் மாம்சபோஜனஞ்செய்யாத பலமும் சமம்' என்றும், 'காய் கிழங்குமுதலியவற்றை உண்டு விரதங்காக்கிறதனாலும் அடையப்படமாட்டாது புலால்மறுத்தலாலுளதாம் பயன்' என்றும் மநுதருமசாஸ்திரத்திற் கூறியுள்ளவற்றைக் கருதி இங்ஙனங் கூறினார்போலும்: இனி, இத்திருக்குறளைக்கொண்டே திருவள்ளுவனாரைக் கொல்லாமையையே முக்கியவிரதமாகக்கொண்டுள்ள ஜைன சமயத்தைச் சேர்ந்தவ ரென்று சாதிப்பாருமுளர். வேட்டல், வேள் - பகுதி. (௫௯)

௨௬0. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(இ - ள்.) கொல்லான் - (ஒருயிரையுங்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை - புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும்—, கைகூப்பி- கைகுவித்து, தொழும்—; (எ - று.)

இவ்விரண்டறமும் ஒருங்கு உடையார்க்கு அல்லது ஒன்றே உடையார்க்கு அதனாற்பயனில்லை யாகலின், கொல்லாமையும் உடன்கூறினார். இப்பொருளுடையான் மறுமைக்கண்தேவரின்மிக்கானாமென அப்பயனதுபெருமை கூறியவாறு.

இவைமூன்றுபாட்டானும், ஊனுண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.

(கு - பு.) கொல்லான் - எதிர்மறை முற்றெச்சம். கைகூப்பி - அஞ்சலி செய்து. தொழும் - வணங்கும். இவ் விரண்டறம் - கொல்லாமையும், புலான்மறுத்தலும். தானே கொன்று தானே தின்னுதல், பிறர் கொன்றதைத் தான் தின்னுதல், தான் தின்னாமல் பிறர்க்குத் தின்னக் கொன்றுகொடுத்தல்

என்னும் இம்மூன்றும் குற்றமா மென்பதை இதனு லறிக. தேவரின் மிக்கான் - தேவர்களினுஞ் சிறந்தவன். பிறவுயிர்களுக்குத் தீங்குசெய்யாதவனை அந்நன்றியைக்கருதி அவ்வுயிர்கள் தொழவேண்டுவது முறைமையேயாம். கூப்பு - கூம்பு என்பதன் பிறவினை; குவியச்செய் என்று பொருள். கொல்லான் - எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது; கெடாவிட்டால், கொல்லாதான் என வரும். கீழ்ப்பாட்டில் புலான்மறுத்தல் என்னும் விரதத்துக்குத் தேவர்களைநோக்கிச்செய்யுங் கருமத்தினுஞ் சிறப்புக்கூறி, இப்பாட்டில் அவ்விரதமுடையானுக்கு அக்கருமத்தைப்பெறுந்தேவர்களினுஞ் சிறப்புக் கூறுகிறார். (௬௦)

௨௭-ம் அதி.—தவம்.

அஃதாவது - மனம்பொறிவழிபோகாதுநிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலைநிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலைநிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம் உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறஉயிர்களை ஓம்புதல். புலால் மறுத்து உயிர்கள்மேல் அருள்முதிர்ந்தவழிச் செய்யப்படுவதாகலின், இது, புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு-பு.) தவம் - தபஸ் என்னும் வடமொழித் திரிபு. பொறிவழி - பஞ்சஇந்திரியங்களின்வழியிலே. உண்டி - உணவு. கோடைக்கண் - கிரீஷ்மகாலத்தில்; ஆனிமாதமும் ஆடிமாதமு மாகிய முதுவேனிற்பருவத்தில். வெயில்நிலை - சூரியகாந்தி படும்இடம். மாரி - மழை. நீர்நிலை - ஏரி, ஆறு, குளம், மடு, கிணறு, வாவி முதலியன. ஓம்புதல் - பாதுகாத்தல்; துன்பஞ்செய்யாதிருத்தல். அருள் முதிர்ந்தவழிச் செய்யப்படுவது - கருணைமிகுந்தபொழுது தவம் செய்தற்குஉரியது. உண்டிசுருக்கல் - நீர்பருகியும் காற்றுநுகர்ந்தும் காய்கனிகிழங்குசருகுவருக்கங்களை உண்டும் ஒருகாலன்னம்புசித்தும் ஒன்றும் உண்ணாமலும் எனக் காண்க. பஞ்சாக்கினிமத்தியில் நிற்றலையும் வெயில்நிலைநிற்றலில் அடக்கினார்.

௨௬௧. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

(இ-ள்.) தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு, உற்றநோய் நோன்றல் - (உண்டிசுருக்கல் முதலியவற்றால் தம்உயிர்க்கு)வருந் துன்பங்களைப் பொறுத்தலும், உயிர்க்கு உறுகண் செய்யாமை - (தாம் பிற) உயிர்கட்குத் துன்பஞ்செய்யாமையும், (ஆகிய), அற்று - அவ்வளவிற்று; (எ-று.)

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், 'அற்றே' எனத் தேற்றேகாரங்கொடுத்தார். 'தவத்திற்கு உரு அற்றே' என்பது, 'யானையது கோடுகூரிது' என்பதனை 'யானைக்குக் கோடு கூரிது' என்றாற்போல ஆறுவதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம்.

இதனான், தவத்தினது இலக்கணங் கூறப்பட்டது.

(கு-பு.) உரு - ரூபமென்னும்வடமொழித்திரிபு. அவ்வளவிற்று - அவ்வளவையுடையது. மற்றுள்ளன - தவத்தின் அங்கங்கள். தேற்றேகாரம் - நிச்சயப்பொருளைத்தரும் ஏ என்னும் இடைச்சொல். கோடு கூரிது - தந்தம் கூர்மையையுடையது. ஆறாம்வேற்றுமையுருபுக்கு நான்காம்வேற்றுமையுருபு வந்தது, உருபுமயக்கம். ஆறுவதன்பொருள் - கிழமைப்பொருளென்னுஞ் சம்பந்தப்பொருள். நோன்றல், நோல் அல்லது நோன் - பகுதி. அற்று - சுட்டடியாகப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. (௬௧)

உகூஉ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

(இ - ள்.) தவமும் தவம் உடையார்க்கு ஆகும் - (பயனையன்றித்) தவந்தானும் உண்டாவது முன்தவமுடையார்க்கே; (ஆகலான்), அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம் - அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனில்முயற்சியாம்; (எ - று.)

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவுபோக்கலின் 'தவமுடையார்க்காகும்' என்றும், அஃதிலாதார்க்கு அவைஇன்மையின் முடிவுபோகாமையின் 'அவமாம்' என்றுங் கூறினர்.

(கு - பு.) பயனை அன்றி - தவத்தினது பலன்மாத்திரமேயல்லாமல், முன் தவம் உடையார்க்கே - முன்பிறப்பிற்செய்த தவத்தையுடையவர்களுக்குமாத்திரமே. முற்பிறப்பில் தவஞ்செய்யாமல் இப்பிறப்பில்மாத்திரம் தவத்திற்குஉரியமுயற்சிசெய்யத்தொடங்கியவர்களுக்குத் தவம் கைகூடாது. உண்டாவது - இடையூறில்லாமல் நிறைவேறுவது. மேற்கொள்வது - பூண்டுகொள்வது. அவம் - வீண். முயல்வது-யத்தனிப்பது. பரிசயத்தால் - முற்பழக்கத்தினால். அறிவு - ஞானம். ஆற்றல் - வல்லமை. முடிவுபோக்கலின் - தவத்தை நிறைவேறச்செய்தலினால். அஃதுஇலாதார்க்கு - அம்முற்பரிசயமில்லாதவர்களுக்கு. அவை இன்மையின் - அறிவு ஆற்றல் என்னும் இரண்டும் இல்லாமையால். முடிவுபோகாமையின் - தவம் நிறைவேறாமையால். அஃதிலார் - ஆய்தம் மெய்போலஒலித்தது. மேற்கொள்வது - எதிர்காலத்தொழிற்பெயர். பயனையன்றித்தவந்தானும் என நிற்றலால், தவமும் என்ற உம்மை - இறந்தது தழுவிய எச்சப்பொருளது. நன்மைசெய்தற்குப் பாவங் காரணமாக மாட்டாமையால் நன்மையே காரணமென்பதாம். (கூஉ)

உகூங. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

(இ - ள்.) மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றிநிற்பார், துறந்தார்க்கு துப்புரவு வேண்டி - துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பி, தவம் மறந்தார்கொல் - (தாம்) தவஞ்செய்தலை மறந்தார்போலும்; (எ - று.)

துப்புரவு - அனுபவிக்கப்படுவன. வேண்டியவேண்டியாங்கெய்தற்பயத்ததாகலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ்செய்யுந்தானத்தின்மேல்விருப்பமிகுதியான் மறந்தார் போலும் எனவே, தானத்தின் தவம் மிக்கதென்பது பெற்றும்.

(கு - பு.) பற்றி - விடாமற்பிடித்து. துறந்தார்க்கு - புறமாகிய செல்வத்தினிடத்து உண்டாகிற எனதென்னும் புறப்பற்றையும் [மமகாரத்தையும்] அகமாகிய உடம்பினிடத்து உண்டாகிற யானென்னும் அகப்பற்றையும் [அகங்காரத்தையும்] விட்டவர்களுக்கு; சன்னியாசிகளுக்கு. உண்டியும் - உணவும். மருந்தும் - ஔஷதமும். உறையுளும் - இருப்பிடமும். உதவல் - கொடுக்கவேண்டுதல். துப்புரவு - பஞ்சஇந்திரியங்களினாலுங் கொள்ளப்படுபவை. வேண்டியவேண்டியாங்கெய்தற்பயத்ததாகலின் - விரும்பினவையெல்லாவற்றையும் விரும்பியபடியேபெறுதலாகிய பயனையுடையதாதலால். "வேண்டியவேண்டியாங்கெய்தலால்" என்பது - இவ்வதிகாரத்தில் ஐந்தாம்பாட்டு. மறந்தார்கொல், கொல் - ஒப்பில்போலிப்பொருள

து. மற்று என்பதுபோல, மற்றைஎன்பதும் - ஒரு தனியிடைச்சொல்; "ஐயீ ற்றுடைக்குற் றுகரமு முளவே" என்னும்விதிபற்றி வந்த விகாரமன்று: பொருள்வேறுபாடு உண்மையால். பலவகைக் கைங்கரியங்களைச் செய்து உபசரிக்கவேண்டியவர் இல்லறத்தாரும், அங்ஙனம் உபசரிக்கப்படுபவர் துறவறத்தாரு மாதலால் இல்லறத்திலும் துறவறம் சிறந்த தென்பது இதன்கருத்து. உபகாரஞ்செய்வது இல்லறத்தாருக்குக் கடமையாதல் போலத் துறவறத்தாருக்குத் தவஞ்செய்வது கடமையாமெனஅறிக. (௬௩)

௨௬௪. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(இ - ள்.) ஒன்னார் தெறலும் - (தம் அறத்திற்குப்) பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும், உவந்தாரை ஆக்கலும் - (அதனை) உவந்தாரை உயர்த்தலும், (ஆகிய இவ்விரண்டையும்), எண்ணின் - (தவஞ்செய்வார்) நினைப்பாராயின், தவத்தான் வரும் - அவர் தவவலியான் (அவை அவர்க்கு) உளவாம்; (எ - று.)

முற்றத்துறந்தார்க்கு ஒன்னாரும் உவந்தாரும் உண்மைகூடாமையின், தவத்திற்கு ஏற்றி உரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனால், அவர்க்கு அவை எண்ணாமை இயல்பென்பது பெற்றாம். ஒன்னார் பெரியராயினும் உவந்தார் சிறியராயினும் கேடும் ஆக்கமும் நினைந்தத்துணையானே வந்துவிடும் எனத் தவஞ்செய்வார்மேல் இட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.

(கு - பு.) தம்அறம் - துறவறத்தின் அங்கங்கள். பகை - விரோதம். அதனைஉவந்தார் - துறவறமாகிய தமதுஒழுக்கத்தைக் கண்டு மகிழ்ந்தவர் கள். உயர்த்தல் - விருத்திசெய்தல். தவவலி - தபோபலம். அவை- துஷ்ட நிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமும் ஆகிய அவ்விரண்டும். ஒன்னார் - பகை வர். உவந்தார் - நண்பர். உண்மை - இருத்தல். ஒன்னார்என்பதற்கு - தமக்குப்பகைவரென்று பொருள்கூறாமல் தம்அறத்திற்குப்பகைவரென் றும், உவந்தார்என்பதற்கு - தமக்குஉகந்தவரென்று பொருள்கூறாமல் தம்அறத்தைஉவந்தாரென்றும் பொருள்கூறியதற்குக் காரணங் கூறியது, 'முற்றத்துறந்தார்க்கு' என்றுதொடங்கிய வாக்கியம். அவர்க்கு - துறந் தவர்க்கு. அவைஎண்ணாமை - சாபஅநுக்கிரகங்களைக் கருதாமை. ஆற் றல்- பெருமை. ஒன்னார்-ஒன்றார்என்பதன்மரூஉ; தம்மோடு சேராதவரென் று பொருள்: எதிர்மறைவினையாலணையும்பெயர். தெறல், தெறு-பகுதி.ஆக் கல் என்பதில், ஆக்கு - பகுதி; இதில், ஆகு - தன்வினைப்பகுதியெனக் கொ ண்டால், இடையில் ஒற்றுத்தோன்றியது - பிறவினைக்குறியென்றும், ஆ-பகுதியெனக்கொண்டால், கு - பிறவினைவிகுதியென்றும் அறிக. எண ணில் - ஆலோசிக்குமிடத்து, இவ்விரண்டும் தவத்தால் வருமென்றும் உரைக்கலாம். எண் இல் எனப் பிரித்து - அளவில்லாத தவமெனவுமாம். தன்னிலும் மிகமேம்பட்டவர்களைச் சினந்துவேரோடழித்தலும் தன்னிலும் மிகக்கீழ்ப்பட்டவர்களை விரும்பி மிகவிருத்திசெய்தலும் ஆகியமேன்மை துற வறத்தார்க்கேயன்றிஇல்லறத்தார்க்குக்கிடையாதென்பது இதன்கருத்து.

௨௬௫. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(இ - ள்.) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - (முயன்றால் மறு மைக்கண்) தாம்வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலா ல், செய் தவம்-செய்யப்படுவதாய தவம், ஈண்டு முயலப்படும் - இம்மைக் கண் அறிவுடையோரான் முயலப்படும்; (எ - று.)

'ஈண்டு' என்பதனான், 'மறுமைக்கண்' என்பது பெற்றும். மேற்கதி வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா வென்பதாம்.

இவைநான்குபாட்டானும், தவத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பு.) முயன்றால் - தவத்தைத்தொடங்கிச்செய்தால். ஈண்டு-இவ்வுலகத்தில். மேற்கதி - சுவர்க்கம்முதலிய உயர்ந்தபதவிகள். வீடுபேறு - முத்தியடைதல். எய்தப்படா - அடையப்படமாட்டா. வேண்டிய என்றது - கீழ், உரைப்பாயிரத்தின் முதலில் 'இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி லின்பத் தழிவில் வீடும்' என்றவற்றை. வேண்டிய - பலவின்பா லிறந்தகால வினையாலணையும்பெயர். வேண்டியவாங்கு - வேண்டியாங்கு எனப் பெயரெச்சவீறு தொகுத்தல்விகாரம். செய்தவம் - செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த வினைத்தொகை. எய்தல், எய்து-பகுதி; அல்-விகுதி: அப்பெறிதல் என்னும் பொருளில், எய் - பகுதி, தல் - விகுதி எனக் காண்க. ஈண்டு - சுட்டுநீண்டபெயர். மீண்டும் எனப்பிரித்து, மேன்மேலுமென்றுமாம். இல்லறத்தார்க்கு இம்மைப் பயனாகிய புகழ் எளிதிற்கைகூடுமேயல்லது மறுமைப்பயன்கள் துறவறத்தார்க்குப்போல நினைத்தபடி பெறமுடியாவென்பது இதன்கருத்து. "ஆக்கமுந் திறலுஞ் சீரு மாயுவு நலனுமேலா, மூக்கமும் வீடு மெல்லாந் தவத்தின தூற்ற மன்றோ, நோக்குறு மிந்நாள் காறு நோற்கலா தினைய வெல்லாம், போக்குவ தென்னை கொல்லோ புகலுதி யிகலும் வேலோய்" என்னுங் கந்தபுராணச்செய்யுளை இங்கே அறிக. இத்திருக்குறள், மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனாரால் இறையனாரகப்பொருளுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது; முதற்சூத்திரவுரையிற் காண்க. (௬௫)

௨௬௬. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லர்
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

(இ-ள்.) தம் கருமம் செய்வார் - தங்கருமஞ் செய்வாராவார், தவம் செய்வார் - (துறந்து) தவத்தைச் செய்வார்; மற்று அல்லார் - அவரை ஒழிந்த பொருளின்பங்களைச்செய்வார், ஆசையுள் பட்டு - (அவற்றின்கண்) ஆசையாகிய வலையுட் பட்டு, அவம் செய்வார் - (தமக்குக்)கேடுசெய்வார்; (எ-று.)

அநித்தமாய் மூவகைத்துன்பத்ததாய் உயிரின்வேறாய உடற்கு வருத்தம் வரும் என்று ஒழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப்பிணிமூப்புஇறப்புக்களான் அநாதியாகத் துன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம்பிறந்து வீடுபெறுமாகலின், தவஞ்செய்வாரை 'தங்கருமஞ் செய்வார்' என்றும்; கணத்துள் அழிவதாய சிற்றின்பத்தின்பொருட்டுப் பலபிறவியுந் துன்புறத்தக்க பாவஞ் செய்துகோடலின், அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றுங் கூறினார். மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(கு - பு.) கருமம் - தொழில். பொருளின்பங்கள் - அர்த்தகாமங்கள். வலையுட்பட்டு - வலையிலே அகப்பட்டுச் சிக்கிக்கொண்டு. தமக்குக் கேடு செய்வார் - தங்களுக்குத் தாங்களே கெடுதிசெய்துகொள்பவர்கள். அநித்தம் - மூன்றுகாலத்தும் நிலையில்லாதது; நித்தியம் என்பதன் எதிர்மறை. மூவகைத்துன்பத்ததாய் - தன்னைப்பற்றிவருவனவும், பிறவுயிர்களைப்பற்றிவருவனவும், தெய்வத்தைப்பற்றிவருவனவும்என்று மூன்றுவகைப்பட்ட துன்பங்களையுடையதாகி. ஒழியாது - விடாமல். பிணி - நோய். மூப்பு-முதுமை, கிழத்தனம். இறப்பு - மரணம். அநாதியாக - முதலில்லாமல்; நெடுங்காலமாக. ஞானம் பிறந்து - கடவுளருளால் தத்துவஞானம் உண்டாகப் பெற்று. கணத்துள் - க்ஷணப்பொழுதிலே. சிற்றின்பம் - மனைவியர்முதலி

யோரால் இம்மைமறுமைகளில் வருகிற அற்பசுகம்; பரமபதத்திற்பெ
றும் அதிசயப்பேரின்பமல்லாதது. பலர்பிறவியும் - அனேகம்பிறப்புக்களி
லெல்லாம். செய்துகோடலின் - செய்துகொள்ளுதலால். அல்லாதார் - த
வஞ்செய்யாதவர். பிறவித்துன்பத்தை யொழித்துப் பேரின்பத்தைத் தரு
தலால் தவஞ்செய்தலைத் தங்கருமஞ்செய்தலென்றும், மற்றைப் பொரு
ளின்பங்களைக்குறித்த முயற்சிகளெல்லாம் அத்துன்பத்தை மிகச்செய்து
கெடுதருதலால் தவஞ்செய்யாமையை அவஞ்செய்தலென்றுங் கூறினார்.
கருமம் - கர்மம்; வடசொல். தவஞ்செய்தலென்னும் வினையை மாற்றித்
தவஞ்செய்யாத என்னும் வினையைத் தந்ததனால், மற்று என்னும் இடை
ச்சொல் - வினைமாற்றுப்பொருளது. ஆசையுள், உள் - ஏழாம்வேற்றுமை
யுருபு. தவஞ்செய்பவர் நித்தியப்பொருளையடைவரென்பது கருத்து. (௬௬)

௨௬௭. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(இ - ள்.) சுட சுடரும் பொன்போல் - தீயின்கண் ஓடும் பொன்னு
க்கு அதுசுடச்சுடத் தன்னோடுகலந்த குற்றம் நீங்கி ஒளிமிகுமாறுபோல,
நோற்கிற்பவர்க்கு - தவஞ்செய்ய வல்லவர்க்கு, துன்பம் - (அதனான் வருந்)
துன்பம், சுட சுட - வருத்தவருத்த, ஒளி விடும் - (தம்மொடுகலந்த பாவம்
நீங்கி) ஞானம்மிகும்; (எ - று.)

'சுடச்சுடரும் பொன்போல்' என்றாராயினும், கருத்துநோக்கி, இவ்வா
று உரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின், 'ஒளி' என்றார்.

(கு - பு.) ஓடும் - உருக்கிப் புடம்வைக்கப்படுகிற. அது சுடச்சுட-நெ
ருப்புத் தபிக்கத்தபிக்க. குற்றம் - மாசு. அதனான்வருந்துன்பம் - உண்டி
சுருக்கல்முதலியன. சுடச் சுடரும் பொன்போல் - நெருப்புத் தபிக்க அத
னால்விளங்குஞ் சுவர்ணம்போல. ஒளி - ஞானவொளி. விடுதல்—வெளிவீசு
தல்; விளங்குதல். ஒளி - பிரகாசம். பொருள்கள் - பதார்த்தங்கள். 'சுடச்
சுட' எனப் பின் உபமேயத்திலே அடுக்கிநிற்பதனால்; முன் உபமானத்திலும்
'சுட' என ஒன்று வருவித்து 'சுடச்சுட' என அடுக்காக உரைக்கப்பட்டது.
நோற்கிற்பவர், கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை; கு, இல் - சாரியை
யெனினுமாம். சுடச்சுட - அடுக்கு, தொழிற்பொருளது. புடம் அதிகமாக
அதிகமாகப் பொன் மாற்றுயர்ந்து பிரகாசிப்பதுபோலத் தவவருத்தம் அதி
கமாக அதிகமாகப் பெருமையுயர்ந்து மனிதர் ஞானம்பெறுவ ரென்பது
இதன்கருத்து. மூற்றுவமையணி; ஒளி என்பதிற் சிலேடையை அங்கமாகக்
கொண்டு வந்தது. மநுஸ்மிருதியில் ஆறாவது அத்தியாயத்தில் எக - வது
சுலோகத்தில் 'நெருப்பிலெரிக்கப்படுகிற பொன்முதலியவற்றின் மாசுகள்
ஒழிவதுபோல இந்திரியங்களின்குற்றங்கள் பிராணயாமத்தால் ஒழிகின்
றன' என இக்கருத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. (௬௭)

௨௬௮. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(இ - ள்.) தன் உயிர் - தன் உயிரை, தான்—, அற - தனக்கு உரித்
தாக, பெற்றானை - பெற்றவனை, ஏனைய மன் உயிர் எல்லாம் - பெறாதனவா
கிய மன்னுயிர்களெல்லாம், தொழும்—; (எ - று.)

தனக்கு உரித்தாதல் - தவமாகிய தன்கருமஞ் செய்தல். அதனினூங்
குப் பெறுதற்கரியது இன்மையின், 'பெற்றானை' என்றார். அதுபெறாதன
என்றது, ஆசையுட்பட்டு அவஞ்செய்யும் உயிர்களை. சாபமும் அருளும்
ஆகிய இரண்டாற்றலும் உடைமையின் 'தொழும்' என்றார்.

(கு - பு.) அறப் பெறுதல் - சுவாதந்திரியம் நீங்கி ஐம்பொறி முதலிய பிறவற்றுக்கு அதீனமாகாமல் முழுவதுந் தனக்கே அதீனமாகப் பெறுதல். உரித்தாக - உரியதாக. பெறுதனவாகிய - தன் உயிர் தான் அறப் பெறுத. ஏனைய - மற்றைய; ஏனை என்னும் இடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். மன் உயிர் - நிலைபெற்ற பிராணிகள். தொழும் - கைகூப்பி வணங்கி நிற்கும். அதனின் ஊங்கு - அத்தவஞ்செய்தலினும் மேலாக. இன்மையின் - இல்லாமையால், பாவஞ்செய்த எல்லாவுயிர்களையும் வருத்த அதிகாரிகள் உளராதலால் அந்த உயிர்களெல்லாம் அவ்வதிகாரிகளுக்கு உரிமைபூண்டுநிற்கும்; தன்கருமஞ்செய்யுந் திறவறத்தானுக்கோ பாவமில்லையாதலால் தன் உயிர் தனக்கே உரிமைபூண்டு நிற்கும் என்றவாறு. எல்லாவுயிர்களும் தன்னையேதொழத்தக்க சாபாநுக்கிரகசக்தி தவமுடையானுக்கு உண்டாமென்பதாம். (௬௮)

௨௬௯. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு.

(இ - ள்.) கூற்றம் - கூற்றத்தை, குதித்தலும் - கடத்தலும், கைகூடும் - உண்டாவதாம்: நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு; (எ - று.)

சிறப்பும்மை, அதுகூடாமை விளக்கிற்று; 'மன்னுயிரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங் கைகூடும்' என எச்சவும்மையாக உரைப்பினும் அமையும். ஆற்றல் - சாப அருள்கள்.

இவை நான்குபாட்டானும், தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(கு - பு.) கூற்றத்தைக்கடத்தலும் - யாவராலுங் கடக்கமுடியாத யமனையும் அதிக்கிரமித்து விடுதலும். ஆற்றல் - திறமை. தலைப்பட்டார் - மேற்கொண்டவர்; கூடியவர். 'குதித்தலும்' என்ற உயர்வுசிறப்பும்மை, கூற்றங்கடத்தல் கைகூடலரிதென்பதை விளக்கின்றது. கூற்றம் - பிராணிகளுடைய உயிரையும் உடலையும் வேறுபிரித்துக் கூறுபடுத்துங் கடவுள்; அன்றிக்கே, பொதுப்படச்செல்லுங் காலத்தைப் பிராணிகளுக்கேற்பக் கூறாக்கிவைக்குந் தேவனென்பதுபற்றிவந்த காரணப்பெயரென்னவுமாம். எச்சவும்மை - எஞ்சிநின்ற [சொல்லப்படாமற் குறைந்துநின்ற] பொருளைத் தருகிற உம் என்னும் இடைச்சொல்; இது இங்கே இறந்தது தழுவிய எச்சம். சாப அருள்கள் - சபிக்கவும் அநுக்கிரகிக்கவும் உள்ள சக்திகள். தவத்தில் தலைமைபெற்றவர்க்கு யமனைவெல்லுதலுங் கூடுதலை மார்க்கண்டேயன், சுவேதன் முதலியோரது வரலாறுகளிற் காண்க. (௬௯)

௨௭0. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(இ - ள்.) இலர் பலர் ஆகிய காரணம் - (உலகத்துச் செல்வர்கள் சிலராக) நல்கூர்வார் பலராதற்குக் காரணம் (யாதெனின் அது), நோற்பார் சிலர் பலர் நோலாதவர் - தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்; (எ - று.)

செல்வம், நல்குரவு என்பன - ஈண்டு, அறிவினது உண்மை இன்மைகளையுங் குறித்துநின்றன; என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றாராகலின். 'நோற்பார் சிலர்' எனக்காரணங்கூறினமையான், காரியம்வருவித்து உரைக்கப்பட்டது.

தவஞ்செய்யாதார்க்கு இம்மையின்பமும் இல்லை என, இதனான் அவரது தாழ்வு கூறப்பட்டது.

(கு - பு.) நல்கூர்வார் - வறுமையாளர். இப்பாட்டினுரையிற்காட்டிய மேற்கோள் - நாலடிநானூற்றில் அறிவின்மையென்னு மதிகாரத்தில் முதற்பாட்டிலுள்ளது; நுட்பமான அறிவில்லாமையானது தரித்திரமாம், அப்படிப்பட்டஅறிவை யுடையவனாவது மிகவும் வளர்ந்த பெரிய சம்பத்தாம் என்பது இதன்பொருள். 'நோற்பார் சிலர்' என்றதனால், செல்வர் சிலரென்பது வருவிக்கப்பட்டது. ஆகிய - செய்யியவென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; இய-விகுதி, காலங்காட்டிற்று: இதனை இறந்தகாலப்பெயரெச்சமாகக்கொண்டு உரைத்தல் பொருந்தாது. இக்குறள் எதுவின்முடித்தலென்னுந் தந்திரவுத்திக்கு உதாரணமாமென்பது, வீரசோழியவுரை. ஒருபிறப்பில் தவஞ்செய்தவர்களே மறுபிறப்பிற் செல்வமுடையோராவர்; அப்பிறப்பில் தவஞ்செய்யாதவரோ மறுபிறப்பிற் செல்வமுடையவராகார் என்பது கருத்து. மறுமைப்பேரின்பத்தை மாத்திரமேயன்றி இம்மைச்சிற்றின்பத்தையுந் தரும் பெருமை தவத்திற்கு உண்டு என்பது இதனாற் கூறப்பட்டது. (௭௰)

௨௮-ம் அதி.—கூடாவொழுக்கம்.

அஃதாவது - தாம்விட்ட காமஇன்பத்தை உரனின்மையின் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீயஒழுக்கம். அது விலக்குதற்கு, இது, தவத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு-பு.) கூடாவொழுக்கம்-அயோக்கிய ஆசாரம். விட்ட-நீங்கின. காமஇன்பம் - ஒருகாலத்தில் ஒருபொருளால் ஐம்புலன்களும்அனுபவிக்குஞ்சிறப்புடையதான மகளிர்புணர்ச்சியால்வருஞ் சிற்றின்பம். உரனின்மையின்-மனவுறுதி யில்லாமையினால்; இங்கே 'வாதனையின்' என்றும் பிரதிபேதம். பின்னும்விரும்புமாறுதோன்ற-மீண்டும் விரும்பும்படி தோன்ற. இக்கெட்டவொழுக்கம் தவத்திற்குத் தகாத தாதலால், இவ்வதிகாரம் தவமென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டதென்க. ஒழுக்கம்-தொழிற்பெயர்; ஒழுகு-பகுதி, அம் - விகுதி, விரித்தல் - விகாரம்.

௨௭௧. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(இ - ள்.) வஞ்சம் மனத்தான் - வஞ்சம்பொருந்திய மனத்தையுடையவனது, படிறு ஒழுக்கம் - மறைந்த ஒழுக்கத்தை, பூதங்கள் ஐந்தும் - (உடம்பாய் அவனோடுகலந்து நிற்கின்ற) பூதங்களைந்தும், (கண்டு), அகத்தே நகும் - தம்முள்ளே நகும்; (எ - று.)

காமம் தன்கண்ணேதோன்றி நலியாநிற்கவும் அதனது இன்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் 'வஞ்சமனம்' என்றும், அந்நலிவு பொறுக்கமாட்டாது ஒழுகுங் களவொழுக்கத்தை 'படிற்றொழுக்கம்' என்றும்; உலகத்துக் களவுடையார் பிறர்அறியாமற் செய்வனவற்றிற்கு ஐம்பெரும்பூதங்கள் சான்றாகலின் அவ்வொழுக்கத்தையும் அவன்மறைக்கின்ற ஆற்றையும் அறிந்து அவன் அறியாமல் தம்முள்ளே நகுதலின் 'அகத்தேநகும்' என்றுங் கூறினார். செய்தகுற்றம் மறையாதாகலின் அவ்வொழுக்கம் ஆகாது என்பது கருத்து.

(கு - பு.) வஞ்சம் - வஞ்சனை; அதாவது - தன்னை உண்மையான தவவொழுக்கமுடையவனாகப் பிறரை யெண்ணுவிக்கவேண்டுமென்னும் எண்ணம். படிற்றொழுக்கம் - படிறாகிய வொழுக்கமென விரியும்; இருபெய

ரொட்டுப்பண்புத்தொகை; திருட்டுத்தனமான நடத்தை யென்க: படிற்றொடுகூடிய வொழுக்கமென்றால், மூன்றும்வேற்றுமையுருபும்பயனுமுடன்தொக்கதொகையாம்; உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் றகரவொற்றிரட்டிற்று. பூதங்களைந்து - பஞ்சபூதங்கள்; நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்பன. "வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும், வஞ்சித்தோமென்று மகிழன்மின் - வஞ்சித்த, வெங்கு மூளனொருவன் காணுங்கொலென்றஞ்சி, யங்கங் குலைவ தறிவு" எனப் பின்னோர் கூறியவாறுங் காண்க. காமம் - சிற்றின்பவாசை. நலியாநிற்கவும் - வருத்தவும். அதனது இன்மை - அவ்வாசையினது இல்லாமை. அக்நலிவு - காமவருத்தம். களவுடையார் - வஞ்சகர். ஐம்பெரும்பூதங்கள் - பஞ்சமகாபூதங்கள். நகும் - சிரிக்கும். பூதங்களைந்தும், உம் - இனைத்தென்றறிபொருளில்வந்தமுற்றும்மை; இறந்தது தழுவிய எச்சவும்மையாக கொண்டு, புறத்துள்ளார் வெளிப்படையாக நகைசெய்வதுமன்றி யென்பது குறைந்நின்றதெனினும் அமையும். தானறிந்துசெய்யுந் தீமையைப் பிறரறியார் என்று கருதும் பேதைமையை நோக்கிப் பஞ்சபூதங்கள் பிறரறியாவகை தமக்குள்ளே நகும் என்க. பூதம் - சிருஷ்டிப்பொருள். நகுதல் - பரிகசித்தல்; இகழ்த லென்றபடி. அஞ்சும் எனப் போலியாகப் பாடங்கொள்ளுதல் எதுகையின்பத்திற்குச் சிறக்குமாறு காண்க. (எக)

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(இ - ள்.) வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - (ஒருவனுக்கு) வான்போல் உயர்ந்த தவவேடம் என்னபயனைச் செய்யும்? தான் அறி குற்றம் - தான் குற்றமென்று அறிந்த அதன்கண்ணே, தன் நெஞ்சம் - தன் நெஞ்சு, படின் - தாழுமாயின்; (எ - று.)

'வானுயர்தோற்றம்' என்பது, "வான்றோய்குடி" என்றாற்போல இலக்கணவழக்கு. அறியாதுசெய்த குற்றமல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றங் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்ததாயேவிடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறு பயனில்லை யென்பதாம்.

(கு - பு.) வான்போல் உயர்ந்த - ஆகாயம்போல உயர்ச்சிபெற்ற. தவவேடம் - தவத்திற்கு உரிய வேஷம்; வேடமாவது - வெளிக்கோலம். அதன்கண் - கூடாவொழுக்கத்தில்; காம இன்பத்தில். தாழும் - இறங்கும்: தங்கும்; இழிவுபெறும். இலக்கணவழக்கு - லக்ஷணப்பிரயோகம்; அஃதாவது - ஒருசொல் உரியபொருளைவிட்டு அப்பொருளின் சம்பந்தியை உணர்த்துவது: இங்கே 'வானுயர்தோற்றம்' என்பது - ஆகாயத்தின் உயர்ச்சிபோல மேன்மைபெற்ற காட்சியெனப் பொருள்பட்டதனால், இங்ஙனங் கூறப்பட்டது. "வான்தோய்குடி" என்னும் மேற்கோள் - நாலடியாரில் குடிப்பிறப்பு என்னும் அதிகாரத்தில் இரண்டாஞ்செய்யுளில் உள்ளது; அதற்கு - உயர்ச்சியால் ஆகாயத்தை அளாவிய நற்குலமென்று பொருள்: இன்னும் அதற்கு - கீர்த்தியால் மேலுலகத்தை அளாவிய குடியென்றும் பொருள் கொள்ளலாமாதலால், இங்கே 'வானுயர்தோற்றம்' என்பதற்கும் - புகழினால்தேவலோகமட்டும்உயர்ந்ததுறவு றவடிவமென்றும் உரைக்கலாம். செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல் எனச் சொல் மூவகைப்படுமெனவும், அவை முறையே வடமொழியில் வாசகம், லக்ஷகம், வ்யஞ்சகம் எனப்படுமெனவும், அவற்றின் பொருளும் செம்பொ

ருள், இலக்கணப்பொருள், குறிப்புப்பொருள் என மூவகைத்தென்றும், அவை அபிதை, லக்ஷணை, வ்யஞ்சநாவ்ருத்தி எனப்படுமென்றும், இவற்றில் இடையதுதான் ஆகுபெயராகுமென்றும் உணர்க. வழக்கு - வழங்குவது. கழுவப்படாமையின் - பிராயச்சித்தமுதலியவற்றால் ஒழித்துப் பரிசுத்தமாகச் செய்யப்படாமையால். புறத்தார் - அயலார். வெருட்டுதல் - அஞ்சச்செய்தல். 'தெரியாமற்செய்த குற்றத்திற்குமாத்திரமே பரிகாரம் உண்டு; தெரிந்துசெய்ததற்கோ அது இல்லை' என்பது, தருமசாஸ்திரக்கொள்கை. தோற்றம் - தோன்றற்பாடு; தோன்று - பகுதி, அம் - கருத்தாப்பொருள்விகுதி, வலித்தல் - விகாரம்: இதனைத் தொழிலாகுபெயரெனினும் அமையும். எவன் - வினைப்பெயர். அறிகுற்றம் - வினைத்தொகை. உயர் தோற்றம் என்பதும் வினைத்தொகையேயாம்; உயர்வாகியதோற்றம் எனப் பண்புத்தொகையாகாது: உயர்ந்த உயர்கிற உயரும் எனக் காலந்தோன்ற விரிந்து நிற்றலால், காலங்கரந்த பெயரெச்சமாம். (௭௨)

௨௭௩. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(இ - ள்.) வலி இல் நிலைமையான் வல் உருவம் - (மனத்தைத் தன் வழிப்படுத்தும்) வலியில்லாத இயல்புடையான் வலியுடையார்வேடத்தைக் கொண்டு தான் அதன்வழிப்படுதல், பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்து அற்று - பசு (க் காவலர் கடியாமல்) புலியின் தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும்; (எ - று.)

இல்பொருளுவமை. 'வலியினிலைமையான்' என்ற அடையானும், 'மேய்ந்தற்று' என்னுந் தொழிலுவமையானும், 'வல்லுருவத்தோடு மனவழிப்படுதல்' என்றது பெற்றாம். காவலர் கடியாமை - 'புலி புல் தின்னுது' என்பதனானும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங் கோடற்குப் பயன் அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமை யாயிற்று. இவ்வாறு தனக்கு உரிய இல்லாளையுந் துறந்து வலியும் இன்றிப் பிறர்அயிராத வல்லுருவமுங் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது - தன்மனம் ஓடியவழியே ஓடி மறைந்து பிறர்க்கு உரிய மகளிரை விழைதலாம்; அவ்வாறுதல், 'பெற்றம் தனக்கு உரிய புல்லை விட்டுப் பிறர்க்கு உரிய பைங்கூழை மேய்ந்தாற்போலும்' என்ற உவமையான் அறிக.

(கு - பு.) வலி - இந்திரியநிக்கிரகசக்தி. இல்நிலைமை - பண்புத்தொகை; இன்மையாகிய நிலைமை யென்க: காலந்தோன்ற விரியாதாதலால், வினைத்தொகையாகாது. நிலைமை-பண்புப்பெயர்; மை விகுதி: நிலை என்னும் பகுதியில் நில் - பகுதி, ஐ - தொழிற்பெயர்விகுதி யென்பர்; நில் என்னும் பகுதியின்மேல் ஐ-சாரியை என்னினுமாம். அதன் வழிப்படுதல் - தவநெறியைவிட்டு விலகி மனம் போனவழியிலே நடத்தல். வலிமையுடையாரது உருவம், இங்கு 'வல்லுருவம்' எனப்பட்டது. உருவம் - ரூபம் என்னும் வடமொழித் திரிபு. பசு, இயற்கையில் வலிமையில்லாதது. காவலர் கடியாமல் - பயிரைக்காத்துக்கொண்டிருப்பவர்கள் தன்னை அதட்டி ஓட்டாமல் அஞ்சிஓடிப்போம்படி. புலி, இயற்கையில் வலிமையுடையது. போர்த்து - உடம்புமுழுவதும் மறைய மேலேபோகட்டுக்கொண்டு. பைங்கூழ் - பசுமையான பயிர். இல்பொருளுவமையாவது - முக்காலத்திலும் உலகத்தில்இல்லாததொருபொருளை இருக்கும்பொருள்போல உவமையாகவைத்துக்கூறுவது; இவ்வணியை வடநூலார் அபூதோபமாலங்காரமென்பர். 'இஃது இல்லாததுசொன்னமையான், அபூதவுவமை; "விடாதவப் பொருட்கு விதிசேரு

வமை,படாத இயம்புத லூத வுவமை" எனக்கொள்க'என்றார் வீரசோழிய வுரையில்.பசுப்புலித்தோலைப்போர்த்துப்பயிரைமேய்தல் எங்குமில்லை;என்றுமில்லை. அடை-விசேஷணம்;அடுத்துவருவது: இதனால் அடுக்கப்படும் மொழி, அடைகொளி எனப்படும்; அது - விசேஷியம். தொழிலுவமை - செய்கை பற்றிவந்த உபமானம். 'புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது' என்பது, பழமொழி; "பல்பொறிய, செங்கட் புலியே றறப்பசித்தும் தின்னுவாம், பைங்கட் புனத்தபைங் கூழ்", "இடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா, கொடிப்புற் கறிக்குமோ மற்று" என்பனவுங் காண்க. அன்ன - அத்தன்மையனவான. அயிராமை - தவத்தவர் காமநுகரா ரென்பதனாலும், அவர்களிடத்துப் பயத்தாலும் அவர்களது ஒழுக்கவிஷயத்திற் சந்தேகப்படாமை. இல்லாள் - மனைவி. விழைதல் - விரும்புதல். இவ்வாறு கூறவே, மனமடங்கப்பெறாதவன் திருட்டனாக மனமடங்கினவர்வேடத்தைப்பூண்டு அவர்க்கு உரிய விரதானுஷ்டானங்களை விட்டு இல்லறத்தார்க்கு உரிய சிற்றின்பங்களை அனுபவித்தல், பசுப் புலித்தோலைப்போர்த்து அதற்குஉரிய ஊனைத்தின்னாமல் பிறர்க்குஉரியபயிரைமேய்ந்ததுபோலு மென்பதாம். பசுவைப் பெற்றம் என்பது - கொடுந்தமிழ்நாடுபன்னிரண்டனுள் தென்பாண்டிநாட்டினின்று செந்தமிழில்வந்துவழங்கிய திசைச்சொல்; இது இப்பொருளதாதலை "பெற்றம் மேய்த்துண்ணுங் குலத்திற் பிறந்து" என்னுமிடத்துங் காண்க. இவ்வுவமையைமாற்றி வில்லிபுத்தூராழ்வார் "நின்று பெருந் தவமுயல்வோர் தாங்கள் கொண்ட நிலைவொழியப் புறத்தொன்று நினைவ ரோசொல், பொன்றிடினு நீயறியப் பசுத்தோல் போர்த்துப் புலிப் பாய்ச்சல் பாய்வரோ புரிவி லாதாய்" எனக் கூறியிருக்கு மாற்றையும் அறிக. (௭௩.)

௨௭௪. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(இ-ள்.) தவம் மறைந்து அல்லவை செய்தல் - (அவ் வலியில்நிலைமையான்) தவவேடத்தின்கண்ணே மறைந்துநின்று தவமல்லவற்றைச் செய்தல், வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்து அற்று - வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும்; (எ-று.)

தவம் - ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது - பிறர்க்கு உரிய மகளிரைத் தன்வயத்து ஆக்குதல்; இதுவும், இத்தொழிலுவமையான் அறிக.

(கு-பு.) வலியில்நிலைமையான் - மனமடங்காதவன். தவமல்லவற்றை - பாவத்தொழில்களை. வேட்டுவன் - வேடன்; வேடுஎன்னுந் தொழிலையுடையவன்: வேடு, வேட்டை, வேட்டம் என்பன - ஒருபொருளன; அஃதாவது - மிருகங்களையும் பறவைகளையும் பிடித்தலுங்கொல்லுதலும். புதல் - செடியடர்த்தி; இதுவே ஈற்றுப்போலியாய்ப் புதர் எனவும் வழங்கும். புட்கள் - பறவைகள். பிணித்தல் - பிடித்தல். தவம் - தவவேடத்தையுணர்த்தியதனால், ஆகுபெயர்; ஒன்றன்பெயர் மற்றொன்றிற்கு ஆகுகிற பெயர், ஆகுபெயர். தன் வயத்து ஆக்குதல் - தன்வசப்படுத்திக்கொள்ளுதல். 'கேட்டியா லந்த ணாள கேடிலா வெம்பி ரான்றன், மாட்டொருசிறிது மன்பு மனத்திடை நிகழ்ந்த தில்லை, காட்டுறு புள்ளின் குழுஉ கவருவான் புதன்மேற் கொண்ட, வேட்டுவ னியல்போன் மேலோன் வேடநீ கொண்ட தன்மை' என்னுங் கந்தபுராணச்செய்யுளுக்கு ஏற்ப, புதல் மறைந்து என்பதற்கு - தான்மேற்கொண்ட புதரிலே மறைந்திருந்து என்றுங்

கருத்துக்கொள்ளலாம்; தழைகளை அடர்த்தியாகக் கூண்டுபோலக் கட்டி அதனைத்தானெடுத்துச்சென்று அதனுள்ளேமறைந்திருந்து அதனைஉண்மையானபுதலென்றுகருதி அதில்வந்துசேரும் பறவைகளைப் பிடித்தல் வேடரியல்பு. (௭௪)

௨௭௫. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) பற்று அற்றேம் என்பார் - (தம்மைப் பிறர் நன்குமதித்தற்பொருட்டு, யாம்) பற்று அற்றேம் என்று சொல்வாரது, படிறு ஒழுக்கம் - மறைந்த ஒழுக்கம், (அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும்), எற்று எற்று என்று - (பின்) என்செய்தேம் என்செய்தேம் என்று தாமே இரங்கும்வகை, ஏதம் பலவும் தரும் - (அவர்க்குப்) பலதுன்பங்களையுங் கொடுக்கும்; (எ - று.)

சொல்லளவல்லது பற்று அருமையின், 'பற்றற்றேமென்பார்' என்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம்நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின்கண் 'அந்தோவினையே' என்று அழுவாராகலின் 'எற்றெற்று' என்றுங் கூறினார். இவையைந்துபாட்டானும், கூடாவொழுக்கத்தின்இழுக்கங்கூறப்பட்டது.

(கு - பு.) நன்குமதித்தல் - கௌரவித்தல். பற்று அற்றேம் - ஆசைகளை முழுதும் நீங்கினேம். படிற்றொழுக்கம் - திருட்டுநடத்தை. எற்று - எப்படிப்பட்டது; வினாவடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று. அடுக்கு, இரங்கல்பற்றியது. என்பார் என்பதற்கு - என்றுசொல்வாரெனப் பொருள்கொண்டது, சொல்லெச்சம். அதன்விளைவின்கண் - அப்பாவத்தின்பயனை அனுபவிக்க நேருங்காலத்து. அந்தோ - ஐயோ. வினையே - கருமமே. அழுவார் - புலம்புவார். அந்தோவினையேயென்று அழுவாரென்பதைச் சீவகசிந்தாமணி முத்தியிலம்பகத்தில் "வண்ணத் துகிலுடுப்பின் வாய்விட்டழுவதுபோல் வருந்தி மல்கு, வண்ணச் சிறுகூறை பாகமோர் கைபாக முடுத்து நாளு, மண்ணுந் தடகுரீஇ யந்தோ வினையேயென் றழுவாட் கண்டு, நண்ணன்மின் செல்வ நமரங்கா ணல்லறமே நினைமின் கண்டீர்" என்ற கவியிற் காண்க. இழுக்கம் - குற்றம். கூடாவொழுக்கம் பின்பு தாமே அனுதாபப்படுவதற்குக் காரணமா மாதலால் விலக்கத்தக்கதென்பது இதன் கருத்து. (௭௫)

௨௭௬. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்.

(இ - ள்.) நெஞ்சின் துறவார் - நெஞ்சால் பற்றறாதுவைத்து, துறந்தார்போல் வஞ்சித்து - பற்றற்றார்போன்று (தானஞ்செய்வாரை) வஞ்சித்து, வாழ்வாரின் - வாழுமவர்போல, வன்கணார் - வன்கண்மையையுடையார், இல் - (உலகத்து) இல்லை; (எ - று.)

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது - 'யாம் மறுமைக்கண் தேவராதற்பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னது ஈதும்' என்று அறியாது ஈந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் "அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினா லலறு முந்நீர்த், தடங்கட லடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி, யுடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி மாந்தி வாழ்வர், மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்ன ரேறே" என்பதனான் அறிக. ஆவனசெய்தார்க்கு ஆகாதன விளைத்தலின், 'வன்கணாரில்' என்றார்.

(கு - பு.) நெஞ்சின் - ஐந்தாம்வேற்றுமை, கருவிப்பொருள்; கருவிப்பொருளும் ஏதுப்பொருளி லடங்குமென அறிக: இனி, ஏழாம்வேற்றுமைச் சினையிடமான பிறிதினிழமையாகக் கொள்ளினும் அமையும். தானஞ்செய்வார் - இல்லறத்தார். வஞ்சித்து - மயக்கி. வன்கண்மை - கொடுமை. இவ்வருந்தவர் - பிறராற்செய்வதற்கு அருமையான தவத்தைச் செய்துள்ள இவர்கள். இன்னாது ஈதும் - இப்பொருளைத் தானஞ்செய்வோம். அதுகொண்டு - அதனால்; அல்லது, அவர்கொடுத்த அப்பொருளைத் தாம் பெற்றுக்கொண்டு. இழிபிறப்பினராக்குதல் - அவர்களுக்கு ஒருபிரயோசனமுமில்லாமற் செய்தலுமன்றி அவர்களையும் இழிவான பிறப்பை அடைபவராகச் செய்தல். "அடங்கலர்க்கு" என்னும் மேற்கோள் - சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், தானப்பயன், பதினாலாம்பாட்டு: இது, கொடியவர்க்கீந்த தானத்திற்குப் பயன்கூறுகிறது; இதற்குப் பொருள் - சிங்கம்போன்ற கோபத்தையும் வலிமையையும் பெருமையையுடைய வேலாயுதத்தையு முடைய அரசர்களுக்குச் சிங்கம்போன்றவனே! ஐம்பொறிகளுமடங்காதவர்களுக்குக் கொடுத்த தானத்தினது பயனாலே ஒலிக்கின்ற மூன்று நீரையுடைய பெரிய கடலினிடையே யுள்ள பலதீவுகளிலே உடம்புமக்களுடம்பும் முகம் விலங்கின் முகமுமாய் உருவேறுபட்டுத் தோன்றி உதிர்கிற கனியை யுண்டு வாழ்வ ரென்பதாம். ஆவனசெய்தார் - உபகாரஞ்செய்தவர்கள். ஆகாதனவிளைத்தல் - அபகாரஞ்செய்தல். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றதில் நன்றிமறத்தலின் கொடுமை கூறப்பட்டுள்ளதனால், 'அந்நன்றிமறத்தலோடு நன்மைசெய்தார்க்குத் தீமையுஞ்செய்கின்ற இவர்கள்கொடுமைக்கு எல்லையில்லை' என்பார், 'வன்கணாரில்' என்றார். (௭௬)

௨௭௭. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(இ - ள்.) குன்றி புறம் கண்டு அனையர் எனும் - குன்றிமணியின் புறத்தைக் கண்டாற்போல வேடத்தாற் செம்மையுடைய ராயினும், குன்றி மூக்கின் அகம் கரியார் - அதன்மூக்குப்போல மனம் இருண்டிருப்பாரை, உடைத்து—, (உலகம்); (எ - று.)

குன்றி - ஆகுபெயர். செம்மை, கருமை என்பன - பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் அறியாமையினும் சென்றனவாயினும், பண்பாதல் ஒத்தலின், இவை பண்புவமை; "கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோகிலம்" என்பதும் அது.

(கு - பு.) புறம் - மேலிடம். குன்றியென்னுங் கொடியின்பெயர், அதன் மணியைக் குறித்ததனால், பொருளாகுபெயர்; முதலாகுபெயரென்பதும் இதுவே. பொருளின்கண் - உபமேயத்தில்; தவநெறிநின்றவர்கள்பக்கல். செப்பம் - நல்லொழுக்கம். பண்பு - குணம். "கூழின்மலிமனம்" என்னும் மேற்கோள் - திருச்சிற்றம்பலக்கோவையார் ௩௨௨-ஆஞ்செய்யுளிலுள்ளது; (பரமசிவனது திருச்சிற்றம்பலத்தை விரும்பாத) உணவாற் செருக்கும் மனம்போல ஒருகாலைக்கொருகால் நிறம்பெற்று இருளுகின்ற குயில்களென்று பொருள். அதில் 'இருளாகின்ற' என்பது உபமானத்திற்கு அஜ்ஞானமடைகின்ற என்றும் உபமேயத்திற்குக் கறுக்கின்ற என்றுஞ் சிலேடையாகப் பொருள்தந்ததுபோல இப்பாட்டில் 'கரியார்' என்பது உபமானத்துக்குக் கறுத்தலென்னும்பொருளையும் உபமேயத்துக்கு அஜ்ஞானமடைதலென்னும் பொருளையுங் கொடுத்தது. சிலேடைபற்றி வந்த உவமை

யணி. உலகத்தில் உள்ளும்புறமும் ஒத்த துறவறத்தவர் சிலரே வெளியிற் காஷாயதண்டமுதலியவேஷங்களோடு கூடி மனத்திற் கெட்ட எண்ணமுடையவர்களோ பலர் என்பது இதன் கருத்து. ஏனும்-எனினும் என்பதன் மரூஉ. (௭௭)

௨௭௮. மனத்தது மாசாக மாண்டார்நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(இ-ள்.) மாசு மனத்தது ஆக - மாசு தம் மனத்தின்கண்ணதாக, மாண்டார் - (பிறர்க்குத் தவத்தான்) மாட்சிமையுடையராய், நீர் ஆடி - நீரின் மூழ்கிக்காட்டி, மறைந்து ஒழுகும் - (தாம் அதன்கண்ணே) மறைந்து செல்லும், மாந்தர்—, பலர் - (உலகத்துப்) பலர்; (எ - று.)

மாசு - காம வெகுளி மயக்கங்கள். அவை போகற்குஅன்றி 'மாண்டார்' என்று பிறர்கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர்மறைதற்கு இடனாக்கினார். இனி, 'மாண்டார்நீராடி' என்பதற்கு, மாட்சிமைப்பட்டாரது நீர்மையையுடையராய் என்று உரைப்பாரு முளர்.

இவைமூன்றுபாட்டானும், அவ்வொழுக்கமுடையாரது குற்றமும், அவரை அறிந்து நீக்கல்வேண்டு மென்பதும் கூறப்பட்டன.

(கு - பு.) மாசு - குற்றம். மாண்டார் - மாட்சிமையுடையோர் என்னும் பொருளில், மாண் என்னும் பண்படி - பகுதி, ட் - இடைநிலை, ஆர் - விகுதி; (இறந்தவர் என்று பொருளாம்போது, மாள்-பகுதி, ளகரம் ணகரமானது - விகாரம்.) நீர் - ஜலத்தைக்குறிக்கும்போது, நீரம் என்னும் வடமொழியின் திரிபு; குணத்தைக்குறிக்கும்போது, நீர்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம். அதன்கண்ணே - அத்தவவேஷத்திலே. மாந்தர்-மனிதர்; இது - ஒருமையில்லாமல் எப்பொழுதும் பன்மையிலே வரும் பெயர்: இவ்வாறுவருவதை வடநூலார் நித்தியபகுவசன மென்பர். வெகுளி-கோபம். மயக்கம் - அவித்தை. அவை போகற்கு அன்றி - அக்குற்றங்கள் நீங்குதற்கு அல்லாமல். மாண்டார் என்று - சிறந்தவவொழுக்கத்தா ரென்று. மாட்சிமை - பெருமை. நீர்மை - குணம். மனத்தது - ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். ஒழுகு மாந்தர் என வினைத்தொகையாகவும், ஒழுகும் மாந்தர் எனத் தெரிநிலை எதிர்காலப்பெயரெச்சத் தொடராகவுங் கொள்ளலாம். உள்ளத்திலழுக்கிருக்க அதனையொழிக்காமல் மறைக்கும்பொருட்டு உடலழுக்கைக்கழுவி வெள்வேஷம்போடுஞ் சந்நியாசிகள் பலர் என்பது இதன்கருத்து. (௭௮)

௨௭௯. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(இ-ள்.) கணை - அம்பு, கொடிது - (வடிவாற் செவ்விதாயினும் செயலாற்)கொடிது;யாழ் கோடு செவ்விது-யாழ் கோட்டால்(வளைந்ததாயினும் செயலாற்) செவ்விது; ஆங்கு அன்ன - அவ்வகையே தவஞ்செய்வோரையும் கொடியர் செவ்வியர் என்பது, வினை படு பாலால் கொளல் - (வடிவாற் கொள்ளாது)அவர்செயல் பட்ட கூற்றானே அறிந்து கொள்க; (எ - று.)

கணைக்குச் செயல்- கொலை. யாழுக்குச்செயல் - இசையா லின்பம் பயத்தல். அவ்வகையே செயல்பாவமாயின் கொடியர் எனவும், அறமாயின் செவ்வியர் எனவும் கொள்க என்பதாம்.

இதனான், அவரை அறியுமாறு கூறப்பட்டது.

(கு - பு.) அம்பு - பாணம். வடிவால் - உருவத்தினால். செவ்விது-நேர்மையுடையது; கோணுதலில்லாதது. கொடிது - பிறர்க்குத்துன்பந்தருவது. யாழ் - வீணை. கோடு - வீணாதண்டம்; இது, வீணையின் உறுப்பு ஐந்தனு ளொன்று: "கோடே பத்தர் ஆணி நரம்பே, மாடக மெனவரும் வகையின தாகும்" இதனாலறிக. செவ்விது - பிறர்க்கின்பந்தருவது. அன்ன - கொடுமையுடையராதலும் செம்மையுடையராதலு மாகியவற்றை. அவர்செயல்பட்டகூற்றான் - அவர்களதுதொழில்நடந்தவகையால். உலகத்தில் வேஷத்தால்நல்லவர்களாய் ஒழுக்கத்தால்தீயவர்களும், வேஷத்தால்தீயவர்களாய் ஒழுக்கத்தால் நல்லவர்களும் இருத்தல் கூடும்; ஆதலால், அவரவரதுசெய்கையைக்கொண்டல்லாமல் வேஷத்தைக்கொண்டு உயர்வுதாழ்வுகளை நிச்சயிக்கலாகாது என்பது இதன்கருத்து. இதனை 'கணைகொடிது யாழ்கோடு செவ்விது' என்னும் உவமையால் விளக்கினார். கொடிது, செவ்விது என்பவற்றில் இரண்டுபொருள் கொள்ளப்பட்டது. கொடிதுயாழ் - குற்றியலிகரம். செவ்விது-செவ்வி யென்பதன்மேல்வந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. ஆங்கு - இடைச்சொல்; அங்கு என்பதிற் சுட்டு நீண்டது. அன்ன-சுட்டடியாப்பிறந்த பலவின்பாற்குறிப்பு வினையாலணையும் பெயர்; அ-சுட்டெழுத்து, பகுதி, ன் - சந்தி, ன் - சாரியை, அ - பலவின்பால்விகுதி. கொளல் - உடன்பாட்டுவியங்கோள். (௭௯)

௨௮௦. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(இ - ள்.) (தவஞ்செய்வார்க்கு), மழித்தலும் - (தலைமயிரை) மழித்தலும், நீட்டலும் - சடையாக்கலும், (ஆகியவேடமும்), வேண்டா—; உலகம் பழித்தது ஒழித்துவிடின் - உயர்ந்தோர் (தவத்திற்கு ஆகாது என்று) குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின்; (எ-று.)

பறித்தலும் மழித்தலுள் அடங்கும். 'மழித்தல்' என்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினர்.

இதனான், கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டா என அவரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - பு.) மழித்தல்-மொட்டையடித்தல்; சிரைத்தல். உலகம்பழித்தது - காமம். கடிந்துவிடின் - நீக்கிவிடுவாராயின். துறவடையுங்காலத்துத் தலைமயிரைச் சிரைப்பித்துக்கொள்ளாமல் ஒவ்வொன்றாகப்பிடுங்கியெடுக்கச்செய்தல் ஜைனமதசம்பிரதாயம்; இதனையும் அடக்கும்பொருட்டு, 'பறித்தலும் மழித்தலுள் அடங்கும்' என்றார். அவர்கள் மயிர்பறித்தலை "மணியியல் சிப்பிடச் சிவக்கும் வாணுத, லணியிருங் கூந்தலை யெளவை மார்கடாம், பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்னநூற், றணிபொருள் சிந்தியாத் துறத்தல்மேயினார்" என்னுஞ் சீவகசிந்தாமணியா லறிக. வேண்டா-வேண்டும் என்னும்வியங்கோளின் எதிர்மறை; செய்வினை செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த எதிர்மறைப்பலவின்பால்வினைமுற்றெனவுங் கொள்ளலாம். "உலக மென்ப துயர்ந்தோர் மாட்டே" என்றதனால், உலகம் என்னுஞ்சொல் - உயர்ந்தவரை உணர்த்தும். பழித்தது - இறந்தகாலவினையாலணையும்பெயர். தவவிரோதமானசெயல்களை அகத்தில் விட்டிட்டவருக்குப் புறத்தில் வேடம் வேண்டுவதில்லை யென்பது இதன் கருத்து. மழித்தலும் நீட்டலும் என்பது - காஷாயம் தண்டம் முதலிய மற்றைத்தவவேடங்களுக்கும் உபலக்ஷணம். வேடமும், உம்மை - உயர்வுசிறப்பு; இன்றியமையாமைவிளக்க நின்றது. (௮௦)

௨௯ - அதி.—கள்ளாமை.

அஃதாவது - பிறருடைமையாயிருப்பதியாதொருபொருளையும் அவரைவஞ்சித்துக்கொள்ளக்கருதாமை, கருதுதலும் செய்தலோடு ஒத்தலின், 'கள்ளாமை' என்றார். இல்வாழ்வார்க்காயின தமரோடு விளையாட்டுவகையான் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின், அதனைக்கருதியவழியும் பெரியதோர் இழுக்காம் ஆகலின், இது, துறவறமாயிற்று. புறத்துப்போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தேபோந்து பஃறலைப்பட்டு உடம்பின்பொருட்டுப் பொருளைநோக்குதலேயன்றி அதுதன்னையும் வஞ்சித்துக் கொள்ளக்கருதுதல் அவர்க்குப் பெரியதோர் இழுக்காதல் அறிக. இவ்வாறு, 'வாய்மை' முதல் 'கொல்லாமை' ஈறாய நான்கு அதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது, காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு - பு.) கள்ளாமை- எதிர்மறைத்தொழிற்பெயர்; திருடநினையாமை. தமரோடு - தம்மவர்களுடன்; சுற்றத்தார் நண்பர் முதலியோருடனே. கோடற்கு - கொள்ளுதற்கு. அங்ஙனங் கொள்ளுதல் - வஞ்சித்துப் பெறுதல். அதனை - களவை. புறத்து - வெளியில்; தவத்தை யொழிந்த விஷயாந்தரங்களில். ஒருதலைப்பட்டு - ஒன்றினிடத்தேபற்றியிருந்து. நோக்கற்பாலதாய - கருதவேண்டுவதான. அஃது ஒழிந்து - அந்நல்நெறியைவிட்டு. புறத்தே போந்து - வெளியிலே சென்று. பஃறலைப்பட்டு - பலவிஷயங்களிலும் அகப்பட்டுக்கொண்டு. அதுதன்னையும் -அப்பொருளையும். இழுக்கு - குற்றம். வாய்மைமுதல் கொல்லாமையீறாய - வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை என்கிற. களவு, பொய்பேசுதல், வெகுளுதல், கொடுந்தொழில், கொல்லுதல் என்னுமிவற்றைச் செய்தவிடத்து இல்லறத்தார்க்குக் குற்றமுண்டாம்; துறவறத்தார்க்கோ இவற்றை நினைத்தமாத்திரத்தில் பெருங்குற்றம் நேரும்: அதனால், கள்ளாமைமுதலிய இவ்வதிகாரங்கள் இல்லறவியலில் வைக்கப்படாமல் துறவறவியலில் வைக்கப்பட்டன என்றும், இவற்றுக்கு இக்குற்றங்களைச் செய்யநினையாமையென்று பொருள்கொள்ளவேண்டியதாயிற்று என்றுங் கூறியதாயிற்று. ஒருவன் உறவினருடனே சண்டையிட்டுவிடமுண்டுசாவேன் என்னும் மனமுடையவனாய் நஞ்சுகூட்டிவைத்து விலக்குவாரில்லாதபொழுது உண்பேனென்று நின்றவிடத்து அருளுடையானொருவன் அதனைக் கண்டு இவன் இதனையுண்ணுறவாதபடி கொண்டுபோய்க் கொட்டிவிடுவேனென்று அவனைக்காணாமல் கொண்டுசொரிந்திட அவனும் ஜனநீக்கத்தில் நஞ்சுண்டுசாகச்சென்றவன் அதுகாணானாய்ச் சாவுநீங்கினானாகுமாதலால் அவன்அக்களவினால் பிறனைப் பிழைப்பித்தமையால் நற்கதியிற் செல்லுவான்; இதுபோன்றகளவுகள் இல்லறத்தார்க்காயின் நன்மைபயப்பனவாம்: ஆதலால், கள்ளாமை துறவறத்தில் வைக்கப்பட்டதென்க.

௨௮௧. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(இ - ள்.) எள்ளாமை வேண்டுவான் என்பான் -(வீட்டினை) இகழாது விரும்புவான் (இவன்) என்று (தவத்தோரான்) நன்குமதிக்கப்படுவான், எனைத்து ஒன்றும் கள்ளாமை - யாதொருபொருளையும் பிறரைவஞ்சித்துக் கொள்ளக்கருதாவகை, தன் நெஞ்சு காக்க-தன்னெஞ்சினைக் காக்க; (எ-று.)

'எள்ளாது' என்னும் எதிர்மறைவினையெச்சம், 'எள்ளாமை' எனத் திரிந்துநின்றது. வீட்டினை இகழ்தலாவது - காட்சியே அளவையாவது என்றும், நிலம் நீர் தீ வளி எனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதுவின்கண் களிப்புப்போல வெளிப்பட்டு அழியும் என்றும், இறந்த உயிர் பின்பிறவாது என்றும், இன்பமும் பொருளும் ஒருவனாற் செய்யப்படுவது என்றுஞ் சொல்லும் உலோகாயதம்முதலிய சமயத்து மயக்கநூல்களைத் தெளிந்து அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதல். ஞானத்திற்கு ஏதுவாய மெய்ந்நூற்பொருளையேனும், ஆசிரியனை வழிபட்டு அன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவும் களவாம் ஆகலின், 'எனைத்தொன்றும்' என்றார். 'நெஞ்சு கள்ளாமற் காக்க' எனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதல் என்பது பெற்றாம்.

(கு - பு.) வீட்டினை - முத்தியுலகத்தை. என்பான் - பெயர். காக்க - பாதுகாக்கக்கடவன்; அடக்கக்கடவன். 'இப்பாட்டில் எள்ளாமையென்பதைத் தன்கருத்தாவின்வினையையும் பிறகருத்தாவின்வினையையும் கொண்டுமுடிதற்கு ஏற்ற முக்காலத்துக்கும்பொதுவான எள்ளவென்னுஞ் செயவெனெச்சத்தின் எதிர்மறையாகக் கொள்ளலாகாது; தன்கருத்தாவின் வினையைமாத்திரமே கொண்டு முடிதற்கு ஏற்ற இறந்த காலமாகிய எள்ளி என்னுஞ் செய்தெனெச்சத்தின் எதிர்மறையாகக் கொள்ளவேண்டும்: ஏனெனில் வேண்டுவானென்னும் தன் கருத்தாவின் வினையைக் கொண்டுமுடிதலால்' என்பார், 'எள்ளாது என்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமையெனத் திரிந்துநின்றது' என்றார்; இதனை "பெயரெஞ்சு கிளவியும்வினையெஞ்சு கிளவியு,மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா" என்னுந் தொல்காப்பிய வினையியற் சூத்திரத்துச் சேனாவரையருரையை நோக்கி உணர்க: இதனால், எள்ளாமையென்பது தன்வினைமுதல்வினையையும், கள்ளாமையென்பது பிறவினைமுதல்வினையையுங் கொண்டுமுடிதலாகிய வேறுபாட்டையுங் காண்க. இவை - எள், கள் என்னும் பகுதிகளின்மேல் எதிர்மறை ஆகாரமும் மகாரஐகாரவிகுதியும் பெற்றுநின்றன. இனி, இவற்றை எதிர்மறைத் தொழிற்பெயராகக் கொண்டு, பிறராலிகழப்படாமையை விரும்புபவனென்பவன் யாதொன்றையுங் களவுசெய்யாமையாகிய அறத்திலே தன்மனத்தை நிலைநிறுத்துக என்றும் பொருள்கொள்ளலாம். எள்ளாமை என்பதிலுள்ள எள் என்னும் வினைக்கு, வீட்டினை என்னும் செயப்படுபொருள் வருவித்துக்கொண்டார். வேண்டுவான் - வகரவிடைநிலை காலமுணர்த்தாமல் தன்மையுணர்த்திற்று. என்பான் என்பது, சிறப்புத்தோன்ற நின்றது. என்பானெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது; செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை: எனப்படுவான் என்றது அகரச்சாரியையும் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுவிகுதியுந் தொக்கு என்பானென நின்றதாகக் கொண்டார் பிரயோகவிவேகநூலாரும் தொல்காப்பியச்சூத்திரவிருத்திகாரரும். எனைத்து - எத்தனைத்து என்பதன் மரூஉ. ஒன்றும், உம்மை - இழிவு சிறப்பு. காக்க - வியங்கோள்முற்று. 'காட்சியே' என்பதுமுதல் 'சொல்லும்' என்றதுவரையில் லோகாயதமதசித்தாந்தம். லோகாயதம் என்பது, புறச்சமயங்களுள் ஒன்று. அம்மதத்தார்க்குச் சார்வாகர் என்றும் பார்ஹஸ்பத்யர் என்றும் பெயர்கள் உண்டு. அவர்கள்மதத்தில் பிரதியக்ஷமொன்றே பிரமாணமாக அங்கீகரிக்கப்படுகிறது; மற்றை அநுமானம்முதலியன ஒப்புக்கொள்ளப்படுகின்றனவில்லை. அவர்களுட் பெரும்பாலார் ஆகாயத்தைத்

தனியே ஒருபூதமாக எண்ணுவதில்லை; மற்றைநான்குபூதங்களின் அபாவத்தையே ஆகாசமாகக்கருதுவர். வெற்றிலைபாக்குச்சுண்ணாம்புகளின் சேர்க்கையால் ஒருவகைச்செம்மைநிறம் உண்டாவதுபோலப் பிருதிவி முதலியநான்குபூதங்களின் சேர்க்கையாலே அவற்றின்காரியமாகிய உடம்பில் உணர்ச்சி உதிக்குமென்பார்கள்; அதுவே அவர்களுக்கு ஆத்மாவாகும். இங்ஙனம் உயிர் உடம்பினின்றும் வேறுபடாததாகையாலே, பிராணவாயு பிரிதலாலிறந்து எரிக்கப்பட்டாவது புதைக்கப்பட்டாவது அழிந்துபோன உடம்பு மீண்டும் பிறக்கமாட்டாது என்று கூறி, மறுபிறப்பை மறுப்பார்கள். மயில்கள் இயற்கையிலே அழகியனவாயிருப்பனபோலவும், குயில்கள் இயல்பிலே இனிமையாகக்கூவுவனபோலவும் பிராணிகளுக்குச் சுவபாவத்திலேயே இன்பம் ஏற்படுகின்றது என்பதும், துன்பமும் இப்படிப்பட்டதே யென்பதும் அவர்கொள்கை. அவர்களது சித்தாந்தத்தில் சுவர்க்கம் நரகம் பரமபதம் முதலிய பரலோகங்கள் கிடையா; இவையெல்லாம் மூடர்களாற் பிரமைமயக்கும்பொருட்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன என்பர். வயிறுநிரம்பத் திருப்தியாக நல்லுணவுகளை உண்பதும், பதினாறு பிராயமுள்ள இளமங்கையரைச் சேர்தலும், முடிப்பமுடித்துப் பூசுவபூசி உடுப்ப உடுத்தலுமே அவர்களுக்குச் சுவர்க்கம். சத்துருக்களாலும் வியாதி முதலியவற்றாலும் வருந்துவதே நரகம். மரணமே மோக்ஷம். இவ்வாறு யாவரும் எளிதில் இனியதென்று ஒப்புக்கொள்ளும்படி சொல்லி லோகத்திற் பரவிய மதமானதுபற்றியே இதற்கு லோகாயதமென்றுபெயர். 'முதலிய' என்றதனால், ஜைநம், பௌத்தம், நையாயிகம், வைசேடிகம், சாங்கியம், மாயாவாதம், பாஸ்கரம், ஏகாயநம் முதலியன கொள்க. இம்மதங்களின் சொரூபம் இத்தன்மையதென்பதை வடமொழியிற் பிரமசூத்திர பாஷியங்களிலும், சங்கராசாரியரால் இயற்றப்பட்ட ஸர்வஸித்தாந்தஸங்க்ரஹமென்னும் நூலிலும் பார்க்கக்காணலாம். தமிழிற் சிவஞானசித்தியாரும், அதனுரையும் முதலியவற்றிற் சுருக்கமாகக்கூறப்பட்டுள்ளன. நம்பிள்ளையென்கிற பூர்வாசாரியர் முப்பத்தாறாயிரப்படியென்கிற திருவாய்மொழிவியாக்கியானத்தின் முதலில் "லோகாயதிகன், 'ப்ருதிவ்யாதிபூதங்கள் நாலினுடைய கூட்டரவாலே சைதந்யமென்று ஒருதர்மம் பிறக்கும்; அதுக்கு உண்டான சுகதுக்கங்கள் ஸ்வர்க்கநரகங்கள்; அவற்றினுடைய பிரிவிலே சைதந்யம் நசிக்கும்; அவ்வருகு ஒன்றுமில்லை' (என்றான்); என்பது அவனுடையசித்தாந்தம்" என்றுதொடங்கிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அருளிச்செய்திருக்கிறார். காட்சியே அளவையாவது - பிரத்யக்ஷம் ஒன்றே பிரமாணமாகுவது. வளி - காற்று. அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றி - பூதங்களினது ஒருவகைக்கூட்டத்தா லுண்டாகி. பிரிவால் மாய்வதாய - அவை தனித்தனிபிரிதலினால் ஒழிவதான. மதுவின்கண் களிப்புப்போல - கள்ளினிடத்தே மதர்ப்புத்தன்மைபோல. "கறந்த பால் முலைப்புகா கடைந்தவெண்ணெய் மோர்புகா, வுடைந்தசங்கி லோசையும் முயிர்களும் முடல்புகா, வடிந்தவே ரடியினி லுதிர்ந்தபூ மரம்புகா, விறந்துபோன மானிட ரினிப்பிறப்ப தில்லையே" என்னும்பாட்டு எந்த மதத்ததாயினும் இறந்த உயிர் பின்பிறவாமையைக் கூறும். ஒருவனாற் செய்யப்படுவது-தெய்வத்தாற்செய்யப்படுவதன்று. தெளிந்து - மெய்ந்நூல் வழக்கென்று நம்பி. மெய்ந்நூற்பொருள்- தத்துவசாஸ்திரஅர்த்தம். ஆசிரியன் - ஆசாரியன்; குரு. வழிபட்டு அன்றி - உபசரித்தல்லாமல். (௮௧)

௨௮௨. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

(இ - ள்.) உள்ளத்தால் உள்ளலும் - (குற்றங்களைத்) தன் நெஞ்சால் கருதுதலும், தீது - (துறந்தார்க்குப்) பாவம்; (ஆதலால்), பிறன் பொருளை - பிறனொருவன்பொருளை, கள்ளத்தால் - (அவன்) அறியாவகையால், கள்வேம் எனல் - வஞ்சித்துக்கொள்வேம் என்று கருதற்க; (எ - று.)

'உள்ளத்தால்' என வேண்டாதுகூறினார், அவருள்ளம் ஏனையோருள்ளம்போலாது சிறப்புடைத்து என்பது முடித்தற்கு. 'உள்ளலும்' என்பது, இழிவுசிறப்பு உம்மை. 'அல்' விகுதி வியங்கோள் எதிர்மறைக்கண் வந்தது.

இவையிரண்டுபாட்டானும், இந்நடைக்குக் களவாவது இதுவென்பதூஉம், அது கடியப்படுவதென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - பு.) கருதற்க - எண்ணுதொழிக. ஏனையோருள்ளம் போலாது - மற்றைஇல்லறத்தார்மனம்போலாகாமல். 'உள்ளத்தால்' என்னும் அவசியமில்லாத பதத்தைப் பிரயோகித்ததற்கு, 'அவருள்ளம் ஏனையோருள்ளம் போலாகாது சிறப்புடைத்து' என்றலாகிய கருத்தைக் கூறினார்; இங்ஙனங் கருத்துக்கூறுவதை வடநூலார் தாத்பரியம் என்பர். உள்ளம் - ஒன்றை நினைத்தற்குக் கருவியாதலால், மூன்றனுருபு - கருவிப்பொருளது. உள்ளலும் என்றஉம்மை, குற்றநினைத்தல்மாத்திரத்தின் இகழ்ச்சியின்மிகுதியை விளக்கிற்று. "பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்" என்பதிற்போல, எனல் - எதிர்மறைவியங்கோள். இந்நடை - அறவறநடத்தை. கடியப்படுவது - விலக்கத்தக்கது. நினைத்தற்கருவியாதலாலும், அகத்துறுப்பாதலாலும், உள்ளமென்று மனத்திற்குப் பெயர். ஏ - தேற்றம். கள்ளம் - தொழிற்பெயர்: வஞ்சனை; கள் - பகுதி, அம் - தொழிற்பெயர்விகுதி. கள்வேம் - தனித்தன்மைப்பன்மைமுற்று. இனி, இத்திருக்குறளுக்கு - பிறன்பொருளையென்பதை மத்திமதீபமாகக்கொண்டு, தவஞ்செய்வோர் தம் உயிரைநாடாமல் உலகப்பொருளை நினைப்பதுங் குற்றம்; அதன்மேலும் அதனை வஞ்சனையாற் கவருதற்கு உடன்பட்டு வாயாற்சொல்லுதல் பெருங்குற்றம்: ஆதலால் அவ்வாறு சொல்லாதொழிக என்று பொருள்கொள்ளினும் அமையும். இனி, இதனை ஒருவாக்கியமாகவேகொண்டு, எனல்என்பதைத் தொழிற்பெயராகவைத்து, பிறன்பொருளைக் கள்ளத்தாற்கள்வோமென்பதை உள்ளத்தால் எண்ணுதலுந் தீதுஎன்று முடித்தலும் ஒன்று. கொள்வோம் என்றும் பாடம். (௮௨)

௨௮௩. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(இ-ள்.) களவினால் ஆகிய ஆக்கம் - களவினால் உளதாகிய பொருள், ஆவது போல - வளர்வதுபோலத் தோன்றி, அளவு இறந்து - தன்எல்லையைக் கடந்து, கெடும்—; (எ-று.)

ஆக்கத்திற்கு ஏதுவாகலின், 'ஆக்கம்' எனப்பட்டது. எல்லையைக்கடந்து கெடுதலாவது - தான்போங்கால், பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்தஅறத்தையும் உடன்கொண்டு போதல். 'அளவறிந்து' என்று பாடமோதி, (அவர்பயன்கொள்ளும்அளவு) அறிந்து (அவ்வளவிற்கு உதவாது)கெடும் என்று உரைப்பாருமுளர்.

(கு - பு.) களவினால் - திருடுதலால். பொருள் - செல்வம். ஆக்கம் - ஆகுதல், அபிவிருத்தி, மேன்மைபெறுதல்; அதற்குக் காரணமான செல்வத்தை ஆக்கமென்றது, காரியவாகுபெயர்: இனி, சம்பாதிக்கப்பட்டது எனச் செல்வத்திற்கு ஆக்கமென்பது காரணப்பெயரெனினும் அமையும்.

போகுங்கால் - அழியும்பொழுது. நிறுத்தி - வைத்துவிட்டு. செய்த - முன் செய்துள்ள. அவர் - களவுசெய்தவர். (அ௩)

௨அ௪. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ-ள்.) களவின்கண் - (பிறர்பொருளை)வஞ்சித்துக்கோடற்கண்ணே, கன்றிய - மிக்க, காதல் - வேட்கை, (அப்பொழுது இனிதுபோலத் தோன்றி), விளைவின்கண் தான் பயன்கொடுக்கும்பொழுது, வீயா - தொலையாத, விழுமம் - இடும்பையை, தரும் - கொடுக்கும்; (எ-று.)

கன்றுதலான் என்றும் அக்களவையே பயில்வித்து அதனாற் பாவமும் பயந்தேவிடுதலின், 'வீயாவிழுமந்தரும்' என்றார்.
இவையிரண்டுபாட்டானும், அதிகடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது.

(கு - பு.) கோடல் - கொள்ளுதல். மிக்க வேட்கை - மிகுந்த ஆசை. தொலையாத இடும்பை - நீங்காத துன்பம். கன்றுதலான் - ஆசை அதிகப்படுதலினால். பயில்வித்து - பழகச்செய்து. அதி கடியப்படுதற்கு - களவு நீக்கப்படுதற்கு. விளைவு - விளைதல்; இத்தொழிற்பெயர், விளையுங் காலத்திற்கு ஆகுபெயர். அவனுக்குக் கொடுக்கும் என்றது அவனுக்குத் தரும் என்றது, இடவழுவமைதி; தொல்காப்பியத்துச் சொல்லதிகாரத்திலே கிளவியாக்கத்தில் "அவற்றுள், தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந், தன்மை முன்னிலை யாயீ ரிடத்த" என்னுஞ் சூத்திரத்தின்படி தன்மைமுன்னிலைகளுக்குரிய தருசொல் அதற்கு மாறாகப் படர்க்கையிடத்துக்கு வந்தமையால இடவழுவாகி "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும், நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கையென்னும், அம்மூ விடத்து முரிய வென்ப" என்னும் பொதுவிதியால் அமைக்கப்படுதலால் வழுவமைதியாயிற்று: "ஏனை யிரண்டு மேனை யிடத்த" என்னுஞ் சூத்திரத்தால், கொடு என்னும் வினை படர்க்கைக்கு உரியதாமாறு உணர்க; [நன் - பொது - ௰.] இதனைக் கீழ்ப் புறங்கூறாமை என்ற அதிகாரத்தில் "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத, லறங்கூறுமாக்கந் தரும்" என்றதன் விசேடவுரையில் 'தரும் என்பது இடவழுவமைதி' எனப் பரிமேலழகர் கூறியதனானு மறிக. (அ௪)

௨அ௫. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(இ-ள்.) அருள் கருதி - அருளினது உயர்ச்சியை அறிந்து, அன்பு உடையர் ஆதல் - (அதன்மேல்) அன்புடையராய் ஒழுகுதல், பொருள் கருதி பொச்சாப்பு பார்ப்பார்கண் - பிறர்பொருளை (வஞ்சித்துக்கொள்ள)க்கருதி (அவரது)சோர்வுபார்ப்பார்மாட்டு, இல் - உண்டாகாது; (எ-று.)

தமக்கு உரிய பொருளையும் அதனது நுகரம் நோக்கித் துறந்துபோந்தவர் பின் பிறர்க்கு உரிய பொருளை நன்குமதித்து அதனை வஞ்சித்துக் கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சியாரானால், அவர்மாட்டு, உயிர்கள்மேல் அருள்செய்தல் நமக்கு உறுதியென்று அறிந்து அவ்வருளின்வழுவாது ஒழுகுந் தெருட்சி கூடாது என்பதாம்.

(கு - பு.) உயர்ச்சி - மேன்மை. அதன்மேல் - அருளின்மேல். சோர்வு - மறந்திருக்குஞ்சமயம். பார்ப்பார் - எதிர்பார்ப்பவர்கள். மருட்சியர் - அறிவுமயக்கமுடையவர். வழுவாது - நீங்காமல். தெருட்சி - அறிவு. பொச்சாப்பு என்னுந் தொழிற்பெயரில், பொச்சா - பகுதி, பு - விகுதி. (அ௫)

௨௮௬. அளவின்கண் நின்றொழுகலாற்றார் களவின்கட்
கன்றிய காதலவர்.

(இ-ள்.) அளவின்கண் நின்று - (உயிர்முதலியவற்றை) அளத்தலாகிய நெறியின்கண் நின்று, ஒழுகல் ஆற்றார் - (அதற்குஏற்ப) ஒழுகமாட்டார்: களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார்; (எ-று.)

உயிர்முதலியவற்றை அளத்தலாவது - காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான், உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய்வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற விளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுள் பிறந்து இறந்து வருதலையும், அதுசெய்யாமல் அவற்றைக்கெடுத்தற்கு உபாயமாகிய யோகஞானங்களையும், அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல்; இதனை ஆருகதர் 'தருமத்தியானம்' என்ப. அதற்கு ஏற்ப ஒழுகுதலாவது - அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றின் நீங்கி நல்லனவற்றின்வழி நிற்றல்.

(கு-பு.) அளத்தல் - ஆராய்ந்து வரையறுத்து அறிதல். நெறியின்கண் - ஞானவழியில். அதற்கு ஏற்ப - ஞானநெறிக்குப் பொருந்த. ஒழுகல்—நடத்தல். அளவைகளான் - பிரமாணங்களைக்கொண்டு. உயிர்ப்பொருளையும்-ஆத்மாவாகியபதார்த்தத்தையும். நல்வினைதீவினைக்குற்றவிளைவு - புண்ணியபாவங்களாகிய கொடிய கருமங்களின் நிகழ்ச்சி; நல்வினை தீவினைக்கு உற்ற விளைவு என்றும் பிரிப்பர். நாற்கதி - மக்கள், தேவர், நரகர், விலங்கு என்னும் நால்வகைப்பிறப்புக்கள்; எழுவகைப்பிறப்புக்களுள் ஒழிந்தமூன்றும் விலங்குகதியில் அடங்குமென அறிக. 'வருதல்' என்றவிடத்து 'வருந்தல்' என்றும் பிரதிபேதம். அதுசெய்யாமல் - பிறப்பு எடாமல். அவற்றை - கருமங்களை. யோகம் - யமம் நியமம் முதலிய எட்டு உறுப்புக்களோடு கூடிய தவம். அவற்றான் - யோகஞானங்களால், அஃது - உயிர். எய்தும் - அடையும். உள்ள ஆறு - உள்ளபடி. ஆருகதர் - அருகனைத்தெய்வமாகக்கொண்டமதத்திலிருப்பவர்; சமணர்: ஜைநர். என்ப - என்றுசொல்வர். களவிற் கருத்துடைய துறவறத்தார் ஞானநெறியிலொழுகார் என்பது இதன்கருத்து. (௮௬)

௨௮௭. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(இ-ள்.) களவு என்னும் - களவு என்று சொல்லப்படுகின்ற, காரறிவு ஆண்மை - இருண்ட அறிவினையுடையராதல், அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் - (உயிர் முதலியவற்றை) அளத்தலென்னும் பெருமையை விரும்பினார்கண், இல் - இல்லை; (எ-று.)

இருள் - மயக்கம். காரியத்தைக் காரணமாக உபசரித்து 'களவென்னுங் காரறிவாண்மை' என்றும், காரணத்தைக் காரியமாக்கி 'அளவென்னு மாற்றல்' என்றுங் கூறினார்.

களவுந்துறவும் இருளும்ஒளியும்போலத் தம்முள்மாறுகலின் ஒருங்கு நில்லா என்பது, இவைமூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு-பு.) காரறிவாண்மை - அஜ்ஞானத்தை ஆளுகை. ஆண்மை - ஆளுந்தன்மை; ஆளென்னும் வினைப்பகுதியின்மேல் வந்த பண்புப்பெயர். அளத்தலென்னும் பெருமை - மேற்சொல்லியவாறு ஆராய்தலென்கிற வல்லமை. 'களவென்னுங் காரறிவு' என்றதில், காரறிவு - காரணம்: களவு - காரியம்; அளவென்னு மாற்றல் என்றதில், அளவு - காரணம்: ஆற்றல் -

காரியம்: என்னெனில், காரறிவினாற் களவுசெய்தலும், அளத்தலினாற் பெருமையுண்டாதலுங் கூடுதலா லென்க. களவுக்குக்காரணமான காரறிவாண்மையைக் களவென்னுங்காரறிவாண்மை யென்றும், அளத்தலினாலாகிய ஆற்றலை அளவென்னுமாற்ற லென்றுங் கூறியது உபசாரவழக்கெனக் காண்க. தம்முள் மாறு - தமக்குள் விரோதி. ஒருங்குநில்லா - ஓரிடத்திற் சேர்ந்துநிற்கமாட்டா. (௮௭)

௨௮௮. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(இ - ள்.) அளவு அறிந்தார் நெஞ்சத்து - அவ் வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து, அறம் போல - அறம் (நிலைபெற்றாற்)போல, நிற்கும் - நிலைபெறும்: களவு அறிந்தார் நெஞ்சில் - களவையே பயின்றவர் நெஞ்சத்து, கரவு - வஞ்சனை ; (எ - று.)

உயிர்முதலியவற்றை அளந்து அறிந்தார்க்குத் துறவறஞ் சலியாது நிற்கும் என்பது அவ்வுவமையாற் பெற்றாம்.

களவோடு மாறின்றிநிற்பது, இதனாற் கூறப்பட்டது.

(கு - பு.) அவ்வளத்தலையேபயின்றவர்நெஞ்சத்து - தத்துவஆராய்ச்சியையே பழகியவரது மனத்தில். அறம்- துறவறம். சலியாது-அசையாமல்; மாறுபடாமல். மாறின்றிநிற்பது - வேறுபடாமற் கூடியிருப்பது; அது, வஞ்சனை. (௮௮)

௨௮௯. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

(இ - ள்.) அளவு அல்ல - அவ் வள வல்லாத தீயநினைவுகளை, செய்து - நினைத்து, ஆங்கே - அப்பொழுதே, வீவர் - கெடுவர்: களவு அல்ல மற்றைய தேற்றாதவர்- களவல்லாத பிறவற்றை அறியாதவர் ; (எ - று.)

தீய நினைவுக ளாவன - பொருளுடையாரை வஞ்சிக்குமாறும்,அவ்வஞ்சனையால் அதுகொள்ளுமாறும், கொண்டவதனால் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்தலும் செய்த லாகலின் 'செய்து' என்றும், அஃது உள்ள அறங்களைப் போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்கு மாகலின் 'ஆங்கேவீவர்' என்றுங் கூறினார். மற்றையவாவன - துறந்தார்க்கு உணவாக ஓதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார்செய்யுந் தானங்களுமாம். தேற்றாமை- அவற்றையேநுகர்ந்து அவ்வளவால் நிறைந்திருத்தலை அறியாமை.

இதனான், கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

(கு-பு.) அவ்வளவல்லாத - அந்தத் தருமத்தியான மொழிந்த.பிறவற்றை-மற்றைநல்வழிகளை. அதுகொள்ளுமாறும்-அப்பொருளைக் கைக்கொள்ளும்விதமும். கொண்டவதனால்தாம்புலன்களை நுகருமாறும்- அப்படிகொள்ளையிடப்பட்டபொருளினால் தாம் பஞ்சேந்திரியவிஷயசுகங்களைஅனுபவிக்கும்விதமும். "தன்னெஞ்சம்,நடுவொரீஇ யல்லசெயின்" என்றவிடத்துப்போல, தீச்செயல்களைச்செயநினைத்தலை'செய்தல்'என்றார்; நினைத்தலும்செய்தலோடு ஒக்குமாதலின். அஃது - அந்தத் தீயநினைப்பு. கரந்த சொற் செயல்களைப் புகுவித்து - வஞ்சனையான சொல்லையுந் தொழிலையும் உண்டாகச்செய்து. கெடுக்கும் - அந்நினைவுடையாரை அழிக்கும். அவற்றையேநுகர்ந்து - காய் கனி முதலியவற்றையே உண்டு. நிறைந்திருத்தல் - திருப்தியடைந்திருத்தல். கள்வார் - திருடுபவர். களவல்ல மற்றைய தேற்றாதவர் - களவொன்

றையே அறிந்தவ ரென்றபடி. அளவல்ல என்றது - அக்களவின் உபாயம் வழி பலன் முதலிய வகைகளை. ஆங்கே என்ற ஏகாரம், தவறாமல் வீவரென்பதை விளக்கிற்று. அல்லஎன்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது-எதிர்மறைப்பலவின்பாற்குறிப்பு வினையாலணையும்பெயர்; பின்னதைக் குறிப்புப்பெயரெச்சமாகவும், வினையாலணையும்பெயராகவுங் கொள்ளலாம். மற்றைய - இடைச்சொல்லடியாகப்பிறந்த பலவின்பாற்பெயர். தேற்றாமை யென்னும் வினையைத் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவென்றாயினும், தன்வினைப் பொருளில் வந்த பிறவினை யென்றாயினும், தேறாமையென்பதன் விரித்தல் விகாரமென்றாயினும் இங்குக் கொள்ளவேண்டும்; "நகச்சொல்லி, நட்பாடல் தேற்றா தவர்" எனக் கீழ் இந்நூலிலும், "தேற்றாவொழுக்கம்" என நாலடியாரிலும், "கடியு, மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை" எனக் கலித்தொகையிலும், "தேற்றாய் பெருமநின் பொய்யே" எனப் புறநானூற்றிலும், "வாளினாற் பேசி னல்லால் வாயினாற் பேசல் தேற்றேன்" எனச் சிந்தாமணியிலும் இவ்வாறு காண்க. (௮௯)

௨௯௦. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(இ-ள்.) கள்வார்க்கு - களவினைப் பயில்வார்க்கு, உயிர்நிலை - (தம்மின் வேறல்லாத) உடம்பும், தள்ளும் - தவறும்; கள்ளார்க்கு - அதைச்செய்யாதார்க்கு, புத்தேள் உலகு - (நெடுஞ்சேணதாகிய) புத்தேளுலகும், தள்ளாது - தவறாது; (எ-று.)

உயிர் நிற்றற்கு இடனாகலின், 'உயிர்நிலை' எனப்பட்டது. சிறப்பு உம்மைகள் இரண்டும், விகாரத்தால் தொக்கன. இம்மையினும் அரசனால் ஒறுக்கப்படுதலின் 'உயிர்நிலையுந் தள்ளும்' என்றும், மறுமையினும் தேவராதல் கூடுதலின் 'புத்தேளுலகுந் தள்ளாது' என்றுங் கூறினார். "மற்றது, தள்ளினுந் தள்ளாமைநீர்த்து" என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதல் அறிக. இதற்குப் பிறவாறு உரைப்பாருமுளர்.

இதனால், இருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

(கு-பு.) தம்மின் வேறல்லாத - தம்மோடு கூடிநின்ற. தவறும்- குறையும்; அல்லது, ஒழியும். அது-களவு. நெடுஞ்சேணதாகிய - தம்மின் வேறுபட்டு வெகுதூரத்திலிருக்கிற. புத்தேளுலகு- தேவலோகம். சிறப்பும்மைகள்- உயிர்நிலையும், புத்தேளுலகும் என முறையே இழிவுஉயர்வுசிறப்புப்பொருள்களைத்தரும்உம்மைகள். அவைதொக்கது- செய்யுள்விகாரம். இம்மையினும்- இப்பிறப்பிலும். ஒறுக்கப்படுதலின் - தண்டிக்கப்படுதலால். "மற்றது" என்னும் மேற்கோள்-இந்நூலின் அறுபதாம்அதிகாரத்தில் ஆறாம்பாட்டி லுள்ளது; உயர்ச்சி(விதிவசத்தால் கைகூடாமல்)தவறிப்போனாலும்(அவ்வுயர்ச்சியைப் பெறவேண்டுமென்னும் எண்ணம்) தவறாமைத் தன்மையுடையது என்றபொருள். என்புழியும் - என்னுமிடத்தும். இப்பொருட்டு - தவறுதலென்னும் பொருளையுடையது. இருவர்பயன்- கள்வாரது பயனும், கள்ளாதவரது பயனும். களவுசெய்யக்கருதுபவர் இம்மையில் இராசதண்டனையும் மறுமையில் நரகவேதனையும் பெறுவர்; கள்ளாதவர் அவற்றைப்பெறாமல் இராசமரியாதையையும் சுவர்க்கஇன்பத்தையும் பெறுவர் என்பது இதன்கருத்து. 'கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை' என்றதனால் 'கள்ளார்க்கு உயிர்நிலை தள்ளாது' என்பதும், 'கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு' என்றதனால் 'கள்வார்க்குப் புத்தேளுலகு தள்ளும்' என்பதும் அருத்தாபத்தி வகையால் அமைக்கப்பட்டன. 'இதற்குப் பிறவாறு உரைப்பாருமுளர்' என்றதனால்,

கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் என்பதற்கு - திருடுமவர்களுக்குப் புகழுடம்பு விட்டு விலகு மென்றும், திருடர்க்குப் பிராணாயாமமுதலிய யோகவுறுப்புக்கள் கைகூடாவென்றும், கள்ளர்க்கு இம்மையிற் சீவனம்மாத்திரமே இயலினும் இயலும் [மறுமையின்பமோ இயலாது] என்றும்; கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு என்பதற்கு - திருடாதவர்களுக்குப் புண்ணியம் ஒழியாதாதலால் அவர்களைத் தேவலோகம் ஒருபொழுதும் நீக்காது என்றும் உரைகொள்ளலாம். கள்வார், வ் - பெயரிடைநிலை. (௯0)

௩0 - ம் அதி.—வாய்மை.

அஃதாவது - மெய்யினது தன்மை. பெரும்பான்மையுங் காமமும்பொருளும்பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது, கூடாவொழுக்கங் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

(கு-பு.) வாய்மை - பண்புப்பெயர்; சத்தியம். நிகழ்வது - உண்டாவது. காமம்பற்றிய கூடாவொழுக்கமும் பொருள்பற்றிய களவும் ஆகிய இரண்டின் குற்றத்தையுங் கூறியபின் அந்தக் காமம் பொருள் என்னும் இரண்டு பற்றியும்உண்டாகிற பொய்யின் குற்றத்தைக் கூறுவது அதிகாரமுறைமை.

௨௯௧. வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(இ-ள்.) வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மையென்று சிறப்பித்துச்சொல்லப்படுவது யாதென்று வினவின், (அது), யாது ஒன்றும் தீமை இலாத சொலல் - (பிறிதோருயிர்க்குத்) தீங்கு சிறிதும்பயவாத சொற்களைச் சொல்லுதல்; (எ - று.)

தீமை யாதொன்றும் இலாத என இயையும். 'எனப்படுவது' என்பது, "ஊரெனப்படுவ துறையூர்" என்றாற்போல நின்றது. இதனான், நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது; அதுதானும், தீங்குபயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பின் பொய்ம்மையாம் என்பது கருத்து.

(கு-பு.) யாது - எது. வினவின் - கேள்விகேட்டால். பயவாத - தராத. நின்றது - சிறப்புத்தோன்றநின்றது. பயப்பின் - தீங்குவிளைத்தால். உள்ளதை உள்ளபடி சொல்லுதல் மாத்திரமே மெய்ம்மையாகாது; பிறர்க்கு நன்மைபயக்கும் நிகழ்ந்ததுகூறலும் தீங்குதாராத நிகழாததுகூறலுமே மெய்ம்மையா மென்றபடி. இலாத - பெயர். நிகழ்ந்ததுகூறல் - யதார்த்தவாதம்.

௨௯௨. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(இ - ள்.) புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - (பிறர்க்குக்) குற்றந்தீர்ந்த நன்மையைப் பயக்கு மாயின், பொய்ம்மையும் - பொய்ம்மைச் சொற்களும், வாய்மை இடத்த - மெய்ம்மைச்சொற்களின்பாலவாம்; (எ-று.)

குற்றந்தீர்ந்த நன்மை - அறம். அதனைப் பயத்த லாவது - கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றதோர் உயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனின்நீங்கி இன்புறுதல். நிகழாததுகூறலும், நன்மைபயவாதாயின் பொய்ம்மையாம், பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து.

இவையிரண்டுபாட்டானும், 'தீங்குபயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மைபயக்கும் நிகழாததுகூறலும் மெய்ம்மை' எனவும், 'நன்மைபயவாத நிகழாதது கூறலும், தீங்குபயக்கும் நிகழ்ந்ததுகூறலும் பொய்ம்மை' எனவும் அவற்றது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - பு.) குற்றந்தீர்ந்த நன்மையைப் பயக்கும் - பழிபாவங்களைத் தாராததருமத்தைக் கொடுக்கும். மெய்ம்மைச்சொற்களின்பால-சத்தியவார்த்தைகளிற் சேர்ந்தன. கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றது - கெடுதியையாவது மரணத்தையாவது அடையநின்றதாகிய. அதனின்-அத்துன்பத்தினின்றும். நிகழாததுகூறல் - நடவாததைச்சொல்லுதல். நிகழாதது கூறுதல்மாத்திரமே பொய்ம்மையாகாது; பிறர்க்குத் தீமைபயக்கும் நிகழாததுகூறலும் நன்மைபயவாத நிகழ்ந்ததுகூறலுமே பொய்ம்மையா மென்றபடி. பொய்ம்மை யென்னும் பால்பகா வஃறிணைப்பெயர், அன் சாரியை பெறாத இடத்த' என்னும் பலவின்பால்முற்றைக்கொண்டது. இங்ஙனங் கூறியது, 'மணங் கூட்டுவிக்கும்பொருட்டும், ஊடலைத்தீர்க்கும்பொருட்டும். உயிர்க்கொலையை விலக்கும்பொருட்டும், எல்லாப்பொருளையும் இழத்தலினின்றும் நீங்கும்பொருட்டும்,மற்றுஞ் சில நன்மையின்பொருட்டும் பொய்சொன்னாலுஞ் சொல்லலாம்' என்னும் நாற்றுணியை உட்கொண்டு. "மெய்ம்மையே யுறுவர்க் குற்ற விபத்தினை மீட்கு மாகிற், பொய்ம்மையு மெய்ம்மை போலப் புண்ணியம் பயக்கு மாதோ" என்னும் மகாபாரதத்தையும் அறிக. இறையனாரகப்பொருளுரையில் நக்கீரர், பழியும்பாவமும் பயவாத பொய் பொய்யாகா தென்பதற்கு இத்திருக்குறளையே மேற்கோளாகக் காட்டினார். (௯௨)

௨௯௩. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(இ - ள்.) (ஒருவன்), தன் நெஞ்சு அறிவது - தன்னெஞ்சு அறிவது ஒன்றனை, பொய்யற்க - (பிறர் அறிந்திலர் என்று) பொய்யாதொழிக; பொய்த்த பின் - பொய்த்தானாயின், தன் நெஞ்சே - (அதனை அறிந்த) தன்னெஞ்சே, தன்னை சுடும் - (அப்பாவத்திற்குக் கரியாய்நின்று) தன்னை (அதன்பயனாய) துன்பத்தை எய்துவிக்கும்; (எ - று.)

நெஞ்சுகரியாதல் "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார், தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு,ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவா, நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின" என்பதனாலும் அறிக.

பொய் மறையாமையின் அது கூறலாகாது என்பது; இதனாற் கூறப்பட்டது.

(கு - பு.) பொய்யாது - மறைத்துப்பொய்சொல்லாமல். பொய்த்தானாயின் - பொய்சொன்னால். கரி - சாட்சி. எய்துவிக்கும் - அடையச்செய்யும். சுடும்-வருத்து மென்றபடி. "கண்டவரில்லென" என்னும் மேற்கோள்-கலித்தொகை, நெய்தற்கலி, (அ) ம் பாட்டிலுள்ளது; (இதற்குப்பொருள்.) உணராதார் - அறியாதவர்கள், தங்காது - (தம்மனம் இது செய்யலாகாதென்று) மீளாதே, தகைவு இன்றி - வேறுவிலக்குவாருமில்லாமல், உலகத்துள் கண்டவர் இல் என - உலகத்திற் கண்டவர்களும் இல்லையென்று கருதி, தாம் செய்யும் - தாங்கள் செய்கிற, வினைகளுள் - தீவினைகளுள், நெஞ்சு அறிந்த கொடியவை - தாம் நெஞ்சறியவேசெய்த கொடிய தீவினைகளை, மறைப்பவும் - (பின்பு பிறரறியாமல்) மறைந்தார்களாயினும், அறியவர் நெஞ்சத்தின் குறுகிய கரி இல்லை - தாம்செய்தமையை அறிந்திருக்கின்றவர்கள்தம்முடைய நெஞ்சத்திற்காட்டில் அணுகிய சாட்சி வேறு இல்லை, ஆகலின் - ஆகையினால்; (என்றவாறு.) 'அறிபவர்' என்றவிடத்து 'மறையாவாம்' என்று பரிமேலழகருரையின் பாடம். அறிவது- எதிர்காலவினையா

லையும்பெயர். ஒருவன் தன் மனச்சாட்சிக்கு மாறாகப் பொய்கூறலாகாது; கூறினால் பின்பு தானே பச்சாத்தாபமடைதற்குக் காரணமாதலால் என்பது இதன்கருத்து. (௯௩)

௨௯௪. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(இ - ள்.) (ஒருவன்), உள்ளத்தால் - (தன்) உள்ளத்திற்கு ஏற்ப, பொய்யாது - பொய்கூறாது, ஒழுகின் - ஒழுகுவானாயின், (அவன்), உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் - உயர்ந்தோர் உள்ளத்தின்கணெல்லாம், உளன் - உளனாம்; (எ - று.)

'உள்ளத்தால்' என்பது, வேற்றுமைமயக்கம். பொய்கூறாது ஒழுகுதலாவது - மெய்கூறி ஒழுகுதல். அவனது அறத்தினது அருமைநோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பர் என்பதாம்.

இதனான், இம்மைப்பயன் கூறப்பட்டது.

(கு - பு.) உள்ளம் - மனம். உள்ளத்தால் என்பதில் கருவிகருத்தாப்பொருள்களில் வருதற்குஉரிய ஆலென்னும் மூன்றாம்வேற்றுமையுருபு கொள்ளுதற்பொருட்குஉரிய நான்காம்வேற்றுமையின் பொருளில் வந்ததனால் வேற்றுமைமயக்கம். மெய்ம்மையேபேசுபவன் உயர்ந்தோரெல்லாராலும் நன்குமதிக்கப்படுவா னென்பது இதன்கருத்து. இம்மைப்பயன் - இம்மையிலடையும் பயன். 'உள்ளத்தாற்பொய்யாது' என்றதனால், அறவறத்தார்க்குவாய்மை பொய்சொல்லக்கருதாமை யென்று ஆகும். (௯௪)

௨௯௫. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ - ள்.) மனத்தொடு வாய்மை மொழியின் - (ஒருவன்) தன்மனத்தோடு (பொருந்த) வாய்மையைச் சொல்வானாயின், தவத்தொடு தானம் செய்வாரின் தலை - (அவன்) தவமுந்தானமும் ஒருங்குசெய்வாரினுஞ் சிறப்புடையன்; (எ - று.)

மனத்தொடு பொருந்துதல் - மனத்திற்கு ஏறுதல். புறமாகிய மெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத்து என்பதாம்.

(கு - பு.) ஏறுதல் - ஒத்திருத்தல். புறமாகிய மெய்யால் - வெளியாகிய உடம்பினால். அகமாகிய - உள்ளுறுப்பாகிய. துறவறத்திற்குச் சிறத்தலால் தவமும், இல்லறத்திற்குச் சிறத்தலால் தானமும் கூறினார். மனப்பூர்வமாக மெய்யையே பேசுபவன் இல்லறத்தார் யாவரினும் அறவறத்தார் யாவரினும் உத்தம னென்பது இதன்கருத்து. (௯௫)

௨௯௬. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(இ - ள்.) பொய்யாமை அன்ன புகழ் இல்லை - (ஒருவனுக்கு இம்மைக்குப்) பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணம் இல்லை; எய்யாமை எல்லா அறமும் தரும் - (மறுமைக்கு) மெய்வருந்தாமல் (அவனுக்கு) எல்லா அறங்களையும் (தானே) கொடுக்கும்; (எ - று.)

புகழ் - ஈண்டு, ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றானும், துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற்றானும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள்புகுதாமல் அவ்விருவகைப்பயனையுந் தானேதரும் என்பார், 'எய்யாமையெல்லாவறமுந் தரும்' என்றார்.

(கு - பு.) புகழ்க்காரணம் - புகழுக்கு ஏது. புகழ் என்பது - அதன் ஏதுவைக் குறித்தலால், காரியவாகுபெயர். மெய்வருந்தாமல் - உடம்பு வருத்தப்படாமல். ஈண்டு - இங்கே. பொருள்கூட்டல்-திரவியசம்பாதனம். அன்றே - தேற்றம். பொய்யாமை - எதிர்மறைத்தொழிற்பெயர். எய்யாமை - எதிர்மறைவினையெச்சம். உம்மை - முற்றுப்பொருளது. இனி, "எய்யாமையே யறியாமையே" என்று தொல்காப்பியனார் 'எய்யாமையென்னு முரிச்சொல் அறியாமையையுணர்த்தும்' என்று கூறியிருத்தலால், பொய்யாமையாகிய அறம் ஒன்றுதானே ஒருவனுக்கு மற்றைஅனைத்தறங்களின்பயனையும் எவருமறியாதபடி தானேகொணர்ந்துகொடுக்கு மென்றும் உரை கூறலாம். (௯௬)

௨௯௭. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ - ள்.) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - (ஒருவன்) பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்லனாயின், அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று - (அவன்) பிறஅறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று; (எ - று.)

அடுக்கு இரண்டனுள், முதலது - இடைவிடாமைமேற்று; ஏனையது - துணிவின் மேற்று. 'பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்குஅருமையாற்சில தவறின் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின்பயனையுந் தானேதரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறாமற்செய்தல் நன்று' என்பார், 'செய்யாமைசெய்யாமைநன்று' என்றார். இதனை இவ்வாறு அன்றி, 'பொய்யாமையைப் பொய்யாமற் செய்யின் பிறஅறஞ்செய்கை நன்று' எனப் பொழிப்பாக்கி, 'பொய்கூறின் பிறஅறஞ்செய்கை நன்றாகாது' என்பது அதனாற்போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர்.

பிறஅறங்களெல்லாந் தரும் பயனைத் தானே தரும் ஆற்றலுடைத்து என மறுமைப்பயனது மிகுதி, இவைமூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - பு.) பொய்யாமை - பொய்கூறாமை. முதலது - பொய்யாமை. மேற்று - அப்பொருளின் மேலது. ஏனையது - மற்றையது; செய்யாமை செய்யாமை என்பது. இவை, பொருள்நிலையடுக்கு. மேற்கொண்டு - செய்யத்தலைப்பட்டு. தரவற்றாய - கொடுக்கவல்லதான. பொய்யாமல் - தவறாமல். இரண்டாமுரைக்கு, செய்யாமை செய்யாமை - செய்யாமையைச் செய்யாமை; செய்தல் என்று பொருள்: இரண்டு எதிர்மறை உடன்பாடுணர்த்திற்று. பொழிப்பு - தொகைப்பொருள். போந்த - கிடைத்த. (௯௭)

௨௯௮. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(இ - ள்.) புறம் தூய்மை - (ஒருவனுக்கு) உடம்பு தூய்தாந்தன்மை, நீரான் அமையும்-நீரானே உண்டாம்; (அதுபோல), அகம்தூய்மை - மனம் தூய்தாந்தன்மை, வாய்மையால் காணப்படும் - வாய்மையான் உண்டாம்; (எ - று.)

காணப்படுவது உள்ளதாகலின், 'உண்டாம்' என்று உரைக்கப்பட்டது. உடம்புதூய்தாதல் - வாலாமைநீங்குதல். மனம்தூய்தாதல் - மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணம் இல்லாதாற்போல அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணம் இல்லை என்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டுதூய்மையும் வேண்டுமென்பதூஉம் பெற்றாம்.

(கு - பு.) தூய்தாந்தன்மை - பரிசுத்தமாகுதல். வாலாமை - அசுத்தி; அழுக்கு. மனம் தூய்தாதல் - அறியாமை நீங்குதல். மெய்யுணர்தலாவது - பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையா லறிதல்; இதனை வடநூலார் தத்வஞான மென்பர். இரண்டு தூய்மை - புறந்தூய்மையும், அகந்தூய்மையும். (௯அ)

௨௯௯. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(இ - ள்.) எல்லா விளக்கும் - (புறத்திருள்கடியும்) உலகத்தார்விளக்குக்கள் எல்லாம், விளக்கு அல்ல - விளக்காகா; சான்றோர்க்கு-(துறவான்) அமைந்தார்க்கு, (விளக்காவது), பொய்யா விளக்கே விளக்கு - (மனத்து இருள்கடியும்) பொய்யாமையாகிய விளக்கே விளக்காம்; (எ - று.)

உலகத்தார்விளக்காவன - ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாத இருள் போகலின், 'பொய்யாவிளக்கே விளக்கு' என்றார். அவ்விருளாவது - அறியாமை. 'பொய்யாதவிளக்கு' என்பது, குறைந்து நின்றது; பொய்கூறாமையாகிய விளக்கு என்றவாறு. இனி, இதற்கு - (கல்வி முதலியவற்றான் வரும்) விளக்கமெல்லாம் விளக்கமல்ல; அமைந்தார்க்கு (விளக்கமாவது) பொய்யாமையான்வரும் விளக்கமே விளக்கம் என்றுஉரைப்பாருமுளர்.

(கு - பு.) புறத்து இருள்கடியும் - வெளியிருளைப்போக்குகின்ற. உலகத்தார் விளக்குக்கள்-சூரியன், சந்திரன், அக்கினி யென்னும் முச்சுடர்கள்; பொருள்களை விளங்கச்செய்வதனால், விளக்கு என்று பெயர். துறவான் அமைந்தார் - துறவறவொழுக்கத்தான் மிக்கவர். மனத்திருள் - அஜ்ஞானம். ஞாயிறு - சூரியன். திங்கள் - சந்திரன். பொய்யா- ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். விளக்கம் - ஒளி, புகழ், தெளிவு. வீரசோழியவுரையில் இடையினவெதுகைக்கு இக்குறள் உதாரணம். (௯௯)

௩00. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

(இ - ள்.) யாம் மெய் ஆ கண்டவற்றுள்- யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், எனைத்து ஒன்றும் - யாதொருதன்மையானும், வாய்மையின் நல்ல பிற - வாய்மையின் மிக்கனவாகச்சொல்லப்பட்ட பிற அறங்கள், இல்லை—; (எ - று.)

மெய் உணர்த்துவனவற்றை 'மெய்' என்றார். அவையாவன - தங்கண் மயக்கம் இன்மையின் பொருள்களை உள்ளவாறு உணரவல்லராய்க் காமவெகுளிகள் இன்மையின் அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர் அருளான் உலகத்தார்உறுதியெய்துதற்பொருட்டுக் கூறிய ஆகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃது ஒப்பமுடிந்தது என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது.

(கு - பு.) தத்துவமுணர்த்தும் நூல்களை 'மெய்' என்றது, காரியவாகுபெயர். இறைவர் - கடவுள். உறுதியெய்துதற்பொருட்டு - நன்மை பெறும் பொருட்டு. அவையெல்லாவற்றினும் இஃது ஒப்பமுடிந்தது - அந்த ஆகமங்களெல்லாவற்றிலும் வாய்மையே மிக்கநலமுடையதென்பது ஒத்திருந்தது. இவ்வறம் - மெய்ம்மையாகிய தருமம். தலைமை-உயர்வு. (௩00)

கச்சியப்பசிவாசாரியசுவாமிகள்.

இந்தக் கந்தபுராண நூலாசிரியராகிய கச்சியப்பசிவாசாரியசுவாமிகள், தொண்டைநாட்டிலே காஞ்சீபுரத்திலே * ஆதிசைவர்குலத்திலே காளத்தியப்பசிவாசாரியரென்னுங் குமரகோட்டத்தருச்சகர் அக்கோட்டத்திலெழுந்தருளியுள்ள சுப்பிரமணியக்கடவுளை விதிப்படி வழிபட்டுப் புத்திரபாக்கியத்தின்பொருட்டு நோற்ற நோன்பின் பயனாய் அவரது மனைவியாரிடம் அருமையாக அவதரித்தவர். இவர் இளம்பிராயத்திலேயே நல்லாசிரியர்பக்கல் தென்மொழியில் தொல்காப்பியம்முதலிய அரியபெரிய இலக்கண நூல்களையும் பழையசங்கச்செய்யுட்களையும் அக்காலத்து வழங்கிய மற்றையிலக்கியநூல்களையும் ஐயந்திரிபுஅற ஓதிஉணர்ந்து, இங்ஙனமே வடமொழியிலும் வேதம் வேதாங்கம் வேதாந்தம் முதலிய சகல கலைகளிலும் வல்லவராய், பின்பு தமது சைவசமயசம்பிரதாயத்துக்கு உரிய தமிழ்வேதமாகிய தேவாரதிருவாசகங்களையும் சைவாகமங்களையுங் கற்றறிந்து அவற்றின் அரும்பொருளிலேயே ஆழ்ந்த கருத்தை யுடையராய், அன்பு அருள் வாய்மை அடக்கம் பொறுமை முதலிய நற்குணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்று, கல்வி அறிவு ஒழுக்கங்களினால் மாத்திரமேயன்றிச் சிவஞானசிவபக்திகளினாலுஞ் சிறப்புற்று விளங்கி, குமரகோட்டத்து முருகக்கடவுளை மெய்யன்போடு விதிமுறைவழுவாது பூசைசெய்துவந்தார். வருகிறநாட்களில் ஒருநாள் இரவில் அக்கடவுள் இவரது சொப்பனத்திலே தோன்றி 'அன்பனே! ஸ்காந்தபுராணத்தின் ஆறுசங்கிதைகளுள் சங்கரசங்கிதையின் முதற்கண்டமாகிய சிவரகசிய கண்டத்திலே யுள்ள நமதுசரித்திரத்தைக் கந்தபுராணமெனப்பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாக நீ பாடக்கடவாய்' என்று கட்டளையிட்டு, "திகட சக்கரச் செம்முக மைந்துளான்" என்று அடியெடுத்துக்கொடுத்து மறைந்தருளினார். உடனே சிவாசாரியர் விழித்தெழுந்து கடவுளது கருணைத்திறத்தையும்கனாநிகழ்ச்சியையும் நினைந்துநினைந்து நெஞ்சம்நெக்குநெக்குஉருகி, மறுநாளிலே நித்தியகருமமுடித்துச் சுப்பிரமணியபூசையுஞ்செய்தபின் புராணம் பாட ஆரம்பித்து, நாள்தோறும் நூறுசெய்யுள்பாடி அவற்றைஎழுதிய ஏடு எழுத்தாணிகளை இராத்திரி காலபூசைமுற்றியபின் அக்கோட்டத்துக் குமரக்கடவுளது திருவடியின்கீழேயே வைத்துவிட்டுப்போய், மறுநாளுதயத்திற் பூசைக்குவரும்பொழுது அவ்வேடுகளை எடுத்துப்பார்த்து அவற்றிற்கடவுள்செயலாகச்செய்யப்பட்டிருக்குஞ் சிலதிருத்தப்பாடுகளைக் கண்டு சிரமேற்கொண்டு சிலாகித்துப் பேரானந்தபரவசராவர். இவ்வாறேஆசாரியர் ஏறக்குறைய மூன்றரைமாதத்திலே பதினாயிரத்து முந்நூற்றுச்சில்லறை செய்யுட்களாற் புராணத்தைப்பாடிமுடித்து, அதன்பின் அந்தக்குமரகோட்டத்திலேயே பலஅரசர்களையும் அநேகபிரபுக்களையும் அளவிறந்த தென்மொழிவடமொழிப்பண்டிதர்களையும் மற்றும் பற்பல சைவசமயநெறிவல்லாரையும் வரவழைத்து அவர்கள்முன்னிலையிலே சுப்பிரமணியசுவாமிசன்னிதானத்திலே நாள்தோறும் புராணத்தைப் படித்துப் பொருள்சொல்லி

* ஆதிசைவராவார் - சிருஷ்டிகாலத்திலே அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியினுடைய சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும் ஐந்துதிருமுகங்களினின்றுந் தோன்றிய கௌசிகர், காசியபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் ஐந்துருஷிகளின் கோத்திரத்திலே பிறந்த சிவப்பிராமணர்கள்; இதனை "அரியசதா சிவனென்போ னநாதிசைவ னவன்பா லவதரித்த சிவமறையோ ராதிசைவர்" என்பதனாலும் அறிக: இவர்கள்தாம் சைவாலயங்களிற் பூசனைபுரியுங் குருக்களெனப்படுபவர்.

அதில் அவரவர்கேட்கும் ஆக்ஷேபங்களுக்கெல்லாந் தக்கவிடையைத் தவறாமல் உடனேஅளித்து அவர்கள்வாயை அடக்கிவந்து, இங்ஙனமே பலருங்கேட்டுப்பெருவியப்படையுமாறு ஒருவருஷகாலத்தில் நூலை அரங்கேற்றிமுடித்தருளினார்.

இந்நூலாசிரியர் இந்நூலை அரங்கேற்றத்தொடங்கி விநாயகர்காப்பும் இரிபுடைச்செய்யுளும் ஆகிய "திகட சக்கரச் செம்முக மைந்துளான், சகட சக்கரத் தாமரை நாயக, னகட சக்கர விண்மணி யாவுறை, விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்" என்னும் முதல் விருத்தத்தை வாசித்து, 'திகழ் தசக் கரச் செம் முகம் ஐந்து உளான்' என்று எடுத்து, 'விளங்குகின்ற பத்துத்திருக்கைகளையும் செவ்விய ஐந்துதிருமுகங்களையு முடைய சிவபெருமானது' என்று பொருளருளிச்செய்கையில் அங்கிருந்ததமிழ்ப்புலவர்களிலொருவர் எழுந்து 'சுவாமிகாள்! திகழ் தச என்பது திகடச எனப் புணர்தற்கு விதி தொல்காப்பியம்முதலிய இலக்கண நூல்களுள் ஒன்றிலாயினும் இல்லையே' என்று ஆக்ஷேபிக்க, ஆசாரியர் 'ஒக்கும்; ஆயின் இம்முதலடி என்வாக்கன்று: குமாரசுவாமி எனக்குக் கனவிலேதோன்றிப் புராணம் பாட அடியெடுத்துக்கொடுத்த திருவாக்காகும்' என்றுகூற, புலவர் அவ்விரகசியத்தை விசுவசித்துஅங்கீகரியாமல் 'அறுமுகக்கடவுள் அடியெடுத்துக்கொடுத்ததற்குச் சான்றாவது, இவ்வித ழகரதகரப்புணர்ச்சிக்கு யாதாயினுமோரிலக்கண நூல்விதியாவது இரண்டிலொன்றுஇன்றியமையாமல்வேண்டும்' என்றுசொல்லி அரங்கேற்றற்குத் தடைசெய்ய, ஆசிரியர் 'இவ்விரண்டிலொன்று நாளைக்காட்டப்படும்' என்றுசொல்லிச் சபையோரை அவ்வளவோடு அனுப்பிவிட்டு, அன்றைக்குத் திருவமுதுசெய்யாமற் பெருங்கவலையுடனே இராத்திரி கோயிலிலே தரையிலே கடவுளைத் துதித்துக்கொண்டு சயனித்திருக்கையில், சண்முகமூர்த்தி கனவிலேவந்து 'அடியவனே! கவலையொழி; நாளைக்குப் புலவனொருவன் புதியவனாய்ச் சபையிலேவந்து இந்தப்புணர்ச்சிக்கு வீரசோழியமென்னும் இலக்கண நூலிலிருந்து விதியெடுத்துக்காட்டிப்போவன்' என்றுதிருவாய்மலர்ந்தருளி மறைந்து, அவ்வாறே மற்றைநாட் சபைகூடியபொழுது குமாரக்கடவுள் தாமே ஒரு தமிழ்ப்புலவருருக்கொண்டு புத்தகமுங்கையுமாய் யாவருங்காணச் சென்று வீரசோழியத்துச் சந்திப்படலத்திற் பதினைந்தாஞ்செய்யுளாகிய "நான்கொடு மூன்றென்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமே, லேன்ற ணகாரம தாகும்பதினைந்தொடெண்ணிரண்டாய்த், தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண் டுந்தொடர்பா, லான்றவைந் தாமுட லாமுன்பி லொற்றுக் கழிவுமுண்டே" என்பதிலுள்ள 'ழகாரளகாரவொற்றீற்று நிலைமொழிப்பதத்தின்பின்னர் வருமொழிமுதல்தகாரம் வந்துபுணர்ந்தால் நிலைமொழியீறும் வருமொழிமுதலுந் திரிந்து தனித்தனி இரண்டும் டகாரமாம்; பின்னும் அவ்விலக்கணத்துள் நிலைமொழியீற்றிற்கு அழிவும் உண்டு' என்கிற விதியைப் பலர்க்குமெடுத்துக்காட்டி ஒப்புக்கொள்ளச்செய்து மறைந்தருளினார் என்று ஒரு ஐதிகியம் வழங்குகின்றது. *

புராணமரங்கேற்றி முற்றுப்பெற்றவுடனே கந்தபுராணத்திருமுறையோடு கச்சியப்பசிவாசாரியரைத் தந்தச்சிவிகையிலே எழுந்தருளப்பண்ணித் தொண்டைமண்டலத்திலே இருபத்துநான்குகோட்டத்திலுமுள்ள

---

* வீரசோழியம் இந்நூலுக்கு முந்தியேயுள்ள அவ்வளவுபிராசீனக் கிரந்த மன்றென்பதும், இவ்வைதிகியம் இப்புராணத்தைப் பிற்காலத்தில் எவராயினும் பிரங்கிக்கத்தொடங்கியபொழுது நிகழ்ந்திருக்கலா மென்பதும் ஒருசாரார்கொள்கை.

வேளாளப்பிரபுக்கள்யாவரும் ஒருங்குகூடிச் சிவிகைதாங்கியும் சாமரைவீசியும் குடைகொடிமுதலியவற்றை எடுத்துப்பிடித்தும் திருவீதிவலம்வந்து நூலையும் ஆசிரியரையும் மிகப்பாராட்டினுர்க ளென்பதைப் படிக்காசுப் புலவர்செய்த தொண்டைமண்டலசதகத்திலே "அந்தப் புரமு மறுநான்கு கோட்டகத் தாருமொன்ருய்க், கந்தப் புராணம் பதினு யிரஞ்சொன்ன கச்சியப்பர், தந்தப்பல் லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே, வந்தப் புராண மரங்கேற்றி ஞர்தொண்டை மண்டலமே" என்னுஞ் செய்யுளால் உணர்க.

இவ்வாசிரியர் நூலரங்கேற்றிய காலம் இற்றைக்கு ஆயிரத்து நூற்றுப்பதினேழு வருஷங்களின்முன் என்பதை "வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன் விரிந்தசிவா கமமுணர்ந்த மேன்மை பூண்டோன், போதநிறை சிவமறையோன் காஞ்சி வாழும் புனிதமிகு கச்சியப்ப குரவனுனேன், வாதமுறு புலவர்குழா மகிழ்ந்து போற்ற மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டத், தேதமறு * சகாத்தமெழு நூற்றின் மேலா யிலகு கந்த புராணமரங் கேற்றி னனே" என்னுஞ் சிறப்புப்பாயிரத்தால் அறிக. இதனல், இந்நூல் "எண்ணிய * சகாத்த மெண்ணூற் றேழின்மேல்" அரங்கேறிய கம்பராமாயணத்திற்கு நூற்றேழுவருஷம் முந்தியதென்பது விளங்கும்.

இந்நாலின்நடை மற்றைப்பலநூல்களிற்போல இங்கொருவிதம் அங்கொருவிதமாக இடந்தோறும்வேறுபட்டிராமல் எங்கும் ஒருவிதமான தன்மையையுடையது. இதன்நடை யாவரும் எடுத்தெடுத்துங் கம்பராமாயணத்தின்நடைக்குச் சிறிதேனும் பின்வாங்குவதன்று. இந்நூல்போன்ற நடையழகுடைய தமிழ்ப்பெருங்காப்பியங்கள் மிகச்சிலவேயன்றிப் பலவல்ல. இந்நாலாசிரியர் அகத்தியனுர்க்குத் தமிழைச்செவியறிவுறுத்திய செந்தமிழ்ப் பரமாசாரியராகிய அறுமுகக்கடவுளது அநுக்கிரகத்தால் அவதரித்தவராதலாலும், அக்கடவுள் கனவிலே எழுந்தருளிக் காட்சிகொடுத்துக் கட்டளையிட்டுத் தமது அருமைத்திருவாக்கினுல் அடியெடுத்துக்கொடுக்க இந்நூல் தொடங்கிப்பாடப்பட்டதனுலும், இதிலுள்ள பிழைகளைக் களைந்து திருத்தப்பாடியற்றியவர் அக்கடவுளே யாதலாலும், இதனை அரங்கேற்றிய இடம் அக்கடவுளாலயமேயாதலாலும், இந்நூலிற் கூறியுள்ள விஷயம் அக்கடவுளின் திவ்விய சரித்திரமே யாதலாலும், இந்நூலின்மீது எழுந்த ஆக்ஷேபத்துக்கு எற்றவிடைகூறி வாயடக்கியவர் அக்கடவுளே யாதலாலும், இந்நூலாசிரியர்மகிமையும் இந்நூலின்பெருமையும் எவரும் எடுத்து உரைத்து முடிக்கும் அளவுடையன வல்ல. இன்னும் இதன்சிறப்பை "உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி யோங்குமைந்தன், கச்சியப் பன்செய்த கந்த புராணக் கலைக்கடலின், மெச்சிய கல்வி மதியும்வெண் டாமமை மேவுமின்னு, மெச்செவி நாவினுக் கின்பா மமுது மெழுந்தனவே" என்னும் அபியுக்தர்வாக்காலும், "போதமுறு சூதமுனி புகன்ற காந்தப் புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருள தான, மேதகுவன் புனலருந்தி வையமுய்ய வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத், தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச் சலதியமு தினைநிகர்செந் தமிழ தான, காதன் மழை பொழிந்தவருட் கொண்ட லான கச்சியப்ப னிருபாத முச்சி வைப்பாம்" என்னுங் கந்தபுராணச்சுருக்கத்துக் கவியாலுங் காண்க.

---

* இங்கே 'சகாத்தம்' என்றது, சாலிவாகனசகாப்தத்தை; இப்பொழுது நடப்பது, சாலிசகம் ௧௮௧௭ - ஆம் வருஷம்.

இந்நூலைக் கற்றல் கேட்டல் கூறல் முதலியன செய்வார் அடையும் இம்மைமறுமைப்பயன்கள் இன்னவென்பது, இந்நாலின் பாயிரத்திலுள்ள "இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச், சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வ, ரந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற், கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வாரே" என்னுஞ் செய்யுளால் இனிது இளங்கும்.

இந்நால் இலக்கியப்பயிற்சிக்குஏற்ற சிறப்புடையநூல்கள் சிலவற்றில் முக்கியமானதொன் றென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

இன்னும் இந்தப்புராணத்தின்சிறப்பை, எல்லாவிஷயங்களையுங் கந்தபுராணத்திலே காணலாம் என்னுங்கருத்துப்பட * 'இந்தப்பொருள் கந்தத்திலு மில்லை' என வழங்கும் பழமொழியாலும் உணர்க.

இதனைச் சுருக்கிப் பிற்காலத்தில் தருமபுரவாதீனத்துச் சம்பந்தசரணலயசுவாமிகள் கந்தபுராணச்சுருக்கமென ஒருநூலாகப் பாடியுள்ளார்.

இப்புராணத்திக்கு முதனூல் - ஸ்ரீவேதவியாசமகாமுனிவரால் வகுத்து வெளியிடப்பட்ட வடமொழிப்பதினெண்புராணங்களுட் பதின்மூன்றுவதாகிய ஸ்காந்தபுராணமாம். அந்தப் புராணம் † சாத்துவிகபுராணங்களாகிய சிவபுராணங்கள் பத்தில் ஒன்று. ஐம்பதுகண்டங்களாற் புனையப்பட்டதாய் ஓரிலக்கங்கிரந்த முடைத்தாயிருக்கின்ற அந்தக்காந்தபுராணமானது, சநத்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்காசங்கிதை (அகத்தியசங்கிதை), சூரசங்கிதைஎன ஆறுசங்கிதையுடையது. அவற்றுள், சனத்குமாரசங்கிதை ஐம்பத்தையாயிரம் கிரந்தமும், சூதசங்கிதை ஆறுயிரம் கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரம கிரந்தமும், விஷ்ணுசங்கிதை ஐயாயிரம் கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினுயிரம் கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரம்கிரந்தமும் உடையன. அவற்றுள் முப்பதினுயிரம்கிரந்தமுடைய சங்கரசங்கிதை, பன்னிரண்டுகண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது, சிவரகசியகண்டம். அது, பதின்மூவாயிரம் கிரந்தமுடையதாய்ச் சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழுகாண்டங்களை யுடையதாயிருக்கும். அவற்றுள் முதலாது காண்டமே கச்சியப்பசிவாசாரியசுவாமிகளால் இந்த நூலாகத் தமிழில் மொழிபெயர்த்தருளப்பட்டது. ஏழாவதுகாண்டமாகிய உபதேசகாண்டத்தைக் கோனேரியப்பமுதலியார் தமிழிற் பாடியுள்ளார்.

---

* இந்தப்பழமொழியை 'இந்தப்பொய் கந்தத்திலுமில்லை' எனமாற்றி வழங்குவர் இப்புராணத்தைத் தாமசபுராணமென்பார்.

† பதினெண்புராணங்களுள் சைவம், பவிஷ்யத், மார்க்கண்டேயம், லிங்கம், காந்தம், வராகம், வாமநம், மத்ஸ்யம், கூர்மம், பிரமாண்டம் என்னும் பத்தும் சாத்துவிகங்களாகிய சிவபுராணங்களா மென்பதும்; காருடம், நாரதீயம், வைஷ்ணவம், பாகவதம் என்னும் நான்கும் தாமசங்களாகிய விஷ்ணுபுராணங்களா மென்பதும்; பிரமம், பத்மம் என்னும் இரண்டும் ராஜசங்களாகிய பிரமபுராணங்களா மென்பதும்; ஆக்நேயமும், பிரமகைவர்த்தமும் முறையே திரிகுணயுக்தமாகிய அக்கினிபுராணமும், சூரிய புராணமு மாமென்பதும் சைவசித்தாந்தம். இப்புராணங்களை முதலிற்பரமசிவனிடம் உபதேசம்பெற்றவர் திருநந்தி தேவர்; அவரது மாணக்கர் சனற்குமாரமகாமுனிவர்; அவரால் உபதேசஞ்செய்தருளப்பெற்றவர் வேதவியாசமகாமுனிவர்; இவர் தாம் சூதமுனிவர்க்கு உபதேசித்தருளினர்.

ஸ்ரீ

கந்தபுராணம்.

கந்தனது புராணம் என விரியும்; ஆறாம்வேற்றுமைப்பொருளில் தொக்குநின்ற தொகைநிலைத்தொடர்மொழி: விஷயமாகவுடைமை, வேற்றுமைப்பொருளாகிய சம்பந்தம்; 'விநாயகரகவல்' என்பதிற்போல. இனி, கந்தனைப் பற்றிய புராண மெனப் பொருளுரைத்து, இத்தொடர்மொழியை இரண்டனுருபும் பொருளு முடன் தொக்க தொகையாகவுங் கொள்ளலாம். சுப்பிரமணியக்கடவுளது திவ்யசரித்திரத்தைக் கூறுவதொரு நூல் என்பது திரண்டபொருள்.* இத்தொடர்மொழி வடநூல்முடிபாதலால், நிலைமொழியீற்றுயிர்முன்னின்ற வருமொழிமுதல்வலி மிகாமல் இயல்பாய்நின்றது. கந்தன் - ஸ்கந்தன்என்னும் வடசொல்லின் திரிபு; இதற்கு (சத்துருக்களை) வற்றச்செய்பவ னென்பது அவயவப்பொருள்: இதற்குப் பிறவாறு பொருளுரைத்தலும் உண்டு. புராணம் - பழமை; இது - பழைய வரலாற்றின்மேல் நிற்றலாற் பண்பாகுபெயரும், இவ்வரலாறு தன்னை அறிவித்தற்குக்காரணமாகிய நூல்மேல் நிற்றலாற் காரியவாகுபெயருமாதலால், இருமடியாகுபெயர். பழைய வரலாறுகள் - உலகத்தின் தோற்றமும், ஒடுக்கமும், மந்வந்தரமும், முனிவர்கள் அரசர்கள்மரபும், அவர்கள்சரித்திரமுமாம்; இவையைந்துமே புராணத்தின் இலக்கணங்கள்: "தோற்ற முலக மீண்டொடுங்க றமரர் மனுவந் தரமுனிவ, ராற்ற லரசர் மரபவர்தஞ் சரித மென்னு மோரைந்துஞ், சாற்றும் புராண விலக்கண மென் றறிஞ ருரைப்பர்" என்னுங் கூர்மபுராணச்செய்யுளாலும் அறிக.

நூல்வரலாறு.

முன்னொருகாலத்தில் முற்றத்துறந்த முனிவர்கள் பலரும் ஒருங்குகூடி நைமிசாரணியத்தை நாடியடைந்து ஆங்கு வேதவிதிவழுவாது வேள்வியொன்றுதொடங்கிச் செய்துவருகையில், வியாசபகவானிடம் புராணோபதேசம்பெற்றுள்ள சூதமாமுனிவர் எழுந்தருள, அருந்தவரனைவரும் அவரை எதிர்கொண்டழைத்துவந்து அர்க்கியம் பாத்தியம் முதலிய பலவகை உபசாரங்களையும் பணிவொடு புரிந்து பலவாறு முகமனியம்பி 'தேவரீர் அடியேங்களுக்கு அகவிருளொழிந்து அளவிலானந்த முண்டாம்படி அறுமுகக்கடவுளது திவ்யசரித்திரத்தைத் தெளிவாகச் சொல்லியருளல்வேண்டும்' என்று வேண்ட, அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு சூதமுனிவர் சுப்பிரமண்ணியசரித்திரம்முழுவதையும் அவர்களுக்குச் சொல்லியருளுவாராயினர்.

---

* 'அறுமுகக்கடவுளால் தத்புருஷகல்பத்தின் சம்பந்தமாய்ச் சிவசரித்திரங்களுஞ் சிவதருமங்களும் விளங்கும்படி நூறாயிரம் கிரந்தமுள்ளதாகச் செய்யப்பட்டது பதின்மூன்றாவதாகிய ஸ்காந்தமென்னும்புராணம்' என்று மத்ஸ்யபுராணத்திற் கூறப்பட்டிருத்தலால், கந்தபுராண மென்பதற்கு முருகக்கடவுளாற்செய்யப்பட்ட புராணமென்றும் பொருள்கொள்ளலாமென்று தோன்றுகின்றது.

முதலாவது

உற்பத்தி காண்டம்.

சம்பவகாண்டம் எனப்படுவதும் இதுவே. இத்தொடர்களுக்கு-(இப்புராணகதாநாயகனாகிய சுப்பிரமணியக்கடவுளுடையவும் அவனதுதுணைவர்பலருடையவும்) தோன்றற்பாட்டைக் கூறும் பாக மென்பது பொருள்.

காண்டமென்பது - ஒருநூலின் பெரும்பகுப்பையும், படலமென்பது- அதற்குஉட்பட்ட சிறுபகுப்பையும் உணர்த்துமாற்றைக் கம்பராமாயணத்திலுங் காண்க.

பதினேன்றவது

திருவவதாரப்படலம்.

(முருகக்கடவுளது) மேன்மையான பிறப்பைக் கூறும் பாகமென்பது பொருள். திரு என்னும் பலபொருளொருசொல், இங்கே மேன்மையை உணர்த்திற்று. அவதாரம் - உற்பத்தி; பிறத்தல்.

முன்கதைத் தொடர்ச்சிச் சுருக்கம்.

படைப்புத்தொழிலில் தனக்குத்துணைவராம்படி பிரமதேவனால்ஆதிகாலத்தில் உண்டாக்கப்பட்ட உபப்பிரமர்கள் ஒன்பதின்மருள் ஒருவராகிய தக்ஷப்பிரஜாபதியினிடம் மகளாகப்பிறந்து தாக்ஷாயணியென்றுஞ் சதியென்றும் பெயர்கூறச் சிறந்துவீற்றிருந்த உமாதேவி, பின்னொருகாலத்திற் சிவாபராதியான அம்முனிவரது சம்பந்தத்தாலான பெயரோடும் உடம்போடும் உய்ந்திருக்க மனமியலாமல், சிவபிரான்கட்டளையிட்டபடியே, அவ்வுடம்பைத்துறந்து, தன்னைமகளாகப்பெறும்பொருட்டுப் பலநாளாகத் தவம்புரிந்து வருகிற மலையரசனாகிய இமவானினது எண்ணம் ஈடேறும்படி தான் ஒரு அழகிய சிறுபெண்குழந்தைவடிவமாய் அவனெதிரில் அம்மலையில் ஒருதடாகத்தில் தாமரைமலரொன்றின்மேல் தங்கியிருக்க, அப்பர்வதராசன் அக்குழந்தையைக் கண்டு மகிழ்ந்து எடுத்துச் சென்று மனைவியாகிய மேனையினிடங் கொடுத்து அவ்வுமாதேவி உயிர்களனைத்தையும் வளர்ப்பதுபோலவே அவளை அவன் மிக்க அன்போடு வளர்த்துவந்தான். இவ்வாறு பர்வதத்தின்மகளாய் வளர்ந்துவந்த பார்வதிதேவி, ஐந்துபிராயமானவுடனே தனதுதாய்தந்தையரிடம் அருமையாக விடைபெற்றுக்கொண்டு, அம்மலையினோர்புறத்தில் இருந்து, சிவபிரானைத் திருமணம்புரியுமாறு அக்கடவுளையேகுறித்துப்பெருந்தவம்புரிந்துவந்தாள். வருகையில், காசியபமாமுனிவருக்கு மாயையினிடங் குமாரராகத்தோன்றிச் சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் எனப் பெரும்பெயர்பெற்று வளர்ந்து சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து அப்பிரானால் வரமளிக்கப்பெற்ற அசுரவீரர்மூவருள் மூத்தவனான சூரபதுமன், செருக்குக்கொண்டு போர்செய்து தேவர்யாவரையும் வெற்றிகொண்டு பூலோகத்திற் கடலிடையேயுள்ள மகேந்திரமென்பதொரு மகாநகரத்திலே மற்றும் அநேக அசுரரோடுங் கூடிக் குடிவீற்றிருந்து கொடுங்கோல்செலுத்தி ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசாண்டுவந்தான். அப்பொழுது, சனகர்முதலிய முனிவர்கள் நால்வர் கைலாசகிரியையடைந்து கடவுளை அடிதொழுது 'எங்களுக்குத் தத்துவஞானத்தை உபதேசித்தருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, சிவபிரான் கருணைகொண்டு அவ்விரசதகிரியின் தென்சிகரத்திலே கல்லாலமரத்தி னிழலில் தக்ஷிணாமூர்த்திவடிவமாய்த் தனியே எழுந்தருளியிருந்து அவர்களுக்குச் சரியை, கிரியை, யோகம் என்னும் மூவகைநிலையையும் முதலிற்போதித்து, பின்னர் நான்காவதாகிய ஞானநெறியையும் அனுக்கிரகிக்கக்கருதி,

அது இத்தன்மையதென்று அறிவிக்குமாறு சின்முத்திரையாகப் பிடித்த திருக்கையோடு ஒருகணப்பொழுது மௌனமாய் எழுந்தருளியிருந்தார். அந்தக்கணப்பொழுதொன்றுதானே, பிரமன்முதலிய தேவர்யாவர்க்கும் பற்பலயுகங்களாயிற்று. உலகமனைத்திற்கும் மாதாபிதாக்களாகிய உமாதேவியும் உருத்திரமூர்த்தியும் இவ்வாறு ஒருவரையொருவர் பிரிந்து ஐம்பொறியடக்கி அருந்தவநெறியினிற்கையால், உலகமுழுவதிலுங் காமவிகாரமென்பது காணப்படவேயில்லை. ஆதலால், பிரமனது படைப்புத்தொழிலுந் தடைப்பட்டது. அவ்வமயத்தில், சூரபதுமனால் வலிதொலைக்கப்பட்ட தேவேந்திரன் தேவர்களோடு துறக்கத்தைத்துறந்து இந்திராணியுடனே பூமியையடைந்து கைலையைச்சேர்ந்து அங்கு மோனநெறி நிற்கின்ற முக்கட்கடவுளைத் தரிசித்துத் தன்குறையை எடுத்துக்கூற இயலாமல் மீண்டு மேருமலையை அடைந்து சூரபதுமனது குமாரனாகிய பானுகோபனென்பவன் தன்மகனாகிய ஜயந்தனைச் சிறையிருத்தியதை அறிந்து வருந்தி அம்மலைப்புறத்திலே இருந்து பரமசிவனைநோக்கிப் பலகாலந் தவம்புரிய, சிவபிரான் அத்தேவராஜனுக்குத் தரிசனந்தந்து 'உன்குறை யாது? கூறுவாய்' என்ன, அவன் சூரபதுமனால் தனக்கும் அவன்மகனால் தன்மகனுக்கும் அசுரர்களால் தேவர்களுக்கும் நேர்ந்த தீங்குகளையும் அவர்கள் பொன்னுலகத்தைத் தீயிட்டழித்ததையும் எடுத்துக்கூறி 'அசுரர்களை அழித்தருளல்வேண்டும்' என்று வேண்ட, அதற்கு உமாபதி 'நம்பால் ஒருகுமாரன் தோன்றி அவுணரை ஒழித்து உங்களைக்காத்திடுவான்' என்று அருளிச்செய்து மறைந்தார். அதுகேட்டு அப்பொழுது மகபதி மனமகிழ்ந்தானாயினும், 'உமாமகேசுவரர்கள் ஒருவரையொருவர் பிரிந்திருத்தலால் எங்ஙனம் அவர்கட்குக் குமாரனுதிப்பான்' என்று எழுந்த பெருங்கவலையால் உடனே மனமழிந்தவனாகி, மனோவதியென்னும் பிரமனகரத்தை அடைந்து, அங்கு உள்ள பிரகஸ்பதியின்மனையாளிடத்தே தன்மனையாளை இருக்கச்செய்துவிட்டு, அந்நகரத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவனைப் பிற தேவர்களோடும் வணங்கி நிகழ்ந்ததனைத்தையும் விண்ணப்பஞ் செய்ய, நான்முகக்கடவுள் அதற்குத்தக்கமுயற்சியைச் செய்யத்துணிந்து தேவர்களுடனே வைகுண்ட நகரத்தை அடைந்து மாயவனை மலரடிதொழுது சிவபிரான் யோகுசெய்துநிற்குந் தகைமையையும் சூரபதுமன் தன்னையுமுட்பட ஏவல்கொண்டு தேவர்களை இடைவிடாது வருத்திவருவதையுந் தெரிவித்து அவ்வெம்பெருமானோடும் ஆலோசித்து, மோனநிலை காட்டிநிற்குமிறைவன் அந்நெறியினின்றுநீங்கி மலைமகளைமணந்து அவளுடன்கூடிக் குமாரனை அளித்தருளுமாறு அக்கடவுளுக்குக் காமவேதனையை உண்டாக்கும்பொருட்டு மன்மதனை வரவழைத்துச் செய்தி செப்பி அரிதில் இசைவித்து அவனை அனுப்ப, அவனும் பிரமனது நிர்ப்பந்தத்தால் வெள்ளிமலையிற்சென்று பரமசிவன்மேல் மலரம்புகளையெய்து அவரது தவத்தைக் கெடுக்கத்தொடங்க, அதனையறிந்த இறைவன் சினந்து நெற்றித்திருநயனத்தைத் திறந்து உற்றுநோக்கியமாத்திரத்தில், அதனினின்று எழுந்த நெருப்புக்கு இரையாகி மன்மதனது சுந்தரமேனி சாம்பராய்விட்டது. அஃது உணர்ந்த பிரமனாதியோர் வருந்திக் கயிலையையடைந்து கோயில் வாயிற்குழுமிநின்று பலவாறு தமதுகுறைகளையெடுத்துக்கூறி முறையிட, இறைவன் அவர்களை உள்ளேவரவழைத்து அவர்கள்குறையை விரைவிலே ஒழிப்பதாகக் கூறியருளி அவர்களை அனுப்பிவிட்டு, தன்கணவனாகிய மன்மதன் தகிக்கப்பட்டதனால் மிகத்தவித்துத் தம்மைச்சரணமடைந்து பிரார்த்தித்த இரதிதேவிக்கு மலைமகளைமணம்புரியுங்காலத்து மன்மதனை

உயிர்ப்பிப்பதாக வாக்களித்து, மோனநிலைநீங்கி, சனகாதியர்க்கு விடைகொடுத்துவிட்டு, தாம்ஒருவிருத்தவேதியவடிவங்கொண்டுசென்று பனிமலைசேர்ந்து அம்பிகையினது தவப்படிவத்தைக் கண்டுகளித்து அவளிடஞ் சிலசல்லாபஞ்செய்து அவளுடைய அன்பினை அளவிட்டறிந்துவந்து, சப்தருஷிகளைவரவழைத்து அவர்களை மலையரசன்பக்கல் அனுப்பி அவன்மகளை மணம்பேசிமுடித்துவரச்செய்து, அவர்கள்போய்ப்பேசிவந்தபின்னர், கலியாணத்தின்பொருட்டு மிகஅலங்கரிக்கப்பட்டுள்ள இமயமலையைச் சிவபிரான் பூதகணங்கள்புடைசூழச் சென்றுசேர்ந்தருளினர். அப்பொழுது சகலதேவர்களும் ருஷிகளும் மற்றுமுள்ளார்பலரும் உமாமகேசுவரர்களது விவாகமகோற்சவத்தைத் தரிசித்து உய்யும்பொருட்டு அப்பனிமலையினிடத்து வந்து ஒருங்குகூடினர்கள். அதனால் வடதிசைதாழ்ந்து தென்திசை உயர, கண்டுகலங்கிய அடியவர்களின் வேண்டுகோளால், சங்கரபகவான் அகத்தியரைஅழைத்துத் தென்திசைக்கு ஏகும்படி ஆஜ்ஞைசெய்து அனுப்பியருளவே, பூமி பழையபடி சமநிலைபெற்றது. அதன்பின் பரமசிவன் பார்வதியைத் திருக்கலியாணஞ்செய்துகொண்டு, மன்மதனை எழுப்பி உயிர்ப்பித்து, அவன் தன்மனைவியான இரதிதேவிக்குமாத்திரம் ரூபமுடையவனாகவும் மற்றையோர்க்கு ரூபமில்லாதவனாகவும் இருக்கும்படி அருள்செய்து, அம்பிகையுடனே சிவபெருமான் திருக்கயிலாயத்தையடைந்து திவ்வியசிங்காசனத்திலே முன்போலவே வீற்றிருந்தருளினர். அப்பொழுது உலகத்திலுள்ள உயிர்களனைத்தும் ஆணும்பெண்ணுங்கூடிக்குலாவி இன்பமுற்றன.

க. பற்பகலினையவாற்றாற்படர்தலும்பின்னோர்வைகன்
முற்படுமயன்மால்வேள்விமுதலவன் றிசைகாப்பாளர்
சொற்படுமுனிவர்வானோர்யாவருந்தொல்லைமேரு
வெற்பினிற்குழுமிச்சூரான்மிகமெலிந்திரங்கிச்சொல்வார்.

(இ - ள்.) இனைய ஆற்றால் - இந்தவிதமாக, பல் பகல் - அனேகநாட்கள், படர்தலும் - சென்ற அளவில், பின் - பினபு, முற்படும் - (மற்றையாவரினும்) தலைமைப்பட்ட, அயன் - பிரமனும், மால் - விஷ்ணுவும், வேள்வி முதலவன் - யாகங்களுக்குத் தலைவனாகிய இந்திரனும், திசைகாப்பாளர் - திக்குக்களைக்காத்தலைச்செய்கின்ற மற்றைத்திக்குப்பாலகர்களெழுவரும், சொல் படும் முனிவர் - கீர்த்தி பொருந்திய முனிவர்களும், வானோர் யாவரும் - மற்றைத்தேவர்களெல்லோரும், சூரால் மிக மெலிந்து - சூரபதுமனென்கிற அசுரத்தலைவனால் மிகவருத்தமடைந்து, தொல்லை மேரு வெற்பினில் - பழமையான மகாமேருமலையிலே, ஓர் வைகல் - ஒருநாளில், குழுமி - கூடி, இரங்கி - பரிதபித்து, சொல்வார் - (சிலவார்த்தைகளைச்) சொல்லுவாரானார்கள்; (எ - று.)—அது மேல் மூன்றுகவிகளிற் காண்க.

பல + பகல் = பற்பகல், பலவென்பது பிறவர அகரங்கெட்டு லகரம் றகரமாயிற்று: [நன் - உயிர் - ௨0 ; மெய் - ௨௬.] பலவாகிய பகல் என இருபெயரொட்டுப்பண்புத்தொகை. பலவென்பது - பன்மையென்னும்பண்பின் அடியாகப்பிறந்த பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர் ; இது, பகலென்னும் பால்பகாவஃறிணைப்பெயரை விசேடித்தது. பகல் என்பது, இலக்கணையாய்த் தினத்தை யுணர்த்திற்று. இனைய - சுட்டடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; இ-பகுதி, ன், ஐ - சாரியைகள், ய்-சந்தி, அ - விகுதி: இத்தன்மையவென்றுபொருள். 'இனையவாற்றால்' என்றது, கீழ்ப்படலத்தின்இறுதியில் "அன்பகன்றிருபாலாகித் தவன்றியவுயிர்களெல்லா, மின்பொடுபோக மாற்றி யினிதமர் வுற்ற வன்றே" என்றதை அனுவதித்தவாறு; பரமசிவனர்

பார்வதிதேவியாரிடம் குமாரக்கடவுளை உண்டாக்கியருளாமலே யென்ற வாறுமாம். வைகல்-கழிதல்: கழியுந்தன்மையதானநாளுக்கு இங்கே தொழிலாகுபெயர்; வைகு - பகுதி, அல் - விகுதி. அயன் - அஜன்: பிறப்பில்லாதவனென்று பொருள்; சுவயம்பு [தானாகஉண்டானவன்] என்று கருத்து. நூறு அசுவமேதயாகங்களைச் செய்து இந்திரபதவிபெறுதலாலும், யாகங்களில் அவியளிக்கப்படுகிற தேவர்களுக்கெல்லாந் தான்தலைவனாதலாலும், இந்திரனை 'வேள்விமுதல்வன்' என்றார்; இது - மகபதியென்னும் வடசொல்லின் கருத்தைப்பற்றியது. இனி,மால் எனபதற்கு - இந்திரனென்றுஉரைத்து, வேள்விமுதல்வன் என்பதற்கு - யாகத்துக்குத்தலைவனான யஜ்ஞபுருஷனென்னவுமாம். திசைகாப்பாளர் - இந்திரனொழிந்த அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் எழுவர்; இவ்வென்மரும் - கிழக்கு முதலிய எட்டுத் திக்குக்களுக்கும் முறையே உரியவராவர். சொல் என்பது புகழாதலை "சொன்மாண் பமைந்த குழூஉ" எனச் சீவகசிந்தாமணியிலும் காண்க; இனி, சொல் படும் - (வெகுண்டு கூறினாலும் அருள்கொண்டு கூறினாலும் அந்தந்தப்பயன்களைத் தவறாமல் தந்துவிடுகிற சாபாநுக்கிரக நிறை) மொழிகள் பொருந்திய என்றுமாம். வானோர் - வானத்திலுள்ளவர். மலைகளெல்லாம் படைப்புக்காலத்திலேயே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன வென்பதை விளக்கும்பொருட்டு, மேருவெற்புக்கு 'தொல்லை' என்னும்அடைமொழியைக் கொடுத்தார். குழூஉ, குழுமு - பகுதி; இ - இறந்தகாலங்காட்டும் வினையெச்சவிகுதி. ஞர் - விகாரப்பட்ட சொல்.

இதுமுதற் பன்னிருகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ் சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள்; இவற்றில் மூன்று ஆறுஞ் சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (க)

உ. உலகினையவுணர்க்கீந்தேயோகிபோல்வைகிநம்பால்
மெலிவினைப்படுத்தியாம்போய்வேண்டலுமிரக்கமெய்தி
மலைமகடன்னைவேட்டான்மைந்தனைத்தந்துநம்மைத்
தலையளிபுரியான்வாளாவிருப்பதென்றாணுவானோன்.

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) உலகினை - எல்லாவுலகங்களையும், அவுணர்க்கு ஈந்தே - அசுரர்களுக்கே கொடுத்துவிட்டு, யோகி போல் வைகி - யோகாப்பியாசஞ் செய்பவன்போல (முன்னே) மௌன நிலையில் நின்று, நம்பால் மெலிவினை படுத்தி - நம்மிடத்துத் துன்பங்களை உண்டாகச்செய்து, யாம் போய் வேண்டலும் இரக்கம் எய்தி மலைமகள் தன்னை வேட்டான் - நாமெல்லாஞ்சென்று பிரார்த்தித்தமாத்திரத்தில் நம்மிடத்துத் திருவுள்ளமிரங்குதலையடைந்து [மோனமொழிந்தநிலைவிட்டுப்] பார்வதிதேவியைத் திருக்கலியாணஞ்செய்துகொண்டவனாகிய, தாணு ஆனோன் - பரமசிவனெனப்படுபவன், (பின்பு), மைந்தனை தந்து - ஒருகுமாரனைப்பெற்று, நம்மை தலை அளி புரியான் - சிறந்தகருணையைச் செய்து நம்மைக் காவாதவனாய், வாளா இருப்பது - வெறுமையாயிருப்பது, என் - யாதுகாரணத்தால்? (எ - று.)

யோகமாவது - இயமம் நியமம் முதலிய எட்டு அங்கங்களுடனே செய்யப்படுந் தவம். வேண்டலும் - விரைவுகுறித்துநின்றது. இரக்கம் - தொழிற்பெயர். வேட்டான், வேள் - பகுதி. வேட்டான், புரியான் என முறையே தெரிநிலைவினைமுற்றுப் பெயரெச்சப்பொருளையும், வினையெச்சப் பொருளையும் உணர்த்திற்று. வாளா - சும்மா என்னும் உலகவழக்குச் சொ

ற்போலப் பயனின்மைப்பொருள்குறிப்பதொரு இடைச்சொல். இருப்பது-எதிர்காலத்தொழிற்பெயர் ; இங்கே, இடைநிலை காலங்குறியாமல் தன்மைகுறித்தது. என் - வினாவினைக்குறிப்புமுற்று : எவனென்பதன்விகாரம். தாணு - ஸ்தாணு என்னும் வடமொழித் திரிபு ; (சர்வசங்கார காலத்திலும் அழிவில்லாமல்) நிலைநிற்பவனென்று பொருள். ஆனேன் - முதல்வேற்றுமைச்சொல்லுருபு ; இது 'என்பான்' என்பதுபோல, இங்குச் சிறப்பையுணர்த்திற்று. முதலடியிற் பிரிநிலையேகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது. போல் - ஒப்பில்போலியாயின, யோகியாய் வைகி யென்க. (௨)

௩. இவறலுமிகலுமின்றியார்க்குமோர்பெற்றியாகி
யவரவர்வினைகணாடியதற்படுபொருளைநல்குஞ்
சிவனையாம்வெறுத்தல்குற்றஞ்சிறந்தநோன்பியற்றிடாதே
தவறுசெய்தனமென்றெம்மைநோவதேதக்கதென்றார்.

(இ - ள்.) இவறலும் - (சிலரிடத்து) நண்பும், இகலும் - (சிலரிடத்துப்) பகைமையும், இன்றி - இல்லாமல், யார்க்கும் ஓர் பெற்றி ஆகி - எல்லோர்க்கும் ஒருதன்மையேயாய், அவர் அவர் வினைகள் நாடி - அந்தந்தப் பிராணிகள் செய்துள்ள கருமங்களை அறிந்து, அதன் படி பொருளை நல்கும்-அவ்வூழ்வினைகளால் அனுபவிக்கத்தக்க பயன்களை (அவரவர்க்குக்) கொடுத்தருளுகின்ற, சிவனை - பரமசிவனை, யாம் - நாம், வெறுத்தல் - பழி கூறுதல், குற்றம் - (பெரிய) அபசாரமாம் ; 'சிறந்த நோன்பு இயற்றிடாதே-சிறந்த தவத்தைச் செய்யாமலே, தவறு செய்தனம் - பிழைசெய்தோம் (நாம்),' என்று எம்மை நோவதே - என்று நம்மை (நாம்)வெறுத்துக்கொள்வதே, தக்கது - தகுந்தது, என்றார் - என்று (தேவர்கள்) கூறினார்கள்.

இவறல் - ஆசைப்பெருக்கம்: தொழிற்பெயர்; இவறு - பகுதி, அல் - விகுதி. கடவுள் விருப்புவெறுப்பில்லாதவராதலை "வேண்டுதல் வேண்டாமை யில்லான்" எனத் தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனார் கூறியதனாலும் அறிக. சிவன் - (இம்மைமறுமைவீட்டு) இன்பங்களைச் செய்பவன்; சிவம் - சுபம். 'பெற்றித்தாகி' என்னும் பாடத்துக்கு, 'தேவர்களை உயர்திணையாகவும் அஃறிணையாகவுஞ் சொல்லலாம்' என்பதுபற்றிய திணைவழுவமைதி யென்க; அல்லது, பெற்றித்து என்பதில் து - பகுதிப்பொருள்விகுதியென்னலுமாம். 'யார்,' 'அவரவர்' எனச் சிறப்புடையஉயர்திணைமேல் வைத்துக்கூறினாராயினும், "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்ற உபலக்ஷணவிதியால், அஃறிணையும் உடன்கொள்ளப்படும்; "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉ மழை" "செய்பவன் கருவி" என்றவிடங்களிற்போல. 'இவர்தலும்' என்ற பாடத்திற்கும் பொருள் இதுவே. அதற்படுபொருள், அது - சாதியொருமை. தமக்கு அசுரரால் நேர்ந்த துன்பமனைத்துந் தாம் சிறந்தநோன்பியற்றாமையாலேயே நேர்ந்ததென்றார். (௩)

௪. ஆயினுமவன்றாள்போற்றியடையினன்கனைத்துமாகுந்
தீயனவகலுமீது திண்ணமாமதனாலின்னுங்
காய்கதிர்மதிசூழ்கின்றகயிலையங்கிரியின்முக்க
ணாயகற்கிதனைக்கூறநாமெலாம்போதுமென்றார்.

(இ - ள்.) 'ஆயினும் - ஆனாலும், அவன் தாள் போற்றி அடையின்-அச்சிவபிரானது திருவடிகளை வணங்கிச் சரணமடைந்தால், நன்கு அனைத்தும் ஆகும் - நன்மைகளெல்லா முண்டாகும்; தீயன அகலும் - தீங்குக

ளொழியும்; ஈது திண்ணம் ஆம் - இது உண்மையாம்; அதனால் - ஆகையால், இன்னும் - மீண்டும், காய் கதிர் மதி சூழ்கின்ற கயிலை அம் கிரியில் முக்கண் நாயகற்கு இதனை கூற - ஒளிவீசுகின்ற சூரியனும் சந்திரனும் பிரதக்ஷிணம்பண்ணப்பெற்ற அழகிய ஸ்ரீகைலாசபருவதத்தில் எழுந்தருளியிருக்கின்ற மூன்றுதிருக்கண்களையுடைய யாவர்க்குந்தலைவனான சிவபிரானுக்கு (ச் சூரனால் நாமெல்லாம்வருந்துகின்ற) இச்செய்தியைச் சொல்லுதற்கு, நாம் எலாம் போதும் - நாமெல்லாம் போவோம்,' என்றார் - என்றும் சொன்னார்கள் (தேவர்கள்) ; (எ - று.)

நன்கு - பண்புப்பெயர் ; கு - விகுதி, நல் என்னும்பகுதியீற்று லகாம் னகரமானது - விகாரம். கதிர் - ஒளி : ஆயிரங்கிரணங்களையுடையசூரியனுக்குப் பண்பாகுபெயர் ; இனி, காய்கதிர் - சுடுகின்றகிரணங்களையுடைய தென வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யாகவுமாம். மதி - (யாவராலும்) மதிக்கப்படுவது ; மதித்தல் - கொண்டாடுதல் : சந்திரன் அனைவராலும் கௌரவிக்கப்படுவதனை "ஒண்கதிர் வாண் மதியஞ் சேர்தலா லோங்கிய,வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉம்" என்பதனாலும் அறிக. கைலாசகிரி சூரியசந்திரர்களாற் சுற்றப்படுவதனை "எயிலொரு மூன்றுஞ் செற்றோ னேந்திழை யுடனே வைகுங், கயிலையின் பெருமை தன்னைக் கட்டுரை செய்வ தெங்ஙன், வெயிலவன் முதலோர் நாளு மேம்பட வலஞ்செய் வார்க, ளெயிலுநல் லமுதோர் சூழ்வந் தன்புடன் போற்று வாரே" என்னும் வில்லிபுத்தூரார்பாரதச்செய்யுளைக்கொண்டும் உணர்க. கயிலை - வடசொற்றிரிபு. சூரியன் வலக்கண்ணும் சந்திரன் இடக் கண்ணும் அக்கினி நெற்றிக்கண்ணும் ஆக இறைவனுக்குக் கண்மூன்றும் முச்சுடராம். போதும், உம் - தன்மைப்பன்மையெதிர்காலவினைமுற்றுவிகுதி. கீழ் மோனநீங்குபடலத்தில் ஒருகால் தேவர்கள் கயிலைக்குச்சென்று தங்கள்குறையைக் கடவுளிடம் விண்ணப்பித்து வந்ததனால், இங்கே 'இன்னும்' என்றார். (ச)

ரு. போதரவிசைந்தகாலைப்பொன்னலர்கமலப்புத்தேண்
மேதகுபரமன்செய்கைவினவியேயேகல்வேண்டுந்
தூதுவனொருவன்றன்னைத் தூண்டிமுன்னறிதுமென்றே
யூதையங்கடவுடன்னைநோக்கியீதுரைக்கலுற்றான்.

(இ-ள்.) போதர இசைந்த காலை - (எல்லோரும் அங்ஙனமே கைலாசத்திற்குப்)போவதற்கு உடன்பட்டபொழுது, பொன் அலர் கமலம் புத்தேள் - பொன்னிறமான மலர்ந்த தாமரைப்பூவிலே வீற்றிருக்கிற பிரமதேவன், 'மே தகு பரமன் செய்கை வினவியே ஏகல் வேண்டும் - அன்பு மிக்க யாவரினுஞ் சிறந்த சிவபிரானது தொழிலை[ஏற்றசமயத்தை]விசாரித்து அறிந்துகொண்டபின்பே(நாமெல்லாம்) செல்வது தகுதி; ஆதலால்), தூது அவன் ஒருவன்தன்னை - தூதனொருவனை, முன் தூண்டி - முன்னே அனுப்பி, அறிதும் - (கடவுளின் செய்தியை)அறிந்துகொள்வோம்',என்று-என்றுசொல்லி, ஊதைஅம்கடவுள் தன்னை நோக்கி - வாயுதேவனைப்பார்த்து, ஈது உரைக்கலுற்றான்-இவ்வார்த்தையைச் சொல்வானானான்; (எ-று)—அது மேற்கவியிற் கூறுகின்றார்.

போதர—தா - துணைவினை. காலம் - காலையென ஈறுதிரிந்தது. கமலம் - பூவுக்கு முதலாகுபெயர். மே - அன்பு; மேன்மையென்றுமாம். செய்கை - தொழிற்பெயர்; கை - விகுதி. ஏகல், ஏகு - பகுதி. தூதுவன்-தூது+அன்; குற்றியலுகரம் உயிர்வரச் சிறப்பின்மை கெடாது வகர உடம்படுமெய் பெற்றது. ஊதையங்கடவுள், அம் - அல்வழிச்சாரியை. மிகவிரை

விற் சென்றுவரும் ஆற்றலுடையவனாதலால், வாயு தூதனுப்பப்படுகிறான். பொன்-பொன்மயமான, கமல மென்றுமாம். (ரு)

சு. வடவரையதனின்மூன்றுமாண்குவடெறிந்துவெளவி
யுடல்சினவரவமுட்கவுததியிலுய்த்தமைந்த
படர்மதிமிலைச்சுஞ்சென்னிப்பண்ணவன்செயலைவெள்ளிக்
கடிவரைநகரத்தெய்திக்கண்டனைமீடியென்றான்.

(இ-ள்.) உடல் சினம் அரவம் உட்க - பகைக்கின்ற கோபத்தையுடைய சர்ப்பராசனாகிய ஆதிசேஷன் அஞ்சும்படி, வட வரையதனின் மூன்று மாண் குவடு - வடக்கிலுள்ள மேருமலையினது சிறந்த மூன்றுசிகரங்களை, வெளவி எறிந்து - பறித்து வீசி, உததியில் உய்த்த - கடலிலே கொண்டு தள்ளின, மைந்த - வலிமையையுடைய வாயுவே! (நீ), வெள்ளி கடி வரை நகரத்து எய்தி - வெள்ளிமயமான ஸ்ரீகைலாசகிரியிலேயுள்ள காவலையுடையசிவபுரத்திலே சென்று, படர் மதி மிலைச்சும் சென்னி பண்ணவன் செயலை - வளருந்தன்மையுடையதாகும் பிறைச்சந்திரனைச் சூடிய திருமுடியையுடைய பரமசிவனது செய்கையை, கண்டனை - பார்த்தறிந்து, மீடி - திரும்பிவருவாயாக, என்றான் - என்று (பிரமன் வாயுவுக்குக்) கட்டளையிட்டான்.

மேரு எவ்விடத்திலுள்ள தென்றால், வடக்கிலுள்ள தெனவேண்டுதலின், 'வடவரை' என அதனை விளக்கக்கூறினார். வரைஎன்னும் கணுவின் பெயர், மூங்கிலின்வினையும்மலைக்கு இருமடியாகுபெயர். உடல்சினம் - வினைத்தொகை. அரா அரவு எனக் குறியதன்கீழ் ஆக் குறுகி உகரமேற்றது; அம் - சாரியை. உட்கல் - வெட்குதலும், வலியொழிதலு மாகவுமாம். உததி - நீர்தங்குமிடம்; உதம் - நீர். முன்னொருகால் வாயுதேவனுக்கும் ஆதிசேஷனுக்கும் தமக்குள்யார்பலசாலியென்று விவாத முண்டாக, அதனைப்பரீக்ஷித்தறியும்பொருட்டு வாயுதேவன் மேருமலையின் சிகரத்தைப் பெயர்த்துத்தள்ளுவ தென்றும், ஆதிசேஷன் அதுபெயரவொட்டாமற் காத்துக்கொள்வதென்றும் ஏற்பாடு உண்டாகி, அங்ஙனமே இருவரும் தத்தம்வலிமையைக் காட்டத்தொடங்கிய பொழுது, ஆதிசேஷன் தனது ஆயிரம்படங்களாலும் மேருமலையின் ஆயிரஞ்சிகரங்களையுங் கவிந்து பெயரவொட்டாமற் பலநேரங் காக்க, பின்னர் வாயுதேவன் தன்வலிமையால் அம்மலைச்சிகரங்கள் மூன்றைப் பெயர்த்துக்கொண்டுபோய்த் தென்றிசையில் தள்ளிவிட்டா னென்பது இங்குக்குறித்த கதை. படர் - மதி - எதிர்கால வினைத்தொகை; முன்னே பூர்ணவடிவமாயிருந்தது பற்றிவந்த இறந்தகால வினைத்தொகை யெனினுமாம்: இனி, வருத்தத்தையுடைய சந்திர னென இரண்டாம்வேற்றுமை யுருபும்பயனும் உடன்றொக்க தொகையாகவுமாம். பண்ணவன் - கடவுள்; பண் - பெருமை, அதனையுடையவன். கடியென்னும் பலபொருளொருசொல் இங்கே காவலையுணர்த்திற்று. வெள்ளி - வெண்ணிறமுடையதெனக் காரணப்பெயர்; இ - விகுதி. நகரம் - செம்பொற்றிருக்கோயிலுமாம். கண்டனை - முன்னிலையொருமைமுற்றெச்சம். மீடி - ஏவலொருமை யெதிர்காலமுற்று; மீள் - பகுதி: த் - எழுத்துப்பேறு; அல்லது தி - சாரியை உகரங்கெட்டது: ளகரமழிந்ததும், தகரம் டகரமானதும் - சந்தி; இ- எதிர்காலமுணர்த்தும் விகுதி. வடவரையதனின்மூன்றுமாண்குவடு திரிகூடமெனப்படும். (சு)

எ. பல்லிதழ்வனசமேலோனினையனபகரநோன்றான்
வில்லுடைமதனவேளைவிழித்தடுகடவுண்முன்னரு

செல்லுவதரிதுசெல்லிற்றீமையேபயக்குமென்பா
லொல்லுவதன்றிச்செய்கையுள்ளமும்வெருவுமென்றான்.

(இ - ள்.) பல் இதழ் வனசம் மேலோன் - அனேகம்இதழ்களையுடைய தாமரைமலரின்மேலுள்ள நான்முகக்கடவுள், இனையன பகர - இத்தன்மையனவானசொற்களைச்சொல்ல, (கேட்ட வாயுதேவன்), 'நோன் தாள் வில் உடை மதனவேளை விழித்து அடு கடவுள் முன்னம் - வலிமையையுடைய தண்டத்தையுடைய (கருப்பு) வில்லினையுடைய மன்மதனை நெற்றிக் கண்ணைத்திறந்து பார்த்து அழித்த பரமசிவனது எதிரில், செல்லுவது - (ஒருவன்) போவது, அரிது - அருமையையுடையது; செல்லின் - போனால், தீமையே பயக்கும் - (அத்தொழில்) தீங்கையே தரும்; (ஆதலால்), இச்செய்கை என்பால் ஒல்லுவது அன்று - இந்தத் தொழில் என்னிடத்து உண்டாகுவதன்று; உள்ளமும் வெருவும் - (இதனைச் செய்யநினைக்க) மனமும் அஞ்சும்', என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

வனசம் - வனஜம்; நீரிற்பிறப்பதென்று பொருள்: தாமரைக்குக் காரணவிடுகுறிப்பெயர். தாள் - கால்: விற்கழுந்து; தனுர்த்தண்டம். இனி,நோன் தாள் வில் உடை என்பதற்கு - வலிய முயற்சியையும் ஒளியையுமுடைய என்றும் உரைக்கலாம். உடை - உடையஎன்பதன்தொகுத்தல். மதநன் என்னும்வடசொல்லுக்கு- (ஆண்பெண்களுக்குக்) களிப்பையுண்டாக்குபவனென்று பொருள்; மதம் - மிக்கமகிழ்ச்சி. வேள்என்பதற்கு - விரும்பப்படும் அழகுடையவனென்றும், ஆடவர்க்கும் மகளிர்க்கும் விருப்பத்தையுண்டாக்குபவனென்றும் பொருள் கொள்ளலாம்; இது - காமனென்னும் வடசொல்லின்பொருள்கொண்டது: வேள்என்னும் பகுதி-விரும்புஎன்னும் பொருளைத்தரும். குமரவேளைவிலக்குதற்கு 'மதனவேள்' என்றார். தீமையேபயக்கும், ஏ - தேற்றத்தோடு பிரிநிலை. 'என்றால்' என்றும்பாடம். உள் என்னும் உள்ளிடத்தின் பெயர், அங்குள்ளமனத்திற்கு இடவாகுபெயர்; அம் - சாரியை. (எ)

அ. கூற்றிதுநிகழ்ந்தவேலைக்கோகனதத்துமேலோன்
காற்றினுக்கரசைநோக்கிக்கம்பலைகொள்ளேல்யாண்டு
மூற்றமொடுலவல்செய்யுமொருவனைநீயேயன்றி
வீற்றொருதேவருண்டோமேலிதுபுரிதற்பாலோர்.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இது கூற்று நிகழ்ந்த வேலை - (வாயுதேவனது) இவ்வார்த்தை வெளிப்பட்டபொழுது, கோகனதத்து மேலோன் - தாமரைமலரின்மீது வீற்றிருக்கின்ற சதுர்முகதேவன், காற்றினுக்கு அரசை நோக்கி - வாயுபகவானைப் பார்த்து, கம்பலை கொள்ளேல் - (நீ அச்சத்தால்) நடுக்கங்கொள்ளாதே; யாண்டும் - எவ்விடத்தும், ஊற்றமொடு - வலிமையுடனே, உலவல் செய்யும் - சஞ்சரித்தலைச் செய்கின்ற, ஒருவன் நீயே அன்றி - நீஒருத்தனேயல்லாமல், இது புரிதற்பாலோர் - இத்தொழிலைச் செய்யுந்தன்மையுடையவராகிய, வீறு ஒரு தேவர் - (ஒப்புயர்வில்லாத) சிறப்புடைய ஒருகடவுளர், மேல் உண்டோ - வேறு உளரோ? [இல்லையென்றபடி]; (எ - று.)

கூறப்படுவது, கூற்று; செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டுப் பகுதிதன்னொற்றிரட்டிய பெயர்: முதனிலைதிரிந்த தொழிலாகுபெயரென்பாருமுளர். கோகநதம் என்னும் வடசொல்லுக்கு- சக்கரவாகங்கள் தன்னிடத்திலே குலாவப்பெறுவதென்றும், கோகம்என்னும் நதியில் ஆதியில்

உண்டான தென்றும் பொருள் கூறப்படும். 'கோகனகம்' எனத்திரித்தும் பாடங்கூறுவர். மேலோன் - மேலுலகங்களுள்ளும் மேலதாகிய சத்திய லோகத்துக்கு உடையவ னென்றும், மேன்மையையுடையவ னென்றும் உரைகூறலாம். நோக்கி என்பது, மேல் பத்தாங்கவியில் 'கூற' என்பத னோடு முடியும். கம்பலே - கம்பம் என்னும் வடமொழித் திரிபு. யாண்டு - வினாவடியாப்பிறந்து ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணர்த்தும் இடைச் சொல்; இங்கே, எஞ்சாமைப்பொருளது. ஒருவனே, ஐ - அசை; "யாவ ராயினு நால்வரைப் பின்னிடிற், றேவ ரென்பது தேறுமிவ் வையகம்" என் னுஞ் சிந்தாமணியிற்போல: இனி, ஒருவனே என்பது - முன்னிலையொரு மைக்குறிப்புவினையாலணையும்பெயரென்பாரு முளர். வீற்று எனப்பிரித்து - வேறு எனப்பொருள்கொண்டால், மேலிது எனஇயைத்து - மேலான இச் செய்கை யென்க. 'வேற்றொரு தேவர்' எனவும் பாடமுண்டு. (அ)

கூ. உற்றுழியுதவிசெய்வோருலப்புறுதெவையுமீவோ
ரற்றமிறவத்தாறுற்றோரமர்புரிவீரராவோர்
மற்றொருபொருளும்வெஃகார்வருத்தமுமோராராவி
யிற்றிடவரினுமெண்ணாரினிதெனமகிழ்வரன்றே.

(இ - ள்.) உற்ற உழி உதவி செய்வோர் - (பிறர்க்கு ஆபத்து) நேர் ந்தவிடத்து (அதனைநீக்கும்பொருட்டு) உதவுதல் செய்பவர்களும், உலப்பு உறுது எவையும் ஈவோர் - பிச்சமில்லாமல் எல்லாவற்றையுந் தானஞ்செ ய்பவர்களும், அறறம் இல் தவத்து ஆறு உற்றோர் - சோர்வில்லாத தவத்தி னது வழியிலே பொருந்தினவர்களும், அமர் புரி வீரர் ஆவோர் - போர் செய்கின்ற வீரத்தன்மையுடையவராகியவர்களும், (ஆகிய இவர்கள்), மற் று ஒரு பொருளும் வெஃகார் - (தாமகருதிய உதவி தானம் தவம் போர் என்னும் இவற்றையே யொழிய) வேறொருபொருளையும் விரும்பமாட்டார் கள்; வருத்தமும் ஓரார் - (மனமொழிமெய்களின) வருத்தத்தையுங் கருத மாட்டார்கள்; ஆவி இற்றிட வரினும் - உயிர் (உடம்பினின்று) ஒழியும்படி பெருந்துன்பம் நேர்வதானலும், எண்ணார் - (அத்துன்பத்தை ஒருபொரு ளாக) எண்ணமல், இனிது என - (தாம்கருதிய சம்காரியத்தை முடியாமல் இடையிலேவிடுதலினும் அத்துன்பத்தை அனுபவித்தல்) இனிமையுடைய தென்று கருதி, மகிழ்வர் - மனஞ்சந்தோஷிப்பார்; (எ - று.)—அன்றே - அன்றோ; தேற்றம்: ஈற்றசையெனினுமாம்.

உற்றுழி - பெயரெச்சவீறு தொகுத்தல். உலப்பு - ஒழிபு: தொழிலா குபெயர்; உல - பகுதி, பு - விகுதி, ப் - சந்தி. அமர் - ஸமரம்என்னும் வடமொழித்திரிபு. மற்று - இடைச்சொல்; இங்குப் பிறிதென்னும்பொரு ளது. இற்றிட, இடு - துணிவுப்பொருள்காட்டும்விகுதி. இனிதெனமகிழ் வர் - மரணத்துன்பத்தையே பெரிய இன்பமாக நினைப்பரென்றபடி. (கூ)

க0. ஆதலினெங்கட்கெல்லாமாற்றிடுமுதவிக்காகப்
போதியாலையவென்றுபுகழ்ச்சியாலினையபல்வே
றேதிடுபொருண்மைகூறலிசைந்தனனெழுந்துதீயின்
காதலன்விடைகொண்டேகிக்கயிலைமால்வரையிற்சென்றான்.

(இ - ள்.) ஆதலின் - ஆகையால், ஐய - அன்பனே! எங்கட்கு எல் லாம் ஆற்றிடும் உதவிக்கு ஆக - எங்களுக்கெல்லாஞ் செய்யவேண்டிய உபகாரத்தின்பொருட்டு, போதி - போவாயாக, என்று—, புகழ்ச்சியால் - கீர் த்தியாக, இனைய - இந்தவார்த்தைகளையும், பல் வேறு ஏது இடு பொருண்

மை-மற்றும் பல காரணங்களோடு பொருந்திய விஷயங்களின் தன்மையை யும், கூற - (பிரமன்) சொல்ல, (அதன்பின்) தீயின் காதலன் - அக்கினியின் நண்பனான வாயு, இசைந்தனன் - (போவதற்கு) உடன்பட்டு, எழுந்து - எழுந்திருந்து, விடை கொண்டு - (பிரமன்முதலியோரிடத்து) அனுமதிபெற்றுக் கொண்டு, ஏகி - பிரயாணமாய், கயிலை மால் வரையின் - பெரியகைலாச பருவதத்தினிடத்தே, சென்றான் - போய்ச்சேர்ந்தான்; (எ - று.)

பிரமன் வாயுவை 'ஜய' என்றது, அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. புகழ்ச்சியால் - தோத்திரமாக என்றபடி. ஏது - ஹேதுஎன்னும்வடமொழித்திரிபு; பொதுவிதியால், வருமொழிமுதலுயிர்வந்தபொழுது ஈறுகெட்டது. தீயின்காதலன் - அக்கினிசகா. காதல் - அன்பு; அதனையுடையவன் - காதலன்: மால் - பெருமையுணர்த்தும் உரிச்சொல். மோதியால், ஆல் - அசை. ஏதிடு என்பதை - ஏத்திடுஎன்பதன்தொகுத்தலாகக்கொண்டு, சிறப்பிக்கின்ற பொருளென்றுமாம். 'ஓதிடுபொருண்மைகூறவுணர்ந்தனன்' என்றும் பாடம். பொருண்மை, மை - தன்மைப்பொருளுணர்த்தும்விகுதி. விடை - விடுதல்; ஐ - தொழிற்பெயர்விகுதி. (௧0)

௧௧. குன்றதன்புடையில்வீழுங்குரைபுனலாற்றினாடி
மன்றலங்காமர்காவின்மலர்மணமளாவிவாரித்
தென்றியாயசைந்துமெல்லச்சினகரம்புகுதுமெல்லை
நின்றதோர்நந்திகாணூஉவுரப்பினனெடிதுசீறி.

(இ - ள்.) (வாயுதேவன்), குன்றதன் புடையில் வீழும் குரை புனல் ஆற்றின் ஆடி - அந்தக் கைலாசகிரியினது பக்கத்திலே பெருகுகின்ற ஒலிக்கின்ற நதியின் நீரிலே ஸ்நானஞ்செய்து, மன்றல் அம் காமர் காவின் மலர் மணம் அளாவி வாரி - வாசனையையுடைய அழகிய விரும்பப்படுந்தன்மையையுடைய சோலைகளிலுள்ள பூக்களின் வாசனைமுழுவதையுஞ் சேர்ந்து கவர்ந்துகொண்டு, தென்றி ஆய் - (தன அங்கிஜரூபத்தோடு செல்லாமல்) தென்றற்காற்றின்வடிவமாய், மெல்ல அசைந்து - மெதுவாய்நடந்து, சினகரம் புகுதும் எல்லை - திருக்கோயிலினுள்ளே பிரவேசிக்கின்ற சமயத்தில், நின்றது ஓர் நந்தி - (அக்கோயிலின்வாயிலிலே காவல்காத்து) நின்றதொரு நந்திதேவர், காணூஉ - (வாயுசெல்வதைப்) பார்த்து, நெடிது சீறி - மிகவுங்கோபித்து, உரப்பினன் - வாயாலதட்டினார்; (எ - று.)

காமர் - காமம் என்னும் வடசொல்லின் திரிபு; 'காமமருவு' என்பது 'காமர்' என விகாரப்பட்டதெனினும் பொருந்தும். தென்றி என்பதில், தெற்குஎன்பதன்விகாரமாகிய தென் - பகுதி; இ - பெயர்விகுதி, து - சாரியை, அது நகரமாத்திரிந்து உகரங்கெட்டது: தெற்கிலிருந்துசெல்லுவதென்றுபொருள். மெல்லஅசைந்து - மந்தமாருதமாகி; இளங்காற்றாய். மெல்ல - மென்மையென்னும்பண்பினடியாப்பிறந்த குறிப்புவினையெச்சம். சினகரம் - ஜிநக்ருஹம்என்னும் வடமொழித் திரிபு; இந்த ஜிநாலயத்தின் பெயர், இலக்கணையாய்ப் பின்பு எல்லாக்கடவுளாலயத்திற்கும் பொதுவாக வழங்கிவருகின்றது: இனி, இதனை அஜநக்ருஹம் என்பதன் விகாரமென்றுங் கொள்ளலாம்; அஜநன்என்று முதற்கடவுளுக்குப் பெயராதலால்: அஜநன் - பிறப்பில்லாதவன் என்று அவயவப்பொருள். புகுதும் - விகுதி காலங்காட்டும் எதிர்காலப்பெயரெச்சம்; து - சாரியை. நின்றதோர் நந்தி - திணைவழுவமைதி; தேவர்களை இருதிணையாகவுஞ் சொல்லாமாதலால், இங்ஙனங் கூறப்பட்டது. இனி, நிற்குந்தொழிலையுடைய நந்தி யென்றுமாம்; நின்றது - இறந்தகாலத்தொழிற்பெயர். நந்தி - சிவனைச்சூழ்ந்துள்ள அடி

யார்களாகிய பிரமதகணங்களுக்குத் தலைவர். காணூஉ - ஊ விகுதி காலங் காட்டுகிற செய்யூஎன்னும்வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம்: அளபெடை, செய்புளோசைகுன்றுதவிடத்து வந்ததனால், இன்னிசையளபெடையாம்; மாத்திரை - மூன்று. உரப்பினன், உரப்பு - பகுதி. நெடிது - நெடுமையென்னும்பண்பின் அடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; சீறிஎன்றதனை விசேடித்து வினையுரியாய்வந்தது: மிகுதியாய் என்றுபொருள். நெடிது சீறியுரப்பியது, தனதுகட்டளையைப்பெறாமல் வஞ்சனையாய் உட்செல்லலுற்றதனால். உரப்புதல் - உங்காரஞ்செய்தல். 'தென்றலாய்' என்றும், அளபெடையில்லாமல் 'காணூ' என்றும் பாடமுண்டு. (கக)

கஉ. பொற்பிரம்பொன்றுபற்றிப்பொலன்முதற்கடையைப்போ[ற்றி
நிற்புறுமாணைவள்ளனெடுஞ்சினத்துரப்பலோடுங்
கற்பொழியெழிலிகான்றகனையொலிகேட்டபாம்பின்
முற்படர்கின்றகாலோன்மொய்ம்பிலன்வெருவிவீழ்ந்தான்.

(இ - ள்.) பொன் பிரம்பு ஒன்று பற்றி - பொன்மயமான பிரம்பொன்றை (க்கையிலே) பிடித்துக்கொண்டு, பொலன் முதல் கடையை போற்றி - பொன்னிறலாகிய (திருக்கோயிலின்) தலைவாயிலைக் காத்து, நிற்புறும் - நின்றருளுகின்ற, ஆணை - தவறுதகட்டளையையுடைய, வள்ளல் - வரையாதுகொடுக்குந் தன்மையையுடைய திருநந்திதேவர், நெடு சினத்து உரப்பலோடும்-மிகுந்த கோபத்தோடு வாயாலதட்டினவுடனே, முன் படர்கின்ற காலோன்-முன்னேசெல்லுகின்ற வாயுதேவன், கல் பொழி எழிலி கான்ற கனை ஒலி கேட்ட பாம்பின்-கல்மழையைப்பெய்கின்ற காளமேகம் வெளிப்படுத்தின ஒலிக்கின்ற இடியினோசையைச் செவியுற்ற பாம்புபோல, மொய்ம்பு இலன் - செல்லும்வலிமையில்லாதவனாய், வெருவி வீழ்ந்தான் - பயந்து கீழ்விழுந்தான்; (எ - று.)

பொலன் - பொன்என்பதன் விரித்தல் விகாரம்; "பொன்னென் கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ், செய்யுண் மருங்கிற் றொடரிய லான" என்னுந் தொல்காப்பியச்சூத்திரவிதியால் பொன என்பது பொலன்எனவிகாரப்பட்டுப் பின்பு "மகர விறுதி யஃறிணைப்பெயரி,னகரமொ டுறழா நடப்பன வுளவே" என்னும் நன்னூற்சூத்திரவிதியால் பொலன்என இறுதிப்போலிபெற்றதெனினும் அமையும்: இனி, நிகண்டு முதலியவற்றுள் பொலம்என்றே ஒருபெயர் வழங்குதலால் அதன்போலியெனினும் இழுக்காகாது. நிற்புஉறும் - நிற்றலைப்பொருந்திய என்று பொருள்: நிற்பு - தொழிற்பெயர்; நில் - பகுதி, பு - விகுதி, லகரம் றகரமானது - சந்தி. ஆணை - ஆஜ்ஞாஎன்னும்வடசொல்லின் திரிபு. வணங்காதாரை வெகுண்டு சிக்ஷித்தலும, வணங்கினாரை அருள்கொண்டு ரக்ஷித்தலும் ஆகிய பெருமைக்குணங்களை யுடையவனென்பார், 'ஆணைவள்ளல்' என்றார். உரப்பலோடும், உம் - விரைவுகுறித்தது. எழிலி - எழுச்சியையுடையதெனக் காரணப்பெயர்: எழில் - எழுதல்; தொழிற்பெயர்: எழு - பகுதி, இல் - விகுதி. கான்ற, கால் - பகுதி. பாம்புகள் இடியோசையைக் கேட்டமாத்திரத்தில் அஞ்சி ஒடுங்கு மென்பது நூற்றுணிபு; "விரிநிற நாகம் விடருள தேனு, முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்" என நாலடியாரிலுங் காண்க. பாம்பின், இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது. முன்படர்கின்ற - துரிதமாய்ச்செல்கின்ற என்றும் பொருள் கொள்ளலாம். காலோன் - காலுக்கு உடையவன்; கால் - காற்று: இதில், கால்வலியுடையான் என்னும் பொருளுந் தோன்றும். (கஉ)

வேறு.

கங. ஒல்லெனவீழ்வுறுமுயிர்ப்பின்காவல
னெல்லையிலச்சமோடிரங்கியேயெழீஇத்
தொல்லையினுருக்கொடுதோன்றிநந்திதன்
மல்லலங்கழல்களைவணங்கிக்கூறுவான்.

(இ - ள்.) ஒல்என வீழ்வுறும் - விரைவாக விழுந்த, உயிர்ப்பின் காவலன் - காற்றுக்குத் தலைவனான வாயுதேவன், எல்லை இல் அச்சமோடு - அளவில்லாத பயத்துடனே, இரங்கி - பச்சாத்தாபத்தையும் அடைந்து, எழீஇ- எழுந்திருந்து, தொல்லையின் உரு கொடு தோன்றி - பழமையான தனது நிஜ ரூபத்தைக் கொண்டு வெளிப்பட்டு, நந்திதன் மல்லல் அம் கழல்களை வணங்கி - நந்திகேசுவரரது மிகுந்த அழகையுடைய திருவடிகளை நமஸ்கரித்து, கூறுவான் - (சிலவார்த்தை) சொல்வானானான்; (எ - று.)—அவை மேலைந்துகவிகளிற் கூறுகின்றார்.

ஒல்லென - விரைவுக்குறிப்பு; அநுகாரணமென்கிற ஒலிக்குறிப்பாயின், ஒல்என்னும் ஓசைபட என்றுபொருளாம். வீழ்வுறும் - விழுதலைப்பொருந்திய என்று பொருள். வீழ்வு - தொழிற்பெயர்; வீழ் - பகுதி, வு - விகுதி: உ - விகுதியாயின், வ் - எழுத்துப்பேறு. உயிர்ப்பு - மூச்சுமாம். உயிர்ப்பின்காவலன் - ஆறும்வேற்றுமைத்தொகை; இன் - சாரியை. சுவாசத்திற்கு இனிய அரசனென்றுமாம். காவலன் - காத்தலில்வல்லவன்; அல்லது, காத்தற்றொழிலையுடையவன். எல்லையில் - அந்தஇடத்திலே எனவும், அந்தச்சமயத்திலே என்றுங் கொள்ளலாம். அச்சம் - தொழிற்பெயர். இரங்கி - அநுதபித்து; தான் செய்தது தவறென்று தானே மனம் வருந்தி. எழுந்து என்பது எழீஇ என விகாரப்பட்டு அளபெடுத்தது; இது- சொல்லிசையளபெடையின்பாற்படும்: மூன்று மாத்திரை. கொடு - கொண்டு என்பதன் விகாரம்; எடுத்து என்றபடி. தோன்றி - வெளிப்படையாய் எதிரிற்காணப்பட்டு. நந்திதன், தன் - சாரியை. மல்லல் - உரிச்சொல்; இங்கே, மிகுதியென்னும்பொருளது. அம் - உரிச்சொல்.

இதுமுதற் பதின்மூன்றுகவிகள் - மூன்றாஞ்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள்; இவற்றில், நான்காஞ்சீர் கூவிளச்சீராகவே நிற்கும். (கங)

கச. மாலயன்மகபதிவானுளோரெலா
மாலமர்கடவுளையடைதன்முன்னிநீ
காலையதறிந்தனைகடிதுசெல்கென
மேலுரைசெய்தனர்வினையினேனுடன்.

இதுமுதல் ஐந்துகவிகள் - வாயுவின் வார்த்தை.

(இ - ள்.) மால் - திருமாலும், அயன் - பிரமனும், மக பதி - யாகங்களுக்குத்தலைவனான இந்திரனும், வான்உளோர் - மேலுலகத்திலுள்ளபிற தேவர்களும், எலாம் - (மற்றைமுனிவர்முதலியோர்) எல்லோரும், ஆல் அமர் கடவுளை அடைதல் முன்னி - கல்லாலமரத்தின்நிழலிலெழுந்தருளிய சிவபெருமானைச் சரணமடையவேண்டுதலைக் கருதி, நீ காலையது அறிந்தனை கடிது செல்க என - நீ போய்க் கடவுளது சமயத்தை அறிந்துகொண்டு விரைந்துவருவாயாக வென்று, வினையினேனுடன் - தீவினையையுடைய என்னுடனே, மேல் உரை செய்தனர் - மேன்மையான வார்த்தைகளைச் சொன்னார்கள்; (எ - று.)

மகபதி - நூறுஅசுவமேதயாகஞ்செய்து இந்திரபதவிபெறுதல்பற்றி வந்தபெயர். வான்என்னும் ஆகாயத்தின்பெயர், அங்குஉள்ள சுவர்க்கத்துக்கு இடவாகுபெயர். மால் - மாயையின் உருவானவன். "ஆலமர நீழலறனல்வர்க் கன்றுரைத்த, ஆலமமர் கண்டத் தான்" என்றார் பிறரும்; இனி, ஆல்என்பதை ஆலமென்பதன்விகாரமெனக்கொண்டு, விஷம் (கண்டத்திற்) பொருந்திய கடவுளென்றுமாம். காலையது, அது - துணைப்பெயர். செல்கென - வியங்கோளீறு தொகுத்தல். பிரமன் முதலியோரதி நல்ல கட்டளையை அன்போடு தான் நிறைவேற்றியது நல்வினையேயாயினும் அது சிவாபசாரமாய்முடிந்ததனால், 'வினையினேன்' எனத் தன்னைத் தானே வெறுத்துக்கொண்டான்; இனி, இட்டதொழிலைச்செய்தலில் வல்ல என்னுடன் என்றும் பொருள்கொள்ளலாம்: வினையினேனை - வேலைக்காரனான நான். மேலுரை - தோத்திரமொழி. மேல் - மேருமலையின்மேலிடத்தி என்றுமாம். (கச)

கரு. கறுத்திடுமிடறுடைக்கடவுளாடலைக்
குறிக்கரிதஞ்சுவல்குறுகவென்றியான்
மறுத்தனனனையர்தம்வருத்தங்கூறியே
யொறுத்தெனைவிடுத்தனருடையவன்மையால்.

(இ - ள்.) கறுத்திடும் - (நஞ்சையமுதுசெய்ததனால்) கருமைநிறமடைந்த, மிடறு உடை - கண்டத்தையுடைய, கடவுள் - முழுமுதற் கடவுளாகிய பரமசிவனது, ஆடலை - திருவிளையாட்டை, குறிக்க அரிது - எண்ணுதலும் முடியாது; (ஆதலால்), குறுக அஞ்சுவல் - (யான்) செல்லுதற்குப் பயப்படுந்தன்மையுடையேன்,' என்று - என்றுசொல்லி, யான் - நான், மறுத்தனன்-(முதலிலே அவர்கள்கட்டளையை) மறுத்துவிட்டேன்; (பின்பு), அனையர் - அவர்கள், தம் வருத்தம் கூறியே - தங்களது வருத்தத்தையே சொல்லி, எனை ஒறுத்து - என்னை நிர்ப்பந்தித்து, உடைய வன்மையால் - தாங்கள் உடைத்தாயிருக்கிற வலிமையால், விடுத்தனர் - அனுப்பினார்கள்.

பலாத்காரமாய் என்னைத் தூதுவிட்டார்கள் என்றான். ஆடலை - வலிமையைஎன்றுமாம். குறிக்கரிது - வினையெச்சவீறு தொகுத்தல். குறிக்க-தொழிற்பெயர்ப்பொருளில்வந்த செயவெனெச்சம். அஞ்சுவல், அல் - தன்மையொருமைவினைமுற்றுவிகுதி; வ் - எதிர்காலவிடைநிலை. என்றியான் - இகரக்குறுக்கம். மறுத்தனன் - தன்மையொருமைவினைமுற்று. வன்மை - வலியஅதிகாரம். (கரு)

கசு. ஆதலினடியனேனஞ்சியஞ்சியே
மேதகுதென்றியாய்மெல்லவந்தன
னோதிடநினைந்திலனுனக்குமற்றிது
பேதைமையுணர்வினேன்பிழைபொறுத்திநீ.

(இ - ள்.) ஆதலின் - ஆகையால், அடியனேன் - உனது அடியவனாகிய யான், அஞ்சிஅஞ்சியே - மிகப்பயந்தே, மே தகு தென்றி ஆய் - (யாவராலும்) அன்புவைக்கத்தக்க தென்றலின் வடிவமாய், மெல்ல வந்தனன்-மந்தகதியாய் வந்தேன்; இது உனக்கு ஓதிட நினைந்திலன் - வந்த இச்செய்தியை நினக்குச் சொல்ல எண்ணங்கொள்ளாமற் போயினேன்; பேதைமை உணர்வினேன் - அற்பபுத்தியையுடைய என்னுடைய, பிழை - இக்குற்றத்தை, நீ—, பொறுத்தி - பொறுத்தருள்வாயாக; (எ - று.)

ஆதலின், இன் - ஐந்தனுருபு, ஏதுப்பொருளது. அடியனேன் - அடிமை யென்னும் பண்புப்பெயரின் அடியாப்பிறந்து தாழ்வுப்பொருளுணர நின்ற தன்மையொருமைக் குறிப்பு வினையாலணையும்பெயர்ச்சொல்; அன்-சாரியை. அஞ்சிஅஞ்சி - அடுக்கு மிகுதி விளக்கிநின்றது. மற்று அசை. 'மேதகுதென்றல்' என்றது, தென்றல் எல்லாவுயிர்களுக்கும் இனிமையைச்செய்தலால். (கசு)

கஎ. தானவர்தொழவருதகையில்சூரனேன்
மானமதொருவியேவருத்துற்றுநைந்தன
னானதொன்றுணர்கிலேனறிவுமாழ்கினே
னேனையதேவருமினையநீரரே.

(இ-ள்.) தானவர் தொழ வரு - அசுரர்களெல்லாரும் வணங்க (அவர்களுக்கு அரசனாய்) வந்த, தகை இல் சூரனேன் - நல்லொழுக்கமில்லாத சூரபதுமனென்னும் அசுரனேன், மானமது ஒருவியே - மானங்கெட்டு, வருத்து உற்று - வருத்தமடைந்து, நைந்தனன் - வலிமையொடுங்கினேன்; (ஆகையால்), ஆனது ஒன்று உணர்கிலேன் - செய்யத்தக்கதான ஒன்றையும் அறியமாட்டாதவனாய், அறிவு மாழ்கினேன் - புத்திமயங்கியவனானேன்; ஏனைய தேவரும் - மற்றையதேவர்களும், இனைய நீரரே - இத்தன்மையதான குணத்தையுடையவர்களேயாகின்றார்கள்; (எ - று.)

தானவர் என்பதற்கு - (காசியபமுனிவரது மனைவியாகிய) தனு என்பவளது மக்களென்று பொருள்: வடமொழித் தத்திதாந்த நாமம்; இது - இங்கே பொதுப்பட அசுரரென்னுமாத்திரையாய் நின்றது. தகை - தகுதி, சற்குணம்; தொழிலடியாகப்பிறந்த தாயினும், பொருளால் பண்புப்பெயர்; நல்லொழுக்கத்துக்கு ஆகுபெயர். இனி, தகை - தளர்ச்சியுமாம். 'தகைவில்' என்ற பாடத்துக்கு - (எங்கும்) தடைப்படுதலில்லாத வென்க. மானமாவது - எப்பொழுதும் தம் நிலையினின்று தாழாமையும், ஊழ்வினையால் தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையு மாகியதொரு பெருமைக்குணம். இனி, வலியென்றுமாம். அது - முதல் வேற்றுமைச்சொல்லுருபு. வருத்து-முதனிலைதிரிந்த தொழிற்பெயர்: விகுதி புணர்ந்துகெட்டது. ஆனது - ஆதலினால், ஒன்று - ஒருகாரியத்தையும், உணர்கிலேன் என்றுமாம். உணர்கிலேன் - எதிர்மறைத்தெரிநிலைத் தன்மையொருமைமுற்றெச்சம்; கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை: எதிர்மறையாகாரவிடைநிலை புணர்ந்துகெட்டது; இனி, கு - சாரியை, இல் - எதிர்மறையிடைநிலை யெனினும் அமையும். மாழ்கினேன் - மாழ்கு - பகுதி. ஏனைய - ஏனையென்னும் இடைச்சொல்லின்மேற் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். தேவரும், உம்மை - இறந்தது தழுவிய எச்சப்பொருளது; முற்றுப் பொருளதென்னவுமாம். நீரர் - நீர்மையென்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய நீர் - பகுதி. (கஎ)

கஅ. அறைதருகணத்தருளாதியாகிய
விறைவநின்முனிவினுக்கிலக்குற்றாரிலை
சிறியவென்பொருட்டினாற்சீற்றங்கோடியோ
பொறைபுரிந்தருளெனப்போற்றிவேண்டினன்.

(இ-ள்.) அறைதரு - (யாவராலுஞ் சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற, கணத்தருள் - சிவகணத்தவர்களுள், ஆதி ஆகிய - முதல்வனான, இறைவ - தலைவனே! நின் முனிவினுக்கு - உனது கோபத்துக்கு, இலக்கு உற்றார் - (தகுந்த) லக்ஷியமாகப் பொருந்தியவர், இலை - (எவ்வுலகத்தி

லும் எவரும்) இல்லை; (அங்ஙனமிருக்க), சிறிய என்பொருட்டினால் - அற்பனை அடியேன்விஷயமாக, சீற்றம் கோடியோ - கோபங்கொள்வையோ? [சிறியேன்மீதுகோபித்தல் தகுதியன்றென்றபடி]; (ஆதலால்), பொறை புரிந்தருள் - (நான்செய்த பிழையைப்) பொறுத்தல் செய்தருளுவாயாக, என - என்றுசொல்லி, போற்றி - (நந்திதேவரை) வணங்கி, வேண்டினான்- (வாயுதேவன்) பிரார்த்தித்துநின்றான்; (எ - று.)

கணத்தாவார் - கைலாசத்திற் பரமசிவனைச்சுற்றிலும் எப்பொழுதும் இருந்து பலவகை உபசாரங்களைச் செய்கின்ற பக்தர்களாகிய நந்தி, பிருங்கி, சண்டி முதலியோர். இலக்கு - வடசொற்றிரிபு. 'நின்முனிவினுக்கிலக்காகாரில்லை' என்றதனால், யாவரையுங் கோபித்து அழிக்கவல்ல நந்திதேவரது ஆற்றல் போற்றப்பட்டது. 'சிறியவென்பொருட்டினாற் சீற்றங் கோடியோ' என்றதனால், "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம், பெரியோ ராயிற் பொறுப்பது கடனே" என்ற நீதியை வாயுவிண்ணப்பித்தான். பொறை - தொழிற்பெயர்; ஐ - விகுதி. (௧௮)

௰௯. ஆண்டகைநந்தியெம்மடிகளவ்வழி
மூண்டெழுதன்பெருமுனிவுதீர்ந்தியாம்
மீண்டுநின்னுயிர்தனையீதுநிற்கலை
மீண்டனைபோகெனவிடைதந்தேவினான்.

(இ - ள்.) ஆண்தகை - ஆண்மைக்குணத்தையுடைய, நந்தி எம் அடிகள் - நமது தலைவராகிய திருநந்திதேவர், அவ் வழி - அப்பொழுது, மூண்டு எழு தன் பெரு முனிவு தீர்ந்து - (வாயுவின்மீது) பொங்கியெழுந்த தம்முடைய பெரிய கோபந் தணிந்து, (அவனைநோக்கி), 'யாம் ஈண்டு நின் உயிர்தனை ஈதும் - நாம் இப்பொழுது உனது உயிரை (உனக்குக்) கொடுத்தருளுவோம்; நிற்கலை - (இங்கே) நில்லாதே; மீண்டனை போகு - திரும்பிப்போய்விடு,' என - என்று, விடை தந்து - உத்தரங்கூறி, ஏவினான்-(அவ்வாறுசெய்ய) நியமித்தருளினார்; (எ - று.)

ஆண்தகை - பௌருஷம்; பராக்கிரமம். நந்தியை 'எம்மடிகள்' என்றதனால், நூலாசிரியரது சைவபக்தி வெளிப்படுகின்றது. 'யாம் ஈதும்' என்ற தனித்தன்மைப்பன்மை, உயர்வுதோன்ற நின்றது. 'நின்னுயிர்தனையீதும்' என்றதனால், யாவருயிரும் நந்திகேசுவரரது கைவசத்தி லுள்ளதென்பது போதருகின்றது. (௧௯)

௨௰. சீரியநந்தியந்தேவனேவலு
மாருதனவனடிவணங்கிவல்லையி
னேரறுகயிலையினீங்கிநீடுபொன்
மேருவில்விண்ணவர்குழுவைமேவினான்.

(இ - ள்.) சீரிய - சிறப்பையுடைய, நந்தி அம் தேவன் - அழகிய நந்திகேசுவரர், ஏவலும் - இவ்வாறு கட்டளையிட்டனுப்பியவளவில், மாருதன் - வாயுதேவன், அவன் அடி வணங்கி - அந்த நந்தியினது திருவடிகளை நமஸ்கரித்து, வல்லையின் - விரைவாக, நேர் அறு கயிலையின் நீங்கி - ஒப்பில்லாத திருக்கயிலாயமலையினின்று நீங்கிவந்து, நீடு பொன் மேருவில் - உயர்ந்த பொன்மயமான மேருமலையிலே, விண்ணவர் குழுவை - தேவர் கூட்டத்தை, மேவினான் - அடைந்தான்; (எ - று.)

சீரிய - குறிப்புப்பெயரெச்சம்; இ - சாரியை. 'மூரிகொணந்தியெம் முதல்வனேவலும்' என்றும், 'கயிலையை' என்றும் பாடம். (௨௰)

உக. மேவருகாலினான்விரிஞ்சன்மாயவன்
பூவடிவந்தனைபுரிந்துநந்திதன்
காவலின்வன்மையுநிகழ்ந்தகாரியம்
யாவதுமுறைபடவியம்பினானரோ.

(இ - ள்.) மேவரு காலினான் - (தேவர்கூட்டத்தை) வந்தடைந்த வாயுதேவன், விரிஞ்சன் மாயவன் பூ அடி வந்தனை புரிந்து - பிரமன் திருமால் என்னுஞ் சிறந்ததேவர்களது தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கிநின்று, நந்திதன் காவலின் வன்மையும் - நந்திதேவரது காவற்பாட்டின் வலிமையையும், நிகழ்ந்த காரியம் யாவதும் - (அங்கு) நடந்த செய்தி முழுவதையும், முறைபட - கிரமமாக, இயம்பினான் - (அவர்களிடம்) சொன்னான்; (எ - று.)---அரோ - ஈற்றசை.

மேவு என்னும் பகுதியும் வா என்னுந் துணைவினையுஞ் சேர்ந்து, தொகுத்தலும் குறுக்கலும் விரித்தலு மாகிய விகாரம் பெற்று, மேவருஎன வினைத்தொகையாய் நின்றது; இனி, மே வரு எனப் பிரித்து - அன்போடு வருகின்ற என்றும் உரைக்கலாம். 'முறைப்பட' எனவும் பாடம். (உக)

உஉ. காற்றுரைவினவியேகமலக்கண்ணனு
நாற்றிசைமுகத்தனுநாகர்செம்மலுஞ்
சாற்றருந்துன்பினர்தம்மிலோர்ந்திடாத்
தேற்றமொடினையனசெப்பன்மேயினார்.

(இ - ள்.) காற்று உரை வினவியே - அந்த வாயுவின் வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலே, கமலக் கண்ணனும் - செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய திருமாலும், நால் திசை முகத்தனும் - நான்குதிக்குக்களிலும் முகத்தையுடைய பிரமனும், நாகர் செம்மலும் - தேவர்க்கு அரசனான இந்திரனும், சாற்று அரு துன்பினர் - சொல்லமுடியாத துன்பத்தையுடையவர்களாய், தம்மில் ஓர்ந்திடா - தமக்குள் ஆலோசித்து, தேற்றமொடு - (இன்னது செய்வதென்ற ஒரு) உறுதிப்பாட்டுடனே, இனையன - இவ்வார்த்தைகளை, செப்பல் மேயினார் - சொல்லத்தொடங்கினார்கள்; (எ - று.)---அவை மேலிரண்டுகவிகளிற் கூறுகிறார்.

கமலக்கண்ணன் - புண்டரீகாக்ஷன்; "தாமரைக் கண்ணான்" என்றார் திருவள்ளுவரும். நாகம் - தேவலோகம்; அதிலுள்ளார், நாகர். (உஉ)

உங. எந்தைதன்செய்கைதேர்ந்தேகுநீயென
வெந்திறன்மருத்தினைவிடுத்துமாங்கவ
னந்திதனாணையானடுக்கமுற்றிவண்
வந்தனனச்சுறுமனத்தனாகியே.

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) எந்தைதன் செய்கை தேர்ந்து ஏகு நீ என - நமது தலைவனான சிவபிரானது செயலை நீ அறிந்து வா என்று, வெம் திறல் மருத்தினை விடுத்தும் - கொடிய வலிமையையுடைய வாயுதேவனை (நாம்) அனுப்பினோம்; அவன் - அந்தவாயு, ஆங்கு - அவ்விடத்தில் [கயிலையில்], நந்திதன் ஆணையால் - நந்திதேவரது கட்டளையால், நடுக்கம் உற்று - நடுங்குதலையடைந்து, அச்சு உறு மனத்தன் ஆகியே - அச்சம்மிகுந்த மனத்தையுடையவனாய், இவண் வந்தனன் - (கோயிலினுட் செல்ல இயலாமல்) இங்கே வந்துவிட்டான்; (எ - று.)

உடம்பு நடுங்குதல் - அச்சம்பற்றிய மெய்ப்பாடு. அச்சு - பயம்; அஞ்சு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். (௨௩)

௨௪. மன்னியகயிலைமால்வரையின்யாமெலா
மின்னினியேகியேயீசன்றன்முனா
முன்னருங்காலமொடுற்றநங்குறை
பன்னுதலணிபெனப்பலருங்கூறினார்.

(இ - ள்.) (ஆதலால்), யாம் எலாம் - நாம் அனைவரும், இன் இனி - இப்பொழுதே, மன்னிய கயிலை மால் வரையின் ஏகியே - (அழிவில்லாமல்) நிலைபெற்ற பெரிய கைலாசபருவதத்திலே சென்று, ஈசன் தன் முனம் - (யாவர்க்கும்) தலைவனான சிவபிரானது முன்னிலையில், உன் அரு காலமொடு உற்ற நம் குறை பன்னுதல் - எண்ணமுடியாத பலகாலமாகப் பொருந்திய நமது குறைகளைக் கூறுதலே, அணிபு - (செய்யும்படி) நிச்சயித்தகாரியம், என - என்று, பலரும் கூறினார் - (பிரமன்முதலியோருள்) அநேகர்கள் சொன்னார்கள்; (எ - று.)

இன்னினி - சிறிதுங் காலங்கழியாமை குறித்துநின்ற இனிஇனி யென்னும் இடைச்சொலலடுக்கின் விகாரம்; இது, மிகவிரைவுகுறிக்கும். முனம் - இடமுன். அணிபு - தொழிலாகுபெயர். 'உன்னருங்காலமொடுற்று' என்ற பாடத்துக்கு, நினைத்தற்குங்கூடாத மிகச்சிறிதுபொழுதினுள்ளே சேர்ந்து என்று பொருள். (௨௪)

௨௫. இவ்வகையவரெலாமிசைந்துசெம்பொனின்
மெய்வரைநீங்கியேவெள்ளிவெற்பினிற்
றெய்வதக்கோயின்முன்சென்றுநந்தியை
யவ்விடைதொழுதிவையறைதன்மேயினார்.

(இ - ள்.) இவ் வகை - இந்தவிதமாக, அவர் எலாம் - அந்தத்தேவர் முதலியோர் யாவரும், இசைந்து - செய்யச் சம்மதித்து, செம் பொனின் மெய் வரை நீங்கியே - சிவந்த பொன்மயமான வடிவத்தையுடைய மேருமலையை விட்டு, வெள்ளி வெற்பினில் - வெள்ளிமயமான கைலாசகிரியிலே, தெய்வதம் கோயில் முன் சென்று - தெய்வத்தன்மையையுடைய சிவாலயத்தின் திருவாயிலிற் போய்ச்சேர்ந்து, அ இடை - அந்த இடத்திலே, நந்தியை - நந்திதேவரை, தொழுது - நமஸ்கரித்து, இவை அறைதல் மேயினார் - இவ்வார்த்தைகளைக் கூறத்தொடங்கினார்கள்; (எ - று.)—அவை மேலிற்கவியிற் கூறுகின்றார்.
தெய்வதம் - தைவதம்; வடசொல்விகாரம். இசைந்து-இயைந்து; போலி.()

வேறு.

௨௬. நந்தியந்தேவுகேணங்கள்பாற்றுன்பெலாஞ்
சிந்தைசெய்திடுதியத்தேவதேவற்கியாம்
வந்த[illegible]றுதியேவல்லைநீயெமையவன்
முந்துநக்காட்டெனாமுகமனோடுரைசெய்தார்.

(இ - ள்.) 'நந்தி அம் தேவு' - அழகிய நந்திதேவனே! கேள் - (அடியேங்கள் செய்யும் விண்ணப்பத்தைச் செவிகொடுத்துக்) கேட்டருளுவாயாக; நங்கள்பால் துன்பு எலாம் - எங்களிடத்துள்ள [அசுரர்களாலாகிய] துன்பங்கள் முழுவதையும், சிந்தை செய்திடுதி - திருவுள்ளம்பற்றியருளுவாயாக; அத் தேவதேவற்கு - தேவர்களுக்கெல்லாந் தேவனாகிய அப்பர

மசிவனுக்கு, யாம் வந்த ஆறு ஓதி-நாங்கள் வந்த செய்தியைத் தெரிவித்து, வல்லை - சீக்கிரத்திலே, நீ—, எமை - எங்களை, அவன் முந்துற காட்டு - அவ்வெம்பெருமானது சன்னிதானத்தில் (அழைத்துக்கொண்டு போய்க்) காண்பிப்பாயாக,' என - என்று, முகமனோடு - உபசாரவார்த்தைகளுடனே, உரைசெய்தார் - (தேவர்கள்) சொன்னார்கள்; (எ - று.)

தேவு என்பதும், தெய்வத்துக்கு ஒருபெயர்; இதனைத் தேவனென்னும் வடமொழியின் விகாரமென்பர்: இது - இங்கே அண்மைவிளி. சிந்தைசெய்தல் - நினைத்தல். காட்டு - காண் என்பதன் பிறவினை; டு - விகுதி.

இது முதல் ஆறுகவிகள் - நாற்சீரும் விளச்சீராகிய அளவடி நான்கு கொண்டு வந்த சந்தக்கலிவிருத்தங்கள். (உ௬)

உ௭. மற்றிவாறுரைசெயும்வானவத்தொகையினை
நிற்றிராலென்றவணிறுவியேயுறையுள்போய்க்
கற்றைவார்சடைமுடிக்கண்ணுதற்கடவுடன்
பொற்றடந்தாள்களைத்தொழுதனன்புகலுவான்.

(இ - ள்.) இ ஆறு உரை செயும் வானவர் தொகையினை - இந்தவிதமாகச் சொன்ன தேவர்களின் கூட்டத்தை, மற்று - பின்பு, (நந்திதேவர்), நிற்றிர் என்று - (இவ்விடத்திலேயே) நில்லுங்கள் என்று நியமித்து, அவண் நிறுவியே - அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு, உறையுள் போய் - (பரமசிவனது) திருக்கோயிலினுள்ளே சென்று, கற்றை வார் சடை முடி கண் நுதல் கடவுள்தன் பொன் தட தாள்களை தொழுதனன் - தொகுதியாகிய நீண்ட சடையினையுடைய திருமுடியையும் நெருப்புக்கண்ணையுடைய நெற்றியையுமுடைய சிவபிரானது அழகிய சிறந்த திருவடிகளை வணங்கி, புகலுவான் - கூறுபவரானார்; (எ - று.)—அது மேற்கவியிற் காண்க.

மற்று - அசையாகவுமாம். இவ்வாறு இவாறு எனச் சந்தவின்பநோக்கிய விகாரம். செயும் - தொகுத்தல். வானவத்தொகை - உயர்திணைப்பெயர் ஈறுகெட்டு வருமொழிமுதல்வலி மிக்கது. நிற்றிர் - ஏவற்பன்மைமுற்று. ஆல் - அசை. நிறுவு - நில் என்பதன் பிறவினை. உறையுள் - எழுந்தருளியிருக்கும் இடம்; உறை உள் எனப் பிரித்து, முக்காலவினைத்தொகையென்க: இனி, இதனைத் தொழிலாகுபெயரென்பாரும் உளர். (உ௭)

உ௮. அண்ணலேயுனதுபொன்னடிகளைக்காணிய
விண்ணுளோர்யாவரும்வேந்தன்மாலயனொடு
நண்ணினாரென்றலுநந்தியைத்தெரிகுறீஇத்
தண்ணிலாவேணியான்றருதியென்றருள்செய்தான்.

(இ - ள்.) 'அண்ணலே - பெருமையிற்சிறந்தவனே! உனது பொன் அடிகளை காணிய - நினது அழகிய திருவடிகளைத் தரிசிக்கும்பொருட்டு, விண் உளோர் யாவரும் - தேவலோகத்திலுள்ளாரெல்லாரும், வேந்தன் - இந்திரனும், மால் - விஷ்ணுவும், அயனொடு - பிரமனும், நண்ணினார் - வந்துள்ளார்,' என்றலும் - என்று விண்ணப்பித்தவளவிலே, தண் நிலா வேணியான்-குளிர்ந்த இளஞ்சந்திரனைத் தரித்த சடையையுடைய சிவபெருமான், நந்தியை தெரிகுறீஇ- நந்திதேவரைப் பார்த்து, தருதி என்று அருள்செய்தான் - (அவர்களை) உள்ளே அழைத்து வருவாயாக வென்று அருளிச்செய்தார்; (எ - று.)

காணிய - இய விகுதி காலங்காட்டுஞ் செய்யியவென்னும்வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம். வேந்தனென்னுஞ்சொல் இந்திரனென்னும்பொருள

தாதலின் "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" எனத் தொல்காப்பியத்திலும், "வேந்தனும் வேந்து கெடும்" எனத் திருவள்ளுவரிலுங் காண்க. தெரிகுற்று என்பது விகாரப்பட்டு 'தெரிகுறீஇ' என அளபெடுத்தது; சொல்லிசையளபெடை. 'தெரிகுறீஇ' என்பதில், கு - சாரியை. தெரிகுறுதல் - அன்போடு கடைக்கணித்து நோக்குதல். அருள் செய்தல் - கருணையோடு கட்டளையிடல். 'வேதன்மா லிருவரும்' என்ற பாடத்துக்கு, பிரமன் விஷ்ணு என்னுமிருவருமெனக; வேதன் - வேதம்வல்லவன்: அல்லது, விதிக்குங் கடவுள். (உ௮)

உ௯. அருள்புரிந்திடுதலுமாதியம்பண்ணவன்
திருமலர்த்தாள்களைச்சென்னியிற்சூடியே
விரைவுடன்மீண்டுறுவேதன்மாலாதியாஞ்
சுரரெலாம்வம்மெனத்தூயவன்கூவினான்.

(இ - ள்.) அருள் புரிந்திடுதலும் - (பரமசிவன்) கட்டளையிட்டருளியவளவிலே, தூயவன் - பரிசுத்தகுணத்தையுடைய நந்திதேவர், ஆதி அம் பண்ணவன் திரு மலர் தாள்களை சென்னியில் சூடி - அழகிய முழுமுதற்றேவனான சிவபிரானது திருவடித்தாமரைமலர்களைத் தலைமேல் தரித்து [சங்கரனது கமலபாதங்களில் தனதுசிரசு படும்படி சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்து], விரைவுடன் மீண்டு உறு - வேகத்தோடு திரும்பி (க்கோயிலின்வெளியே) வந்து, வேதன் மால் ஆதி ஆம் சுரர் எலாம் - பிரமனும் விஷ்ணுவும் முதலான தேவர்களெல்லோரையும், வம் என கூவினான் - உள்ளே வாருங்களென்று அழைத்தருளினார்; (எ - று.)

தாள் சென்னி சூடுதல் - தெண்டனிடுதல். திருவடியை மலரென்றதற்கு ஏற்ப, 'சென்னியிற்சூடி' என்றார். வரும்மின் என்பதன் விகாரமாகிய வம்மின் என்னும் ஏவற்பன்மைமுற்று 'வம்' என விகாரப்பட்டுநின்றதென்றாயினும், வாரும் என்னும் ஏவற்பன்மைமுற்றின் மரூஉவென்றாயினுங் கொள்க; தம் என்பதும் இவ்வாறே நிற்கும்: இவையிரண்டுஞ் செய்யுள் வழக்கில்மாத்திரமே பயிலும்; "கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்" எனப்பொருநராற்றுப்படையிலும், "யாவரும் வருகவே னோருந் தம்மென" என மதுரைக்காஞ்சியிலுங் காண்க. வேதன் என்பதை வேதமென்பதன் மேற்பிறந்த உயர்திணைப்பெயரென்றாவது, வேதாவென்னும் வடமொழியின் விகாரமென்றாவது கொள்க. தூயவன் - மலப்பற்றொழிந்தவன். (உ௯)

௩0. கூவியேயருடலுங்கொண்டல்பேரொலியினாற்
றாவிலாமகிழ்வுறுஞ்சாதகத்தன்மையாய்ப்
பூவினாயகன்முதற்புகலும்வானவரெலாந்
தேவதேவன்முனஞ்செல்லுதன்மேயினார்.

(இ - ள்.) கூவியே அருடலும் - (நந்திதேவர்) அழைத்தருளினமாத்திரத்திலே, பூ இல் நாயகன் முதல் புகலும் வானவர் எலாம் - தாமரைமலரைத் தங்குமிடமாகவுடைய (யாவர்க்குந்) தலைவனான பிரமன் முதலாகச் சொல்லப்படுகின்ற தேவர்களெல்லோரும், கொண்டல் பேர் ஒலியினால் தா இலா மகிழ்வு உறும் சாதகம் தன்மை ஆய் - நீர்கொண்ட காளமேகத்தினது பெரிய இடியோசையைக் கேட்டு அதனால் அழிவில்லாத ஆனந்தத்தை அடைகின்ற சாதகமென்னும்பறவைபோல மகிழுந்தன்மையுடையவர்களாய், தேவதேவன் முனம் செல்லுதல் மேயினார் - தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனான சிவபிரானது திருமுன்பே செல்லுபவரானார்கள்; (எ - று.)

சாதகம்-வானத்தில்மேகத்திலிருந்துபெய்யுமமழைநீர்த்துளியைப்பூமியில்விழுதற்குமுன்பே நாவினால்ஏற்றுஉண்டு அதனாலேயே ஜீவிப்பதொரு பறவைச்சாதி; இதற்கு வானம்பாடியென்று இயற்பெயர்கூறுவர். மேகத்தின்வருகையையே எதிர்பார்த்திருக்கின்ற அந்தச்சாதகப்புட்கள் மேகத்தினொலியைக்கேட்டமாத்திரத்தில் அதன்வருகையை அறிந்து மகிழ்வனபோல, திருநந்திதேவாதுமீட்சியையே எதிர்நோக்கியிருந்த தேவர்கள் அவரதுமொழியைக்கேட்டமாத்திரத்தில் மிகமகிழ்ச்சியுற்றார்கள்; இனி உய்வு உண்டாவது துணிவு எனக்கருதி. தா - உரிச்சொல். பூவின் நாயகன்- (சிருஷ்டிகருத்தாவாதலால்) அண்டங்களுக்கெல்லாந் தலைவனாகிய பிரமனென்னவுமாம். இவ்வுரைக்கு, பூ - வடசொல். இனி, பூதேவிக்குக் கொழுநனான திருமால் என்று உரைகூறுதலும் ஒன்று. இனி, பூ இல் நாயகன் - தாமரைமலரினிடத்து வாழ்கின்ற (திருமகளாகிய) மனைவிக்குத் தலைவனான திருமால் என்று உரைப்பினும் அமையும்; இல் - இல்லாளுக்கு இடவாகுபெயர். முனம் - எதிரில். (௩௦)

௩௧. அம்மையோர்பங்குறவரியணைக்கண்ணுறு
மெம்மையாளிறைவன்முன்னெய்தியேயாங்கவன்
செம்மைசேர்தாள்களைச்சென்னியாற்றாழ்ந்தெழீஇப்
பொய்ம்மைதீரன்பினாலினையவாபோற்றுவார்.

(இ - ள்.) அம்மை ஓர் பங்கு உற - (உலகனைத்தினுக்கும்) ஒருதாயாகிய உமாதேவி தனது ஒரு [இடப்] பக்கத்திலே பொருந்த, அரி அணைக்கண் உறும் - (திவ்விய) சிங்காதனத்திலே வீற்றிருக்கின்ற, எம்மை ஆள் இறைவன் முன் - (ஜீவாத்மாக்களாகிய) நம்மையெல்லாம் அடிமைகொள்கிற தலைவனான சிவபிரானது சன்னிதானத்திலே, எய்தி - (தேவர்களெல்லாரும்) போய்ச்சேர்ந்து, ஆங்கு - அவ்விடத்தில், அவன் செம்மை சேர் தாள்களை சென்னியால் தாழ்ந்து எழீஇ - அக்கடவுளது செந்நிறம்பொருந்திய திருவடிகளைத் தலையால்வணங்கி எழுந்துநின்று,பொய்ம்மை தீர் அன்பினால் - கபடத்தன்மையில்லாத[உண்மையான]பக்தியினால், இனைய ஆ(று) போற்றுவார் - இந்தவிதமாகத் தோத்தரிப்பவரானார்கள்; (எ - று.)—அது மேல் ஏழுகவிகளிற் காண்க.

அம்மை - அம்பாஎன்னும் வடமொழித் திரிபு. அரியணை - சிங்கந்தாங்குவதுபோல அதன்முகமுங் கால்களுந் தோன்றும்படி சித்தரித்துச் செய்யப்பட்ட பீடம். அரி - ஹரிஎன்னும்வடமொழித்திரிவு; (யானைமுதலிய பெருவிலங்குகளையும்) அரிக்க[அழிக்க]வல்லது என்று பொருள். செம்மை சேர் தாள்கள் - அழகு பொருந்திய பாதங்கள் என்றும், எல்லாநன்மைகளுக்கும் இடமான பாதங்கள் என்றுமாம். தாள்களைச் சென்னியால் தாழ்தல் - அடியில் முடியைவைத்து வணங்குதல். எழீஇ - எழுந்துஎன்பதன் சொல்லிசையளபெடை. பொய்ம்மைதீரன்பு - மெய்யன்பு. ஆ - கடைக்குறைவிகாரம். (௩௧)

வேறு.

௩௨. நோக்கினு நுழைகிலே நுவலுகின்றதோர்
வாக்கினுமமைகிலேமதிப்பவொண்கிலே
நீக்கருநிலைமையினிற்றியெந்தைநீ
யார்கியமாயமீதறிகிலேமரோ.

இதுமுதல் ஏழு கவிகள் - பரமசிவனைக்குறித்துத் தேவர்கள் செய்யுந் தோத்திரம்.

(இ - ள்.) எந்தை - எங்கள் தலைவனே! (நீ), நோக்கினும் நுழைகிலை - கண்பார்வையிலுஞ் சென்று அடங்குகின்றாயில்லை; நுவலுகின்றது ஓர் வாக்கினும் அமைகிலை - சொல்லப்படுவதொரு சொல்லிலும் அடங்குகின்றாயில்லை; மதிப்ப ஒன்கிலை-(மனத்தால்) எண்ணி அளவிடவுங் கூடுகின்றாயில்லை; (அன்றியும்), நீக்கு அரு நிலைமையில் நிற்றி - (இவையொன்றிலிருந்தும்) நீக்கக்கூடாத நிலைமையிலே நிற்கின்றாய்; நீ ஆக்கிய மாயம் ஈது அறிகிலேம் - நீ செய்துள்ள இந்தமாயையை அறியவல்லேமல்லேம் (யாம்); (எ - று.)—அரோ - ஈற்றசை.

நோக்கு-முதனிலைத்தொழிற்பெயர். முதலிரண்டடிகளால், மெய்மொழி மனம் என்னும் மூன்றுகரணங்களுக்கும் எட்டாத கடவுளது பரத்துவ நிலைமை கூறப்பட்டது. பரமசிவனது தன்மை மனத்தாலெண்ணமுடித்தற்கும், வாயினாற் சொல்லிமுடித்தற்கும், கண்முதலிய புறத்துறுப்புக்களாற் காண்டல்முதலியனசெய்துமுடித்தற்குங் கூடாததெனறதாம். எனவே, மனோவாக்காயங்களுக்கு அதீத மென்றபடி. கண்ணாற்காணப்படும்பொருள்களெல்லாமும் வாக்காற்கூறப்படும்பொருள்களெல்லாமும் மனத்தானினைக்கப்படும்பொருள்களெல்லாமும் உண்மைநோக்குமிடத்துச் சிவமயமாகியேயுள்ளன வென்பார், 'நீக்கருநிலைமையினிற்றி' என்றார். எந்தை - அண்மைவிளி. ஒன்கிலை - ஒன்றுகிலை.

இதுமுதல் ஏழுகவிகள் - இப்படலத்திற் பதின்மூன்றாங்கவிபோன்ற கலிவிருத்தங்கள். (௩௨)

௩௩. இருமையுமொருமையுமிரண்டுமொன்றிய
வொருமையுமன்றெனவுலகம்யாவையும்
பெருமையினியற்றியபெருமநின்செய
லருமறையானவுமறிதற்பாலவோ.

(இ - ள்.) இருமையும் - பேதமும், ஒருமையும் - அபேதமும், இரண்டும் ஒன்றிய ஒருமையும் - (பேதம் அபேதம் என்னும்) இரண்டுங் கலந்து நின்ற பேதாபேதமும், அன்று என - அன்றென்று கூறும்படி, உலகம் யாவையும் பெருமையின் இயற்றிய - எல்லாவுலகங்களையும் தனது பேராற்றலால் உண்டாக்கியருளின, பெரும - மகிமையையுடையவனே! நின் செயல் - உனது செய்கையை, அரு மறை ஆனவும் - அருமையான வேதங்களெல்லாமும், அறிதல்பாலவோ - (இத்தன்மையதென்று தெளிந்து) அறியத்தக்க தன்மையுடையனவோ? [அல்லவென்றபடி]; (எ - று.)

'இருமையு மொருமையு மிரண்டு மொன்றிய, வொருமையு மன்றென' என்றதன் கருத்தைச் சிவப்பிரகாசத்தில் "புறச்சமயத்தவர்க்கிருளாய்" என்றசெய்யுளில் "பொற்பணிபோ லபேதப், பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற் பேதாபே தமுமின்றிப் பெருநூல்சொன்ன, வறத்திறனால் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க னறிவொளிபோற் பிரிவருமத் துவித மாகுஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறன்" என்றதன் வியாக்கியானத்தால் அறிக. 'இருமையுமன்று' என்றது, கர்த்தாவும் பிரபஞ்சமும் இருளும் வெளியும்போல ஒன்றோடொன்றுகூடாமல் தம்மில் வேறாயிருக்குமென்ற பேதவாதிகள்சித்தாந்தமும் அடாததாய் என்றவாறு; இந்தப்பிரபஞ்சங் காரியப்படுமிடத்துக் கர்த்தாவாலே காரியப்படவேண்டுகையால் அப்படிவேறென்றுசொல்லவொண்ணாதெனஅறிக. 'ஒருமையுமன்று' என்றது, கர்த்தாவும் பிரபஞ்சமும் பொன்ஒன்றாய்ப் பணிபலவாறுற்போல விருக்கும் [அதாவது -

பொன்ஒன்றாய் அதிலேநின்றும் பணிபலவானாற்போலக் கர்த்தாஒன்றாய் அவனிடத்திலே பலவாகிய பிரபஞ்சம் உண்டாம்] என்கிற அபேதவாதிகள் சித்தாந்தமும் அடாததாய் என்றவாறு; கர்த்தாவோவென்றால் சித்தாயிருப்பானொருவன், பிரபஞ்சமோவென்றால் ஜடமாயிருப்பதொன்று, ஆகையால் சித்தினிடத்தி ஜடந்தோன்றாததுகொண்டே சிவனிடத்திப் பிரபஞ்சந் தோன்றாதென்றதென அறிக. 'இரண்டுமொன்றியவொருமையுமன்று' என்றது, சொல்லும்பொருளும்போல [சப்தத்தைச்சொன்னபொழுது அந்தச்சப்தந்தானே அர்த்தமாய்த்தோன்றியும் அர்த்தத்தைக்கண்டபொழுது அந்தச்சப்தம்வேறாயும் அர்த்தம்வேறாயும் ஒன்றுமாய் இரண்டுமாய் இருந்தாற்போல]க் கர்த்தாவும் பிரபஞ்சமுந் தன்னில் ஒன்றுமாய் இரண்டுமாய் இருக்கும் [கர்த்தா பிரபஞ்சமுமாய் அல்லவுமா யிருப்பான்] என்கிற பேதாபேதவாதிகள்சித்தாந்தமும் அடாததாய் என்றவாறு; சித்தாயுள்ள சிவனிடத்து ஜடமாயுள்ள பிரபஞ்சம் தோன்றாதாகையால் ஒன்றெனவொண்ணாதென்றும் ஜடமாயுள்ள பிரபஞ்சஞ் சித்தாயுள்ள சிவனாலே காரியப்படவேண்டுகையால் வேறெனவொண்ணாதென்றுஞ் சொன்னதென அறிக. இருபாவிருபஃதில் "ஒன்றாகாம லிரண்டாகாம லொன்றுமிரண்டு மின்றாகாமல்" என்றதையுங் காண்க. புறச்சமயங்களையும் அகச்சமயங்களையும் அடக்கிநிற்கின்ற இம்மூன்றுவகையு மல்ல வென்றதனால், யாதாமொன்றை அறியுமிடத்தி உடலும்உயிரும்தன்னில்ஒன்றுபட்டுஅறியும் அறிவைப் பிரிக்கவொண்ணாதாற்போலவும் யாதாமொன்றைக்காணுமிடத்துக் கண்ணின் ஒளியும் ஆதித்தப்பிரகாசமுந் தன்னில்ஒன்றுபட்டுநிற்குந்தன்மையைப் பிரிக்கவொண்ணாதாற்போலவுங் கர்த்தாவையும் பிரபஞ்சத்தையுந் தன்னிற் பிரித்தற்கரிதாய் அநந்நியமாயிருக்கிறசிறப்பினையுடைத்தாகியது சைவசித்தாந்தமெனஉணர்க. உலகமென்றது, இங்கே, இடத்தைமாத்திரமேயன்றி, இடத்தில்வாழும்உயிர்களையும்உணர்த்தும். பெருமை-சிவபிரானது திவ்விய சக்திக்குப் பண்பாகுபெயர். இனி, பெருமையின் இயற்றிய - பெரியனவாகச் சங்கற்பித்தருளின என்றுமாம். பெரும - பெருமான் என்பதன் விளி. அரு - அறிதற்கு அரிய; அல்லது, (அனந்தமாதலால்) அளவிடுதற்கு அரிய. வேதங்கள் கடவுளின் தன்மையை உள்ளபடி அறியச்சென்று எவ்வளவு சென்றாலும் அறியவொண்ணாமையால் மீண்டுவிட்டன என்பது நாற்றுணிபு.()

௩௪. உருவொடுதொழில்பெயரொன்றுமின்றியே
பரவியநீயவைபரித்துநிற்பது
விரவியவுயிர்க்கெலாம்வீடுதந்திடுங்
கருணையதேயலாற்கருமம்யாவதே.

(இ - ள்.) உருவொடு - வடிவமும், தொழில் - செய்கையும், பெயர் - நாமமும், (ஆகிய இவற்றில்), ஒன்றும் இன்றியே - ஒன்றும் இல்லாமலே, பரவிய - (எங்கும்) பரவிநின்ற, நீ—, அவை பரித்து நிற்பது - ஒருஉருவையும் ஒருதொழிலையும் ஒருபெயரையுங் கொண்டுநிற்பது, விரவிய உயிர்க்கு எலாம் வீடு தந்திடும் கருணையதே அலால் - (உலகங்களிற்)பொருந்திநின்ற எல்லாவுயிர்களுக்கும் முத்தியைத்தந்தருளவேண்டு மென்கிற (இயல்பாயெழுந்த) திருவருளினாலே யல்லாமல், கருமம் யாவதே - வேறு எந்தக் காரியத்தின் பொருட்டாக? [ஒன்றற்காகவுமன்று, கருணையினாலேயே யென்றபடி]; (எ - று.)

'உருவொடுதொழில்பெய ரொன்றுமின்றியே பரவிய நீ' என்றது, நிஷ்கள சிவத்தை. பரவிய - ஸர்வவியாபியான என்றபடி; (நூல்களிற்) சிறப்

பித்துக்கூறப்பட்ட என்றுமாம். 'அவை பரித்து நிற்பது' என்றது, சகளசிவத்தை. உருவம் - அர்த்தநாரீசுவரவடிவம் முதலியனவும், தொழில் - படைத்தல் முதலியனவும், பெயர் - சம்பு முதலியனவு மென்க. விரவிய - (நல்வினையுந் தீவினையு மாகிய கருமவகையிலே) கலந்துநின்ற என்றும், (தன்னைச்) சரணமடைந்துநின்ற என்றுமாம். விடுதந்திடுங் கருணை - பெயரெச்சம், காரியப்பொருளது; "நோய்தீரு மருந்து," "இன்முகங் காணு மவா" என்றவிடங்களிற்போல. உருவுந் தொழிலும் பெயரும் இல்லாதிருந்தால், கடவுளின் தன்மையை உயிர்கள் அறிந்து துதித்து அடியடைந்து உய்தல் அரிதாதலால், இங்ஙன்கூறியது. (௩௪)

௩௫. அவ்வுயிர்யாவுநின்னருளிலாவழிச்
செய்வினைபுரிகிலசிறிதுமாதலால்
வெவ்வியநயப்பொடுவெறுப்பிலாதநீ
யெவ்வகையோவுலகியற்றுந்தன்மையே.

(இ - ள்.) அ உயிர் யாவும்-உலகத்திலுள்ள உயிர்களனைத்தும், நின் அருள் இலா வழி- உனது கருணை இல்லாமல், செய் வினை சிறிதும் புரிகில- செய்தற்குரிய தொழில்களைக் கிஞ்சித்துஞ் செய்யமாட்டா; ஆதலால் - ஆகையினால், (எல்லாவுயிர்களையுந் தொழில்செய்விப்பவன் நீயே); வெவ்விய நயப்பொடு வெறுப்பு இலாத நீ - கொடியனவாகிய விருப்புவெறுப்புக்களை உடையவனாகாத நீ, உலகு இயற்றும் தன்மை - உலகத்தைத் தொழில் நடாத்தும் விதம், எவ் வகையோ - எவ்வாறோ?—அறியே னென்றபடி.

உடம்பின்குணங்களிற் சம்பந்தமில்லாமலே உயிர் அவ்வுடம்பினுளிருந்து அதனைத் தொழில்செய்வித்தல்போலப் பரமான்மாவாகிய கடவுள் ஜீவான்மாவின்செயல்களிற் சம்பந்தப்படாமலே அதனுள்ளிருந்து அதனைத் தொழில்செய்விப்ப ரென்றவாறும். "அவனசைந்திடி னணுவசைந்திடும், அவனசையாவிடி னணுவசைந்திடா" ஆதலால், 'அவ்வுயிர்யாவுநின்னருளிலாவழிச்செய்வினைபுரிகிலசிறிதும்' என்றார். சிலவற்றை விரும்பி அன்புவைத்தலும் சிலவற்றை வெறுத்துப் பகைத்தலும் ஆகிய இரண்டுகுணமும் கடவுளது நடுவுநிலைமைக்கும் நிர்ஹேதுககருணைக்கும் மாறாதலால், அவற்றுக்கு 'வெவ்விய' என்னும் அடைமொழியைக் கொடுத்தார். கடவுளுக்கு இவ்விருகுணமும் இல்லாமையை "பகைநண்பொ டில்லான்" எனப் பிறர்கூறியவாற்றாலும் அறிக. "தாங்கரிய வெறுப்பினொடு விருப்பு மெல்லாஞ் சார்வரிய தனிமுதல்வ னாதலாலும்" என்றார் சிவப்பிரகாசத்திலும். (௩௫)

௩௬. முன்னதின்முன்னெனமொழிதுமேயெனிற்
பின்னதின்பின்னுமாப்பேசநிற்றியா
லன்னவையேயெனினொழிந்ததல்லையோ
வென்னெனநின்னையாமேத்துகின்றதே.

(இ - ள்.) முன்னதின் முன் என மொழிதுமே எனின் - பழமையான பொருள்களெல்லாவற்றுக்கும் பழமையானபொருளென்று (உன்னைக்) கூறுவோமே யென்றால், பின்னதின் பின்னும் ஆ(க) பேச நிற்றி - புதுமையான பொருள்களெல்லாவற்றுக்கும் புதுமையானபொருளென்று சொல்லப்படும்படியும் (நீ) நிற்கிறாய்; ஆல்-ஆதலால், அன்னவையே எனின் - முன்னைப்பழம்பொருளும் பின்னைப்புதுப்பொருளும் ஆகிய அவ்விரண்டுமே யாவையென்று (உன்னைச்) சொல்வோமென்றால், ஒழிந்தது அல்லையோ-அவ்வி

ரண்டுமொழிந்த இடையிலேயுள்ளபொருள்களாகிருயில்லையோ, (நீ)? [நீயே அவையுமாகிருயென்றபடி]; (ஆதலால்), நின்னை யாம் என் என எத்துகின்றது - உன்னை அடியேங்கள் என்னவென்றுகூறித் துதிப்பது? (எ - று.)— துதிக்குமாறொன்றும் அறியேம் என்றவாறும்.

இதனால், ஆதி மத்திய அந்த மில்லாமல் முக்காலத்தும் ஒருபடியாகவுள்ள கடவுளது நித்தியத்தன்மையும், எல்லாப்பொருள்களின்வடிவமாக எழுந்தருளியிருக்கின்ற கடவுளது ஜகச்சரீரகத்வமும் எடுத்துக்கூறப்பட்டன. முன்னது, பின்னது, ஒழிந்தது - சாதியொருமை. ஆ, ஆல் - விகாரங்கள்: எல்லாப்பொருள்களுக்கும் முன்னமே அவற்றுக்குக்காரணமாய் அநாதியாயிருந்தவரும், எல்லாப்பொருள்களுக்கும் பிற்காலத்தில் அவற்றை அழித்துத் தான் அழிவில்லாதிருப்பவரும், இடையில் அவ்வப்பொருள்களாகவுள்ளவரும் எல்லாம் கடவுளே யென்பது கருத்து. (௧௬)

௧௭. புல்லியபுரம்பொடித்ததுவுங்காமனை
யொல்லெனவெரித்ததுமுனக்குச்சீர்த்தியோ
வெல்லையில்விதிமுதலெனைத்துமீண்டுநின்
னல்லருளாணையேநடாத்துமென்கையால்.

(இ - ள்.) எல்லை இல் - ஒருவரம்பு இல்லாமற் பலவிதமாக அமைகின்ற, விதி முதல் - படைத்தல் முதலான, எனைத்தும் - எல்லாத்தொழில்களையும், ஈண்டு - இப்பிரபஞ்சத்தில், நின் - உன்னுடைய, நல் அருள் ஆணையே - சிறந்த கருணையோடு செய்கின்ற கட்டளையே, நடாத்தும் - நடப்பிக்கும், என்கையால் - என்பது சித்தாந்தமாதலால், புல்லிய புரம் பொடித்ததுவும் - அற்பமான திரிபுரத்தை (நகைத்துச்) சாம்பராக்கியதும், காமனை ஒல்லென எரித்ததும் - மன்மதனை விரைவிலே (விழித்து) நீறாக்கியதும், உனக்கு சீர்த்தியோ - நினக்கு ஒருபெரும்புகழ்க்காரணமாமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

“தன்வலி யாணை தாங்கி, மூவண்ண றன்சன்னிதி முத்தொழில் செய்ய வாளா, மேவண்ணல்” என்றார் திருவிளையாடற் புராணத்தும். “சீர்த்தி மிகுபுகழ்” என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாராதலால், சீர்த்தியென்பது மிக்கபுகழையுணர்த்துவதொரு தமிழுரிச்சொல்லா மென்றும். புகழ்மாத்திரத்தையுணர்த்துங் கீர்த்தியென்னும் வடசொல்லின் றிரிபன் றென்றும் அறிக. புல்லிய - புன்மையென்னும் பண்பின் அடியாப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; புல் என்னும் வினைப்பகுதியின் மேற் பிறந்த தெரிநிலைப் பெயரெச்சமாகக் கொண்டு, (கொடிய அசுரர்களோடு) கூடிய மூன்றுபட்டணங்க ளென்றுமாம். ஐந்தொழிலும் நடத்தும் ஆணையுடைய உனக்குத் திரிபுரத்தையும் மன்மதனையும் ஒழித்தது ஒருபெருங்காரியமன்றென்றவாறும். கடவுள் இருப்பிடத்தில் இருந்துகொண்டே யாதொரு முயற்சியுஞ்செய்யாமற் கட்டளையிட்டருளினமாத்திரத்தில் அவ்வாஜ்ஞைதானே சென்று துஷ்டர்களைத் தவறாமல் ஒழிப்பதாயிருக்கவுங் கடவுள் போரிற் சென்று நகைத்தும் நேரில் நின்று விழித்தும் அசுரர்புரத்தையும் அனங்கன்புரத்தையும் எரித்தது அக்கடவுளது திருவிளையாட்டேயன்றி வேறன்றென்க. விதிமுதலெனைத்தும் என்றது, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னுந் தொழில்களைந்தையும்; இவை முறையே சிருஷ்டி ஸ்திதி சங்காரம் அநுக்கிரகம் திரோதானம் என்னும் பஞ்சகிருத்திய மெனப்படும். அருளாணை - அருளினது ஆஜ்ஞையுமாம். ஆணை - வடசொற்சிதைவு. (௧௭)

௯௮. எங்களைமுன்னரேயியல்பினீந்தனை
எங்களையிவ்வரசியற்றுவித்தனை
எங்களொடொருவனென்றிருத்திநின்செயல்
எங்களினறிவரிதென்றுபோற்றினார்.

(இ - ள்.) எங்களை—, முன்னரே - ஆதிகாலத்திலே, இயல்பின் - முறைமையாக, ஈந்தனை - உண்டாக்கியருளினாய்; எங்களை—, இ அரசு இயற்றுவித்தனை - இந்தப் பிரமலோகம் முதலியவற்றைத் தனித்தனி அரசாளும்படி செய்வித்தாய்; எங்களொடு ஒருவன் என்று இருத்தி - (தேவர்களாகிய) எங்களுடனே ஒருதேவனாகவும் இருக்கிறாய்; (ஆதலால்), நின் செயல் - உன்னுடைய செய்கை, எங்களின் அறிவு அரிது - எங்களால் அறிதற்குக் கூடாதது, என்று - இவ்விதமாக, போற்றினார் - (பிரமன்முதலிய தேவர்கள் சிவபிரானைத்) துதித்தார்கள்; (எ - று.)

'எங்களொடொருவனென்றிருத்தி' என்றது - திரிமூர்த்திகளுள் ஒன்றாகிய ருத்திரசுவரூபத்தைக் கருதி. 'எங்களை யிவ்வரசியற்றுவித்தனை' என்றது, படைத்தல் காத்தல் முதலிய இத்தொழில்களை எங்களைக்கொண்டு செய்வித்தாய் என்றவாறுமாம். எங்களின் அறிவு அரிது - எங்களுடைய அறிவுக்கு அதீதமாய் அருமையானது எனவுமாம். இச்செய்யுளில் நான்கடியிலும் முதலில் 'எங்கள்' என எழுத்தொத்துவந்தது யமகமென்னுஞ் சொல்லணி யாகாது; பொருள்வேறுபடாமையால். (௯௮)

வேறு.

௯௯. இவ்வகையமரரெல்லாமன்புசெய்தேத்துமெல்லை
மைவருமிடற்றுப்புத்தேண்மற்றவர்வதனநோக்கி
நொவ்வுறலெய்திச்சிந்தைநுணங்கினீர்நுங்கட்கின்னே
யெவ்வரமெனினுமீதும்வேண்டியதிசைத்திரென்றான்.

(இ - ள்.) அமரர் எல்லாம் - தேவர்கள்யாவரும், இவ் வகை - இந்தவிதமாக, அன்புசெய்து ஏத்தும் எல்லை - பக்திகொண்டு துதித்தவளவில், மை வரு மிடறு புத்தேள் - (நஞ்சமுண்டதனால்) கருநிறம்பொருந்திய கண்டத்தையுடைய பரமசிவன், அவர் வதனம் நோக்கி - அத்தேவர்களுடைய முகத்தைப் பார்த்து, '(நீங்கள்), நொவ்வுறல் எய்தி சிந்தை நுணங்கினீர் - வருந்துதலையடைந்து மனம் மெலிந்தீர்கள்; நுங்கட்கு - உங்களுக்கு, இன்னே - இப்பொழுதே, எவ் வரம் எனினும் - எந்தவரமாயினும், ஈதும் - கொடுப்போம்; வேண்டியது இசைத்திர் - (உங்களுக்கு) வேண்டியவரத்தைக் கூறுங்கள்,' என்றான் - என்று திருவாய்மலர்ந்தருளினார்; (எ - று.)

'அவ்வகை' என்றும் பாடம். அமரர் - மரணமில்லாதவர். இங்கே 'மைவருமிடற்றுப்புத்தேள்' என்றது, அடியார்களுக்குநேர்கிற ஆபத்தை உடனே களைந்தருளுங் கருணையுடைய கடவுளென்பதை விளக்குதற்கு; முன்னே ஆலாஹலவிஷத்திற்கு அஞ்சி ஓடிவந்து சரணமடைந்தபொழுது அவ்விஷத்தையுண்டுதேவர்களைக்காத்தருளியதுபோலவே சூரபதுமனுக்கு அஞ்சி ஓடிவந்து சரணமடைந்த இப்பொழுதும் அவனைக்கொன்று அவர்களைக்காத்தருள்வர் என்று குறிப்பித்தவாறும். மை வரு - அஞ்சனத்தை ஒத்த என்றுமாம். மற்று - அசை. நொ என்னும் பெயர்ச்சொல்லின்மேல் உறு என்னும் பகுதி கூடி நொவ்வுறு என வினைத்தன்மைப்பட்டதென்றாயினும், நொவ்வு என்னும் பகுதியின்மேல் உற என்னுந் துணைவினை கூடிநின்றதென்றாயினுங் கொள்க. வரம் - வேண்டுவனகொள்ளுதல்.

இதுமுதல் எட்டுக்கவிகள் - இப்படலத்தின் முதற்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (௱௧)

௪௰. என்றலுமமரர்சொல்வார்யாமெலாமிந்நாள்காறும்
வன்றிறலவுணர்தம்மால்வருந்தினமதனைநீங்கி
நன்றிகொடொல்லையாக்கநண்ணுவானாகநின்பா [றே.
லொன்றொருவரம்வேண்டுற்றுமதனியல்புரைத்துமன்

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) என்றலும் - என்று (கடவுள்) கட்டளையிட்டவளவில், அமரர் - தேவர்கள், சொல்வார் - சொல்லுபவரானார்கள்; (என்னவென்றெனில்), யாம் எலாம் - நாங்களெல்லோரும், இந்நாள் காறும் - இத்தனைநாளாக, வன் திறல் அவுணர்தம்மால் வருந்தினம் - மிக்க வலிமையையுடைய அசுரர்களால் வருத்தமடைந்தோம்; அதனை நீங்கி-(இனி) அவ்வருத்தத்தை ஒழிந்து, நன்றி கொடு - நல்ல சௌக்கியத்தை அடைந்து, ஒல்லை - விரைவிலே, ஆக்கம் நண்ணுவான் ஆக - ஐசுவரியங்களை அடையும்பொருட்டாக, நின்பால் - உன்னிடத்தில், ஒன்று ஒரு வரம் வேண்டுற்றும் - பொருந்துவதொரு வரத்தைப் பெறவிரும்பினோம்; அதன் இயல்பு உரைத்தும் - அவ்வரத்தின் தன்மையைச் சொல்லுவோம்; (எ - று.)—அது மேலிரண்டு கவிகளிற் கூறுகிறார்.

அன்று, ஏ - ஈற்றசை. காறும் - காலவெல்லைகுறிப்பதொரு இடைச்சொல். வன்திறல் - ஒருபொருட்பன்மொழி. நண்ணுவான் - எதிர்கால வினையெச்சம். நண்ணுவான் நாகம் எனப் பிரித்து, நாகம் ஆக்கம் நண்ணுவான் என இயைத்து, தேவலோகத்து ஐசுவரியத்தைப் பெறும்பொருட்டு என்றுமாம். ஒன்று வரம் - வினைத்தொகை; ஒன்று - வினைப்பகுதி. இனி, ஒன்றொருவரம் - தனிவரம்; ஒப்பிலாததொருவரம் என்றுமாம். நன்றி - பண்பாகுபெயர். இந்நாள்காறும் - நூற்றெட்டுயுகமளவும்; இவ்வளவுகாலம் சூரபதிமுதியர் தேவர்களை வருத்தியதை மேல் தேவர்கள்போற்றுபடலத்தில் "மாறுமுகங் கொண்டுபொரு வல்லவுணர் மாளாமனூறு முகமெட்டு நோதக்கனபுரியத், தேறுமுக மின்றித் திரிந்தேமை யாளவன்றோ, வாறுமுகங் கொண்டே யவதரித்தா யெம்பெருமான்" என்பதனானு மறிக. (௪௰)

௪௧. மும்மையினுயிர்கள்பெற்றுமுகிழ்முலைக்கன்னியாகு
மம்மையைமணந்ததன்மைபாங்கவளிடமாவீங்கோர்
செம்மலையளித்தற்கன்றேதீவினைக்கடற்பட்டுள்ள
வெம்மையாளுவதற்கேதுக்காட்டியவியற்கையல்லால்.

(இ - ள்.) மும்மையின் - மூன்றுவகைப்பட்ட, உயிர்கள் - உயிர்களை, பெற்றும் - ஈன்றுவைத்தும், முகிழ் முலை கன்னி ஆகும் - அரும்புபோன்ற தனங்களையுடைய இளம்பெண்ணாகிற, அம்மையை - (லோகமாதாவான) அம்பிகையை, ஆங்கு - அவ்விமயகிரியில், மணந்த தன்மை - (நீ) திருக்கலியாணஞ்செய்துகொண்ட செயல், தீ வினை கடல் பட்டுஉள்ள எம்மை ஆளுவதற்கு ஏது காட்டிய இயற்கை அல்லால்-கொடிய கருமங்களாகிய சமுத்திரத்திலே அகப்பட்டுள்ள எங்களை அடிமைகொள்வதற்கு ஒருகாரணங்காண்பித்த இயல்புமாத்திரமே யல்லாமல், அவள் இடம் ஆ ஈங்கு ஓர் செம்மலை அளித்தற்கு அன்று - அவ்வுமாதேவியினிடமாகவே இவ்வுலகத்தில் ஒரு குமாரனைப் பெற்றருளுதற்பொருட்டன்று; (எ - று.)

மும்மையி னுயிர்க ளாவார் - சகலர், பிரளயாகலர், விஜ்ஞாநகலர்என்பவர்: இவர்களுட் சகலர் - ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமுடையார்; பிரளயாகலர் - ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடையார்; விஜ்ஞாநகலர் - ஆணவமென்னும் ஒருமலமுடையார். "தெரிமாண் டமிழ் மும்மைத் தென்னம பொருப்பன்" என்றவிடத்துப்போல, மும்மையென்பது இங்கு எண்ணின்தன்மைமேல்நில்லாமல் எண்ணின்மேல் நின்றது. 'பெற்ற' என்றும் பாடம். "சிவன் சத்தியோடுநிற் செகம்விரிந்திடுஞ், சிவன் சத்திநீங்கிடிற் செகமதில்லையே" என்றபடி சிவபிரான் தன்னுடைய பராசக்தியான உமையாளுடைய உதவியைக்கொண்டே உயிர்களைப் பெற்றருளியதனாலும், உமாதேவி மலையரசன்மகளாய் அவதரித்துக் கன்னிப்பருவ முற்றிருந்ததனாலும், 'மும்மையினுயிர்கள்பெற்றும்முகிழ்முலைக்கன்னியாகு மம்மை' என்றார்; அன்றியும், இச்சாமாத்திரத்தால உயிர்கள் உண்டாதலால், உயிர்களைப்பெறுதலுங் கன்னியாதலும் ஒன்றற்கொன்று மாறுகொள்ளாதென்க: "சிவஞ்சத்தி தனையீன்றுஞ் சத்திதாள் சிவத்தையீன்று, முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்,பவன்பிரமசாரி யாகும் பான்மொழி கன்னி யாகுந், தவர்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே" என்னுஞ் சிவஞானசித்தியார்ச்செய்யுளை இங்கே அறிக. முகிழ்முலை-இளமைமாறாத கொங்கை; "பெற்றாள்சக தண்டங்க ளனைத் தம்மவை பெற்றும், முற்றாமுகிழ் முலையாளொடு முக்கண்ணனர் விரும்பும்" என்றார் வில்லிபுத்தூராழ்வாரும். 'எல்லாவுயிர்களையும் பெற்றவள்பக்கல் ஒரு குமரனை உண்டாக்கவேண்டுவதில்லை; நீ உன்னிடமே உண்டாக்கு' என ஒருசாதுரியந்தொனிக்கக் கூறினா ரென்க. ஆங்கு - அக்காலத்தில் என்றும், ஈங்கு - இப்பொழுது என்றுங் கொள்ளலுமாம். தீவினை - அசுரர்களதுகொடுந்தொழில்களின் பயன்களைத்தாம் அனுபவிப்பதற்குஏற்ற பாவம். நீ மலைமகளைமணந்தது எங்களை ஒருதுன்பத்தையும் நுகராதபடி காத்தருளுதற்குக் குறிப்புக்காட்டியபடியே யல்லாமல் அவளிடமாகவே ஒரு குமாரனை உண்டாக்கவேண்டுமென்றன்று என்றவாறும்; இதனால், 'பார்வதிதேவியினிடம் குமாரனை உண்டாக்குதலினும் பரமசிவனார் தம்மிடத்தே குமாரனை உண்டாக்குதல் சிறப்புடையதாம்' என்கிற தங்கள்கருத்தை வெளியிடுகிறார்கள் தேவர்கள். ஏகாரம் - தேற்றம். (௪௧)

௪௨ ஆதியுநடுவுமீறுமருவமுமுருவுமொப்பு
மேதுவும்வரவும்போக்குமின்பமுந்துன்புமின்றி
வேதமுங்கடந்துநின்றவிமலவோர்குமரன்றன்னை
நீதரல்வேண்டுநின்பானின்னையேநிகர்க்கவென்றார்.

(இ-ள்.) (ஆகையால்), ஆதியும் - முதலும், நடுவும் - மத்தியமும், ஈறும் - அந்தமும், அருவமும் - அரூபமும், உருவும் - ரூபமும், ஒப்பும் - சமானமும், ஏதுவும் - காரணமும், வரவும் - வருதலும், போக்கும் - செல்லுதலும், இன்பமும் - சுகமும், துன்பும் - துக்கமும், இன்றி - இல்லாமல், வேதமும் கடந்து நின்ற - வேதங்களுக்கும் எட்டாமல் அதீதனாய் நின்ற, விமல - குற்றமில்லாதவனே! நீ—, நின்னையே நிகர்க்க - உன்னையே ஒத்திருக்கும்படி, ஓர் குமரன் தன்னை - ஒருகுமாரனை, நின்பால் - உன்னிடமிருந்து, தரல் வேண்டும் - உண்டாக்கியருளலவேண்டும், என்றார் - என்று (தேவர்கள் சிவபிரானிடம்) விண்ணப்பஞ்செய்தார்கள்; (எ - று.)—நின்பால் - உமையிடத்தன்று.

கடவுளுக்கு உற்பத்திவிநாசங்கள் இல்லையாதலால், ஆதியும் ஈறும் இல்லை; முதலும் முடிவும் இல்லாத பொருளுக்கு இடையென்பதொன்றும்

இன்றாதலால், கடவுளுக்கு நடுவும் இல்லை: எனவே, ஆதிமத்தியாந்தரகிதன் என்றதாம். சிவம் சத்தி நாதம் விந்து என நான்கு அருவாகியும், மகேசுவரன் உருத்திரன் திருமால் அயன் என நான்கு உருவாகியும், சதாசிவம் என அருவுருவாகியும் நின்று இந்நவவிபேதமுந் தோற்றுவித்தல் முதலியவற்றிற்கு ஏதுவாய் நாடகமாத்திரையால் நடிக்கும் இறைவனாகலின், 'அருவமு முருவு மின்றி' எனப்பட்டது. கடவுளுக்கு ஒப்பில்லையென்றதனால், உயர்வில்லாமை தானேவிளங்கும். கடவுள் எல்லாவற்றிற்குங் காரணமாக விருப்பவரேயன்றி ஒன்றன்காரியமாகவுள்ளவரல்லராதலால், 'ஏதுவுமின்றி' என்றார். 'வரவும் போக்கு மின்றி' என்றதனால், கருமசம்பந்தமில்லாமையும், அதன்சம்பந்தத்தாலுண்டாகிற பிறப்பிறப்புக்களையுடைத்தாகாமையும் உணர்த்தப்படுகின்றன; அன்றியும், 'வரவும் போக்குமின்றி' என்றதனால், எங்கும் எப்பொழுதும் வியாபித்துண்மை விளங்கும். 'இன்பமுந்துன்புமின்றி' என்றது - இன்பம் துன்பம் என்ற வேறுபாடில்லாமல் எப்பொழுதும் நிரதிசய ஆனந்தமயனாய் உள்ளவனென்றபடி. 'விமலன்' என்றது-தான் இயல்பிலே கருமசம்பந்தமில்லாதவன் என்னும் பொருளோடு, தனக்குச்சரீரமாகவுள்ள சராசரங்களின் கருமமுந் தன்னில்வந்து தொடரப்பெறாதவனென்னுங் கருத்தையுங் கொண்டது. அரு-நிஷ்களம். உரு - சகளம். 'இன்பமுந் துன்பு மின்றி' என்றது, விருப்புவெறுப்பில்லாமையாலுமாம். (௪௨.)

௪௩. வந்திக்குமலரோனாதிவானவருரைத்தல்கேளாப்
புந்திக்குளிடர்செய்யற்கபுதல்வனைத்தருதுமென்று
வந்திக்குநிகர்மெய்யண்ணலருள்புரிந்தறிஞராயோர்
சிந்திக்குந்தனதுதொல்லைத்திருமுகமாறுங்கொண்டான்.

(இ - ள்.) வந்திக்கும் - (தன்னை) வணங்குகின்ற, மலரோன் ஆதி வானவர் - தாமரைமலரில்தோன்றின பிரமன் முதலான தேவர்கள், உரைத்தல் - (இவ்வாறு) சொன்னதை, கேளா-கேட்டு, அந்திக்கு நிகர் மெய் அண்ணல் - மாலைக்காலத்துக்கு ஒப்பான சிவந்த திருமேனியையுடைய பரமசிவன், (அத்தேவர்களைநோக்கி), 'புந்திக்குள் இடர் செய்யற்க - (நீங்கள்) மனத்தில் துன்பமடையாதொழிக; புதல்வனை தருதும் - (உங்கள் விருப்பத்தின்படியே குமாரனை அளிப்போம்,' என்று - என்று, அருள் புரிந்து - கருணையோடு சொல்லி, அறிஞர் ஆயோர் சிந்திக்கும் - தத்துவஞானிகளானவர்களால் தியானிக்கப்படுகின்ற, தனது தொல்லை திரு முகம் ஆறும் கொண்டான் - தனது பழமையான அழகிய ஆறுமுகங்களையுங் கொண்டருளினார்; (எ - று.)

ஆறு திருமுகம் - ஈசானம்முதலிய ஐந்தோடு, அதோமுகமும்; இதனை "தேசுதிகழ், பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப், பாங்குறையு முக்கட் பரஞ்சோதி - யாங்கொருநாள், வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி, யைந்து முகத்தோ டதோமுகமுந் - தந்து, திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறு, மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப" எனத் திருச்செந்தூர்க்கந்தர்கலிவெண்பாவிற் கூறியவாற்றாலு முணர்க. சிந்திக்கும்-தியானநிலையில் விஷயமாகும். 'தொல்லைத்திருமுகம்' என்றதனால், ஆறுமுகங்களையுடைமை பரமசிவனுக்கு நூதனமன்றென்றும், ஒருகாலவிசேஷத்தி லுண்டென்றும் உணர்க; "எண்டோள்" போல. ஈசானம் - ஊர்த்துவமுகம்; தத்புருஷம் - கிழக்குமுகம்; அகோரம் - தெற்குமுகம்; வாமம் - வடக்குமுகம்; சத்தியோசாதம் - மேற்குமுகம்.

வந்திக்கும் - (யாவராலும்) வணங்கப்படுகின்ற என்றுமாம். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கினுள் உள்ள வேறுபாட்டை முக்கியமாகக்கருதாமல், இங்கே மனத்தைப் புந்தியென்றார்; அன்றியும், இன்பமுந் துன்பமும் அறிவினிடத்தே முதலில் தோன்றிப் பின்னர் மனத்தை மாற்றும். புந்தி - புத்தி என்னும் வடசொல்லின் விகாரம். அந்தி - ஸந்த்யா என்னும் வடமொழித் திரிபு; இது - இங்கே சிறப்பாய் மாலைச்சந்தியை உணர்த்திற்று: இனி, அந்தி - பகற்பொழுதின் அந்தமாகவுள்ளதென மாலைக்காலமாகவுமாம். அந்திக்குநிகர் மெய் யண்ணல் - செவ்வானம்போன்ற திருநிறமுடையவனென்றபடி. வந்திக்கும் அலரோன் என்றும் பதம்பிரிக்கலாம். (௪௩)

௪௪. நிற்புறுமமரர்யாருநெஞ்சுதுண்ணெனன்னநீடு
மற்புதநீரராகியருண்முறையுன்னிப்போற்றச்
சிற்பரன்றான்கொண்டுள்ள திருமுகமாறுதன்னிற் [தான்.
பொற்புறுநுதற்கண்டோறும்புலிங்கமொன்றொன்றுதந்

(இ - ள்.) நிற்பு உறும் - (அருகில்) நிற்றலைச் செய்கின்ற, அமரர் யாரும் - தேவர்களெல்லோரும், நெஞ்சு துண்ணென்ன - (சிவபிரானது ஆறு திருமுகங்களை நோக்கி)மனந்திடுக்கிட, நீடும் அற்புதம் நீரர் ஆகி - மிகுந்த வியப்பை யடைந்த தன்மையையுடையவர்களாய், அருள் முறை உன்னி போற்ற - (இறைவனது) கருணையைக் கருதி முறைமையாகத் துதிக்க, (அப்பொழுது), சித் பரன் - ஞானசுவரூபியான யாவரினும் மேம்பட்டுள்ள வனுகிய பரமசிவன், தான் கொண்டு உள்ள திரு முகம் ஆறுதன்னில் - தான் (அப்பொழுது) கொண்டுள்ள ஆறு திருமுகத்திலும், பொற்பு உறு நுதல் கண் தோறும் - அழகு பொருந்திய ஒவ்வொரு நெற்றிக்கண்ணினின்றும், புலிங்கம் ஒன்று ஒன்று தந்தான் - ஒவ்வொரு நெருப்புப்பொறியை உண்டாக்கியருளினார்; (எ - று.)

ஆறு திருமுகங்களைக் கொண்ட ஆதிதேவன் தன்னுடன் திவ்வியசிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற உமாதேவியை அந்த ஆறுமுகங்களாலுங் காதலோடு நோக்கியருளினனென்றும், நோக்கினமாத்திரத்தில் ஊர்த்துவரேதசாகிய அப்பிரானுடைய ஆறுநெற்றிக்கண்ணினின்றும் பெருந்தேஜசு எழுந்ததென்றும் முதனூலிற் கூறப்பட்டுள்ளது. துண்ணெனல் - விரைவச்சக்குறிப்பு. சிவபிரான் ஆறுமுகங்களை யுடையனாயிருந்த தோற்றம் தேவர்களுக்குப் புதுமையானதனால், அவர்கள்மனந் திடுக்கிட்டது; வியப்புக்குக்காரணமும் இதுவே. சித்பரன் - ஞானத்துக்கும் விஷயமாகாமல் அதீதமானவனென்றுமாம். பொற்பு - பொலிவுணர்த்துவதொரு உரிச்சொல்; "பொற்பேபொலிவு" என்பது தொல்காப்பியம். புலிங்கம் - ஸ்ப்புலிங்கம் என்னும் வடமொழித் திரிபு. (௪௪)

௪௫. ஆவதோர்காலையீசனறுமுகநுதற்கண்மாட்டே
மூவிருபொறிகடோன்றிமுளரியான்முதலாவுள்ளோ
ரேவருமணுகல்செல்லாவெல்லைதீர்வெம்மைத்தாகிப்
பூவுலகண்டமுற்றும்பொள்ளெனப்பராயவன்றே.

(இ - ள்.) ஆவது ஓர் காலை - அப்படிப்பட்டதொரு சமயத்திலே, ஈசன் அறுமுகம் நுதல் கண்மாட்டே - சிவபிரானது ஆறுமுகத்திலுமுள்ள நெற்றிக்கண்களிலே, மூ இரு பொறிகள் தோன்றி - ஆறு அனற்பொறிகள் எழுந்து, முளரியான் முதல் ஆ உள்ளோர் எவரும் அணுகல் செல்லா எல்லை

தீர் வெம்மைத்து ஆகி - தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமன் முதலாக வுள்ளவர்க ளெவராலும் அருகில்நணுகுதற்குங்கூடாத அளவுகடந்த வெப்பத்தை(த்தனித்தனி)உடையதாய், பூ உலகு - பூலோகத்திலிருந்து, அண்டம் முற்றும் - அண்டம்முழுவதிலும், பொள் என பராய - மிகவிரைவாகப்பரவின; (எ - று.)—அன்று, ஏ - ஈற்றசை.

ஆவது ஓர் காலை என்பதற்கு - (பரமசிவன் இனியாருங்காரியம் இன்னதென்று) ஆலோசிக்கின்ற பொழுதிலே என்றும் உரைக்கலாம். முளரி - முட்களையுடைய அரியை யுடையது எனத் தாமரைக்கு வேற்றுமைத் தொகையன்மொழியாகிய காரணப்பெயர்; அரி - அரை: கொடியின் சுற்றுப்புறம். இனி, முளரியான் - அக்கினிதேவ னாகவுமாம். பொள்ளெனல் - விரைவுக்குறிப்பு. பராய - முற்று; பராவிய என்பதன் விகாரம். பூவலகண்டம் - பிருதிவியண்ட மென்றுமாம். (சரு)

சசு. மா தண்டங்குலவுநேமிவால்வளைவயிரவொள்வாள்
கோதண்டம்பரித்தோன்வேதாக்குறித்துணர்வரியசோதி
வேதண்டம்பரவிற்றென்னமேதினிசூழ்ந்துவிண்போய்
மூதண்டங்காறுஞ்சென்றமுதல்வன்கண்ணுதலிற்செந்தீ.

(இ - ள்.) மா தண்டம் - சிறந்த (கௌமோதகியென்னும் பெரிய) கதாயுதமும், குலவு நேமி - விளங்குகின்ற (சுதரிசனமென்னுஞ்) சக்கரமும், வால் வளை - வெண்ணிறமான (பாஞ்சசன்னியமென்னுஞ்) சங்கமும், வயிரம் ஒள் வாள் - கூர்மையையுடைய பிரகாசிக்கின்ற (நாந்தகமென்னும்) வாளும், கோதண்டம் - (சார்ங்கமென்னும்) வில்லும், (ஆகியபஞ்சாயுதங்களையும்), பரித்தோன் - தரித்தருளுகிற திருமாலும், வேதா - படைத்தற்கடவுளான பிரமனும், குறித்து உணர்வு அரிய - (இன்னதென்று) சுட்டி (அடிமுடிகளை) அறியமுடியாமற்போன, சோதி வேதண்டம் - தேஜோமயமான மலை, பரவிற்று என்ன - பரவியதுபோல, முதல்வன் கண் நுதலின் செம் தீ - (முதலாவார்யாவர்க்கும்) முதல்வனான இறைவனது நெற்றிக்கண்ணினின்று எழுந்த சிவந்த நெருப்புப்பொறிகள், மேதினி சூழ்ந்து - பூமிமுழுவதும் வியாபித்து, விண் போய் - ஆகாயத்திலுஞ் சென்று, மூது அண்டம் காறும் - பழமையான அண்டகோளம் உள்ளவளவும், சென்ற - போய்ப்பரவின; (எ - று.)

தாம்தாம் கடவுளென்னுங் கருத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் பகைமைபூண்ட பிரமவிஷ்ணுக்களின் மாறுபாட்டை ஒழிக்கும்பொருட்டுப் பரமசிவன் அவ்விருவர்க்கும் நடுவில் ஒருபெரிய அனற்பிழம்பினுருவமாய்த் தோன்றிநின்று 'இப்பிழம்பின் அடியையும் முடியையுந் தேடுமின்' என்ன, அவ்வடிமுடிகளிலொன்றை முன்னங்கண்டவரே முதல்வரென்றுசொல்லிப் பிரமன் ஹம்ஸரூபியாய் முடியினைக்காண விண்பறந்தும் விஷ்ணு வராகரூபியாய் அடியினைக்காண மண்ணிடந்துஞ் சென்று பலகாலந்தேடியும்முடிவுகண்டிலராய்ப்போயினரென்பது,மேல்அடிமுடிதேடுபடலத்து வரலாறும். வயிரம் - உறுதியாகவுமாம்; இனி, வச்சிராயுதம்போன்ற ஒள்ளிய வாள் என்றுமாம். சோதி - ஜ்யோதி. மூதண்டம் - முதுமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் ஆதிநீண்டது. சோதிவேதண்டம் - அருணாசலத்து அக்கினிமலை. மூதண்டம் - அண்டகோளத்தின் மேல்முகடுமாம். (சசு)

வேறு.

சஎ. மங்கையோர்பங்குடைவள்ளலேந்திய
செங்கனலூழியிற்செறிவதாமென

வங்கவன்விழிபொழியனலம்யாவையு
மெங்குளவுலகமுமீண்டலுற்றவே.

(இ - ள்.) மங்கை ஓர் பங்கு உடை வள்ளல்-(எப்பொழுதும்) மங்கைப்பருவத்தையேயுடைய உமாதேவியை ஒருபாகத்திலே உடைத்தாயிருக்கின்ற வரையாது அருள்செய்யுந் தன்மையையுடைய உருத்திரமூர்த்தி, ஏந்திய -(திருக்கரத்தில்) தரித்துள்ள, செம் கனல் - சிவந்த தீயானது, ஊழியில் - யுகாந்தகாலத்தில், செறிவது ஆம் என - (உலகமுழுவதிலும்) பரவுவதுபோல, அங்கு அவன் விழி பொழி அனலம் யாவையும் - அப்பொழுது அப்பரமசிவனது நெற்றிக்கண்களினின்று எழுந்த தீப்பொறிகளெல்லாம், எங்கு உள உலகமும் - எவ்விடத்திலுமுள்ள எல்லாவுலகங்களிலும், ஈண்டலுற்ற - சேர்ந்து வியாபித்தன; (எ - று.)

மங்கை - இளம்பெண். சிவபிரான் திருக்கையிலேந்தியுள்ள நெருப்பு ஊழிக்காலத்தில் உலகமெங்கும்பரவி எல்லாப்பொருள்களையும் அழிக்குமென்பது நூற்கொள்கை. அநலம் - வடசொல்; இது - விகாரப்பட்டு 'அனல்' எனவும் நிற்கும். வள்ளல் ஏந்திய கனல், தாருகவனத்து முனிவர்கள் ஏவியது.

இதுமுதல் நாற்பத்துமூன்றுகவிகள் - இப்படலத்திற் பதின்மூன்றுங் கவிபோன்ற கலிவிருத்தங்கள். (௬எ)

௬அ. ஆங்கனந்தழலெழவகிலமுற்றுமா
யோங்கியகால்களுமுலைவுற்றோய்ந்தன
வாங்கியதிரைக்கடல்வறந்ததாயிடைத்
தீங்கனல்வடவையுஞ்செருக்குநீங்கிற்றால்.

(இ - ள்.) ஆங்கனம் - அவ்வாறு, தழல் எழ - அனற்பொறிகள் வியாபிக்க, (அதனால்), அகிலம் முற்றும் ஆய் ஓங்கிய கால்களும் - உலகங்கள் முழுவதிலும் பரவிவளர்கின்ற காற்றுக்களும், உலைவு உற்று ஓய்ந்தன - தாபத்தை அடைந்து ஒடுங்கின; வாங்கிய திரை கடல் - (உலகத்தைச்)சூழ்ந்துள்ள அலைகளையுடைய சமுத்திரம், வறந்தது - வற்றிப்போயிற்று; ஆ இடை தீ கனல் வடவையும் - அக்கடலினடுவிலுள்ள கொடிய வடவாமுகாக்கினியும், செருக்கு நீங்கிற்று - (உலகத்தில் தானே சிறந்தவெப்பமுடையதென்பதனாலுண்டான) கர்வம் ஒழிந்தது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

அங்ஙனமென்பதன் நீட்டல்விகாரமாகிய ஆங்ஙனமென்பது, ஈண்டு எதுகை நோக்கி 'ஆங்கனம்' எனத்திரிந்தது; "யாங்கனமொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்" எனப் புறநானூற்றில் 'யாங்கனம்' என்பதுபோல. அகிலம்முற்றும் ஆய் தழல் எழ எனவும் இயைக்கலாம். 'கால்கள்' எனப்பன்மையாகக்கூறியது, சப்தமருத்துக்களெனக்காற்றுஎழுவகைப்படுதலால். அ + இடை = ஆயிடை; நீண்ட சுட்டின்முன் யகரந் தோன்றிற்று. தீக்கனல் என்பது எதுகைநோக்கி 'தீங்கனல்' என மெலிந்து நின்ற தென்றுவது, தீமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் இனம் மிக்குநின்ற தென்றுவது கொள்க. படபாமுகாக்கினியினது வெப்பத்தினும் மிக்கவெப்பமுடையன இறைவன்கண்ணனற்பொறிகளென்பது ஈற்றடியின் தாற்பரியம். (௬அ)

௬௯. பக்கனபாரகம்பதலைமுற்றுற
நெக்கனபணிக்ண்மெய்நெளிந்துநீங்கிய
திக்கயமாற்றியேதியக்கமுற்றன
தொக்கனவுயிர்த்தொகைதுளக்கமுற்றவே.

(இ - ள்.) (அவ்வனலின் வெப்பத்தைப் பொறுக்கமாட்டாமல்), பார் அகம் பக்கன - பூமியினிடங்கள் பிளவுபட்டன; பதலை முற்றுற நெக்கன - மலைகள் முழுவதும் வெடிப்படைந்தன; பணிகள் மெய் நெளித்து நீங்கிய - (நாகலோகத்திலுள்ள) பாம்புகள் (தாபத்தால்) உடம்பைநெளித்துக்கொண்டு ஒதுங்கின; திக் கயம் - (கீழிருந்து உலகத்தைத்தாங்குகின்ற) அஷ்டதிக்கஜங்கள், அரற்றியே - பேரிரைச்சலிட்டுக்கொண்டே, தியக்கம் உற்றன - கலக்கத்தையடைந்தன; தொக்கன உயிர் தொகை-(உலகத்தில்)குழுமியினவாகிய பிராணிவர்க்கங்கள், துளக்கம் உற்ற - நடுக்கத்தையடைந்தன.

இப்பாட்டில் முன்னிரண்டுவாக்கியங்கள் பின்மூன்றுவாக்கியங்களுக்கு ஏதுவெனவுங் கொள்ளலாம். கயம் - கஜம். திக்குயானைகள்எட்டு - கிழக்காதிமுறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் என்பன; இவற்றிற்கு முறையே பெண்யானைகள் - அப்பிரமு, கபிலை, பிங்களை, அநுபமை, தாமிரபர்ணி, சுப்பிரதந்தி, அங்கனை, அஞ்சனாவதி எனப்படும். தியக்கம், துளக்கம் என்பவற்றில், தியங்கு, துளங்கு-பகுதிகள். பணம் - படம்; அதனையுடையது, பணி. 'நெளிந்து' என்றும் பாடம். பணிகள் மெய்நெளித்து நீங்கிய - (பூமியைப்பரிக்கின்ற) அஷ்டமகாநாகங்கள் உடம்பை நெளித்துக்கொண்டு (பூமிசுமத்தலினின்று) நீங்கின என்றவாறும். (சுக)

ருo. காரணமில்லவன்கண்ணிற்கான்றதீப்
பேருள்புரிந்திடப்பிறந்தபான்மையா
லோருயிர்தன்னையுமொழிவுசெய்தில
வாரையுமெவற்றையுமச்சஞ்செய்தவே.

(இ - ள்.) (ஆயினும்), காரணம் இல்லவன் கண்ணில் கான்ற தீ - (தான்எல்லாவற்றுக்குங்காரணமாய்த்) தனக்கு ஒருகாரணத்தைப்பெறாத உமாபதியினது நெற்றித்திருநயனத்தினின்று வெளிப்பட்ட நெருப்புப்பொறிகள், பேர் அருள் புரிந்திட பிறந்த பான்மையால் - (எல்லாவுயிர்களுக்கும்) பெரிய கருணையைச் செய்யும்பொருட்டுத் தோன்றிய தன்மையினால், ஓர் உயிர்தன்னையும் ஒழிவு செய்தில - ஒரு உயிரையும் நாசஞ்செய்யவில்லை; ஆரையும் எவற்றையும் அச்சம் செய்தவே - உயர்திணையான மக்கள்தேவா நரகர்களையும் அஃறிணையான மற்றைப்பொருள்களையும் எல்லாவற்றையும் அஞ்சும்படிமாத்திரமே செய்தன; (எ - று.)

ஒருயிர்தன்னையும் - புல் மரம் முதலிய உற்றறியும் ஓரறிவுயிரையு முட்பட என்றுமாம். (ருo)

ருக. அன்னதன்வெம்மைகண்டமலன்பாங்குறை
கன்னியும்வியர்த்தனள்கலங்கியேயெழீஇப்
பொன்னடிநூபுரம்புலம்பித்தாக்குறத்
தன்னதோருறையுளைச்சாரவோடினாள்.

(இ - ள்.) அன்னதன் வெம்மை கண்டு - அந்தத்தீயின் வெப்பத்தை நோக்கி, அமலன் பாங்கு உறை கன்னியும் - குற்றமில்லாத அக்கடவுளது வாமபாகத்தில் எழுந்தருளியுள்ள உமாதேவியும், வியர்த்தனள் - (உடம்பு) வேர்த்தலையடைந்து, கலங்கியே - கலக்கமுற்றே, எழீஇ - எழுந்து, பொன் அடி நூபுரம் புலம்பி தாக்குற - அழகிய (தனது) பாதங்களிலே அணிந்துள்ள சிலம்பென்னும் அணிகள் ஒன்றோடொன்று தாக்கி ஒலிக்க, தன்னது

ஓர் உறையுளை சார ஓடினள் - தனது ஒப்பற்ற வாசஸ்தானமாகிய அந்தப் புரத்தை அடைதற்கு விரைந்துநடந்துசென்றாள்; (எ - று.)

பொன் நூபுரம் என இயைத்து, சுவர்ணமயமான சிலம்பென்றுமாம். புலம்பித்தாக்குற - தாக்கிப்புலம்புற என விகுதிபிரித்துக்கூட்டப்பட்டது. புலம்புதல் - ஓடும்பொழுதுண்டாகிய அதிர்ச்சியாற் கூந்தல்முதலியபாரத்தைப்பொறுக்கலாற்றாமல் நுண்ணிய இடை முறியுமோ என்று அஞ்சி அழுதலாகவுமாம். தன்னது - தனதுஎன்பதன் விரித்தல்; இங்ஙனங்கொள்ளாக்கால் "தான் றாம் நாம் முதல் குறுகும்" என்னுஞ் சூத்திரத்து "நான்கா திரட்டல்" என்றதனால் தான் எனபது ஆறனுருபோடு சேர்ந்து முதல்குறுகும்பொழுது தனிக்குறின்முன்னொற்று இரட்டாதென்க: இனி, தன்னது என்பதை - தானென்னும்பகுதியின்மேல் அகரச்சாரியையும் அவ்விகுதியும் பெற்றுவந்த ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெய ராகவுங் கொள்ளலாம். ஒருறையுள் - தனியிருப்பிடம். தன்னதோருறையுளைச்சார - தனது உறைவிடங்களுள் ஒன்றை யடைய என்றுமாம். (௫௧)

௫௨. முண்டகனாதியாமுன்னர்நின்றுள
வண்டர்களயாருமவ்வழல்கண்டஞ்சியே
விண்டனர்தலைத்தலைவெருவியோடினார்
பண்டெழுவிடத்தினாற்பட்டபான்மைபோல்.

(இ - ள்.) முண்டகன் ஆதி ஆ - தாமரை மலரில் தோன்றிய பிரமன் முதலாக, முன்னர் நின்றுஉள - எதிரிலே பொருந்தியுள்ள, அண்டர்கள் யாரும் - தேவர்கள் எல்லோரும், அ அழல் கண்டு அஞ்சி - அந்தநெருப்பை நோக்கிப் பயந்து, பண்டு எழு விடத்தினால் பட்ட பான்மை போல் - முன்னே (பாற்கடலினின்று) தோன்றின விஷத்தினால் வருந்தின விதம்போல, விண்டனர் - (ஒருவரையொருவர்) பிரிந்து, தலைத்தலை - இடந்தோறும், வெருவி ஓடினார் - நடுங்கி ஓடினார்கள்; (எ - று.) (௫௨)

௫௩. தீங்கனலடர்தலுஞ்செம்பொற்கோயிலின்
யாங்கணுமாகியேயிரிந்தபண்ணவர்
வீங்கியவுயிர்ப்பொடுமீண்டுமெந்தைதன்
பாங்கரில்வந்தனர்பரியுநெஞ்சினார்.

(இ - ள்.) தீ கனல் அடர்தலும் - கொடிய அவ்வக்கினி பரவியவளவில், செம் பொன் கோயிலின் யாங்கணும் ஆகியே இரிந்த - சிவந்த பொன்னின்மயமான அத்திருக்கோயிலினின்று எவ்விடத்திலும்பரவி யோடின, பண்ணவர் - தேவர்கள், (வேறுசரணமில்லாமையால்), பரியும் நெஞ்சினார் - தவிக்கின்ற மனத்தையுடையவர்களாய், வீங்கிய உயிர்ப்பொடு - அதிகமான பெருமூச்சுடனே, மீண்டும் - மறுபடியும், எந்தைதன் பாங்கரில் வந்தனர் - நமது இறைவனாகிய பரமசிவனது பக்கத்தில் வந்துசேர்ந்தார்கள்; (எ-று.) பாங்கர், பாங்கு என்னும் மென்றொடர்க்குற்றியலுகரத்திக்கு அர்-போலி. ()

௫௪. வலைத்தலைமானெனவன்னிசூழ்ந்துழித்
தலைத்தலையிரிந்துளோர்தம்பின்மீள்குறு
நலத்தகுகண்ணுதனுதற்சேர்ந்தனர்
கலத்தலையகன்றிடாக்காகம்போலவே.

(இ - ள்.) வன்னி சூழ்ந்துழி - அந்த அனற்பொறி சுற்றிலும்வியாபித்த பொழுது, வலைத்தலை மான என - வலையிலகப்பட்ட மான்போல (வருந்தி),

தலைதலை இரிந்துஉளோர்-இடந்தோறும் ஓடிப்போன தேவர்கள், (புகலிடம் வேறுஇல்லாமையால்), தம்மின் மீள்குறு - (வேறொருவருஞ்சொல்லாமல்) தங்களில்தாங்களே திரும்பிவந்து, கலம் தலை அகன்றிடா காகம் போல - மரக்கலத்தின் உச்சியை விட்டுநீங்காத காக்கைகள்போல, நலம் தகு கண் நுதல் நாதன் சேர்ந்தனர் - எல்லாநற்குணங்களும் பொருந்திய நெருப்புக் கண்ணை நெற்றியிலுடைய அவ்விறைவனையே அடைந்தார்கள்; (எ - று.)

வலைத்தலை, தலை - ஏழனுருபு. வன்னி - வஹ்நிஎன்னும் வடமொழித் திரிபு. வலை - சூழ்ந்த அனலுக்கும், மான்கள் - அதிலகப்பட்டதேவர்களுக்கும உவமை. கடலினடுவிலே யிருப்பதொரு மரக்கலத்தின் பாய்மரத்துச்சியிலே தங்கிய காகம் அதனைவிட்டு வேறொருபோக்கிடந்தேடி நாலுதிக்கிலுங் கரைகாணவொண்ணுமையாற் பற்றுமிடம் வேறு இல்லாமல் மீண்டும்வந்து அம்மரக்கலத்திலேயே கால்பாவிநிற்பதுபோலப் பரமசிவனைப் பிரிந்தோடினதேவர்கள் புகலிடம் வேறில்லாமையால் மீண்டும் அவனையே அடைந்தன ரென்பதாம்; "வெங்கட்டின் களிறடர்த்தாய் வித்துவக்கோட்டம்மானே, யெங்குப்போயுய்கேனுன் னிணையடியே யடையலலா, லெங்கும் போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும், வங்கத்தின் கூம்பேறு மாப்பறவை போன்றேனே" என்னும் பெரியார்பாசுரத்தோடு இதனை ஒப்பிடுக: இங்ஙனம்பொருள்கூறுது, 'கலத்தலையகன்றிடாக்காகம்'என்பதற்கு-(தன்இனத்தோடு) சேர்தலைநீங்காதகாக்கையென்று உரைகூறுதல் சிறவாமை உணர்க. விரைந்துசெல்லும் ஆற்றல் இன்மைபற்றிக் காக்கையைக் கூறினர். காகம் - கா கா என்று கத்துதல்பற்றிய பெயர். 'வன்னி சூழ்ந்துழி' என்பதனை மத்திமதீபமாக்கி, 'வலைத்தலைமானென' என்றதனோடும் இயைத்து, தீச்சூழ்ந்தபொழுது வலையிற்பட்ட மான் படும் பாடுபோல என்றும் உரைக்கலாம். (௫௪)

௫௫. தோற்றியநுதல்விழிச்சுடரின்சூழ்வினுக்
 காற்றலராகியேயடைந்தவானவர்
 நாற்றடம்புயமுடைஞானநாயகற்
 போற்றிசெய்தினையனபுகல்வதாயினர்.

(இ - ள்.) நுதல் விழி - (இறைவனது) நெற்றிக்கண்ணினின்றும், தோற்றிய - எழுந்த, சுடரின் - அனலினுடைய, சூழ்வினுக்கு - (தம்மைச்) சூழுந்தன்மைக்கு, ஆற்றலர் ஆகியே - பொறுக்கும்வலியில்லாதவர்களாய், அடைந்த - வந்துசேர்ந்த, வானவர் - தேவர்கள், நால தட புயம் உடை ஞானம் நாயகன் போற்றி செய்து-நான்கு பெரிய திருத்தோள்களையுடைய அறிவுக்குத்தலைவனான பரமசிவனை வணங்குதல்செய்து, இனையன புகல்வது ஆயினர் - இவ்வார்த்தைகளைக் கூறததொடங்கினார்கள்; (எ-று.)—அவை மேல் ஆறுகவிகளிற் கூறுகிறார்.

ஞானநாயகன் என்பதற்கு - முற்றுமுணர்ந்தவன் [சர்வஜ்ஞன்] என்றாவது, தத்துவஞானத்துக்குப் புலப்படுகிற கடவுள் என்றாவது கருத்து. போற்றி - தொழிற்பெயர்; இ - விகுதி: 'உதவி' என்பதிற்போல. 'சுடரின் சூழ்ச்சியை' என்றும் பாடம். (௫௫)

௫௬. வெந்திறலவுணரைவிட்டுதற்கொரு
 மைந்தனையருள்கெனவந்துவேண்டினே
 மந்தமிலழலைநீயருடல்செய்தனை
 யெந்தையேயெங்ஙனம்யாங்களுய்வதே.

(இ - ள்.) வெம்திறல் அவுணரை வீட்டுதற்கு - கொடிய வலிமையையுடைய அசுரரை அழிக்கும்பொருட்டு, ஒரு மைந்தனை அருள்க என - ஒருகுமாரனை உண்டாக்கியருள்வாயாக வென்று, வந்து வேண்டினேம் - (உன்னை நாங்கள்) வந்தடைந்து பிரார்த்தித்தோம்; (அதற்கு), நீ —; அந்தம் இல் அழலை - அழிதலில்லாத அக்கினியை, அருட்செய்தனை - உண்டாக்கியருளினாய்; (இங்ஙனஞ்செய்தால்), எந்தையே - எங்கள் தலைவனே! யாங்கள் உய்வது எங்ஙனம் - நாங்கள் பிழைப்பது எவ்வாறு? (எ - று.)

வீட்டுதல் - உடம்பினின்று உயிரை நீங்குவித்தல்; எனவே, வதைத்தலாயிற்று. அந்தம் - எல்லைமாம். (௫௬)

௫௭. பங்குறையுமையவள்பாணியின்வரு
சங்கையெவ்வுலகமுங்கலந்ததாமென
விங்குநின்னுதல்விழியிருந்துநீங்கிய
பொங்கழலெங்கணும்பொள்ளென்றீண்டிய.

(இ - ள்.) பங்கு உறை - (உனது) பக்கத்தில் வீற்றிருக்கின்ற, உமையவள் - பார்வதிதேவியினது, பாணியின் - இருக்கையினின்றும், வரு - தோன்றிய, கங்கை - கங்காநதி, எ உலகமும் கலந்தது ஆம் என - எல்லாவுலகங்களிலும் போய்ப்பரவியதுபோல, இங்கு - இப்பொழுது, நின் நுதல் விழி இருந்து நீங்கிய பொங்கு அழல் - உனது நெற்றிக்கண்களினின்று புறப்பட்ட ஜ்வலிக்கின்ற அனற்பொறிகள், எங்கணும் - எவ்விடத்தும், பொள் என்று ஈண்டிய - விரைவிற் பரவின; (எ - று.)

பார்வதிதேவி ஐந்துபிராயமானவுடனே பரமசிவனை மணஞ்செய்தற்குத் தவஞ்செய்ய விரும்பியவளாய்த் தன்கருத்தைப்பெற்றோர்க்குத்தெரிவிக்க, அவர்களால் "அன்னகே ளெம்பி னிங்கி யருந்தவ மாற்றற் கொத்த, தின்னதோர் பருவ மன்று வியாண்டுமோ ரைந்தே சென்ற, தின்னுடல் வொருதா லீண்டிக் கிலைமையைத் தவிர்தி" என்றுகூறி முதலில் மறுக்கப்பட்டதனால்; அவளுக்கு உமையென்று ஒருதிருநாமம் உண்டாயிற்று; உ,மா என்பதற்கு-அம்ம, வேண்டாம் என்றுபொருள். ஒருகாலத்தில் திருக்கைலாசத்திலேஉத்தியானவனத்திலே உமாதேவியானவள்உருத்திரமூர்த்தியின்பின்னேவந்து பேசாமல் விளையாட்டாக அவருடைய இரண்டுதிருக்கண்களையுந் தனது இரண்டுதிருக்கைகளால் ஒருகணப்பொழுது மறைக்க, அம்மாத்திரத்திற் சந்திரசூரியராதிய ரனைவருடைய ஒளிகளும் ஒழிந்து எங்கும்இருள்மூடி யுகங்கள்பலகழிந்து மன்னுயிர்கள் மிகவருந்த, அவ்வருத்தத்தை ஒழிக்கும்பொருட்டுச் சிவபிரான் சிறிது நெற்றிக்கண்ணைத்திறந்து நோக்க, பார்வதி அதனைக்கண்டு அஞ்சி உடனே கண்களைமூடிய கைகளிரண்டையும் வாங்கிவிட்டு, அப்பொழுது தன்கைவிரல்கள்பத்திலுந்தோன்றிய வியர்வைநீரைக் கீழேஉகுக்க, அவ்வியர்வைகள்பத்தும் பத்துக்கங்காநதிகளாய் எங்கும்பரவி உலகத்தை ஒழிக்கவுற, அது கண்டு அஞ்சிவந்து சரணமடைந்த தேவர்களது வேண்டுகோளாற் சிவபெருமான் அவற்றைத் தனது ஜடையில் தரித்தருளி ஒடுக்கினு ரென்பது இங்குக்குறித்த வரலாறு; இதனை மேல் ததிசியுத்தரப்படலத்திற் காண்க. பாணி - வடசொல். இருந்து - ஐந்தாம்வேற்றுமைச் சொல்லுருபு. (௫௭)

௫௮. கற்றையஞ்சுடர்பொழிகனல்கனின்றொகை
சுற்றியெவ்வுலகமுந்துவன்றனுற்றவான்
மற்றொருகணத்தவைமாற்றிடாயெனின்
முற்றுயிர்த்தொகையையுமுடிவுசெய்யுமால்.

(இ - ள்.) கற்றை அம் சுடர் பொழி கனல்களின் தொகை - தொகுதியான அழகிய சுவாலைகளை வீசுகின்ற அனற்பொறிகளின் கூட்டங்கள், எ உலகமும் சுற்றி அவன்றல் உற்ற - எல்லாவுலகங்களையுஞ் சூழ்ந்து நிறைந்து பரவின; மற்று ஒரு கணத்து அவை மாற்றிடாய் எனின் - இன்னும் ஒருக்ஷணப்பொழுதினுள்ளே அவ்வனற்பொறிகளை (நீ) மறுக்காதொழிவையானால், (அவை), முற்று உயிர் தொகையையும் முடிவு செய்யும் - (உலகத்தில்) நிரம்பியுள்ள எல்லாப்பிராணிவர்க்கங்களையும் நாசப்படுத்தும்; (எ-று.) —ஆல் இரண்டும் - ஈற்றசை.

கற்றையஞ்சுடர், அம் அல்வழிச்சாரியையென்றல்-நேர். (௫௮)

௫௯. விஞ்சியபேரழல்வெம்மையாற்றலா
தஞ்சினமிரிந்தயாமையநின்னிரு
செஞ்சரணடைந்தனந்தெரியினியலாற்
றஞ்சமதுளதுகொலெம்மைத்தாங்கவே.

(இ - ள்.) விஞ்சிய - அளவுகடந்த, பேர் அழல் வெம்மை - பெரிய அக்கினியினது வெப்பத்தை, ஆற்றலாது - சகிக்கமுடியாமல், அஞ்சினம் - பயந்து, இரிந்த - ஓடிவந்த, யாம் - நாங்கள், ஐய - தலைவனே! நின் இரு செம் சரண் அடைந்தனம் - உனது சிவந்த உபயபாதங்களை (அடைக்கலமாக) அடைந்தோம்; தெரியின் - ஆராயுமிடத்து, எம்மை தாங்க-அடியேங்களைக் காத்தருளுதற்கு, நீ அலால் - நீயேயல்லாமல், தஞ்சம் அது - வேறுரக்ஷகவஸ்து, உளது கொல் - இருக்கின்றதோ? [இல்லையென்றபடி.]

சரண் - சரணமென்பதன்கடைக்குறை. தஞ்சம் - பூரணம், காக்கும்பொருள், பற்றுக்கோடு. கொல்என்னும் இடைச்சொல், இங்கு வினாவகையால் எதிர்மறைப்பொருளுணர்த்திற்று. 'இரிந்து' என்றும் பாடம்.

௬௦. மலக்குறுமனத்தினேம்வருத்தமுற்றவு
முலக்குறநீக்குநீயொல்லையெம்மிடை
யலக்கணதியற்றுதியாயினன்னதை
விலக்குறுநீரினார்வேறியாவரே.

(இ - ள்.) மலக்கு உறு மனத்தினேம் - கலக்கம் மிக்க மனத்தையுடைய எங்களது, வருத்தம் முற்றவும் - துன்பங்களெல்லாவற்றையும், உலக்குற - கெடும்படி, நீக்கும் -ஒழித்தருளுந்தன்மையுள்ள, நீ - நீதானே, ஒல்லை - விரைவில், எம்மிடை - எங்களிடத்தில், அலக்கண் அது இயற்றுதி ஆயின் - துன்பத்தைச் செய்வாயானால், அன்னதை விலக்குறு நீரினார் - அத்துன்பத்தை நீக்குந்தன்மையுடையார், வேறு யாவர் - வேறே யார் இருக்கிறார்கள்? [எவருமிலரென்றபடி]; (எ - று.)

மலக்கு - மலங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். இனி, மலம் குறு எனப்பிரித்து, (ஆணவம்முதலிய) மலங்களை யுடைய அற்ப மனத்தை யுடைய அடியேங்களது என்றும் உரைக்கலாம். உலக்குறஎன்பதில், உல - பகுதி, க் - சந்தி, கு - சாரியை, உறு - துணைவினை; இவையனைத்தும் - ஒருபகுதி: அ - வினையெச்சவிகுதி. (௬௦)

௬௧. நிறைமுடிப்பணிமிசைநிலனும்வானமு
மிறைமுடிக்கின்றவிவ்வெரியைநீக்கியே
பிறைமுடிக்கொண்டிடுபெருமவெம்முடைக்
குறைமுடித்தருளெனக்கூறிவேண்டினார்.

(இ-ள்.) பிறை முடி கொண்டிடு பெரும - இளஞ்சந்திரனைச் சிரசிலே தரித்தருளிய மகிமையையுடையவனே! நிறை முடி பணிமிசை நிலனும் - (ஆயிரமாதலால்) நிறைந்த தலைகளையுடைய ஆதிசேஷனின்மீது தங்குகின்ற பூமியையும், வானமும் - மேலுலகத்தையும், இறை முடிக்கின்ற - கணப்பொழுதிலே நாசஞ்செய்யவல்ல, இ எரியை - இந்த அக்கினியை, நீக்கி - விலக்கியருளி, எம்முடை குறை முடித்தருள் - எங்க[illegible]யகுறையைப் பூர்த்திசெய்தருளுவாயாக, என - என்று, கூறி - சொ[illegible], வேண்டினார் - பிரார்த்தித்தார்கள், (பரமசிவனைத் தேவர்கள்); (எ-று.)

இறை - காலவிரைவு. குறை - வேண்டுகோள்; தமாரனை உண்டாக்கி அசுரரை ஒழித்தல். (௯௧)

௯௨. அஞ்சலினவர்புகழண்ணலாதியோர்
அஞ்சலிசெய்திவையறைந்துவேண்டலும்
அஞ்சலிலஞ்சடையணிந்தநாயகன்
அஞ்சலிரென்றுகையமைத்துக்கூறினான்.

(இ-ள்.) அஞ்சுஅலினவர் புகழ் அண்ணல் ஆதியோர் - ஸ்ரீபாஞ்சராத்திரநூலுடையோரால் புகழப்படுகின்ற திருமாலை முதலாகவுடைய தேவர்கள், அஞ்சலிசெய்து - கைகூப்பித்தொழுது, இவை அறைந்து - இவ்வார்த்தைகளைச் சொல்லி, வேண்டலும் - பிரார்த்தித்தவளவில், அம் சலிலம் சடை அணிந்த நாயகன் - அழகிய (கங்காநதியின்) நீரைச் சடையிலே தரித்துள்ள இறைவன், கை அமைத்து - கையைஅமர்த்தி, அஞ்சலிர் என்று கூறினான் - பயப்படாதீர்களென்று சொல்லியருளினான்; (எ-று.)

பாஞ்சராத்திரம் வைகாநசம் என்னும் வைஷ்ணவாகமங்கள் இரண்டினுட் பாஞ்சராத்திரம் பிரதானமாய்ப் பலராலுங் கொண்டாடப்பட்டுப் பிரசித்தமாயிருத்தலால், விஷ்ணுவை 'அஞ்சலினவர்புகழண்ணல்' என்றார்; கீழ் மேருப்படலத்தில் "அரிய தத்துவ மையைந்தின் பேதமு, மரபினுடினர் வாலுணர் வெய்திய, திருவினாயகன்" என்றதும் இக்கருத்துப்பற்றியே. பாஞ்சராத்திரமென்பது, (திருமாலால்) ஐந்துராத்திரிகளிற் கூறப்பட்டதொரு நூலென்பதுபற்றி வந்த காரணப்பெயராதலால், அதனைமொழிபெயர்த்து, பாஞ்சராத்திரமுடைய வைஷ்ணவர்களை 'அஞ்சலினவர்' என்றார்: அஞ்சு - ஐந்து; போலி: அல் - இராத்திரி. பஞ்சராத்திரிகளிற்கூறப்பட்டது, பாஞ்சராத்திரம்; தத்திதாந்தநாமம். அஞ்சலிசெய்து - கூப்பிய கையராய். அஞ்சலிர் - எதிர்மறையேவற்பன்மை; அல் - எதிர்மறையிடைநிலை, இர் - விகுதி. அஞ்சலிரென்றுகூறுதல் - அபயமளித்தல். கையமைத்தல் - அபயவத்தம்: உள்ளங்கை வெளித்தோன்றுமாறு கையைமலர்த்திவிரல்கள் மேல்நோக்கும்படி வைப்பது அபயமுத்திரையாம்; இது, அஞ்சாதேயுங்களென அடியார்களுக்கு அபயப்பிரதானஞ்செய்தற்கு அடையாளமாம். இக்கவியில் நான்கடிகளின்முதலிலும் அஞ்சலிஎன்றவளவில் எழுத்தொத்துப் பொருள் வேறுபட்டு வந்தது, யமகமென்னுஞ் சொல்லணியெனக் காண்க. (௯௨)

௯௩. பொன்மலைவில்லிநன்புதிதின்வந்திடு
தன்முகமைந்தையுங்கரந்துதாவில்சீர்
நன்முகமொன்றொடுநண்ணியத்துணைத்
தொன்மையினியற்கையாய்த்தோன்றிவைகினான்.

(இ - ள்.) (என்றுகூறி), பொன் மலை வில்லினன் - சுவர்ணமயமான மகாமேருகிரியை வில்லாகவுடைய பரமசிவன், புதிதின் வந்திடு தன் முகம் ஐந்தையும் கரந்து - நூதனமாகத்தோன்றின தனது ஐந்துதிருமுகங்களையும் மறைத்தருளி, தா இல் சீர் நல் முகம் ஒன்றொடு நண்ணி - குற்றமில்லாத சிறப்பையுடைய அழகிய ஒருதிருமுகத்தோடே பொருந்தி, அத்துணை - அப்பொழுது, தொன்மையின் இயற்கை ஆய் தோன்றி வைகினன் - பழைமையான தம்மியல்பாகிக் காணப்பட்டுநின்றார்; (எ-று.)

மேருமலை சிவனுக்கு வில்லானது, திரிபுரசங்காரகாலத்தில். நன்முகம் - சாந்தமான முக மென்றபடி. 'புதிதின் வந்திடு தன்முக மைந்து' என்றது, முன்பே ஒருதிருமுகத்தோ டிருந்ததனால்: இங்ஙனங்கொள்ளாக்கால், சுங - ம் கவியில் 'தனதுதொல்லைத்திருமுகமாறுங்கொண்டான்' என்றதனோடு மாறுகொளக்கூறலாம். (சுங)

சுச. தன்னருணிலைமையாற்சண்முகத்திடை
நன்னுதல்விழிகளினல்குதீப்பொறி
யிந்நிலவரைப்புவானீண்டலுற்றவை
முன்னுறவரும்வகைமுதல்வன்முன்னினன்.

(இ - ள்.) முதல்வன் - அம்முழுமுதற்கடவுள், தன் அருள் நிலைமையால் - தமது கருணையின் இயற்கையினாலே, சண்முகத்திடை - தமது ஆறுதிருமுகங்களிலுமுள்ள, நல் நுதல் விழிகளின் - அழகிய நெற்றித்திருநயனங்களினின்று, நல்கு - வெளிப்பட்ட, தீ பொறி - நெருப்புப்பொறிகள், இந்நிலம் வரைப்பு வான் ஈண்டல் உற்றவை - இந்தப்பூலோகத்தினெல்லையிலும் மேலுலகத்திலும் வியாபித்துள்ளவை, முன் உற வரும் வகை - தமது எதிரிலே ஒருசேர வரும்படி, முன்னினன் - எண்ணியருளினார்; (எ-று.)

சண்முகம் - ஷண்முகம். முன்னுதல் - திருவுளங்கொள்ளுதல். முதல்வன் - அனாதியானவன்; தலைமையாய்நிற்பவன். 'இன்னிலம்' என்னும் பாடத்துக்கு, இனிமையான பூலோக மென்க. (சுச)

சுரு. அந்தியம்பெருநிறத்தமலனவ்வகை
சிந்தைகொண்டிடுவழிச்செறிந்தபேரழல்
முந்தையின்வெம்பொறிமூவிரண்டவாய்
வந்துமுன்குறுகலுமகிழ்ந்துநோக்கினன்.

(இ - ள்.) அந்தி அம் பெரு நிறத்து அமலன் - மாலைப்பொழுதுபோலச் சிவந்த அழகிய சிறந்த திருநிறத்தையுடைய குற்றமற்ற சிவபிரான், அவ் வகை - அந்தவிதமாக, சிந்தை கொண்டிடுவழி - திருவுள்ளம்பற்றிய மாத்திரத்தில், செறிந்த பேர் அழல் - (எங்கும்) நெருங்கிவியாபித்த பெரிய அக்கினிகள், முந்தையின் - முன்போல, வெம்பொறி, மூ இரண்டு ஆய் - ஆறு அனற்பொறிகளாய், முன் வந்து குறுகலும் - எதிரில் வந்துசேர்ந்திட, மகிழ்ந்து நோக்கினன் - (அக்கடவுள் அவற்றை) மகிழ்ச்சியோடு பார்த்தருளினார்.

சுசு. ஆதகுகாலையிலமரர்தங்களு
ளோதகுசெயலிலாவுலவைத்தேவையு
மூதகுதீயையுமுகத்தைநோக்குறு
மேதகுகருணையால்விமலன்கூறுவான்.

(இ - ள்.) ஆ தகு காலையில் - அவ்விதமான காலத்தில், விமலன் - குற்றமற்ற பரமசிவன், அமரர்தங்களுள் - தேவர்களுள், ஓ தகு செயல

இலா உலவை தேவையும் - ஒழியத்தக்க செய்கையில்லாத வாயுதேவனையும், மூ தகு தீயையும் - மூன்றுவகைப்படுகிற அக்கினிதேவனையும், முகத்தை நோக்குறு - முகத்தைப் பார்த்து, மே தகு கருணையால் - அன்போடு பொருந்திய அருளினால், கூறுவான் - (சிலவார்த்தைகள்) சொல்லியருளுவாரானார்; (எ - று.)—அவை மேற்கவியிற் கூறுகிறார்.

ஆதகுகாலையில் - அந்தத் தக்க காலத்தில் என்றபடி. ஆ - அகரச்சுட்டின் நீட்சி. ஓ- ஓவு என்னும் முதனிலைத்தொழிற்பெயரின் விகாரம்; ஓவு என்பது ஓ என விகாரப்பட்டதென்பதனை "ஓஒதல் வேண்டுமொளிமாழ்குஞ் செய்வினை" என்னுந்திருக்குறளில் 'ஓவுதலென்பது குறைந்துநின்றது' எனப் பரிமேலழகர் உரைத்தவாற்றாலும் அறிக. ஓதகுசெயலிலா- விலக்கத்தக்க தீச்செய்கையை யுடையனாகாத என்றவாறு; இனி, (சஞ்சரித்தலில்) ஒழியுஞ்செய்கை யில்லாத வென்றும் உரைக்கலாம்: வாயு சதாகதியாதலால். இனி, ஓதகுசெயல்-ஓய்வடையுஞ்செய்கை யென்னினுமாம்; ஓ-ஓய்என்பதன் விகாரம். உலவை-(எப்பொழுதும்) உலாவுந்தன்மையுடையதென்பதுபற்றிவந்த காரணக்குறி; உலவு-பகுதி, சஞ்சரித்தலென்றுபொருள்: ஐ-கருத்தாப்பொருள் விகுதி. உலவைத்தேவு - வாயுவாகிய தேவன் என இருபெயரொட்டுப்பண்புத்தொகை. மூ தகு தீ - நாற்சதுரமும் வட்டமும் திரிகோணமும் ஆகிய மூன்றுவகையைக் கருதின ஆகவனீயம் தக்ஷிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்றுவகைப்பட்ட அக்கினி; "மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து" என்றார் திருமுருகாற்றுப்படையுள்ளும்: இவ்வுரைக்கு, மூ - மூன்று என்பதன் விகாரம்; இனி, முதனிலைத்தொழிற்பெயரெனக்கொண்டு, மூத்தல் [முதுமை] பொருந்திய தீ யென்னவுமாம். அன்புமுதிர்ந்தவிடத்து அருள்உளதாவதாதலால், 'மே தகு கருணை' என்றார்; மே - அன்பு; அன்பினால் அருள்பிறத்தலை "அருளென்னு மன்பீன் குழவி" என்னுந் திருக்குறளினாலும் அறிக. இனி, மேதகுகருணை - மேன்மை பொருந்திய அருளென்றுமாம். பஞ்சபூதங்களுட் பேராற்றலுடையவராதலாலும், ஒருவர்க்கொருவர் நண்பராதலாலும், வாயு அக்கினி என்னும் இவ்விருவரை விமலன்நோக்கியருளியது. (சுசு)

சுஎ. நீங்களிச்சுடர்களைநெறியிற்றாங்கியே
வீங்குநீர்க்கங்கையில்விடுத்திரன்னவை
யாங்கவள்சரவணமமரவுய்க்குமா
லீங்கிது நும்பணியென்றியம்பினான்.

(இ - ள்.) 'நீங்கள்—, இச் சுடர்களை - இந்தத்தேஜசுகளை, நெறியில் தாங்கியே - ஒழுங்காக எடுத்துக்கொண்டுபோய், வீங்கு நீர் கங்கையில் விடுத்திர் - மிக்க ஜலத்தையுடைய கங்காநதியிலே செலுத்திவிடுங்கள்; அன்னவை - அவற்றை, அவள் - அக்கங்காதேவி, ஆங்கு - அவ்விடத்திலிருந்து, சரவணம் அமர - சரவணமென்னும்பொய்கையிலே போய்ச்சேரும்படி, உய்க்கும் - செலுத்துவள்; ஈங்கு இது நும் பணி - இப்பொழுது இது (நாம்) உங்களுக்கு இட்ட கட்டளையாம்', என்று இயம்பினான்-என்று (சிவபிரான்) சொல்லியருளினார்; (எ - று.)—ஆல்-அசை.

அவள் உய்க்கும் - செய்யுமென்னுமுற்றுப் பெண்பாலிற்சென்றது. நும் பணி - நீவிர்செய்யவேண்டுந்தொழில் என்றவாறு. (சுஎ)

சுஅ. கூற்றுயிருண்டதாட்குழகனிவ்வகை
சாற்றியதுணர்தலுந்தாழ்ந்துமும்முறை

போற்றினர்நடுங்கினர்புலம்புநெஞ்சினர்
காற்றொடுகனலிவைகழறன்மேயினர்.

(இ - ள்.) கூற்று உயிர் உண்ட தாள் - யமனது உயிரை ஒடுக்கிய திருவடியையுடைய, குழகன் - (என்றும்) இளையவனான எம்பெருமான், இவகை சாற்றியது - இவ்வாறு சொல்லியருளியதை, உணர்தலும் - கேட்டருளியமாத்திரத்தில், காற்றொடு கனல் - வாயுதேவனும் அக்கினிதேவனும் - நடுங்கினர் - (அச்சத்தால்) நடுக்கமுற்றவர்களாகி, புலம்பு நெஞ்சினர், வருத்தத்தையுடைய மனமுடையவர்களாய், மும்முறை தாழ்ந்து - (சிவபிரானை விதிப்படி) மூன்றுதரம்வணங்கி, போற்றினர் - துதித்து, இவை - இவ்வார்த்தைகளை; கழறல் மேயினர் - சொல்லத்தொடங்கினார்கள்; (எ - று.)— அவை மேல் நான்குகவிகளிற் காண்க.

ஊழ்வினையினால் பதினாறுபிராயம்பெற்ற மிருகண்டுபுத்திரராகிய மார்க்கண்டேயரென்பவர் கூற்றுவன்வந்து தம்மைக்காலபாசத்தாற்கட்டியிழுக்குங்காலத்துப் பரமசிவனைச் சரணமடைய, அப்பெருமான் யமனைக் காலாலுதைத்துத்தள்ளி முனிகுமாரருக்கு என்றும்பதினாறாகத் தீர்க்காயுசுகொடுத்தருளின ரென்பது கதை: இக்கதையால், அநுபவித்தே தீரவேண்டும் பெருவலியதாகிய ஊழ்வினையையுந் தன்அடியார்க்குக் கடக்கச்செய்கிற கடவுளது திருவருளுடைமை விளங்குகின்றது. குழகன் - அழகுடையான் என்றுமாம். சிவபிரானை மூன்றுதரம் வணங்குதல் முறைமை. (சுஅ)

சுகூ. ஒருநொடியளவையினுலகம்யாவுமாய்ப்
பெருகியவித்தழல்பெருமநின்னுடைத்
திருவருணிலைமையாற்சிறுகின்றுதலா
லரிதரிதடியரேமாற்றலாகுமோ.

(இ - ள்.) பெரும - மகிமையுடையவனே! ஒரு நொடி அளவையின் - ஒருமாத்திரைப்பொழுதினுள்ளே, உலகம் யாவும் ஆய் பெருகிய - உலகங்களெல்லாவற்றிலும் போய்வியாபித்த, இத்தழல் - இந்த அக்கினி, நின்னுடை திரு அருள் நிலைமையால் - உன்னுடைய மேன்மையான கருணையின் தன்மையினாலேயே, சிறுகிற்று - (இங்ஙனம்) ஒடுங்குகின்றது; ஆதலால்—, அடியரேம் ஆற்றல் - (இவ்வக்கினியை) அடியேங்கள் பரித்தல், ஆகுமோ - கூடுமோ? [கூடுவதன்று]; அரிது அரிது - (அத்தொழில்) அருமையுடையது அருமையுடையது; (எ - று.)

நொடி - ஒருமனிதன் இயல்பாகக் கையை ஒருகால் நொடித்தற்கு வேண்டும் பொழுது. அளவை, ஐ - சாரியை. அரிதரிது - அச்சமபற்றிய அடுக்கு. அடியரேமாற்றல் என்பது - மத்திமதீபம். (சுகூ)

எ0. ஈற்றினையுலகினுக்கிழைக்குநின்கணே
தோற்றியகனலினைச்சுமத்தற்சோர்கண
மாற்றலையுடையரோவவனிகேள்வனு
நாற்றிசைமுகமுடைநளினத்தேவுமே.

(இ - ள்.) அவனி கேள்வனும் - பூதேவியின் கொழுநனான திருமாலும், நால் திசை முகம் உடை நளினம் தேவும் - நான்குதிக்குக்களிலும் முகத்தையுடைய தாமரைமலரில் தோன்றிய பிரமதேவனும், உலகினுக்கு ஈற்றினை இழைக்கும் - உலகங்களுக்கெல்லாம் நாசத்தைச்செய்யும்படியான, நின்கணே தோற்றிய கனலினை - உன்னிடத்தினின்று உண்டான அக்

இனியை, ஓர் கணம் - ஒருகணப்பொழுதாயினும், சுமத்தற்கு - தரிப்பதற்கு, ஆற்றலை உடையரோ - வல்லமையுடையார்களோ? [அல்லரென்றபடி].

எங்களினும் பலமடங்கு போற்றலையுடைய பிரமவிஷ்ணுக்களாலும் ஒருகணப்பொழுதும் பரிக்கமுடியாத நினதுதேஜசை எளியேங்களோ பரிக்கற்பாலோம் என்றுகூறினர். இலழக்குங் கனல், தோற்றிய கனல் எனவியையும். இனி, முதலடிக்கு - சர்வசங்காரத்தைச்செய்கின்ற உன்னுடைய கண்களினின்று என்றும் உரைக்கலாம். (எ0)

எக. பண்டெழுவிடத்தினிற்பரந்ததீச்சுடர்
கண்டலுநின்றிலங்கவலுற்றோடின
மண்டவும்வெருவுதுமவற்றையாந்தலைக்
கொண்டனமேகுதல்கூடற்பாலதோ.

(இ - ள்.) பண்டு எழு விடத்தினில் - (முன்பு பாற்கடலினின்று)தோன்றிய விஷம்போல, பரந்த - (உலகமெங்குங் கொடுமையாகப்) பரவிய, தீ சுடர் - அக்கினிச்சுவாலையை, கண்டலும் - பார்த்தமாத்திரத்தில், நின்றிலம் - (எதிரில்) நின்றோமல்லோம்; கவல் உற்று ஓடினம் - கவலையையடைந்து ஓடிப்போனோம்; அண்டவும் வெருவுதும் - அருகில்நிற்பதற்கும் அஞ்சினோம்; அவற்றை - அப்படிப்பட்ட தீப்பொறிகளை, யாம் - நாங்கள், தலைக்கொண்டனம் ஏகுதல் - சிரமேற்கொண்டு பரித்துச்செல்லுதல், கூடற்பாலதோ - இயையுந்தன்மையுடையதோ [அன்று என்றபடியாம்]; (எ - று.)

கண்டலும் - காண்டலும் என்பதன் எதுகைநோக்கிய குறுக்கல். கவல் - முதனிலைத்தொழிற்பெயர்; இனி, கவலுறு - துணைவினையோடுசேர்ந்த பகுதியென்னவுமாம். தலைக்கொண்டனம் என்றது, தங்களுக்கு உள்ள சிவபக்தியைப் புலப்படுத்துதற்கு. (எக)

எஉ. அப்பெருங்கனலினையடைதற்குன்னினும்
வெப்புறுமெமதுளம்வியர்க்கும்யாக்கையு
மெப்பரிசேந்துவம்யாங்களென்றலுந்
துப்புறழ்படர்சடைப்பகவன்சொல்லுவான்.

(இ - ள்.) அ பெரு கனலினை - அந்தப் பெரிய அக்கினியை, அடைதற்கு - (அருகிற்) சேர்தற்கு, உன்னினும் - எண்ணினாலும், எமது உளம் வெப்பு உறும் - எங்கள்மனந் தாபமடையும்; யாக்கையும் வியர்க்கும் - உடம்பும் (தாபத்தால்) வேர்வையடையும்; (இவ்வாறிருக்க), யாங்கள் எப்பரிசு ஏந்துவம் - நாங்கள் (அத்தேஜசை) எவ்வாறு தரிப்போம், என்றலும் - என்று (வாயுவும் அக்கினியும்) விண்ணப்பித்தவளவில், துப்பு உறழ் படர் சடை பகவன் - பவழத்தையொத்துச்சிவந்த பரவிய (கபர்த்தமென்னுஞ்) சடையையுடைய கடவுள், சொல்லுவான் - சொல்பவரானார்; (எ-று.) —அது மேற்கவியிற் காண்க.

யாக்கை - (சப்ததாதுக்களால்) யாக்கப்பட்டது; யாத்தல் - கட்டல். பகவன -பகவாந் என்பதன் விகாரம்; நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, செல்வம், ஞானம், வைராக்கியம் என்கிற ஆறுகுணங்களையும் உடையவன் என்று பொருள்: பகம் - இந்த ஆறுகுணம், வாந் - வடமொழிப்பெயர் விகுதி. (எஉ)

எ௩. ஒன்றொருகோடியினிலுலகமுற்றுமாய்த்
துன்றியவிச்சுடர்சுமந்துகங்கையிற்

சென்றிடநுங்கள்பாற்றிண்மையெய்துக
வென்றலுநன்றெனவிசைந்துபோற்றினர்.

(இ - ள்.) 'ஒன்று ஒரு நொடியினில் - பொருந்தியதொரு நொடிப் பொழுதினுள்ளே, உலகம் முற்றும் ஆய் துன்றிய - உலகமுழுவதிலுஞ் சென்று பரவிய, இ சுடர் - இந்தச்சோதியை, சுமந்து - தரித்து, கங்கையில் சென்றிட - கங்காநதியிற் போய்ச்சேருமளவும், திண்மை நுங்கள்பால் எய்துக - (அதற்கேற்ற) வலிமை உங்கள்பால் அமைவதாக,' என்றலும் - என்று (சிவபிரான்) அனுக்கிரகித்தவளவில், (வாயுவும் அக்கினியும்), நன்று என - நல்லதென்றுசொல்லி, இசைந்து - (அங்ஙனஞ்செய்ய) உடன்பட்டு, போற்றினர் - (சிவத்தை) வணங்கினார்கள்; (எ - று.)
ஒன்றொருநொடி - தனியொருநொடியுமாம்; மிகச்சிறுமைகாட்டிற்று. (எங)

எச. மற்றதுதெரிதலுமாலயன்முதற்
சொற்றிடுமமரர்கடுளக்கநீங்குறா
விற்றதுகொல்லெமதின்னலின்றெனா
வுற்றனருவகையையுடலம்விம்மினார்.

(இ - ள்.) அது தெரிதலும் - (சிவபிரானிட்டகட்டளைக்கு அக்கினி வாயுக்கள் சம்மதித்த) அச்செய்கையை அறிந்தவளவில், மால் அயன் முதல் சொற்றிடும் அமரர்கள் - திருமாலும் பிரமனும் முதலாகச் சொல்லப்படுகின்ற தேவர்கள், துளக்கம் நீங்குறா - (அனற்பொறியின் வெம்மையாலுண்டான) கலக்கம் ஒழிந்து, எமது இன்னல் இன்று இற்றது எனா - எங்கள் துன்பம் இப்பொழுது ஒழிந்ததென்று கருதி, உவகையை உற்றனர் - மகிழ்ச்சியை யடைந்து, உடலம் விம்மினார் - (அதனால்) உடம்பு பூரித்தார்கள்; (எ - று.)
மற்று, கொல் - அசைகள். உடலம், அம்-சாரியை. 'மலரயன்' எனவும் பாடம். (எச)

எரு. ஆங்கனமவர்தமையாதிநோக்கியித்
தீங்கனல்சரவணஞ்செறிந்தோர்செம்மலா
யோங்குபுசூர்கிளைக்கொழிவுசெய்யுமா
லிங்கினியாவருமேகுவீரென்றான்.

(இ - ள்.) ஆங்கனம் - அப்பொழுது [அவ்விடத்தில்], அவர்தமை - தேவர்களை, ஆதி - முதற்கடவுள், நோக்கி - பார்த்து, 'இ தீ கனல் - இந்தப் பயங்கரமான அக்கினி, சரவணம் செறிந்து - சரவணப்பொய்கையிற் சேர்ந்து, ஓர் செம்மல் ஆய் ஓங்குபு - ஒருகுமாரனாகி வளர்ந்து, சூர் கிளைக்கு ஒழிவு செய்யும் - சூரபதுமனுக்கும் அவனினத்தார்க்கும் நாசத்தைச்செய்யும்; இனி - இப்பொழுது, யாவரும் - நீங்களெல்லீரும், ஈங்கு - இவ்விடத்திலிருந்து, ஏகுவீர் - செல்லுங்கள்', என்றான் - என்று அருளிச்செய்தார்; (எ - று.)
ஓங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம்; புவிகுதி - காலங்காட்டிற்று. கிளை - மரத்தின் சாகைபோலத் தழுவும் உறவினர்க்கு உவமையாகுபெயர். யாவரும் ஏகுவீர் - முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. 'இப், பூங்கனல் சரவணம் புகுந்தோர் செம்மலா, யோங்கிய சூர்முதற் கொழிவு செய்யும்' எனவும் பாடமுண்டு. (எரு)

எசு. இறையவனினையனவியம்பவுய்ந்தனங்
குறையிலமினியெனக்கூறிக்கஞ்சமே

றுறைபவனாதியாமும்பரன்னவ
னறைகழலடிதொழுதங்கணீங்கினர்.

(இ - ள்.) இறையவன் - (யாவர்க்குந்) தலைவனான பரமசிவன், இனையன இயம்ப - இவ்வார்த்தைகளைச் சொல்ல, (கேட்டு), கஞ்சம் மேல் உறைபவன் ஆதி ஆம் உம்பர் - தாமரைமலரின்மீது தங்குகின்ற பிரமன் முதலான தேவர்கள், 'உய்ந்தனம் - (நாம்) பிழைத்தோம்: இனி குறை இலம் - இனிமேலொன்றுங் குறையுடையோமல்லோம்', என கூறி - என்றுசொல்லி, அன்னவன் அறை கழல் அடி தொழுது - அக்கடவுளினது ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய திருவடிகளை வணங்கி, அங்கண் நீங்கினர் - அவ்விடத்திலிருந்து சென்றார்கள்; (எ - று.)

இறைமை - தலைமை; இனி, இறையவன் என்பதற்கு - எப்பொருள்களிலுந் தங்குகின்றவனென்றும் பொருள்கொள்ளலாம்: இறுத்தல் - தங்குதல். உய்ந்தனம் - துன்பக்கடலினின்று கரையேறினோம்; உஜ்ஜீவித்தோம். கஞ்சம் - நீரிற்பிறப்பது. அங்கண் - அக்கணென்பதன்மெலித்தல். அங்கண் நீங்கினர் - கைலாசகிரியைவிட்டுப் புறப்பட்டார்கள். (எசு)

எஎ. முன்னுறமாருதன்முதல்வன்றாள்களை
வன்னியந்தேவொடுவணங்கியெழீஇ
யன்னவனருளினாற்சுடர்களாறையுஞ்
சென்னியின்மேற்கொடுசேறன்மேயினான்.

(இ - ள்.) (அப்பொழுது), முன்உற - விரைவாக, மாருதன் - வாயுதேவன், வன்னி அம் தேவொடு - அக்கினிதேவனுடனே, முதல்வன் தாள்களை - சிவபிரானது திருவடிகளை, வணங்கி - நமஸ்கரித்து, எழீஇ - எழுந்திருந்து, அன்னவன் அருளினால் - அக்கடவுளின் கருணையினால், சுடர்கள் ஆறையும் சென்னியின்மேல் கொடு - அந்த ஆறு அனற்பொறிகளையுஞ் சிரசின்மேல் தரித்துக்கொண்டு, சேறல்மேயினான் - செல்லுபவனானான்; (எ - று.)

வன்னியந்தேவு, அம் - சாரியை. சேறல்மேயினான் - செல்லுதற்குப் பொருந்தினான். மேவுஎன்னும்பகுதி ஈறுதொக்கு யகரமெய்பெற்று இறந்தகால விடைநிலையோடு ஆண்பால்விகுதியுங் கூடி மேயினான் என நின்றது. அருள் - ஆஜ்ஞையுமாம். முன்உற - (கடவுளின்) சந்நிதானத்திலே பொருந்த என்றும், (எல்லாத்தேவர்களுக்கும்) முன்பாக என்று மாம்; இனி, முன் உற-(அக்கினி வாயு என்னும் அவ்விருவருள்) முற்பட, மேற்கொண்டான் என்றுங் கொள்ளலாம். (எஎ)

எஅ. அரனுறுகடிநகரதனைத்தீர்ந்தொரா
வெரிகெழுசுடர்முடியேந்திமாருதன்
வருதலுமயன்முதல்வானுளோரெலாங்
கருதருமகிழ்வொடுகண்டுகூறுவார்.

(இ-ள்.) மாருதன் - வாயுதேவன், எரி கெழு சுடர் - சுவாலை விளங்குகின்ற அவ்வக்கினியை, முடி ஏந்தி - (தனது) சிரசிலே தரித்துக்கொண்டு, அரன் உறு கடி நகரதனை தீர்ந்து ஒரா - சிவபிரான் எழுந்தருளியிருக்கின்ற காவலையுடைய போகபுரத்தை விட்டுநீங்கி, வருதலும் - வந்தவளவில், அயன் முதல் வான்உளோர் எலாம் - பிரமன்முதலான தேவர்கள்யாவரும், கண்டு - (அவ்வாயுவைப்) பார்த்து, கருது அரு மகிழ்வொடு - எண்ணுதற்குங்கூடாத மகிழ்ச்சியுடனே, கூறுவார் - (தம்மில்) சிலவார்த்தைகள் சொல்வார்கள்; (எ-று.)—அவை மேல் மூன்றுகவிகளிற் காண்க.

ஓரா - ஒருவாவென்னும் இறந்தகாலவினையெச்சத்தின் மரூஉ; 'ஓராய்' என்னும் பாடத்திற்கு இலக்கணம் விளங்கவில்லை. 'உராய்' என்றும், 'ஏர் திமாருதன்' என்றும் பாடம். (௭௮)

௭௯. செந்தழன்மேனியன் றீயின் வண்ணமாத்
தந்தனன் குமரனைத் தனதுகண்ணினா
லுய்ந்திட யாமெலா முலகின் முன்னரே
வந்திடு வீரனை மதலைமானவே.

(இ-ள்.) உலகில் முன்னரே வந்திடு வீரன் ஆம் மதலை மான - இவ்வுலகத்தில் முன்னமே தோன்றியுள்ள வீரபத்திரனை குமாரனை ஒப்ப, (இப்பொழுது), செம் தழல் மேனியன் - சிவந்த நெருப்புப்போன்ற திருமேனி நிறத்தையுடைய சிவபிரான், யாம் எலாம் உய்ந்திட - நாமெல்லாம் பிழைத்திடும்படி, தனது கண்ணினால் - தனதுகண்களினால், தீயின் வண்ணம் ஆ - அக்கினிசொரூபமாக, குமரனை - ஒருமகனை, தந்தனன் - உண்டாக்கியருளினான்; (எ-று.)

தம் திருமகளாய்த் திருவவதரித்த உமாதேவியைப் பரமசிவனுக்குத் திருமணஞ்செய்துகொடுத்த பிரமபுத்திரனாகிய தக்ஷனென்னும்முனிவன் பின்னர்ஓர்கால் அவ்வுமாபதியின்மேல் மாமனாகிய தனக்குத் தக்கமரியாதைசெய்திலனென்னுங்காரணத்தாற் சினங்கொண்டு அப்பார்வதீபரமேசுவரர்களை வரவழையாது அவிர்ப்பாகமுங் கொடாமல் அவமதித்து மற்றைத்தேவர் முனிவராதியோருடனே பெரியதொரு யாகத்தைச் செய்யாநிற்கையில், தாக்ஷாயணி தாய்தந்தையரையுந் தங்கை தமக்கை முதலிய சுற்றத்தாரையும்ஒருங்குகண்டுகூடிக்குலாவலாமென்னுங்கொள்கையால் தான்மாத்திரம் அவ்வேள்விக்குச்சென்று அம்முனிவன் அங்குத் தன்னை அலக்ஷியஞ்செய்து தன்பதியையும் பழித்ததனால் அக்கினிப்பிரவேசஞ்செய்து மறைய, அதுகேட்டுச் சுடுசினங்கொண்ட உருத்திரமூர்த்தி தமது நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரனென்ற குமாரனொருவனை உண்டாக்கித் தக்கன்வேள்வியை அழித்துவரும்படிகட்டளையிட, அக்கடவுள் அங்ஙனமே அழித்துவந்தானென்பது கதை. தீயின்வண்ணமா - நெருப்பின நிறமாக வெனவுமாம். 'தனதுகண்ணினால்', 'உய்ந்திடயாமெலாம்' என்றவற்றைப் பின்னிரண்டடிகளோடுங் கூட்டலாம். (௭௯)

௮௦. தொன்னிலையாம்பெறச் சூரன் பாடுற
வின்னமுஞ் சில்பகலிருத்தலா லரன்
றன்னிகர் திருமகன் சரவணத்திடை
மன்னுபு குழவியாய் வளர நல்கினான்.

(இ - ள்.) யாம் தொல் நிலை பெற - நாம் பழமையான ஐசுவரியநிலைமையை அடைதற்கும், சூரன் பாடு உற - சூரபதுமன் அழிவை அடைதற்கும், இன்னமும் சில் பகல் இருத்தலால் - இன்னமுஞ் சிலநாட்கள் கழியவேண்டியிருத்தலினால், தன் நிகர் திரு மகன் - தன்னையொத்த சிறந்தகுமாரன், சரவணத்திடை மன்னுபு - சரவணப்பொய்கையிலே அவதரித்து, குழவி ஆய் - இளம்பிராயமுடையவனாய், வளர - வளரும்படி, அரன் - பரமசிவன், நல்கினான் - அருள்செய்தார் போலும்; (எ - று.)

பாடு - படு என்னும் பகுதி திரிந்த தொழிற்பெயர். கீழ் அளவிறந்த காலங்கழிந்ததனால், 'இன்னமும்' என்றார். குழவி - குழந்தை; குழ - இளமையுணர்த்தும் உரிச்சொல்: "மழவுங் குழவு மிளமைப் பொருள" என்பது தொல்காப்பியம்; அதனையுடையது - குழவி: இ - பெயர்விகுதி. (௮௦)

அக. போற்றலர்புரமடுபுனிதநாயக
னாற்றிடுசெய்கைகளருளினீர்மையா
லேற்றதோர்சான்றிவணெரியைத்தந்ததுஞ்
சாற்றருங்கருணையிற்றலைமையானதே.

(இ - ள்.) போற்றலர் புரம் அடு புனித நாயகன் - (தேவர்களுக்குப்) பகைவரான அசுரரது திரிபுரத்தை யெரித்த பரிசுத்தகுணமுடைய இறைவன், ஆற்றிடு செய்கைகள் - செய்யுஞ்செயல்க ளெல்லாம், அருளின் நீர்மையால் - கருணையின்தன்மையினுலேயாம்; ஏற்றது ஓர் சான்று - (அதற்குத்) தகுந்ததொரு சாட்சி, (யாதெனில்), இவண் எரியை தந்ததும் - இப்பொழுது [இவ்விடத்து] (அக்கடவுள்) அனற்பொறியை அருளியதும், சாற்று அரு கருணையில் தலைமை ஆனதே - சொல்லமுடியாத (சிறப்பையுடைய) திருவருளின் தலையளியின் காரியமானதுவேயாம்; (எ - று.)

போற்றலர் - வணங்காதவர்; எதிர்மறைப்பலர்பால் வினையாலணையும் பெயர். (அக)

அஉ. என்றிவைபற்பலவியம்பியின்னினிப்
பொன்றினரவுணர்கள்புலம்புநங்குறை
நன்றிவண்முடிந்ததுநாமுமத்தடஞ்
சென்றிடுவாமெனச்செப்பினாரரோ.

(இ - ள்.) என்ற இவை பற்பல இயம்பி - என்ற இத்தன்மையவான பலபலவார்த்தைகளைச் சொல்லி, 'இன்னினி - இப்பொழுதே, அவுணர்கள் - அசுரர்கள், பொன்றினர் - அழிந்தார்கள்; புலம்பும் நம குறை - சோகிக்கின்ற நமது குறை, இவண் நன்று முடிந்தது - இப்பொழுது நன்றாகப் பூர்த்தியாயிற்று; நாமும் அ தடம் சென்றிடுவாம் - நாமும் அந்தச்சரவணப் பொய்கையைப் போயடைவோம்', என - என்று, செப்பினர் - (பிரமன்முதலிய தேவர்களனைவருஞ்) சொன்னார்கள்; (எ - று.)

என்றிவை - விகாரம். இன்னினிப் பொன்றினர் - விரைவுந் தேற்றமும் பற்றி எதிர்காலம் நிகழ்காலமும் இறந்தகாலமு மாயிற்று. நம் குறை புலம்பும் - நமது குறை ஒழியும், இவண் நன்று முடிந்தது - இப்பொழுது (நமக்கு) நன்மை வந்து கூடிற்று என்றும் உரைக்கலாம். நம் குறை நன்று முடிந்தது - நமதுகுறை முற்றும் ஒழிந்தது எனவும், நமது வேண்டுகோள் நல்லதாய் முடிந்தது எனவுமாம். (அஉ)

அங. உருப்பமதாகியவொளிறுதீஞ்சுடர்
தரிப்பதோர்மருத்துவன்றமுன்சென்றிடத்
திருப்பயின்மான்முதற்றேவர்வெள்ளியம்
பருப்பதமொருவியேபடர்தன்மேயினர்.

(இ-ள்.) உருப்பமது ஆகிய - உக்கிரமான, ஒளிறு - விளங்குகின்ற, தீ சுடர் - அனற்பொறிகளை, தரிப்பது - பரிக்குந்தன்மையுள்ள, ஓர் - ஒப்பற்ற, மருத்துவன் - வாயுதேவன், தம்முன் சென்றிட - தமக்குமுன்னே செல்ல, திரு பயில் மால் முதல் தேவர் - இலக்குமி (தனது திருமார்பிற்) பொருந்தியிருக்கப்பெற்ற திருமால் முதலான தேவர்கள், வெள்ளி அம் பருப்பதம் ஒருவியே - வெள்ளிமயமான அழகிய கைலாசபருவதத்தை நீங்கி, படர்தல் மேயினர் - (அவ்வாயுவைத்தொடர்ந்து) செல்வாராணர்கள்; (எ - று.)

உருப்பம் - உஷ்ணம். திரு பயில் மால் - மேன்மை பொருந்திய திருமால் என்றுமாம். பருப்பதம் - வடசொற்சிதைவு. (௮௩)

௮௪. இறத்தலுங்கன்னலொன்றெரியின்றீச்சுடர்
பொறுத்திடலரிதெனப்புலம்பிக்காலினோன்
மறுத்தவிர்பிறைமுடிவரதனாணையாற்
றிறம்படுவன்னிதன்சென்னிசேர்த்தினான்.

(இ-ள்.) கன்னல் ஒன்று இறத்தலும் - (இவ்வாறு) ஒருநாழிகைப் பொழுது நடந்தவளவிலே, காலினோன் - வாயுதேவன், எரியின் தீ சுடர் பொறுத்திடல் அரிது என - கொடிய இவ்வனற் பொறிகளைச் சுமத்தல்(என்னால்) முடியாதென்றுசொல்லி, புலம்பி - வருந்தி, மறு தவிர் பிறை முடி வரதன் ஆணையால் - களங்கமில்லாத ஒற்றைக்கலையிளஞ்சந்திரனைச் சிரசில்தரித்த சிவபிரான் முன்பு கட்டளையிட்டபடி, திறல் படு வன்னிதன் சென்னி சேர்த்தினான் - வலிமைபொருந்திய அக்கினியினது சிரலே (அந்தத் தேஜஸை) வைத்திட்டான்; (எ-று.)

கன்னல் - இருபத்துநான்கு நிமிஷ நேரம். மறுத்தவிர் - பிறைக்கு, அடைமொழி; வரதனுக்கு அடைமொழியாக்கி, குற்றமற்ற என்று உரைப்பினும் அமையும். வரதன் என்பதற்கு - (வேண்டுவார்வேண்டும்) வரங்களையெல்லாங் கொடுப்பவன் என்று பொருள். எரியின் சுடரென்க. வரதனாணையாற் றிறம்படு வன்னி என்றுஎடுத்து, கடவுளின் ஆஜ்ஞையின்படி (அப்பொறிகளைச்சுமப்பதற்குஏற்ற) வலிமையைப் பொருந்திய அக்கினி யென்று உரைத்தலும் ஒன்று. (௮௪)

௮௫. சேர்த்தலுமொருபதந்தீயின்பண்ணவன்
வேர்த்துடல்புழுங்குறமெலிவிற்றாங்கியே
பேர்த்தொருபதமிடப்பெறாதுவல்லைபோ
யார்த்திடுகங்கையினகத்துய்த்தானரோ.

(இ-ள்.) சேர்த்தலும் - (இங்ஙனம் வாயு) வைத்தவளவிலே, தீயின் பண்ணவன் - அக்கினிதேவன், உடல் வேர்த்து புழுங்குற - உடம்பு வேர்வையையடைந்து தவிப்படைய, மெலிவின் - வருத்தத்தோடு, ஒரு பதம் தாங்கி - ஒருஅடி எடுத்துச்சென்று, பேர்த்து ஒரு பதம் இட பெறாது - மீண்டும் மற்றோரடியை எடுத்துவைக்க முடியாமல், (இவ்வாறு சிரமப்பட்டு), வல்லை போய் - விரைவிற்போய், ஆர்த்திடு கங்கையின் அகத்து உய்த்தான் - ஆரவாரஞ்செய்கின்றகங்காநதியினிடத்திலே(அத்தேஜஸைச்)செலுத்தினான்.

இனி, ஒரு பதம் தாங்கி - ஒருநாழிகைப்பொழுது (அவ்வனற்பொறிகளைச்) சுமந்துசென்று, பேர்த்து ஒரு பதம் இட பெறாது வல்லை போய் - மற்றொருநாழிகைப்பொழுதுகழிக்கவேண்டாமல் விரைவிலே போய் என்றும் உரைக்கலாம். (௮௫)

௮௬. கூர்சுடர்ப்பண்ணவன்கொடுவந்துய்த்திடு
மார்சுடர்த்தொகுதிவந்தடையமூவெயி
லூர்சுடச்சிவந்தகண்ணொருவனுப்புறம்
வார்சடைக்கரந்தெனவறந்தகங்கைநீர்.

(இ-ள்.) கூர் சுடர் பண்ணவன் - உஷ்ணம் மிகுந்த அக்கினிதேவன், கொடு வந்து உய்த்திடும் - எடுத்துக்கொண்டுவந்து செலுத்தின, ஆர் சுடர் தொகுதி - நிறைந்த அனற்பொறிகளின் கூட்டம், வந்து அடைய - (தன்

னிடம்) வந்துசேர்ந்தமாத்திரத்தில், கங்கை நீர் - கங்காநதியின் ஜலம், மூ எயில் ஊர் சுட சிவந்த கண் ஒருவன் துப்பு உறழ் வார் சடை கரந்து என - மூன்று மதில்களையுடைய பட்டணங்களை எரிக்கும்பொருட்டுக் கோபத்தாற் சிவந்த திருக்கண்களையுடைய ஒப்பற்ற உருத்திரமூர்த்தியினது பவழத்தையொத்துச்சிவந்த நீண்ட சடையிலே மறைந்ததுபோல, வறந்த - வற்றிற்று; (எ-று.)

வறந்த - வறந்தது என்பதன் விகாரம். கூர் சுடர்ப் பண்ணவன் - பிரகாசமான ஒளியையுடைய அக்கினி யெனினுமாம். (கல்பபேதத்தில்) நெற்றிக்கண்ணின் சிவந்த நோக்கத்தால் திரிபுரத்தை யெரித்தவ னென்பார் 'மூவெயிலூர்சுடச்சிவந்தகண்ணொருவன்' என்றா ரெனவுங் கொள்ளலாம்; "தகன மூறுவலின் மதனை முனிபவர்" என அருணைக்கலம்பகத்துக் கூறினாற்போல. (௮௬)

௮௭. அரனருண்முறையினையறிந்துகங்கைதன்
சிரமிசையேந்தியேசென்றோர்கன்னலிற்
சரவணமெனுந்தடந்தன்னிற்சேர்த்தனள்
மரையிதழாயிடைமல்குற்றாலென.

(இ-ள்.) கங்கை - கங்காநதியானவள், அரன் அருள் முறையினை அறிந்து - சிவபிரான் சொல்லியருளிய தன்மையைத் தெரிந்து, தன் சிரம் மிசை ஏந்தியே சென்று - (அந்தத்தேஜஸைத்) தன்தலைமேற் கொண்டுபோய், ஓர் கன்னலின் - ஒரு நாழிகைப்பொழுதினுள்ளே, சரவணம் எனும் தடந்தன்னில் - (சுற்றிலும் நாணற்காட்டையுடைமையாற்) சரவணம் என்னும் பெயர்பெற்ற பொய்கையிலே, மரை இதழ் ஆயிடை மல்குற்றால் என - தாமரைமலரினிதழ்கள் அப்பொய்கையினிடத்து நிரம்பியிருந்தாற்போல, சேர்த்தனள் - செலுத்தினாள்; (எ-று.)

செந்தாமரைமலரினிதழ்கள் - சிவந்த அனற்பொறிகளுக்கு உவமை. 'மரையிதழாயிடை மல்குற்றாலென' என்ற உவமையால், அந்த ருத்திரதேஜசு தாமரைமலர்போல விருந்ததென்றும், தாமரைமலரின் வாசனையைக் கொண்டுள்ளதென்றும் அறிக; "பத்மஷண்டேபதமபிபம் பத்மகாந்தார ஸௌரபம்" என்றார் முதநூலிலும். அரனருண்முறை - கீழ் அறுபத்தேழாங்கவியில் "அன்னவை, யாங்கவள் சாவண மமர வுய்க்குமால்" என்றது. இனி, அரனருண்முறை - கடவுளின் கருணைத்திறமுமாம். 'மலர்குற்றென்னவே' என்றும் பாடம். தடம் - மடு. (௮௭)

௮௮. ஆவயின்காறும்வந்தரியயன்முதற்
றேவர்களுவகையாற்றெரிந்துசூழ்ந்தனர்
மேவரவணியதாம்விளைவுநாடியே
காவல்கொணிரப்புடைக்காதலோரென.

(இ-ள்.) மேவர அணியது ஆம் - தமக்குக் கிடைப்பதற்குச் சமீபத்திலுள்ளதான, விளைவு - நெற்பயிர் விளைச்சற்பயனையே, நாடி - விரும்பி, காவல் கொள் - (அப்பயிரை நன்றாகப்) பாதுகாக்குந்தொழிலைமேற்கொண்ட, நிரப்பு உடை - வறுமையையுடைய, காதலோர் என - செல்வத்திலாசையுள்ள சனங்கள்போல, அரி அயன் முதல் தேவர்கள் - திருமாலும் பிரமனும் முதலிய தேவர்களெல்லோரும், ஆவயின் காறும் வந்து - அந்தச் சரவணப்பொய்கையினிடம் வரையிலும் வந்து, தெரிந்து - (இனிநடப்பதை) ஆராய்ந்து,

உவகையால் - மகிழ்ச்சியோடு, சூழ்ந்தனர்- (அப்பொய்கையைச்) சுற்றிலும் நின்றார்கள்; (எ - று.)

"வையக முழுவதும் வறிஞ னோம்புமோர், செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்" என்னுங் கம்பராமாயணத்தோடு இதனை ஒப்பிடுக. விரை வில்விளைவுதரும் பயிரை மிக ஊக்கத்தோடு சூழ்ந்து நின்று உலகத்தார் குறிக்கொண்டுகாத்தல்போல, தேவர்கள் விரைவில் அறுமுகக்கடவுள் உதி க்க இடமாய்நின்ற சரவணப்பொய்கையைச் சூழ்ந்துநின்று காவல்செய் வாராயின ரென்றவாறும். அணியது-அணிமையென்னும் பண்பின் அடியாப்பி றந்த வினையாலணையும் பெயர். நிரப்பு என்பது-நிரம்புதலென்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்; இதற்கு - எல்லாப்பொருள்களும் நிறைந்திருத்த லென்று பொருள்: இது - எதிர்மறையிலக்கணையால், நுகரப்படும் பொரு ளொன்று மின்றாதலாகிய வறுமையை உணர்த்திற்று. விளைவு என்னுந் தொழிற்பெயர், விளையும்பயனுக்கு ஆகுபெயர். தெரிந்து - (அனற்பொறி கள் அப்பொய்கையினிடம் வந்துசேர்ந்ததை) அறிந்து எனவுமாம். 'காத லோர்' என்றதனால், காத்தலில் மிக்க கருத்துடைமை விளங்கும். 'விளையு ணடி' என்றும் பாடம். (அஅ)

அகூ. ஆரணன்விண்ணகமச்சுதன்புவி
வாரணன்முதலியமாதிரத்துளோ
ரேரணவமரர்களெண்டிக்காகியே
சீரணிசரவணஞ்சேர்ந்துபோற்றினார்.

(இ - ள்.) ஆரணன் - நான்கு வேதங்களையும் நான்குமுகங்களால் எப்பொழுதும் பாராயணஞ்செய்கின்ற பிரமதேவன், விண் அகம் - ஆகாய த்தினிடத்திலும், அச்சுதன் - திருமால், புவி - பூமியிலும், வாரணன் முத லிய மாதிரத்து உளோர் - (ஐராவதமென்னும் வெள்ளை) யானையை வாகன மாகவுடைய இந்திரன் முதலான திக்குப்பாலகர்களும், ஏர் அணவு அமரர் கள்- பொலிவுபொருந்திய பிறதேவர்களும், எண் திக்கு - எட்டுத்திசைகளி லும், ஆகி - இருந்து, சேர்ந்து - (இங்ஙனம் யாவருங்) கூடி, சீர் அணி சரவ ணம் - சிறப்புப்பொருந்திய சரவணப்பொய்கையை, போற்றினார் - காத்து நின்றார்கள்;(எ-று.)

அச்சுதன் - அச்யுதன்; (தன்னைச்சரணமடைந்தவர்களை) நழுவவிடா தவன்: அல்லது, அழிவில்லாதவன். யானை, கோழி, சங்கு, தடை முதலிய பலபொருள்குறிக்கும் வாரணமென்னும் ஒருபெயர்த்திரிசொல், இங்கே யானையைக் குறித்தது. மாதிரத்து உளோர் - திக்குக்களில் இருந்து கா வல்செய்பவர். மேலுலகங்களேழனுள் உயர்ந்த சத்தியலோகத்துக்கு உரி யவனாதலாற் பிரமன் விண்ணிலும், பூதேவிக்குநாயகனாதலால் திருமால் பூமியிலும், எட்டுத்திக்குக்களுக்கும் உரியவராதலால் இந்திரன்முதலியோர் அவ்வத்திசையிலும் காவல்செய்துநிற்பாராயின ரென்க. மாதிரத்துள்ளோ ராகிய அமரர்க ளெனினுமாம். அணவு அமரர் - வினைத்தொகை. (அகூ)

வேறு.

கூo. சங்கையுமொல்கப்புக்ககடுங்கனற்கடவுட்சோதி
யங்கிருந்தன்றுமுன்னரம்மைவாழிமயச்சாரற்
றங்கியசமலம்பூத்தசரவணம்புகலுமுக்கட்
புங்கவனருளாற்றொன்மைபோன்றதுவறத்தலின்றி.

(இ - ள்.) கங்கையும் ஒல்க புக்க - (ஜீவநதியாகிய பெரிய) கங்கா நதியும் நீர்வறளும்படி அந்நதியினிடஞ்)சேர்ந்த, கடு கடவுள் கனல் சோதி

இருமூன்றும் - பயங்கரமான தெய்வத்தன்மையையுடைய அனற்பொறிகள் ஆறும், முன்னர் அம்மை வாழ் இமயம் சாரல் தங்கிய கமலம் பூத்த சரவணம் புகலும் - முன்னே உமாதேவி (குமாரியாய்) வாழ்ந்திருந்த இடமான இமவத்பருவதத்தினுடைய சார்பிலே பொருந்திய தாமரைமலர்கள் பூத்துள்ள சரவணப்பொய்கையைச் சேர்ந்த மாத்திரத்திலே, (அக்கங்காநதி), முக்கண் புங்கவன் அருளால் - மூன்று திருக்கண்களையுடைய தலைவனான சிவனது கருணையினால், வறத்தல் இன்றி - நீர்வற்றுதலில்லாமல், தொன்மை போன்றது - முன்னிருந்த நிலைமையை ஒத்தது; (எ - று.)

அங்கு - அசை: அங்கு - அக்கங்கையினிடத்து, புக்க எனவும் இயைக்கலாம்; அங்கு - அவ்விடத்திலிருந்து, சரவணம்புகலும் என்று கூட்டுதலுமாம். தொன்மைபோன்றது - நீர்நிறைந்தது என்றபடி. இருமூன்று - இரண்டாகிய மூன்று; பண்புத்தொகை. சாரல் - மலையைச்சார்ந்துள்ளதாகிய அதன்பக்கத்துக்குத் தொழிலாகுபெயர். 'கங்கையு முலகம் புக்க' என்றும் பாடம்.

இதுமுதல் இப்படலம்முடியுமளவும் முப்பத்தெட்டுக்கவிகள் - இப்படலத்தின் முதற்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (௩0)

௩௧. விண்ணிடையிழிந்தகாலின்மேவருகனலிற்றோன்றும்
வண்ணவொண்கமலஞ்செய்யமுளரியைமாறதாகத்
தண்ணளியோடுநல்கித்தரித்தெனச்சரவணப்பேர்க் [றே.
கண்ணகன்பொய்கையீசன்கட்டழன்மிசைக்கொண்டன்

(இ - ள்.) விண்ணிடை - ஆகாயத்திலிருந்து, இழிந்த - உற்பத்தியான, காலின் - வாயுவினின்றும், மேவரு - தோன்றின, கனலின் - அக்கினியிலிருந்து, தோன்றும் - உண்டான, வண்ணம் ஒண் கமலம் - நிறத்தையும் ஒளியையுமுடைய நீரானது, மாறு அது ஆக - (மேற்கூறின உத்பத்திக்கிரமத்துக்கு) எதிராக, செய்ய முளரியை - சிவந்த நெருப்பை, தண் அளியோடு - குளிர்ந்த அன்புடனே, நல்கி - பெற்று, தரித்து என - (அந்நெருப்பைத் தான்) எடுத்துவைத்திருந்தாற்போல, சரவணம் பேர் கண் அகல் பொய்கை - சரவணமென்னும் பெயரையுடைய இடம்விசாலமான தடாகமானது, ஈசன் கட்டு அழல் - (சிவபிரானது) உக்கிரமான அக்கினியை, மிசைக்கொண்டன்று - தன்மேலே தரித்திருந்தது; (எ - று.)

ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பூமியுமாக ஆதியில்உண்டாயிற் றென்பது நூற்றுணிபு. இவ்வுத்பத்திக்கிரமத்துக்கு விரோதமாக நிலத்திலிருந்து நீர் தோன்றித் தான் நெருப்பைஉண்டாக்கி அதனை ஏந்திநின்றாற்போலிருந்தது பூமியிலே சரவணப்பொய்கைநீரின்மீது சம்புவின்தேஜசு பொருந்திவிளங்கிய தன்மை என்று உத்பரேக்ஷித்தார். கமலம் நீரும், முளரி நெருப்புமாதலை "வனசமும் புனலுங் கமல மெனப்படும்", "கமலமு நட்பமுங் காடு நெருப்பு, முளரி யென்ன மொழிந்திசி னோரே" என்னும் பிங்கலந்தையினாலும் அறிக. செய்ய - செம்மையென்னும் பண்பின் அடியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம். 'தண்ணளியோடு நல்கித் தரித்தென' என்றது - தன்னிடத்திலிருந்து உற்பத்தியாகிற மகவினிடத்து எவர்க்கும் இயல்பாகவுள்ள அன்பைக் கருதி. மிசைக்கொண்டன்று - ஒன்றன்பால் இறந்தகாலமுற்று; இருசொல் ஒருசொல்தன்மைப்பட்ட மிசைக்கொள் - பகுதி, ளகரம்ணகரமானது - சந்தி, ட் - இடைநிலை, அன் - சாரியை, று - விகுதி: இது, எதிர்மறைவினைமுற்றன்று. மாறதாக - தனக்குஉற்பத்திஸ்தானமாகவிருந்ததற்

ருத் தான்உற்பத்திஸ்தானமாக. இது - இல்பொருளுவமை. அன்றியும், ‘நீரிலிருந்து நெருப்புத் தோன்றிற்று’ என்றும் ஒருபிரமாணசித்தி உண்டு. வடமொழி மகாபாரதத்தில் சம்பவபருவத்திலும் பிறவிடங்களிலுங் காண்க. ஸ்ரீமத்வேதாந்தாசாரியர் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீபாதுகாஸஹஸ்ரமென்னும் வடநூலில் “பாதுகையே! உனக்குப் பாதாழ்வானால் பட்டாபிஷேகத்திருமஞ்சனம் முதலில் நிகழ்ந்ததையும் அதன்பின் லங்காபுரி அநுமானால் எரிக்கப்பட்டதையுங் கண்டபின்பு, ‘நீரினின்று நெருப்பு’ என முனிவர்கள் கூறியுள்ளமொழியை மெய்யென்றறியலாயிற்று” என்றதைக்கொண்டும் உணர்க. இம்முறைமையை வ்யஷ்டிஸ்ருஷ்டிவிஷயமென்பர் ஆன்றோர். கம்பர் இராமாயணத்தில் “பாரெனக் கனலெனப் புனலெனப்ப காப், பேரெனத் திசையென முனியிற் பெருமால்” என முறைப்படவைத்ததும் இதுபற்றியேபோலும். ‘முளரி’ என்பதற்குத் தாமரையென்று உரைத்தல் ஒருவாற்றானும் பொருந்தாமை உணர்க. அகல் + பொய்கை — அகன்பொய்கை; லகரம் வலிவரச் சிறுபான்மை னகரமாயிற்று; இனி றகரமாகி மெலித்தல்விகாரம்பெற்றதென்னவுமாம். (கூக)

கூஉ. அருவமுமுருவுமாகியநாதியாய்ப்பலவாயொன்றாய்ப்
பிரமமாய்நின்றசோதிப்பிழம்பதோர்மேனியாகக்
கருணைகூர்முகங்களாறுங்கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
யொருதிருமுருகன்வந்தாங்குதித்தனனுலகமுய்ய.

(இ - ள்.) அருவமும் - (சிவன் சக்தி நாதம் விந்து என்னும் நான்கு) அருபமும், உருவும் - (மகேசவரன் உருத்திரன் அயன் திருமால் என்னும்) நான்கு ரூபமும், ஆகி - ஆய்நின்று, அநாதி ஆய் - (தான் எல்லாவற்றுக்கும் முதலாயிருத்தலால்) தனக்கொருமுதலில்லாததாகி, பல ஆய் - அநேகவடிவங்களாகி, ஒன்று ஆய் - தான் ஒனறேயாகி, பிரமம் ஆய் நின்ற - பரப்பிரமச்சொரூபமாகி நின்ற, சோதி பிழம்பு அது - அந்த அனலின் திரள், ஓர் மேனி ஆக - ஒருவடிவமாக, கருணைகூர் முகங்கள் ஆறும் - அருள்மிகுந்த ஆறு திருமுகங்களையும், கரங்கள் பன்னிரண்டும் - பன்னிரண்டு திருக்கைகளையும், கொண்டு - தரித்து, ஒரு திரு முருகன் - ஒப்பற்ற மேன்மையையுடைய சுப்பிரமணியக்கடவுள், உலகம் உய்ய - உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் பிழைக்கும்படி, ஆங்கு - அச்சரவணப் பொய்கையில், வந்து உதித்தனன் - வந்து அவதரித்தார்; (எ - று.)

பலவாய் ஒன்றாய் என்றது - பரமாத்மா அத்விதீயமாதலாலும், எல்லாச்சராசரங்களுள்ளும் உறைதலாலு மென்க; இது பற்றியே கம்பரும் “ஒன்றேயென்னி னொன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயாம்” என்றார். பலவாய்ஒன்றாய் - அநேகமும்ஏகமும்ஆகி; பிரபஞ்சமும் பரப்ரஹ்மமுமாய் எனறவாறும். ‘மேனியாகி’ என்றும் பாடம் - சோதிப்பிழம்பதாம்முருகன் முகங்களாறுங் கரங்கள்பன்னிரண்டுங் கொண்டு ஓர்மேனியாக உலகமுய்ய உதித்தனன் என்றும் உரைக்கலாம். ‘வந்துஉதித்தனன்’ என்றதனால், சுப்பிரமணியக்கடவுள் அநாதியாய் உள்ளவரென உணர்க. பிரமம் - வடமொழிச்சிதைவு திரு - அழகுமாம். முருகன் - தெய்வத்தன்மையுடையவன்; இதனை மதுரைக்காஞ்சியில் “முருகுறழத் தலைச்சென்று” எனறவிடத்து ‘முருகு - தெய்வத்தன்மை; ஆகுபெயராய் நின்றது’ என உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றால் அறிக. இனி, முருகு - இளமையும் அழகு மாம். உலக மென்பது பலபொருளொருசொல்லாய் நிலத்தையும், உயிர்களையும், ஒழுக்கத்தையும் உணர்த்திநிற்குமாயினும், இங்கே,

'உய்ய' என்றதனால், ஜீவான்மாக்களை உணர்த்திற்று; "உலக முவப்ப" எனத் திருமுருகாற்றுப்படையிற்போல. (கூஉ)

கூங. தோன்றல்வந்திடலும்விண் பாற்றுந்துபிகறங்கலுற்ற
வான்றதொல் மறைகளெல்லாமார்த்தனவயனுமாலும்
வான்றிகழ்மகத்தின்றேவுமுனிவருமலர்கடூவி [சார்.
யேன்றெமையருளுகென்றேயேத்திசையெடுத்துச்சூழ்ந்

(இ - ள்.) தோன்றல் - குமாரன், வந்திடலும் - அவதரித்தவளவிலே, விண்பால் - ஆகாயத்திலே, துந்துபி - தேவவாத்தியங்கள், கறங்கல் உற்ற - (களிப்புக்கு அடையாளமாக) ஒலிக்கத்தொடங்கின; ஆன்ற தொல் மறைகள் எல்லாம் - சிறந்த அநாதியான வேதங்கள்யாவும், ஆர்த்தன - ஆரவாரஞ்செய்தன; அயனும் - பிரமனும், மாலும் - விஷ்ணுவும், வான் திகழ் மகத்தின் தேவும் - சுவர்க்கலோகத்து விளங்குகின்ற யாகத்துக்குத் தலைவனான இந்திரனும், முனிவரும் - இருடிகளும், மலர்கள் தூவி - பூக்களை மேலேசொரிந்து, எமை ஏன்று அருளுக என்று - எங்களை (அடிமையாக) அங்கீகரித்துக் காத்தருளுவாயாக வென்றுசொல்லி, ஏத்து இசை எடுத்து - தோத்திரமான வார்த்தைகளை எடுத்துக்கூறி, சூழ்ந்தார் - (அக்குமாரனைச்) சுற்றிக்கொண்டார்கள்; (எ - று.)

தோன்றல் - விளங்குதல்; விளங்குபவனுக்குத் தொழிலாகுபெயர்: இனி, அல் - கருத்தாப்பொருள்விகுதியுமாம். துந்துபி - பேரிகை. ஆன்ற - சால் என்பதன் மரூஉவான ஆல் - பகுதி; இதனை அகன்ற என்பதன் மரூஉவெனக்கொண்டால், அனந்தமாய்ப்பரவிய என்று பொருள். வான் திகழ் - பெருமைபொருந்திய எனவுமாம். மலர்தூவுதல் - புஷ்பவர்ஷம். ஏன்று, ஏல் - பகுதி. சூழ்ந்தார்கள் - பிரதக்ஷிணஞ்செய்தார்களென்றுமாம். ஏன்று - முயன்று என்றுமாம். 'துந்துமி' எனத் திரித்தும் பாடமுண்டு. (கூங)

கூச. ஏவர்தம்பாலுமின்றியெல்லைதீரமலற்குள்ள
மூவிருகுணனுஞ்சேய்க்குமுகங்களாய்வந்ததென்னப்
பூவியல்சரவணத்தண்பொய்கையில்வைகுமைய
னாவிகளருளுமாற்றாலறுமுகங்கொண்டானன்றே,

(இ - ள்.) ஏவர்தம்பாலும் இன்றி - மற்றையெவரிடத்திலுமில்லாமல், எல்லைதீர் அமலற்கு உள்ள - அளவுகடந்த குற்றமற்ற கடவுளுக்கு மாத்திரமேயுள்ள, மூ இரு குணனும் - ஆறுகுணங்களும், சேய்க்கு - (அக்கடவுளின்) குமாரனுக்கு, முகங்கள் ஆய் வந்தது - ஆறுதிருமுகங்களாகத்தோன்றின, என்ன-என்று (வருணித்துச்) சொல்லும்படி, பூ இயல் சரவணம் தண் பொய்கையில் வைகும் ஐயன் - பூக்கள் பொருந்திய சரவணமென்கிற குளிர்ந்த சரசினிடத்துத் திருவவதரித்த முருகமூர்த்தி, ஆவிகள் அருளும் ஆற்றால் - உயிர்களை (மிகுதியாகக்) காத்தருளும் வகையாக, அறுமுகம் கொண்டான் - ஆறுதிருமுகங்களைக் கொண்டருளினான்; (எ - று.)—அன்று, ஏ - ஈற்றசை.

ஏவர்-ஏ என்னும் வினாவடியாகப் பிறந்த பலர்பாற்பெயர். எல்லைதீர்அமலன் - ஒருஇடவெல்லையில்லாமல் எங்கும்வியாபித்துள்ள கடவுளென்றும், ஒருகாலவெல்லையில்லாமல் எக்காலத்தும் உள்ளவனென்றும் கருத்து. இனி, எல்லைதீர் - ஒப்புக்கடந்த, மிகமேலான என்றுமாம். மூவிருகுணன் - முற்றறிவுடைமை, வரம்பிலின்பமுடைமை, இயற்கையுணர்வுடைமை, தன்வயமுடைமை, வரம்பிலாற்றலுடைமை, குறைவிலாற்றலுடைமை என்னும்

இவை; இவ்விறைமைக்குணங்கள் முறையே சர்வஜ்ஞதை, த்ருப்தி, அநா
திபோதம், ஸ்வதந்திரத்துவம், அலுப்தசக்தி, அநந்தசக்தி எனப் பெயர்பெ
றும்: இந்தச்சுத்தஷட்குணத்தையுடையவனே இறைவனென்பது வேத
சிவாகமநூற்றுணிபு; ஆனதுபற்றியே 'எவர்தம்பாலுமின்றியெல்லைதீரமலற்
குள்ள, மூவிருகுணன்' என்றார். சர்வஜ்ஞத்துவம், சர்வேச்வரத்துவம், சர்வ
நியந்த்ருத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வகல்பிதத்துவம், சர்வசக்தி
த்துவம் என்றும், தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்
லாநலமுளனாதல், எங்கும்வியாபகனாதல், எவற்றிற்குங்காரணனாதல் என்
றும், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், வீரியம், புகழ், திரு என்
றுங் கூறப்படுகிற ஈச்சுவரன்முக்கியகுணமாறாகவுமாம். குணம்என்பதன்
போலியாகிய குணன்என்பது-இங்கே, சாதியொருமை; ஆதலால், 'வந்தது'
என்னும் ஒருமைமுற்றைக் கொண்டது. உயிர்களிடத்துத் தனக்குஉள்ள
கருணையின் மிகுதி தோன்ற ஒருமுகத்தோடு அமையாது ஆறுமுகங்களைக்
கொண்டானென்பது, ஈற்றடியின்கருத்து. இனி, ஆவிகளாருளுமாற்றாற்
சரவணப்பொய்கையில் வைகுமையன் என்றும் இயைக்கலாம். (௯௪)

௯௫. மல்லலம்புவனத்துள்ளமன்னுயிர்க்கணங்கட்கெல்லா
மொல்லையின்மகிழ்ச்சிபெய்தியுவகையின்குறிப்புண்டான
தொல்லையிலவுணனாகுஞ்சூரனேமுதலாவுள்ள
வெல்லவர்தமக்குமாயுமிருங்குறிப்புற்றவந்நாள்.

(இ - ள்.) அந்நாள் - அன்றைத்தினத்தில் [குமாரசுவாமி அவதரி
த்தபொழுது], மல்லல் அம் புவனத்து உள்ள மன் உயிர் கணங்கட்கு
எல்லாம் - பெருமையையுடைய அழகிய உலகங்களிலுள்ள நிலைபெற்ற
பிராணியின் வர்க்கங்களெல்லாவற்றுக்கும், ஒல்லையில் - விரைவிலே, மகி
ழ்ச்சி எய்தி - சந்தோஷமுண்டாகி, உவகையின் குறிப்பு உண்டான -
(பின்னே நிகழும்) இன்பத்துக்கு அறிகுறியாக முன்னே தோன்றுகிற நல்
நிமித்தங்கள் உண்டாயின; தொல்லையில் அவுணன் ஆகும் சூரனே முதல்
ஆ உள்ள எல்லவர்தமக்கும் - பழமையான அசுரனாகிய சூரபதுமனே முத
லாகவுள்ள அசுரர்களெல்லோருக்கும், மாயும் இரு குறிப்பு உற்ற - (விரை
வில்) அழிதற்கு அறிகுறியான பெரிய துர்நிமித்தங்கள் தோன்றின; (எ-று.)

சூரனே, ஏ - உயர்வுசிறப்பு. எல்லவர் - எல்லாம் என்னும் பன்மைப்
பொதுப்பெயரினடியாகப் பிறந்த பலர்பாற்பெயர்; பகுதி ஈறுகெட்டு அயல்
குறுகிற்று. மாயுங்குறிப்பு - உற்பாதம். (௯௫)

௯௬. மறைகளின்முடிவால்வாக்கான்மனத்தினாலளக்கொணாம
னிறைவுடனியாண்டுமாகிநின்றிடுநிமலமூர்த்தி
யறுமுகவுருவாய்த்தோன்றியருளொடுசரவணத்தின்
வெறிகமழ்கமலப்போதில்வீற்றிருந்தருளினானே.

(இ - ள்.) மறைகளின் முடிவால் - வேதங்களின் அந்தமாகிய உப
நிஷத்துக்களினாலும், வாக்கால் - சொல்லினாலும், மனத்தினால் - நெஞ்சினா
லும், அளக்க ஒணாமல் - ஆராய்ந்து வரையறையிட முடியாதபடி, நிறைவு
டன் - பரிபூர்ணகுணத்துடனே, யாண்டும் ஆகி - எவ்விடத்தும் வியாபித்து,
நின்றிடும் - நிலைபெறுகின்ற, நிமல மூர்த்தி - குற்றமற்ற முதற்கடவுள்
[பரமசிவன்], அருளொடு - கருணையினால், அறுமுகன் உரு ஆய் தோன்றி -
ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுளின் வடிவமாய் அவதரித்து, சர
வணத்தின் - சரவணப்பொய்கையிலே, வெறி கமழ் கமலம் போதின் -

வாசனைவீசுவதொரு செந்தாமரைமலரிலே, வீற்றிருந்தருளினன் - வேறொருவர்க்கில்லாத சிறப்போடு எழுந்தருளியிருந்தான்; (எ - று.)

மறைகளின்முடிவு - வேதாந்த சித்தாந்தம். அளக்கொணாமல் - அளக்கவொண்ணாமல்; மரூஉமொழி. நிறைவு - குணபூர்த்தி. யாண்டும் ஆகி நிறைவுடன் நின்றிடும் என மாற்றியியைத்து - எங்கும்பொருந்தி நிறைந்திருக்குந் தன்மையோடு நின்ற என்றும் உரைக்கலாம். இதனால், பரப்ரஹ்மமே முருகனாய் வந்த தென்றவாறும். இனி, நிமலமூர்த்தி - அநாதிசப்பிரமண்ணிய ரென்றலும் ஒன்று. சரவணத்தின், போதின் என்றவற்றில் இன் - ஏழனுருபு. (௧௬)

௧௭. பாங்குறுதருச்சூழ்காலாப்பஃறழைச்சினைமென்கொம்பர்
நீங்கறப்புடைபோய்வானினிரந்தனபந்தராகத்
தூங்கியபழனுங்காயுந்துணர்களுமகத்துட்டுன்ன
வாங்கதனடுவட்பொய்கையணிநிழலமர்ந்தானையன்.

(இ - ள்.) பாங்கு உறு தரு - (அப்பொய்கையின்) பக்கங்களிற் சுற்றிலும் பொருந்திவளர்ந்துள்ள மரங்களின் அடிகள், சூழ் கால் ஆ - சுற்றிலுமுள்ள பந்தர்க்கால்களாக, நீங்கு அற புடை போய் வானில் நிரந்தன - நீங்குதலில்லாமல் [சிறிதும் இடைவெளியில்லாதபடி] பக்கங்களிற் சென்று ஆகாயத்தில் வரிசையாய்ச்செறிந்தனவான, பல் தழை சினை மென் கொம்பர் - அநேக இலைகளையுடைய (அம்மரங்களின்) பெருங்கிளைகளும் மெல்லிய சிறுகிளைகளும், பந்தர் ஆக - மேல்விரிப்பந்தலாக, தூங்கிய பழனும் காயும் துணர்களும் அகத்துள் துன்ன - (அம்மரங்களிலிருந்து) தொங்குகிற பழங்களும் காய்களும் பூங்கொத்துக்களும் (பந்தர்க்கால்களில் அலங்காரமாகக்கட்டுகிற பழங்களையும் காய்களையும் பூங்கொத்துக்களையும் ஒத்து) உள்ளிடத்தே பொருந்த, ஆங்கு அதன் நடுவண் - அத்தன்மையதான மரப்பந்தரின் நடுவிலே, அணி நிழல் - பொருந்திய நிழலிலே, பொய்கை - சரவணப்பொய்கையில், ஐயன் - குமாரக்கடவுள், அமர்ந்தான் - எழுந்தருளியிருந்தான்; (எ - று.)

உருவகவணி. தரு - வடசொல். பல் + தழை = பஃறழை; தனிக்குறிலடுத்த லகரம் தகரம்வர ஆய்தமாயிற்று. கொம்பர், பந்தர் - கொம்பு, பந்தல் என்பவற்றின் போலிகள். தூங்கல் - தொங்குதலென்னும் பொருளதாதலை "தூங்குசிறைவாவல்" எனச் சிந்தாமணியிலுங் காண்க. (௧௭)

௧௮. முடிபொறாதசையுநாகர்முதியகால்பலகைவையந்
தொடர்கரைமரனேவானந்தூங்குபன்னுணந்தெண்ணீர்
தடமலர்பாயலாகச்சரவணமஞ்சமீதி
னடைதருமைந்தன்மென்காலசைப்பவீற்றிருந்தானன்

(இ - ள்.) முடி பொறாது அசையும் நாகர் - (பூபாரத்தைச்) சிரசுதரிக்கப்பொறாமல் வருந்துகின்ற அஷ்டமகாநாகங்களே, முதிய கால் - பழமையான [முதிர்ச்சிவைரம்பற்றின] (மஞ்சத்தின்) கால்களாக, வையம் - பூமியே, பலகை - (மஞ்சத்தின்) பலகையாக, தொடர் கரை மரனே - (சுற்றிலும்மேலே) தொடர்ந்துள்ள (பொய்கைக்) கரையிலிருக்கிற மரங்களே, வானம் தூங்கு பன்னுணம் - ஆகாயத்திற் பொருந்திய பன்னுங்காக, தெள் நீர் தட மலர் - தெளிவான அப்பொய்கை நீரிலுள்ள பெரிய (தாமரை) மலரே, பாயல் ஆக - பூம்பள்ளிமெத்தையாக, சரவணம் மஞ்சம் மீதின் - சரவணப்பொய்கையாகிற மஞ்சத்திலே, அடைதரு மைந்தன் -

அவதரித்த குமாரமூர்த்தி, மென்கால் அசைப்ப - மென்மையான காற்று வீச, வீற்றிருந்தான் - இனிமையாக எழுந்தருளியிருந்தான்; (எ - று.) — அன்று, ஏ - ஈற்றசை. அன்று - அப்பொழுதென்றுமாம்.

நாகர் - சர்ப்பச்சிரேஷ்டர். பாயல், அல் - சாரியை. மஞ்சம் - திருப்பள்ளிக்கட்டில். மென்கால் - மந்தமாருதம். பன்னுங்கு - மேல்விரி, விதானம். இதுவும், உருவகமே. (கஅ)

கூகூ. எண்பெருநாகர்சேடனேந்தெழிலரிமானுகத்
தண்பொலிபுனற்பூம்பொய்கைதவிசுருவாகநாள்கோள்
விண்படர்விதானமாகவேலையந்தலைவன்காலை
யொண்பகலாடிகாட்டவுமைமகனங்கணுற்றுன்.

(இ - ள்.) எண் பெரு நாகர் - (பூமியைத்தாங்குகின்ற) அஷ்டமகாநாகங்களும், சேடன் - (சர்ப்பராஜனான) ஆதிசேஷனும்,(ஆகிய இவர்கள்), ஏந்து எழில் அரிமான் ஆக - (ஆசனத்தைத்) தாங்குகின்ற அழகையுடைய சிங்கமாக, தண் பொலி புனல் பூ பொய்கை-குளிர்ந்த விளங்குகின்ற தீர்த்தத்தையுடைய அழகிய சரவணப்பொய்கையினிடம், தவிசு உரு ஆக - ஆதனத்தின்வடிவமாக, நாள் - நக்ஷத்திரங்களும், கோள் - கிரகங்களும், விண் படர் விதானம் ஆக - (அவ்வாதனத்தின்மேலே) ஆகாயத்திலே பரவியுள்ள மேற்கட்டிவிரியாக, அங்கண் - அச்சிங்காதனத்தினிடத்திலே, வேலை அம் தலைவன் காலை ஒள் பகல் ஆடி காட்ட - அழகிய சமுத்திராஜன் உதயகாலத்து விளங்குகின்ற சூரியனாகிய கண்ணாடியை (எதிரிலே)காட்ட, (அதில் அழகுபார்ப்பவன்போல), உமை மகன் - பார்வதீதேவியின் குமாரனான ஆறுமுகன், உற்றான் - வீற்றிருந்தான்; (எ - று.)

இதுவும், ரூபகாலங்காரமேயாம். எண்பெருநாகர் - வாசுகி, அனந்தன், தக்ஷகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பன; இவற்றைக் கடவுட்பாம்பென்பர்: இவை - முறையே கிழக்குமுதலிய எண்திக்கிலும் இருந்து பூமியைத்தாங்குவதன்றி, நடுவேயிருந்து ஆதிசேடனும் பூமியைத் தாங்காநிற்கும். இந்த நாகங்கள், காசியபப்பிரமாவுக்கும் அவன்மனைவிமார் பலருட் கத்துரு வென்பவளுக்கும் பிறந்தவை. சேஷனென்பதற்கு - (பிரளயகாலத்திலும் அழியாமல்) மிகுந்திருப்பவன் என்று பொருள்; நித்தியனென்று கருத்து. அரிமான் - அரியாகிய மா [சிங்கமாகிய விலங்கு] என இருபெயரொட்டுப் பண்புத்தொகை; மான் என்பதில், ன் - சாரியை. நாள் - அசுவினிமுதலிய நக்ஷத்திரங்கள் இருபத்தேழும், பிறதாரகைகளும். கோள் - சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், பிருகஸ்பதி, சுக்கிரன், சனி, ராகு, கேது என்னும் நவக்கிரகங்கள். வேலையந்தலைவன், அம் - சாரியையுமாம். பகல் - அதற்குக் காரணமான சூரியனுக்குக் காரியவாகுபெயர். 'வேலையந்தலைவன் காலையொண்பகலாடிகாட்ட' என்றதனால், குமாரக்கடவுள் கிழக்குமுகமாக வீற்றிருந்தான் போலும். (கக)

க00. தரணியினடுவண்வைகுஞ்சரவணப்பொய்கைதன்னில்
விரைசெறிகமலப்போதில்வீற்றிருந்தருளுஞ்செவ்வேள்
பெருவடிவமைந்தமாயன்பிறங்கியமனத்திற்றண்ணென்
றெரிசுடர்விளக்கத்துச்சியிருந்திடுமீசன்போன்றான்.

(இ-ள்.) தரணியின் நடுவண் வரும் - பூலோகத்தின் நடுவிடத்திற் பொருந்திய, சரவணம் பொய்கைதனில் - சரவணமென்னுஞ் சரசிலே, விரை செறி கமலம் போதில் - வாசனைபொருந்த செந்தாமரைப்பூவிலே, வீற்றிருந்தருளும் - பெருமைபொருந்த எழுந்தருளியிருக்கின்ற, செவ் வேள் - சிவந்தநிறமுடைய முருகக்கடவுள், பெருவுரு அமைந்த மாயன் - பெரிய உருவத்தை [விசுவரூபத்தை]ப் பொருந்திய திருமாலினது, பிறங்கிய மனத்தில் - விளங்குகின்ற இதயத்திலே எழுந்துள்ள, தண்ணென்ற எரி சுடர் விளக்கத்து உச்சி - குளிர்ச்சியாய் விளங்குகின்ற ஒளியையுடைய பெருஞ்சோதியின் நுனியிலே, இருந்திடும் - எழுந்தருளியிருக்கின்ற, ஈசன் - (செந்நிறமுடைய) பரமசிவனை, போன்றான் - ஒத்தான்; (எ - று.)

உவமையணி. தரணி - பெருவடிவமைந்த மாயவனுக்கும், அதன்நடுவிலுள்ள பொய்கை - அவனுள்ளத்திற்கும், அங்குப்பூத்த செந்தாமரைமலர் - அவனுள்ளத்தெழுந்த செந்நிறச்சோதிக்கும், அம்மலரின்மீதிருக்கின்ற முருகன் - அச்சோதியின்மீது தோன்றுகிற சிவனுக்கும் உவமையெனக் காண்க. தரணி - (பொருள்களைத்) தரிப்பது. தண்ணென்று - காண்டற்கு இனிய ஒளியாய். திருமாலின் இதயகமலத்தில் தீப்பிழம்பு, சிவத்தியான யோகத்தால உள்ளெழுவது. தண்ணெனவெரிசுடர்விளக்கம் - ஞானவொளி. பெருவடிவு - விராட்சொரூபமென்பர். "மாயவன்வடிவாயதலையம்" என்றார் பிறரும். (க00)

க0க. பெருந்தரைநடுவணாகிப்பிறங்கியசரவணத்தி
லிருந்தனிக்கமலமொன்றிற்குமரவேளிருந்தபான்மை
திருந்துநல்லண்டப்புத்தேள்சிந்தையாம்புண்டரீக
புரந்தனில்விரும்பித்தாதைவைகியவியற்கைபோலும்.

(இ-ள்.) பெரு தரை நடுவண் ஆகி பிறங்கிய சரவணத்தில் - பெரிய பூலோகத்தின் நடுவிலே பொருந்தி விளங்கிய சரவணப்பொய்கையிலே, இரு தனி கமலம் ஒன்றில் - பெரிய ஒப்பற்ற தாமரைப்பூவிலே, குமரவேள் - முருகக்கடவுள், இருந்த - வீற்றிருந்த, பான்மை - தன்மை, திருந்து நல் அண்டம் புத்தேள் சிந்தை ஆம் புண்டரீகபுரந்தனில் - சுத்தமான நல்ல விராட்புருஷனுடைய இருதயகமலஸ்தானமான புண்டரீகபுரமென்னும் பெயரையுடைய சிதம்பரத்திலே, தாதை - (அம்முருகக்கடவுளது) தந்தையான பரமசிவன், விரும்பி வைகிய - திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்கின்ற, இயற்கை - தன்மையை, போலும் - ஒக்கும்; (எ - று.)

குமரன் - குமாரனென்பதன் திரிபு; மன்மதனையுங் குற்சிதரூபமுடையவனாக்கவல்ல கட்டழகுடையானென்று பொருள். அண்டப்புத்தேள் - உலகவடிவமாயிருக்குந் தேவன். விராட்புருஷனது இருதயகமலஸ்தானமாயுள்ளதனாலும், வியாக்கிரபாதமுனிவர் கடவுளை வழிபட்டுப்பேறுபெற்ற தலமாதலாலும், புண்டரீகபுரமென்று சிதம்பரத்திற்குப் பெயர்; புண்டரீகம் - தாமரையும் புலியுமாம். வியாக்கிரம் - புலி. உவமையணி. (க0க)

க0உ. பாசிலைபரவித்துள்ளிபடுவனவுடுவைப்பாக
வீசுசைவலங்காராகவேறுசூழ்கமலமெல்லா
மாசறுபகலோராகவவற்றிடைமலர்ந்தகஞ்சந்
தேசுடையிரவியாகச்சிவனெனச்சேயங்குற்றான்.

(இ-ள்.) பாசு இலை பரவி துள்ளி படுவன - (அப்பொய்கையிற் சுற்றிலுமுள்ள) பசுமைநிறமான தாமரையிலைகள் பரவி நீர்த்துளிபொருந்தப்பெ

ந்றவை, உடு வைப்பு ஆக - (வானத்திலே) நக்ஷத்திரங்கள் வீற்றிருக்குந் தானங்களாக, வீசு சைவலம் - (பொய்கையிற்) பரவிய பாசிகள், கார் ஆக - (வானத்திற்பரவிய) மேகங்களாக, வேறு சூழ் கமலம் எல்லாம் - (பொய்கையிற்) சுற்றிலுமுள்ள வேறு தாமரைமலர்கள்யாவும், ஆசு அறு பகலோர் ஆக - (வானத்திற் சுற்றிலுமுள்ள) குற்றமற்ற சூரியர்களாக, அவற்றிடை மலர்ந்த கஞ்சம் - அம்மலர்களினடுவிலே மலர்ந்துள்ள பிரதானமான தாமரைமலர், தேசு உடை இரவி ஆக - (அச்சூரியர்களின் நடுவில்) விளங்குகின்ற ஒளியையுடைய பிரதானனான சூரியனாக, சிவன் என - (அச்சூரியமண்டலத்திலே) சிவன் வீற்றிருத்தல்போல, சேய் - (சிவ) குமாரன், அங்கு - அத்தாமரைப்பூவில், உற்றான் - வீற்றிருந்தான்; (எ - று.)

உவமையணி. சுற்றிலுமுள்ள பசிய தாமரைமலர்கள் நீர்நிறமான வானத்திலுள்ள நக்ஷத்திரமண்டலத்தையும், அவற்றினிடையே விளங்குகிற நீர்த்துளிகள் அம்மண்டலத்தில் அந்தர்தஸ்தானங்களிற்பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களையும் போலு மென்றதாம். பாசிலை- பசுமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் ஆதிநீண்டது. அள்ளி - விரித்தல்விகாரம். கார் - கருமையென்பதன் விகாரம்; இது மேகத்துக்குப் பண்பாகுபெயர். பகலோர் - துவாதசாதித்தியருட் பிரதானமானவனொழிந்த பிறர். தேசு - தேஜஸ் என்னும் வடமொழித் திரிபு. இரவி - ரவி. சூரியமண்டலத்தினிடையிற் கடவுள் வீற்றிருக்கின்றன ரென்பது நூற்றுணிபு. பகலோர் - ஆதித்தர் பன்னிருவரும், இரவி - அவர்களொழிந்த சிவசூரியனென்பவனும் என்பாருமுளர். 'சேய்வைகுற்றான் என்றும் பாடம். (௧௦௨)

௧௦௩. மாலயனெழிலிமேலோன்வானவரேனோர்யாரும்
பாலுறமரனுமாவும்பறவையும்பிறவுஞ்சூழ
வேலுறுகுமரன்கஞ்சத்திருந்ததுபரமனாதிக்
காலையினுயிர்கணல்கிக்கமலமேலிருத்தல்போலும்.

(இ - ள்.) மால் - விஷ்ணுவும், அயன் - பிரமனும், எழிலி மேலோன் - மேகத்தை வாகனமாகக்கொண்டு அதன்மேல் ஊர்கின்ற இந்திரனும், வானவர் - மற்றைத்தேவர்களும், ஏனோர் யாரும் - மற்றை முனிவர்முதலியவர்களெல்லோரும், பால் உற - தனது பக்கங்களி லிருப்பவும், மரனும் - மரங்களும், மாவும் - மிருகங்களும், பறவையும் - பக்ஷிகளும், பிறவும் - மற்றை ஊர்வன நீர்வாழ்வனவும், சூழ - சுற்றிலும்நிற்கவும், வேல் உறு குமரன் - (உத்தம இலக்கணங்களெல்லாம்) பொருந்த முற்ற சிவகுமாரன், கஞ்சத்து இருந்தது - தாமரைமலரில் வீற்றிருந்தது, பரமன் - (யாவரினும்) மேம்பட்ட சிவபெருமான், ஆதி காலையில் - ஆதிகாலத்தில், உயிர்கள் நல்கி - எல்லாவுயிர்களையும் உண்டாக்கியருளி, கமலம்மேல் இருத்தல் - (அத்தொழில்செய்கையிற் சிருஷ்டிக்குரியபீடமாகிய) தாமரைமலரின்மீது வீற்றிருத்தலை, போலும் - ஒக்கும்; (எ - று.)

எழுவகைப்பிறப்பினுள் தேவர் விலங்கு புள் தாவரம் என்னும் நான்கையும் வெளிப்படையாக்கூறி, மற்றைமூன்றில் மக்களை 'ஏனோர்யாரும்' என்றதனாலும், மற்றையிரண்டையும் 'பிறவும்' என்றதனாலும் பெறவைத்தார். வேலுறு குமரன் என எடுத்து - வேலாயுதம்பொருந்திய மைந்தனென்று உரைத்தல், மோனைத்தொடைக்குச் சிறவாமை காண்க. 'இருந்தன்மானும்' என்றும் பாடம். (௧௦௩)

௧௦௪. சலங்கிளர்தரங்கத்தெய்வச்சரவணக்கமலப்போதி
னலங்கிளர்குமரன்சேர்தலுன்முகற்சிறைமேல்வீட்டிப்

புலங்கிளருயிர்சனல்கப்பொருந்துநற்பகலின்முன்ன
ரிலங்கெழிற்பதுமபீடத்தேறியவியற்கைபோலும்.

(இ - ள்.) சலம் கிளர் தரங்கம் - நீரிலே விளங்குகின்ற அலைகளையுடைய, தெய்வம் - தெய்வத்தன்மையையுடைய, சரவணம் - சரவணப் பொய்கையில் தோன்றின, கமலம் போதில் - தாமரைமலரிலே, நலம் கிளர் குமரன் - அழகுமிக்க முருகக்கடவுள், சேர்தல் - பொருந்திவீற்றிருத்தல், மேல் - இனிமேல் [சிலகாலங்கழித்தபின்பு], நான்முகன் - நான்கு முகங்களை யுடைய பிரமனை, சிறை வீட்டி - சிறையிலே விட்டு [காவலிலிருத்திவைத்து], புலம் கிளர் உயிர்கள் நல்க பொருந்தும் - அறிவு பொருந்தப்பெறும்படியான உயிர்களை (அப்பிரமதேவன்போலத்) தான் படைக்கத்தொடங்குகின்ற, நல் பகலின் - நல்ல தினத்திற்கு, முன்னர் - முன்னமே, இலங்கு எழில் பதும பீடத்து ஏறிய - விளங்குகின்ற அழகையுடைய (அப்பிரமனது ஆசனமாகிய) தாமரைமலரிலே தான் ஏறிவீற்றிருந்த, இயற்கை - தன்மையை, போலும் - ஒக்கும்; (எ - று.)

ஒருகாலத்திற் பிரமன்முதலிய தேவர்களனைவரும் வந்து சிவபெருமானைத்தரிசித்துக் கைலாசத்தினின்று மீண்டுசெல்லும்பொழுது, அங்கிருந்த முருகக்கடவுளைப் பிரமனொழிந்தபிறதேவர்கள் வணங்கிச்செல்ல, பிரமன் மாத்திரம் அச்சிவகுமாரனைச் சிறுபிள்ளையென்றுகருதி அலக்ஷியஞ்செய்து வணங்காதொழிய, அக்கடவுள் அவ்வயனுக்கு அறிவுவருவிக்கவெண்ணி அவனைநோக்கி 'பிரணவமந்திரத்துக்குப்பொருள்சொல்வாய்' என்ன, அவன் அதுகூறத்தெரியாது மயங்க, குமாரக்கடவுள் 'பிரணவத்துக்குப் பொருளறியாதவன் படைப்புத்தொழிலை நடாத்தத்தக்கவனல்லன்' என்றுசொல்லி அயனைச் சிறையிலிட்டுத் தாம் படைப்புத்தொழிலியற்றினரென்பது, மேல் அயனைச்சிறைபுரிபடலத்து வரலாறும். அங்ஙனம் பிரமனைச் சிறைவைத்து அவனது படைப்புத்தொழிலைத் தான் மேற்கொண்டபொழுது அவனது பதுமாசனத்தில் ஏறி வீற்றிருந்தாற் போன்றது இப்பொழுது இவன் தாமரைமலரிலிருந்தது என்று கருத்து. சிறை - காவலிடம். 'இருத்தல்போலாம்' என்றும் பாடம். சிறைமேல் என மேல் - ஏழனுருபுமாம். (௧௦௪)

௧௦௫. முண்டகமொன்றில்வைகுமுருகனைச்சுற்றிச்செங்கேழ்
வண்டுளர்கமலக்காடுவான்புனற்றடத்தினிற்ற
லண்டர்கள்முதல்வவோர்பாலன்றியெம்மெல்லாம்பீடங்
கொண்டருண்முறையினென்றுநோற்றிடுங்கொள்கைத்தன்றே.

(இ - ள்.) முண்டகம் ஒன்றில் வைகும் முருகனை சுற்றி - ஒருதாமரைமலரிலே வீற்றிருக்கின்ற சுப்பிரமணியனைச் சுற்றிலும், செம் கேழ் வண்டு உளர் கமலம் காடு - சிவந்த ஒளியையுடையனவும் வண்டுகள் மொய்க்கப் பெறுவனவு மாகிய தாமரைமலர்த்தொகுதிகள், வான் புனல் தடத்தில் நிற்றல் - மிக்க நீரையுடைய அச்சரவணப்பொய்கையிலே நிற்குதல், 'அண்டர்கள் முதல்வ - தேவர்கள் தலைவனே! ஓர்பால் அன்றி - (எங்களுள்) ஒன்றினிடத்தில் வீற்றிருப்பதுமாத்திரமேயல்லாமல், எம் எல்லாம் - எங்களையெல்லாம், முறையின் - ஒன்றன்பின்ஒன்றாக [கிரமமாக], பீடம் கொண்டருள் - ஆசனமாகக் கொண்டருளுவாயாக', என்று - என்றுபிரார்த்தித்து நோற்றிடும் கொள்கைத்து - (அம்மலர்களெல்லாம் நீர்நிலையிலே ஒற்றைத்தாளால் நின்று சூரியனைநோக்கிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர்சொரிந்து அறுமுகக்கடவுளைக்குறித்துத்) தவஞ்செய்கின்ற தன்மையை ஒத்துள்ளது; (எ - று.)

“முருகவிழ் செய்ய கமலமுன் னெகிழ்ந்து முகமலர்ந் தருகணீர் சிந்தி, யொருபசுந் தாளின் வனத்தினின் றிதி னுஞற்றிய தவத்தினு லன்றோ” என்றார் நைடதநூலுடையாரும். முறையின் - நீதிப்படி [பக்ஷபாதமில்லாமல் நடுவுநிலைமையாக] என்றுமாம். தாமரைமலர்த்தொகுதியைக் காடென்றல் ஒருகவிமரபு. (க0ரு)

க0சு. அணங்குசெய்தோற்றத்துப்பினவிர்சுடர்க்குமரற்சூழ
மணங்கிளர்கமலக்காடுமலர்ந்தனவவனைச்சேர்வான்
றணங்கெழுபுனலிற்புக்குத்தபனன்மேனாட்டஞ்சேர்த்தி
நுணங்கிடைமடவார்பல்லோர்நோற்றவணிற்றல்போலும்.

(இ-ள்.) அணங்கு செய் தோற்றம்-அழகைச்செய்கின்ற வடிவத்தையும், துப்பின் அவிர் சுடர் - பவழம்போல (ச்செந்நிறமாய்) விளங்குகின்ற ஒளியையுமுடைய, குமரன்-முருகமூர்த்தியை, சூழ - சுற்றிலும், மணம் கிளர் கமலம் காடு - வாசனை வீசுகின்ற தாமரைமலர்த்தொகுதிகள், மலர்ந்தன - மலர்ந்துள்ளவை, நுணங்கு இடை மடவார் பல்லோர் - சிறுத்த இடையையுடைய இளம்பெண்கள் பலர், அவனை சேர்வான் - அம்முருகக்கடவுளை மணஞ்செய்துகூடும்பொருட்டு, தண் அம் கெழு புனலில் புக்கு-குளிர்ந்த அழகிய மிக்க (இப்பொய்கையின்) நீரிலே இறங்கிநின்று, தபனன்மேல் நாட்டம் சேர்த்தி - சூரியன்மீது கண்பார்வையைச் செலுத்தி, அவண் நோற்று நிற்றல் - அவ்விடத்துத் தவஞ்செய்துநிற்றலை, போலும்-ஒக்கும்; (எ-று.)

நீரில்நின்று மேல்தோன்றிய தாமரைமலர்கள் நீரில்தங்குகிற மங்கையரது முகங்களை ஒத்தலால், இங்ஙனங்கூறினார். தண் + அம் = தணம்; எதுகைநயநோக்கி, ‘தண்ணம்’ எனத் தனிக்குறில்முன்ஒற்று உயிர்வர இரட்டவில்லை. தவஞ்செய்பவர் சூரியனைநோக்குதலை “கருதாமன் மனமடக்கி விசும்பினூடுங் கதிரவனைக் கவர்வான்போற் கரங்கணீட்டி, யிருதாரை நெடுந்தடங்க ணிமையாதோரா யிரங்கதிருந் தாமரைப்போ தென்ன நோக்கி” என மகாபாரதத்துக் கூறுதலாலும் அறிக. நாட்டம் - நாடுதற்குக்கருவியானது; நாடுதல் - பார்த்தல், அம்-கருவிப்பொருள்விகுதி. மடவார்என்பதில், மடம் அல்லது மடமை - இளமை; எல்லாமறிந்தும் ஒன்றும் அறியாதுபோலிருக்கும் பெண்மைக்குணமாகவுமாம். தண் அங்கு எழு புனல் எனப் பிரித்து, தண்மையாக அப்பொய்கையிற் பொருந்திய தீர்த்தமென்றுங் கொள்ளலாம். மெல்லிய தாமரைக் கொடிகள்-நுணங்கிடைமடவார்க்கும், அவற்றிலுள்ள மலர்கள் - அவர்கள்முகத்துக்கும் உவமையாம். தாமரை சூரியனைநோக்குதல், பிரசித்தம்; “ஒண்பூ, வுயருங் கதிரவனை நோக்கும்” என்றார் முன்னோரும். அணங்கு செய் தோற்றம் - (தன்னைக்காணும்மகளிர்க்குக்காம) நோயை உண்டாக்குகின்ற வடிவழகு என்றுமாம். (க0சு)

க0எ. ஒண்ணகையுயிர்க்குஞ்சங்கமொருசிலகமலம்வைகத்
தண்ணுறுநறவைப்பஃறாட்டாமரைபரித்துச்சூழ்ந்த
வண்ணலம்பொய்கைதற்சேராறுமுகப்பிள்ளைதுய்ப்ப
வெண்ணெயுஞ்சங்குஞ்சூழவிட்டதுபோலுமன்றே.

(இ-ள்.) ஒள் நகை உயிர்க்கும் சங்கம் - பிரகாசமான ஒளியை வெளிவீசுகின்ற சங்குகள், ஒரு சில கமலம் வைக-சிலதாமரைப்பூக்களின்மீதுபொருந்தியிருக்க, தாள் பல் தாமரை- நாளத்தையுடைய அநேக தாமரைமலர்கள், தண் உறு நறவை-குளிர்ச்சி பொருந்திய தேனை, பரித்து - (தன்னிடத்

துக்)கொண்டு, சூழ்தல் - சுற்றிலுமிருத்தல், அன்னல் அம் பொய்கை - பெருமையையுடைய அழகிய அச்சரவணப்பொய்கை, தன் சேர் அறுமுகம் பிள்ளை துய்ப்ப - தன்னை அடைந்த ஆறுமுகங்களையுடைய குமாரன் உண்ணுதற்கு, எண்ணெயும் சங்கும் சூழ இட்டது - எண்ணெய்யையும் (அதற்கு ஏற்ற) பாலடைச்சங்கையுஞ் சுற்றிலும்வைத்ததை, போலும்-ஒக்கும்.

சங்கம் - ஶங்க்கம்; வடசொல். 'ஒருசில' என்பதனை மத்திமதீபமாக 'சங்கம்' என்பதனோடுங் கூட்டுக. சங்கத்திற்குப் பாலடையும், தேனுக்கு எண்ணெயும் உருவத்தாலுவமை. பல தாமரை யென்று இயையும். 'தன் சேயறுமுகப்பிள்ளை' என்றும் பாடம். (௧௦௭)

௧௦௮. ஆரமும்வனசத்தோடுமணிமகரந்தச்சேறும்
வேரியம்பூந்தண்டேனுமுறைமுறைவீசிக்கையாற்
சேரவேகொண்டுமேலோன்றிருவடிதிளைப்பவுய்த்தல்
வாரியந்தடாகமன்பால்வழிபடும்வண்ணம்போலும்.

(இ - ள்.) (அச்சரவணப்பொய்கையானது), ஆரமும் - முத்துக்களையும், வனசம் தோடும் - தாமரைமலரின் இதழ்களையும், அணி மகரந்தம் சேறும் - அழகிய பூந்தாதின் குழம்பையும், வேரி அம் பூ தண் தேனும் - வாசனையையுடைய அழகிய மலர்களி லுள்ள குளிர்ந்த தேனையும், முறை முறை - மாறிமாறி, வீசி கையால் - அலைகளாகிய (தனது) கைகளினால், சேரவே கொண்டு- ஒருசேர எடுத்து, மேலோன் திரு அடி திளைப்ப - மேன்மையையுடைய குமாரக்கடவுளினது சீர்பாதங்களிலே இடையறாதுபொருந்தும்படி, உய்த்தல் - செலுத்துதல், வாரி அம் தடாகம் அன்பால் வழிபடும் வண்ணம் போலும் - நீரையுடைய அழகிய அந்தப் பொய்கை (அக்கடவுளைப்) பக்தியோடு பூசிக்கின்ற விதத்தை ஒக்கும்; (எ - று.)

ஆரம் - ஹாரம்; வடமொழித்திரிபு. பொய்கையில் முத்துக்கள், சங்கு முதலியவற்றிலிருந்து தோன்றுவன. வாஜம் - நீரிற்பிறப்பது. தோடு - பூவிதழ். இனி, வனசத்தோடும் - தாமரைமலர்களுடனே யென்றுமாம். பூந்தாது தேனோடு கலந்து குழைந்திருத்தலால், 'மகரந்தச்சேறு' என்றார். மகரந்தம் - வாசனைப்பொடி. முத்தும் தாமரையிதழும் - அருச்சனைக்கும், மகரந்தச்சேறும் தேனும் அபிஷேகத்துக்கு மென அறிக. வீசி-வடமொழி; மேல் ௧௧௦ - ம் கவியிலுங் காண்க. (௧௦௮)

௧௦௯. பங்கயச்செம்மற்போதுபதனழிந்தவிழ்ந்துபாங்க
ரங்குளவிலைமேல்வீழவவைபுறத்தசையுநீர்மை
சங்கரன்குமரற்சூழச்சரவணம்பசும்பூந்தட்டிற்
றுங்கநல்விளக்கமாட்டித்திரைக்கையாற்சுலவல்போலும்.

(இ - ள்.) (அப்பொய்கையிலே), பங்கயம் செம்மல் போது-தாமரையின் பழம்பூக்கள், பதன் அழிந்து -(நாளத்தின்மேலே நிற்கின்ற) பக்குவம் கெட்டு, அவிழ்ந்து - மிகநன்றாக மலர்ந்து விரிந்து, பாங்கர் அங்கு உள இலைமேல் வீழ - அவ்விடத்திற் பக்கங்களிலேயுள்ள இலைகளின்மீது விழ, அவை - அத்தாமரையிலைகள், புறத்து அசையும் - பக்கங்களிலே அசைகின்ற, நீர்மை - தன்மை, சரவணம் - அப்பொய்கை, சங்கரன் குமரன் சூழ - சிவகுமாரனாகிய முருகனைச் சுற்றிலும், பசு பூ தட்டில் - பச்சைநிறமான பூந்தட்டிலே, துங்கம் நல் விளக்கம் மாட்டி - சிறந்த அழகிய தீபத்தை ஏற்றிவைத்து, திரை கையால் சுலவல் போலும் - (திருஷ்டிபரிகாரத்தின் பொருட்டு) அலைகளாகிய கைகளினாற் சுழற்றிக்காட்டுதலை ஒக்கும்.

பங்கஜம் - சேற்றில்முளைப்பது. செம்மல் - பழம்பூ; போது - மலர்; செம்மலாகிய போது என இருபெயரொட்டுப்பண்புத்தொகை. அவிழ்ந்து - இதழ்களைச்சொரிந்து; நெகிழ்ந்து என்றுமாம். சங்கரன் - எல்லாவின்பங்களையுஞ் செய்பவன்; சம் - சுகம். பச்சையிரத்தினமயமான தட்டென்பார், 'பசுந்தட்டு' என்றார். பூந்தட்டு - பூக்களின்வடிவமாகச் சித்திரவேலைசெய்யப்பட்டுள்ள தட்டு. பசும்பூந்தட்டு - தாமரையிலைக்கும, தீபம் - அதன்மலருக்கும உவமை. (கOக)

கசO. காசுறழ்பதுமப்போதுகளாசியதாகமீச்செல்
பாசடைகவிகையாகப்பலநனைவிளக்கமாக
வீசிகள்கவரியாகமிழற்றுபுள்ளியமதாக
மாசறுபொய்கைசெய்க்குவளம்படவொழுகிற்றன்றே.

(இ-ள்.) காசு உறழ் - (செந்நிறத்தால்) பொன்னை யொத்த, பதுமம் போது - தாமரைமலர்கள், களாசியது ஆக - பொற்படிக்கங்களாக, மீசெல் பாசு அடை - நீரின்மேலெழுந்து உயர்ந்துதோன்றுகின்ற பசுநிறமான தாமரையிலைகள், கவிகை ஆக - பசும்பட்டுக்குடைகளாக, பல நனை - அநேகந்தாமரையரும்புகள், விளக்கம் ஆக - தீபங்களாக, வீசிகள் - வீசுகின்ற அலைகள், கவரி ஆக - வீசுகின்ற வெண்சாமரங்களாக, மிழற்று புள் - ஒலிக்கின்ற (பலசாதி) நீர்ப்பறவைகள், இயமது ஆக - (முழங்குகின்ற பலவகை) வாத்தியங்களாக, மாசு அறு பொய்கை - குற்றமற்ற அந்தத்தடாகமானது, சேய்க்கு வளம் பட ஒழுகிற்று - (இங்ஙனம்) குமாரக்கடவுளுக்கு (இராசாங்கங்களாகிய காளாஞ்சிமுதலிய பல) சிறப்புக்களும் உண்டாக இருந்தது.

காசு உறழ் - (செம்மைநிறத்தால்) மாணிக்கத்தை யொத்தவென்றும், குற்றம்நீங்கினவென்றும், ஒளிபொருந்திய வென்றுமாம். களாசி - காளாஞ்சி; விகாரம். களாசியது, இயமது இவை - சாதியொருமை. கவிகை - மேலே கவிந்திருப்பது. வீசி - வடசொல்; வீசுவதெனத் தமிழ்க்காரணப் பெயரெனவுங் கொள்ளலாம்: இ - கருத்தாப்பொருள் விகுதி. கவரி - சமரீ யென்னும் வடமொழித் திரிபு; இப்பெண்மானின்பெயர், அதன்வால்மயிரினாற்செய்யப்பட்ட ராஜசின்னத்திக்கு இருமடியாகுபெயர். (ககO)

ககக. அழனிவந்தன்னகஞ்சத்தகன்றடத்திரைகணாப்ப
ணுழிபடாதுசூழ்போந்துலவுவதானைநீரால்
விழுமியகுமரன்பொய்கைவெளியுறாதமரரிட்ட [ம்.
வெழினிகள்புடையேமென்காலெறிதலினிரட்டல்போலு

(இ-ள்.) அழல் நிவந்து அன்ன - நெருப்பு எழுந்துவிளங்கினாற்போன்ற, கஞ்சத்து - செந்தாமரைமலர்களையுடைய, அகல் தடம் - விசாலமான அந்தச்சரவணப்பொய்கையி லுள்ள, திரைகள் - அலைகள், நாப்பண் உழி படாது - நடுவிடங்களிலே பரவாமல், சூழ் போந்து உலவுவ - சுற்றிலுஞ் சென்று எழுந்து வீசுவன, விழுமிய குமரன் - சிறப்பையுடைய முருகக்கடவுள், பொய்கை வெளி உறாது - தடாகத்தினின்று வெளியிலே காணப்படாமல் [வெளித்தோன்றினாற் கண்ணெச்சில்படுமென்று கருதி], தானை நீரால் - நீராகிய ஆடையைக்கொண்டு, அமரர் - தேவர்கள், இட்ட - (அக்கடவுளைச் சுற்றிலுஞ் சூழ) விட்ட, எழினிகள் - திரைகள், புடையே - பக்கங்களில், மென் கால் எறிதலின் - மெல்லிய காற்று வீசுதலினால், இரட்டல் - அசைந்தொலித்தலை, போலும் - ஒக்கும்; (எ - று.)

அறுமுகக்கடவுள் இடையிலே வீற்றிருக்கப்பெற்ற அப்பொய்கையிற் சுற்றிலும் எழுந்து சிறிது ஒலி உண்டாகக் கரைகளில் மோதுகின்ற அலைகள்

அக்கடவுளுக்குத் திருஷ்டிதோஷமுண்டாகாதபடி சுற்றிலுந் தேவர்கள் இட்ட திரைகள்சிறகாற்றவீசுதலாற்சிறிதொலிஉண்டாக அசைவனவற்றை ஒக்கும் என்பதாம். அலைகள் நீர்நிலையின் நடுவிற் காணப்படாமற் கரைகளிலேயே காணப்படுவது இயல்பாதலால், 'திரைக ளுப்பணுழிபடாது சூழ் போந்தலைவுவ' என்றார். தானைநீரால் விழுமிய குமரன் என இயைத்து, சேனைகளை நடத்துந்தன்மையாற் சிறப்புற்ற குமரக்கடவு ளென்று உரைத்து, தேவசேனாபதியான அறுமுகக்கடவுள் அசரர்க்குத்தெரியாதபடி அமர்ந்திருக்கின்றதொரு படமாடத்திற்குச் சுற்றிலுந் தேவர்களிட்ட திரைகளை ஒக்கும் என்று உரைத்தலும் ஒன்று. இனி, குழந்தையாகிய குமாரக்கடவுள் வெளியேவந்துவிடாதபடி தேவர்கள்இட்ட திரையைப் போலுமென உரைத்தலும் அமையும். (கககக)

கககஉ. கொன்படைசேவலாகுமெகினமோர்கோடியீசன்
றன்பெருங்குமரற்சூழத்தடத்தினின்மிழற்றலெந்தை
பொன்பிறழ்பதுமன்செய்கைபுரியுநாளூர்தியாவ
லென்புடையிருத்தியென்றேதமித்தமியிரத்தல்போலும்.

(இ - ள்.) கொன் படை - பெருமையைப் பெற்ற, சேவல் ஆகும் எகினம் ஓர் கோடி - ஒருகோடி ஆணன்னப்பறவைகள், ஈசன்தன் பெரு குமரன் சூழ- சிவபிரானது சிறப்புடைய இளங்குமாரனைச் சுற்றிலும் இருந்து, தடத்தினில் - அப்பொய்கையிலே, மிழற்றல் - கூவியொலித்தல், 'எந்தை- எமது தலைவனை முருகக்கடவுளே! பொன் பிறழ் பதுமன் செய்கை புரியும் நாள்-(நீ) பொன்னிறமாய் விளங்குகின்ற செந்தாமரைமலரிலே வீற்றிருக்கின்ற பிரமதேவனைச் சிறையிலிட்டு அவன்தொழிலாகிய படைத்தலைச் செய்யுங்காலத்து, ஊர்தி ஆவல் - (யான் உனக்கு) வாகனமாவேன்; (அப்பொழுது), என் புடை இருத்தி - என்னிடத்தில் (வந்து மேலேறி) வீற்றிருப்பாயாக,' என்று - என்றுகூறி, தமி தமி இரத்தல் போலும்-(அவ்வன்னப்பறவைகள் குமாரனைச் சுற்றிலும் இருந்து) தனித்தனி பிரார்த்தித்தலை ஒக்கும்; (எ - று.)

பிரமன் அன்னப்புள்ளை வாகனமாகவுடையவனாதலால், இங்ஙனங்கூறியது. கொன் - உரிச்சொல். சேவல் - ஆண்மைப்பெயர்; "சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு, மாயிருந் தூவி மயிலலங் கடையே" என்னுந் தொல்காப்பியச்சூத்திரவிதியால், அன்னப்பறவையின் ஆண் சேவலெனப்பட்டது. கோடி - நூறுலக்ஷம்; இங்கே, மிகப்பலவென்னும் மாத்திரையாய் நின்றது. எந்தை - அண்மைவிளி. ஊர்தி - ஊரப்படுவது எனக்காரணப்பெயர்; ஊர்தல் - ஏறிநடத்தல்: த் - எழுத்துப்பேறு, இ - செயப்படுபொருள்விகுதி. (கககஉ)

கககங. வளஞ்செறியினையபாலால்வான்சரவணமாம்பொய்கைத்
தளஞ்செறிப்துமமொன்றிற்சராசரம்யாவுங்காப்பா
னுளஞ்செறிகருணையொப்பிலொப்பிலாக்குமாரமூர்த்தி
யிளஞ்சிறுமதலைபோலவினிதுவீற்றிருந்தான்மன்னோ.

(இ - ள்.) இனைய வளம் செறி பாலால் - இத்தன்மையனவான வளப்பங்கள் பொருந்தியவிதமாக, ஒப்பு இலா குமாரமூர்த்தி - ஒப்பவரில்லாத குமாரக்கடவுள், வான் சரவணம் ஆம் பொய்கை - பெரிய [சிறந்த] சரவணமென்னும் அப்பொய்கையிலே, தளம் செறி பதுமம் ஒன்றில்-இதழ்கள் நெருங்கிய ஒரு தாமரைமலரிலே, சர அசரம் யாவும் காப்பான் உளம் செ

றி கருணை எய்தி - (உலகத்திலுள்ள) இயங்குதிணைப்பொருள்கள் நிலைத்திணைப்பொருள்கள் எல்லாவற்றையுங் காத்தருளுமாறு திருவுள்ளத்திலே மிக்கதிருவருளை அடைந்து, இள சிறு மதலை போல இனிது வீற்றிருந்தான் - இளம்பருவமுடையதொரு சிறுகுழந்தைபோல இனிமையாக எழுந்தருளியிருந்தான்; (ஏ - று.)—மன், ஓ - ஈற்றசைகள்.

சராசரம் - வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி; ஜங்கமஸ்தாவரங்களென்று பொருள்: சரம் - சஞ்சரிப்பன, அசரம் - சஞ்சரியாதன. பொய்கை - மானிடராக்காத நீர்நிலை. இனையபாலால் வளம் செறி என இயைத்து, இத்தன்மைகளால் வளப்பம் மிக்க என்றுஉரைத்து, சரவணப்பொய்கையோடு சேர்த்தலுமாம். (ககங)

ககச. தீர்த்திகைக்கங்கைதன்னிற்றிகழ்சரவணத்தில்வந்த
மூர்த்திகைக்குழவியேபோன்முதற்புரியாடனோக்கி
யார்த்திகையுறாதவுள்ளத்தரிமுதலமரர்யாருங்
கார்த்திகைத்தெரிவைமாரைவிளித்திவைகழறலுற்றார்.

(இ - ள்.) தீர்த்திகை கங்கைதன்னில் - கங்காநதியிலே, திகழ் - விளங்குகின்ற, சரவணத்தில் - சரவணமடுவிலே, வந்த - வந்து அவதரித்த, மூர்த்தி - குமாரக்கடவுள், கை குழவியே போல் - இளங்குழந்தை போல, முதல் புரி - முதலிலே செய்தருளுகிற, ஆடல் - திருவிளையாட்டை, நோக்கி - பார்த்து, ஆர்த்திகை உறாத உள்ளத்து அரி முதல் அமரர் யாரும் - துன்பம் பொருந்தாத மனத்தையுடைய திருமால்முதலிய தேவர்களெல்லோரும், கார்த்திகை தெரிவைமாரை விளித்து - கிருத்திகா நக்ஷத்திரங்களை அழைத்து, இவை கழறல் உற்றார் - இவ்வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினார்கள்; (எ - று.)—அவை மேற்கவியிற் காண்க.

தீர்த்திகை - யாறு; இதனை "சிந்து தீர்த்திகை தீப வதியே, தடினியா பதகை யாறெனச் சாற்றுவர்" என்னும்பிங்கலந்தையினுலும் அறிக: தீருடைய தென்று பொருள்; வடமொழிப்பெயர். இனி, புண்ணிய தீர்த்தமாகவுள்ள என்றும் பொருள்கொள்ளலாம். இரண்டாமடியில், கை - சிறுமை. ஆர்த்திகையுறாத வுள்ளம் - குமாரன்அவதரித்ததனால் துன்பம்நீங்கிய நெஞ்சம் என்றபடி. இனி, ஆர்த்தி கையுறாத எனப்பிரித்து - மகிழ்ச்சி உள்ளடங்காத மனம் எனவுமாம். அரி - ஹரி; அடியவர்துயரமழிப்பவன்: அசுராதியரை ஒழிப்பவன். நக்ஷத்திரங்களெல்லாம் பெண்பாலாதலாலும், கிருத்திகாநக்ஷத்திரம் ஆறாதலாலும், 'தெரிவைமார்' என்றது. தெரிவைமார், மார் - பலர்பாற் பெயர்விகுதி. அறுமுகமுடைய கடவுளாதலால், அவன்பொருட்டு அறுவகையான நக்ஷத்திரத்தை அழைத்தார். இனி, தீர்த்தி - பரிசுத்தையான உமாதேவியினுடைய, கை - திருக்கையிலிருந்து தோன்றின, கங்கை என்றும்; ஆர்த்தி கை உறாத உள்ளம் - விருப்பம் கைத்தலையடையப்பெறாத [மேன்மேல்விருப்பமிக்க] மனம் என்றும் உரைத்தலும் பொருந்தும். (ககச)

ககரு. சாற்றருஞ்சரவணத்திற்சண்முகத்தொருவனாகி
வீற்றிருந்தருளுகின்றவிமலனோர்குழவிபோலத்
தோற்றினனவனுக்குங்கடுணைமுலையமுதமூட்டிப்
போற்றுதிர்நாளுமென்னாநன்றெனப்புகன்றுவந்தார்.

(இ - ள்.) 'சாற்று அரு சரவணத்தில் - சொல்லமுடியாத (சிறப்பையுடைய) சரவணப்பொய்கையிலே, சண்முகத்து ஒருவன் ஆகி - ஆறுமுகங்களையுடைய ஒருகடவுளாய், வீற்றிருந்தருளுகின்ற - எழுந்தருளியிருக்கி

ன்ற, விமலன் - குற்றமற்ற முருகமூர்த்தி. ஓர் குழவிபோல தோற்றினன் - ஒரு இளங்குழந்தைபோலக் காணப்படுகிறான்; அவனுக்கு - அக்குமாரனுக்கு, உங்கள் துணை முலை அமுதம் ஊட்டி - உங்களுடைய இருதனங்களின் பால்களை உண்ணக்கொடுத்து, நாளும் போற்றுதிர் - தினந்தோறும் (அவனைப் பேணிவளர்த்திடுங்கள்', என்ன - என்று (தேவர்கள்) கட்டளையிட, (அந்தக்கிருத்திகாநக்ஷத்திரங்களாறும்), நன்று என புகன்று உவந்தார் - நல்லதென்றுசொல்லி (அதற்குச் சம்மதித்து) மகிழ்ந்தார்கள்; (எ - று.)

நன்று என - நல்லதென்றுசொல்லி, புகன்று - மகிழ்ந்து, வந்தார் - (பொய்கைக்கரைக்கு) வந்தார்கள் என்றும் உரைக்கலாம்; இவ்வுரையில், புகலுதல்-மகிழ்தலாதலை "புல்லார் புகலப் பொதிமஞ்ஞையிற் றேவிபோகி" எனச் சிந்தாமணியிலுங் காண்க. ஒருவனும் வீற்றிருந்தருளுகின்ற விமலன் - ஒப்பற்றவனும் எழுந்தருளியிருக்கின்ற குற்றமற்ற பரமசிவன், சாற்றருஞ் சரவணத்திலே, சண்முகத்து ஓர் குழவிபோல தோற்றினன் - ஆறுதிருமுகங்களையுடைய ஒருகுழந்தையாகத் திருவவதரித்தான் என்றும் பொருள் கொள்ளலாம்; இப்பொருளில், போல் - ஒப்பில்போலி; "ஒப்பில் போலியுமப்பொருட் டாகும்" என்னும் விதியால், உரையசைப்பொருளதாய் நின்றது. துணைமுலை - ஒன்றோடொன்றொத்த உபயதனமெனவுமாம். ஊட்டுதல் - உண்பித்தல்; உண் - பகுதி, முதல் நீண்டது; டு - பிறவினைவிகுதி. நாளும், உம்மை - தொறுப்பொருளது. நன்று என்றது, உடன்பாடு உணர்த்திற்று. ()

௧௧௬. மறுவறுமாரலாகுமாதர்மூவிருவர்தாமு
நிறைதருசரவணத்தினிமலனையடைந்துபோற்ற
வுறுநர்கடமக்குவேண்டிற்றுதவுவோனாதலாலே
யறுமுகவொருவன்வேறாயறுசிறாருருவங்கொண்டான்.

(இ - ள்.) மறு அறும் - குற்றமற்ற, ஆரல் ஆகும் - கிருத்திகைநக்ஷத்திரங்களாகிய, மாதர் மூ இருவர் தாமும் - அறுமகளிரும், நிறைதரு சரவணத்தில் விமலனை அடைந்து போற்ற - (நீர்) நிரம்பியுள்ள அச்சரவணப் பொய்கையிலே வீற்றிருக்கின்ற குற்றமற்ற அக்குமாரக்கடவுளை அடைந்து வணங்க, அறுமுகம் ஒருவன் - ஆறுதிருமுகங்களையுடைய ஒப்பற்றவனாகிய அக்கடவுள், உறுநர்கள் தமக்கு வேண்டிற்று உதவுவோன் ஆதலாலே - (தன்னை) அடைந்தவர்களுக்கு விரும்பியதைக்கொடுத்தருளுந் தன்மையுடையவனாதலால், வேறு ஆய் அறு சிறார் உருவம் கொண்டான் - (அம்மாதர்கள்விருப்பத்தின்படி தனது ஒருருவம்) வேறுபட்டு ஆறு சிறுகுழந்தைகளின் வடிவத்தை யெடுத்தான்; (எ - று.)

ஆரலென்பது கிருத்திகாநக்ஷத்திரத்தின் பெயராதலை "எரிபிறங் கிடேராளாரலழலறு வாயலக்கர், கருதிரா விதனை யங்கி கார்த்திகை யளகு மேற்கும்" என்னும் நிகண்டினால் அறிக. உறுநர், ர் - பெயரிடைநிலை. வேண்டிற்றெனபதைச் சாதியொருமையாகக்கொள்ளலாம். சிறார் - பண்படியாய்ப் பிறந்தபெயர்; சிறு - பகுதி, ஆர் - பலர்பால்விகுதி. (௧௧௬)

௧௧௭. ஆறுருவாதலோடுமறுவருமகிழ்ந்துவேறு [கை
வேறுதாமெடுத்துத்தத்தம்வியத்தகுதுணைமென்கொங்
யூறுபாலமுதமன்னோற்குதவலுமுறுவல்செய்து
மாறிலாவருளாலாற்றவருந்தினன்போலவுண்டான்.

(இ - ள்.) ஆறு உரு ஆதலோடும் - (அறுமுகக்கடவுள்) ஆறு குழந்தைத்திருவுருவமானவளவிலே, அறுவரும் - கார்த்திகைமாதர்கள் ஆறு

பெயரும், மகிழ்ந்து - சந்தோஷமடைந்து, வேறு வேறு தாம் எடுத்து - தாங்கள் தனித்தனி ஒவ்வொரு குழந்தையை எடுத்து, தத்தம் வியத்தகு துணை மென் கொங்கை ஊறு பால் அமுதம் - தங்கள் தங்களுடைய சிறப்பிக்கத்தக்க மென்மையான இரண்டு தனங்களிற் சுரக்கின்ற தேவாமிருதம்போலினிய பாலை, அன்னோற்கு உதவலும் - (குழந்தைவடிவமான) அக்கடவுளுக்குக் கொடுத்தவளவில், (அச்சண்முகமூர்த்தி), முறுவல் செய்து - புன்சிரிப்புச்சிரித்து, மாறு இலா அருளால் - மாறுதலில்லாத கருணையினால், ஆற்ற வருந்தினன்போல உண்டான் - மிகவும் (பசியால்) வருத்தமுற்றவன்போல (அம்முலைப்பாலை மிக்க ஆர்வத்தோடு) பருகியருளினான்; (எ-று.)

அறுவர் - தொகைக்குறிப்பு. வியத்தகு - வியக்கத்தகுஎன்பதன் தொகுத்தல். துணைக்கொங்கை - வேறு உவமை பெறாத கொங்கையென்றுமாம். முறுவல், குழந்தைகளுக்கு இயற்கையாய் உரியது; பால்பெறுதலா லுண்டானதுமாம்: இத்தகைய தனதுதிருவிளையாட்டைத் தானே கருதியதனாலுண்டாய தென்னவுமாம். மாறிலாவருள் - ஒப்பில்லாத திருவருளுமாம். 'வருந்தினர்' எனப் பன்மையாகவும் பாடமுண்டு. (ககஎ)

ககஅ. உண்டபினறுவராகுமொருபெருமுதல்வன்றன்னைத்
தண்டழைபொதுளுநீபத்தண்ணிழற்பொய்கைதன்னில்
வண்டயிலுறாதகஞ்சமாமலர்ப்பள்ளிசேர்த்திக்
கண்டுயில்செய்வித்தேத்தக்கருணையாலினையசெய்வான்.

(இ - ள்.) (கார்த்திகைமாதர்கள்), அறுவர் ஆகும் ஒரு பெரு முதல்வன் தன்னை - ஆறுமக்களின்வடிவமான ஒப்பற்ற பெரிய முதற்கடவுளான அவ்வறுமுகனை, உண்டபின் - முலைப்பாலமுதுசெய்தபின்பு, தண் தழை பொதுளும் நீபம் தண் நிழல் பொய்கைதன்னில் - குளிர்ச்சியான தழைகள்நிரம்பிய கடம்பமரத்தின் குளிர்ந்தநிழலிலுள்ள அச்சரவணப்பொய்கையிலே, வண்டு அயிலுறாத கஞ்சம் மா மலர் பள்ளி - வண்டுகள்தேனுண்ணப்பெறாத சிறந்த தாமரைமலராகிய [பெரிய] திருப்பள்ளிமெத்தையிலே, சேர்த்தி - பள்ளிகொள்ளவிட்டு, கண் துயில் செய்வித்து - கண்களை மூடிக்கொண்டு தூங்கும்படி செய்வித்து, ஏத்த - வணங்க, (அக்குமாரசுவாமி), கருணையால் - அருளினால், இனைய செய்வான் - இத்தொழில்களைச் செய்தருளுபவனானான்; (எ-று)—அவை மேல் மூன்றுகவிகளாற் கூறுகின்றார்.

வண்டயிலுறாத கஞ்சம் - புதியதாமரை: அன்றுமலர்ந்தமலர் என்றபடி; அன்றியும், தேவர்களுக்கு உரிய மலரில் வண்டுமொய்க்காதென்றும் உணர்க. பள்ளி - சயனம். கண்டுயில் - கானுந்துயில் என்று ஆகி, அறிதுயிலென்றும் ஒருபொருள்தொனிக்கும். 'கண்டுயில்வித்துப்போற்ற' என்றும் பாடம். 'கருணையாற்செய்வான்' என்றது - இவையனைத்தும் இச்சாமாத்திரத்தாற்செய்யுந் தொழில்களேயன்றி இளங்குழந்தைத்தன்மையால் இயற்றுவனவன்று என்றவாறும். (ககஅ)

ககூ. துயிலவோருருவந்துஞ்சித் துண்ணெனவெழுந்து மென்சொற், பயிலவோருருவம்பாய்தன் பயோதரம்பவளவாய்வைத், தயிலவோருருவநக்காங் கமரவோருருவமாட, லியலவோருருவம்வாளாவிரங்கவோருருவஞ்செய்தான்.

(இ - ள்.) ஓர் உருவம் - ஒரு குழந்தைத் திருவடிவம், துயில - தூங்கவும், ஓர் உருவம்—, துஞ்சி - (முதலில்) தூங்கிக்கொண்டிருந்து, துண்

னென எழுந்து - (அத்தூக்கத்தினின்றும்) திடுக்கிட்டெழுந்து, மென் சொல் பயில - மென்மையான [கேட்டற்கினிய] மழலைச்சொற்களைச் சொல்லிப்பழகவும், ஓர் உருவம்—, யாய்தன் பயோதரம் பவளம் வாய் வைத்து அயில - தாயினுடைய தனத்தைத் தனது பவழம்போலச்சிவந்த வாயிலே வைத்துக்கொண்டு பாலையமுதுசெய்யவும், ஓர் உருவம்—, நக்க ஆங்கு அமர - சிரித்தபடியே இருக்கவும், ஓர் உருவம்—, ஆடல் இயல - விளையாடுதலைச் செய்யவும், ஓர் உருவம்—,வாளா இரங்க - காரணமில்லாமலே [ஓய்வில்லாமல்] அழவும், செய்தான் - (அறுமுகக்கடவுளொருவனே தான் இப்படிப்பட்ட பல செயல்களைச்) செய்தருளினான்; (எ - று.)

“குழலினிது யாழினி தென்பதம் மக்கள்,மழலைச்சொற் கேளா தவர்,” “அவர். சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு” என்பவாதலால், குதலைச்சொல்லை ‘மென்சொல்’ என்றார். யாய் - இது ‘ஆய்’ என மருவியும் வழங்கும். பயோதரம் - பாலைத்தரிப்பது; வடமொழிக்காரணப்பெயர். பவளம் - ப்ரவாளம். நக்காங்கு - நக்கவாங்கு என்பதன் தொகுத்தல்; இனி, நக்கு - சிரித்து, ஆங்கு - அவ்வாறே, அமர - பொருந்த எனவுமாம். நக்காங்கமர்தலும், வாளாஇரங்குதலும்-சிசுக்களின் இயல்பு. வாளா இரங்க- ஏதுவில்லாமலே (பலர்க்கும்) கருணைபுரிய என்றுமாம். நகக, நகு - பகுதி. (கககூ)

கஉ0. ஒருருத்தவழமெல்லவோருருத்தளர்ந்துசெல்ல
வோருருநிற்றல்செல்லாதொய்யெனவெழுந்துவீழ
வோருருவிருக்கப்பொய்கையோருருவுழக்கிச்சூழ
வோருருத்தாய்கண்வைகவொருவனே புரிதலுற்றான்.

(இ - ள்.) ஓர் உரு - ஒருதிருமேனி, மெல்ல தவழ - மெதுவாகத் தவழ்ந்துசெல்லவும், ஓர் உரு—,தளர்ந்து செல்ல - தளர்நடைநடக்கவும், ஓர் உரு—, நிற்றல் செல்லாது - (நிற்கத்தொடங்கி) நிற்கமாட்டாமல், ஒய்யென எழுந்து வீழ - மெதுவாக எழுந்து விழவும், ஓர் உரு—, இருக்க - வீற்றிருக்கவும், ஓர் உரு—, பொய்கை உழக்கி சூழ - அச்சரவணமடுவில் இறங்கி அதனைக்கலக்கிச் சுற்றிலும் வரவும், ஓர் உரு—, தாய்கண் வைக- தாயினிடத்தே தங்கியிருக்கவும், ஒருவனே புரிதலுற்றான் - (இங்ஙனம்) ஒருவன்தானே (பலசெய்கைகளைச்) செய்தருளினான்; (எ - று.)

மெல்லத் தளர்ந்துசெல்ல என்றும் இயைக்கலாம். தளர்ந்துசெல்லுதல் - அசைந்தசைந்து [தள்ளாடி] நடத்தல். ஒய்யென - மந்தக்குறிப்பு; விரைவுக்குறிப்பாயின், ஓர்உரு எழுந்து நிற்றல்செல்லாது ஒய்யென வீழ வென்க. இருத்தல் - உட்காருதல். தாய்கண், கண் - ஏழனுருபு. (கஉ0)

கஉக. ஆடவோருருவஞ்செங்கையறையவோருருவநின்று
பாடவோருருவநாடிப்பார்க்கவோருருவமாங்க
ணோடவோருருவமோர்பாலொளிக்கவோருருவம்யாண்டுந்
தேடவோருருவமாகச்சிவன் மகன்புரிதலுற்றான்.

(இ - ள்.) யாண்டும் தேட - (எல்லாவிடத்திலும் உயிர்க்குயிராகி அந்தரியாமியாய் எழுந்தருளியிருத்தலாலே) எங்குந் தேடாநிற்க, ஓர் உருவம் ஆகு - அத்விதீயமான ஒருவடிவமாய் எழுந்தருளியிருக்கின்ற, அச் சிவன் - அந்தப் பரமசிவனது, மகன்-குமாரனான ஆறுமுகக்கடவுள், ஓர் உருவம்—, ஆட - கூத்தாடவும், ஓர் உருவம்—, செம் கை அறைய - சிவந்த கைகளைக் கொட்டித் தாளம்போடவும், ஓர் உருவம்—, நின்று பாட - நிலைநின்று கீதம்பாடவும், ஓர் உருவம்—, நாடி பார்க்க - (இந்த ஆட்டம்முத

லியவற்றை) விருப்பத்தோடு உற்றுநோக்கவும், ஓர் உருவம்—, ஆங்கண் ஓட - அவ்விடத்து விரைந்துசெல்லவும், ஓர் உருவம்—, ஓர்பால் ஒளிக்க - ஓரிடத்திலேபுக்கு மறையவும், புரிதலுற்றான் - (இங்ஙனம் விளையாட்டுக் களைச்) செய்தான்; (எ - று.)

ஆட - திருநடனஞ்செய்ய. 'யாண்டுந்தேடவோருருவமாகு' என்பது - சிவனுக்கு அடைமொழி; மகனுக்கு அடைமொழியாகவுமாம்: சிவசொரூபமே சுப்பிரமணியசொரூபமாதலால். அச்சிவன், அ - உலகறிசுட்டு; அம்மகனெனவும் இயைக்கலாம். ஓருருவம் - ஏகமூர்த்தி; ஈற்றடிக்கு இவ்வாறுஉரையாமல், ஓருருவம்—, யாண்டும் தேட - (ஒருபாலொளித்த வுருவத்தை) எங்குந்தேட, ஆக - இவ்வாறாக, சிவன்மகன் புரிதலுற்றான் என்று உரைத்தால், இப்பாட்டில் ஏழுஉருவங்கள்உண்டாகி முன்னிரண்டுகவிகளோடு முரணுமெனக் காண்க. இனி, 'ஓடவோருருவ மோடியொளித்தவவ்வுருவந்தன்னைத், தேடவோருருவமாக' என்ற பாடம் மிகப்பொருந்துமெனவும் உணர்க. (கஉக)

கஉஉ. இத்திறமிருமூன்றானயாக்கையுங்கணமதொன்றிற்
பத்துநூறுயபேதப்படும்வகைபரமாய்நின்ற
வுத்தமகுமரன்றானெவ்வுயிர்தொறுமாடலேபோல்
வித்தகவிளையாட்டின்னமாயையால்விரைந்துசெய்தான்.

(இ - ள்.) பரம் ஆய் நின்ற - (எல்லாப்பொருள்களினும்) மேம்பட்ட பொருளாகி நின்ற, உத்தம குமரன் - (யாவரினும்) சிறந்த குமாரக்கடவுள், இத் திறம் - இவ்வாறு, இரு மூன்று ஆன யாக்கையும் - ஆறுதிருவுருவமும், கணம் அது ஒன்றில் - ஒருக்ஷணப்பொழுதினுள்ளே, பத்து நூறு ஆய பேதம் படும் வகை - ஆயிரம் வகையான பேதங்களை அடையும்படி, தான் எவ்வுயிர்தொறும் ஆடலே போல் - (பரமாத்வாகிய) தான் எல்லாச்சீவாத்மாக்களினிடத்தும் (இருந்து) புடைபெயர்தல்போல, இன்ன வித்தகம் விளையாட்டு - இத்தன்மையனவான மேன்மையான திருவிளையாடல்களை, மாயையால் - (தனது) மாயையினால், விரைந்து செய்தான் - வெகுதுரிதமாகச் செய்தருளினான்; (எ - று.)

பத்துநூறு - பண்புத்தொகை; இது, மிகப்பலவாகிய எண்ணிற்கு ஒன்று எடுத்துக்காட்டியவாறாம். பரம் - பரப்ரஹ்மம். வித்தகம் - அதிசயப்படத்தக்க என்றுமாம். இன்ன - பெயர்; பெயரெச்சமன்று, முடிக்குஞ்சொற்குப் பின் வந்ததனால். மாயை - திவ்வியசக்தி. 'பரமாய் நின்ற வுத்தம குமரன் றானெவ் வுயிர்தொறு மாடலே போல்' என்றது, சிவனுக்கும் சுப்பிரமணியனுக்கும் உள்ள அபேதத்தால். (கஉஉ)

கஉங. சிற்பரனுகிவந்தசெய்யவேளாடற்றன்மை
பற்பலதிறமுநாடிப்பங்கயத்தயனுமாலுஞ்
சொற்படுமகத்தின்றேவுமுனிவருஞ்சுரரும்யாரு
மற்புதமகிழ்ச்சிகொண்டாங்கின்னவாறறைதலுற்றார்.

(இ - ள்.) பங்கயத்து அயனும் - தாமரைமலரில்தோன்றிய பிரமனும், மாலும் - விஷ்ணுவும், சொல் படு மகத்தின் தேவும் - புகழ்பொருந்திய யாகங்களுக்குத் தலைவனான இந்திரனும், சுரரும் - மற்றைத்தேவர்களும், முனிவரும் - இருடிகளும், யாரும் - எல்லோரும், சித்பரன் ஆகி வந்த செய்ய வேள் ஆடல் தன்மை - தத்துவஞானத்துக்கு விஷயமாகின்ற மேம்பட்ட கடவுளின் வடிவமாய்த் திருவவதரித்த செந்நிறமுடையமுருகக்கட

வுளது திருவிளையாட்டுக்களின் தன்மையை, பற்பல திறமும் நாடி - பல பலவகைகளாலும் நோக்கி, அற்புதம் மகிழ்ச்சி கொண்டு - ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் அடைந்து, ஆங்கு - அப்பொழுது, இன்ன ஆறு அறைதலுற்றார் - இந்தவிதமாகச் சொல்லத்தொடங்கினார்கள்; (எ - று.)—அவை மேலிரண்டுகவிகளிற் காண்க. 'ஆடற்றன்மைப் பற்பலதிறம்' என வலிமிக்க பாடத்துக்கு, திருவிளையாட்டுத்தன்மையின் பலபலவிதங்களையும் ஆராய்ந்து என்க. 'பங்கயத் தவனும்' என்றும், 'அற்புத நிகழக் கண்டாங்கு' என்றும் பாடமுண்டு. (கஉங)

கஉச. சேயிவனொருவனேபல்சிறாருருக்கொண்டுநம்மு
னேயெனுமளவைதன்னிலெண்ணில்பேதத்தனாகு
மாயினிக்குமரனாடலறிவரிதெமக்குமெல்லா
மாயமுமியற்றவல்லன்வரம்பிலாவறிவன்மாதோ.

இதுவும், மேற்கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்.) சேய் இவன் ஒருவனே - இந்தக் குமாரசுவாமி ஒருத்தன்தானே; பல் சிறார் உரு கொண்டு - பல சிறுமக்களின் வடிவத்தை எடுத்து, நம் முன் - நமது எதிரில், ஏ எனும் அளவை தன்னில் - மிகவிரைவில், எண் இல் பேதத்தன் ஆகும் - அளவிறந்த பேதங்களை யுடையவனானவன்; ஆயின் - இவ்வாறானால் [இவ்வாறாதலாலென்றபடி], இக் குமரன் ஆடல் - இம்மைந்தனது திருவிளையாட்டு, எமக்கும் அறிவு அரிது - (விசேஷஞானமுடைய) நமக்கும் அறிதற்குஅரியதாம்; (இக் குமாரன்), எல்லா மாயமும் இயற்றவல்லன் - எல்லாவகைமாயைகளையுஞ் செய்தருளவல்லவன்; வரம்பு இலா அறிவன் - எல்லையில்லாத உணர்வையுடையவன்; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை.

ஏயெனுமளவைதன்னில் - ஏயென்றுசொல்லுதற்குள்: ஏயெனல்-விரைவுக்குறிப்பாம்; "ஏயெனப் பூதமொன் றெழுந்த தேந்தியே" எனக் கம்பராமாயணத்திலுங் காண்க. எமக்கும், உம் - உயர்வுசிறப்பு. (கஉச)

கஉரு. கைப்பயில்குழவிபோலக்காட்டியகடவுள்செய்யு
மிப்பெருமாயைபோலயாவரும்புரிதறேற்றார்
செப்பியென்வேறியாமுஞ்செய்ததொன்றில்லையன்னா
னொப்பறுபரனேயாமென்றுரைசெய்துதொழுதுநின்றார்.

(இ - ள்.) கை பயில் குழவி போல - (யாவர்)கையிலும் பழகுகின்ற இளங்குழந்தையைப் போல, காட்டிய - தன்னைக் காண்பித்த, கடவுள் - சண்முகக்கடவுள், செய்யும் - செய்தருளுகிற, இப் பெரு மாயை போல - இந்தப்பெரிய மாயையைப்போல, (ஒருமாயையை), யாவரும் புரிதல் தேற்றார் - எவருஞ் செய்யஅறியார்; வேறு செப்பி என் - வெவ்வேறாக(ப்பலவார்த்தைகளைச்) சொல்லியதனால் என்னபயன்? யாமும் செய்தது ஒன்று இல்லை - (வல்லவர்களாகிய) நாமும்(இதுபோலச்)செய்ததொருமாயை இல்லை; (ஆதலால்), அன்னான் - அவ்வாறுமுகமூர்த்தி, ஒப்பு அறு பரனே ஆம் - உவமையில்லாத பரமசிவனது உருவமேயாவன், என்று உரைசெய்து - என்றுசொல்லி, தொழுது நின்றார் - (அக்குமாரனைப் பிரமன்முதலியோர்)வணங்கி நின்றார்கள்; (எ - று.)

கைப்பயில்குழவி - சிறுமைபொருந்திய குழந்தையுமாம். யாமும், உம்மை - சிறப்பு. பரன் - பரப்ரஹ்மஸ்வரூபி; முழுமுதற்கடவுள். 'அன்னான்' என்றவிடத்து 'அன்றே'எனவும்பாடமுண்டு; வியப்புச்சொல். (கஉரு)

௧௨௬. அழலெனுமீனவர்க்கத்தறுவருங்குமரனுடன்
முழுவதுநோக்கிநோக்கிமுதிருமற்புதஞ்சீரெய்திக்
குழவிகளென்றேயுள்ளங்கோடல்விட்டகலாதஞ்சி
வழிபடுகடவுளோரிற்போற்றினர்மனங்கொளன்பால்.

(இ - ள்.) அழல் எனும் மீனம் வர்க்கத்து அறுவரும் - அங்கியென்னும்ஒருபெயரையுடைய கிருத்திகாநக்ஷத்திரத்தின் இனமாகிய ஆறுமகளிரும், குமரன் ஆடல் முழுவதும் நோக்கி நோக்கி - குமாரனது திருவிளையாடலனைத்தையும் நன்றாகப்பார்த்து, முதிரும் அற்புதம் சீர் எய்தி - மிகுந்த ஆச்சரியத்தின்தன்மையை அடைந்து, (அத்திருவுருவங்களை), குழவிகள் என்றே உள்ளம் கோடல் விட்டு - குழந்தைகளென்று மனத்திலெண்ணும் எண்ணத்தை முழுவதும் ஒழித்து, அகலாது - சிறிதும் விட்டுநீங்காமல், அஞ்சி - அச்சத்துடனே, வழிபடு கடவுளோரின் - (தாம்தாம்) பூசித்தற்குரிய குலதெய்வங்களை (அவரவர் உபசரித்தல்) போல, மனம் கொள் அன்பால் - மனத்திலேநிரம்பிய அன்பினோடு, போற்றினர் - உபசரித்தார்கள்; (எ - று.)

'அழல்படுமீனம்' என்னும்பாடத்திற்கு - அக்கினிபிறந்தநாளாகிய கிருத்திகையென்க. அங்கியைத்தெய்வமாகவுடையநக்ஷத்திரமென்பாருமுளர். மீனம் - விண்மீன். சீர் - பண்படி. (௧௨௬)

௧௨௭. அம்புயமுறழுஞ்செங்கேழறுமுகம்படைத்தகோல
நம்பிதன்வரவுதன்னைநவின்றனமினிமேலங்க [வேள்
ணெம்பெருமுதல்விதன்பாலிலக்கத்தொன்பதின்மர்செவ்
தம்பியராகிவந்ததன்மையைவிளம்பலுற்றாம்.

(இ - ள்.) அம்புயம் உறழும் செம் கேழ் - செந்தாமரைமலரையொத்த சிவந்ததிருமேனிநிறத்தையுடைய, அறுமுகம் படைத்த - ஆறுதிருமுகங்களைப் பெற்ற, கோலம் நம்பிதன் - அழகிய முருகக்கடவுளுடைய, வரவு தன்னை - திருவவதாரத்தை, நவின்றனம்-(கீழ் இப்படலத்திற்) சொன்னோம்; இனிமேல்—, அங்கண் - அவ்விடத்து [திருக்கைலாசத்தில்], எம் பெருமுதல்விதன்பால் - நமது சிறந்ததலைவியாகிய உமாதேவியாரிடத்து, இலக்கத்து ஒன்பதின்மர் - லக்ஷத்தொன்பதுவீரர்கள், செவ்வேள் தம்பியர் ஆகி - செந்நிறமுடைய குமாரக்கடவுளுக்குத் திருத்தம்பிமார்களாய், வந்த - தோன்றின, தன்மையை - வரலாற்றை, விளம்பலுற்றாம் - சொல்லத்தொடங்கினோம்; (எ - று.)

அதனை மேல் துணைவர்வருபடலத்திற் கூறுவர்; "ஓதிதுகின்றிட முன்னரெழுந்தே யோடியசங்கரிபின்புதிரும்பிச், சோதியிடத்திலடைந்திமையங்கல் சுமக்கிடுகின்றசிலம்பணிமேவக், கோதில்சிலம்புதுடைந்திடுமுன் வீழ் கொண்டநவமாமணியன்னவள்சாயை, பேய்தலுமொன்பதுமங்கையராகி யெந்தைவிழித்திட வின்பொடுவந்தார்; வித்தகமங்கையரெம்பெருமானை விருப்பொடுகண்டுகருப்பமதாகச், சத்தினைந்துகருப்பயவாதே தாங்குமி னென்றிடவேகினராங்கே, மெத்தியமேனிவியர்ப்பிலிலக்க வீரருதித்தன ராரியைசொல்லா, லுத்தமமாதர்கள்பின்பொருநாளிலொன்பதின்மைந்தரையன்பொடுதந்தார்; மாசறுமன்னவர்தம்பெயர்வீரவாகுவெனுந்திருவள்ளல்வலிக்கைக, சேவனும்பர்புகழ்ந்திடுவீரகேசரிவீரமகேந்திரனென்போன், வீசுபுகழ்ப்பெறுவீரமகேசன்வீரபுரந்தரன்வீரவரக்க, னேசறுவீரதிவாகரன்வீராந்தகன்வீரமகேந்திரதீரன்" என்னுங் கந்தபுராணச்சுருக்கத்தா லுணர்க.

நம்பி - பெருமையிற்சிறந்தவன்; ஆண்பாற் சிறப்புப்பெயர்: இதன் பெண்பால், நங்கை. இனி, இதற்கு - யாவராலும் நம்பிச்சரணமடையத் தக்கவனென்றும், நமக்குஇன்றெனென்னும்பொருள்பட வருவதோருயர்ச்சிச்சொல் லென்றும், எல்லாநற்குணங்களாலும் பூர்ணனென்றும் பலவகையாகப் பொருளுரைப்பர். அங்கண் - அப்பொழுது என்றுமாம்; அம் கண் எனப்பிரித்து, அழகியதிருக்கண்களையுடைய எம்பெருமுதல்வியென்னவுமாம். இலக்கம் - வடசொற்சிதைவு.

ஆதிசிருஷ்டிகாலத்திற் பரமசிவத்தின்இதயத்திலே தோன்றிநின்றவராகிய சுப்பிரமணியச்சுவாமி இப்பொழுது இங்கே இவ்வனம் அறுமுகக்கடவுளாய் அவதரித்தருளின ரென அறிக.

இக்குமாரோற்பத்திவிஷயத்தில் இந்நூலுக்கும் பிறநூல்களுக்கும் உள்ள மாறுபாட்டைக் கல்பபேதத்தாற் சமாதானஞ் செய்துகொள்க; "ஏதி லாக்கற்ப மெண்ணில சென்றன, வாத லாலிக் கதையு மனந்தமாம், பேத மாகுமப் பேதத்தி னுள்விரித்,தோதி காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்" என இந்நூலின் அவையடக்கத்துக் கூறியவாறுங் காண்க: வடமொழிவியாசபாரதத்திலும் இவ்வாறுகூறப்பட்டுள்ளதை உணர்க.

இவ்விறுதிச்செய்யுள், கவிக்கூற்று; இதில் மேற்படலத்துக்குத் தோற்றுவாய்செய்தார். (கஉஎ)

திருவவதாரப்படலம் முற்றிற்று.

பிரகடனம்.

இதனடியிற்குறித்திருக்கும் புத்தகங்களை வேண்டியவர்கள்,(சென்னை இராஜதானி வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர்) பு - மா - ஸ்ரீநிவாஸாசாரியரிடத்திலும், திருவல்லிக்கேணி தென்னண்டைமாடவீதி ௩ - வது கதவிலக்கமுள்ள கிருகத்தில் (சென்னைச் சர்ச் ஆப் ஸ்காட்லண்ட் மிஷன் காலெஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர்) வை - மு - சடகோபராமாநுஜாசாரியரிடத்திலும் வாங்கிக்கொள்ளலாம்.

	ரூ.	அ.
அபயப்ரதாநஸாரம் (ஸ்ரீ வால்மீகிராமாயணம் யுத்த காண்டத்தில் விபீஷணாபயப்ரதாநஸர்க்கங்களுக்குவியாக்கியானமாகப் பெரியவாச்சான்பிள்ளை ஸம்ஸ்கிருதமுந் தமிழுங் கலந்த மணிப்பிரவாளநடையில் சுலபமாக அருளிச்செய்தது.) இது, ஸ்ரீ ராமாயண காலக்ஷேபஞ் செய்வதற்கு உரியவர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கி வாசிக்கத்தக்கது.	௦	௮
திருவரங்கக்கலம்பகம் மூலமும் உரையும்	௦	௮
அழகர்கலம்பகம் மூலமும் உரையும்	௦	௮
மதுரைக்கலம்பகம் மூலமும் உரையும்	௦	௮
திருவேங்கடக்கலம்பகம் மூலமும் உரையும்	௧	௦
திருக்குருவைப்பதிற்றுப்பத்தந்தாதி மூலமும் உரையும் ...	௦	௬
திருக்குருவைவெண்பாவந்தாதி மூலமும் உரையும் ...	௦	௪
சீவகசிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் மூலமும், நச்சினார்க்கினியருரையைத்தழுவிய உரையும்	௦	௬
சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் மூலமும் உரையும்...	௧	௮

கம்பர்.

ஸ்ரீராமபிரானது திருக்கதையைத் தமிழிற் பெருங்காப்பியமாகப் பாடியவர், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர். இவர், சோழநாட்டிலே திருவழுந்தூரில் நான்காம்வருணத்திற் பிறந்தவர். இவரது சமயம் வைஷ்ணவமே. இவர், இளமையிலேயே தந்தை இறந்ததனால், போஷகரில்லாமல் தாயுடனே திருவெண்ணெய்நல்லூரில் சடையப்பமுதலியாரென்பவரிடம் போய்ச்சேர்ந்து, அவரால் ஆதரிக்கப்பெற்று, அவர்வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடசாலைக்குப் புத்தகமெடுத்துக்கொண்டு போகின்றவராய் அவர்களுடனே படித்துவந்தனர். இவருக்கு ஸரஸ்வதீகடாக்ஷமும், கம்பரென்னும் பெயரும் உண்டானதைப்பற்றி ஓர்கதை உண்டு. இவர் அங்ஙனம் பள்ளியிற்படித்துவருநாளில், அவ்வுபாத்தியாயர், தமக்கு வைரபுரமென்னுங் கிராமத்திலுள்ள கம்பங்கொல்லை இனக்கொல்லைகளைக் காப்பதற்காகத் தம்மிடத்திற்படிக்கும் பிள்ளைகளைத் தினம் ஒவ்வொருவராக அனுப்பும் முறைப்படி ஒருநாள் இப்பிள்ளையை அனுப்ப, இவரும் அன்று காலைதொடங்கிக் கொல்லையிற் காத்துவந்து, நல்ல வெயிலில் நித்திரைவந்ததனால் அக்கொல்லையினருகிலிருந்தகாளிகோயிலிற் போய்ப் படுத்துத் தூங்கினார். தூங்குகையிற் கொல்லையில் ஒருகுதிரை வந்து மேய்வதாகக் கனாக்கண்டு எழுந்துபார்க்க, கனவிற் கண்டபடியே பயிரை அவ்வூராள்வோனாகிய காளிங்கராயனது குதிரை மேயக் கண்டு, அதனைத் துரத்தியும் அதுபோகாமையால் அஞ்சி நடுங்கிக் காளிகோயிலுக்கெதிரே போய் நின்று புலம்பினார். அதுகண்டு காளி கருணைகூர்ந்து பிரசன்னையாகி, 'பிள்ளாய்! அழாதே; உன்நாவை நீட்டு' என்றாள். இவர் அங்ஙனமே நீட்ட, தேவி அதிற் பீஜாக்ஷரத்தை எழுதி அனுக்கிரகித்தனள். பின் அவர் திரும்பிச்சென்று கொல்லையிற்போய்ப்பார்க்க, குதிரை அப்புறம்போகாது அங்கேயே மேய்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது காளிகாதேவியின்அனுக்கிரகத்தால் ஸரஸ்வதீகடாக்ஷம்பெற்ற இவரது வாக்கினின்றும், அதுகண்ட கோபத்தால், தற்செயலாக, "வாய்த்த வயிரபுர மாகாளி யம்மேகேள், காய்த்த தினைப்புனத்துக் காலை வைத்து—சாய்த்துக், கதிரைமா ளத்தின்ற காளிங்க ராயன், குதிரைமா ளக்கொண்டு போ" என்று ஒருகவி உண்டாயிற்று. அங்ஙனம் இவர் பாடியவுடனே அக்குதிரை கீழேவிழுந்து இறந்தது. அதனைக்கேட்டறிந்த உபாத்தியாயர் ஓடிவந்து பார்த்து அதிகாரியின்கோபத்திற்கு ஆளாவோமேயென்று கலக்கமுற, இவர் முன்பாடியவெண்பாவின்நான்காமடியை "குதிரைமீளக்கொண்டு வா" என்று திருப்பிப்பாட, மாண்டகுதிரை மீண்டெழுந்தது. காளிங்கராயன் இதனைக் கேள்வியுற்று அக்காலத்தில் அரசுசெலுத்திவந்த குலோத்துங்கனென்னுஞ் சோழனுக்கு அறிவிக்க, அவன் அச்சிறுவனைத் தான் பார்க்கவேண்டுமென்று வரவழைத்தனன். அங்ஙனமே இவர் கோலுங் கையுமாய்ப் போயிருக்க, அவன், இக்கம்பனே [கோலைக் கம்பென்பது வழக்கு] அங்ஙனஞ்செய்தவனென்றனன். இதனாலும் கம்பங்கொல்லையைக் காத்ததனாலும் இவருக்குக் கம்பர் என்று பெயராயிற்று. இதற்கு வேறுசில காரணமுங் கூறுவர். இவர் பின்பு சோழராஜனது ஸம்ஸ்தான வித்வான்களுக்குத் தலைவராகி இராஜசபைக்கு நாள்தோறுஞ் சென்று, சமயோசிதமாகவுஞ் சாதுரியமாகவும் பலகவிகள்பாடிப் பிரசங்கிக்கத் தலைப்பட்டு, "புவிச்சக்ர வர்த்திகள் போற்றிப் பழிச்சுங், கவிச்சக்ர வர்த்தியாங் கம்பர்" என்னும் பிருது கூறப் புலமை செலுத்திவந்தனர். இவருக்கு அம்பிகாபதியென்றுஒருமகன்பிறந்து, அவனுந் தந்தையைப்போலச்சிறந்தவித்துவானாகி இவரோடு ராஜசபைக்கு நாடோறும் போய்ப் பெருமைபெற்று வந்தனன்.

கம்பர் இவ்விராமாயணம் பாடியது, சடையப்ப முதலியாரது பெருமுயற்சியால். அவர் கம்பரது புலமைத்திறம் விளங்குமாறு இவரை எதா

வது ஒருபிரபந்தம்பாடும்படி செய்யவேண்டுமென்று அரசனுக்கு அறிவிக்க, அரசன், தனியே ஒருவரைப் பாடச்செய்தலினும் இருவரை ஒருசேரப்பாடும்படிசெய்தாற் புலமைத்திறம் நன்றாகவிளங்கு மென நினைந்து, கம்பர் ஒட்டக்கூத்தர் இருவரையும் ஸ்ரீராமசரித்திரத்தைத்தமிழ்ப்பாவினாற் பாடி முடிக்கவேண்டு மெனக் கட்டளையிட்டனன். கட்டளையிட்ட பின்னரும் கம்பர் பலநாள் பாடாமலிருந்த, ஒட்டக்கூத்தர் சுந்தரகாண்டம்வரையிற் பாடி முடித்து யுத்தகாண்டம் பாடிக்கொண்டிருக்கையில், மறுபடி அரசனால் ஏவப்பட்டு, இவ்விராமாயணம் பாடினார். பாடுகையிற் பிரதிதினம் இராப்பொழுதெல்லாம் வடமொழிப்புலவர்களை வைத்துக்கொண்டு வால்மீகம், ஆத்யாத்மம், போதாயநம் முதலிய இராமாயணங்களையும், பல புராணங்களையும் ஆராய்ச்சிசெய்து, பகற்பொழுதில் நாளொன்றுக்கு எழுநூறுபாடல் விழுக்காடு யுத்தகாண்டம்வரையில் ஆறுகாண்டமும் பதினாயிரத்துச்சில்லறைபாடல்களாற் பதினைந்துநாளையிற் பாடிமுடித்தனர். அங்ஙனமிருக்கையில் ஒருநாள் கம்பர், ஒட்டக்கூத்தர்வீட்டுவாயிலின்வழியே போகையில், அவர் தாஞ்செய்தஇராமாயணங் கம்பராமாயணத்திற்குமுன் தலையெடாதென அறிந்து அதனைக் கிழித்தெறிந்துகொண்டிருக்கக் கண்டு, அவ்விடஞ்சென்று, அதற்குள் யுத்தகாண்டம் வரையிற் கிழிபட்டுப்போகவே, மிகுந்த உத்தரகாண்டத்தை அப்படியே கிழியாது வைத்திருக்க வேண்டிக்கொண்டார்; அதுவே கம்பராமாயணத்துக்கு ஏழாவதுகாண்டமாக வழங்கலாயிற்று. கம்பர் முன் ஒருகால் 'இவரை நாம் வைக்கவேண்டிய இடத்தில் மேலாகவைப்போம்' எனக் கூறியிருந்தபடி, தம்மை ஆதரித்த சடையப்பமுதலியாரை இவ்விராமாயணத்தில் அங்கங்கே சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார். பின்னர் இவ்விராமாயணம், திருவரங்கம்பெரியகோயிலில் மேட்டழகியசிங்கர் சிரக்கம்பஞ் செய்யுமாறு அரங்கேற்றப்பட்டது. அங்ஙனம் அரங்கேற்றிய காலம்முதலியன அடியில்வருஞ்செய்யுளால் இனிது விளங்கும்.

"எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே."

இவ்விராமாயணத்தின் காண்டமுதலியவற்றின் தொகையை அடியில் வருஞ் செய்யுளால் அறிக.

"கரைசெறி காண்ட மேழு கதைகளா யிரத்தெண் ணூறு
பரவுறு சமாம் பத்துப் படல நாற் றிருபத் தெட்டே
யுரைசெயும் விருத்தம் பன்னீ ராயிரத் தொருபத் தாறு
வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் தொண்ணூற் றாறே."

கம்பர், ஆயிரம்வருஷங்களுக்கு முன் இருந்தவர். இவர்செய்த வேறு நூல்கள் - ஆழ்வார்நூற்றந்தாதி யென வழங்குகின்ற சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கைவழக்கம், ஸரஸ்வதியந்தாதி முதலியன. இவர்காலத்து இருந்த வித்வான்கள்-புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவை முதலியோர். இவர்சரித்திரத்தையும், அரங்கேற்றிய விவாதத்தையும் விநோதரசமஞ்சரி முதலிய நூல்களிற் பார்க்கக் காணலாம்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான் விருத்த மென்னு, மொண்பாவி லுயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தன், கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம், பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொ ணாதே."

ஸ்ரீ

கம்பராமாயணம்.

கம்பர் செய்த ராமாயணமென்பது, இதன் பொருள். 'ராமாயணம்' என்பது, முதலில் வால்மீகி முனிவர் செய்த நூலுக்கு இயற்பெயராய், அதன்வழிநூலாதலால் "முதனூல் கருத்த னளவு மிகுதி, பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்,இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே" என்னுஞ் சூத்திரவிதிப்படி இத்தமிழ்நூலுக்கும் பெயராயிற்று. ராமாயணம் என்பது; ராம + அயந என்று இரண்டுமொழி சேர்ந்தது; இது நூற்பெயராதலால், வடநூல்விதிப்படி 'ராமாயணம்' என நகரம் ணகரமாயிற்று. 'தன் திறத்தில் யாவரும் மனங்களித்திருக்கப் பெற்றவன்' என்பது, 'ராம' என்னுஞ்சொல்லுக்குப்பொருள்; சகலசற்குணங்களும்பொருந்தினவனென்பது கருத்து. 'அயநம்' - அடைய அல்லது அறியக் கருவியாயுள்ளது. ஆகவே, இராமனை அடைய அல்லது அறியக் கருவியாயுள்ள நூல் என்பதாம்; இராமனுடைய குணதிவ்யவைபவங்களைத் தெரிவிக்கும் நூல் என்பது, இரண்டபொருள். அயநம் - ஸ்தாநம், விஷயம் எனப் பொருள்கொண்டு, இராமனை விஷயமாகவுடைய நூலெனக் கூறுதலும் ஒன்று. "ஸீதாயாஶ் சரிதம்மஹத்" என்று சிறையிருந்தவளேற்றஞ் சொல்லும் பிரபந்தமாகையாலே, ராமாயணமென்பதற்கு-ராமா அயநம் எனப் பிரித்து, சீதையை அறிவிக்கும் பிரபந்தமெனவுஞ் சிலர் பொருள் உரைத்திருக்கின்றனர்.

இப்பொருட்டொடர்நிலைச்செய்யுளைக் கம்பர் செய்கின்ற காலத்திற்கு நூல் தொல்காப்பியமாதலாலும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பிய இலக்கணத்தன அன்மையாலும், அந்நூலிற்கூறியஇலக்கணமே இதற்கு இலக்கணமென்றுணர்க. அந்நூலிற்செய்யுளியலில் ஆசிரியர் பா நான்கென்றும், அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுகவென்றுங் கூறி, பின்பு அம்மை முதலிய எட்டுந் தொடர்நிலைச்செய்யுட்கு இலக்கணமென்று கூறுகின்றவிடத்து "இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந், தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" என்னுஞ் சூத்திரத்தால், 'அறம் பொருள் இன்பம் வீடு என்னும் விழுமியபொருள் பயப்பப் பழையதோர் கதைமேற் கூறின் அது தோல்' என்று கூறினமையின், இப்பெருங்காப்பியம் * அங்ஙனங் கூறிய தோலா மென்று உணர்க.

---

* முந்துநூல்களிற் காப்பியமென்னும் வடமொழியால் தொடர்நிலைச் செய்யுட்குப் பெயரில்லையாயினும், ஆசிரியர் தொல்காப்பியனார்,"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்றதில் 'ஆகும்மே' என்ற இலேசினால் உய்த்துணர்தற்பாலதனை, மாணாக்கன் ஐயந்தீர்தற்கன்றே, பின்னும் "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" என்பாராயினரெனக் கொள்க; அன்றியும், பெரியதனைப் பெருங்காப்பியமென்றே கூறல் வேண்டுதலாலும், உதயணன்கதை, சிந்தாமணி, மணிமேகலை முதலிய சான்றோர்செய்யுளுள்ளும் காப்பியமென்னும் பதம் பிரயோகிக்கப்பட்டு உள்ளதனாலும், சொற்றொடர் பொருட்டொடர்நிலையென்னுஞ்செய்யுட்குக் காப்பியமென்று பெயர்கூறுதலும ஆசிரியர்கருத்தென்க.

இப்பெருங்காப்பியத்தில் பிரதானமான ஸ்ரீராம சரித்திரத்தினாலும், அதைத்தொடர்ந்த வாலி சுக்கிரீவாதியர் சரித்திரங்களாலும் - ஆசாரமும், சத்தியமும், தருமமும், கருணையும், வீரமும், கற்புநிலையும், உடன்பிறந்தோரொற்றுமையும, பழியச்சமும், அதருமத்தின்விளைவும், இழிஜனரியற்கையும் ஆகிய இவை முதலான சாமானிய தருமங்களும், ஸ்ரீராமபிரான் சகலகலியாணகுணபரிபூர்ணமான பரதத்துவ மென்பதும், அவரைச்சரணமடைவதே ஸகலாபீஷ்டங்களையும் பெறும் உபாய மென்பதும, அடியார்கள் ஆசரிக்கவேண்டிய கைங்கரியமுதலானவற்றின் முறைகளும் ஆகிய இவை முதலான விசேஷதருமங்களுஞ் செம்பொருளாகவுங் கருத்துப்பொருளாகவுங் காட்டப்பட்டிருக்கின்றன.

[இவற்றுள், ஸ்ரீராமபிரான்பரதத்துவமென்பது, "நீதியாய்முனிந்திடேனீயிங்கியாவர்க்கு, மாதியா னறிந்தனெ னல்லக னேமியாய், வேதியா விறுவதேயன்றி வெண்மதிப், பாதியான்பிடித்தவில் பற்றப்போதுமோ," "பொன்னுடை வனைகழற் பொலங்கொள் தாளினாய், மின்னுடை நேமியா னாதல் மெய்ம்மையா, லென்னுள துலகினுக் கிடுக்கண்யான்தந்த, உன்னுடைவில்லுமுன் னூரத்துக்கிடன்றால்," "எண்ணியபொருளெலா மினிதுமுற்றுக, மண்ணியமணிநிறவண்ணவண்டுழாய்க், கண்ணியயாவர்க்குங்களைகணாகிய, புண்ணியவிடை" என ஸ்ரீபரசுராமனாலும்; ராவணவதத்திற்கப்பால் பெருமாள் பிராட்டியைத் தீக்குளிக்கத் திருவுள்ளம்பற்றிய காலத்து "மன்னர்தொல்குலத்தவரினத்துளைபொருமனித, னென்னவுன்னலை யுன்னைநீ யிராமகேளிதனைச், சொன்னநான்மறைத்துணிவினிற்றுணிந்தமெய்த்துணிவு, நின்னலை இல்லை நின்னின்வே றுளதில நெடியோய்" என்று தொடங்கி "ஓங்காரப்பொருள்தேருவோர் தாமுன்னையுணர்வோ, ரோங்காரப்பொருளென்றுணர்ந்திருவினையுகுப்போ, ரோங்காரப்பொருளாமன்றென் றூழிசென்றாலு, மோங்காரப்பொருளேபொரு ளென்கிலாவுரவோர்" எனப் பிரமதேவனாலும்; "உன்னைநீயொன்று முணர்கிலைபோலுமா லுரவோய், முன்னையாதியாமூர்த்திமூவகையுலகி,னன்னைசீதையாமாதுநின்மார்பின்வந்தமைந்தாள்" என்று உருத்திர மூர்த்தியாலும் வெளியிடப்பட்டது. இனி, திருச்சித்திரகூடத்திருக்கச்செய்தே சீதாபிராட்டியாரின் திருமுலைத்தடத்தைத் தீண்டிய காகாசுரனை முனிந்து, பெருமாள், ஆயல்கல்லெழுபுல்லால் வேகவெம்படைவிட, அஞ்சி நடுங்கி அயன்பதி முதலிய அண்மி எங்கு மிடம்பெறாதே, எறிகடல்வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவையாய், "ஜயநின்சரணஞ் சரண்" என்று அவன் அஞ்சி வையம்வந்து வணங்கிட, பெருமாள், திருவுள்ளமுவந்து, பிராட்டி திறத்திலே தீரக்கழிய அபராதத்தைப் பண்ணின அந்தக்காகாசுரனைக் கடாக்ஷித்து "முந்துநின்குறையும் பொறைதந்தனம்" என்கையாலும்; கடற்கரையில் ஸ்ரீவிபீஷணாழ்வான் "கொற்றவ சரண்" எனக் கூவிச் சரணாதிபண்ண, "வெற்றியேபெறுகதோற்கவீகவீயாதுவாழ்க, பற்றுத லன்றி யுண்டோ புகலமைப்பகர்கின்றானை" என்று அவர்க்கு அபயப்பிரதானஞ் செய்கையாலும்; வேதோபப்ரும்ஹணமான ஸ்ரீராமாயணம் சரணாகதிவேத மென்பதும், ஸ்ரீராமபிரானே சரணாகதரக்ஷகனென்பதும் பெறப்படுமாறு அறிக.]

இவ்விராமாயணம், அந்தந்தப் பாகத்தின் சரித்திரத்தின் முக்கியமான விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களால் - பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் எனப் பெயர்பெற்ற ஏழுகாண்டங்கள் அடங்கியுள்ளது. அவற்றுள்,

முதலாவது

பாலகாண்டம்.

கதாநாயகனாகிய ஸ்ரீராமபிரானுடையவும் அவரது திருத்தம்பிமார் மூவருடையவும் இளம்பிராயத்தில் நடந்த சரித்திரத்தை உணர்த்தும் பாகம். காண்டம் - கூட்டம்; அது - இங்கு, சரித்திரத்தின் ஒருபாகத்தை உணர்த்துஞ் செய்யுட்களின் கூட்டமென்று சிறப்பாகக்கொள்ளத்தக்கது.

[இக்காண்டத்தில், வக்ஷ்யமாண தர்மாநுஷ்டாநோபயோகமாக, ராமாயணபுருஷர்களுக்கு மஹாகுலப்ரஸூதத்வம், மஹாகுருக்ருபாலப்த தநுர்வேதரஹஸ்யத்வம், தத்ஸம்வாதபூத தாடகாதாடகேயாதிநிரஸநம், ஹரதநுர்ப்பங்கம், வைஷ்ணவதநுஷ்பரிக்ரஹம்முதலிய குணங்களும், தர்மபத்நீயோகமும் ஸவிஸ்தாரமாகக் கூறப்படுகின்றன; இனி, பரப்ரஹ்மத்தினது ஜகத்காரணத்வம், மஹாபுருஷத்வம், அசிந்த்யவைபவத்வம், ஸர்வஸ்மாத்பரத்வம் முதலிய திருக்கல்யாணகுணங்களும், லக்ஷ்மீயோகமுங் கூறப்படுகின்றன என்றுஞ் சொல்வர்: இன்னும் இம் *மகாகாவ்யத்தினுள்ள ரஹஸ்யங்களை இங்கு விரிப்பிற் பெருகும்; அவற்றை வால்மீகமுணர்ந்த வைதிகர்வாய்க் கேட்டு உணர்க.]

எட்டாவது

வேள்விப்படலம்.

இதற்கு - (விசுவாமித்திரமகாமுனிவராற் செய்யப்படுவதும் ஸ்ரீராமலக்ஷ்மணர்களாற் காக்கப்படுவதுமாகிய) யாகத்தினது வரலாற்றை உணர்த்தும் பாகமென்று பொருள். வேள்வி - தொழிற்பெயர்: நெருப்பில் நெய்முதலிய தேவருணவுகளை [அவிசை]ஓமஞ்செய்தல் என்று பொருள்; வேள்-பகுதி, வி - தொழிற்பெயர்விகுதி: இது, ஆகுபெயராய், ஓமஞ்செய்தலையுடைய யாகத்தைக் குறித்தது. வேள்வியைப்பற்றிய படலம் என விரித்தால், இரண்டனுருபும் பொருளும் உடன்தொக்க தொகையும்; வேள்வியினது படலம் என விரித்தால், விஷயமாகவுடைமையாகிய சம்பந்தப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத்தொகையுமாம். படலமென்னும்வடசொல்லுக்கும் கூட்டமென்று பொருள்; ஆயினும், அது - சங்கேதத்தால், ஒரு பெரிய வகுப்பினுட்பட்ட சிறிய பாகத்தைக் குறிக்கும்.

இந்தப் படலத்திக்கு முன்கதைத்தொடர்ச்சிச்சுருக்கம் வருமாறு:— முன்ஒருகாலத்தில்தேவர்களெல்லோரும் ராவணன்முதலியராக்ஷசர்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஸ்ரீமகாவிஷ்ணுவைச் சரணமடைந்து துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ்செய்தருளுமாறு வேண்டினார்கள். சகலகுணகணபரிபூர்ணரான அத்திருமால் அவ்வேண்டுகோளுக்கு இரங்கி லோ

---

* மகா காவ்யத்தின் இலக்கணத்தை "பெருங்காப்பியநிலை பேசுங்காலை, வாழ்த்து வணக்கம் வருபொருளிவற்றினொன், றேற்புடைத் தாகி முன்வர வியன்று, நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித், தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்,மலைகட னாடு வளநகர் பருவ, மிருசுடர்த் தோற்ற மினையன புனைந்து, நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல், பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்,தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல், புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென், றின்னன புனைந்த நன்னடைத் தாகி, மந்திரந் தூது செலவிகல் வென்றி, சந்தியில் தொடர்ந்து சருக்க மிலம்பகம், பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி, நெருங்கிய சுவையும் பாவ [ஙாவ] மும் விரும்பக், கற்றோர் புனையும் பெற்றிய தென்ப" இச்சூத்திரத்தால் அறிக.

கஸம்ரக்ஷணார்த்தமாகத் தன் அம்சத்லைதக்கொண்டு நான்குருபமாகத் தச
ரதமகாராஜனிடத்தில் அவதரிப்பதாக அருளிச்செய்தார். இதுநிற்க,இப்பர
தகண்டத்தில் கோசலதேசத்திலேசரயூநதிக்கரையில்அயோத்தியாநகரத்
திலே சூரியகுலத்தில் உதித்துச் செங்கோலைசலுத்திய தசரதசக்கரவர்த்
தியானவர், தமக்கு அனேகமாயிரமாண்டுகள் கழிந்தும் பலமனைவிமார்க
ளிருந்தும் புத்திரபாக்கியம் இல்லாமையினாலே மிகமனம்வருந்திக் குல
குருவாகிய வசிஷ்டமகாமுனிவரிடந் தமதுகுறையைக்கூறி, அம்முனிவ
ரதுகட்டளையின்படியே ரிசியசிருங்கமுனிவரரை அழைத்துவந்து, அவரைக்
கொண்டு அசுவமேதயாகமும் புத்திரகாமேஷ்டியுஞ் செய்வித்தார். அவ்
யாகத்தின்பயனாகச் சக்கரவர்த்தியின்பிரதானதருமபத்தினிமார் மூவருள்
கௌசல்யாதேவியினிடம் ஸ்ரீராமனும், கைகேயியினிடம் பரதனும், சுமித்தி
ரையினிடம் இரட்டையராய் லக்ஷ்மணசத்துருக்கினர்களுந்திருவவதாரஞ்
செய்தார்கள். இவர்களில் பெரியபெருமாள், நேரான பகவானுடைய அவ
தாரம். இளையபெருமாள், ஆதிசேஷாவதாரம். பரதாழ்வானும், சத்துருக்
னாழ்வானும், சுதரிசன பாஞ்சசன்னிய மென்னுந் திருமாலின் சக்கர சங்
கங்களின் அவதாரம். ஆனாலும், லக்ஷ்மணாதியரிடத்திலும் பகவானுடைய
அம்சம் இருந்தது. இத்திருக்குமாரர் நால்வருக்கும சக்கரவர்த்தி சௌ
ளம் உபநயனம் முதலியன உரியகாலத்திற் செய்வித்துத் தநுர்வேதம்முத
லிய சகலகலைகளையுங் கற்பித்து மகிழ்ந்து சிங்காதனத்தில் வீற்றிருக்கை
யில் ஒருநாள் விசுவாமித்திரமாமுனிவர் எழுந்தருளி 'யான்செய்யும் யாகத்
தை அரக்கரால்தடைப்படாமற் காத்திடுதற்கு உன்மூத்தமக னிராமனைக்
கொடுக்கவேண்டும்' என்று கூற, தசரதர் 'இராமன் சிறியவன்;வேள்வியை
யான் காத்திடுகின்றேன்' என்று மறுத்துச்சொல்ல, கௌசிகமுனிவர் கோப
ங்கொண்டதைக் கண்டு வசிட்டர் விசுவாமித்திரரால் இராமனுக்குப் பின்
வரும்பெரும்பேறுகளை அரசனுக்குத்தெரியச்சொல்லித் தடைசொல்லாமல்
அனுப்புவாயென்று நியமிக்கவே, அரசர்க்கரசர் இராமபிரானை லக்ஷ்மண
னுடனே அனுப்பினார். ராமலக்ஷ்மணர்கள் விசுவாமித்திரமுனிவர்பின்னே
யாகஸம்ரக்ஷணத்திற்காக எழுந்தருளுமளவில் வழியிலே தாடகையென்
னுங்கொடியராக்ஷசி வந்தெதிர்க்க, பெண்கொலைபெரும்பாவமெனத்தெரி
ந்திருந்தும், முனிவர்கட்டளையிட்டதைமறுக்காமல், அவளைச் சக்கரவர்த்
தித்திருமகனார் சங்காரஞ்செய்தருளினார். அதற்குத் தேவர்கள் யாவரும்
மிகமகிழ்ந்துவந்து முனிவரைநோக்கி'இவர்க்குச் சிறந்தஅஸ்திரசஸ்திரங்க
ளை அளிப்பாய்' என்றுஅனுமதிசெய்து பூமாரிபொழிந்து போனார்கள்என்பது.

விண்ணவர்போயபின்றைவிரிந்தபூமழையினாலே
தண்ணெனுங்கானநீங்கித்தாங்கருந்தவத்தின்மிக்கோன்
மண்ணவர்வறுமைநோய்க்குமருந்தனசடையன்வெண்ணெ
யண்ணறன்சொல்லேயன்னபடைக்கலமருளினானே.

(இ - ள்.) விண்ணவர் - (மேற்றாடகையின்வதத்தைக்கண்டு இவர்க
ளருகில்வந்து தமதுமகிழ்ச்சியை வெளிப்படுத்திய) தேவர்கள், போய பின்
றை - (தத்தமஇருப்பிடத்திற்கு மீண்டு) சென்றபின்பு, தாங்கு அரு தவத்
தில் மிக்கோன் - (பிறரால்) தரிப்பதற்கு அருமையான பெருந்தவத்திலே
மிகுந்தவராகிய விசுவாமித்திரர், விரிந்த பூ மழையினாலே தண்எனும்
கானம் நீங்கி - (அத்தேவர்களினாற் சொரியப்பட்ட) மலர்ந்த பூக்களின்
மழையினாற் குளிர்ச்சியடைந்த [இயற்கையில்மிக்கவெப்பத்தையுடைய]
அந்தப்பாலைவனத்தை (இராமலக்குமணர்களுடனே) கடந்து, மண்ணவர்

வறுமை நோய்க்கு மருந்து அன - பூமியிலுள்ளமனிதர்களது தரித்திரமாகிய வியாதிக்கு (த்தீர்க்கும்) மருந்தை ஒத்த, வெண்ணெய் அண்ணல் சடையன்தன் - திருவெண்ணெய்நல்லூரிலுள்ள பெருமையிற்சிறந்த சடையப்ப முதலியினது, சொல்லே - வார்த்தையையே, அன்ன - ஒத்த, படைக்கலம்- ஆயுதங்களை, அருளினன் - (இராமபிரானுக்குக்) கொடுத்தருளினர்;(எ-று.)

விண் - ஆகாயம்; அதிலுள்ள சுவர்க்கத்துக்கு, இடவாகுபெயர்: அங்குஉள்ளார், விண்ணவர். போய என்னுந் தெரிநிலைப்பெயரெச்சத்தில், ய்- இறந்தகாலவிடைநிலை. பின்-இடைச்சொல்; அதன்மேல் அ, ஐ-சாரியைகள்: தகரம்றகரமானதும், உகரங்கெட்டதும்-சந்தி. விரிந்த என்பதைப்பூமழைக்கு விசேஷணமாக்கினால், பரவிய என்று பொருளாம். பூப்பது, பூ; கருத்தாப் பொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயர்: மலர், அரும்பு, தளிர், காய், கனி, இலை, நரை, அலை என்பனவும் இவ்வாறே. பூமழை - புஷ்பவர்ஷம். கற்பகமலர்களின் தொகுதியிலுள்ள தேன்பெருகியால் அவ்வெவ்வியவனமுந் தன்மையடைந்தது. தண்ணெனல் - குளிர்ச்சிக்குறிப்பு. கானம்- கானநம்என்னும்வடமொழித்திரிபு.மருந்தைக்கண்டால்வியாதியில்லாததுபோலச் சடையனைக்கண்டால் வறுமையில்லாதென்பது கருத்து. பகைப்பொருளதாகிய 'நோய்க்கு' என்னும் நான்காம்வேற்றுமை, 'தீர்க்கும்' என்னும் வினையோடு தொடரும் 'மருந்து' என்னும் பெயரைக் கொண்டது. 'மருந்தன' என்பது, சடையனுக்கு அடைமொழி; சொல்லுக்கு அடைமொழியாகக் கொள்ளலாகாது: "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால்,உவமைக்கு உவமைகூறி அடுக்கி நிறுத்தல் குற்றமாய்முடியுமாதலின். இனி, மருந்தன படைக்கலமென்றும் இயைக்கலாம்; இவ்வாயுதங்கள் மேல் இராக்ஷசசங்காரஞ்செய்து மனிதரது துன்பங்களை ஒழிப்பதனால். சடையனென்னுஞ் சிவபிரான்பெயரை ஒருபிரபுவுக்கு இட்டுவழங்கியது, ஒருவகை ஆகுபெயரெனக் காண்க. வெண்ணெய் - கடைக்குறைவிகாரம். அண்ணல் - பெருமை; அதனையுடையவனுக்குப் பண்பாகுபெயர்: இது - ஆண்பாற்சிறப்புப்பெயராம். 'அண்ணல்தன்சொல்லேயன்ன படைக்கலம்'என்றது, அவனதுசொல் எங்கும் எப்பொழுதுந் தப்பாமல் தன்பயனைத்தருவதுபோல ஆயுதங்களும் எங்கும் எப்பொழுதுந் தவறாமல் வெற்றியாகியபயனைத் தருவன என்றபடி. இத்திருவெண்ணெய் நல்லூர்ச்சடையப்பமுதலி இந்நூலாசிரியராகியகம்பருக்குப் பலசெல்வமுங் கொடுத்து ஆதரித்துவந்து இவ்விராமாயணத்தைப்பாடும்படி செய்ததனால் அவ்வுபகாரத்தைநோக்கி, தமது நன்றியறிவைவிளக்கும்பொருட்டு, இவ்வள்ளலை இதிகாசமாகிய இப்பெருங்காப்பியத்தில் இடையிடையே புகழ்ந்துபேசினர்; இவ்வாறு புகழேந்திப்புலவர் தமது-நளவெண்பாவில் முரணைநகர்ச் சந்திரன்சுவர்க்கியையும், வில்லிபுத்தூராழ்வார் தமது மகாபாரதத்தில் வக்கபாகை வரபதியாட்கொண்டானையும், மண்டலபுருஷன் தனது சூளாமணிநிகண்டில் கிருஷ்ணதேவராயனையும் ஆங்காங்குச் சிறப்பித்துக் கூறியிருக்குமாறு அறிக. படைக்கலம் - போருக்கு உரிய கருவி; அஸ்திரசஸ்திரங்கள். கலமென்னுஞ் சொல், வெவ்வேறுசொற்களோடு சேர்ந்து, அணிகலம், உண்கலம், மரக்கலம் என வெவ்வேறுபொருளைத் தரும். மருந்து-ஔஷதம்; இனி, இதற்கு - மிருதசஞ்சீவியென்னும் மூலிகை யென்றும், அமிருதமென்றும் பொருள்களுண்டு. 'மண்ணவர்வறுமைநோய்க்கு மருந்தன' என்றதனால் அப்பிரபுவினது உதாரகுணமும், 'சொல்லேயன்ன' என்றதனால் செல்வாக்கும், இரண்டினாலும் பரோபகாரசிந்தையும் வெளியிடப்பட்டன. உவமையணி. ஏ - ஈற்றசை.

இதுமுதற்பதினேழுகவிகள் - பெரும்பாலும் முதல் நான்காஞ் சீர்கள் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களு மாக வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள்; இவற்றில் மூன்று ஆறுஞ் சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (க)

ஆறியவறிஞன்கூறியளித்தலுமண்ணறன்பா
லூறியவுவகையோடுமும்பர்தம்படைகளெல்லாந்
தேறியமனத்தான்செய்தநல்வினைப்பயன்களெல்லா
மாறியபிறப்பிற்றேடிவருவபோல்வந்தவன்றே.

(இ-ள்.) ஆறிய - (காமமுதலியகுற்றங்கள்) தணிந்த, அறிஞன் - திரிகாலஞானமுள்ள விசுவாமித்திரர், கூறி - (அவ்வவற்றிற்குஉரிய மந்திரமுதலியவற்றைச்) சொல்லி, அளித்தலும் - கொடுத்தஅளவில், உம்பர்தம படைகள் எல்லாம் - அந்தத்தேவஅஸ்திரங்கள்யாவும், தேறிய மனத்தான் செய்த நல்வினை பயன்கள் எல்லாம் - (ஐயந் திரிபு அறியாமை இல்லாமல்) தெளிந்த மனத்தை யுடையவனொருவன் (ஒருபிறப்பிற்) செய்த சற்கருமங்களின் பலன்கள் யாவும், மாறிய பிறப்பில் - மறுபிறப்பிலே, தேடி - (அவனைத்) தேடிக்கொண்டு, வருவ போல் - (அவனிடமே தவறாமல்) வந்துசேர்வனபோல, அண்ணல்தன்பால் - ஸ்ரீராமனிடத்தில், ஊறிய உவகையோடும் - மேன்மேற்சுரந்தெழுந்த மகிழ்ச்சியுடனே, வந்த - வந்துசேர்ந்தன; (எ-று.) —அன்று, ஏ - தேற்றம்; ஈற்றசையுமாம்.

ஆறிய - தாடகையின் துன்பந் தீரப்பெற்ற என்றும், பாலைவனத்தின் வெம்மையை நீங்கின என்றும் பொருள்கொள்ளலாம். அறிஞன் - அறிவுடையவன்; ஞ - பெயரிடைநிலை. அளித்தலும் - உம்ஈற்று இறந்தகால வினையெச்சம்: இது - பிற்பொருட்டோடு, விரைவையுங் குறிக்கும்; து, அல் - சாரியைகள். பால் - ஏழனுருபு. உவகை - தொழிற்பெயர்; உவ - பகுதி, கை - விகுதி. உம்பர் என்னும் மேலிடத்தின்பெயர், அங்குஉள்ளார்க்கு இடவாகுபெயர். ஒவ்வொருஅஸ்திரமும் இந்திரன்முதலியோருள் ஒவ்வொருவரைத் தனக்குஉரியதேவதையாகக் கொண்டுள்ளன வாதலால், 'உம்பர்தம்படைகள்' எனப்பட்டன; அன்றியும், தேவர்களிடத்தினின்றும் உபதேசபரம்பரையாக இம்முனிவரிடம் வந்திருந்தனவென்றும் அறிக. இன்னவை நல்லவை இன்னவைதீயவை என்னும் விவேகம் உறுதியாக ஒருவனுக்கு இல்லாமற்போனால் அவன் தீவினைகளை ஒழித்து நல்வினைகளையேசெய்தல் கூடாதாதலால், 'தேறியமனத்தான்செய்த நல்வினை' என்றார். தீவினைப்பயன்களும் மறுபிறப்பில் தேடிவருவனவாயினும், அவை, துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ்செய்து எல்லாவுலகத்தார்க்கும் அளவிறந்தநன்மையை அளித்தற்கு உதவுகிற அப்படைக்கலங்களுக்கு உவமையாதற்கு ஏலாவாதலால், ஒழிக்கப்பட்டன. பிறப்பு - தொழிற்பெயர்; பிற - பகுதி, ப் - சந்தி, பு - விகுதி. வருவ - வினையாலணையும்பெயர். வந்த - வினைமுற்று. அன்றே வந்த என இயைத்து, அப்பொழுதே வந்தன என்றும் உரைக்கலாம். இராமமூர்த்தி அவைபயன்படுதற்குஉரிய இடமாதலால், ஊறிய வுவகையோடும் வந்தன. முற்றத்துறந்த அம்முனிவரிடத்துச் செய்தொழிலொன்றுமின்றி வாளா வருந்தியிருந்த அப்படைகள், ராக்ஷசசங்காரத்திற்கென்று திருவவதரித்து முதலில் தாடகையைக்கொன்று அத்தொழிலைத்தொடங்கிய இராமனிடம் மிக்க குதூகலத்தோடு வந்தடைந்தன; தமக்கு உள்ள இளைவை யொழித்துத் திருப்தியடையலா மெனக் கருதி. உவமையணி. வினைப்பயன்கள் மறுபிறப்பில் தவறாமல் தேடிவந்து அடைதல் "பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்க

ன்று, வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த, கிழவனை நாடிக் கொளற்கு" என்னும் நாலடியார்ச் செய்யுளாலும் அறிக. விசுவாமித்திரர்கொடுத்த படைக்கலங்கள் ஐந்நூறென்று கூர்மபுராணங் கூறுகின்றது; "ஐயைஞ் ஞூறு வெங்கணை நெறியினல்கி, யாங்கவை யுபசங் தானம் புரியரு மறையு மீந்தான்" என்பது காண்க: ['உபசங்காரம்' என்றும் பாடம்.] (உ)

மேவினம்பிரிதலாற்றேம்வீரநீவிதியினெம்மை
யேவினசெய்துநிற்றுமிளையவன்போலவென்று
தேவர்தம்படைகள்செப்பச்செவ்விதென்றவனுநேரப்
பூவைபோனிறத்தினற்குப்புறத்தொழில்புரிந்தவன்றே.

(இ - ள்.) தேவர்தம் படைகள் - அத்தேவாஸ்திரங்கள், (ஸ்ரீராமனை நோக்கி), 'வீர - பராக்கிரமமுடையவனே! மேவினம் - (நாங்கள் உன்னை வந்து) அடைந்தோம்; பிரிதல் ஆற்றேம் - (இனி உன்னைவிட்டுப்) பிரியமாட்டோம்; நீ விதியின் எம்மை ஏவின - நீ முறைமையாக எங்களை ஏவின தொழில்களை, இளையவன் போல - (உனது) திருத்தம்பியாகிய இலக்குமணன் போல, செய்து நிற்றும் - (தவறாமல்) செய்து நிற்போம்,' என்று—, செப்ப - சொல்ல, அவனும் - இராமனும், செவ்விது என்று - நல்லது என்று சொல்லி, நேர - (அவை தொழில்செய்தற்கு) உடன்பட, (அதுமுதல் அந்த அஸ்திரங்கள்), பூவை போல் நிறத்தினற்கு - காயாம்பூப்போற் கருநிறத்தையுடைய ஸ்ரீராமனுக்கு, புறம் தொழில் புரிந்த - வெளியிற்செய்யவேண்டிய திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தன; (எ - று.)

ஏவின - பெயர். நிற்றும் - தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று; றும்- இடத்தையும் எண்ணையும் காலத்தையுங் காட்டும் விகுதி, நில் - பகுதி. இளையவன் - இளையபெருமாள்; இளமையையுடையவன். செப்பு - தெலுங்கினின்று வந்து வழங்கிய திசைச்சொல். பூவை என்னுங் காயாமரத்தின் பெயர், அதன்பூவுக்கு முதலாகுபெயர்; இது, இரண்டாம்வேற்றுமையன்று. புரிந்த - முற்று. புறத்தொழில்- குற்றேவலென்றபடி; என்றது, அரக்கர்முதலியோரை அழித்தல் முதலியவற்றை. (௩)

இனையனநிகழ்ந்தபின்னர்க்காவதமிரண்டுசென்றா
ரனையவர்காணவாண்டோரரவம்வந்தணுகித்தோன்ற
முனைவவீதியாவதென்றுமுன்னவன்வினவப்பின்னர்
வினையறநோற்றுநின்றமேலவன்விளம்பலுற்றான்.

(இ - ள்.) இனையன - இத்தன்மையனவாகிய காரியங்கள், நிகழ்ந்த பின்னர் - நடந்தபின்பு, காவதம் இரண்டு சென்றார் - (இம்மூவரும்) இரண்டுகாதவழிதூரம் நடந்துபோனார்கள்; ஆண்டு - அவ்விடத்தில், அனையவர் காண - அவர்கள் (கேட்டு) அறியும்படி, ஓர் அரவம் - ஓசையொன்று, வந்து அணுகி தோன்ற - சமீபித்து வந்து விளங்க, முன்னவன் - (இராகவவீரர்களுள்) மூத்தவனாகிய ஸ்ரீராமன், (கௌசிகரைநோக்கி), 'முனைவ-பெரியவனே! ஈது யாவது - இவ்வோசை எதனாலுண்டாவது?' என்று வினவ - என்று கேட்க, பின்னர் - உடனே, வினை அற நோற்று நின்ற மேலவன்-கருமங்களொழியும்படி தவஞ்செய்து நின்ற மேன்மையையுடைய அம்முனிவர், விளம்பல் உற்றான்- சொல்லத்தொடங்கினார்; (எ- று.)—அதுமேற்கவியிற் கூறுகின்றார்.

பின்னர், அர் - சாரியை. காவதம், யாவது - காதம், யாது என்பவற்றின் விரித்தல்விகாரம். அரவம் - ரவம்; வடமொழி: ரகரத்துக்கு அகரம் மொழிமுதலாகி முன்வந்தது; [நன் - பத - உக.] முன்னையவனை முனைவனென்பது, ஓர்சொல்விழுக்காடாம்; முனஎன்பதனை முனையென்பவாகலின்: "வினையி னீங்கி விளங்கிய வறிவின், முனைவன் கண்டது முதனூ லாகும்" என்னுமிடத்துங் காண்க. இனி, முனைவ - முனிவனே யென்றுமாம். ஈது - இது; சுட்டுநீண்டபெயர். முன்னவன் என்பதில், தேவர்முதலிய யாவர்க்கும் முதல்வராகிய திரிமூர்த்திகளுள்ளும் முதல்வன் என்னும் பொருளுந் தோன்றும்; "முதலாவார் மூவரே யம்மூவ ருள்ளும், முதலாவான் மூரிநீர் வண்ணன்" என்றார் பொய்கையாழ்வாரும். நல்வினையும் பிறப்புக்குக்காரணமாதலால், இருவகைவினையும் அடங்குமாறு, பொதுப்பட 'வினை' என்றார்; ஒருவனை முத்தியடைவதைத் தடுத்துப் பிறப்புநெறியிற்பந்தமுறுத்துலதில் நல்வினையுந் தீவினையும் பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவாமென்று அறிக: இதுபற்றியன்றே, தெய்வப்புலமைத்திருவள்ளுவனாரும் "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்றார். காதம் - ஏழரைநாழிகைவழி. 'காண' என்றவிடத்து 'கேட்க' என்றும் பாடமுண்டு. (௪)

மானசமடுவிற்றோன்றிவருதலாற்சரயுவென்றே
மேன்முறையமரர்போற்றும்விழுநதியதனிேனாடு
மானகோமதிவந்தெய்துமரவமதென்னவப்பாற்
போனபின்பவங்கடீர்க்கும்புனிதமாநதியையுற்றார்.

(இ - ள்.) மானசம் மடுவில் - மானசசரஸினின்றும், தோன்றி - உற்பத்தியாகி, வருதலால் - வருவதனால், சரயு என்று - சரயு என்று பேர்சொல்லப்பட்டு, மேல் முறை அமரர் போற்றும் - மேன்மையான தன்மையையுடைய தேவர்களுஞ் சிறப்பித்துச்சொல்லும்படியான, விழு நதி அதனினோடும் - பெரிய அந்நதியோடு, ஆன கோமதி - பொருந்திய கோமதியென்னும் நதி, வந்து எய்தும் - வந்து கலத்தலால் உண்டாகிற, அரவம் அது என்ன - ஓசையாகும் (இது) என்று (கௌசிகமுனிவர்) சொல்ல, அப்பால் போனபின் - (மூவரும்) அப்புறஞ்சென்றபின்பு, பவங்கள் தீர்க்கும் புனிதம் மா நதியை - (தன்னில் ஒருகால் மூழ்கியவாது) பிறப்புக்களை ஒழிக்கின்ற பரிசுத்தமான பெரியதொரு நதியை, உற்றார் - அடைந்தார்கள்; (எ - று.)

மானசமடு-இமயமலைச்சாரலிலுள்ளது; கைலாசபருவதத்திலுள்ள தென்று வால்மீகிராமாயணத்திலும், அங்குக் குபேரகிருகத்தி லுள்ளதென்று அதன் கோவிந்தராஜீயவியாக்கியானத்திலுங் கூறப்பட்டுள்ளது: பிரமனது மனசினால் நிருமிக்கப்பட்டதனால், மானசமென்று பெயர். சரயு - ஸரஸ், யு என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, பொய்கையினின்றும் ஓடிவருகின்றதென்று பொருள்படும். அமரர் - (அமிருதமுண்டதனால்) மரணமில்லாதவர். இங்கே, தேவர்க்கு மேன்மை - ஆகாசகங்காநதியின் அருகிலிருத்தலும், புண்ணியப்பயனையே நுகர்தலும், பேரறிவுடைமையும் முதலியன. அத்தன்மையோரும் போற்றுவதென நதியின் சிறப்பை அறிவித்தார். இனி, மேல் முறை அமரர் - மேலிடத்துள்ள தேவரெனவுமாம். விழுமம் என்னும் உரிச்சொல், ஈறுகெட்டு 'விழு' என நின்றது. அரவமது, அது - முதல் வேற்றுமைச்சொலலுருபு; இதனை அசையென்றும், பகுதிப்பொருள்விகுதி யென்றுங் கூறுவர்: இனி, அரவமாகும் அது எனப் பயனிலையும் எழுவாயுமாக

வைத்தல் இக்கவியில் 'ஈதுயாவது' என்ற வினாவில் அண்மைச்சுட்டாற்குறித்ததோடு மாறுபடுமென மறுக்க. இரண்டாமடியில் 'ஈனமிலமரர் போற்றும்ருநதி' என்றும், மூன்றாமடியில் 'ஆனகோசிகை' என்றும் பாடபேதம் உண்டு. புனிதமாநதி - கௌசிகையென்பது.

இங்குக்கூறிய நதிசங்கமமும் கிளைக்கதைகளின் அமைப்பின் முறைமையும் முதனூலோடு மாறுபடுவதாயினும் "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி, அழியா மரபினது வழிநூ லாகும்" என்னும் வழிநூலிலக்கணம்பற்றிப் பிறநூல்மேற்கோள்கொண்டு அமைக்கப்பட்டதாதல்வேண்டுமென அறிக; இவ்வாறு வருவன பிறவற்றுக்கும் இங்ஙனமேகொள்க. (௫)

சுரர்தொழுதிறைஞ்சற்கொத்த தூநதியாவதென்று
வரமுனிதன்னையண்ணல் வினவுறமலருள் வைகும்
பிரமனன்றளித்தவென்றிப் பெருந்தகைக்குசனென்றோது
மரசர்கோன்மனைவிதன்பா லளித்தவர்நால்வராகும்.

இதுமுதற் பத்துப்பாடல்களால், விசுவாமித்திரர் கௌசிகைநதியின் வரலாறு கூறுவாராய், தன்மரபையுந் தெரிவிக்கின்றார்.

(இ-ள்.) சுரர் தொழுது இறைஞ்சற்கு ஒத்த - தேவர்கள் வணங்கித் துதித்தற்குத் தக்க, தூ நதி - பரிசுத்தியையுடைய இந்த நதி, யாவது என்று - எத்தன்மையதென்று, வர முனி தன்னை - சிறந்த முனிவராகிய விசுவாமித்திரரை, அண்ணல் - சக்கரவர்த்திதிருமகன், வினவுற - கேட்க, (அம்முனிவர் கூறுவார்);—மலருள் வைகும் பிரமன் - (திருமாலினது திருவுந்தித்) தாமரைமலரில் தோன்றிய பிரமதேவன், அன்று அளித்த - ஆதிகாலத்திற் பெற்ற, வென்றி பெரு தகை - வெற்றியையும் பெருமைக்குணத்தையுமுடைய, குசன் என்று ஓதும் அரசர் கோன் - குசன் என்று பெயர்சொல்லப்படுகிற அரசர்களுக்குஅரசன், மனைவி தன்பால் - (தனது) தருமபத்தினியினிடத்தில், அளித்தவர் - பெற்றபிள்ளைகள், நால்வர் - நாலுபேராவர்; (எ-று.)

இக்கவியில் 'வினவுற' என்னும் வினையெச்சம், மேற் பதினோராங்கவியில் 'என்று அம்முனி புகல' என்பதனோடு முடியும்.

'ஆகும்' என்பது - அசை; 'நால்வர்' என்பதனோடு இயைத்து, ஆவர் எனப் பொருள்கூறலாகாது: "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே" ஆகலின். சுரர் - (திருப்பாற்கடல்கடைந்த காலத்து அதனினின்றுந்தோன்றியதொரு) சுரையை [மதுவை] ப்பானஞ்செய்தவர் என்பதுபற்றிவந்த காரணப்பெயர்; "வாருணி நறவம் பிறந்தது பின்னர் மற்றது நுகர்தலாற் றேவர், சேர்கெழு சுரரா யினரஃ தன்னு ரசுரரா யினர்" என்றார் கூர்மபுராணத்தும். தூய்மையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் முன்னின்றயகரமுங்கெட்டு 'தூ' என நின்றது. வரமுனி - முனிவரன்; வரன் முனி எனப் பிரிக்க: வரம் முனி எனப்பிரித்து, வேண்டுவார்வேண்டும்வரங்களைத் தரும் முனியெனினும் அமையும். எல்லாமலர்களிலுஞ் சிறத்தல்பற்றி, அடைமொழிகொடாமல்வாளா, தாமரை 'மலர்' எனப்பட்டது; "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே," "பூவிற்குத் தாமரையே," "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்பன காண்க. வைகும், வைகு - பகுதி. வென்றி- தொழிற்பெயர்; வெல் - பகுதி, றி - விகுதி, லகரம் னகரமானது - சந்தி: ல ற ஆகி மெலிந்த தென்னவுமாம்; இதனைப் பண்புப்பெயரென்பாருமுளர். அரசர்கோன் - ராஜாதிராஜன். குசனென்பதற்கு - பூமியில்வாழ்பவனென்று பொருள்; கு - பூமி: பிரமபுத்

ராணையால் அவ்வுலகத்திலேயே இருந்துவிடாமல் மனிதர்களைக்காக் கும்பொருட்டு நிலவுலகத்தில் வந்ததைப்பற்றிய பெய ரென்பர். பிரமன்மக னாகிய இவனை 'அரசர்கோன்' என க்ஷத்திரியனாகக்கூறினது, இராச்சியமா ளுதலாகிய அரசர்தொழிலைப் பூண்டதனா லென்க. கோன், ன் - சாரியை. மனைவி - வீட்டிலிருந்து சமுசார காரியங்களை நிருவகிப்பவள்; மனை - பகுதி, இ - பெண்பால் விகுதி, வ் - பெயரிடைநிலை. இவள் விதர்ப்பராசனதுமக ளென்று முதனூல் கூறுகின்றது. 'மனைவியன்பாலளித்தவர்' எனவும்பாடம்.

குசன்குசநாபன்கோதில்குணத்தினதூர்த்தன்கொற்றத்
திசைகெழுவசுவென்றோதுமிவர்பெயரிவர்கடம்மிற்
குசன்கவுசாம்பிநாபன்குளிர்மகோதயமதூர்த்தன்
வசையிறன்மவனமற்றைவசுகிரிவிரசம்வாழ்ந்தார்.

(இ - ள்.) இவர் பெயர் - இவர்களது நாமம், குசன்—, குசநாபன்—, கோது இல் குணத்தின் - குற்றமில்லாத நற்குணங்களையுடைய, அதூர்த்தன்—, கொற்றத்து இசை கெழு - வெற்றியினாற் கீர்த்தி விளங்கிய, வசு—, என்று ஓதும் - என்றுசொல்லப்படும்; இவர்கள் தம்மில் - இவர்களுள், குசன்—, கவுசாம்பி - கௌசாம்பியென்னும் நகரத்திலும், நாபன் - குசநாபன், குளிர் மகோதயம் - (நீர்வளமுதலியவற்றால்) குளிர்ந்துள்ள மகோதயமென்னும் நகரத்திலும், அதூர்த்தன்—, வசை இல் தன்மவனம் - குற்றமில்லாத தருமாரணியமென்னும் நகரத்திலும், மற்றை வசு - மற்றொருவனாகிய வசு என்பவன், கிரிவிரசம் - கிரிவிரஜமென்னும் நகரத்திலும், வாழ்ந்தார் - (அரசுபுரிந்து) வாழ்ந்திருந்தார்கள்; (எ - று.)

முதனூலில் மூத்தகுமாரனது பெயர் குசாம்பனென்று கூறப்பட்டுள்ள தாதலால், இங்கே 'குசன்' என்பது - அதன் விகாரம்போலும்; இவனது சம்பந்தம்பற்றியே இவனாண்ட நகரத்துக்கு 'கௌசாம்பி' என்று தத்தி தாந்தமாகப் பெயர்வழங்கிற்று. அதூர்த்தன் என்பதற்கு - தூர்க்குண மில் லாதவனென்றுபொருள்; இவன்பெயர் - ஆதூர்த்தரஜஸ் என்று வால்மீகத் திலும், அதூர்த்தசன் என்று கூர்மபுராணத்திலுங் காணப்படுகிறது. நாபன்- முதற்குறைவிகாரம். கௌசாம்பி யென்பது கவுசாம்பி என ஔகாரத்து க்கு அகரமும் வகரவுகரமும் முதற்போலி. தன்மவனம்- தர்மவநம். மகோ தயம் என்பதற்கு - சிறந்த அபிவிருத்தியை யுடையதென்றும், தர்மவனம் என்பதற்கு-அறம்வளருங்காடென்றும், கிரிவிரஜம் என்பதற்கு - மலைக ளின்கூட்டத்தையுடையதென்றும் பொருள். கிரிவிரசமென்பதன்பொருளை "இத்தலம் வசுவின் றேய மஞ்சுவெற் பிடையிற் றோன்றும்" என்னுங் கூர் மபுராணத்தாலும் உணர்க. 'குளிர்' என்ற அடைமொழி, நாட்டினது பல வளங்களோடு, அரசனது ஆளுகைத் தன்மையையும் விளக்கிற்று. நாட்டுக் குக் குற்றமாவது - மிக்கமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, அர சண்மை என்ற இவற்றால் வருவது; "மிக்கபெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி, யக்கணா சண்மையோ டாறு" என்பது காண்க: இவற்றை வடநூலார் ஈதிபாதையென்பர். குசன், நாபன், அதூர்த்தன், வசு என்னும் உயர்திணையாண்பாற்பெயர்கள் நான்கும் எழுவாயாக அடுக்கி, 'வாழ்ந் தார்' என்னும் பலர்பால்முற்றைக் கொண்டன; ஒருமைச்சொற்கள் அடுக் கிப் பன்மைவினைகொள்வது இலக்கணம். ஓதும் - செயப்பாட்டு வினைப் பொருளில்வந்த செய்வினை; அல்லது, (நூல்) ஓதும் என்றுமாம். 'ஆதூர்த் தன்' என்றும் பாடம். (எ)

அவர்களிற்குசநாபற்கேயையிருபதின்மாஞ்சொற்
றுவரிதழ்த்தெரிவைநல்லார்தோன்றினர்வளருநாளி
லிவர்பொழிற்றலைக்கணாயத்தெய்துழிவாயுவெய்திக்
கவர்மனத்தனனாயந்தக்கன்னியர்தம்மைநோக்கி.

(இ - ள்.) அவர்களில் - அவர்களுள், குசநாபற்கு - குசநாபன் என்பவனுக்கு, அம் சொல் - அழகிய சொற்களையும், துவர் இதழ் - சிவந்த அதரத்தையுமுடைய, தெரிவை நல்லார் - நற்குணமுடைய பெண்கள், ஐ இருபதின்மர் - நூறுபேர், தோன்றினர் - பிறந்து, வளருநாளில் - வளர்ந்துவருகிறகாலத்தில் ஒருநாள், இவர் - இப்பெண்களெல்லாரும், பொழில் தலைக்கண் - ஒருசோலையினிடத்திலே, ஆயத்து - தோழிமார்கூட்டத்துடனே, எய்து உழி - (பூக்கொய்துவிளையாடுதற்குப்) போய்ச்சேர்ந்த பொழுதில், வாயு - வாயுதேவன், எய்தி - (அங்கு) வந்து, கவர் மனத்தனன் ஆய் - (அவர்களால்) இழுக்கப்பட்ட மனத்தையுடையவனாய், அந்த கன்னியர்தம்மை நோக்கி - கலியாணமில்லாத அந்த இளம்பெண்களைப் பார்த்து, (எ - று.) —'உரைப்ப' என மேற்கவியோடு இயையும்.

இதுவும், மேற்கவியும் - குளகம்; ஒருதொடரெனப்படும்: குளகமாவது - பலபாடல் ஒருவினைகொண்டு முடிவது; "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்: குளக மல்லாதது, முத்தக மெனப்படும்; அது, ஒருசெய்யுள் தனியேநின்று முடிவது: "முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்."

குசநாபற்கே, ஏ - பிரிநிலை; அசைநிலையெனினுமாம். குசநாபனது மனைவியின்பெயர் கிருதாசியெனப் பிறநூலா லறிக. ஐயிருபதின்மர் - பண்புத்தொகைப் பன்மொழித்தொடர். சொல்லுக்கு அழகு - செவிக்கினிமை, பொருட்பொலிவு முதலியன. துவரிதழ் - பவழம்போற்சிவந்த இதழுமாம். தெரிவை என்பது, இங்குப் பருவப்பெயராகாமற் பெண்ணென்னுமாத்திரையாய்நின்றது; அப்பருவத்திற்கு வயதெல்லை, இருபத்தாறுமுதல் முப்பத்தொன்றளவும். நல்லார் - அழகியவர் என்றுமாம். 'நல்லாள்' என்று இலக்குமிக்குப்பெயராதலால், 'நல்லாள்' என்பது - பெரும்பாலும் மகளிரையே உணர்த்தும். 'தெரிவைநல்லார் - நல்தெரிவையார் என மாறுக. தோன்றினர் - முற்றெச்சம். 'நல்லார் தோன்றினர் வளருநாளில் பொழிலின்கண் எய்துழி' என முடியுமிடத்து 'இவர்' என வேண்டாமையின், அது - மகளிரைச்சுட்டாமல், அங்ஙனமழகியவர் இங்ஙனம் வெரிந்ஒடிந்து வீழ்ந்தார் எனக் கம்பர் இரங்குதலின், பின்னிற்கவியைநோக்கி, தகுதிபற்றி வந்தது. இனி, இவர் பொழில் - மிகவிரும்பப்படும் பொழில் என வினைத்தொகையாகவுமாம். ஆயம் - மகளிர்கூட்டம். தலை - ஸ்த்தலம்என்னும் வடமொழித்திரிபாகிய தலம் என்பதன் விகாரம். எய்துழி-வினைத்தொகை. கவர்மனத்தனன் - (அம்மகளிரைக்) கவர்ந்துகொண்டுபோகவேண்டுமென்னும் எண்ணமுடையவ னென்றுமாம். அந்த - சுட்டுத்திரிபு. அந்தம் எனப் பிரித்து, அழகிய வென்றுமாம். கன்னி- கந்யா என்னும் வடமொழித் திரிபு. 'கன்னியர்தம்மைநோக்கி' என்பதை மத்திமதீபமாகக் கொண்டு, 'கவர்மனத்தனனாய்' என்பதனோடுங் கூட்டுக. (அ)

கொடித்தனிமகரங்கொண்டான்குனிசிலைச்சாத்தானென்தேன்
வடித்தடங்கண்ணிரெம்மைமணத்திரென்றுரைப்பவெந்தை
யடித்தலத்துணைத்துநீரோடளித்திடினணைதுமென்ன
வொடித்தனன்வெரிநைவீழ்ந்தாரொள்வளைமகளிரெல்லாம்.

(இ - ள்.) ‘வடி தட கண்ணீர் - மாவடுவின்பிளவையொத்த பெரிய கண்களையுடைய பெண்களே! (யான்), கொடி தனி மகரம் கொண்டான் - (தனது) துவசத்திலே ஒப்பில்லாத சுறுமீனினது வடிவத்தைக் கொண்டுள்ள மன்மதனது, குனி சிலை - வளைந்த (கரும்பு) வில்லினால் எய்யப்பட்ட, சரத்தால் - மலரம்புகளினால், நொந்தேன் - வருந்தினேன்: (ஆதலால்), என்னை—, மணத்திர் - (நீங்கள்) புணருங்கள்;’ என்று உரைப்ப - என்று (வாயுபகவான்) சொல்ல, (அந்தப்பெண்கள் அதற்கு உடன்படாமல்), ‘எந்தை அடித்தலத்து உரைத்து - எமது தந்தையினது திருவடிகளில் (நீயாவது நாங்களாவது சென்று இக்கருத்தை வெளியிட்டுச்) சொல்லி, (அதன்பின் அவர் அதற்கு உடன்பட்டு), நீரோடு அளித்திடின் - ஜலத்துடனே (தாரைவார்த்து உனக்கு எங்களைக் கலியாணஞ்செய்து) கொடுத்தால் [கன்னியாதானஞ்செய்தால்], அணைதும் - (பின்பு நாங்கள் உன்னைக்) கூடுவோம்’, என்ன - என்றுசொல்ல, (அதுகேட்டுக் கோபித்து வாயுதேவன்), வெரிநை ஒடித்தனன் - (அவர்களுடைய) முதுகுகளை (த் தனது ஆற்றலால்) கூனும்படி ஒடித்தான்; (அதனால்), ஒளி வளை மகளிர் எல்லாம் - ஒளியையுடைய வளையல்களை யணிந்த பெண்கள் யாவரும், வீழ்ந்தார் - (உடனே) கீழேவிழுந்தார்கள்; (எ - று.)

மகரம் - அதன்வடிவுக்கு, முதலாகுபெயர். அவர்களுடைய கண்ணழகிலே தானீடுபட்டதனைத் தெரிவித்தற்கு, ‘வடித்தடங்கண்ணீர்’ எனவிளித்தான். வடி - வடு; மாவின் இளங்காய்: இதன் உட்பிளவு, வடிவத்தால் உவமை; “வடுப்பிள வனைய கண்ணாள்” என்றார் சிந்தாமணியாரும். இனி, வடி என்பதற்கு - வடிக்கப்பட்ட அம்பு, அல்லது வேல், அல்லது வாள் எனக் கொண்டு, அதுபோன்ற கண் என்றுமாம்; கூர்மைக்கும், ஆடவரை வருத்துதற்கும் உவமை: வடித்தல் - நெருப்பில்வைத்துக்காய்ச்சியடித்து அராவிவேலைசெய்துகூராக்குதல். தடங்கண் - உரிச்சொற்புணர்ச்சியாதலால், நிலைமொழியீற்று உயிரின்முன் வருமொழிமுதல் வல்லெழுத்து மிகாமல் இனமெல்லெழுத்துமிக்கது; [நன் - மெய் - ௩௬.] தட - உரிச்சொல்லாதலை “தடவுங் கயவு நளியும் பெருமை” என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. கண்ணீர் - கண்ணார் என்பதன் விளி; ஈற்றயல் திரிந்தது - விளியுருபு. மணத்திர் - ஏவற்பன்மைமுற்று; மண - பகுதி, த் - சந்தி, இ - சாரியை, இர் - ஏவற்பன்மை விகுதி: இதுவே, எதிர்காலங்காட்டும். எந்தை - யாம் என்பதன் திரிபாகிய எம் - பகுதி, தை - முறைப்பெயர் விகுதி. ‘அடித்தலத்து’ என்றது, பிதாவினிடத்துத் தங்களுக்கு உள்ள பக்தி தோன்ற. உரைத்தும் எனப் பிரித்து, (நாங்கள்) விண்ணப்பஞ்செய்வோமென்றும் உரைப்பர். அணைதும் - தன்மைப்பன்மையெதிர்காலமுற்று; தும் - விகுதி: இடத்தையும் மொழியையும் பாலையுங் காட்டிற்று. மக - இளமை; உரிச்சொல்: அதனையுடையவன், மகன்; அதன்பெண்பால் - மகள்: இதன்மேல், இர் - பலர்பாற் பெயர் விகுதி. ‘எந்தையடித்தலத்துரைத்து நீரோடளித்திடினணைதும்’ என்றதனால், பெண்களது ஸ்வாதந்திரியமின்மை வெளியிடப்பட்டது. ஒளியை வளைக்கும் மகளிர்க்குங் கூட்டுக. (௬)

சமீரணனகன்றபின்னர்த்தையலார்தவழ்ந்துசென்றே
யமிர்துகுகுதலைமாழ்கியரசன்மாட்டுரைப்பவன்று
ளிமிர்குழன்மடவார்த்தேற்றிநிறைதவன்சூளிநல்கும்
திமிரமபிரமதத்தற்களித்தனன்றிருவனாளை.

(இ - ள்.) சமிரணன் - வாயு, அகன்ற பின்னர் - (இங்ஙனஞ்செய்து விட்டுப்) போனபின்பு, தையலார் - அழகையுடைய அம்மகளிர், தவழ்ந்து சென்றே - (நடக்கமாட்டாமல்) நகர்ந்துகொண்டே போய், அமிர்து உகு குதலை - அமிருதத்தினது இனிமை பெருகுகின்ற மழலைச்சொற்களால், மாழ்கி - வாய்குழறி, அரசன்மாட்டு உரைப்ப - குசநாபனிடம் (நிகழ்ந்த செய்தியைச்) சொல்ல, அன்னான் - அவ்வரசன், நிமிர் குழல் மடவார் தேற்றி - வளர்ந்த கூந்தலையுடைய அவ்விளம்பெண்களை (த் தன் வார்த்தையால்) தேறுதல்செய்து, நிறை தவன் சூளி நல்கும் - நிறைந்த தவத்தையுடைய வணங்கிய சூளியென்னும் முனிவன் பெற்ற, திமிர் அறு பிரமதத்தற்கு - (அஞ்ஞான) இருள் நீங்கிய பிரமதத்தனென்னும அரசனுக்கு, திரு அனையார் - இலக்குமியையொத்த அப்பெண்களை, அளித்தனன் - (கலியாணஞ்செய்து) கொடுத்தான்; (எ - று.)

சூளியென்னும் மகாமுனிவர் பிரமசாரியாய்த் தவஞ்செய்துவருகையில் ஊர்மிளையென்பவளது மகளாகிய சோமதையென்னுங் கந்தருவகன்னிகை அவரை வணங்கி வழிபட்டு அவரது அருளைப்பெற்றுத் தனக்கு நல்ல புதல்வனொருவனை அளிக்கவேண்டுமென வேண்ட, முனிவர் அவளுக்கு ஒருமகன் உதிக்கும்படி திருவுள்ளம்பற்றினர்; அவரது தவமகிமையால் உண்டானமைபற்றி, அக்குமாரனுக்குப் பிரமதத்தனென்று பெயர்: பிரமம் - தவப்பெருமையால், தத்தன் - கொடுக்கப்பட்டவன் என்று பொருள்; இவன், சூளியின் மானஸபுத்திரனென்று அறிக. இவனது தாய் க்ஷத்திரியஸ்திரீயாதலால், இவன் அரசனாய்க் காம்பிலிதேசத்தை ஆண்டுவந்தான். சமிரணன் - ஸமீரணன் என்னும் வடமொழியின் விகாரம்; நன்றாகச்சஞ்சரிக்குந்தன்மையுடையவன் என்றுபொருள். அகன்ற, அகல் - பகுதி. தையல் - அழகு. அமிர்து - அம்ருதமென்னும் வடமொழித் திரிபு; (உண்டவர்க்கு) மரணத்தை ஒழிப்பது [சாவாமருந்து] என்று பொருள்: இது - அமிழ்தம், அமிழ்து, அமுது, அமுதம் எனவுஞ் சிதைந்து வழங்கும். 'அமிர்துகுகுதலை' என்றது, தேவாமிர்தம் நாவுக்கு இனிமைதருவதுபோலச் செவிக்கு இனிமைதரும் நிரம்பாமென்சொல் என்றபடி. 'தவழ்ந்து சென்று' என்றதற்கு ஏற்பக் குதலை கூறினார்போலும். மாட்டு - ஏழனுருபு. அன்னான் - சுட்டடியாப்பிறந்த பெயர்; அ - பகுதி, ன் - சந்தி, ன் - சாரியை, ஆன் - விகுதி. மடமை அல்லது மடம் - இளமை; அல்லது, எல்லாமறிந்தும் அறியாதுபோலிருக்குந்தன்மை: இது நாணம், அச்சம், பயிர்ப்பு முதலிய மற்றைப்பெண்குணங்களுக்கும் உபலக்ஷணம். தேற்றுதல் - சமாதானப்படுத்துதல். திமிர் - திமிரம்என்பதன்விகாரம்; நகர், நீல் என்பனபோல. கன்னியர்க்குத் திருமகளுவமம் - அழகிற்கும், செல்வத்திற்கும், நல்வினையுடையோனிடத்துச் சென்றுசேருமளவும் பொதுவாயிருத்தற்கு மென்க. நல்கும், நல்கு - பகுதி. (௧௦)

அவன்மலர்க்கைகடீண்டக்கூனிமிர்ந்தழகுவாய்த்தார்
புவனமுற்றுடையகோவும்புதல்வரில்லாமைவேள்வி
தவர்களிற்புரிதலோடுந்தகையுறத்தழலினுப்பட்
கவனவேகத்துரங்கக்காதிவந்துதயஞ்செய்தான்.

(இ - ள்.) அவன் - அந்தப்பிரமதத்தன், மலர் கைகள் - (அப்பெண்களின்) செந்தாமரைமலர்போலுங் கைகளை, தீண்ட - தொட்டமாத்திரத்தில், (அப்பெண்கள் யாவரும்), கூன் நிமிர்ந்து - (தங்கள்தங்கள்) முதுகு வளைவு ஒழிந்து (நேராகி), அழகு வாய்த்தார் - அழகுபெற்றார்கள்; (இது

நிற்க), புவனம் முற்று உடைய கோவும் - பூமிமுழுவதையும் (தனது ஆளுகையில்) உடைய குசநாபனென்னும் அரசனும், புதல்வர் இல்லாமை - தனக்குப் புத்திரரில்லாமையால், வேள்வி - புத்திரகாமயாக மொன்றை, தவர்களின் - முனிவர்களுடனே, புரிதலோடும் - செய்தவளவில், தகை உற - அழகுபொருந்த, தழலின் நாப்பண் - (அந்த) யாகாக்கினியின் மத்தியில், கவனம் வேகம் துரங்கம் காதி - நடையிலே விரைவையுடைய குதிரைச்சேனையையுடைய காதியென்பவன், வந்து உதயம் செய்தான் - வந்து பிறந்தான்; (எ - று.)

கைகள்தீண்ட மகளிர் கூனிமிர்ந்து அழகுவாய்த்தமை, பிரமதத்தனது அரிய பெரிய தவத்தின் மகிமையா லென்க. 'தகைவற' என்ற பாடத்துக்கு - (அரசன்) மனவருத்தம் ஒழிய என்று பொருள். கைக்குத் தாமரைமலர் உவமை - செம்மையும், மென்மையும், அழகும் பற்றி. கைகள் தீண்டுதல் - பாணிக்கிரகணம். தீண்டல் - பிடித்தல். இனி, அவன் மலர்க் கைகள் தீண்ட - பிரமதத்தனது தாமரைமலர்போலுங் கைகள் பட்டமாத்திரத்தில் என்றுமாம். 'புவனமுற்றுடையகோவும் புதல்வரில்லாமை' என்ற சேர்த்தியால், உலகையாளுதற்குப் புத்திரரைப்பெற விரும்புவானாயினா னென்க. 'தனிமரந்தோப்பாகாது, தனிப்பிள்ளை பிள்ளையாகாது' என்பவாதலால், 'புதல்வர்' எனப் பன்மையாற்கூறினார். கவனம் - கமநம் என்னும் வடமொழித் திரிபு. கவனவேகம் - பலவகைநடைகளையும் விரைவையு முடைய எனவுமாம். துரங்கம் என்பதற்கு - விரைந்துசெல்வது என்றுபொருள். துரங்கம் - அரசர்க்கு உரிய சாதியடைமொழி. இல்லாமை - எதிர்மறைப்பண்புப்பெயர்; இல் என்னும்பகுதியே எதிர்மறைகுறித்ததனால், ஆ - சாரியை. காதியினது சூரியகிரணம்போன்ற க்ஷத்திரியதேஜசைக் குறிப்பிக்கும்பொருட்டு, 'காதி வந்து உதயஞ்செய்தான்' என்றார். குசநாபர் யாகஞ்செய்கையில் அவரது தந்தையாகிய குசர் வந்து 'உனக்குக் காதியென்று ஒருபுத்திரன்பிறந்து குலத்தைவிளங்கச்செய்வான்' என்று சொல்லிவிட்டு ஆகாசமார்க்கமாய்ப் பிரமலோகஞ்சென்றாரென்றும், பின்பு காதிபிறந்ததாகவும் ஸ்ரீராமாயணத்திற் கூறப்பட்டுள்ளது. (கக)

அன்னவன்றனக்குவேந்தனரசொடுமுடியுமீந்து
பொன்னகரடைந்தபின்னர்ப்புகழ்மகோதயத்தில்வாழு
மன்னவன்காதிக்கியானுங்கவுசிகையென்னுமாது
முன்னர்வந்துதிப்பவந்தமுடியுடைவேந்தர்வேந்தன்.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) அன்னவன்தனக்கு - அந்தக் காதியென்னும் புத்திரனுக்கு, வேந்தன் - குசநாபனென்னும் அரசன், அரசொடு முடியும் ஈந்து - ராச்சியத்தையும் (அதனை ஆளுகைக்கு உரிய) கிரீடத்தையுங் கொடுத்து [பட்டாபிஷேகஞ்செய்துவிட்டு], பொன் நகர் அடைந்த பின்னர் - பொன்மயமான சுவர்க்கலோகத்தை (இறந்து) அடைந்தபின்பு, புகழ் மகோதயத்தில் வாழும் மன்னவன் காதிக்கு - (யாவராலும் புகழப்படுகிற மகோதயநகரத்தில் வாழ்கிற அரசனாகிய அந்தக்காதியென்பவனுக்கு, யானும் - நானும், முன்னர் - (எனக்கு) முன்னே, கவுசிகை என்னும் மாதும் - கௌசிகையென்கிற பெண்ணும், வந்து உதிப்ப - வந்து பிறக்க, அந்த முடி உடை வேந்தர் வேந்தன் - கிரீடத்தையுடைய அரசர்களுக்கு அரசனாகிய அந்தக் காதியென்பவன், (எ - று.)—'ஈந்தான்' என மேற்கவியோடு இயையும்.

மயிர்முடியப்படுவதென்னுங் காரணம்பற்றி, முடியென்று சிரசிற்குப் பெயர்; அது - அதிலணியுங் கிரீடத்துக்கு இடவாகுபெயர். கவுசிகை - முதற்போலி. 'கௌசிகி' என்றும் பாடமுண்டு. இது - கௌசிகன் என்பதன் பெண்பால்; தத்திதாந்தநாமம். இதற்கு-குசனதுமரபிற்பிறந்தவளென்றுபொருள்; இனி, குசனது பௌத்திரனுதலாற் குசிகனென்று காதிக்கு ஒருபெயராய், அவனது மகளென்பது பற்றிய பெயராகவுமாம். இவள் விசுவாமித்திரருக்கு மூத்தவளென்பது மேற்பதினெந்தாங்கவியில் 'எம் முனூ னங்கை' என்பதனுல் விளங்குதலின், அதற்கு ஏற்ப உரைக்கப்பட்டது. முன் - காலமுன். இவளது இயற்பெயர் சத்தியவதியென்று முதனூலால் அறியப்படும். மாது என்னும் அழகின் பெயர், அதனையுடைய பெண்ணுக்குப் பண்பாகுபெயர்; இதனை மாதர் என்னும் உரிச்சொல்லின் விகாரமெனக்கொண்டால், விருப்பமென்றுபொருளாம்: "மாதர் காதல்" என்பது தொல்காப்பிய மாதலால். உடை - உடைய என்பதன் தொகுத்தல். மன் - பெருமை; அதனை உடையவன், மன்னவன். (கஉ)

பிருகுவின் மதலையாயபெருந்தகைப்பிதாவுமொவ்வா
விரிசிகனென்பவற்குமெல்லியலாளையீந்தா
னருமறையவனுஞ்சின்னாளறம்பொருளின்பமுற்றி
விரிமலர்த்தவிசோன்றன்பால்விழுத்தவம்புரிந்துமீண்டான்.

(இ - ள்.) பிருகுவின் மதலை ஆய - பிருகுமகாரிஷியினது புத்திரனை, பெரு தகை பிதாவும் ஒவ்வா - பெருந்தன்மையுடைய (தனது) தந்தையாகிய அப்பிருகுவும் (தனக்குத் தவவொழுக்கத்தில்) ஒப்பாகப்பெறாத, இரிசிகன் என்பவற்கு - ரிசிகன் என்னும் முனிவனுக்கு, மெல் இயலாளை - மென்மையான தன்மையையுடைய கௌசிகையை, ஈந்தான் - (என் தந்தை) விவாகஞ்செய்துதந்தான்; அரு மறையவனும் - (அதற்கு) அருமையான வேதங்களை யுணர்ந்த அந்த ரிசிகனும், சில் நாள் - சிலகாலம், அறம் பொருள் இன்பம் முற்றி - தரும அர்த்த காம மென்னும் மூன்றுபுருஷார்த்தங்களையுஞ் செய்துமுடித்து [சமுசாரத்தில்இருந்து],(பின்பு), விழுத் தவம் புரிந்து - மேன்மையான தவத்தைச் செய்து, விரி மலர் தவிசோன் தன்பால்-மலர்ந்த தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமதேவனிடத்தில் [பிரமலோகத்திற்கு], மீண்டான்- (அவனருளாற்) செல்வானானான்;(எ-று.)

'ஆய' என்னும் உடன்பாட்டுப்பெயரெச்சமும், 'ஒவ்வா' என்னும் எதிர்மறைப்பெயரெச்சமும் அடுக்கி, 'இரிசிகன்' என்பதைக் கொண்டன. பெருந்தகை - மகிமை. "பிதச்சதகுணம்புத்ர:" என்றவாறு, தந்தையினும் மைந்தன் பலமடங்கு கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவன் என்பதற்கு, 'பிதாவுமொவ்வா விரிசிகன்' என்றார். உம்மை - உயர்வுசிறப்பு. மெல்லியலாள் - மெய்வாய்கண்மூக்குச்செவியென்னும் ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பலவகைமென்மைகளையு முடையாள் என்றபடி. மேற்பட்டசாதியிற் பிறந்த ஆடவர் கீழ்ப்பட்டசாதியிற்பிறந்தமகளிரை மணம்புணர்தல் வழுவன்றாதலால்,பிராமணகுமாரன் க்ஷத்திரியபுத்திரியை மணந்தான். மறை - (சிலசாதியார்க்கும் பெண்பாலார்க்கும் ஓதுவிக்கவும் ஓதவுங் கேட்கவு மாகாதென்று) மறுக்கப்படுவது: மறு - பகுதி, ஐ - செயப்படுபொருள்விகுதி; அன்றிக்கே, பொருள்மறைந்திருப்ப தென்றுமாம்: கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்துகெட்டது. இரிசிகன் - ரகாத்திற்கு இகரம் மொழிமுதலாகிவந்தது. 'புரிந்துபோனான்' எனவும் பாடம். (கங)

காதலன்சேணினீங்கக்கவுசிகைதரிக்கலாற்றாள்
மீதுறப்படாலுற்றாள்விழுநதிவடிவமாகி
மாதவர்க்கரசுநோக்கிமாநிலத்துறுகணீக்கப்
போதுகநதியாயென்றுப்பூமகனுலகுபுக்கான்.

(இ - ள்.) காதலன் - தனது கணவனாகிய இரிசிகன், சேணில் நீங்க - (தன்னைவிட்டு) ஆகாசமார்க்கத்திலே செல்ல, கவுசிகை - கௌசிகையானவள், தரிக்கல் ஆற்றாள் - (அக்கொழுநனது பிரிவைப்) பொறுக்கமாட்டாதவளாய், விழு நதி வடிவம் ஆகி - சிறந்ததொரு நதியினது ரூபமாய், மீது உற படால் உற்றாள் - ஆகாயத்திலே பொருந்த (அவனைவிடாமல்தொடர்ந்து பின்) செல்லத் தொடங்கினாள்; (தொடங்கவே), மா தவர்க்கு அரசு - மிக்க தவத்தையுடைய முனிவர்களுக்குத் தலைவனாகிய இரிசிகன், நோக்கி - (அதனைப்) பார்த்து, 'மா நிலத்து உறுகண் நீக்க - பெரிய நிலவுலகத்திலுள்ள ஜனங்களது (பிறவித்) துன்பங்களை (உன்னிடத்துமூழ்கியதனால்) ஒழிக்கும்பொருட்டு, நதி ஆய் - இந்த ஆற்றின்வடிவமாகவே, போதுக - (பூலோகத்திற்) செல்லுவாயாக,' என்று - என்று (அவளுக்கு) நியமித்துவிட்டு, பூமகன் உலகு புக்கான் - (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றிய குமாரனான பிரமனது லோகத்திற் சென்றுசேர்ந்தான்; (எ - று.)

தனது தவறாத பதிவிரதாதருமத்தின் மகிமையால் தனக்குவேண்டிய நதிவடிவத்தைக் கொண்டு சென்றாள் என்க. காதல் - அன்பு; இதனையுடையவன், காதலன்: அதன் பெண்பால், காதலி; இச்சொற்கள் - தலைவன்தலைவியைமாத்திரமேயன்றி, பிள்ளைபெண்களையும், தோழன்தோழிகளையுங் குறிக்கும். மா - மஹா என்னும் வடமொழித் திரிபு. அரசு - ஆளுந்தன்மை; இது - இங்கு, அரசனுக்குப் பண்பாகுபெயர்: வேந்து, அமைச்சு, தூது, பாகு என்பனவும் இவ்வாறேநிற்கும். சிறந்தவனை அரசனென்றல் மரபு. நிலம் - இடவாகுபெயர். நிலத்து உறுகண் நீக்க என்பதற்கு-இரட்டுறமொழிதலால், பூமியின் (வளமின்மையாகிய) வருத்தத்தை (நீர்ப்பெருக்கத்தால்) ஒழிக்க என்றும் பொருள்கொள்க; "லோகஸ்யஹிதகாமார்த்தம்ப்ரவ்ருத்தா" என்றாரே, ஸ்ரீவால்மீகிபகவான். போதுக - போக என்னும்வியங்கோள்வினைமுற்றினிடையில், து - சாரியை; இதில் பகுதியாகிய போ என்பதைச் சிலர் புகு என்பதன் மரூஉ என்பர். 'போதுகோமதியாய்' எனப்பாடமோதி, கௌசிகை கோமதி என்னும் இரண்டுபெயரும் ஒருநதியையே குறிப்பதாக உரைப்பாருமுளர். (௧௪)

எம்முனாணங்கையிந்தவிருநதியாயினாளென்
றம்முனிபுகலக்கேளாவதிசயமிகவுந்தோன்றச்
செம்மலுமிளையகோவுஞ்சிறிதிடந்தீர்ந்தபின்னர்
மைம்மலிபொழில்யாதென்னமாதவன்கூறலுற்றான்.

(இ - ள்.) எம் முனாள் - எமக்கு முன்பிறந்தவளாகிய, நங்கை - பெண்களிற்சிறந்த அக் கௌசிகையென்பவள், இந்த இரு நதி ஆயினாள் - (தன் கணவன் கட்டளைப்படியே பூலோகத்தில்) இந்தப் பெரிய ஆற்றின் வடிவமானாள், என்று—, அம் முனி - அந்தவிசுவாமித்திரர், புகல - சொல்ல, கேளா - கேட்டு, அதிசயம் மிகவும் தோன்ற - மிகவும் (மனத்தில்) வியப்பு உண்டாக, செம்மலும் - நன்மைக்குணமுடையஸ்ரீராமனும், இளைய கோவும் - இளையபெருமானும், சிறிது இடம் தீர்ந்த பின்னர் - கிஞ்சித்துத் தூரங் கடந்தபிறகு, (ஒருசோலையைக்கண்டு), மை மலி பொழில் யாது என்

ள - (உயர்ச்சிமிகுதியால்) மேகங்கள் படிகின்ற இச்சோலை எத்தன்மைய தென்று (ஸ்ரீராமன்) கேட்க, மா தவன் - மிகுந்த தவத்தையுடைய விசுவாமித்திரர், கூறலுற்றான் - உத்தரஞ்சொல்லத்தொடங்கினார்; (எ - று.)— அது மேல் இருபத்திநான்கு கவிகளிற் காண்க.

இதனால், கௌசிகையினது கொழுநன்சொற்கடவாத கற்பின்பெருமை விளங்குகின்றது. எம் - தனித்தன்மைப்பன்மை. நங்கை - பெண்பாற் சிறப்புப்பெயர்; இதன் ஆண்பால் - நம்பி. முனி-முநி; இதற்கு-கடவுளைத் தியானஞ்செய்பவனென்றும் முக்காலத்து ஞானமுடையவ னென்றும் பொருள்: எல்லாப்பற்றுக்களையும் முனிந்தவன் [வெறுத்து விட்டவன்] ஆதலால் முனி என்று பொருள் கூறலாகாது; வடசொல்லாதலின். கேளா - செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். செம்மல் - பண்பாகுபெயர்; ஆண்பாற்சிறப்புப்பெயர். மேகத்துக்குஞ் சோலைக்குஞ் சம்பந்தமில்லாதிருக்கவுஞ் சம்பந்தத்தைக் கற்பித்துக் கூறியது, தொடர்புயர்வுநவிற்சியணி; இதனை வடநூலார் சம்பந்தாதிசயோக்தி யென்பர்: இதனால், அச்சோலையினது மிக்க உயர்வு தொனிக்கின்றது. இனி, மைம் மலி பொழில் - கருநிறம் பொருந்திய சோலை யென்றும், (அடர்த்தியால்) இருள் நிரம்பிய சோலை யென்று மாம். (௧௫)

தங்களுயகரிற்றெய்வந்தவம்பிறிதிலவென்றெண்ணு
மங்கைமார்சிந்தைபோலத்தூயதுமற்றுங்கேளா
யெங்களுன்மறைக்குந்தேவரறிவிற்கும்பிறர்க்குமெட்டாச்
செங்கண்மாலிருந்துமேனாட்செய்தவஞ்செய்ததன்றே.

விசுவாமித்திரர், அச்சோலையின் தன்மை கூறுவாராய், அதன் சம்பந்தமாக,மகாபலிசக்கரவர்த்தியினது சரித்திரத்தையும், திருமாலினது வாமனாவதாரவிருத்தாந்தத்தையும், திரிவிக்கிரமனாய் உலகமளந்தசெய்தியையும் இதுமுதல் இருபத்துமூன்றுகவிகளாற் கூறுகின்றார்.

(இ - ள்.) (இச்சோலை), 'தங்கள் - தங்களுக்கு, நாயகரின் - கணவரைப்பார்க்கிலும், தெய்வம் - கடவுளும், தவம் - தவமும், பிறிது இல - வேறு இல்லை', என்று எண்ணும் - என்று நினைக்கிற, மங்கைமார் - பதிவிரதைகளாகிய பெண்களது, சிந்தை போல - மனம்போல, தூயது - பரிசுத்தியையுடையது; மற்றும் கேளாய்-இன்னும் (இதன்தன்மையைக்) கேட்பாயாக; நால் மறைக்கும் - நான்குவேதங்களுக்கும், தேவர் அறிவிற்கும் - தேவர்களது புத்திக்கும், பிறர்க்கும்-மற்றை முனிவர் முதலியோர்க்கும், எட்டா - சொரூபமறியவொண்ணாத, எங்கள் செம் கண் மால் - சிவந்த திருக்கண்களையுடைய எங்கள் திருமால், மேல் நாள் - முன் ஒருகாலத்தில், இருந்து - வசித்து, செய் தவம் செய்தது - செய்தற்கு உரிய தவத்தைச் செய்யப்பெற்ற இடமாம்; (எ - று.)—அன்று, ஏ-தேற்றம்.

மகளிர்க்குத் தங்கள் நாயகரில் தெய்வந்தவம் பிறிதில என்பதனை "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை," "குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற" என்பவற்றாலும் அறிக. தெய்வம் - தைவமென்னும் வடமொழித் திரிபு. பிறிதில - ஒருமைப்பன்மைமயக்கம்; தனித்தனி, பிறிது என்க. மங்கைமார், மார் - பலர்பாற் பெயர் விகுதி; மங்கையென்பது, இங்கே பருவப்பெயராகாமற் பெண்களுக்குப் பொதுப்பெயராய் நின்றது: அப்பருவத்துக்கு வயதெல்லை,பன்னிரண்டுமுதற் பதின்மூன்றளவும். சோலைக்குத் தூய்மை - பழிபாவங்களுக்கு

இடமாகாமையும், தவச்சித்திக்கு உரிய தானமாதலும்; இது 'சித்தாச்சி
ரமம்' எனப்படும். 'மற்றுங்கேளாய்' என்றது, இராமனை நோக்கி முனி
கூறியது. நால்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன; இனி,
தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமம் என்பனவுமாம். 'எங்கள்'
எனப் பன்மையாக்கூறியது, மற்றை முனிவர்களையும் உளப்படுத்தி. 'நங்
கள்' என முன்னிலையையுளப்படுத்தும் தன்மைப்பன்மையாற் கூறாமல், 'எங்
கள்'எனப் படர்க்கையுளப்பாட்டுத்தன்மையாற்கூறியது, ஸ்ரீராமபிரான்அத்
திருமாலினது திருவவதாரமென்பதுபற்றியெனக்காண்க. 'எங்கள் செங்கண்
மால்' என்றதனால், விசுவாமித்திரரது விஷ்ணுபக்தி வெளியாகின்றது. எங்
கள் நான்மறையென்றும் இயைக்கலாம்; முனிவர்கள் வேதியரெனப்படுவ
ராதலின். இனி, எங்களறிவிற்கும் என்றுமாம். செங்கண்மால் - புண்ட
ரீகாக்ஷன்; செந்தாமரைக்கண்ணன். அடியார்களை அருளுடன் நோக்கிநோ
க்கிக் கண்கள் சிவந்தனபோலுமென்பார், 'செங்கண்மால்'என்றார். செய்த
வம் - வினைத்தொகை; பண்புத்தொகையாக்கி, செம்மையென்னும் பண்புப்
பெயர் ஈறுபோய் முன்நின்றமெய்திரிந்து செய் என நின்றதெனக் கொண்டு,
செவ்வியதாகிய தவமென்று உரைத்தலுமாம். அனைத்துலகங்களினும்
மேம்பட்டதாகிய பரமபதத்தில் எழுந்தருளியிருக்கிற பகவான் அதனைவிட்
டுத் தவஞ்செய்யும்பொருட்டு வந்திருந்த இடமாகுமெனச் சோலையினது
மகிமையை விளக்கினார். இரண்டாமடி - உவமையணி. 'தெய்வந்தான்
பிறிதிலையென்று' எனவும் பாடம். (௧௮)

பாரின்பால்விசும்பின்பாலும்பற்றறப்படிப்பதன்னான்
பேரென்பானவன்செய்மாயப்பெரும்பிணக்கொருங்குதேர்வா
ராரென்பானமலமூர்த்திகருதியதறிதறேற்றா
மீரைம்பானூழிகாலமிருந்தவமியற்றியிட்டான்.

(இ - ள்.) பாரின்பால் - பூலோகத்திலும், விசும்பின்பாலும் - தேவ
லோகத்திலும், (உள்ளவர்கள்), பற்று அற - தம்தமது சமுசாரபாசபந்தம்
ஒழியும்பொருட்டு, படிப்பது - உச்சரிப்பது, அன்னான் பேர் - அவனது திரு
நாமத்தையே, என்பான் - என்றுசொல்லப்படுபவனும், அவன் செய் - அவன்
செய்கின்ற, மாயம் - மாயையினாலாகிய, பெரு பிணக்கு - பெரிய மாறு
பாட்டை, ஒருங்கு - முழுவதும், தேர்வார் - அறிபவர், ஆர் - யாவருளர்?
[எவருமில்லை], என்பான் - என்றுசொல்லப்படுபவனுமாகிய, அமல மூர்த்தி -
பரிசுத்தமான திருவுருவத்தையுடைய அத்திருமால், கருதியது - (திருவுள்
ளத்தில்) எண்ணிய பயனை, அறிதல் தேற்றாம் - நாம் அறிந்துதெளி
கின்றோமில்லை; (அவன் இங்கு எழுந்தருளி), ஈர் ஐம்பான் ஊழி காலம் - நூ
றூழியவ்வளவு காலம், இரு தவம் இயற்றியிட்டான் - பெரிய தவத்
தைச் செய்திட்டான்; (எ - று.)

"எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற், பிற்படக் கிளவார் முற்ப
டக் கிளத்தல்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரவிதியினால், 'பாரின்பால்'
என உம்மையில்லாதசொல் முன்னும், 'விசும்பின்பால்' என உம்மையுள்ள
சொல் பின்னுமாக வைக்கப்பட்டது. உம்மை - இறந்தது தழுவிய எச்சப்
பொருளது. இன் இரண்டும் - சாரியைகள். பேர் - பெயரென்பதன்மரூஉ.
'என்பான்' என்னுஞ் சொல்லிரண்டும், செய்வினை செயப்பாட்டுப்பொருளில்
வந்தது. மாயை - கூடாததையுங்கூட்டுவிக்குந்திறம்; அகடிதகடநாசா
மர்த்தியம்: பிரபஞ்சகாரணமான பிரகிருதியுமாம். ஆர் - யார் என்பதன்
மரூஉ. அமலன் - மலரஹிதன். 'அமலமூர்த்தி' என்பது, யாதொருகுற்ற

மும் இயற்கையிலேயே தன்னிடஞ்சேரப்பெறுதவன் என்னும்பொருளோடு தனக்குச்சரீரமாகவுள்ளசராசரங்களின் சம்பந்தத்தாலாய குற்றமுந்தொடரப்பெறுதவனென்னுங் கருத்தையும் உடையது. கருதியது - வினையாலணையும்பெயர். அவர் கருதியது - தவஞ்செய்யுநிலைமை இன்னதென்பதை உலகத்தார் யாவர்க்குந் தெரிவிக்கவேண்டுமென்பதுபோலும்; குருசிஷ்யக்கிரமத்தை உலகத்தார்க்குப் புலப்படுத்தும் பொருட்டுப் பதரிகாச்சிரமத்தில் தாமே நாராயணனென்னுங்குருவின்வடிவமும் நரனென்னுஞ்சிஷ்யனதுவடிவமுமாகிநின்றதுபோல. தேற்றும் என்னுந் தனித்தன்மைப்பன்மைத் தன்வினைமுற்றில் எதிர்மறையாகாரம் புணர்ந்துகெட்டது. ஊழி - நெடுங்காலம்; இங்கே யுகமென்றபடி: "வர்ஷாணி ஸஹப கூங்யேவ ததாயுகசதாநிச" என்பது வால்மீகமாதலால். இயற்றியிட்டான், இடு - துணிவுப்பொருளுணர்த்திற்று. ஐம்பது என்பது ஐம்பான் என ஈறுகெட்டு ஆன்சாரியைபெற்றது: "ஒன்று முதலெட் டீறுமெண்ணூர்,பத்தின்முன்வரிற் பவ்வொற் றொழியமே,லெல்லா மோடுமொன்பது மிற்றே" என்னும் விதியால். (கஎ)

வேறு.

ஆனவனிங்குறைகின்றவந்நாள்வா
யூனமின்ஞாலமொடுங்குமெயிற்று
ஏனமெனுந்திறன்மாவலியென்பான்
வானமும்வையமும்வௌவுதல்செய்தான்.

(இ-ள்.) ஆனவன் - அத்தன்மையனாகிய திருமால், இங்கு - இச்சோலையிலே, உறைகின்ற - (தவஞ்செய்து) வசிக்கின்ற, அந் நாள்வாய் - அக்காலத்தில், ஊனம் இல் ஞாலம் ஒடுங்கும் - குறைவில்லாமல்நிறைந்த இப்பூலோகமுழுவதும் அடங்கின, எயிறு - வக்கிரதந்தத்தையுடைய, ஆண் ஏனம் எனும் - ஆண்பன்றி [வராகமூர்த்தி] என்றுசொல்லத்தக்க, திறல் - வல்லமையையுடைய, மா வலி என்பான் - மகாபலியென்பவன், வானமும் - விண்ணுலகத்தையும், வையமும் - மண்ணுலகத்தையும், வௌவுதல் செய்தான் - (அததற்கு உரிய அரசர்களிடத்தினின்று தனது ஆற்றலால்) பறித்துத் தன்வசப்படுத்தினான்; (எ - று.)

நாள்வாய், வாய் - ஏழனுருபு; "கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின், முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல், பின்பா டளைதே முறைவழி யுழியுளி, யுள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே" என்பது காண்க. முன்னொருகாலத்திற் பூமியைப் பாயாகச்சுருட்டியெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப்போன இரணியாக்கனென்னும் அசுரராசனைத் திருமால் தேவர்முனிவர்முதலியோரது வேண்டுகோளின்படி வராகரூபமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற்குத்தி எடுத்துக்கொண்டுவந்து விரித்தருளினரென்பது வரலாறு; ஒருபிரளயத்திற் சமுத்திரஜலத்தில் மூழ்கிப்போன பூமியை ஸ்ரீமகாவிஷ்ணு வராகவடிவங்கொண்டு எடுத்துவந்தனரென்னுங் கதையும் உண்டு: அன்றியும், விஷ்ணு ஆதிவராகரூபியாய்ப் பூமியின்கீழிருந்து அதனைத் தாங்கிநிற்கின்றனரென்றும் புராணங்கூறும். பூமியைத்தரிப்பதில் வராகமூர்த்திக்குச் சிறிதுஞ் சிரமமில்லாததுபோல எளிதிலே உலகமுழுவதையும் ஆளும் வல்லமையுடையவன் மகாபலி யென்றபடி. 'எயிற்றின்' என்றும்பாடம். எயிறு - கோரப்பல். மாவலி - வடசொற்சிதைவு. ஊனமில் - அகண்டமான என்றபடி.

இதுமுதற் பதினேந்துகவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று தேமாச்சீரும், மற்றைமூன்றுங் கூவிளச்சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்ட சந்தக்கலிவிருத்தங்கள். (க௮)

செய்தவர்வானவருஞ்செயலாற்று
நெய்தவழ்வேள்வியை முற்றிடநின்றான்
ஐயமில்சிந்தையனந்தணர்தம்பால்
வையமும்யாவும்வழங்கவலித்தான்.

(இ - ள்.) ஐயம் இல் சிந்தையன் - (தன்னை எவராயினும் வென்று விடுவரோ என்கிற) சங்கை யில்லாத மனத்தையுடைய அந்தச்சக்கரவர்த்தி, செய் தவர் - செய்த தவத்தையுடைய முனிவர்களும், வானவரும் - தேவர்களும், செயல்ஆற்று - செய்துமுடித்தல்கூடாத, நெய் தவழ் வேள்வியை - நெய்யை நிரம்பச் சொரிகின்றவொரு பெருயாகத்தை, முற்றிட - முடித்தற்கு, நின்றான் - தொடங்கினின்று, வையமும் - பூமியையும், யாவும் - (கொடுத்தற்கு உரிய) மற்றை யெல்லாப் பொருள்களையும், அந்தணர் தம் பால் - பிராமணர்களிடத்து, வழங்க - தானஞ்செய்ய, வலித்தான் - நிச்சயித்தான்; (எ - று.)

கீழ்'பாரின்பால் விசும்பின்பாலும்' என்றவிடத்துக் கூறிய இலக்கணத்தை இங்கே 'செய்தவர் வானவரும்' என்றதற்குங் கொள்க. ஐயமாவது - பலதலையாய அறிவு; சந்தேகம். அந்தணர் - அழகிய தண்மையை [குளிர்ந்த அருளை] உடையவர்; இது - பிராமணர்க்குக் காரணவிடுகுறிப்பெயர்: அன்றிக்கே, அந்தத்தை அணவுவார் - அந்தணர்; என்றது - வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார் என்றுமாம். பிராமணர்க்கு வேண்டுவார் வேண்டுவன ஈவானென்க. ஐயமில் சிந்தையன் என்பதற்கு - தேவர்மூவருள் யாவர்பரதத்துவமோ எனகிற சந்தேகமில்லாதவனென்றும் பொருள்கொள்வர்; திருமாலே பரம்பொருளென்று துணிந்த மகாவிஷ்ணுபக்தனென்று கருத்து: இதனால், இவன்செய்கிறது திருமாலின் ஆராதனரூபமானதொரு யாக மெனவறிக. ஐயமில் சிந்தையன் - தான்தொடங்கும் பெருவேள்வியும்மகாதானமும் முடியுமோ முடியாதோவென்னுஞ் சங்கை யில்லாதவ னெனினுமாம். (க௯)

ஆயதறிந்தனர்வானவரந்நாள்
மாயனைவந்துவணங்கியிரந்தார்
தீயவன்வெந்தொழிறீரெனநின்றார்
நாயகனும்மதுசெய்யநயந்தான்.

(இ - ள்.) வானவர் - தேவர்கள், ஆயது - ஆகிய அச்செய்தியை, அறிந்தனர் - அறிந்து, அந் நாள் - அக்காலத்தில், வந்து - (இச்சோலைக்கு) வந்து, மாயனை - திருமாலை, வணங்கி - நமஸ்கரித்து, இரந்தார் - (தமது குறையைச்சொல்லி) யாசித்து, தீயவன் வெம் தொழில் தீர் என - கொடியவனாகிய பலியினது கொடுஞ்செய்கையை ஒழித்தருளுவாய் என்று, நின்றார் - வேண்டிநின்றார்கள்; (அதற்கவே), நாயகனும் - (யாவர்க்கும்) தலைவனாகிய திருமாலும், அது செய்ய - அத்தேவர்வேண்டுகோளைச் செய்தற்கு, நயந்தான் - விரும்பினான்; (எ - று.)

மாயன் - மாயையையுடையவன்; ஆச்சரியகரமான குணங்களையுஞ் செயல்களையும் உடையவனென்றும், கருநிறமுடையவனென்றுங் கொள்ளலாம். தேவர்களை ஒருபொருளாக மதியாமல் அக்கிரமமாக அவர்களோடு

போர்செய்து வென்று இந்திரனது மூவுலகத்தரசாட்சியைக் கைப்பற்றியவனாதலால், 'தீயவன்' எனப்பட்டான். அவனது வெந்தொழிலைத் தீர் என்றது - திரிலோகாதிபத்தியத்தைப்பறித்து அவனை அடக்கிவிடு என்றபடி. தீர் - வினைப்பகுதியே ஓசைவேறுபாட்டால் ஏவலொருமைப்பொருளுணர்த்திற்று; ஆய்விகுதி புணர்ந்துகெட்டதென்றுங் கூறுவர். நாயகனும்மதி - மகரமெய், சந்தஇன்பம்நோக்கிய விரித்தல்விகாரம். அது - மகாபலிநிக்கிரகம். தன்னுடைய பக்தனுக்கு இடையூறுஇழைக்கத் திருவுள்ளங்கொள்ளுதல் திருவருளுடைய திருமாலுக்கு அடுக்குமோ என்னில்;—தன்மக்கள்பலருள் ஒருவனுக்கு இடுக்கண் இயற்றுகின்ற மற்றொருவனைத் தண்டிப்பது தந்தைக்குக் கடமையாவதுபோல, தனதுபக்தருளொருவனாகிய இந்திரனுக்குத் தீங்குசெய்த பலியைச் சிக்ஷிப்பது கடவுளுக்குக் கடமையேயாமென்க: அன்றியும், அடியவனேயாயினும் அபராதஞ்செய்தவனை ஒறுப்பது உயர்ந்தோர்முறைமையே; "தெய்வ முளதென்பார் தீய செயப்புகின், தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் - தெய்வ, மிலதென்பார்க் கில்லைத்த மின்புதல்வர்க் கன்றே, பலகாலுஞ் சொல்வார் பயன்" என்பதன் நீதியையும் உணர்க. (௨௰)

காலநுணித்துணர்காசிபனென்னும்
வாலறிவற்கதிதிக்கொருமகவாய்
நீலநிறத்துநெடுந்தகைவந்தோ
ராலமர்வித்தினருங்குறளானான்.

(இ - ள்.) (இங்ஙனம் விரும்பிய), நீலம் நிறத்து நெடு தகை - கரியதிருமேனிநிறத்தையும் பெருமைக்குணங்களையுமுடைய திருமால், (உடனே), காலம் நுணித்து உணர் - முக்காலத்துவிஷயங்களையும் சூட்சுமமாக ஆராய்ந்தறிகின்ற, காசிபன் என்னும் - காசியபரென்கிற, வால் அறிவற்கு - சுத்தமான) தத்துவஞானத்தையுடையமுனிவருக்கும், அதிதிக்கு - (அவரதுமனைவியான) அதிதிதேவிக்கும், ஒரு மக ஆய் வந்து - ஒருகுமாரனாய்த்திருவவதரித்து, ஓர் ஆல் அமர் வித்தின் - (பெரிய) ஆல் மரமுழுவதும் உள்ளேயடங்கியிருக்கப்பெற்ற (சிறிய) அதன்விதையொன்றுபோல, அரு குறள் ஆனான் - அரியவாமனவடிவமானான்; (எ - று.)

காசிபன் - காஸ்யபன்என்னும்வடசொற்றிரிபு. இவர் - சிருஷ்டிகாரியத்தில் தனக்குத்துணைவராகும்படி பிரமனாற் படைக்கப்பட்டவர்களும், அதனால் உபப்பிரமாக்களென்று உயர்த்திக்கூறப்படுபவர்களும், படைத்தற்றொழிலிற்பிரமனுக்குச்சமானமானவராகையாலே நவப்பிரஜாபதிகளெனப் பேர்பெற்றவர்களுமாகிய ஒன்பதின்மருள் ஒருவர்; இவரை மரீசியென்பவரது புத்திரரென்று முதனூல்கூறும்: கச்யபரென்பவரது குமாரரென்று பிறிதுநூலிற்கூறப்பட்டுள்ளது. இவர்க்கு அதிதி, திதி, தநு, மநு முதலாகப் பலர் மனைவிமார் உண்டு. அவர்களுள், அதிதி - தேவர்தாய். வாலறிவு - மெய்யுணர்வு. மகவு - இளமை; இங்கு, மகனுக்குப்பண்பாகுபெயர். நெடுந்தகை - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ஆலமர்வித்து - முன் மிகச்சிறியதாயிருந்து பின்மிகப்பெரியதாதல்பற்றி உவமை. "உறக்குந்துணையதோராலம்வித் தீண்டி, யிறப்பநிழற்பயந்தாஅங்கு." 'தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை, தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன்சினையினு, நுண்ணிதேயாயினு மண்ணல்யானை, யணிதேர்ப்புரவி யாட்பெரும்படையொடு, மன்னர்க்கிருக்க நிழலாகும்மே" என்பவை இங்கேபார்க்கத்தக்கன. சிறுமையுணர்த்துங் குறளென்னும் பண்புப்பெ

யர், ஆருபெயராய்ச் சிறியவடிவத்தை உணர்த்திற்று. இரண்டடியளவு சிறியது குறள் என்றும், மூன்றடியளவு சிறியது சிந்து என்றும் சொல்லப்படும். மிகக்குள்ளமானவடிவமென்பார் 'அருங்குறள்' என்றார்; இத்தன்மைய குறள் உலகத்தில் அரிய தென்றவாறும்: அரு - அறிதற்கருமையான என்றுமாம். நெடுந்தகைகுறளானான்என விரோதாபாசமென்னும் அலங்காரஞ் சிறிது தோன்றக் கூறினார். மகவாய்க்குறளானான் - குறள்மகவானானென்றபடி. வித்தின், இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது. (உக)

முப்புரிநூலினன்முஞ்சியன்விஞ்சை
கற்பதொர்நாவனனற்படுகைய
னற்புதனற்புதரேயறியுந்தன்
சிற்பதமொப்பதொர்மெய்க்கொடுசென்றான்.

(இ - ள்.) அற்புதன் - ஆச்சரியகாமான குணங்களையுஞ் செயல்களையுமுடைய திருமால், முப்புரிநூலினன் - மூன்றுவடமாகிய பூணூலையுடையவனும், முஞ்சியன் - முஞ்சிப்புல்லாலாகிய அரைநாணையுடையவனும், விஞ்சை கற்பது ஓர் நாவன் -வேதமந்திரத்தையுச்சரிக்கின்ற ஒப்பில்லாத நாக்கையுடையவனும், அனல் படு கையன்-அக்கினி பொருந்திய திருக்கையையுடையவனுமாய், அற்புதரே அறியும் - வியக்கப்படுகின்ற ஞானவான்கள் மாத்திரமே அறியத்தக்க, தன் சித்பதம் - தனது ஞானசொரூபத்தை, ஒப்பது-ஒத்து (எவர்க்கும் எளிதில் அறிதற்கரிதாய்)உள்ளதான, ஓர் மெய் கொடு - ஒரு (சிறிய)திருவுருவைக் கொண்டு, சென்றான் - (மாவலிபக்கல்) போனான்; (எ - று.)

வடமும் வடத்திற்புரியும் புரியில்நூலிழையும் தனித்தனி மூன்றாயிருத்தலால், முப்புரிநூலென்றும் மூந்நூலென்றும் யஜ்ஞோபவீதத்திக்குப் பெயர்; "ஒன்பதிகொண்டமூன்றுபுரிநுண்ஞாண்" என்னுந் திருமுருகாற்றுப்படையையும், 'மூந்நூற்கொண்டு முப்புரியாக்குதலின் ஒன்பதாகிய நூலைத் தன்னிடத்தேகொண்ட ஒருபுரி மூன்றாகிய நுண்ணிய பூணுநூலையும்' என்னும் அதன் நச்சினார்க்கினியருரையையும் இங்கே உணர்க. "நூலேகரகமுக்கோன்மணையே, யாயுங்காலையந்தணர்க்குரிய" என்னுஞ் சூத்திரத்தால் மூந்நூலும்,இச்சூத்திரத்து 'ஆயுங்காலை' என்றதனால்முஞ்சிமுதலியனவும் அந்தணர்க்குஉரியனவாதல் காண்க. இப்பாட்டின் முதலிரண்டடிகளாற் பிராமணப்பிரமசாரியென்பதுவிளங்கும். விஞ்சை - வித்யாஎன்னும் வடமொழிச்சிதைவு. பார்ப்பாரது வலக்கையில் நெருப்பு இருப்பதென்பது நூற்றுணிபு. அத்புதன் - அற்புதன், சித்பதம் - சிற்பதம் என வடமொழித் தகாம் றகாமாகத்திரிந்தது. அற்புதரே என்ற பிரிநிலையேகாரத்தால், பிறர்அறியாரென்பது விளங்கும். கொடு - கொண்டு என்பதன் விகாரம். அனற்படுகையன் என்பதற்கு - (சமிதாதானத்தால் பிரதிதினமும் காலைமாலைகளில்) அக்கினியைவளர்க்குங் கையையுடையானென்றும் உரைக்கலாம். முப்புரிநூலினன் என்றது - இங்கே, ஒற்றைப்பூணூலுடையானென்றபடி. (உஉ)

அன்றவன்வந்ததறிந்துலகெல்லாம்
வென்றவன்முந்திவியந்தெதிர்கொண்டா
னன்றனினந்தணரில்லைநிறைந்தோ
யென்றனினுய்ந்தவர்யாரினியென்றான்.

(இ - ள்.) அன்று - அந்நாளில், அவன் - அவ்வாமனமூர்த்தி, வந்தது - (தன்னிடம்) எழுந்தருளியதை, உலகு எல்லாம் வென்றவன் - எல்

லாவுலகங்களையுஞ் சயித்த பலிச்சக்கரவர்த்தி, அறிந்து-உணர்ந்து, வியந்து-(அவ்வடிவத்தைப் பார்த்து) ஆச்சரியப்பட்டு, முந்தி - முற்பட்டுச்சென்று, எதிர்கொண்டான்- எதிர்கொண்டு அழைத்துவந்து, (அவனைநோக்கி), 'நிறைந்தோய் - (எல்லாக்குணங்களாலும்) நிறைந்தவனே! நின்தனின் - உன்னினும் (சிறந்த), அந்தணர் - பிராமணர், இல்லை - (உலகத்தில்) இலர்; (ஆதலால்), என்தனின் - (இப்படிப்பட்ட உன்னை எளிதிலே தரிசிக்கப்பெற்ற) என்னைப்போல, உய்ந்தவர் - ஈடேறினவர், இனி யார் - வேறு யாவருளர்? [எவருமில்லை],' என்றான் - என்று (இன்சொற்) சொன்னான்; (எ - று.)

பெரியோரை எதிரேபோய் அழைத்துவந்து உபசரித்தல் மரியாதை. நின்தனின் என்தனின் என்ற இடங்களில், இன் என்னும் ஐந்தனுருபு - முறையே உறழ்பொருவிலும், ஒப்புப்பொருவிலும் வந்தது. நிறைந்தோய் - நிறைந்தானென்பதன் ஈறுதிரிந்தவிளியாகிய நிறைந்தாயென்பது ஆ ஓவாயிற்று. எங்கும் நிரம்பியவனே என்கிற பொருளுந் தோன்ற 'நிறைந்தோய்' என்கிறசொல்லைக் கவி உபயோகித்தார். உய்தல் - உஜ்ஜீவித்தல், பெருமைபெறுதல், கிருதார்த்தனாதல். இனி - இடைச்சொல். அளவிடப்படாத பிரமதேஜஸை உற்றுநோக்கி உய்த்துணர்ந்து 'நின்றனினந்தணரில்லை' என்றான். (௨௩)

ஆண்டகையவ்வழிகூறவறிந்தோன்
வேண்டினர்வேட்கையின்மேற்படவீசி
நீண்டகையாயினிநின்னுழைவந்தோர்
மாண்டவரல்லவர்மாண்பிலரென்றான்.

(இ - ள்.) ஆண் தகை - ஆண்மைக்குணத்தையுடைய மகாபலி, அவ் வழி கூற - அவ்வாறு சொல்ல, அறிந்தோன் - (எல்லாவற்றையும்) உணர்ந்த வாமனமூர்த்தி, (அவனைநோக்கி), 'வேண்டினர் - விரும்பியாசித்தவர்களது, வேட்கையின் - விருப்பத்தினும், மேற்பட - அதிகமாக, வீசி - (பொருள்களை) எடுத்தெடுத்து விரைந்துகொடுத்து, நீண்ட - நீளுந்தன்மையுள்ள, கையாய் - கையையுடையவனே! இனி - இனிமேல் [இப்படிப்பட்ட உதாரகுணமுள்ள நீ உளனான பின்பு], நின்னுழை வந்தோர் - உன்னிடத்து (யாசிக்க) வந்தவர்கள்தாமே, மாண்டவர் - மாட்சிமைப்பட்டவர்கள்; அல்லவர் - உன்னிடம் வாராதவர்களோ என்றால், மாண்புஇலர் - சிறப்பில்லாதவராவர்,'' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

இவனிடம் வந்து இரப்பார் வேண்டுவனவற்றினும் மிகுதியாகப் பெறுதலாலும், பிறரிடம் வேண்டுவனவற்றைப் பெறுதலும் அரிதாதலாலும், 'நின்னுழைவந்தோர்மாண்டவ ரல்லவர்மாண்பிலர்' என்றார். ஆண்டகை - பண்புத்தொகையன்மொழி. வேட்கை - தொழிற்பெயர்; வேள் - பகுதி, கை - விகுதி. மாண்பு - பண்புப்பெயர்; பு - விகுதி, மாண்-பகுதி. (௨௪)

சிந்தையுவந்தெதிரென்செயவென்றா
னந்தணன்மூவடிமண்ணருளுண்டேல்
வெந்திறலாயிதுவேண்டுமெனாமுன்
றந்தனெனென்றனன்வெள்ளிதடுத்தான்.

(இ - ள்.) (அதுகேட்டு மாவலி), சிந்தை உவந்து - மனம் மகிழ்ந்து, எதிர் - (அவ்வாமனன்வார்த்தைக்கு) உத்தரமாக, என் செய என்றான் - (நான்) என்னசெய்யவேண்டுமென்று கேட்டான்; (உடனே), அந்தணன் - வாமனன், (அவனைநோக்கி), 'வெம் திறலாய் - (பகைவர்க்குக்) கொடிய

வலிமையையுடையவனே ! அருள் உண்டு ஏல் - (என்பக்கல் உனக்குக்) கருணை உளதானால், மூ அடி மண் இது - (என்காலால்) மூன்றடியளவு நிலமாகிய இது, வேண்டும் - (எனக்குத் தரல்) வேண்டும்,' எனா முன் - என்றுசொல்லிமுடித்தற்குமுன்னே, தந்தனென் என்றனன் - கொடுத்தேனென்று (மாவலி) சொன்னான்; வெள்ளி தடுத்தான் - (அருகிலிருந்த அசுரகுருவாகிய) சுக்கிரன் (அதனைத்) தடுப்பானாயினான்; (எ - று.)

இனி, உண்டேல் - (உன்னிடம்) உள்ளதானால் [கொடுத்தற்கு இசைவதானா லென்றபடி], மூ அடி மண் அருள் - மூன்றடிநிலங் கொடு; இது வேண்டும்என்றுமாம்; இவ்வுரைக்கு 'உண்டேல்' என்றது, "இசையாவொருபொருளில்லென்றல்யார்க்கும், வசையன்றுவையத்தியற்கை" என்பதை அநுசரித்ததுபோலும். சிந்தை - சிந்தா என்னும் வடமொழித் திரிபு. செய - அகரவிகுதிபெற்றுவந்த வியங்கோள்முற்று; வர, எழுந்தருள என்பனபோல: இங்கே, செய்வேனாக என்று பொருளாதலால், தன்மையொருமை. ஏல் - என்னில் என்பதன் மரூஉ. எனாமுன் - ஒருவகை எதிர்மறைவினையெச்சம்; என்னாதமுன் என எதிர்மறைப்பெயரெச்சத்தொடராகவுமாம். எனாமுன் தந்தனெனென்றனன் என்றது - காரணத்தின்முன் காரியம்நடந்ததாகச் சொல்லியதனால், மிகையுயர்வுநவிற்சியணி; வடநூலார் அத்யந்தாதிசயோக்தியென்பர்: காரணம்முன்னும் காரியம் அதன்பின்னும் நிகழ்தலாகிய முறையில் முறைபிறழ்வு ஆரோபிக்கப்பட்டது; இது, காரியவிரைவைச்சொல்லுவது. 'தந்தனென்' என இறந்தகாலமாக்கூறியதும், விரைவுந் துணிவும் பற்றிவந்த காலவழுவமைதியேயாம். வெள்ளி - வெண்ணிறமுடையவன்; இ - பெயர்விகுதி. (௨௫)

கண்டதிறத்திது கைதவமைய
கொண்டனிறக்குறளென்பதுகொள்ளே
லண்டமுமுற்றுமகண்டமுமேனா
ளுண்டவனாமிதுணர்ந்துகொளென்றான்.

இது, சுக்கிரன்வார்த்தை.

(இ - ள்.) 'ஐய - தலைவனே! கண்ட திறத்து இது - (நம்மால் எதிரிற்) பார்க்கப்பட்ட தன்மையையுடைய இவ்வடிவம், கைதவம் - வஞ்சனையாம்; கொண்டல் நிறம் குறள் என்பது கொள்ளேல் - நீர்கொண்ட காளமேகம் போன்ற கருநிறத்தையுடையதொரு வாமனனென்பதாக எண்ணாதே; அண்டமும் - எல்லா அண்டங்களையும், முற்றும் - (அவ்வண்டங்களிலுள்ள) எல்லாப்பொருள்களையும், அகண்டமும் - அனைத்தையும், மேல் நாள் - முன் ஒரு காலத்தில், உண்டவன் ஆம் - அமுதுசெய்த திருமாலாகும் (இவன்); இது உணர்ந்துகொள் - இந்தரகசியத்தை (நீ) அறிந்துகொள்,' என்றான் - என்று (சுக்கிராசாரி மகாபலிக்குச்) சொன்னான்; (எ - று.)

'ஆர்ய' என்னும் வடமொழி, பிராகிருத பாஷையில் 'அய்ய' என்று ஆகி, தமிழில் 'ஐய' என நின்றது; நன்குமதிக்கத்தக்கவனென்று பொருள். இனி, ஐய என்பதை - "ஐவியப்பாகும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தின்படி அதிசயமென்றபொருளைத்தருகிற ஐஎன்கிற உரிச்சொல்லின்மேற் பிறந்த குறிப்புப்பெயரெச்சமெனக்கொண்டு, ஆச்சரியப்படத்தக்க என்று உரைத்து, குறளுக்கு அடைமொழியாக்கலும் ஒன்று. கொண்டல் - கொள் என்னும் பகுதியின்மேல் வந்த தொழிலாகுபெயர்போலும். கொள்ளேல் - எதிர்மறையேவலொருமைமுற்று; கொள்ளுதல் - உட்கொள்ளுதல், கருதுதல்: ஏல் - விகுதி. அகண்டம் - சிறிதும் ஒழியாதது. உண்ணுதல் -

புசித்தல், உள்ளேகொள்ளுதல். பிரளயசமுத்திரத்தில் திருமால் ஒருசிறு குழந்தைவடிவமாய்ச் சிறியதோர் ஆலிலையின்மேல் உலகங்களையெல்லாந் தமது திருவயிற்றிலே அடக்கிவைத்துக்கொண்டு அறிதுயிலமருகின்றனரென்பது நூற்கொள்கை. சுக்கிரபகவான் தவமிகுதியால் ஞானக்கண் பெற்றுள்ளவனாதலால், இக்கடவுளின்மாயையை அறிந்தான். 'உணர்ந்துகொள்' என்றது, 'இவனுக்குத்தானஞ்செய்யாதே, செய்தால் உடனே தீங்குவரும்' என்றவாறும். இங்ஙனம் பின்வருந் தீமைநன்மைகளைத் தெரிவித்தல் புரோகிதர்கடமையாம். (உசு)

நினக்கிலையென் கைநிமிர்ந்திடவந்து
தனக்கியலாவகைதாழ்வதுதாழ்வில்
கனக்கரியானது கைத்தலமென்னி
னெனக்கிதன்மேனலம்யாதுகொலென்றான்.

இதுமுதல் எழுகவிகள் - மாவலிவார்த்தை.

(இ - ள்.) (அதுகேட்டு மாவலி சுக்கிரனை நோக்கி), 'என் கை நிமிர்ந்திட-எனது (கொடுக்குங்) கை உயர்ந்து மேலாக இருக்க, வந்து தனக்கு இயலாவகை தாழ்வது-(அதன்கீழ்) வந்து தனது பெருமைக்குத் தகாதபடி தாழ்ந்திருப்பது, தாழ்வு இல் கனம் கரியானது கைத்தலம் என்னின்-ஒருகுறைவுமில்லாத நீர்கொண்டமேகம்போற்கருநிறமுடைய திருமாலினது திருக்கையிடமென்றால், எனக்கு இதன்மேல் நலம் யாது - எனக்கு இதனினும்மேம்பட்ட நன்மை என்ன இருக்கிறது? [ஒன்றுமில்லை]; நினக்கு இலை - (இவ்வறிவு) உனக்கு இல்லையே,' என்றான் - என்று சொன்னான் ; (எ - று.)

யாவரினுஞ்சிறந்த திருமால்தானே தனதுபெருமையனைத்தையும் இழந்து சிறுயாசகனாய் என்னிடம்வந்து ஒருபொருளை வேண்டுவானானால் அவனுக்கு அதனைக்கொடுத்துப் பெருமைபெறுதலின் மிக்கசிறப்பு எனக்கு வேறொன்று உளதோ என்றான். எல்லாப்பொருளையும் இழந்தாயினுந் தவறாமற்பெறுதற்குஉரியபேறு இதுவாகுமென்று பலி கருதினான். 'நினைக்கில' என்னும் பாடத்துக்கு - (நீ இவ்விலாபத்தைச் சிறிதும்) நினையாது விட்டாய் என்றுபொருள். 'தனக்கு இயலா வகை' என்றதனால், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றினும் அடைதற்குரிய எல்லாச்செல்வங்களையும் அடியார்களுக்கு எடுத்துக்கொடுக்கின்ற திருமாலின் ஔதாரியத்தைக் குறிப்பித்தான். 'தாழ்வில்' என்றதனால், எம்பெருமானது குணபூர்த்தியும் பரத்துவமும் வெளியிடப்பட்டவாறும். கைத்தலம் என்றது-அகங்கையென்றபடி. புருஷோத்தமனுக்குத் தானஞ்செய்வது சர்வோத்தமமன்றோ வென்பதாம். 'யாது' என்னும் வினாக்குறிப்புமுற்று, இங்கே இன்மை குறித்துநின்றது; ஆதலால், கொல்-அசைநிலை. தனக்கு நற்புத்தி உபதேசிக்கவந்த குருவை இங்ஙனம் உபேக்ஷித்தது, தானத்தினிடத்துள்ள அபேக்ஷைமிகுதியாலென்க. திருமாலின்மாயை இவ்வாறு அவனுக்கு அறிவை விளைத்தது. கரியான்என்பது-கிருஷ்ணனென்னும்வடசொல்லின் மொழிபெயர்ப்பு; இது திருமாலின் அவதாரப்பெயரன்றிக்கே இயற்கைப்பெயராதலை "சுவணவண்ணனெடுகண்ணனுறைதோளன்" என்றதுகொண்டும் உணர்க. நலம்-பண்புப்பெயர்; அம் - விகுதி. 'கரியானிருகைத்தலம்' எனவும்பாடம்.

துன்னினர்துன்னலரென்பதுசொல்லார்
முன்னியநன்னெறிநூலவர்முன்வந்
துன்னியதானமுயர்ந்தவர்கொள்க
வென்னினிவன்றனையாவருயர்ந்தார்.

(இ - ள்.) முன்னிய - (யாவராலும்) மதிக்கப்படுகின்ற, நல் நெறி - சன்மார்க்கத்தைச் சொல்லுகிற, நூலவர் - தருமசாஸ்திரத்தை அறிந்த பெரியோர்கள், 'துன்னினர் - (நமக்கு) வேண்டியவர்கள்தாம் (தானஞ்செய்யப்படுதற்கு உரியவர்); துன்னலர் - வேண்டாத பகைவர் (தானஞ்செய்யப்படாதவர்),' என்பது - என்னும் வார்த்தையை, சொல்லார் - சொல்லாதவர்களாய், 'உன்னிய தானம் - (தாங்) கருதிய பொருட்கொடையை, உயர்ந்தவர் - மேன்மையையுடையவர்கள், முன் வந்து - (கொடையாளிகளின்) எதிரில் வந்து, கொள்க - பெற்றுக்கொள்ளக்கடவர்,' என்னின் - என்று சொல்வார்களானால் [என்றுசொல்வதனாலென்றபடி], இவன் துணை உயர்ந்தார் யாவர் - இவனுக்குஒப்பாக மேலோர் யாவருளர்? [எவருமில்லை].

'அசுரசாதியாராகிய நாம் அசுரர்க்குத் தானஞ்செய்வது தருமேயல்லாமல் எதிரான தேவசாதியிற் சேர்ந்த திருமாலுக்குத் தானஞ்செய்தல் கூடாது என்பையாயின், வேண்டியவர் வேண்டாதவ ரென்று கருதாமற் சற்பாத்திரங்களிற் கொடுக்கவேண்டுமென்பதே தானவிதியாதலால் நீ கூறுவது நீதியன்று, சற்பாத்திரங்களை ஆராய்ந்தால் இவனுக்கு ஒத்தவராயினும் மிக்கவராயினும் உளரோ' என்றான். துன்னினர் - சேர்ந்தவர்; இறந்தகாலவினையாலணையும்பெயர்: என்றது - நண்பரையும், உறவினரையும். துன்னலர் - சேராதவர்; எதிர்மறைவினையாலணையும்பெயர்: என்றது, பகைவரை. சொல்லார் - முற்றெச்சம். நூல் - சாஸ்திரத்துக்கு உவமவாகுபெயர்; பஞ்சினால் நூற்கப்படும்நூல்போலச் சொல்லாற்கோக்கப்படுதலாலும், நூல் மரம்முதலியவற்றின் கோணலைத் தீர்ப்பதுபோல மனத்தின்கோணலைத்தீர்த்துச் செப்பஞ்செய்தலாலும் வந்த பெயரென்று அறிக. முன் - இடமுன். என்னின் என்னும் எதிர்காலவினையெச்சம், தேற்றப்பொருளுணர்த்திற்று; இவ்வாறு வடமொழியிலும் வரும். திருமாலே உத்தமோத்தமனென்பது ஈற்றடியின் கருத்து. (உஅ)

வெள்ளியையாதல்விளம்பினைமேலோர்
வள்ளியராகவழங்குவதல்லா
லெள்ளுவவென்சிலவின்னுயிரேனுங்
கொள்ளுதறீதுகொடுப்பதுநன்றால்.

(இ - ள்.) வெள்ளியை ஆதல் - (நீ) வெள்ளியென்று சொல்லப்படுவாயாதலால், விளம்பினை - இவ்வாறு சொன்னாய்; மேலோர் - மேன்மையையுடையவர்கள், வள்ளியர் ஆக - வரையாதுகொடுப்பவராக, வழங்குவது அல்லால் - (யாசகர்கேட்ட எப்பொருளையும்) கொடுப்பதேயல்லாமல், எள்ளுவ - (அம்மேலோர்களாற் கொடுக்கப்படாதவையென்று) விலக்கப்பட்டவையாகிய, சில - சிலபொருள்கள், என் - எவை? [எவையுமில்லை யென்றபடி]; இன் உயிர் ஏனும் - (தனது) இனிய உயிரையேயானாலும், கொள்ளுதல் - யாசித்துப்பெறுதல், தீது - துன்பந்தருவது; கொடுப்பது - (தனது இனிய உயிரையேயாயினும் யாசகனுக்குத்) தானஞ்செய்வது, நன்று - இன்பந்தருவது; (எ - று.) — ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

'உன்னிடம் இப்பொழுது யாசகனாய்வந்தவன் மாயவனாதலால், அவன் கேட்டதைக் கொடுத்தல் கூடாது என்பையாயின், எதைக்கேட்டாலுங் கொடுப்பது வள்ளல்களுக்கு உரிய குணமாதலால் அதுவும் அங்கீகரிக்கப்படமாட்டாது' என்றான். 'வெள்ளியை' என்பதிற் சிலேடையாக, வெள்ளியென்னும் பெயரையுடையாய் என்றும், அறியாமையையுடையாய் என்றும் இரண்டுபொருள் படும். வெண்மையாவது - அறிவுமுதிராமை; புல்

லறிவுடைமை: அசாரபுத்தி. இது இப்பொருளதாதலை "வெண்மையில்லை பல்கேள்விமேவலால்" என இந்நூலின் நாட்டுப்படலத்திலும், "வெண்மையெனப்படுவதியாதெனினொண்மை, யுடையம்யாமென்னுஞ்செருக்கு" எனத்திருக்குறளினும், "மேனியைக்காட்டின்வெளுத்ததே" எனப் பாரதவெண்பாவிலும், "விளையுமாற்றலின் திருவடிவினும்வெள்ளையாகியதென்ன" என வில்லிபுத்தூரார்பாரதத்திலும், "வெள்ளைமைகலந்தநோக்கின்"; எனச் சிந்தாமணியிலும் காண்க. 'வெள்ளியையாதல்விளம்பிலை' என்பதில், நீ வெள்ளியாதலின் இவ்வாறுகூறினாய், பொன்னாயின் இங்ஙனஞ்சொல்லாய் என்றும் ஒருகருத்துத் தொனித்தல் காண்க; [வெள்ளி - வெண்பொன், ரஜதம் : சுக்கிரன்; பொன் - செம்பொன், சுவர்ணம் : (தேவகுருவாகிய) பிருகஸ்பதி.] வள்ளியர் - இன்னார்க்குக் கொடுக்கலாம் இன்னார்க்குக் கொடுக்கலாகாது என்றும் இன்னதுகொடுக்கலாம் இன்னதுகொடுக்கலாகாது என்றும் இன்னசமயத்துக் கொடுக்கலாம் இன்னசமயத்துக்கொடுக்கலாகாது என்றும் ஒரு வரையறைசெய்யாமலும் தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமலும் யாசகர்கேட்டதெதையும் எப்பொழுதுங் கொடுப்பவர்; இது - வண்மைஎன்பதன் அடியாகப்பிறந்த பலர்பாற்பெயர்; வள் - பண்படி, பகுதி: இ - சாரியை, ய் - சந்தி, அர் - விகுதி. வழங்குவது - எதிர்காலத்தொழிற்பெயர். எள்ளுவ - வினையாலணையும்பெயர்; உ - சாரியை. அஃறிணையிருபாலுக்கும் பொதுவாகிய எவனென்பது என் எனவிகாரமாகி, சிலவென்னும் பன்மையெழுவாய்க்கு முடிக்குஞ் சொல்லாய் நின்றது. 'இன்னுயிரேனும்' என்பதை 'கொடுப்பது' என்பதனோடுங் கூட்டுக. எவனுக்கும் உயிரினும் இனியது வேறு இன்றாதலால், 'இன்னுயிர்' எனப்பட்டது. தனது உயிர் போவதாயினும் இரத்தல் கூடாது, தனது உயிர்போவதாயினும் கொடுத்தல் நல்லது என்பது இதன்கருத்து. இந்நீதியை "இரந்துமுயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து, கெடுக வுலகியற்றி யான்," "சாதலி னின்னாத தில்லை யினிததூஉ, மீத லியையாக் கடை" என்னுந் திருக்குறள்களைக்கொண்டும்அறிக. நல்லதுகூறுவார்தீயதும்உடன்கூறினார்.

மாய்ந்தவர்மாய்ந்தவரல்லர்கண்மாயா
தேந்தியகைகொடிரந்தவரெந்தாய்
வீந்தவரென்பவர்வீந்தவரேனு
மீந்தவரல்லதிருந்தவர்யாரே.

(இ - ள்.) எந்தாய் - எனது தந்தைபோன்றவனே! (உலகத்தில்), மாய்ந்தவர் - இறந்தவர்கள், மாய்ந்தவர் அல்லர்கள் - இறந்தவர்களல்லர்; (பின்னை யாவர் இறந்தவர் என்றால்), மாயாது ஏந்திய கை கொடு இரந்தவர் - தம் உயிரை விடமாட்டாமல் கைகளை ஏந்தி யாசித்தவர்களே (இறந்தவர்கள்); வீந்தவர் என்பவர் - இறந்தவர்களென்று சொல்லப்படுபவர், வீந்தவர் ஏனும் - இறந்தவர்களேயாயினும், ஈந்தவர் அல்லது - தானஞ்செய்தவர்களல்லாமல், இருந்தவர் - (உலகத்தில்) நிலையாயிருந்தவர்கள், யாரே - வேறுயாவருளர்? [எவருமில்லை]; (எ - று.)

இரந்து உயிர்வாழ்வார் உயிரோடிருப்பினும் இறந்தவர்களே, ஈந்து உயிர்வாழ்ந்தார் இறப்பினும் உயிரோடிருப்பவர்களே என்பது கருத்து. இரப்பது மரணவேதனையினுங் கொடிதென்பது முன்னிரண்டடியாலும், தானஞ்செய்வது என்றுமழியாத புகழுடம்புக்குக் காரணமென்பது பின்னிரண்டடியாலும் விளக்கப்பட்டது. எந்தாய் - ஈறுதிரிந்த விளி. குருவை 'எந்தை' என்பது, சிறப்புப்பற்றிவந்த மரபுவழுவமைதி. 'எந்தாய்' என்

றதில், இரட்டுறமொழிதலால், எமதுதாய்போன்றவனே யென்னும்பொருளுந் தோன்றும். இருந்தவர் என்றதில் - பெரியதவத்தையுடையவரென்றும் பொருள்படும். இனி, மாயாதேந்தியகைகொடிரந்தவர் வீந்தவரென்பவர் என ஒருவாக்கியமாக்கி முடிப்பினும் அமையும். முன்னிரண்டடிகளால் இரவாதவர்களே புகழால் நிலைபெற்றவரென்பதும் பின்னிரண்டடிகளால் தானஞ்செய்யாதவர்கள் நடைப்பிணமாவரென்பதும் பெறப்படும். (௩௦)

அடுப்பவரும்பழிசெய்ஞ்ஞருமல்லர்
கொடுப்பவர்முன்புகொடேலெனநின்று
தடுப்பவரேபகைதம்மையுமன்னர்
கெடுப்பவரன்னதொர்கேடிலையென்றான்.

(இ - ள்.) (ஒருவருக்கு), வரும் பழி - மேன்மேல் வளருகின்ற பொல்லாங்கை, அடுப்ப - (அவரைச்) சேரும்படி, செய்ஞ்ஞரும் - செய்துவருபவர்களும், அல்லர் - (அவருக்குப்) பகைவர்களாகார்; (மற்று யாவர்பகைவர் எனில்), கொடுப்பவர்முன்பு-(இரப்பவர்க்குத்)தானஞ்செய்யும்அவர்களுக்கு எதிரில், நின்று - விடாதுபொருந்தி, கொடேல் என - தானஞ்செய்யாதே யென்று, தடுப்பவரே - தடைசெய்பவரே, பகை - (அக்கொடுப்பவர்க்குப்) பகைவராவர்; அன்னர்-அங்ஙனம் ஈவதுவிலக்குபவர், தம்மையும் கெடுப்பவர் - (பிறரைக்கெடுப்பதுமாத்திரமேயன்றித்) தம்மையுந்தாமேகெடுத்துக்கொள்ளுபவர்கள்; அன்னது ஓர் கேடு இலை - அக்கொடுப்பதுவிலக்குவதைப்போல்வதொரு தீச்செயல் வேறில்லை, என்றான்-என்று (மாவலிகுருவுக்குக்) கூறினான்; (எ - று.)

ஒருவர்க்கு மற்றொருவர் கொடுப்பதை இடையிலேயிருந்து தடுப்பவர், அக்கொடுப்பவர்களைக் கொடாமையாலாகிய பாவத்துக்கு இலக்காக்குவதுமன்றி, தாமும் தானம்விலக்கிய பாவத்தின் மிகுதியாற் கெடுவர் என்பது கருத்து. தன்னையும் பிறரையும் ஒருங்குகெடுத்தல்பற்றி, 'அன்னதொர் கேடிலை' என்றான். "ஈவதுவிலக்கேல்" என ஔவையாரும், "அழுக்கறுடையார்க் கதுசாலு மொன்னார், வழுக்கியுங் கேடீன் பது" எனத் திருவள்ளுவனாருங் கூறியவாற்றையும் அறிக. இனி, அடுப்ப அரு பழி என எடுத்து, அடாப்பழியைக் கற்பிக்கின்றவர்களும் என்றும் பொருள் கொள்ளலாம். செய்ஞ்ஞர், ஞ்-பெயரிடைநிலை; தனிக்குறிலைச்சார்ந்தயகரமெய்யாதலால் அதன்முன்ஞகரம்மிக்கது: [நன்-உயிர்-அ.] முன்பு, பு-சாரியை. பகை - பகைவர்க்குப் பண்பாகுபெயர்; இப்பால்பகாவஃறிணைப்பெயர், பொருளால் உயர்திணைப்பன்மையை உணர்த்தி, 'தடுப்பவர்' என்பதற்கு முடிக்குஞ்சொல்லாயிற்று. வெளிப்படையாகத் தீங்குசெய்பவரால் நேர்கிற துன்பத்தினின்றுந் தப்புதல் எளிது; உடனிருந்து கெடுக்கின்ற அனுகூல சத்துருக்களாலாகிற துன்பத்தினின்றுந் தப்புதல் அரிது என்றதாம். (௩௧)

கட்டுரையிற்றமகைத்துளபோழ்தே
யிட்டிசைகொண்டறனெய்தமுயன்றோ
ருட்டெறுவெம்பகையாவதுலோபம்
விட்டிடலென்றுவிலக்கினர்தாமே.

(இ - ள்.) கட்டு உரையின் - (தருமநூல்களிற் கூறிய) உறுதிவார்த்தையின்படி, தம கைத்து உள போழ்தே - தங்களுடைய செல்வங்கள் தங்கள்வசத்திலிருக்கிற பொழுதில்தானே, இட்டு - (இரப்போர்க்குத்) தானஞ்செய்து, இசை கொண்டு - (அதனால் இம்மையிற்) கீர்த்தியைப்பெ

ற்று, அறன் எய்த - (மறுமையில்) அந்தத்தருமத்தின் பயனாகிய புண்ணியத்தையும் அடைதற்கு, முயன்றோர் - முயற்சிசெய்துவருபவர்களுக்கு, உள் செறு வெம் பகை ஆவது - உள்ளேயிருந்து அழிக்கின்ற கொடிய பகைவராவார் (யாவரெனின்), உலோபம் விட்டிடல் என்று - லோபகுணத்தை விட்டிடாதேயென்று சொல்லி, விலக்கினர் தாமே-(அவர்கள் பிறர்க்குத் தானஞ்செய்யும்பொழுது)செய்யவேண்டாமென்று தடுத்தவர்களேயாவர்;(எ-று.)

தம் - தாம் என்பது முதல் குறுகிற்று; அ - ஆறனுருபு: "ஆறனொருமைக்கதுவுமாதுவும், பன்மைக்கவ்வுமுருபாம்" என்றதனால் முடிக்குஞ்சொல் பன்மையாயிருக்கும்பொழுதே வரத்தக்க இவ்வுருபு, 'கைத்து' என்பதைக் கொண்டுமுடிந்தது,அதுபால்பகாவஃறிணைப்பெயராதலால்;இனி,அ-சாரியையெனவுமாம். கைத்து - கையிலுள்ளதெனப் பொருளுக்குக் காரணக்குறி; கை - பகுதி: து - பெயர் விகுதி; ஒன்றன்பால்விகுதி யென்பாருமுளர். உள - உள்ள; குறிப்புப்பெயரெச்சம். போழ்து - பொழுது என்பதன் மரூஉ; இது, போது எனவும் வழங்கும். ஏகாரம் - விரைவுந் தேற்றமுந் தோன்ற நின்றது. பகையாவது விலக்கினர் - திணைவழுவமைதி; ஈவது விலக்குபவருடைய இகழ்ச்சி விளங்க உயர்திணையை அஃறிணையாகக்கூறினார். பகையென்பது இங்குப் பொருளால் உயர்திணைப்பன்மையாயினும், சொல்லால் அஃறிணையொருமையாதலால், அதற்கு ஏற்ப 'ஆவது' என்னும் ஒன்றன்பால்முதல்வேற்றுமைச்சொல்லுருபு கொடுத்துக்கூறப்பட்டது. உலோபம் - லகரத்திற்குமுன் உகரம் வந்தது. லோபமாவது - இரப்பவர்க்கு ஈயாமை; வைத்துக்கொண்டே இல்லையென்னுதல். உட்பகை-அந்தச்சித்திரம். விட்டிடல் - எதிர்மறைவியங்கோள்; இடு - துணிவுப்பொருளை உணர்த்திற்று. தாம் - அசை. ஏ - பிரிநிலையோடு தேற்றம். கொடுப்பது விலக்குகின்றவர்களைக் கொடையாளிகளுக்குப் பகைவரென்று பொதுப்படக் கீழ்க்கவியிற் கூறி, இக்கவியில் அவர்களை உட்பகைவரென்று விசேடித்துக் கூறினன். விட்டிடல் என்பதை ஒருசொல்லாக் கொள்ளாமல், விட்டு இடல் என இருசொல்லாக்கொண்டு, லோபகுணத்தையொழித்துத் தானஞ்செய்யாதேயென்றுசொல்லி விலக்கினர் என்று உரைப்பினும் அமையும். இனி, இக்கவிக்கு - அறனெய்தமுயன்றவர்கள் 'தமக்கு உட்பகையாவது, உலோபகுணம்; அத்தீக்குணத்தை விட்டுவிடவேண்டும்'என்று கருதி அவ்வுலோபத்தை விலக்கியுள்ளார்கள் என்று உரைப்பாருமுளர்; உலோபம்விலக்கினவர்களேஅறஞ்செய்யமுயன்றோரென்பது கருத்து.(௫௨)

வேறு.

எடுத்தொருவருக்கொருவரீவதனின்முன்னே
தடுப்பதுநினக்கழகிதோதகவில்வெள்ளி
கொடுப்பதுவிலக்குகொடியோயுனதுசுற்ற
முடுப்பதுவுமுண்பதுவுமின்றிவிடுகின்றாய்.

(இ-ள்.) தகவு இல் - நற்குணமில்லாத, வெள்ளி - சுக்கிரனே! கொடுப்பது விலக்கு கொடியோய் - தானத்தைத் தடுக்கின்ற கொடுந்தன்மையையுடையவனே! ஒருவர் - (தாதாக்களுள்) ஒருத்தர், ஒருவருக்கு - (யாசகர்களுள்) ஒருத்தருக்கு, எடுத்து- (அவர் விரும்பினதொருபொருளைக் கையில்) எடுத்து, ஈவதனின் முன்னே - கொடுப்பதற்கு முன்பே, தடுப்பது- (வேண்டாமென்று இங்ஙனம்) தடைசெய்வது, நினக்கு - (குருவாகிய)உனக்கு, அழகிதோ - அழகுடையதாமோ? [ஆகாதன்றோ]; (அன்றியும் நீ இக்கொடுந்தொழிலின்பயனால்), உனது சுற்றம் உடுப்பதுவும் உண்பதுவும்

இன்றிவிடுகின்றாய் - உனது பந்துவர்க்கம் உடுக்க உடையும் உண்ண உண வும் இல்லாதபடி ஆய்விடுகிறாய்; (எ - று.)

எடுத்து - கொடுக்கச்சம்மதித்து என்றபடி. 'ஒருவனுக்கு' என்னமல் 'ஒருவருக்கு' என உயர்வுப்பன்மையாகக் கூறியது, "கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின், றிரப்புமோ ரேஎ ருடைத்து" என்றபடி உலோபிக ளிடத்தன்றி உதாரிகளிடத்து யாசிக்கின்ற யாசகரது சிறப்புத் தோன்றுத ற்கு. 'ஒருவர்' என்றபன்மை, 'வறியார்க்கொன்றீவதே யீகை,' "கைம்மாறு வேண்டா கடப்பாடு" என்றபடி இரப்பவர்க்குக் கைம்மாறுகருதாமற்கொடுப் பவரது சிறப்புப்பற்றி வந்தது. 'ஈவதனின்முன்னே' என்றது, தடுத்தலின்விரை வுதோன்ற நின்றது. தடுப்பது-இயல்புபற்றிஇறந்தகாலம்எதிர்காலமாகவந் தகாலவழுவமைதி; பகரவொற்றிடைநிலை-எதிர்காலமுணர்த்தாமல்தன்மை யுணர்த்திற்றெனினும் அமையும். அழகிது-அழகு என்பதன்மேற்பிறந்த ஒன் றன்பாற்குறிப்புமுற்று. 'தடுப்பதினைக்கிதழகோ' என்னும்பாடத்திக்கு- தடு ப்பதாகிய இக்குணம் உனக்கு அழகாமோ என்று உரைக்க. ஓ-எதிர்மறை. தகவு என்னுஞ்சொல்லுக்கு - அறிவு, உரிமை, உவமை, ஒழுக்கம், இருமை, தகுதி, தெளிவு, நன்மை, நீதி என மற்றும்பலபொருள்கள் உண்டு. 'தகை வில்' என்று பாடமாயின், (இக்குணமொன்றொழிய பிறகுணங்களில்) தளர்ச்சியில்லாத என்று பொருள்கொள்க. தகவு - தொழிற்பெயர்; தகு- பகுதி, அ - சாரியை, வு - விகுதி. வெள்ளி - அண்மைவிளியாதலால், இய ல்பாயிற்று; [நன் - பெயர் - ௫௯.] கொடியோய் - கொடுமை என்னும் பண்படியாப்பிறந்த கொடியான் என்பதன் விளி; இதில், கொடுப்பதுவில க்கக் கொடிகட்டினவனே யென்றும் பொருள்தோன்றும். "கொடுப்ப தழு க்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ,முண்பதூஉ மின்றிக் கெடும்" என்னுந் திருக் குறளின்கருத்தைக் கூறியது இறுதிவாக்கியம். சுற்றம் - (சுபஅசுபகாலங் களில் ஒருவனைச்) சுற்றியிருப்பது; அம் - கருத்தாப்பொருள்விகுதி: இச் சொல்லைத் தொழிலாகுபெயரெனக்கொள்ளலும் அமையும். உடுப்பது-உடுக் கப்படுவது; உண்பது - உண்ணப்படுவது: இவை - செயப்பாட்டுவினைப்பொ ருளில்வந்த செய்வினைவினையாலணையும்பெயர்; சாதியொருமை. இவ்விர ண்டுமில்லாம லெனவே, மற்றைச்செல்வங்களையிழத்தல் கூறவேண்டா தாயிற்று. 'விலக்குபவனது சுற்றங்கெடும்' எனவே, அவன்கெடுதல் சொ ல்லப்படாமலே அருத்தாபத்திப்பிரமாணம் அல்லது தண்டாபூபிகநியா யத்தாற் கொள்ளப்படும். பிறர்பேறுபொறாமை தன்பேற்றையேயன்றித் தன்சுற்றத்தின்பேற்றினையும் இழப்பிக்கு மென்பதாம். உடுப்பதுவும், உண் பதுவும் - சிறுபான்மை குற்றியலுகரங் கெடாமற் பொதுவிதியால் வகர வுடம்படுமெய் பெற்றது. நிச்சயம்பற்றி 'இன்றிவிடுகின்றாய்' என நிகழ்கால மாகக் கூறினர்; காலவழுவமைதி: [நன் - பொது - ௬௬.]

இது - ஈற்றுச்சீரொன்று தேமாச்சீரும், மற்றைமூன்றும் விளங்காய்ச் சீர்களு மாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தம். (௬௬)

வேறு.

முடியவிம்மொழியெலாமொழிந்துமந்திரி
கொடியனென்றுரைத்தசொலொன்றுங்கொண்டில
னடியொருமூன்றுநீயளந்துகொள்கென
நெடியவனகுறியகைநீரினீட்டினன்.

(இ - ள்.) (மாவலி), இம் மொழி எலாம் - இத்தன்மையான வார்த் தைகளெல்லாவற்றையும், முடிய மொழிந்து - முழுவதுஞ்சொல்லி, மந்திரி

கொடியன் என்று-(நமது)மந்திரி [சுக்கிராசாரி] துர்க்குணமுடையவனென்று கருதி, உரைத்த சொல் ஒன்றும் கொண்டிலன் - (அவன்) சொன்ன வார்த்தையைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளாமல், அடி ஒரு மூன்றும் நீ அளந்து கொள்க என - மூன்றடிநிலத்தையும் நீயே அளந்து (உன்னுடையதாகப்)பெற்றுக்கொள்வாய் என்று(வாமனனைநோக்கிச்) சொல்லி, நெடியவன் - உடனே திரிவிக்கிரமனாக நீளப்போகின்ற வாமனனது, குறிய கை-சிறியகையிலே, நீரின் - தான ஜலத்தை, நீட்டினான் - தாரைவார்த்துக்கொடுத்தான்.

முடிய இம்மொழியெலாம் எனஎடுத்து-(இடையில் இன்சொல்லில்லாமல்)முழுவதும் இப்படிப்பட்ட கடுமொழிகளனைத்தையும் என்று உரைப்பாருமுளர். மந்திரம்-ஆலோசனை; அதனையுடையவன், மந்திரி. மாவலிக்குச் சுக்கிரன் குருவும் முதல்மந்திரியுமாவன்; இந்திரனுக்குப் பிருகஸ்பதியும், தசரதருக்கு வசிட்டரும் போல. அடி - கால்வைத்து அளக்கப்பட்ட நிலத்தைக் குறித்தலால், நீட்டலளவையாகுபெயர். மூன்றும், உம் - இனத்தென்றறிபொருளில் வந்த முற்றும்மை. தன்காலால் மூன்றடிநிலம் வேண்டுமென்று கேட்டதனாலும், இரப்பவர்களை அவர்கள்விருப்பத்தின்படி அவர்களேகொள்ள விடுவது மிக்க உதாரமும் அவர்களுக்கு மிகத் திருப்திகரமு மாகுமாதலாலும்,'நீயளந்துகொள்க' என்றான். கொள்கென - கொள்கவென; வியங்கோளின் ஈற்றகரம், தொகுத்தல்: இவ்விகாரம் பெரும்பான்மையுஞ் செய்யுள்வழக்கில் வரும். நெடியவன் - (திருக்கலியாணகுணகணங்களாற்) பெரியவ னென்றுமாம். நீரின் - இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. இரப்பவர்க்குக் கொடுப்பவன் அப்பொருளை மீட்டும் பெறுதிருப்பதற்காக நீரோடுகொடுத்தல் தானமுறையாதலால், 'நீரினீட்டினான்' என்றார். (மாவலி) அளந்துகொள்வாயாகவென்று சொல்லத் திருமால் தமது குறுங்கையைத் தானநீரைப்பெறுதற்காக நீட்டி ஏந்தினார் என்றும் உரைக்கலாம். கொடியனென்று மந்திரி உரைத்த சொல் என இயைத்து, (திருமால்) கொடிய வஞ்சகனென்று அமைச்சன் சொன்ன வார்த்தையை என்றும் உரைப்பர்.

இதுமுதல் இருபத்திரண்டுகவிகள்-பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்றுமாச்சீரும் மற்றைமூன்றும் விளச்சீருமாகிய அளவடிநான்குகொண்ட கலிவிருத்தங்கள். (௯௪)

கயந்தருநறும்புனல்கையிற்றீண்டலும்
பயந்தவர்களுமிகழ்குறளன்பார்த்தெதிர்
வியந்தவர்வெருக்கொளவிசும்பினோங்கினா
னுயர்ந்தவர்க்குதவியவுதவியொப்பவே.

(இ - ள்.) கயம் தரு நறு புனல் - குளத்திலுள்ள நல்ல (மாவலி தாரைவார்த்துக்கொடுத்த) நீரானது, கையில் தீண்டலும் - (தனது) கையிலே பட்டமாத்திரத்திலே, பயந்தவர்களும் இகழ் குறளன் - பெற்றவர்களும் இகழ்தற்குரிய குள்ளவடிவமுள்ள வாமனமூர்த்தி, எதிர் பார்த்து வியந்தவர் வெருக்கொள - (எல்லோரும் தனது பேருருவத்தை) எதிரிலேயிருந்து நோக்கி ஆச்சரியப்பட்டவர்களாய் அச்சங்கொள்ளும்படி, உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்ப-(நற்குண நற்செய்கைகளாற்) சிறந்தவர்களுக்குச் செய்த தானத்தின் பலன்போல, விசும்பின் ஓங்கினான் - ஆகாயத்திலே உயர்ந்துவளர்ந்தான்; (எ - று.)

குள்ளனிலுங் குள்ளனானதுபற்றி, 'பயந்தவர்களுமிகழ்குறளன்' என்றார். 'பயந்தவர்களும்' என்ற உம்மை, எத்தன்மைத்தான விகாரரூபமாயி

ருப்பினும் மக்களை மாதாபிதாக்கள் இகழார் என்பதுபட நின்றது; 'காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்பது பழமொழி. வியந்தவர் - முற்றெச்சம். இனி, எதிர் பார்த்தவர் வியந்து வெருக்கொள என விகுதிபிரித்துக் கூட்டலும் ஒன்று. வெரு - வெருவு என்னும் முதனிலைத்தொழிற்பெயரின் விகாரம். இப்படிப்பட்ட பெருவடிவும் உலகில் உளதோ என்றுகருதுதலால் வியப்பும், அவ்வுருவத்தின் பெருமையைநோக்கி அச்சமும் கூறப்பட்டன. விசும்பின், இன் - ஏழனுருபு. ஐந்தனுருபாக்கொண்டு, ஆகாயம்போல உயர்ந்தான் என்றும் உரைப்பர். உயர்ந்தவர்க்கு உதவிய உதவி மிக ஓங்குதலை "அறப்பயனுந், தான்சிறிதாயினுந் தக்கார்கைப்பட்டக்கால், வான்சிறிதாப்போர்த்துவிடும்" என்னும் நாலடியாராலும், "இனைத்துணைத்தென்பதொன்றில்லைவிருந்தின், துணைத்துணைவேள்விப்பயன்" என்னுந் திருக்குறளாலும் அறிக. உதவி - தொழிற்பெயர்; உதவு - பகுதி, இ - விகுதி. தன்வார்த்தையைக் கேளாமல் மாவலி வாமனன்கையில் உதகம்பண்ணப் புகுந்தவளவிலே, சுக்கிரன் காமரூபியாதலால் ஒருசிறுவடிவைக்கொண்டு உதகபாத்திரத்தின் துவாரத்திலே நுழைந்து உதகம்விழாதபடி தகைய, அதனை அறிந்து எம்பெருமான் துவாரசோதனம்பண்ணுபவர்போலத் தமது திருக்கையில் திருப்பவித்திரத்தினுடைய நுனியாலே அந்தத்துவாரத்திற் குத்தின அளவிலே, அந்தத்தருப்பைப்புல்லினாற் சுக்கிரன் ஒருகண்பழுதுபட்டுக் கலங்கி ஒதுங்கிப்போதலும், நீர் கரத்தில் வந்துவிழுந்தது என்னுங் கதாசந்தர்ப்பத்தைப் பிறநூலால் அறிக; "மிக்கபெரும்புகழ்மாவலிவேள்வியில், தக்கதிதன்றென்று தானம்விலக்கிய, சுக்கிரன்கண்ணைத்துரும்பாற் கிளறிய, சக்கரக்கையனேயச்சோவச்சோ சங்கமிடத்தானே யச்சோவச்சோ" என்றார் பெரியாழ்வாரும்.

இக்கவியின்பின் "குறியவன் கையினீர் விழாமற் குண்டிகை, மறிபட வாமனன் மலர்க்கைத் தர்ப்பையாற், செறிவது நீக்கிடச் சிதைந்து கண்ணுடைந்,' தறுகியர்க் கடலிடை யொதுங்கிப் போயினன்" என்ற ஒருகவி அச்சுப்பிரதிகளிலில்லாமற் சிலஏட்டுப்பிரதிகளிற் காணப்படினும், பலபிரதிகளிலும் பயிலவழங்காமையின், உரையெழுதாதுவிடப்பட்டது; இதனை வெள்ளிப்பாட்டென்பர். (௬௫)

நின்றகான் மண்ணெலா நிரப்பியப்புறஞ்
சென்றுபாவிற்றிலைசிறிதுபாரென
வொன்றவானகமெலாமொடுக்கியும்பரை
வென்றகான் மீண்டதுவெளிபெறாமையே.

(இ - ள்.) நின்ற கால் - (நிலவுலகத்திலே) நின்ற (வாமனமூர்த்தியினது) ஒருதிருவடியானது, பார் சிறிது என - பூமி சிறியது [பாதம்பெரியது] என்று (கண்டவர்) சொல்லும்படி, மண் எலாம் நிரப்பி - பூலோகமுழுவதையும் நிரம்பச்செய்து, (வெளி பெறாமை) - (மேலுஞ்செல்ல) வெற்றிடமில்லாமையால், அப்புறம் சென்று பாவிற்று இலை - (அதற்கு) அப்பாற் போய்ப் பரவியதில்லை; (சிறிது என) - (பாதத்தினும் மேலுலகஞ்) சிறியதென்று சொல்லும்படி, வான் அகம் எலாம் - ஆகாயத்தினிடம்முழுவதையும், ஒன்ற - ஒருசேர, ஒடுக்கி - தன்னுள் அடங்கச்செய்து, உம்பரை வென்ற - அம்மேலுலகைக் கடந்த, கால் - மற்றொருதிருவடி, வெளி பெறாமை - வேறு இடம் பெறாததனால், மீண்டது - திரும்பியது; (எ - று.)

இங்கு 'எல்லாம்' என்னும் பெயர், பொருள்களின் பன்மைகுறியாமல் ஒருபொருளின் பலவிடங் குறித்துநின்றது; இதனை எஞ்சாமைப்பொருள

தாய்வரும்உரிச்சொல் லென்பாருமுளர். 'சிறிதென' என்பது பின்வாக்கியத்திலும், 'வெளிபெறாமை' என்பது முன்வாக்கியத்திலுங் கூட்டிஉரைக்கப்பட்டது. உம்பர் என்பதில், உகரச்சுட்டு - மேல்நிற்கும்பொருளை உணர்த்திற்று; இதன் எதிர்மொழி, இம்பர்: இவ்வுலகம். பெறாமை - எதிர்மறைவினையெச்சம்; எதிர்மறைத்தொழிற்பெய ரென்னின், மூன்றாம்வேற்றுமைத்தொகையெனக் கொள்க. 'எனா' என்ற பாடத்திற்கு, 'என்று கருதி' என்று உரை. பாவிற்று, பாவு - பகுதி. (௬௪)

உலகெலாமுள்ளடியடக்கியோரடிக்
கலகிலாதவ்வடிக்கன்பன மெய்யதா
மிலைகுலாந்துழாய்முடியேகநாயகன்
சிலைகுலாந்தோளினாய்சிறியன்சாலவே.

(இ - ள்.) உலகு எலாம் - எல்லாவுலகங்களையும் [மேலுலகத்தையும் கீழுலகத்தையும்], உள் அடி அடக்கி - (திருமால் தமது) இரண்டடிகளினுள்ளேஅடங்கச்செய்துவிட்டதனால், ஓர்அடிக்குஅலகுஇலாது - (மூன்றாவதாகிய) மற்றொரு அடிக்கு (அளத்தற்குரிய) இடம் இல்லாமற் போனமைபற்றி, அவ்வடிக்கு - அந்த அடிவைப்புக்கு, அன்பன் மெய் அது ஆம் - அன்புடைய மாவலியினது சிரசு இடமாயிற்று; சிலை குலாம் தோளினாய் - வில் விளங்குகின்ற திருத்தோளுடையவனே! இலை குலாம் துழாய் முடி ஏகநாயகன் - இலைகள் விளங்குகின்ற திருத்துழாய் மாலையை அணிந்த திருமுடியையுடைய ஒப்பற்ற தலைவனாகிய திருமால், சால சிறியன் - மிகவுஞ் சிறியவன்; (எ - று.)

ஒருதிருவடியால் மண்ணுலகத்தையும் மற்றொருதிருவடியால் விண்ணுலகத்தையும் இவ்வாறு எல்லாவுலகங்களையும் இரண்டடியால் அளந்துவிட்டு, 'மூன்றடிதருகிறேன் என்றாய், மற்றையோரடிக்கு இடங்காட்டாய்' என்று திருமால் கூற, 'அதற்கு அடியேனது முடியே உள்ளது' என்று மாவலிசொல்ல, எம்பெருமான் அதிற்பாதத்தைவைத்து அழுத்தி அவனைப் பாதாளத்திற் செலுத்தினானென்க. "ஒருகுறளாயிருநிலம்மூவடிமண்வேண்டியுலகனைத்துமீரடியாலொடுக்கியொன்றுந், தருகவெனாமாவலியைச்சிறையில்வைத்ததாடாளன்'' எனப் பெரியாரும் பணித்தார். பூலோகத்தின் கீழுள்ள பாதாளலோகம் பூலோகத்தில் அடங்குதலால், மூன்றாமடிக்கு வேறு இடம் இன்றாயிற்று. 'உள்ளடி யடக்கி' என்றார், அளக்குங்கால் காற்கீழ் அகப்பட்ட உயிர்களுக்கு அபாயம் ஒன்றும் நிகழாதபடி குறிக்கொண்டு காத்தமை தோன்ற; வெயில் நிலா விளக்கொளி முதலியவை உலகத்திற் பரவுதல்போலத் தேஜோரூபமான சுவாமியினது திருவடி எங்கும்பரவியதனால், அதன்கீழ்ப்பட்ட பிராணிகளுக்கு அபாயஞ்சிறிதும் உண்டாயிற்றில்லையென்க: அன்றியும், பகவானது சரணம் செந்தாமரை மலரினும் மெல்லியதாதலால், அது மேலேபடுதலால் இன்பமுண்டாகுமேயன்றித் துன்பம் உண்டாகாதென்றும் உணர்க. கீழ் 'அலகு' என வந்ததனால், மேல் 'அது' எனச் சுட்டினார், இடத்தை. ஆம் - இயல்புபற்றி வந்த காலவழுவமைதி. திருமால விசித்திரசக்தியுடையவராதலால், உலகத்தை அளக்குங்காலத்து அவ்வுலகினளவாய் வளர்ந்தநின்ற அவரது திருவடிதானே மூன்றாமடி அளக்குங்கால் மாவலியின்முடியினளவாகக் குறுகிற்றென்க. நிலையில்லாமையாற் பொய்யாகிய உடம்பை 'மெய்' என்பது மங்கலவழக்கென்பர்; மாவலி சிரஞ்சீவியாதலால், அவனுடம்பை மெய்யென்னத் தட்டில்லை. உத்தமஅங்கமாயிருத்தல்பற்றி, தலை 'மெய்'

எனப்பட்டது. குலாம்-குலாவும் என்னுஞ் செய்யுமெனெச்சத்து ஈற்றுயிர்மெய் சென்றது; [நன் - வினை - உ௨.] துழாய் - துளஸீ என்னும் வடமொழித்திரிபு; இங்கே அதனாலாகியமாலைக்குக் கருவியாகுபெயர்: இது - துளவம், துளவு, துளபம் எனவுஞ் சிதைந்து வழங்கும். முடி - மயிர்முடியப்படுவதென்னும்பொருளிற் செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயர். ஏகநாயகன் - நாயகராவார் யாவர்க்கும் நாயகனென்றபடி. 'சிறியன்சால' என்றது - அவனது மிக்கபெருமையை விளக்குவதொரு குறிப்பு. இங்கே "சிறியனென் றென்னிளஞ் சிங்கத்தை யிகழேற் கண்டாய், சிறுமையின் வார்த்தையை மாவலி யிடைச்சென்று கேள்" என்னும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தின் பொருளை உணர்க. சால - சாலென்னும்உரிச்சொல்லினடியாகப்பிறந்த செயவெனெச்சம். சிலைகுலாந் தோளினாய் என்றது, முனிவர் இராமனைநோக்கிக் கூறிய விளி; இதற்கு - வில்லைப்பிடித்துள்ள இடத்திருக்கையையுடையா யென்றும், வில்லினை மாட்டிவைத்துள்ள இடத்தோளுடையா யென்றும், வில்வித்தையில் மிகப்பயிற்சியையுடைய புயங்களையுடையா யென்றுங் கருத்துக்கொள்ளப்படும்: இன்னும் இதற்கு - (வலிமையாற்) கல்மலையையொத்துவிளங்குந் தோள்களுடையா யென்றும் பொருள்கொள்ளலாம். (௬௭)

உரியதிந்திரற்கிதென் றுலகமீந்துபோய்
விரிதிரைப்பாற்கடற்பள்ளிமேவினான்
கரியவனுலகெலாங்கடந்ததாளிணை
திருமகள்கரந்தொடச்சிவந்துகாட்டவே.

(இ - ள்.) கரியவன்-கருநிறமுடைய திரிவிக்கிரமமூர்த்தி, இந்திரற்கு இது உரியது என்று-தேவேந்திரனுக்கே இதுஉரியதாமென்றுசொல்லி, உலகம் ஈந்து போய் - திரிலோகாதிபத்தியத்தை (அவனுக்குக்) கொடுத்துவிட்டுச்சென்று, உலகு எலாம் கடந்த தாள் இணை - எல்லாவுலகங்களையும் அளவிட்டுச் சிரமப்பட்ட தனது உபயபாதம், திருமகள் கரம் தொட - பெரியபிராட்டியார் (அச்சிரமந்தீர வருடுதற்குக்) கைகளால் தொடுதலால், சிவந்து காட்ட - செம்மைநிறமடைந்து தோன்றும்படி, விரி திரை பாற்கடல் பள்ளி மேவினான் - பாவிய அலைகளையுடைய க்ஷீரசமுத்திரத்திலே (ஆதிசேஷனாகிய) சயனத்திற் பொருந்தி யோகநித்திரைகொண்டருளினார்; (எ - று.)

உலகனைத்தையும் உந்தியிற்பூத்தருளியமைபற்றித் தமக்கே உரியதும் தம்மாலே இந்திரனுக்கென்று அளிக்கப்பட்டதும் ஆகிய திரிலோகத்தைத் தன்னதென்று அபிமானித்து அவனிடத்தினின்றுங் கவர்ந்துகொண்டவனைத் திருமால் செருக்கடக்கி அவ்வுலகங்களைப்பறித்து இந்திரனுக்குக்கொடுத்தது சிறிதும் வஞ்சனையாகாதென அறிக. திரு என்பது - கண்டாரால் விரும்பப்படுந் தன்மைநோக்கம்; இப்படிப்பட்ட அழகு உண்டாகையாலே, இலக்குமிக்குத் திருமகளென்றுபெயர். திருமகள் அடிவருடத் திருமால் பாற்கடலிற் பள்ளிகொள்கிறாரென்பதை "சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கு, நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருட, * * * பாற்கடலுட் பருமணிச்சுட்டாயிரவாய்ப் பாம்பணைமே லறிதுயிலி னிதமர்ந்தோய்" எனப் பிறர்கூறியதனாலும் அறிக. 'திருமகள் கரந்தொடச் சிவந்துகாட்ட' என்றதனால், திருமகளினது திருக்கைகளின் மிக்கசெம்மை வெளியிடப்பட்டது; அன்றியும், அவளது மிகமெல்லிய திருக்கரந் தொடுதலாலுந் திருமாலின் அடி கன்றிச்சிவந்துகாட்டும் என, அத்திருவடியின் மெ

ன்மையிருதி கூறியவாறுமாம். காட்டல் - தன்னைக்காண்பித்தல். "தாளாலுலகமளந்தவசைவேகொல், வாளாகிடந்தருளும் வாய்திறவான் *** ஐந்தலைவாய்நாகத்தணை" என்பதன் கருத்துக்கு ஏற்பத் திருமாலின் திருவடிகளுக்கு உலகமளந்ததனாற் சிரமம் உண்டானதாகக் கற்பனை கூறுவார், 'பள்ளிமேவினான் உலகளந்ததாளிணை திருமகள் கரந்தொட' என்றார். (௬௮)

ஆதலாலருவினையறுக்குமாரிய
காதலாற்கண்டவர்பிறவிகாண்குறார்
வேதநூன்முறைமையால்வேள்விமுற்றுவேற்
கீதலாதில்லைவேறிருக்கற்பாலதே.

(இ - ள்.) அருவினை அறுக்கும் ஆரிய - (அடியார்களது பிறரால் அழித்தற்கு) அருமையான கருமங்களை வேரோடு அழிக்கின்ற சிறந்த ஸ்ரீராமனே! ஆதலால் - (இந்தச்சோலை திருமால் தவஞ்செய்த இடம்) ஆகையால், காதலால் கண்டவர் பிறவி காண்குறார் - (இச்சோலையை) அன்புடனே பார்த்தவர்கள் (மீண்டும்) பிறத்தலை அடையமாட்டார்கள்; (ஆதலின்), வேதம் நூல் முறைமையால் வேள்வி முற்றுவேற்கு - வேதசாஸ்திரங்களிற்கூறியுள்ள விதிப்படி யாகத்தைச் செய்து முடிக்க வேண்டிய எனக்கு, ஈது அலாது - இவ்வாச்சிரமமே யல்லாமல், இருக்கற்பாலது - (யாகஞ்செய்ய) இருத்தற்கு உரிய இடம், வேறு இல்லை—; (எ - று.)

ஸ்ரீராமனது ஸர்வசக்திமுதலிய பரதத்துவசின்னங்களைச் சிறிதும் உணராமற் சாதாரணமனிதனென்றுகருதிப் புத்திரவாஞ்சையாற் பிரிந்திருக்கப்பொறாமல் "படையூற்றமிலன்சிறியனிவன்" என்றுகூறுந் தசரதசக்கரவர்த்திக்கு விசுவாமித்திரர் "அஹம்வேத்மிமஹாத்மாநம்" [யான்அறிவேன் பரமாத்மாவான ஸ்ரீராமனை] (நீஅறியாய்) என்று உரைத்த தத்துவஞானபரிபூர்த்தியை யுடையவராதலால், 'அருவினையறுக்குமாரிய' என்று விளித்தார். ஆதலால் - இச்சோலையின்வரலாறு இதுவாகையால். காதலால் - ஆலுருபு; உடனிகழ்ச்சிப்பொருளது. பிறவி - தொழிற்பெயர்; பிறப்பு: பிற - பகுதி; வி - விகுதி. பிறவிகாண்குறார் - முத்திபெறுவரென்றபடி; வீடுபெற்றவர்க்குமாத்திரமே மீண்டும் பிறப்பில்லை. காண்குறார் - எதிர்மறைப்பலர்பால்முற்று; காண் என்னும் பகுதி - இங்கு, அடைதற்பொருளது; கு - சாரியை, உறு - துணைவினை. ஆரிய - ஆர்ய; வடசொல். அறுக்கும் - விகுதிகாலங்காட்டும் எதிர்காலப்பெயரெச்சம்; முற்றாகக்கொண்டு, (இச்சோலை) அரிய வினைகளை அறுக்கும் என்றலும் அமையும். காண்குறார் - காணுதல்மாத்திரத்தையுஞ்செய்யார் எனக் கொள்ளுதலுமாம்; எனவே, அடையாரென்பது வற்புறுத்தப்படும். வேத நூல் என்பதை - இருபெயரொட்டுப்பண்புத்தொகையாகக்கொண்டு, வேதங்களாகிய நூல்கள் என்றாயினும்; உம்மைத்தொகையாகக்கொண்டு, வேதங்களும் (அதற்கு அங்கமாகிய) சாஸ்திரங்களும் என்றாயினும் பொருள்கொள்க. 'ஈதலாதில்லைவே றிருக்கற்பாலதே' என்றதனால், எம்பெருமான் திருவுள்ளமுகந்து எழுந்தருளியிருக்கின்ற திவ்யதேசமே அவனடியார்க்கு வசித்தற்குரிய இடமாகுமென்பது தெற்றெனவிளங்கும். விஷ்ணுவும் காசியபரும் தவஞ்செய்து சித்திபெற்ற ஆச்சிரமமாதலால், தானும் யாகஞ்செய்து சித்திபெறுதற்கு இதனையே சிறந்தஇடமாகக் கருதினார். பாலது - பான்மையென்னும் பண்பின் அடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று. (௬௯)

ஈண்டிருந்தியற்றுவென்யாகம்யானெனா
நீண்டபூம்பழுவத்துநெறியினெய்திப்பின்

வேண்டுவகொண்டுதன்வேள்விமேவினன்
காண்டகுகுமாரரைக்காவலேவியே.

(இ - ள்.) ஈண்டு இருந்து - இவ்விடத்தில் இருந்துகொண்டு, யான் யாகம் இயற்றுவென் - நான் வேள்வியைச் செய்வேன், என - என்று (விசுவாமித்திரர் ஸ்ரீராமனுக்குச்) சொல்லி, நீண்ட பூ பழுவத்து - பெரிய அழகிய அசசோலையிலே, நெறியின் எய்தி - வழியே நடந்துபோய், பின் - அதன்பின்பு, வேண்டுவ கொண்டு - (யாகத்துக்கு வேண்டிய) உபகரணங்களைச் சேகரித்துக்கொண்டு, காண் தகு குமாரரை - (யாவராலும்) கண்டு மகிழத்தக்க ஸ்ரீராமலக்ஷ்மணர்களை, காவல் ஏவி - காவல்காக்க நியமித்து, தன் வேள்வி மேவினன் - தாம் செய்ய உத்தேசித்த யாகத்தைத் தொடங்கினார்; (எ - று.)

ஈண்டு - சுட்டுநீண்டபெயர். பூம்பழுவம் - அழகாகிய சோலை என உரைத்தால், அவ்வழிப்புணர்ச்சி; பண்புத்தொகை; பூக்களையுடைய சோலை என உரைத்தால், வேற்றுமைப்புணர்ச்சி: இரண்டாம்வேற்றுமையுருபும்பயனுமுடன்றொக்கதொகை; இருவழியிலும் பூப்பெயர்முன் இனமென்மை தோன்றிற்று: [நன் - உயிர் - ௩௦.] நெறியின் - முறைப்படியே எனினுமாம். வேண்டுவ - பெயர். ராமனென்பதற்கு - (எல்லாச்சனங்களையும்) மனமகிழ்விப்பவ னென்றும், லக்ஷ்மணனென்பதற்கு - (உத்தமபுருஷ) லக்ஷணங்களையுடையவ னென்றும் பொருளாதலால், அவற்றைக்கருதி 'காண்தகு குமரர்' என்று ரென்னலாம்: இனி, காண்டகுகுமரர் - ஞானத்தால் உணரத்தக்க குமாருமாம். குமரர் - குமாரரென்னும் வடமொழியின் விகாரம்; இதற்கு - மன்மதனையும் குற்சிதரூபமுடையவனாகச் செய்யவல்ல கட்டழகுடையவ ரென்று பொருள்: கு-விகாரரூபம், மாரன் - மன்மதன். காவல் - தொழிற்பெயர்; அல் - விகுதி. காத்தற்றொழிலை ஏவி யெங்க. ஏவி மேவினன் என முடிக்க. அரக்கர்களாலுண்டாகுந் தீங்குகளின்றுந் தமது யாகத்தைக் காக்குமாறு கட்டளையிட்டார். (௪௦)

எண்ணுதற்காக்கரிதிரண்டுமூன்றுநாள்
விண்ணவர்க்காக்கியமுனிவன்வேள்வியை
மண்ணினைக்காக்கின்றமன்னன்மைந்தர்கள்
கண்ணினைக்காக்கின்றவிமையிற்காத்தனர்.

(இ - ள்.) மண்ணினை - பூலோகத்தை, காக்கின்ற - அரசாளுகின்ற, மன்னன் - தசரதசக்கரவர்த்தியினது, மைந்தர்கள் - குமாரர்களாகிய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள், முனிவன் - விசுவாமித்திரர், விண்ணவர்க்கு - தேவர்கள் பொருட்டு, இரண்டு மூன்று நாள் - ஆறுதினங்களில், ஆக்கிய - செய்த, எண்ணுதற்கு ஆக்க அரிது - (பிறரால் செய்ய) நினைத்தற்குஞ் செய்தற்கும் அருமையுடையதான, வேள்வியை - யாகத்தை, கண்ணினை காக்கின்ற இமையின் - கண்ணைக் காப்பாற்றுகின்ற இமைகள்போல, காத்தனர் - இரட்சிப்பாரானார்கள்; (எ - று.)

மனம் மொழி மெய் என்னும் திரிகரணங்களுள் முன்னதாகிய மனத்தினால் எண்ணுதற்கும் பின்னதாகிய உடம்பினால் செய்தற்கும் ஆகாததெனவே, இடையிலுள்ளதாகிய வாயினால் சொல்லுதற்கும் ஆகாதென்பது தானே போதரும். எண்ணுதற்காக்கரிது - எண்ணும்மைகள் தொக்கதனால், வினைச்செவ்வெண். இனி, எண்ணுதற்கு - எட்டுப்புருவங்களை [அதாவது நான்கு முகங்களை] யுடைய பிரமதேவனுக்கும், செய்தற்கு அரியது என்று உரைப்

பாரும் உளர்; எண்ணுதல் - பண்புத்தொகையன்மொழி. ஆக்கரிது - ஆக்கவரிது; வினையெச்சத்தினீறு, தொகுத்தல். இனி, ஆக்கு அரிது எனப் பிரித்து, ஆக்கு என்பதை முதனிலைத்தொழிற்பெயராகக் கொண்டு, நான்காம்வேற்றுமையுருபுதொக்கதாக்கி, ஆக்குதற்கு என்று உரைப்பினும் அமையும். இரண்டு மூன்று நாள் - இரண்டாகிய மூன்று ஆறு, ஆறாகிய நாள் என்க; பண்புத்தொகைப் பன்மொழித்தொடர்: இதனை உம்மைத்தொகையாகக்கொண்டு, இரண்டும் மூன்றும் ஆகிய ஐந்து நாள் என்றும், இரண்டு அல்லது மூன்று நாள் என்றும், இரண்டு மூன்று என்பவற்றை எண்களைக்குறித்தனவாகக் கொள்ளாமற் சிலநாள் என்றும் பொருளுரைத்தற்கு இடமிருப்பினும், முதனூலாகிய ஸ்ரீவால்மீகிராமாயணத்திற்கு ஏற்ப, ஆறுதினமென்று பொருளுரைக்கப்பட்டது. இனி, நாள் என்பதை- நாளைக்குறிக்கின்ற நட்சத்திரங்களுக்கு ஆகுபெயரெனக் கொண்டு, (தன் கட்டளையினாற் பூதவுடம்புடனே சுவர்க்கலோகத்திற்குச்சென்ற திரிசங்கு மகாராசனை அவமதித்த)தேவர்களைச்செருக்கடக்கும்பொருட்டு (அநுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என்னும்) ஐந்துநட்சத்திரங்களை (த்தென்திசையில் விளங்கும்படி)செய்த விசுவாமித்திராது என்று பொருள் கூறினும் பொருந்தும்; இவ்வரலாற்றை மேல்மிதிலைக்காட்சிப்படலத்தில் "அரசமா தவனீ யாதி யைந்துநாட் டென்பால் வந்தன், புரைவிளக் கிடுக வென்னுக் கடவுளர் போய பின்னர்" என்பதிற் காண்க. மைந்து- இளமை, வலிமை, அழகு; அதனையுடையவர் - மைந்தர்: கள் - விகுதிமேல் விகுதி. இவர்களுக்கு ஆதியஞ்சோதியுருவான ஸ்ரீமகாவிஷ்ணுரூபத்தில் மாத்திரமேயன்றி இவ்வவதாரவிசேஷத்திலும் காத்தல்தொழில் இயல் பாதல் தோன்ற, 'மண்ணினைககாக்கின்ற மன்னன்மைந்தர்' என்றார். மன்னன்மைந்தர்கள் வேள்வியைக் காத்தனர் என இயையும். இமை கண்ணைக் காத்தல் - புழுதிமுதலியவை வந்துவிழாமல் தடுத்தல். மைந்தர்கள் வேள்வியைக் காத்தல் - இராக்ஷசர்களால் தீங்குநேராமற் காத்தல். 'கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்' என்பதற்குப் பழமையாகக் கூறிவரும் பொருட்சிறப்பு வருமாறு:—மேலிமை கீழிமை என்னும் கண்ணிமை இரண்டில் மேலிமை பெரியது, கீழிமைசிறியது: அன்றியும், மேலிமை அசைந்துகொண்டிருப்பது, கீழிமை அசையாமலிருப்பது: மேலிமைபோலப் பெரியவனாகிய இராமன் கிலைபெயர்ந்து கௌசிகமுனியாச்சிரமத்தின் நாற்றிசையிலும் இராக்கதர்கள் வந்து உபத்திரவஞ்செய்யாமலிருக்கும்பொருட்டுச் சக்கரஞ்சுற்றுவதுபோலச் சுற்றித்திரிந்து காவல் செய்தான், கீழிமைபோலச் சிறியவனாகிய இலக்குமணன் உள்ளே ஒருவரும் பிரவேசியாதிருக்கும்பொருட்டு ஆச்சிரமத்தின்வாயிலில் அசையாதுநின்றபடி காவல்செய்தான்; இவ்விதமாகக் காவல்செய்யும் அவ்விருவரில் இராமன் ஆச்சிரமத்தின் புறத்திற் சுற்றிவரும்போதெல்லாம் மேலிமைகீழிமையை இமைத்திமைத்துத்தீண்டுவதுபோல வாயிலிலிருக்கின்ற இலக்குவனைக் கையினால் அடிக்கடிதட்டி 'லக்ஷ்மணா, ஜாக்கிரதை' என்று எச்சரித்துக்கொண்டேவந்தான் என்பதாம். (௪௧)

காத்தனர்திரிகின்றகாளைவீரரின்
மூத்தவன் முழுதுணர்முனியைமுன்னினீ
நீத்தொழில்வியற்றுவதொன்றதீயவ
ரேத்தருங்குணத்திறையவருவதென்றெனன்றான்.

(இ - ள்.) காத்தனர் திரிகின்ற - (இவ்வாறு யாகத்தைக்) காவல்செய்துகொண்டு உலாவிவருகின்ற, காளை வீரரில் - இளவெருதுபோன்ற இராகவ

வீரர்களிருவரில், மூத்தவன் - முன்னவனாகிய ஸ்ரீராமன், முழுது உணர் முனியை முன்னி - யாவும் அறிந்த விசுவாமித்திரரை (அடைந்து அவரை) நோக்கி, 'எத்து அரு குணத்தினாய் - (எவராலும்) புகழ்ந்துசொல்லுதற்கு முடியாத நற்குணங்களையுடையவனே! நீ தீத்தொழில் இயற்றுவர் என்ற நீயவர் - கொடுஞ்செயல்களைச் செய்வார்களென்று நீசொன்ன கொடிய அரக்கர்கள், வருவது—, என்று - எப்பொழுது?' என்றான் - என்றுவினவினான்; (எ - று.)

இதனால், துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனத்தில் இராமபிரானுக்குஉள்ள உறுதிப்பாடு உணர்த்தப்படுகிறது. காத்தனர் - முற்றெச்சம். இளவெருது - நடை வலிமை காம்பீரியங்களால் வீரர்க்கு உவமை. காளைவீரர் - இளம்பருவமுடைய சூரர் என்றபடி. தீத்தொழில் - கொடுமையாகிய செய்கை; பண்புத்தொகை: உவமைத்தொகையாய், தீப்போன்றதொழிலுமாம். எத்து அரு குணத்தினாய் - (யாவராலும்) புகழப்படுகின்ற (பிறரிடத்து) அருமையான குணங்களையுடையவனே என்றுமாம். கீழ்க்கவியிலுரையிற்காட்டிய விசேஷார்த்தத்துக்குப் பொருந்த, காத்தனராகிய காளைவீரரில் இரிகின்ற மூத்தவன் என மொழிமாற்றி உரைத்தலும் ஒன்று. (௪௨)

வார்த்தைமாறுரைத்திலன்முனிவன்மௌனியாய்ப்
போர்த்தொழிற்குமரனுந்தொழுதுபோந்தபின்
பார்த்தனன்விசும்பினைப்பருவமேகம்போ
லார்த்தனரிடித்தனரசனியஞ்சவே.

(இ - ள்.) (அவ்வினாவிற்கு), முனிவன் - கௌசிகர், மௌனி ஆய் - மௌனவிரதமுடையவராய், (அதனால்), மாறு வார்த்தை உரைத்திலன் - உத்தரம் ஒன்றுஞ் சொன்னாரில்லை; போர் தொழில் குமரனும் - யுத்தச் செய்கையிற்சிறந்த மைந்தனாகிய ஸ்ரீராமனும், தொழுது - (அவரை) வணங்கி, போந்தபின் - (வெளியே) வந்தவுடனே, விசும்பினை பார்த்தனன் - ஆகாயத்தை நோக்கினான்; (அப்பொழுது அங்கு), அசனி அஞ்ச - இடியும் அஞ்சும்படி, பருவம் மேகம் போல - கார்காலத்து (நீர்கொண்ட) மேகம்போல, ஆர்த்தனர் இடித்தனர் - (அரக்கர்கள்) மிகப் பேராரவாரஞ்செய்தார்கள்; (எ - று.)

மௌனம் - பேசாதவிரதம். பின் 'அசனி அஞ்ச' என வந்ததனால், 'பருவ மேகம்போல்' என்பதற்கு - பிரளயகாலத்துமேகம்போல என்றுஉரைக்கலாம். 'மேகம்போல்' என்றதற்கு ஏற்ப, 'இடித்தனர்' என்றார். ஆர்த்தனர் இடித்தனர் - ஒருபொருட்பன்மொழி. அசனி - வடசொல். எல்லாப்பிராணிகளுக்கும் அச்சத்தைவிளைக்கின்ற இடியும் அச்சத்தையடைய என இராட்சசர்களினது ஆரவாரத்தின் பயங்கரமானதன்மையை வெளியிட்டார். மேகம் அரக்கர்க்கு ஆரவாரத்திக்குமாத்திரமேயன்றிக் கருநிறத்திக்கும் பெருவடிவுக்கும் வானத்தில் நிறைந்து உலாவுதற்கும் உவமையாம். 'அசனியெஞ்ச' எனவும் பாடம். (௪௩)

எய்தனரெறிந்தனரெரியுநீருமாய்ப்
பெய்தனர்பெருவரைபிடுங்கிவீசினர்
வைதனர்தெழித்தனர்மழுக்கொண்டோச்சினர்
செய்தனரொன்றலதீயமாயமே.

(இ - ள்.) (அவ்வரக்கர்கள்), எய்தனர் - (அம்புகளைப்) பிரயோகித்தார்கள்; எறிந்தனர் - (வேல்முதலிய ஆயுதங்களை) மேலவீசினார்கள்; எரி

யும் நீரும் ஆ(க) பெய்தனர் - நெருப்பும் நீருமாகச் சொரிந்தார்கள்; பெரு வரை பிடுங்கி வீசினர் - பெரிய மலைகளைப் பெயர்த்தெடுத்து எறிந்தார்கள்; வைதனர் - வசைச்சொற்களைச் சொன்னார்கள்; தெழித்தனர் - அதட்டினார்கள்; மழு கொண்டு ஓச்சினர் - மழுவாயுதத்தைக்கொண்டு வீசினார்கள்; ஒன்று அல தீய மாயம் செய்தனர் - ஒன்றல்லாத [பலவான] கொடிய மாயைகளைச் செய்தார்கள்; (எ - று.)

ஆ - வினையெச்சவிகாரம். வரை என்னுங் கணுவின்பெயர், அதனையுடைய மூங்கிலுக்குச் சினையாகுபெயராய், அதுவிளையும் மலைக்குத் தானியாகுபெயராதலால், இருமடியாகுபெயர். மழு - பரசு என்னும் ஆயுதம்; கோடாலி: எரியிரும்புமாம். ஓச்சினர், ஓச்சு-முதனிலை. ஒன்றல-அநேகம். (சுச)

ஊனுறுபடைக்கலமுருத்துவீசின
கானகமறைத்தனகாலமாரிபோல்
மீனுறுதிரைக்கடல்விசும்புபோர்த்தென
வானகமறைத்தனவளைந்தசேனையே.

(இ - ள்.) உருத்து - கோபித்து, வீசின - (அவர்களால்) எறியப்பட்டனவான, ஊன் உறு படைக்கலம் - (பகைவருடம்பிற்பாய்தலால் அவர்களது) மாமிசம் (தன்னில்) விளங்கப்பெற்ற ஆயுதங்கள், காலம் மாரி போல் - கார்காலம் அல்லது பிரளயகாலத்து மழைபோல, கான் அகம் மறைத்தன - காட்டினிடம் முழுவதையும் மறைத்துவிட்டன; வளைந்த சேனை - நாற்புறத்துஞ்சூழ்ந்த அரக்கர்சேனைகள், மீன் உறு திரை கடல் விசும்பு போர்த்து என - மீன்கள் களித்திருக்குமிடமான அலைகளையுடைய கடல் (எழுந்து) ஆகாயத்தை மறைத்தாற்போல, வான் அகம் மறைத்தன - ஆகாயத்தினிடம்முழுவதையும் மறைத்துவிட்டன; (எ - று.)

உவமையணி. ஊ - இறைச்சி; தசை: ன் - சாரியை; "ஊவென் னொருபெய ராவொடு சிவணும்" என்பது தொல்காப்பியம். படைக்கலம் - சேனைக்கு உரிய கருவி; அல்லது, ஆயுதமாகிய கருவி. கான் - கானனம் என்னும் வடசொல்லின் திரிபு. (சுரு)

வில்லொடுபகழிவாண்மிடைந்துலாவிடப்
பல்லியங்கடிப்பினினிடிக்கும்பல்படை
யொல்லெனவுரறியவூழிப்பேர்ச்சியுள்
வல்லைவந்தெழுந்ததோர்மழையும்போன்றவே.

(இ - ள்.) வில்லொடு - விற்களும், பகழி - அம்புகளும், வாள் - வாளாயுதங்களும், மிடைந்து - தம்மில் நெருங்கி, உலாவிட - சஞ்சரிக்க, (அவற்றைப்பிரயோகித்துக்கொண்டு), பல் இயம் கடிப்பினின் இடிக்கும் - பலவகைவாத்தியங்களைக் குறுந்தடியால் இடிபோலொலிக்கும்படி யடிக்கின்ற, பல் படை - பல (இராக்கத) சேனைகள், ஒல்லென உரறிய - ஒல்லென்று பேரொலிசெய்கின்ற, ஊழி பேர்ச்சியுள் வல்லை வந்து எழுந்தது - யுகமுடிவில் (உலகம்) நிலைபெயருங்காலத்தில் (விடாப்பெருமழை பெய்து உலகை அழித்தற்கு) விரைவிற் கிளர்ந்துவந்ததாகிய, ஓர் மழையும் - ஒப்பற்ற மேகங்களையும், போன்ற - ஒத்திருந்தன; (எ - று.)

யுகாந்தகாலத்தில் மேகங்கள் மழையோடும் இடியோடும் வானத்திலெழுந்து வருவனபோல அரக்கர்சேனைகள் ஆயுதவர்ஷத்தோடும் வாத்தியகோஷத்தோடும் வானத்திலெழுந்து வந்தன வென்பதாம். வில்லொடு, ஒடு - எண்ணுப்பொருளில்வந்த இடைச்சொல்; இதனை எடுத்து, பகழி

யொடு வாளொடு எனப் பிறவற்றோடுங் கூட்டுக. ஊறிய, ஊறு - பகுதி. வல்லை - விரைவுப்பொருள்குறிப்பதோர் இடைச்சொல்; ஒல்லையென்பதும் இவ்வாறே: வல் என்பதன்மேல் ஐ - சாரியையென்றும், அது ஏகாரச் சாரியைபெற்று வல்லே என நிற்குமென்றுங் கூறுவர். 'மழையும்' என்ற உம்மை, இறந்ததுதழுவிய எச்சம்: கீழ் 'கடல்விசும்புபோர்த்தென' என்றதனை நோக்கியதனால். ஒல்லெனல் - ஒலிக்குறிப்பு. மழை - சாதியொருமை; ஆதலால், 'எழுந்தது' என ஒருமைச்சொல்லால் விசேஷித்தார். (௬௬)

கவருடையெயிற்றினர்கடித்தவாயினர்
துவர்நிறப்பங்கியர்சுழல்கட்டீயினர்
பவர்சடையந்தணன்பணித்ததீயவ
ரிவரெனவிலக்குவற்கிராமன்காட்டினான்.

(இ - ள்.) 'கவர் உடை எயிற்றினர் - பிளவுபடுதலையுடைய [இரட்டையாக வெளித்தோன்றுகின்ற] கோரதந்தங்களையுடையவர்களும், கடித்த வாயினர்-(பெருங்கோபத்தால் மடித்துக்) கடித்தவாயின் உதட்டையுடையவர்களும், துவர் நிறம் பங்கியர் -செம்மைநிறத்தையுடைய மயிரையுடையவர்களும், சுழல் கண் தீயினர் - சுழலுகின்ற கண்களில் நெருப்புப்பொறியையுடையவர்களும், (ஆகிய), இவர்- இவர்கள், பவர் சடை அந்தணன் பணித்த தீயவர்- நெருங்கிய சடையையுடைய விசுவாமித்திரமுனிவர் சொன்ன கொடிய அரக்கராவர்,' என - என்றுசொல்லி, இராமன் இலக்குவற்கு காட்டினான் - பெருமாள் இளையபெருமாளுக்குச் சுட்டிக் காண்பித்தார்; (எ - று.)

இனி, கவருடையெயிற்றினர்- (பிறர்தசைகளைக் கடித்துக்) கவர்தலையுடைய பற்களையுடையவரென்றும், துவர் நிறம் - பவழம்போன்ற நிறமென்றுங் கூறலாம். இலக்குவன் - லக்ஷ்மணன் என்னும் வடமொழித் திரிபு; உத்தமலக்ஷணம் அனைத்தையும் உடையவனென்றும், பகவத்கைங்கரியலக்ஷ்மியோடு கூடியவனென்றும் பொருள். பங்கி-ஆண்மயிர்; குடுமி, சிகை, குஞ்சி என்பனவும் இவ்வாறே: ஐம்பால், ஓதி, கூந்தல் என்பன - பெண்மயிரின் பெயராம். கோபத்தாற் கண்கள் மிகச்சிவந்திருத்தல்பற்றியும், உருட்டிப்பார்த்தல்பற்றியும், 'சுழல்கட்டீயினர்' என்றார். கட்டீயினர் - கண்களாகிய நெருப்பை யுடையவர்களுமாம். (௬௭)

கண்டவக்குமாரனுங்கடைக்கண்டீயுக
விண்டனைநோக்கித்தன்வில்லைநோக்கினா
னண்டர்நாயகவினிக்காண்டியீண்டவர்
துண்டம்வீழ்வனவெனத்தொழுதுசொல்லினான்.

(இ - ள்.) (உடனே), கண்ட-(அவ்வரக்கர்சேனையைப்) பார்த்த, அக்குமாரனும் - அவ்விளையபெருமாளும், கடைக்கண் தீ உக - (கோபத்தால்) கடைக்கண்களினின்றும் நெருப்புப்பொறி சிதற, விண்டனைநோக்கி - ஆகாயத்தைப் பார்த்து, தன் வில்லை நோக்கினான் - தனதுவில்லையும் பார்த்து, (ஸ்ரீராமனை நோக்கி), 'அண்டர் நாயக - தேவர்தலைவனே! இனி- இப்பொழுதே, ஈண்டு - இவ்விடத்தில், அவர் துண்டம் வீழ்வன - அவர்களது சரீர கண்டங்கள் கீழ்விழுவனவற்றை, காண்டி - பார்ப்பாயாக,' என - என்று, தொழுது சொல்லினான் - வணங்கிச் சொன்னார்; (எ - று.)

கடைக்கண் - கண்ணின்கடை: கடாக்ஷம்; முன்பின்னாகத் தொக்கு வந்த ஆறாம்வேற்றுமைத்தொகை: கட்கடை கடைக்கண் என முன்பின்

ஞக மொழிமாறியது இலக்கணப்போலி யென்றுங் கூறுவர். 'விண்தனை நோக்கித் தன்வில்லை நோக்கினன்' என்றதனால், ஆகாயத்தில்வந்து வளைந்து நிறைந்திருக்கிற அரக்கரனைவரையுங் கணப்பொழுதில் அழிக்கவல்ல வில்வித்தைவல்லமை விளங்குகின்றது. காண்டி- ஏவலொருமைமுற்று; ட்- எழுத்துப்பேறு: இ - சாரியை, சந்தியால் உகரங்கெட்டு, டகரமாத்திரிந்த தெனினும் அமையும்; இ - விகுதி. "இனிநினைந்திரக்கமாகின்று" எனப் புறநானூற்றிலும், "எண்கையாய்கேளினி" எனக் கலித்தொகையிலும்போல, இங்கே 'இனி' என்பது - இப்பொழுதென்னும்பொருளதாய் நின்றது; இச்சொற்கு- இனிமேல் என்பது இயற்கைப்பொருள். 'இனிக் காண்டி'என்பது- விரைவுந் தெளிவும் பற்றிய கால வழுவமைதி. தொழுது - அஞ்சலிசெய்து கொண்டு [கூப்பிய கையனாய்] என்றவாறும். (௯அ)

தூமவேலரக்கர்தந்நிணமுஞ்சோரியு
மோமவெங்கனலிடையுகுமென்றுன்னியத்
தாமரைக்கண்ணனுஞ்சரங்களேகொடு
கோமுனியிருக்கையோர்கூடமாக்கினான்.

(இ - ள்.) 'தூமம்-(கோபாக்கினியின மிகுதியால்) புகையெழுகின்ற, வேல் - வேலாயுதத்தையுடைய, அரக்கர்தம்- இராக்கதர்களது, நிணமும்- (உடம்பின்) மாமிசமும், சோரியும் - இரத்தமும், ஓமம் வெம் கனலிடை- (யாகத்தின் வெவ்விய) ஓம அக்கினியிலே, உகும் - விழுதல்கூடும்;' என்று உன்னி - என்றுநினைத்து,அத் தாமரைக்கண்ணனும்- செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய அவ்விராமபிரானும், சரங்களே கொடு - தமது பாணங்களைக்கொண்டே, கோ முனி இருக்கை - சிறந்த கௌசிகமுனிவரது இருப்பிடத்துக்கு, ஓர் கூடம் ஆக்கினான் - ஒரு மேல்மறைவைச் செய்தருளினார்; (எ - று.)

காத்தற்றொழிலையேயன்றி அழித்தல்தொழிலைக் கைக்கொண்ட முக்கட்கடவுட்கும் கூற்றுவனுக்கும் சூலவேல் படையாதலாலும் அசுரர்களையழித்தற்கென்று அவதரித்த முருகக்கடவுட்கும் வேல்படையாதலாலும் சான்றோரெல்லாம் வேற்படையையே சிறப்பப் பெரும்பான்மை கூறுதல் பற்றி, இங்கு 'தூமவேலரக்கர்' என வேலைக்கூறி, மற்றையாயுதங்களை "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்னும் உபலக்ஷணத் தாற்பெறவைத்தார். அரக்கரது கோபத்தை வேலின்மேல் ஏற்றி, அதற்கு அறிகுறியாக, வேலுக்குத் தூமமென்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. இனி, தூம வே லரக்கர் - புகைநிறமுடையவரும் வேற்படையுடையவருமாகிய அரக்க ரென்றுமாம். வேல் - அரக்கர்க்குச் சாதியடை. அரக்கர் - ரக்ஷஸ் என்னும் வடமொழித் திரிபு. சோரி - (உடம்பினின்று) சொரிவது எனக் காரணப்பெயர். ஓமம்-ஹோமம்; வடமொழித்திரிபு. தாமரைக்கண்ணன்-புண்டரீகாக்ஷன். தாமரை - தாமரஸம் என்னும் வடமொழித்திரிபு. இம்மலர் - செம்மை, மென்மை, அழகு, குளிர்ச்சி, கண்டவரைக்களிப்பித்தல் என்ற ஏதுக்களால், எம்பெருமானுடைய திருக்கண்களுக்கு உவமைகூறப்பட்டது. கொடு - கருவிப்பொருளில்வந்த கொண்டு என்னும் மூன்றும்வேற்றுமைச்சொல்லுருபின் விகாரம். கோமுனி-முனியரசர்: இருடிச் சிரேஷ்டர்; அன்றிக்கே, முன் அரசராயிருந்து இப்பொழுது முனிவரானவர். இருக்கை - இருப்பிடத்துக்குத் தொழிலாகுபெயர்; கை - விகுதி. கூடம் - பந்தர்போகட்டதுபோலவும் வீட்டிற்குக் கூரைவேய்ந்தாற்போலவும் அம்புகளால் இடைவிடாமல் மேலேதொடுக்கும் பின்னற்செறிவு.

வெங்கனல்—கனலுக்கு, வெம்மை-இயற்கைபற்றிவந்த அடைமொழி; பிறிதினியைபுநீக்கியவிசேஷணமன்று. (சகூ)

நஞ்சடவெழுதலுநடுங்கிநாண்மதிச்
செஞ்சடைக்கடவுளையடையுந்தேவர்போல்
வஞ்சனையரக்கரைவெருவிமாதவ
ரஞ்சனவண்ணநின்னபயம்யாமென்றார்.

(இ - ள்.) நஞ்சு - (திருப்பாற்கடல்கடைந்தகாலத்து அதனினின்றுந்தோன்றிய) ஆலாகலவிஷமானது, அட-(யாவரையுங்) கொல்லுமாறு, எழுதலும் - மேலே கிளர்ந்தவளவில், நடுங்கி - (அச்சத்தால்) நடுக்கமுற்று, நாள் மதி செம் சடை கடவுளை அடையும் - புதிய [ஒற்றைக்கலையுள்ள] இளஞ்சந்திரனைத் தரித்த சிவந்த(கபர்த்தமென்னுஞ் சடையையுடைய பரமசிவனைச் சரணமடைந்த, தேவர் போல் - (இந்திரன் முதலிய) தேவர்கள் போல, மா தவர் - மிக்கதவமுடைய முனிவர்கள்யாவரும், வஞ்சனை அரக்கரை வெருவி - வஞ்சனையையுடைய இராட்சசர்களுக்குப் பயந்து, (ஸ்ரீராமனை அடைந்து), 'அஞ்சனம் வண்ண - மைபோலக் கரிய திருநிறமுடையவனே! யாம் நின் அபயம் - நாங்கள் உனக்கு அடைக்கலம்,' என்றார் - என்றுசொன்னார்கள்; (எ - று.)

பாற்கடல்கடையுங்காலத்து யாவரையுங்கொல்லுமாறு அதனினின்றுந்தோன்றிய விஷத்தைக் கண்டு அஞ்சி ஓடிவந்து தம்மைச் சரணமடைந்த தேவர்கள்முதலியோரது வேண்டுகோளாற் சிவபிரான் அதனைப் புசித்தருளி அவர்களைக்காத்தன னென்பதும், சந்திரன் தக்ஷமுனிவரதுபுத்திரிகளாகிய அசுவினிமுதலிய இருபத்தேழுநக்ஷத்திரங்களையும் மணஞ்செய்துகொண்டு அவர்களுள் உரோகிணியென்பவளிடத்து மிகவுங்காதல்கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங் கூடிவாழ்ந்திருக்க, மற்றைமகளிரது வருத்தம்நோக்கி அவனை 'க்ஷயமடைவாயாக' என்றுசபித்த அம்முனிவர்சாபத்தினாற் சந்திரன் பதினைந்துகலைகளுங்குறைந்து மற்றைக்கலையொன்றையும் இழப்பதற்குமுன்னஞ் சிவபிரானைச்சரணமடைய, அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக்கலையைத் தந்தலையிலணிந்து மீண்டுங் கலைகள் வளர்ந்துவரும்படி அநுக்கிரகித்தா ரென்பதும் புராணகதைகள்; குருவாகிய தமது மனைவியான தாரையைச் சந்திரன்புணர்ந்ததனாற் சினந்து பிரகஸ்பதி சபித்தசாபத்தால் அச்சந்திரன் கலைகள்குறைந்தானென்றுங் கதைகூறுவர்: இவ்வரலாறுகளால், பரமசிவன் செய்தற்கரிய பெரிய காரியத்தைச் செய்தாயினுந் தன்னையடுத்தவரைக்காக்கின்ற அருளுடையவ னென்பதும், தன் திருவடிகளை அடைந்தார்க்குக் குறைதீர்த்து அருளுந்தன்மைய னென்பதும் விளங்கும். பாற்கடலிலிருந்து உண்டான கொடியவிஷமும் குளிர்ந்தசந்திரனுந் திருமாலாற் சிவனுக்குக்கொடுத்தருளப்பட்டன வென்பதை மேற்படலத்தின் இருபத்தாறுங்கவியில் "வெருவு மாலமும் பிறையும்வெவ் விடையவற் கீந்து" என்பதனால்அறிக. கடவுள்-(அஜ்ஞானத்தைக்)கடந்தவன்:[சருவஜ்ஞனென்றபடி]; தொழிலாகுபெயர். கடவுள் - கடத்தல்; கட - பகுதி, உள்- தொழிற்பெயர்விகுதி: விக்குள், செய்யுள், பாய்த்துள், விளையுள், பையுள் என்பவற்றிற்போல. நடுக்கம் - அச்சம்பற்றியமெய்ப்பாடு. தேவர் என்னுஞ் சொல்லுக்கு - விண்ணுலகத்து உள்ளவரென்றும், விளங்குபவரென்றும் அவயவப்பொருள். சடை - ஜடா என்னும் வடமொழித் திரிபு. "அச்சக் கிளவிக்கைந் தியிரண்டு, மெச்சமிலவேபொருள்வயினான" என்னுந் தொல்காப்பியவிதியைக்கொண்டு, 'அரக்கரைவெருவி' எனப்பட்டது. வண்ணம் -

வர்ணம் என்னும் வடமொழிச் சிதைவு. நின் அபயம் யாம் - பயப்படாதேயுங்கள் என்று சொல்லி உன்னால் காக்கப்படும்பொருளாவோம் நாங்கள், உன்னையன்றி வேறுசரணமில்லோம் என்றுபொருள். நீலநிறமுள்ளவரும் கடவுளு மாகிய ஸ்ரீராமபிரானுக்கு நீலகண்டனாகிய முக்கட்கடவுளும், பூதேவராகிய பிராமணர்க்குத் தேவர்களும், கருநிறமுள்ளவரும் அகப்பட்டாரைக்கொல்லுகிறவரு மாகிய அரக்கர்க்குக் கரிய கொடிய விஷமும் உவமையெனக் காண்க. அட - காரியப்பொருளாதலால் எதிர்காலங் குறிக்கின்ற செயவெனெச்சம். உவமையணி. (௫௰)

கவித்தனன்கரதலங்கலங்கலீரெனச்
செவித்தலநிறுத்தினன்சிலையின்தெய்வநாண்
புவித்தலங்குருதியின்புணரியாக்கினன்
குவித்தனனரக்கர்தஞ்சிரத்தின்குன்றமே.

(இ - ள்.) (அப்பொழுது ஸ்ரீராமன் முனிவர்களைநோக்கி), நீர் கலங்கல் என - நீங்கள் (ராக்ஷசபயத்தால்) மனக்கலக்கமடையவேண்டாம் என்றுசொல்லி, கரதலம் கவித்தனன் - (அங்ஙனந் தான் அபயமளித்ததற்கு அடையாளமாகத் தனது) கைகளினிடத்தை அமர்த்தி [அபயஹஸ்தமளித்து], சிலையின் தெய்வம் நாண் - (தனது கோதண்டமென்னும்) வில்லினது தெய்வத்தன்மையையுடைய நாணியை, செவி தலம் நிறுத்தினன் - காதுகளினிடத்திலே நிற்கச்செய்து [வில்லைவளைத்து நாணியைக் காதளவும் இழுத்து அம்பெய்து], புவி தலம் குருதியின் புணரி ஆக்கினன் - பூமியின் இடம் முழுவதையும் (அரக்கர்களது) இரத்தசமுத்திரமாகச் செய்து, அரக்கர்தம் சிரத்தின் குன்றம் குவித்தனன் - இராக்கதர்களது தலைமலைகளைக் குவித்தான்; (எ - று.)

கலங்கல் - எதிர்மறைவியங்கோள். நாணிக்குத் தெய்வத்தன்மையாவது - ஓசையைக்கேட்டமாத்திரத்திற் பகைவர்களை அஞ்சி நடுங்கிக் கலங்கியிறக்கச்செய்தல். புணரி - நதிகளோடுபுணருவது எனக் கடலுக்குக் காரணக்குறி: இ-கருத்தாப்பொருள் விகுதி; புணர்தல் - கலத்தல், சங்கமம்: கடலாகியகணவனுக்கு ஆறுகளை மனைவியென்பது கவிசமயம்; இதனை 'நதிபதி' என்னுங் கடலின்பெயரைக்கொண்டும் நன்கு உணர்க. அரக்கர்தம் என்பதைக் குருதியோடுங் கூட்டுக. குருதியின் புணரி ஆக்கினன் என்பதற்கு-இரத்தவெள்ளம் கடல்போலப்பரவிப் பெருகியதென்றும், சிரத்தின் குன்றம் குவித்தனன் என்பதற்கு - அறுபட்ட தலைகள் ஒன்றின் மேலொன்றுவிழுந்து மலையாகக் குவிந்துகிடந்தனவென்றும் கருத்து. (௫௧)

திருமகணாயகன்தெய்வவாளிதான்
வெருவருதாடகைபயந்தவீரர்க
ளிருவரிலொருவனைக்கடலினிட்டதங்
கொருவனையந்தகபுரத்திலுய்த்ததே.

(இ - ள்.) திருமகள் நாயகன் - இலக்குமிக்குக்கொழுநனான ஸ்ரீராமனது, தெய்வம் வாளி - தெய்வத்தன்மையையுடைய அஸ்திரமானது, வெருவரு தாடகை பயந்த வீரர்கள் இருவரின் - (யாவரும்) அஞ்சுதற்குக் காரணமான தாடகையென்பவள் பெற்ற இரண்டுவீரர்களுள், ஒருவனை - ஒருத்தனாகிய மாரீசனை, கடலின் இட்டது - கடலிலே கொண்டுபோய்ப் போகட்டது; ஒருவனை - மற்றொருவனை, அந்தகபுரத்தின் உய்த்தது - யமலோகத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தது [கொன்றதென்றபடி]; (எ - று.)

இரண்டுவாக்கியங்களுக்கும் இடையிலே நின்ற 'அங்கு' என்னும் இடைச்சொல் - வினைமாற்றுப்பொருளை விளக்கிற்று; ஒருவனை உயிரோடு கடலிலேவிழவிட்டது, மற்றொருவனை உயிரொழியச்செய்தது என்னும் வேறுபாட்டைத் தெரிவித்ததனால். திருமாலினது ஏழாவது அவதாரமான இராமபிரானுக்கு விரைவிலேநேரப்போகின்ற திருமகளினது திருவவதாரமான சீதாபிராட்டியினது கலியாணமும் இப்பொழுதுநேர்ந்த ஜயலக்ஷ்மியினது சேர்க்கையுந் தோன்ற, இங்கே 'திருமகள்நாயகன்' என்றார். வாளிக்குத் தெய்வத்தன்மையாவது - குறித்த இலக்குத் தவறாமையும், எய்தவனது கருத்தின்படி தொழில்செய்தலும். 'தெய்வவாளி' என்றதனால், மாரீசன்மேலெய்தது காற்றைத்தெய்வமாகவுடைய வாயவியாஸ்திரமென்றும், சுபாகுவின்மேலெய்தது நெருப்பைத்தெய்வமாகவுடைய ஆக்கினேயாஸ்திரமென்றும் உணர்க; "ஏற்றவர் தம்மில் வெம்போர்ச் சுவாகுவை யெரிவா யம்பிற், கூற்றினுக் குணவு நல்கிக் கொடியமா ரீசன் றன்னைக், காற்றின்வெம் பகழி யொன்றாற் கடலிடைக் கவிழ்த்தி யாரும், போற்றரும் வேள்வி முற்றப் புரந்தனன் புலவு வேலான்" என்றார் கூர்மபுராணத்தும்: மாரீசன்மேல் மானவாஸ்திரமும் சுபாகுவின்மேல் ஆக்கினேயாஸ்திரமும் பிறர்மேல் வாயவியாஸ்திரமும் பிரயோகிக்கப்பட்டனவென்று முதனூல்கூறும். வெருவு என்னும் பகுதியின்மேல் வா என்னுந் துணைவினை சேர்ந்து இரண்டும் ஒருபகுதியாய் வெருவா என நின்று தொகுத்தலும் விரித்தலு மாகிய விகாரத்தை யடைந்து வெருவரு என்றாயிற்று. இனி, வெருவு அரு எனப் பிரித்து, (எவருக்கும் தான்) அஞ்சுதலில்லாத தாடகை எனினும் அமையும். இவ்வடைமொழியை வீரர்களுக்குங் கூட்டுதலுமாம். 'வெருவருதாடகைபயந்தவீரர்கள்' என்றதில், சொற்போக்கினால், எவருக்குந் தான் அஞ்சாமல் யாவர்க்குந் தான் அச்சத்தை விளைக்கின்ற தங்கள்தாயான தாடகையும் தங்களைக்கண்டு அஞ்சும்படியான கொடுந்தன்மையை யுடையவர்கள் என்னும்பொருளுந் தொனிக்கும். தாடகை-மலைகளிற் சஞ்சரிப்பவள்; இவள், சுகேதுஎன்னும்யக்ஷனது மகள்: சுந்தனென்னும் யக்ஷராஜனது மனைவி; ஆயிரம்யானை வலிமைகொண்டவள்: தன்கணவன் அகஸ்தியமகாமுனிவரது கோபத்தீக்கு இலக்காய்ச் சாம்பலானதை [illegible] இவள் தனதுபுத்திரர்களாகிய சுபாகுமாரீசர்களுடனே அம்முனிவரை எதிர்த்துச்சென்றபொழுது அவரிட்டசாபத்தால் மூவரும் அரக்கராயினர். கீழ் விசுவாமித்திராச்சிரமத்துக்கு வரும் வழியிடையிலே இராமபிரான் இவளைக் கொன்றருளினார். மாரீசனை இப்பொழுது கொல்லாமல் விட்டது, பின்பு ராவணாதி சகலராக்ஷசசங்காரத்துக்கு இவன் ஒருவியாஜமாகவேண்டுமென்னுந் திருவுள்ளத்தா லென்க. அந்தம் - முடிவு, நாசம்: அதனை யாவர்க்குஞ் செய்பவன் - அந்தகன் என யமனுக்குக் காரணப்பெயர். (௫௨)

துணர்த்தபூந்தொடையலான் பகழி தூவினான்
கணத்திடை விசும்பினைக் கவித்துத் தூர்த்தலாற்
பிணத்திடை நடந்திவர்பிடிப்பரீண்டென
வுணர்த்தினரொருவர்முன்னொருவரோடினார்.

(இ - ள்.) துணர்த்த பூ தொடையலான் - பூங்கொத்துக்களாலமைந்த அழகிய மாலையையுடைய ஸ்ரீராமன், பகழி தூவினான் - (மற்றையிராக்கதர்களின்மேற் பல) பாணங்களைப் பொழிந்தான்; (அப்பாணங்களெல்லாம்), கணத்திடை - க்ஷணப்பொழுதினுள்ளே, விசும்பினை கவித்து தூர்த்

தலால் - ஆகாயத்தை மறைத்து முழுவதும் நிறைத்துவிட்டதனால் [சென்று அனேகரைக்கொன்றதனா லென்றபடி], (இறந்தவர் ஒழிந்த அரக்கர்கள்), இவர் ஈண்டு பிணத்திடை நடந்து பிடிப்பர் என உணர்த்தினர்-இவ்விராகவவீரர்கள் இப்பொழுது பிணமலைகளின்மேலே (விரைந்து) நடந்துவந்து (நம்மை உயிரோடு) பிடித்துக்கொள்வர்கள் என்று (ஒருவருக்கொருவர்) தெரிவித்துக்கொண்டவர்களாய், ஒருவர்முன் ஒருவர் ஓடினார் - ஒருவர்க்குமுன் ஒருவராக (யாவரும் விரைந்து) ஓடுவாரானார்கள்; (எ - று.)

துணர்த்த - துணரென்னும் பெயர்ச்சொல்லின்மேற் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; துணர்-பூங்கொத்து. முன்னே 'துணர்த்த' எனவந்ததனால், பின்னே 'பூ' என்பதற்கு - மலர்எனப்பொருள்கூறுதல் சிறவாதென அறிக. தொடை - தொடுக்கப்படுவது: ஐ - கருத்தாப்பொருள் விகுதி; அல் - சாரியை: வளையல் என்பதிற்போல; ஐ - சாரியையெனின், அல் - செயப்படுபொருள்விகுதியாம். கணம் - வடசொற்றிரிபு. இராக்கதர் ஆகாசசஞ்சாரிகளும் ~~மனிதர்~~ பூலோகசஞ்சாரிகளும் ஆதலால், 'பிணத்திடைநடந்து பிடிப்பர்' என்றார். (௫௩)

ஓடினவரக்கரையுருமின்வெங்கணை
கூடினகுறைத்தலைமிறைத்துக்கூத்துநின்
றாடினவலகையுமையன்சீர்த்தியைப்
பாடினபரந்தனபறவைப்பந்தரோ.

(இ - ள்.) ஓடின அரக்கரை - (அங்ஙனம்) ஓடிப்போகத்தொடங்கின இராக்கதரை, உருமின் வெம் கணை-இடிபோற்பயங்கரமான கொடிய இராமபாணங்கள், கூடின-விடாதுபின்தொடர்ந்துசேர்ந்தன; (அதனால்), குறைத்தலை-(அவ்வரக்கர்களது) தலையற்றஉடம்புகள் [கபந்தங்கள்], மிறைத்துகூத்து நின்று ஆடின-அடித்துநின்றுநர்த்தனஞ்செய்தன; அலகையும் ஐயன் கீர்த்தியை பாடின-(அங்குப் பிணந்தின்னவந்த) பேய்களும் (தங்களுக்குத்திருப்தியுண்டாக உணவைக்கொடுத்தருளின உபகாரத்தைநோக்கி) ஸ்ரீராமனதுபுகழைப் பாடல்பாடித் துதித்தன; பறவை பந்தர் பரந்தன - (பிணந்தின்னவந்த கழுகுமுதலிய) பக்ஷிகளாலாகிய பந்தல்கள் பரவின; (எ-று.)

சுத்தவீரனாகிய ஸ்ரீராமபிரான் புறங்கொடுத்து ஓடின அரக்கரைப் பின்பு கொன்றது குற்றமாகுமன்றோ எனின்,—புறங்கொடுப்பதற்கு முன்னமே இராமனெய்த அம்புகள் பின்பு ஓடத்தலைப்பட்டவர்களினும் விரைந்துசென்று அவர்களை வதைத்தனவேயன்றி, அவர்களோடினபின்பு அவர்களின்மீது இராகவபிரான் அம்புதொடுத்தாரில்லையென்று அறிக. உருமின், இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது; உரும் அல்லது உருமு - முதல்வேற்றுமை. குறைத்தலை-குறைதலையடையதலையையுடையது என வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. கோபத்தோடு விரைந்து போர்செய்துநின்ற வீரர்களது உடம்புகள் தலையறுபட்டபின்பு பதைபதைத்துக் கைகால்கள்துடிப்பனவற்றைக் கூத்தாடிநின்றனவாகக் குறித்தார். பறவை-பறப்பது; ஐ-கருத்தாப்பொருள்விகுதி. பந்தர் - பந்தல் என்பதன் ஈற்றுப்போலி. பறவைப்பந்தர் பரந்தன என்றது-பறவைகள் பந்தலிட்டாற்போல மேலே இடைவிடாமற்பரவின என்றபடி. - (௫௪)

பந்தரைக்கிழித்தனபரந்தபூமழை
யந்தரதுந்துமிமுகிலினார்த்தன
விந்திரன்முதலியவமரரீண்டினார்
சுந்தரவில்லியைத்தொழுதுவாழ்த்தினர்.

(இ - ள்.) பூ மழை - (தேவர்களினால் இராமலக்ஷ்மணர்மீது சொரியப்பட்ட) புஷ்பவர்ஷங்கள், பந்தரை கிழித்தன பரந்த - (பறவைப்)பந்தலை இடையிடையே கிழித்துக்கொண்டு பரவின; அந்தரம் துந்துபி - ஆகாயத்திலே (தேவர்களினால் அடிக்கப்படுகின்ற) பேரிகைகள், மூகிலின் ஆர்த்தன - மேகங்கள் (இடி முழங்குவன) போல முழங்கின; (அப்பொழுது), இந்திரன் முதலிய அமரர் - இந்திராதிதேவர்கள், ஈண்டினர் - (வானத்தில்) திரண்டுவந்து, சுந்தரவில்லியை - அழகிய கோதண்டத்தையுடைய ஸ்ரீராமனை, தொழுது - வணங்கி, வாழ்த்தினர் - மங்கலவாழ்த்துக் கூறினர்; (எ - று.)

'பந்தரைக்கிழித்தன பரந்தபூமழை' என்றது, மலர்மாரியினது மிகுதி தோன்றுதற்கு. துந்துமி - துந்துபி என்னும் வடசொல்லின் திரிபு. வில்லுக்குச்சுந்தரத்தன்மையாவது - இராமனது திருக்கையின் சேர்த்தியா லுண்டான அழகு: அன்றியும், எம்பெருமானுக்கு வில்முதலியனஎல்லாம் சத்துருசங்காரகாலத்து ஆயுதகோடியிலேயாயிருந்து அவர்களை அஞ்சுவித்துப் பிறகாலத்து ஆபரணகோடியிலேயாய் அழகுசெய்து நிற்கு மென்னுங் கருத்து விளங்க 'சுந்தரவில்லி' என்றாரென்றுங் கொள்ளலாம். வில்லி, இ - பெயர்விகுதி. வாழ்த்துதல் - ஆசீர்வாதஞ்செய்தல். தேவாதிதேவனாகிய ஸ்ரீ ராமபிரானை அவனிலுங்கீழ்ப்பட்டதேவர்கள் வாழ்த்துவது என்னெனின்;— மிக்க இளமைப்பருவத்திலேயே துஷ்டராக்ஷசர்கள்பலரை ஒருங்கேநாசஞ்செய்து தங்களுக்குஉபகரித்த இராமமூர்த்தியினது திருமேனி கண்ணெச்சில்படாமே நெடுங்காலம் நிலைத்துநிற்கவேண்டுமென்று பரமப்ரீதிதலையெடுத்தலால் தேவர்கள் வாழ்த்துவாராயின ரென்க; அன்றியும், "ஆத்மாநம்மாநுஷம்மந்யே" [என்னை மனிதனாகவே யான்நினைக்கிறேன்] என்று கூறுமவரைத் தேவர்கள்வாழ்த்துவது முறைமையேயன்றே. (ருக)

வேறு.

புனிதமாதவராசியின் பூமழைபொழிந்தா
ரனையகானத்துமரங்களுமலர்மழைசொரிந்த
முனியுமவ்வழிவேள்வியைமுறைமையின்முற்றி
யினியசிந்தையனிராமனுக்கினையனவிசைத்தான்.

(இ - ள்.) புனிதர் மா தவர் - பரிசுத்தரான மிக்கதவமுடைய முனிவர்களும், ஆசியின் பூமழை பொழிந்தார் - ஆசீர்வாதமாகிய மலர்மாரியை (இராமனுக்குச்)சொரிந்தார்கள்; (அன்றியும்), அனைய கானத்து மரங்களும் - அந்தக்காட்டிலுள்ள விருக்ஷங்களும், அலர் மழை சொரிந்த - பூமாரியைப் பொழிந்தன; முனியும் - விசுவாமித்திரரும், அவ் வழி - அப்பொழுது, வேள்வியை - யாகத்தை, முறைமையின் - விதிப்படியே, முற்றி - முடித்துவிட்டு, (உடனே), இனிய சிந்தையன் - இனிமையான மனத்தையுடையவராய், இராமனுக்கு - இராமசந்திரனுக்கு, இனையன - இத்தன்மையனவான உபசாரவார்த்தைகளை, இசைத்தான் - சொல்வாராயினார்; (எ - று.)—அதனை மேலிற்கவியிற் காண்க.

ஆசி - ஆசீஸ் என்னும் வடமொழித் திரிபு; வாழ்த்து என்று பொருள். ஆசியின் பூமழை பொழிந்தார் என்பதற்கு - ஆசீர்வாதத்துடனே மலர்களை மழைபோலமேலேசொரிந்தா ரென்று பொருள்கூறுதலும் ஒன்று. அனைய - சுட்டடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; ன், ஐ - சாரியைகள். இனையன என்பதும், இவ்வாறே சுட்டடியாப்பிறந்து அன்சாரியைபெற்ற பலவின்பாற்பெயர். 'மரங்களும்' என்ற இழிவுசிறப்பும்மை - சித்தாச்சிரமத்திலுள்ள ஓரறிவுயிராகிய விருக்ஷங்களுக்கும் அக்காலத்தில் எம்பெருமான்பக்கல்

உண்டான அன்பின்மிகுதியை விளக்கிற்று. மலர்மழை எனப்பதம் பிரித்தல் மோனைத்தொடைக்குப் பொருந்தாது. இராமன் என்னுஞ் சொல்லில் - இராத்திரிக்குஅரசன் [அதாவது நிசாபதியாகிய சந்திரன்] என்றும் ஒருபொருள்தொனித்தலால், இரட்டுறமொழிதலாக, இராமன் என்பதற்கு- இங்கு, உபமானம்உபமேயம்என்னும் இரண்டையும் ஒருங்கேஅமைத்து, சிலிஷ்டரூபகமாக, இராமசந்திரன் என்று உரைக்கப்பட்டது; குளிர்ந்ததன்மையாற்சந்திரன்போன்ற இராமனென்க. இனி, இராமன் என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தொடராக் கொண்டால், (உலகத்தில் தன்னையொப்பார்எவரும்) இராத அரசனென்னும் அருத்தமுந் தோன்றும்.

இதுமுதல் எழுபத்தைந்துகவிகள் - முதற்சீரும் ஈற்றுச்சீரும் மாச்சீர்களும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய நெடிலடிநான்குகொண்ட கலித்துறைகள்; காப்பியக்கலித்துறையென்பவையும் இவையேயாம்: இவற்றிற்கு விருத்தக்கலித்துறையென்றும், கலிநிலைத்துறையென்றும் பெயர்கள் உண்டு. (௫௯)

பாக்கியம்மெனக்குளதெனநினைவுறும்பான்மை
போக்கிநிற்கிதுபொருளெனவுணர்கிலென் புவன
மாக்கிமற்றவையகிலமுமணிவயிற்றடக்கிக்
காக்குநீயொருவேள்விகாத்தனையெனுங்கருத்தே.

(இ - ள்.) புவனம் ஆக்கி - எல்லாவுலகங்களையும் (ஆதிகாலத்திற் பிரமரூபியாய்ப்) படைத்தருளி, மற்று - பின்பு [பிரளயகாலத்தில்], அவை அகிலமும் - அவ்வுலகங்கள் எல்லாவற்றையும், அணி வயிறு அடக்கி - அழகிய திருவுதரத்திலே அடங்கச்செய்துவைத்து, காக்கும் - காத்தருளுகிற, நீ—, ஒரு வேள்வி காத்தனை - (எனது சிறிய) யாகமொன்றைக் காத்தருளினாய், எனும் கருத்து - என்கிற எண்ணத்தினால், எனக்கு பாக்கியம் உளது என நினைவுறும் பான்மை போக்கி - (பொருளல்லாத என்னை நீ ஒருபொருளாக மதித்து வந்து உன்னால் வேள்விகாக்கப்படுதற்கு ஏதுவானதொரு) நல்வினை எனக்குஇருந்ததென்று (யான்) எண்ணுவேனேயன்றி அத்தன்மையை ஒழித்து, நிற்கு இது பொருள் என உணர்கிலென் - (சர்வசம்ரக்ஷகனான) உனக்கு இந்தயாகரக்ஷணமொன்று ஒருபொருட்டாகியதென்று அறிகிறேனில்லை; (எ - று.)

பாக்கியம் - அதிருஷ்டம். நிற்கு - நினக்கு என்பது அகரச்சாரியைதொக்கு வந்தது. "ஆக்குமாறயனாமுதலாக்கியவுலகங், காக்குமாறுசெங்கண்ணிறைகருணையங்கடலாம், நீக்குமாறரனாம்" என்றது சாஸ்திர சித்தாந்தமாதலால், 'புவனமாக்கிமற்றவையகிலமுமணிவயிற்றடக்கிக்காக்குநீ' என்றார். மற்று என்னும் இடைச்சொல், இங்கு, பின் என்னும்பொருளது. பிரமன்முதலான சகலதேவர்களுட்பட யாவும் அழிந்து போகின்ற யுகாந்தகாலத்தில் ஏகார்ணவமான மகாப்பிரளயசமுத்திரத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களையெல்லாந் தம்வயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறுகுழந்தைவடிவமாய் ஆதிசேஷாம்சமான ஆலிலையின்மீது பள்ளிகொண்டு தமது மாயாசுவரூபமான யோகநித்திரையைக் கைக்கொண்டு திருக்கண்வளர்ந்தருளுகின்றனரென்பது, புராணவரலாறு. இங்ஙனங் கூறியதனால், எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கின்ற முதற்கடவுள் ஸ்ரீமந்நாராயணனென்பது நன்குவிளங்குகின்றது. அகிலம் - ஒன்றையும் விடாமல் என்றபடி. மணிவயிறு என்றும் பிரிக்கலாம்; பொருள் இதுவே: நீலநிறமுள்ள திருவயிறென்றுங் கொள்ளலாம். தன்னுட்சென்றபொருள்களைச்

ஜீரணிக்கப்பண்ணுதல் வயிற்றுக்கு இயற்கையாயிருக்கவும் அங்ஙனஞ்செய்யாமல் எல்லாவுலகங்களுக்கும் பிரளயஆபத்தில் ஒதுங்குதற்கு இடங்கொடுத்து ஒருகுறையும்நேராமற் பாதுகாத்து அவற்றை மீட்டும் வெளிநாடு காண உமிழ்ந்தருளின விசித்திரந் தோன்ற, 'அழகிய வயிறு' என்றார். உலகங்களையெல்லாம் படைத்தளித்தழிக்கு மாற்றலுள்ள உனக்கு இந்தயாகத்தைக்காத்தல் அரியதொருதொழிலாக நினைக்கின்றிலேன்; பின்னை எவ்வாறு நினைப்பேனெனின், எனது பூர்வஜன்மசுகிருதவிசேஷத்தால் நீ இங்ஙனம்வந்து அருள்செய்தாயென்றே கருதுவேன் என்பது கருத்து. இதனால், எம்பெருமானது சர்வசக்தியும், பரத்துவமும், தன்பக்கல்பக்தியையுடையஅடியார்க்கு மிகஎளியனாகிற சௌலப்யமும், முற்பிறப்பிற்செய்த பெரியபாக்கியமிருந்தாலன்றிப் பரமாத்மாவினது பேரருளைப்பெறுதல் முடியாதென்பதும், அப்படிப்பட்ட பரமபாக்கியம் தமக்குப்பூர்த்தியாக அமைந்திருந்ததும் இவைமுதலிய விசேஷார்த்தங்கள் விசுவாமித்திரரால் வெளியிடப்பட்டனவென அறிக. வயிற்றடக்கி - றகரவீற்றுயிர்த்தொடர் வேற்றுமைப்புணர்ச்சியில் தன்னொற்றிரட்டிற்று. பாக்கியம் மெனக்கு, மகரவொற்று - விரித்தல்விகாரம். (௫௭)

என்றுகூறியபின்னரவ்வெழின்மலர்க்கானத்
தன்றுதானுறைந்தருந்தவமுனிவரோடிருந்த
குன்றுபோற்குணத்தானெதிர்கோசலைகுரிசி
லின்றியான்செயும்பணியென்கொல்பணியெனவிசைத்தான்.

(இ - ள்.) என்று கூறிய பின்னர் - இவ்வாறுசொன்னபின்பு, எழில் மலர் அக் கானத்து - எழுச்சியையுடைய பூக்களையுடைய அச்சோலையில்தானே, அன்று - அன்றைத்தினத்தில், அரு தவம் முனிவரோடு - (பிறரால் செய்தற்கு) அருமையான தவத்தைத் தாங்கள்செய்துள்ள பல இருடிகளுடனே, உறைந்து இருந்த - வசித்திருந்த, குன்று போல் குணத்தான் எதிர் - மலைகள்போன்ற நற்குணங்களையுடைய விசுவாமித்திர முனிவரது முன்னிலையிலே, கோசலை குரிசில் - கௌசல்யாதேவியினது குமாரராகிய ஸ்ரீராமபிரான், (மறுநாட்காலையிலே போய்த் தொழுதுநின்று), 'இன்று யான் செயும் பணி என்கொல் - இன்றைக்கு அடியேன்செய்யவேண்டுங் கட்டளை யாது? பணி - நியமித்தருளுவாயாக,' என - என்று, இசைத்தான் - (அம்முனிவரைநோக்கிக்) கூறியருளினார்; (எ - று.)

அக்கானமென இயையும். 'எழிலாவது - வளர்ந்து அமைந்த பருவத்தும் இதுவளர்ந்தமாறியதன்றி இன்னும் வளருமென்பதுபோன்று காட்டுதல்' என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர்; இதனால், எழில் என்பதற்கு வளர்ச்சியென்று பொருளென்றும், இச்சொல் தொழிற்பெயரென்றும், எழு - பகுதி, இல் - விகுதி என்றும் அறிக: இதற்கு - அழகு என்னும் பொருளும் உண்டு. குணங்கள் - அறிவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலியன. சலியாமையும் பெருமையும்பற்றி, குணங்களுக்குக் குன்று உவமைகூறப்பட்டது; "குணமென்னுங்குன்றேறிநின்றார்" என்றார் திருவள்ளுவனாரும். கோசலை - கௌஸல்யா என்னும் வடசொல்லின் திரிபு; கோசலதேசத்தரசன்மகள் என்பதுபொருள்: கோசலம், உத்தரகோசலம் தக்ஷிணகோசலம் என இரண்டுபிரிவுள்ளது; இவற்றுள் தக்ஷிணகோசலதேசத்து அரசனது மகள் இவள். கோசலம் என்பது, கு உசல் எனப் பிரிக்கப்பட்டு, பிரமனும் உல்லாசப்படத்தக்கதென்னும்பொருளைத் தரும்; இதனால், அந்நாடு எல்லாவளமுமுடையதாய்க் காட்சிக்கும் வாசத்துக்குந் தகுதியான திறமுடை

யதென்று அந்நாட்டின்சிறப்பு விளங்கும். குரிசில் - பெருமையிற்சிறந்த
வன் ; ஆண்பாற்சிறப்புப்பெயர் : இதனை 'குருஸ்ரீ' என்னும் வடசொல்லின்
சிதைவென்று கூறுவர். கொல் - அசை. பணி என - கூறுவாய் என்று
(இராமன்)சொல்ல, இசைத்தான் - (கௌசிகமுனி) கூறுவானானன் என்ற
மாம். கோசலைகுரிசில் - உயர்திணைப்பெயர்முன் வலிஇயல்பாயிற்று. 'கோச
லக்குரிசில்' என்னும் பாடத்துக்கு - 'கோசலதேசத்து அரசனென்க. (ருஅ)

அரியயான்சொலினையநிற்கரியதொன்றில்லை
பெரியகாரியமுளவவைமுடிப்பதுபின்னர்
விரியும்வார்புனன்மருதஞ்சூழ்மிதிலையர்கோமான்
புரியும்வேள்வியுங்காண்டுநாமெழுகென்றுபோனார்.

(இ - ள்.) 'ஐய - தலைவனே! யான் அரிய சொலின் - நான் (செய்த
ற்கு) அருமையையுடையனவென்று சிலகாரியங்களைச் சொன்னால், நிற்கு
அரியது ஒன்று இல்லை - உனக்கு(ச்செய்ய) அருமையானது ஒருதொழிலு
மில்லை; பெரிய காரியம் உள - (செய்யத்தக்க) பெருந்தொழில்கள் (சில)
உள்ளன ; அவை முடிப்பது பின்னர் - அவற்றை நிறைவேற்றுவது பின்பு
(ஆகக்கடவது); (இப்பொழுது), விரியும் - பரவிப்பாய்கின்ற, வார் - நீண்ட
[மிகுந்த], புனல் - நீர்வளமுள்ள, மருதம் - மருதநிலத்தால் [கழனிகளா
ல்], சூழ் - சூழப்பட்ட, மிதிலையர் - மிதிலாநகரத்திலுள்ள ஜனங்களுக்கு,
கோமான் - அரசனாகிய ஜனகமகாராஜன், புரியும் - செய்கின்ற, வேள்வி
யும் - யாகத்தையும், நாம் காண்டும் - நாம் போய்ப்பார்ப்போம்: எழுக -
புறப்படுவாயாக,' என்று - என்று (விசுவாமித்திரர் சொல்ல), (உடனே),
போனார் - (ராமலக்ஷ்மணர்களும் விசுவாமித்திரரும் ஆகியமூவரும்) புறப்
பட்டுச்சென்றார்கள் ; (எ - று.)

அரிய-பெயர். பெரியகாரியம் என்றது - ராவணசங்காரமும் ராஜ்யபரி
பாலனமும் முதலியவற்றை. நாடும்,நாட்டைச்சார்ந்த இடமும்-மருதநிலம்.
மிதிலை என்றதற்கு-மிதி என்பவரால் ஏற்படுத்தப்பட்டதென்பது பொருள்;
விதேகனான நிமிமகாராஜனது தொடையில் அரணியிட்டுக் கடைந்ததனால்
உண்டானமைபற்றி,மிதி என்று ஜனககுலத்தலைவர்க்குப் பெயர். கோமான்,
மான் - பெயர்விகுதி. வேள்வியும் என்ற உம்மை - கீழ் விசுவாமித்திரர்
செய்த யாகத்தைக் குறித்ததனால், இறந்ததுதழுவிய எச்சப்பொருளது.
காண்டும், தும் - தன்மைப்பன்மைவினைமுற்று விகுதி ; இது - "தவ்வொ
டிறப்பு மெதிர்வும்" என்றதனால், இறந்தகாலம் எதிர்காலம் என்னும்
இரண்டையுங் காட்டும்: இது, சந்தியால் தகரம்டகரமாத்திரிந்தது;
இனி, டும் விகுதியெனக் கொள்ளலாகாது: "டவ்வொடு கழிவும்" என்றத
னால் அது இறந்தகாலத்தைக்காட்டுமேயன்றி, எதிர்காலத்தைக் காட்டா
தாதலால். நாம் - முன்னிலையையும் படர்க்கையையும் உளப்படுத்திய
தன்மைப்பன்மை : ராமனோடு லக்ஷ்மணனையும் அகப்படுத்தியதனால்; இது
"உம்மூர் கடதற இருபா லாரையுந், தன்னொடு படுக்குந் தன்மைப் பன்
மை" என்றபடியே மூவிடத்துக்கும் ஒருங்கே உரிய 'காண்டும்' என்னும்
முற்றைக் கொண்டது. 'என்று' என்றபின் 'சொல்ல' என வருவிக்க. இனி,
'என்று' என்னுஞ் செய்தெனெச்சத்தை 'என்ன' என்னுஞ் செயவெனெச்
சத்தின் திரிபெனக் கொள்ளுதலும் பொருந்தும். நிலவளம், ஜலவளம் முத
லிய பலவளங்களுமுடைமை விளங்குதற்கு, 'விரியும்வார்புனன்மருதஞ்
சூழ்' என்னும் விசேடணங் கொடுத்தார். (ருக)

வேள்விப்படலம் முற்றிற்று.

ஒன்பதாவது

அகலிகைப்படலம்.

இதற்குப் பொருள் - அகலிகையினதுவரலாற்றைக் கூறுகின்றதொரு நூற்கூறுபாடு என்பதாம். அகலிகை - அஹல்யா என்னும் வடமொழித் திரிபு; இச்சொல்லுக்கு-அழகில்லாமையில்லாதவ ளென்று பொருள்: மிக்கஅழகுடையவ ளென்று கருத்து; ஹல்யம் - அழகின்மை. இவள் - கௌதமமுனிவரது மனைவி, ஜனகமகாராஜாவுக்குப் புரோகிதராகிய சதானந்தமுனிவரது தாய். இவள்மீது பலநாளாய்விருப்பங்கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள் நடுஇராத்திரியிற் கௌதமராச்சிரமத்துக்கு அருகேவந்து பொழுதுவிடியுங்காலத்துக் கோழிகூவுவதுபோலக் கூவ, அதுகேட்ட முனிவர் சந்தியாகாலஞ்சமீபித்துவிட்டதெனக்கருதி எழுந்து காலைக்கடன் கழிக்கும்பொருட்டு நீர்நிலைநோக்கிப் புறப்பட்டுச்செல்ல, அப்பொழுது இதுவேசமயமென்று இந்திரன் அம்முனிவருருக்கொண்டுஆச்சிரமத்துட்சென்று இவளோடுகலக்கையில், இவளும் 'தன்கணவரல்லன், இந்திரன்' என்று உணர்ந்தும் விலக்காமல் உடன்பட்டிருக்க, அதனை ஞானக்கண்ணினால் அறிந்து உடனேமீண்டுவந்த அம்முனிவர் இவளைக் கருங்கல்வடிவமாம்படியும் இந்திரனை உடம்புமுழுவதிலும் ஆயிரம்பெண்குறியை அடையும்படியும் சபித்து, உடனே அவர்கள் அஞ்சிநடுங்கிப் பலவாறுவேண்டிக்கொண்டதற்கு இரங்கி, முறையே, ஸ்ரீராமனது திருவடிப்பொடி படுங்காலத்து இக்கல்வடிவம்நீங்கிச் சுயஉருவம் பெறுக என்றும் அவ்வறிகுறிகள் பிறர்க்குக் கண்களாகப் புலப்படுக என்றும் அவர்களுக்கு அனுக்கிரஹிக்க, அவ்வாறே, கல்லுருவமாய்க்கிடந்த அகலிகை ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவாமித்திரரோடு மிதிலைக்குச்செல்லும்போது ஸ்ரீராமனதுதிருவடித்துகள்பட்டமாத்திரத்திற் சாபம்நீங்கி இயற்கையுருவமடைந்தாள் என்பது, இப்படலத்துப் பிரதான வரலாறு.

அலம்புமாமணியாரத்தோடகிலணைபுளின
நலம்பெய்பூண்முலைநாகிளவஞ்சியாமருங்குற்
புலம்புமேகலைப்புதுமலர்ப்புனையறற்கூந்தற்
சிலம்புசூழுங்காற்சோணமாந்தெரிவையைச்சேர்ந்தார்.

(இ - ள்.) அலம்பும் - அசைகின்ற, மா மணி - பெரிய [சிறந்த] இரத்தினங்களும், ஆரத்தோடு - சந்தனமும், அகில் - அகிலும், அணை - தன்னிடம் பொருந்தப்பெற்ற, புளினம் - மணற்குன்றுகளாகிய, நலம் பெய் பூண் முலை - இன்பத்தைத்தருகின்ற ஆபரணங்களையணிந்த தனங்களையும், நாகு இள - மிகவும் இளமையான, வஞ்சி ஆம் - நீர்வஞ்சிக்கொடியாகிய, மருங்குல் - இடையையும், புது மலர் - புதிய [அன்றுமலர்ந்த] பூக்களின் வரிசையாகிய, புலம்பும் மேகலை - ஒலிக்கின்ற மேகலையென்னும் இடையணியையும், புனை அறல் கூந்தல் - அழகிய கருமணலாகிய கூந்தலையும், சிலம்பு சூழும் கால் - மலையைச்சுற்றிலுஞ்செல்லுகிற வாய்க்கால்களாகிய சிலம்பென்னும் அணியைச் சுற்றிலுமணிந்த பாதங்களையும் உடைய, சோணம் ஆம் தெரிவையை - சோணையென்னும் ஆறாகிய பெண்ணை, சேர்ந்தார் - (மூவரும் போய்) அடைந்தார்கள்; (எ - று.)

உருவகவணி; நதியினிடத்துப் பெண்ணினது தன்மை ஏற்றிக் கூறப்பட்டது. நதியென்பதும், சோணையென்பதும் வடமொழியிற் பெண்பாற்சொற்களாதலாலும், யாற்றிற்கு உரிய தெய்வம் பெண்ணாதலாலும், இங்ஙனங்கூறினர். சோணம் - சோணா என்னும் வடமொழித் திரிபு. 'சிலம்புசூழுங்

கால்' என்றவிடத்து, உருவகத்திற்குச் சிலேடையணி அங்கமாகநின்றது; சிலிஷ்டரூபகம். புளினத்திற்கு முத்துமுதலிய இரத்தினங்களுஞ் சந்தனக்கட்டையும் அகிற்கட்டையும் மலையினின்று ஆற்றினாற்கொணர்ந்து கொழிக்கப்பட்டவை யென உணர்க. அலம்பும் - (யாற்றுநீரினால்) கழுவப்பட்ட என்றுமாம். இரட்டுறமொழிதலென்னும் உத்தியால், 'மா' என்பதற்கு-பெரிய என்றும், சிறந்த எனறும் ஒருங்கே இருபொருள்கொள்ளப்பட்டது. மணி - இங்கே, நவரத்தினப்பொதுப்பெயர். விலையுயர்ந்த பெரியஇரத்தினஹாரங்களையுஞ் சந்தனக்குழம்பையும் அகில்தேய்வையையும் அணிவது உபமானமாகிய கொங்கையின் இயல்பாதலால், அதற்கு ஏற்ப, உபமேயமாகிய மணல்மலைக்கு 'மாமணியாரத்தோடகிலவை' என்கிற அடைமொழியைக் கொடுத்தார். பருமையும் மென்மையும்பற்றி, மணற்குன்று தனத்திற்கு உவமைகூறப்படும். ஆரம்-ஹாரம் என்னும் வடமொழித் திரிபு. ஓடு-எண்ணுப்பொருளது. மகளிருறுப்பனைத்தினுஞ் சிறந்தவுறுப்பாகிய தனத்திற்கு இன்பந்தருவதிலுள்ள ஏற்றந் தோற்ற, அதற்கு 'நலம்பெய்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. நலம் - பண்புப்பெயர்; நல - பகுதி: அம்-விகுதி. பெய்தல் - மிகுதியாகத்தருதல். நாகு இள - ஒருபொருட் பன்மொழி. மென்மைக்கும், ஒல்கிஒசிந்துதளரும்படியான மெல்லிதாந்தன்மைக்கும் வஞ்சிக்கொடியோடு இடை உவமிக்கப்படும். மேகலை - மாதரிடையணியுள் எண்கோவையணி; "எண்கோவைமேகலை" என்பதுகாண்க. மேகலைக்கு 'புலம்ப' என்றவிசேஷணத்தைக் கொடுத்ததனால், புதுமலர்கள் தன்மேல் மொய்க்கின்ற வண்டுகளினால் ஆரவாரத்தைப்பெறுவன வென்க. கருமையாலும், அரியுடைமையாலும், கூந்தலுக்கு அறல் உவமையாக்கூறப்படும். 'சிலம்புசூழுங்கால்' என்பதற்கு-நதிக்கு அடைமொழியாம்பொழுது, ஒலிநிறைந்த கால்வாய்க ளென்றும் பொருள்கொள்ளலாம். பெண்ணுக்கு அடைமொழியாம்பொழுது, சிலம்பு - நூபுரமென்னுங் காலணி.

நதிக்குவந்தவரெய்தலுமருணன்றனயனக்
கதிக்குமுந்துறுகலினமான்றேரொடுங்கதிரோ
னுதிக்குங்காலையிற்றண்மைசெய்வான்றனதுருவிற்
கொதிக்கும்வெம்மையையாற்றுவான்போற்கடற்குளித்தான்.

(இ - ள்.) அவர் - (விசுவாமித்திரர் ராம லக்ஷ்மணர் என்கிற) அந்த மூவரும், நதிக்கு - சோணையாற்றுக்கு, வந்து எய்தலும் - வந்து சேர்ந்தவளவில், கதிரோன் - கிரணங்களையுடைய சூரியன், உதிக்கும் காலையில் - (மறுநாள் தான்) உதயமாகும்பொழுதில், தண்மை செய்வான் -(இம்மூவர்க்குங்) குளிர்ச்சியைச் செய்யும்பொருட்டு, தனது உருவில் கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான் போல் - தனதுவடிவத்திலே (இயற்கையாக எப்பொழுதுங்) கொதிக்கின்றவெப்பத்தை (இப்பொழுது) தணியச்செய்பவன்போல, அருணன்தன் நயனம் கதிக்கும் முந்துறு கலினம் மான் தேரொடும் - (தனது சாரதியாகிய) அருணனுடைய கண்களின் விரைந்துசெல்லுதலினும் முற்பட்டுச்செல்லுகின்ற கடிவாளத்தைக்கொண்ட குதிரைகளைப் பூட்டிய தனது இரதத்துடனே, கடல் குளித்தான் -(மேற்குச்) சமுத்திரத்தில் மூழ்கினான்; (எ - று.)

சூரியன்முதலிய கிரகநட்சத்திரதாரகைகள் மேற்கே அஸ்தமித்துக் கிழக்கேஉதிப்பனவற்றைமேல்கடலில் மூழ்கிமறைந்து கீழ்கடலில் மீண்டும் எழுவனவாகக் கூறுதல் கவிமரபு; கண்களுக்குப்புலனாகிற தோற்றமாத்திரத்தைக்கொண்டு இங்ஙனங்கூறுவர். மேற்கிற சூரியன் அஸ்தமித்

து மண்டலத்தோடு மறைந்துபோனதனை அவன் தன்வெம்மையை ஆற்றும் பொருட்டுத்தேரோடுமேல்கடலில்மூழ்கியதாக வருணித்தார்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி: வடநூலார் ஹேதூத்ப்ரேக்ஷையென்பர்; "பெயர்பொருளல் பொருளெனவிரு பொருளினு, மியல்பின் விளைதிறனன்றிப் பிறிதொன்று, தான்குறித் தேற்றறற் குறிப்பேற்ற மதுவே, யன்ன போலெனு மவைமுதலாகிய, சொல்நிலை விளக்குந் தோற்றமு முடைத்தே" என்பது இலக்கணமாதலால், தற்குறிப்பேற்றவணி 'போல்' என்னும் உவமச்சொற்புணர்ந்து வந்தது. அருணன் - சூரியன்தேர்ப்பாகன்: காசியபப்பிரமாவினது மனைவிமார்களுள் விநதையென்பவளது புத்திரன்; கருடனுக்கு மூத்தவன்: இவனுக்கு இடுப்புக்குக்கீழ்ப்பட்ட உடம்புறுப்பு ஒன்றும் இன்றென அறிக. 'அருணன்தன் நயனக்கதிக்கும் முந்துறு கலினமான்' என்றது - தேர்ப்பாகனதுகண்களின்பார்வைஎவ்வளவுதூரஞ்செல்லுமோ அதைவிட அதிகதூரம் அவன்கண்செல்லுதற்குமுன்னமேசெல்லுங் குதிரை யென்க; இதனால்,சூரியன்தேர்க்குதிரையினது மனோவேகம்வாயுவேகம் எனப்படுகிற அதிவேகம் உணர்த்தப்பட்டது. 'கலினமா' எனவே குதிரையாயிற்று; ன்-சாரியை.முச்சுடர்களுட் சூரியன்,சந்திரஅக்கினியர்என்னும் மற்றையிருசுடர்களைப்போல முறையே பதினாறுஎழுகிரணங்களையுடைத்தாகாமே ஆயிரங்கிரணங்களையுடைமையாலும்,மற்றையிருசுடர்க்குந் தன்னொளியைக்கொடுத்துவாங்குந் தன்மையுடைமையாலும், அடைமொழிகொடாமல் வாளா 'கதிரோன்' எனப்பட்டான்; கதிரோன் - ஒளியுடையோன்: கதிர் - ஒளி. காலம் - காலை என ஈறுதிரிந்தது. செய்வான் - வினையெச்சம்; வான் - எதிர்காலங் காட்டும் எச்சவிகுதி: வ் - இடைநிலை, ஆன் - விகுதி என்பாருமுளர். இச்சொல்லை எதிர்கால முற்றெச்சமாகக் கொள்ளலும் ஒன்று. 'குளித்தான்' என்றதனால், கடல் - மேல்கடலாயிற்று. அவர் நதிக்குவந்து எய்தலும் கதிரோன் தேரொடுங் கடல்குளித்தான் என்க. 'நதிக்கு' என்பதற்கு - உருபுமயக்கமாக, நதியைஎனப் பொருள் கூறினும் அமையும். (௨)

கறங்குதண் புனற்கடிநெடுந் தாளுடைக் கமலத்
தறங்கொளுண் மலர்க்கோயில்கள் இதழ்க்கத வடைப்பப்
பிறங்குதாமரை வனம்விட்டுப் பெடையொடு களிவண்
டுறங்குகின்றதோர் நறுமலர்ச் சோலைபுக் குறைந்தார்.

(இ-ள்.) கறங்கு தண் புனல் - ஒலிக்கின்ற குளிர்ந்த நீர்நிலைகளிலேயுள்ள, கடி - வாசனையையும், நெடு தாள் - நீண்ட நாளத்தையும், உடை - உடைய, நாள் கமலத்து மலர் - அன்றுமலர்ந்த தாமரையின்மலர்களாகிய, அறம் கொள் கோயில்கள் - (வருவிருந்தாகிய வண்டுகளுக்குத் தாகந்தீரத் தேனையளித்தலாகிய)தருமத்தைக் கொண்ட சிறந்தமாளிகைகள், இதழ் கதவு அடைப்ப - தமது இதழ்களாகிய வாயிற்கதவுகளை மூடிவிட்டதனால், (அங்குச்சென்று மதுவுண்டு களித்து உறங்க இயலாமல்), பிறங்கு தாமரை வனம் விட்டு - விளங்குகின்ற அத் தாமரைக்காட்டை நீங்கி, களி வண்டு பெடையொடு உறங்குகின்றது - களிப்பையுடைய ஆண் வண்டுகள்பெண்வண்டுகளுடனே(வந்து)தங்குதற்கு இடமான,ஓர் நறுமலர் சோலை - வாசனைவீசுகின்ற பூக்களையுடைய ஒருசோலையில்,புக்கு - பிரவேசித்து, உறைந்தார் - (அன்றிரவு மூவரும் அங்குத்) தங்கினார்கள்; (எ-று.)

கடி - உரிச்சொல்; "கடியென் கிளவி காப்பே கூர்மை, விரையே விளக்க மச்சஞ் சிறப்பே, விரைவே மிகுதி புதுமை யார்த்தல், வரைவே மன்றல் கரிப்பி னாகும்" என்ற சூத்திரத்தால், இதன்பொருள்களை உண

ர்க. நாள்மலர் - புதிய மலர். கோ + இல் = கோயில்; கோவில் என்று ஆகற்பாலது கோயில்என்று ஆனது, இலக்கணப்போலி: சிறந்தவீடு என்று பொருள். தாமரைமலர்த்தொகுதியைத் தாமரைக்காடென்றல் கவிசமயம். பெடை - பெண்மைப்பெயர்; இது, பறவைக்கு உரியதாதலை "பேடையும் பெடையு நாடி ளென்றும்" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. 'களிவண்டு' என்றதனாலும், 'நறுமலர்ச்சோலை' என்றதனாலும், தாமரைமலர்களில்தேன்பெறாது மீண்டுவிட்ட வண்டினங்கள் சோலைகளிலுள்ள பலவகைப்பூக்களின் தேனை உண்டு களித்தன வென்க. பெடையோடு களிவண்டு என எடுத்து, பெடையோடுகூடிக் களிக்கின்ற வண்டு எனவுமாம். கொடையாளிகள் ஒருகாலத்து இரக்கவருவார்க்கு இடங்கொடாமல் இற்கதவை அடைத்துவிட்டால் வருபவர் மீண்டு வேற்றிடஞ்சென்று தாம்வேண்டியதுபெற்று மகிழ்தலாகிய உலகியற்கையை உட்கொண்டு, இங்ஙனம்வருணித்தார். வநம் என்னும் வடசொல்லுக்கு-நீரென்னும்பொருளும் உண்டாதலால், தாமரைவனம் - தாமரைப்பொய்கையாகவுமாம்; வனம் - பொய்கைக்கு ஆகுபெயர். தாமரை பகலில்மலர்ந்து இரவிற்குவியும். (௩)

இனையசோலைமற்றியாதெனவிராகவன்வினவ
வினையெலாமறநோற்றவன்விளம்புவான்மேனாட்
டனையரானவர்க்கிரங்கியேகாசிபன்றனது
மனையுளாடவம்புரிந்தனளிவணெனவலித்தான்,

(இ - ள்.) (அப்பொழுது), 'இனைய சோலை - இந்தப்பூஞ்சோலை, யாது-எத்தன்மையது?' என - என்று, இராகவன் - ரகுகுலதிலகனாகியஸ்ரீராமபிரான், வினவ - கேட்க, வினை எலாம் அற நோற்றவன் - கருமங்களெல்லாம் ஒழியும்படி தவஞ்செய்தவராகிய விசுவாமித்திரமுனிவர், விளம்புவான் - விடைகூறுபவராய், 'மேல் நாள் - முன்னொருகாலத்தில், காசிபன் தனது மனையுளாள் - காசியபமுனிவரது மனைவியாகிய திதி என்பவள், தனையரானவர்க்கு இரங்கி - தனதுபுத்திரர்களாகிய அசுரர்களுக்காகச் சோகித்து, இவண் - இவ்விடத்தில், தவம் புரிந்தனள் - தவஞ்செய்தாள்,' என - என்று, வலித்தான் - தெளிவாகச்சொன்னார்; (எ - று.)

மற்று - அசை. இராகவன் - ராகவன்; ரகுமகாராசனதுகுலத்தில் அவதரித்தவனென்று பொருள்: தத்திதாந்தநாமம்; இவ்வரசன் - தசரதசக்கரவர்த்திக்கு மூதாதை: இவன், எல்லாத்தேசங்களையும்வென்று விச்வஜித்என்னும்வேள்வியைச் செய்து பொருளனைத்தையும்வழங்கிவிட்டு வெறுங்கையனாயிருக்கையில், கௌத்ஸன் என்னும் பிராமணன் தன்குருவாகிய வரதந்துமகாமுனிவருக்குக் குருதக்ஷிணைகொடுத்தற்பொருட்டு வந்துயாசிக்க, குபேரனிடத்திலிருந்து வேண்டியபொருளை அழைப்பித்து அந்தக்கௌத்சமுனிக்குக் கொடுத்தான்; இவ்வாறு மிகுந்தவீரமுங் கொடையு முடையவனாதலால், இராமபிரானை இவன்வம்சத்துப்பெயராற் கூறினார். தநயர் என்னும் வடமொழியின் திரிபாகிய தனயர்என்பது, இங்கே எதுகைநயநோக்கி 'தனையர்'என இடைப்போலிபெற்று நின்றது; [நன் - எழுத்தியல் - ௬௫.] மனைஉளாள் - வீட்டிலேயிருந்து சம்சாரகாரியங்களை நிருவகிப்பவள். இவண், இ - சுட்டெழுத்து, பகுதி; அண் - இடப்பொருள் காட்டும் விகுதி: நடுவண் என்பதிற்போல. (௪)

இதுமுதல் இருபத்தைந்துகவிகளால் விசுவாமித்திரர் இச்சோலையின் இந்தவரலாற்றை விரித்துக்கூறுபவராய், முன்னே திருப்பாற்கடல்கடைந்தவிருத்தாந்தத்தைக் காரணபூர்வமாக விவரிக்கின்றார்.

அண்டகோளகைக்கப்புறத்தென்னையாளுடைய
கொண்டனீள்பதத்தெய்தியோர்விஞ்சையர்கோதை
புண்டரீகமென்பதத்தியைப்புகழ்ந்தனள்புகழ
வண்டறுமதுமாலைகைக்கொடுத்தனண்மகிழ்ந்து.

(இ-ள்.) அண்டகோளகைக்கு அப்புறத்து - இவ்வுலக வுருண்டைக்கு அப்பால்உள்ள, என்னை ஆளுடைய கொண்டல் நீள் பதத்து - என்னை அடிமையாகவுடைய காளமேகம்போன்ற திருமாலினது நீண்ட பரமபதத்திலே, ஓர் விஞ்சையர் கோதை - ஒருவித்தியாதரப்பெண், எய்தி - போய்ச்சேர்ந்து, புண்டரீகம் மென் பதத்தியை - செந்தாமரைமலரை மென்மையான வாசஸ்தானமாகவுடைய இலக்குமியை, புகழ்ந்தனள் - (வீணைப்பாட்டுப்பாடித்) தோத்தரித்தாள்; புகழ - (அங்ஙனம்) தோத்தரிக்க, மகிழ்ந்து - (அத்திருமகள்) திருவுள்ளமுவந்து, வண்டு அறு மது மாலை - வண்டுகள் நீங்காத தேனினையுடைய தனதுபூமாலையை, கை கொடுத்தனள் - (தனது கூந்தலினின்றும்எடுத்து) அவள்கையில் (வெகுமானமாகக்) கொடுத்தாள்.

பரமபதமடைந்தவர்மீண்டுவருதலில்லையென்பது நூற்கொள்கையாதலாலும், இவ்வித்தியாதரப்பெண் மீண்டுவந்தனளென்று மேற்கவியிற்கூறப்படுதலாலும், இங்கு 'நீள்பதம்' என்பது - ஸாக்ஷாத் பரமபதமன்று, காரணவைகுண்டமென்பதொரு விஷ்ணுலோகம் என உணர்க. அதற்கும் என்றும் அழிவில்லையாதலாலும், எல்லாவுலகங்களினும் உயர்ந்து உள்ளதனாலும், 'நீள்' என்னும்அடைமொழி கொடுக்கப்பட்டது. 'என்னையாளுடையகொண்டல்' எனத் திருமாலைக்கூறியதனால், விசுவாமித்திரரும் கம்பரும் வைஷ்ணவரேயாதலறிக. கருமைநிறத்தாலும், குளிர்ச்சியாலும், கைம்மாறுகருதாது கருணைமழைபொழிதலாலும், காளமேகம் எம்பெருமானுக்கு உவமை. விஞ்சையர் - மாலிகாஞ்சனம் முதலிய மாயவித்தையையுடையவர்; இவர், பதினெட்டுத்தேவகணங்களுள் ஒருசாதியர். கோதை - பூமாலை; அதுபோல மென்மையையும் அழகையுமுடைய பெண்ணுக்கு உவமையாகுபெயர். புண்டரீகம்என்பது, வெண்டாமரையின்பெயராக வடமொழிநிகண்டினுட் கூறப்பட்டிருப்பினும், இங்கே இடப்பொருத்தம் நோக்கி, செந்தாமரையெனக் கொள்ளத்தக்கது; 'புண்டரீகாக்ஷன்' என்பதிற்போல. பதம் - இடம். இனி, புண்டரீகம் மென் பதத்தி - தாமரைமலர்போல மென்மையான திருவடிகளையுடையவள் என்றுமாம். புண்டரீகம் என் எனப்பிரித்து - தாமரைமலரெனப்படுகிற என்றும் உரைக்கலாம். மகிழ்ந்து - (மாலையைப்பெற்ற வித்தியாதரப்பெண்) களித்து, மீளுதலும் என மேற்கவியோடு இயைப்பினும் அமையும். பதத்தி, இ - பெண்பால்விகுதி; அத்துச்சாரியையின் அகரம் மவ்வீறொற்றழிந்த நிலைமொழியீற்று அகரத்தின்முன கெட்டது: [நன் - உருபுபுணரியல் - கஉ.] (௫)

அன்னமாலையையாழிடைப்பிணித்தயனுலகங்
கன்னிமீடலுங்கசட்டுறுமுனிபெதிர்காணு
வென்னையாளுடைநாயகிக்கிசையெடுப்பவளென்
றன்னடாளிணைவணங்கினெறெத்தலுமனையாள்.

இதுவும், மேலைக்கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) அன்ன மாலையை - அந்தப்பூமாலையை, யாழிடை பிணித்து - தன்வீணையிலே கட்டிக்கொண்டு, கன்னி - விவாகமில்லாத அவ்வித்தியாதரப்பெண், அயன் உலகம் மீடலும் - பிரமலோகத்துக்குத் திரும்பிவந்த

வளவில், கசடு உறு முனி - கோபம்மிக்க துருவாசமுனிவர், (பிரமலோகஞ் சென்றிருந்தவர்), எதிர் காணு - (அவளை) எதிரிலே கண்டு, என்னை ஆள் உடை நாயகிக்கு இசை எடுப்பவள் என்று - என்னை அடிமையாகவுடைய யாவர்க்குந் தலைவியாகிய பெரியபிராட்டியாருக்குக் கீதம்பாடுமவள் இவளென்று அறிந்து, அன்னள் தாள் இணை வணங்கி நின்று - அவளது உபயபாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து (எழுந்து) நின்று, ஏத்தலும் - துதித்தவளவில், அனையாள் - அவ்விச்சாதரமகள், (எ - று.)—'அளித்தனள்' என வருங்கவியோடு இயையும்.

இதனால், துருவாசமகாமுனிவரது விஷ்ணுபக்தியும், "வைஷ்ணவோ வைஷ்ணவம்த்ருஷ்ட்வா தண்டவத்ப்ரணமேத்புவி" என்கிறபடியே ஒரு வைஷ்ணவர் மற்றொருவைஷ்ணவரைக் கண்டமாத்திரத்தில் தண்டனிட்டு உபசரிக்க வேண்டும் என்பதும், அங்ஙனம் நன்குமதிக்குங்காலத்து ஆண்பாலார்பெண்பாலாரென்ற வேறுபாடு கருதப்படாது என்பதும் நன்கு விளங்கும். யாழிடை, இடை - ஏழனுருபு. அயன் - அஜனென்னும் வடமொழித் திரிபு: திருமாலினிடத்தினின்றுந் தோன்றியவனென்று பொருள்; அ என்று விஷ்ணுவுக்குப் பெயர்: "அகாரார்த்தோவிஷ்ணு:" என்பதிகாண்க. கசடு - குற்றம்; தவமுடையார்க்குப் பெருங்குற்றமாகுந் தன்மை பற்றி, இங்கே கோபம் 'கசடு' எனப்பட்டது. துருவாசமகாமுனிவர் அளவிறந்த முன்கோபமுடையவராதலால், 'கசடுறுமுனி' எனப்பட்டார்; இது பற்றியே, இவரைக் காளிதாசகவி சாகுந்தளத்தில் "சுலபகோபரான மகர்ஷி" என்றும், வில்லிபுத்தூரார் மகாபாரதத்தில் "சாபத் தாலுஞ் சாபமொழி தன்னால் வளருந் தவத்தாலுங், கோபத் தாலும் பேர்படைத்த கொடிய முனிவன் றுருவாசன்" என்றுங் கூறியது. மற்றையோர்க்கெல்லாம் பிறரைச் சபிக்கச்சபிக்கத் தவங்குறையும்; இவரோ, அங்ஙனன்றிக்கே, சபிக்கச்சபிக்கத் தவம்வளர்ந்துவருமாறு வரம்பெற்றுள்ளவர்: ஆதலால் எப்பொழுதும் பெருங்கோபமுடையராய் எல்லோரையுஞ் சபித்தல் இவர்க்கு இயல்பு. இவர், அத்திரிமுனிவரது புத்திரர். காணு - இறந்தகாலவினையெச்சம். 'கசடறுமுனி' எனவும் பாடம். (சு)

உலகம்யாவையும்படைத்தளித்துண்டுமிழொருவ
னிலகுமார்பகத்திருந்துயிர்யாவையுமீன்ற
திலகவாணுதல்சென்னியிற்சூடியதெரிய
லலகின்மாமுனிபெறுகெனவளித்தனளளியால்.

(இ - ள்.) 'உலகம் யாவையும் - எல்லாவுலகங்களையும், படைத்து - (ஆதிகாலத்திலே பிரமரூபியாய்ச்) சிருஷ்டித்து, அளித்து - (பின்பு தானானநிலையிலே விஷ்ணுரூபியாய்க்) காத்து, உண்டு - (பிரளயகாலத்திலே) திருவமுதுசெய்து [திருவயிற்றினுள்ளே கொண்டு], உமிழ் - (பிரளயம்நீங்கியவுடனே மீண்டும்) வெளிப்படுத்தியருளுகிற, ஒருவன் - ஒப்பற்றவனாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியினது, இலகு மார்பு அகத்து - விளங்குகின்ற திருமார்பினிடத்திலே, இருந்து - வீற்றிருந்து, உயிர் யாவையும் - எல்லாவுயிர்களையும், ஈன்ற - பெற்றருளின, திலகம் வாள் நுதல் - திலகத்தையணிந்த பிரகாசமான நெற்றியையுடைய திருமகள், சென்னியில் - தனது திருமுடியிலே, சூடிய - தரித்திருந்துள்ள, தெரியல் - இம்மலர்மாலையை, அலகு இல் மா முனி - (தவப்பெருமைக்கு ஒரு) அளவில்லாத சிறந்தமுனிவனே! பெறுக - (நீ) பெறுவாயாக', என - என்றுசொல்லி, அளியால் - அன்

போடு, அளித்தனள் - (தன்யாழிற்கட்டியுள்ளபூமாலையை வித்தியாதரமகள் துருவாசமகாமுனிக்குக்) கொடுத்தருளினாள் ; (எ - று.)

ஒருவன் - ஏகமூர்த்தி ; அத்விதீயன் : தன்னைப்போல வேறொருவரில்லாதவன். 'இலகமார்பகத்து' என்ற பாடத்துக்கு - மார்பினிடத்திலே (அது) விளங்கும்படி வீற்றிருந்து என்று உரைகூறுக ; இலகு அ எனப்பிரித்து, அந்தமார்பு எனச் சுட்டாக உரைக்கலாகாது : "எகர வினாமுச் சுட்டின் முன்னர், உயிரும் யகரமு மெய்தின் வவ்வும், பிறவரி னவையும்" என்ற விதியினால், 'அம்மார்பு' எனச் சுட்டின்முன் மெலிமிகுமாதலின் ; இனி, 'அம் மார்பு' என்பது செய்யுளோசையின்பநோக்கி 'அமார்பு' எனத்தொகுத்தலாயின்றதெனினும், சுட்டுக்குப் பொருள் சிறவாமை காண்க. உயிர்களெல்லாவற்றையும்படைத்தலால் அவையனைத்துக்குந் தந்தையாகிய திருமாலினது மனைவியாதல்பற்றித் திருமகள் அவற்றுக்கெல்லாந் தாய்முறையாளாதலால், 'உயிர்யாவையுமீன்ற' என்றாள்; அன்றியும், திருமாலினது திவ்வியசக்தியினது சொரூபமே திருமகளென உணர்க. ஈன்ற, ஈன் - பகுதி. திலகம் - நெற்றிப்பொட்டு. வாள் - உரிச்சொல் ; "வாளொளியாகும்." வாணுதல் - அன்மொழித்தொகை. தெரியல் - விளங்குதல்; விளங்கும்மாலைக்குத் தொழிலாகுபெயர் : அல் - கருத்தாப்பொருள்விகுதியெனக்கொள்ளினுமாம். முனி - அண்மைவிளியாதலின், இயல்பு. 'மாதவ' என்றும் பாடம். (எ)

தெய்வநாயகிசென்னியிற்சூடியதெரிய
லையயான்பெறப்புரிந்ததெத்தவமெனவாடி
வெய்யமாமுனிசென்னியிற்சூடியேவினைபோ
யுய்யுமாறிதென்றுவந்துவந்தும்பர்நாடடைந்தான்.

(இ - ள்.) 'தெய்வம் நாயகி - எல்லாத்தேவர்களுக்குந் தலைவியாகிய திருமகள், சென்னியில் சூடிய - தனதுமுடியிலே தரித்திருந்துள்ள, தெரியல் - மாலையை, பெற - (இப்பொழுது) பெற்றதற்கு, யான் புரிந்தது - நான் (முன்னே) செய்துள்ளது, எத் தவம் - எப்படிப்பட்ட பெருந்தவமோ? ஐய - (இது எனக்குக்கிடைத்தது) ஆச்சரியம் !' என - என்று எண்ணிக்கொண்டும் சொல்லிக்கொண்டும், வெய்ய மா முனி - (கோபத்தாற்) கொடிய துருவாச மகாமுனிவர், ஆடி - (ஆனந்தத்தால்) நர்த்தனஞ்செய்துகொண்டே, சென்னியில் சூடியே - தமதுமுடியிலே (அம்மாலையைத்) தரித்துக்கொண்டு, வினை போய் உய்யும் ஆறு இது என்று - கருமமொழிந்து நற்கதிபெறும் விதம் இதுவாமென்று கருதி, உவந்து வந்து - மகிழ்ந்துகொண்டேவந்து, உம்பர் நாடு அடைந்தான் - தேவலோகத்தைச் சேர்ந்தார்; (எ - று.)

தெய்வநாயகன் - திருமால்; அதன்பெண்பால் - தெய்வநாயகி. ஐய - அம்ம, அப்ப என்பனபோல வியப்புப்பொருள்கருதுவதோர் இடைச்சொல். இனி, ஐய - ஆச்சரியப்படத்தக்க, தவம் எனலுமாம். ஐய - அசைநிலை என்பாருமுளர். உவந்து உவந்து எனப்பிரித்து - மிகுதிபற்றிய அடுக்கெனவுமாம். துருவாசமுனிவர், உருத்திரமூர்த்தியின் அம்சம். (அ)

பெய்யுமாமுகில்வெள்ளியம்பிறங்கன்மீப்பிறழுஞ்
செய்யதாமரையாயிரமலர்ந்துசெங்கதிரின்
மொய்யசோதியைமிலைச்சியமுறைமைபோன்றொளிரு
மெய்யிரேடையிராவதக்களிற்றின்மேல்விளங்க.

இதுமுதல் நான்குகவிகளால், சுவர்க்கலோகத்தில் தேவேந்திரன் ஐராவதத்தின்மீதிலேறிப் பவனிவருதற் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

(இ-ள்.) வெள்ளி அம் பிறங்கல் மீ - வெள்ளிமயமான அழகியதொரு மலையின்மேலே, பெய்யும் மா முகில் - மழைபெய்யநிற்பதொரு கரிய [பெரிய] காளமேகம், (?)றழும் செய்ய தாமரை ஆயிரம் மலர்ந்து - விளங்குகின்ற சிவந்த ஆயிரந்தாமரைமலர்கள் தன்னிடத்திலே மலரப்பெற்று, செம் கதிரின் மொய்ய சோதியை மிலைச்சிய - சிவந்த கிரணங்களையுடைய சூரியனது அடர்த்தியுடைய ஒளியினையுந் தன்மேற்கொண்ட, முறைமை போன்று - தன்மையை ஒத்து, ஒளிரும் - விளங்குகின்ற, மெய்யினோடு - (தனது) [இந்திரனது] உடம்பினால், அயிராவதம் களிற்றின் மேல் - ஐராவதமென்னும் யானையினது மேலிடம், விளங்க - பிரகாசிக்கவும், (எ - று.)

இக்கவியிலுள்ள 'விளங்க' என்பதும், மேல் மூன்றுகவிகளிலுள்ள 'நெருங்க,' 'புரள,' 'விளங்க,' 'மறைப்ப' என்னுஞ் செயவெனெச்சங்களும், பன்னிரண்டாங்கவியிலுள்ள 'வ்ரும்' என்னும் பெயரெச்சத்தில் 'வா' என்னும் வினையைக் கொண்டு முடியுமெனக் காண்க.

இக்கவி, இல்பொருளுவமையணி. உபமேயத்துக்கு ஏற்ற உபமானம் உலகத்தில் இல்லையென்னுஞ் சிறப்பு உண்டாதற்கு, இல்பொருளுவமை கொடுத்துக்கூறினார். வெள்ளிமலை - ஐராவதத்துக்கும், மேகம் - இந்திரனுடம்புக்கும், ஆயிரந்தாமரைமலர்கள் - அவனது ஆயிரங்கண்களுக்கும், சூரியகிரணங்கள் - அவன் அணிந்துள்ள கிரீடம்முதலிய ஆபரணங்களின் ஒளிகளுக்கும் அவனது தேககாந்திக்கும் உபமானமாமென அறிக. பிறங்கல்மீ மேகம்மலர்ந்து மிலைச்சிய முறைமை போன்று என இயையும். வலிமையும் பெருமையும் மதநீருருவியுடைமையும்பற்றி, யானைக்கு மலை உவமையாம். ஐராவதம் - வெண்ணிறமுடையதாதலால், வெள்ளிமலையை உவமைகூறினார். ஐராவதம் - இந்திரனது பட்டத்தியானை; நான்குதந்தங்களுடையது. பிறங்கல் - விளங்குதல்; (நெடுந்தூரத்திலுள்ளாருங் கண்டறியும்படி உயர்ந்து) விளங்குகின்ற மலைக்குத் தொழிலாகுபெயர்: அல் - வினைமுதற்பொருள்விகுதியெனினுமாம். இந்திரனது நிறம் கருமையாதலால், மேகம் அவனுடம்புக்கு உவமைகூறப்பட்டது. மேல் ஆரணியகாண்டத்தில் சரபங்கர்பிறப்புநீங்குபடலத்தில் "ஆயிரமாந் தவ்வா திரவும் பொலிதா மரையின், வெவ்வே றலர் கண்ணினன்," "மும்மா மதவெண் ணிறமுன் னுயர்தாள், வெம்மா மிசையான் விரிவெள் ளிவிளங், கம்மா மலையண் ணலையே யனையான்," "தீர்விற்றிசெங் கதிர்தங் குவதோ, ருருத் தறெனப் பொலியொண் முடியான்," "வில்லா லொளிர்மே கமெனப் பொலிவான்" என்பவற்றை இங்கே உணர்க. செங்கதிர் - பண்புத்தொகையன்மொழியென்றாயினும், அடையடுத்தசினையாகுபெயரென்றாயினுங் கொள்க. மொய்ய - கூட்டமென்னும்பொருளுணர்த்தும் மொய்என்னும்பெயர்ச்சொல்லின் அடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; இனி, மொய் என்பதை முதனிலைத்தொழிற்பெயராய் மொய்த்தலெனப் பொருள்படுவதெனவுங் கொள்ளலாம். 'மொய்கொள்சோதி' எனப்பாடமோதுவாருமுளர். சோதி - ஜ்யோதி என்னும் வடசொல்லின் சிதைவு. மிலைச்சிய், மிலைச்சு - பகுதி. அயிராவதம் - முதற்போலி. வெள்ளியம்பிறங்கல், அம் - சாரியையெனினுமாம். ஆயிரம் அலர்ந்து எனவும் பதம்பிரிக்கலாம். ஐராவதக்களிறு - ஐராவதமாகிய களிறு என இருபெயரொட்டுப் பண்புத்தொகை. களிறு - ஆண்பாற்பெயர்; "வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்" என்றார் தொல்காப்பியனார். களிறு - மதக்களிப்புடையது; களி - பகுதி, று - பெயர்விகுதி. ஐராவதத்தின்மேல் வீற்றிருத்தலால் இந்திரனுக்குச் சிறப்பு உண்டாவது என்பதன்றிக்கே, இந்திரன்வீற்றிருத்தலால் ஐராவதத்துக்குச் சிறப்புண்டாவது எனக்கூறி, இத

னால் இந்திரனது சிறப்பைவிளக்குவார், 'மெய்யினோடையிராவதக்களிற்றின் மேல்விளங்க' என்றார்; "புனைமணி மண்டபம் பொலிய வெய்தினான்", "வெவ்வரி முகத்த பீடம் விளங்கவீற் றிருந்த காலை" என்பவற்றோடு இதனை ஒப்பிடுக. 'மெய்யினோடு' என்பதில் ஒடு உருபு, காரணப்பொருளது. (௯)

அரம்பைமேனகைதிலோத்தமையுருப்பசியனங்கன்
சரம்பெய் தூணியிற்றளிரடி நூபுரந்தழைப்பக்
கரும்பையுஞ்சுவைகைப்பித்தகுதலையர்விளரி
நிரம்புபாடலோடாடினர்வீதிகணெருங்க.

(இ - ள்.) கரும்பையும் - கருப்பஞ்சாற்றையும், சுவை - (தனதினிய)உருசியினால், கைப்பித்த - கசப்பாம்படி செய்த, குதலையர் - மழலைச்சொற்களையுடையவர்களாகிய, அரம்பை - ரம்பையும், மேனகை - மேநகையும், திலோத்தமை - திலோத்தமையும், உருப்பசி - ஊர்வசியும், (என்கின்ற தேவவேசிகள்), அனங்கன் சரம் பெய் தூணியின் - மன்மதனது மலரம்புகளைப் பெய்ததொரு தூணீரம் போன்ற, தளிர் அடி - தளிர்போல்மென்மையான தமது பாதங்களிலே, நூபுரம் - சிலம்பென்னுங் காலணி, தழைப்ப - ஒலிமிகுமாறு, விளரி நிரம்பு பாடலோடு - விளரி என்னும் இசை நிறைந்த பாட்டுடனே [வாயாற் பாடல்பாடிக்கொண்டு], ஆடினர் - நர்த்தனஞ் செய்துகொண்டு, வீதிகள் - தெருக்களில், நெருங்க - சமீபத்தில் அடர்ந்து வரவும், (எ - று.)

இப்பாட்டில், அரம்பைமுதலிய நால்வரைக் கூறியது - மற்றைத்தேவ கணிகையர்க்கும், நூபுரம் - மற்றை யணிகளுக்கும், விளரி - மற்றையிசைகளுக்கும் உபலக்ஷணம். அரம்பை - வடசொற்றிரிபு; இவள் - குபேரனது குமாரனான நளகூபரனது போகமாது. திலோத்தமை - அழகியமகளிர்களது உடம்பழகுகளில் எள்ளளவெள்ளளவாக எடுத்துத் திரட்டிப் பிரமதேவரால் மேலானவளாகப் படைக்கப்பட்டவள்; திலம் - எள், உத்தமை - மேலானவள். உருப்பசி - வடமொழிச்சிதைவு; (பதரிகாச்சிரமத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த நாராயணமகாமுனிவரது) ஊருவினின்றும் [தொடையினின்றும்] தோன்றினவள்: இவள், நாராயணமுனிவரது தவத்தைக் கெடுக்கும்படி இந்திரனால் ஏவப்பட்டுவந்த தேவஸ்திரீகளை மோகிப்பிக்கும் பொருட்டு அம்முனிவராற்சிருஷ்டிக்கப்பட்டவள். அநங்கன் - உடம்பில்லாதவன்; ந + அங்கம் எனப்பிரிக்க: ஒருகாலத்தில் திருக்கைலாசத்திற் பரமசிவனார் சனகர்முதலிய நால்வர்க்கும் யோகநிலையை உணர்த்துதல்நிமித்தம் தாம்யோகஞ்செய்துகொண்டிருக்கையிற் பிரமனேவலால் மலரம்புகளைபெய்து தமது தவத்தைக் கெடுக்கலுற்ற மன்மதனைச் சினந்து நெற்றிக்கண்ணைவிழித்து அதன்நெருப்புக்கு இரையாய் உடம்பு எரிந்து சாம்பராய்ப்போம்படி செய்தன ரென்பதும், உடனே மன்மதன்மனைவியாகிய இரதிதேவி தன்கணவன் தகிக்கப்பட்டதனால் மிகவருந்திப் பரமசிவனையடைந்து பிரார்த்திக்க, அவர் அவளுக்குமாத்திரம் ரூபமுடையவனாகவும் மற்றையோர்க்கு ரூபமில்லாதவனாகவும் இருக்கும்படி அருள்செய்தன ரென்பதும் புராணகதைகள்; "திங்கண்மே வுஞ்சடைத் தேவன்மேன் மாரவே, ளிங்குநின் றெய்யவும் மெரிதருந் நுதல்விழிப், பொங்குகோ பஞ்சுடப் பூளைவீ யன்னதன், னங்கம்வெந் தன்றுதொட் டனங்கனே யாயினான்" என்றார் கீழ்த் தாடகைவதைப்படலத்தும். மன்மதனுக்கு அம்பு மலராதலை "ஆலைக் கரும்புசிலை யைங்கணைபூ" என்பதனாலும் அறிக. தூணி - தூணீரம் என்னும் வடமொழித் திரிபு; அம்பு

ப்புட்டில்: இது, கணைக்காலுக்கு வடிவுவமை. கரும்பையுஞ் சுவை கைப்பித்த குதலை என்பதற்கு - கைப்புக்குந் தித்திப்புக்குஞ் சுவையில் எவ்வளவு வேறுபாடுண்டோ அவ்வளவுவேறுபாடு இனி[illegible]ற கருப்பஞ் சாற்றுக்குங் குதலைச்சொல்லுக்கும் உண்டென்பது கருத்து; நாவுக்குஇனிமைதருகிற கருப்பஞ்சாற்றினும் பலமடங்குஅதிகமாகச் செவிக்குஇனிமை தருகிற குதலையென்பது தாற்பரியம். கரும்பு - அதன்இரசத்துக்கு ஆகுபெயர். விளரி - ஏழுஇசைகளுள் ஒன்று; அவை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன: இவ்விசை - நெஞ்சாற்பிறப்பது. பாடல் - பாடப்படும்பாட்டுக்குத் தொழிலாகுபெயர்; அல் - செயப்படுபொருள்விகுதியெனினும் அமையும். இனி, விளரி நரம்பு பாடலோடு என்பதற்கு - யாழின் நிறைந்தபாட்டோடு ஒக்க என்றும் பொருள்கொள்ளலாம். 'கரும்பையும்' என்ற உம்மை - அதன் இனிமைமிகுதியைக் குறித்தலால், உயர்வுசிறப்புப்பொருளது. (௧௦)

நீலமால்வரைதவழ்தருகதிர்நிலாக்கற்றை
போலவேவிருபுடையினுஞ்சாமரைபுரளக்
கோலமாமதிகுறைவறநிறைந்தொளிகுலாவ
மேலிவர்ந்தெனவெள்ளியந்தனிக்குடைவிளங்க.

(இ - ள்.) மால் நீலம் வரை - பெரியதொரு நீலநிறமுள்ள மலையின் இருபுறத்தும், தவழ்தரு - சஞ்சரிக்கின்ற, கதிர் நிலா கற்றை போலவே - விளக்கத்தையுடைய சந்திரகாந்தியின்தொகுதியை ஒப்ப, இரு புடையினும் - தனது [இந்திரனது] இரண்டுபக்கங்களிலும், சாமரை புரள - சாமரங்கள் அசையவும், கோலம் மா மதி - அழகிய சிறந்த சந்திரன், குறைவு அற நிறைந்து - குறைவில்லாமல் (பதினாறுகலைகளும்) நிரம்பி, ஒளி குலாவ - (தனது) ஒளி விளங்க, மேல் இவர்ந்து என - மேலே தங்கியிருந்தாற்போல, வெள்ளி அம் தனி குடை - வெண்மைநிறத்தையுடைய அழகிய ஒப்பற்ற ஏகசத்திரம், விளங்க - பிரகாசிக்கவும், (எ - று.)

நீலவரை - நீலரத்தினமயமான மலையென்றுமாம். நீலகிரி - இந்திரனது நீலமேனிக்கும், நிலாக்கற்றை - வெண்சாமரைக்கும் உவமம். கற்றை - மயிர்முதலியவற்றின் தொகுதி. சாமரம் - சாமரைஎன ஈறுதிரிந்தது; சமரமென்னும் மானினது வாலின்மயிரினாற் செய்யப்பட்டதொரு இராசசின்னமென்பது பொருள்: தத்திதாந்தவடமொழி. கோலம் ஆம் மதி எனப்பிரித்து - அழகாகிய சந்திரன் என்றுமாம். வெள்ளி, இ - பகுதிப்பொருள் விகுதி; சிந்தாமணியில், 'உருளி', 'வெருளி' என்பனவற்றிற்போல. ஒற்றை வெண்கொற்றக்குடைக்கு, பூர்ணசந்திரன் - நிறத்தாலும், ஒளியாலும், தண்ணிழல்தருதலாலும், வட்டவடிவத்தாலும் உவமை. 'குலாவி' என்றும், 'மேல்நிவந்து' என்றும் பாடம். (௧௧)

தழங்குபேரியுங்குறட்டொடுபாண்டிலுஞ்சங்கும்
வழங்குகம்பலைமங்கலகீதத்தைமறைப்ப
முழங்குநான்மறைமூரிநீர்முழக்கெனவுலகை
விழுங்குமாவொரும்விழாவணிகண்டுளம்வியந்தான்.

(இ - ள்.) தழங்கு - ஒலிக்கின்ற, பேரியும் - பேரிகைகளும், குறட்டொடு - குறடுஎன்னும் வாத்தியங்களும், பாண்டிலும் - கைத்தாளங்களும், சங்கும் - சங்கங்களும், வழங்கு - உண்டாக்குகின்ற, கம்பலை - ஓசையானது, மங்கலகீதத்தை - (பெண்கள்பாடுகின்ற) மங்கலவாழ்த்துப்பாட்டை,

மறைப்ப - (பிறர்க்குக் கேட்கவொண்ணதபடி) மறையச்செய்யவும், மூழ ங்கு நால் மறை - (முனிவர்முதலியோரால்) உத்கோஷித்துச் சொல்லப்படு கிற நான்குவேதங்களின் ஓசையானது, மூரிநீர் முழக்கு என - பழமை யான கடலினது பேரொலியை ஒத்திருக்கவும், உலகை விழுங்கும் ஆ(று)- உலகத்தை விழுங்கும்படி, வரும் - (இந்திரன் பவனி)வருகின்ற, விழா அணி - திருவிழாவின் அழகை, கண்டு- (திருவாசமுனி)பார்த்து, உளம்வியந் தான் - மனதில் ஆச்சரியமடைந்தார்; (எ - று.)

சங்கு - வடசொல்லின்விகாரம். "கம்பலை சும்மை கலியே யழுங்க லெ ன்றிவை நான்கு மரவப் பொருள" என்னுந் தொல்காப்பியத்தால், கம்பலை யென்பது ஒலியுணர்த்தவதொருஉரிச்சொல்லாமென அறிக. 'வழங்குகம்பலை மங்கலகீதத்தைமறைப்ப' என்றது, வாய்ப்பாட்டொலியினும் வாத்தியகோ ஷமும் கைத்தாளவொலியும் அதிகப்பட என்றபடி; இதில், இந்திரனுக்கு மேலேவருகிற தீங்குக்கு அறிகுறியாக 'மங்களகரமானபாட்டை மறை க்க' என்கிற அருத்தமுந் தொனிவகையால் தோன்றும். பூமிக்குமுன்பே கடல் படைக்கப்பட்டதனால், 'மூரிநீர்' எனப்பட்டது; நீர் - கடலுக்கு ஆகு பெயர்: இனி, மூரிநீர் - பண்புத்தொகையன்மொழியெனவுமாம். ஆ - ஆறு என்பதன் விகாரம். உலகைவிழுங்குமாவரும் என்றதற்கு - மிகத் திரண்டு வருகிற என்றுகருத்து; இனி, உலகைவிழுங்குமாவரும் மூரிநீர் என இயை த்து, பிரளயசமுத்திரகோஷம்போல என்றுமாம். விழா - உற்சவம், ஊர் கோலம், உலாப்போதல். முழக்கு - முழங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'முழங்க' என்ற பாடத்திற்கு - நான்மறை மூரிநீர்முழக் கென முழங்க என்று அன்வயிக்க. (கஉ)

தனையொவாதவன்மகிழ்ச்சியால்வாசவன்றன்கை
வனையுமாலையைநீட்டலுந்தோட்டியால்வாங்கித்
துனைவலத்தயிராவதத்தெருத்திடைத்தொடுத்தான்
பனைசெய்கையினாற்பறித்தடிப்படுத்ததப்பகடு.

(இ - ள்.) தனை ஓவாதவன் - தன்னை(ப்பிறர்) ஒத்திருக்கப் பெறாத திருவாசமுனி, மகிழ்ச்சியால் - சந்தோஷத்தால், வனையும் மாலையை - தாம் தரித்திருந்த அப்பூமாலையை, வாசவன்தன்கை நீட்டலும் - இந்திரனது கை யிலே கொடுக்கப்புக்கவளவில், (அவன்), தோட்டியால் வாங்கி - (அதனை த்தன்கையால்வாங்காமல்)அங்குசத்தால் வாங்கி, துனை வலத்து அயிராவத த்து எருத்திடை தொடுத்தான் - விரைந்துசெல்லுகின்ற வலிமையையுடைய தனதுஐராவதயானையினது பிடரியிலே வைத்தான்; அப் பகடு - அந்த யா னையானது, பனை செய் கையினால் -பனைமரத்தையொத்த தனது துதிக்கை யினால், பறித்து - (அம்மாலையை) இழுத்து, அடி படுத்தது - தன்காலின்கீழி ட்டுத் தேய்த்தது; (எ - று.)

தனை ஓவ்வாதவன்-தனக்கு ஒப்பில்லாதவன் என்றபடி; ஒப்பில்லா மைகூறவே, உயர்வில்லாமை தானேபெறப்படும். மகிழ்ச்சி - தொழிற்பெ யர்; சி - விகுதி. வாசவன் - அஷ்டவசுக்களுக்குத்தலைவன்; அல்லது, எ ல்லா ஐசுவரியமு முடையவன். வாசவன் தன்கை நீட்டலும் என்பத ற்கு - (இந்திரனுக்குக்கொடுத்தற்கு முனிவர்) தம் கையைநீட்டினவளவில் என்றும் உரைக்கலாம். தோட்டி - மாவெட்டி. செய் - உவம வுருபு. ஐராவதத்தினது துதிக்கைக்கு, பனைமரம் - திரண்டுருண்டு நீண்ட வடிவ த்தால் உவமை; ஐராவதம் வெண்ணிறமுடையதாதலால், கருமைநிறம்

பற்றி உவமையாகாது. பகடு - ஆண்மைப்பெயர். இந்திரன் இங்ஙனஞ் செய்தது,செல்வச்செருக்கால். அவனைத்துன்பமுறுத்தவேண்டிய ஊழ்வினை இங்ஙனஞ் செய்யத் தூண்டிற்றெனக. (௧௩)

கண்டமாமுனிவிழிவழியொழுகுவெங்கனலா
லண்டகூடமுஞ்சாம்பராயொழியுமென்றழியா
விண்டுநீங்கினர்விண்ணவரிருசுடர்மீண்டு
வெண்டிசாமுகமிருண்டதுசுழன்றதெவ்வுலகும்.

(இ - ள்.) கண்ட - (அதனைப்) பார்த்த, மா முனி - துருவாசமகாமுனிவரது, விழி வழி - கண்களின்வழியாக, ஒழுகு - வெளியிற் சிந்துகிற,வெம் கனலால் - கொடிய கோபாக்கினியினாலே, அண்டகூடமும் - எல்லாஅண்டகோளங்களும், சாம்பர் ஆய் ஒழியும் - (எரிந்து) சாம்பலாகிஅழிந்துவிடும், என்று - என்றுநினைத்து, அழியா - மனம் வருந்தி, விண்ணவர் - தேவர்களெல்லாரும், விண்டு நீங்கினர் - (தத்தமது இடங்களினின்றும்) பிரிந்து ஓடிப்போனார்கள்; இரு சுடர் மீண்ட - (சூரியன் சந்திரன் என்னும்) இருசுடர்களும் (மேற்செல்லமுடியாமல்) திரும்பிவிட்டன; எண் திசா முகம் - எட்டுத்திக்குக்களின் இடமெங்கும், இருண்டது - இருட்சிபெற்றது; எவ்வுலகும் - எல்லாலோகமும், சுழன்றது - சுழற்சியடைந்தது; (எ - று.)

அண்டகூடம் - உலகவுருண்டையின் மேல்முகடு என்றுமாம். சாம்பர் - சாம்பல் என்பதன் ஈற்றுப்போலி. விண்டு, விள் - பகுதி; இங்கே, தன்வினை. தேவர்களை இருதிணையாகவுஞ் சொல்லலா மாதலால், 'இருசுடரும் மீண்ட' என அஃறிணையாற் கூறினார்; இனி, சொல்லால் அஃறிணையாயினும் பொருளால் ஆகுபெயராக உயர்திணையாக்கியுரைக்கலாம். எண்டிசை - கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு வடகிழக்கு என்பன. 'அழியா' என்றவிடத்து 'அயரா' என்றும் பாடம். (௧௪)

புகையெழுந்தனவுயிர்தொறுமெயில்பொடித்தவனி
னகையெழுந்தனசிவந்தனபுருவநன்னுதலிற்
சிகையெழுஞ்சுடர்விழியினனசனியுந்திகைப்ப
மிகையெழுந்திடுசதமககேளெனவெகுண்டான்.

(இ - ள்.) உயிர்தொறும் - (அம்முனிவரது) மூச்சுக்களிலெல்லாம், புகை எழுந்தன - புகைகள் கிளம்பின; எயில் பொடித்தவனின் - திரிபுரத்தைச்சாம்பலாக்கின பரமசிவனுக்கு(அக்காலத்தில்) உண்டானதுபோல, நகை எழுந்தன-(அம்முனிவருக்குப்பெருங்கோபத்தாற்)சிரிப்புக்கள்உண்டாயின; புருவம்-புருவங்கள்,நல் நுதலில்-அழகியநெற்றியிலே,சிவந்தன-எறிவிட்டன; (உடனே அம்முனிவர்),சிகை எழும்-சுவாலைகள் மேலோங்குகின்ற, சுடர் - நெருப்பை உமிழ்கின்ற, விழியினன் - கண்களையுடையவராய், அசனியும் திகைப்ப - இடியும் (இது என்ன ஓசையோ வென்று அஞ்சிப்)பிரமிக்கும்படி, மிகை எழுந்திடு சதமக கேள் என - 'குற்றம்மிகுந்திட்ட இந்திரனே! (யான்சொல்லுமிதனைக்) கேட்பாயாக' என்று, வெகுண்டான்- கோபித்துக் கூறுவாரானார்; (எ - று.)—அது மேலிரண்டுகவிகளிற்கூறுகின்றார்.

தொறு -இடைவிடாமைப்பொருள்குறிப்பதோர் இடைச்சொல். உயிர்தொறும்-எல்லாவுயிர்களினிடத்தும், புகையெழுந்தன என்றுமாம். தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்கதவஞ்செய்து மயனென்பவனாற் சுவர்க்க மத்திய பாதாளமெ

ன்னும் மூன்றிடத்திலும் முறையே பசும்பொன் வெண்பொன் கரும்பொன்களால் அரண்வகுக்கப்பட்டு ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந் தன்மையையுடைய மூன்றுபட்டணங்களைப் பெற்று மற்றும்பல அசுரர்களோடும் அந்நகரங்களுடனே தாம்நினைத்தவிடங்களிற் பறந்துசென்று பலவிடங்களையும்பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர்முனிவர்முதலியோரது வேண்டுகோளாற் சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திரசூரியர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்குவேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விஷ்ணுவை வாயுவாகியசிறகமைந்த அக்கினியை முனையாகவுடைய அம்பாகவும், மற்றைத்தேவர்களைப் பிறபோர்க்கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு யுத்தசன்னத்தராய்ச்சென்று போர்செய்யத்தனிக்கையிற் புன்சிரிப்புச்செய்து அசுரனைவரையும் பட்டணங்களோடு எரித்தருளினனென்பது கதை. எயில் - மதில்; மதில்சூழ்ந்த பட்டணங்களுக்கு ஆகுபெயர். நகை—நகு - பகுதிபாயின், ஐ - தொழிற்பெயர்விகுதி; நகை - பகுதிபாயின், முதனிலைத்தொழிற்பெயர். புருவம் - ப்ப்ரூஃஎன்னும் வடமொழித் திரிபு. 'நல்நுதல்' என்றது, பிரமதேஜசு ஒளிவிளங்குகிற நெற்றியென்றபடி. 'நண்ணுதல்' என்று பாடமாயின், நள் நுதல் எனப்பிரித்து - நடுநெற்றியென்க; 'நண்பகல்', 'நள்ளிரவு' என்பனபோல. சிகை - சிகாஎன்னும் வடமொழித் திரிபு. 'அசனியும்' என்ற உயர்வுசிறப்பும்மை, அதனது பேரொலியைக் கேட்டு யாவரும் அஞ்சும்படியான பயங்கரமான தன்மையை விளக்குகின்றது. மிகை எழுந்திடு சதமக என்பதற்கு - மிகுந்த ஆடம்பரத்துடனே வருகின்ற இந்திரனே என்று உரைப்பாருமுளர். சதம் - நூறு, மகம் - யாகம்; நூறுஅசுவமேதயாகங்களைச்செய்து இந்திரபதவிபெறுதலால், இவனுக்கு இப்பெயர் வந்தது. (௧௫)

பூதநாயகன்புவிமகணாயகன்பொருவில்
வேதநாயகன்மார்பகத்தினிதுவீற்றிருக்கு
மாதிநாயகிவிருப்புறுதெரியல்கொண்டணைந்த
மாதராள்வயிற்பெற்றனென்முயன்றமாதவத்தால்.

(இ-ள்.) பூதம் நாயகன் - ஐம்பெரும்பூதங்களுக்குத் தலைவனும், புவி மகள் நாயகன் - பூதேவிக்குக் கொழுநனும், பொருவு இல் வேதம் நாயகன் - ஒப்பில்லாதவேதங்களுக்குத் தலைவனும் ஆகிய ஸ்ரீமகாவிஷ்ணுவினது, மார்பு அகத்து - திருமார்பினிடத்திலே, இனிது வீற்றிருக்கும் - இனிமையாக எழுந்தருளியிருக்கின்ற, ஆதி நாயகி - (யாவர்க்கும்) முதன்மையான தலைவியாகிய திருமகள், விருப்பு உறு - மிகவிருப்பத்தோடு சூடியிருந்த, தெரியல் - இந்தப் பூமாலையை, கொண்டு அணைந்த - பெற்றுவந்த, மாதராள் வயின் - (ஒருவித்யாதர) மகளிடத்தே, முயன்ற மா தவத்தால் பெற்றனென் - முன்னேசெய்துள்ள பெரிய தவத்தின் மகிமையால் (அவள் கொடுக்கப்) பெற்றேன்; (எ - று.)

பூதம் - பிராணிவர்க்கமென்றுமாம். புவிஎன்னும் வடசொல், அப்பாஷையில் ஏழாம்வேற்றுமை. வேதம் என்பதற்கு - (செய்யப்படுவனவும் செய்யப்படாதனவுமாகிய நன்மைதீமைகளை விதிவிலக்குக்களால்) அறிவிப்பதென்று பொருள். இனிது - இனிமையென்னும் பண்படியாகப் பிறந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; வினையெச்சப்பொருள்பட்டு இங்கு வினையுரியாய்நின்றது. வீறு - வேறொருவர்க்கில்லாத சிறப்பு; அச்சிறப்புடனிருத்தல் - வீற்றிருத்தல். ஆதிநாயகி - ஸரஸ்வதி, பார்வதி, இந்திராணி முதலிய நாயகிகளா

வார்யாவர்க்கும் நாயகி என்றபடி. விருப்பு - விரும்புஎன்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். உறு - உரிச்சொல். மாதராள் - விருப்பமுடையவள். வயின் - ஏழாம்வேற்றுமையுருபு. (கசு)

இன்றுநின்பெருஞ்செவ்விகண் டுவகையினீந்த
மன்றலந்தொடையிகழ்ந்தனைநின துமாநிதியு
மொன்றலாதபல்வளங்களுமுவரிபுக்கொளிப்பக்
குன்றிநீதுயருறுகெனவுரைத்தனன்கொடியோன்.

(இ - ள்.) இன்று - இப்பொழுது, நின் பெரு செவ்வி கண்டு - உன்னுடைய (உலாவருகின்ற) பெரிய வைபவத்தைப் பார்த்து, உவகையின் ஈந்த - (இந்தப்பூமாலை உனக்கேஉரியதென்று) மகிழ்ச்சியோடு (யான்) கொடுத்த, மன்றல் அம் தொடை - வாசனையையுடைய அழகிய மாலையை, இகழ்ந்தனை - அலக்ஷியஞ்செய்தாய்; (ஆதலால்), நினது மா நிதியும் - உன்னுடைய பெரியநிதிகளும், ஒன்று அலாத பல் வளங்களும் - ஒன்றல்லாத [அநேகமான] பலவகைச்செல்வமும், உவரி புக்கு ஒளிப்ப - கடலிலேபோய் மறைய, நீ—, குன்றி - பெருமைகுறைந்து, துயர் உறுக - துன்பமடைவாயாக, என - என்று, கொடியோன் - கடுங்கோபமுடைய துர்வாசமுனி, உரைத்தனன் - (இந்திரனுக்குச்) சாபங்கொடுத்தார்; (எ - று.)

இன்று - சுட்டடியாப்பிறந்து ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணாநின்றஇடைச்சொல். பெருஞ்செவ்வி - மகாவிபவம். செவ்வி - அழகு. நிதி - திரவியக்குவியலுள்ளவிடம். உவரி - உப்புச்சுவையுடையது; உவர் - பகுதி, இ - பெயர்விகுதி: இச்சொல் - இங்கே, கடலென்னுமாத்திரையாய் நின்றது. 'கொடியோன்' என்றவிடத்து 'கொதித்தே' எனவும் பாடம். (கஎ)

அரமடந்தையர்கற்பகநவநிதியமிர்தஞ்
சுரபிவாம்பரிமதமலைமுதலியதொடக்கற்
றொருபெரும்பொருளின்றியேயுவரிபுக்கொளிப்ப
வெருவியோடினவெண்ணெய்வாழ்கண்ணன்மேவாரின்.

(இ - ள்.) (துருவாசர் இவ்வாறுசபித்தமாத்திரத்தில், இந்திரனது ஐசுவரியமாகிய), அரமடந்தையர் - ரம்பைமுதலிய தேவமாதர்களும், கற்பகம் - கல்பகவிருட்சங்களும், நவ நிதி - ஒன்பதுவகை நிதிகளும், அமிர்தம் - அமிருதமும், சுரபி - காமதேனுவும், வாம் பரி - தாவுகின்ற (உச்சைச்சிரவமென்னும்வெள்ளைக்)குதிரையும், மதம் மலை - மதத்தையுடைய மலைபோன்ற ஐராவதயானையும், முதலிய - முதலான பொருள்கள், தொடக்கு அற்று - சம்பந்தமொழிந்து, ஒரு பெரு பொருள் இன்றியே - ஒருபெரியபொருளாயினும் இல்லாமல், (எல்லாம்), உவரி புக்கு ஒளிப்ப - கடலிலே போய் மறைந்திடுதற்கு, வெண்ணெய் வாழ் கண்ணன் மேவாரின் - திருவெண்ணெய்நல்லூரில் வாழ்கின்ற கண்ணன் என்னும் வள்ளலினது பகைவர் (பயந்துஓடுவது) போல, வெருவி ஓடின - பயந்து விரைந்துசென்றன.

அரமடந்தையர் - அரம்பைமடந்தையர் அல்லது அமரமடந்தையர் என்பதன் விகாரம். கற்பகம் - கல்பகம்என்னும் வடமொழித் திரிபு; (வேண்டுவார் வேண்டுவனவற்றை அவர்கள் நினைத்தமாத்திரத்தில்) கல்பிப்பது [உண்டாகச்செய்வது] என்று பொருள். சந்தானம், மந்தாரம், பாரிஜாதம், கல்பகம், அரிசந்தனம் எனத் தேவதருக்கள் ஐந்தாம். நவநிதி - மகாபதுமம், பதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்பன; இனி, நவநிதிஎன்பதற்கு - என்றும் புதியனவான சங்கம், பதுமம்

என்னும் இரண்டு நிதிகள் என்றும் பொருள்கொள்ளக்கூடும். சுரபி - தெய்வப்பசு. பரி - (பாரத்தைப்) பரிப்பது எனக் காரணப்பெயர்; (பரித்தல் - சுமத்தல்:) இதற்கு இலக்கணம் - கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்துகெட்ட பெயரென்றுவது, முதனிலைத்தொழிலாகுபெயரென்றுவது கொள்க. மதத்தையுடைய மலையெனவே, யானையாயிற்று. மலை - உவமையாகுபெயர். முதலிய - பெயர்; பெயரெச்சமன்று. கண்ணனென்னும் வள்ளல், முன்னர்க்கூறிய சடையப்பமுதலியாரது தம்பிமாரிருவருள் மூத்தவர்; மற்றொருவர் பெயர், சராமன் என்பது. மேவார் - விரும்பியடையாதவர்; எனவே, பகைவராயிற்று: எதிர்மறை வினையாலணையும் பெயர். கண்ணன் - க்ருஷ்ணன் என்னும் வடமொழித் திரிபு; கருநிறமுடையவனென்றும், (யாவர்மனத்தையும்) இழுப்பவனென்றும் பொருள்கொள்ளப்படும்; எம்பெருமானது பெயர் மனிதனுக்கு இட்டுவழங்கப்பட்டது. ஸுரபி - வடசொல். 'வெருவியோடினர் விண்ணவர் வெண்ணெய்மேவாரின்' என்றபாடத்துக்கு - அரமடந்தையர்முதலியன கடலிலொளிக்கவே தேவர்கள் திருவெண்ணெய்நல்லூரையடையாதவர்கள்போல வறுமையால் வெருவியோடினர் என்றுஉரை. (கஅ)

வெய்யமாமுனிவெகுளியால்விண்ணகமுதலாம்
வையம்யாவையும்வறுமைநோய்நலிதரவானோர்
தையல்பாகனுஞ்சதுமுகக்கடவுளுநங்கூடிச்
செய்யதாமரைத்திருமறுமார்பனைச்சேர்ந்தார்.

(இ - ள்.) வெய்ய - (கோபத்தாற்) கொடிய, மா - தவமகிமையையுடைய, முனி - துருவாசரது, வெகுளியால்-கோபத்தால், விண்அகம் முதல் ஆம் - தேவலோகம் முதலான, வையம் யாவையும் - உலகங்களெல்லாவற்றையும், வறுமை நோய் - தரித்திரத்தன்மையாகிற வியாதி, நலிதர - வருத்த, (அதனைக்கண்ட), வானோர் - தேவர்கள்யாவரும், தையல்பாகனும் - உமாதேவியை இடதுபக்கத்திலேயுடைய சிவபெருமானோடும், சதுமுகக்கடவுளும் - நான்குமுகங்களையுடைய பிரமதேவனோடும், கூடி - சேர்ந்து, செய்ய தாமரை திரு மறு மார்பனை - சிவந்த தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியையும் (ஸ்ரீவத்ஸமென்னும்) மறுவையு முடைய திருமார்பினையுடைய திருமாலை, சேர்ந்தார் - அடைந்தார்கள்; (எ - று.)

திரிலோகாதிபதியான இந்திரனுக்கு நேர்ந்த வறுமை அவனாலாளப்படுகிற உலகமனைத்தையும் வருத்துமாதலால், 'வையம்யாவையும் வறுமை நோய் நலிதர' என்றார். துன்பந்தருதல்பற்றி, வறுமை 'நோய்' எனப்பட்டது. தையல் - அழகு; உடையபெண்ணுக்குப் பண்பாகுபெயர். மறு - எம்பெருமானது மார்பில் உள்ளதொரு உத்தமலக்ஷணக்குறி. இனி, திருமறு மார்பு என்பதற்கு - திருமகள் பிறர்மார்பை மறுத்தற்குக் காரணமான மார்பு என்றும் உரைப்பர். விண்ணகம் - வானுலகத்தினிடம். மாமுனியின் வெய்ய வெகுளி என இயைத்தலும் ஒன்று. (கக)

வெஞ்சொன்மாமுனிவெகுளியால்விளைந்தமை விளம்பிக்
கஞ்சநாண்மலர்க்கிழவனுங்கடவுளர்பிறருந்
தஞ்சமில்லைநின்சரணமேசரணெனச்சலியா
தஞ்சலஞ்சலென்றுரைத்தனனுலகெலாமளந்தோன்.

(இ - ள்.) (அடைந்து), நாள் கஞ்சம் மலர் கிழவனும் - அன்றுமலர்ந்த தாமரைப்பூவிலே தோன்றின பிரமனும், கடவுளர் பிறரும் - (சிவன் முதலிய) மற்றைத்தேவர்களும், வெம் சொல் மாமுனி வெகுளியால் விளை

ந்தமை விளம்பி - கொடிய சாபச்சொல்லையுடைய சிறந்த முனிவரது கோபத்தால் நிகழ்ந்ததைச் சொல்லி, 'தஞ்சம் இல்லை - (வேறு எங்களுக்குப்) புகலிடம் இல்லை; நின் சரணமே சரண் - உனது திருவடிகளே அடைக்கலம்', என - என்றுசொல்ல, உலகு எலாம் அளந்தோன் - எல்லாவுலகங்களையும் அளவிட்டருளுந் திருமால், சலியாது - (தமக்கு இயல்பாகவுள்ள திருவருள்) குறைவுபடாமல், அஞ்சல் அஞ்சல் என்று - பயப்படாதேயுங்கள் பயப்படாதேயுங்கள் என்றுகூறி, உரைத்தனன் - (சிலவார்த்தைகள்) சொல்லியருளுவாரானார்; (எ - று.)—அது மேலிரண்டுகவிகளிற் காண்க.

கஞ்சம் - சீரிற்பிறப்பது. கிழவன் - உரியவன்; கிழமை - பகுதி: இதன் பெண்பால் - கிழத்தி; வயதுமுதிர்ந்தவ னென்னும் பொருளில், கிழம் - பகுதி: பெண்பால் - கிழவி. தஞ்சம், சரண் என்பன - ஒருபொருட்சொற்கள்; ரக்ஷகவஸ்துவென்றுபொருள். சரண் - ஶரணம் என்னும் வடமொழித் திரிபு. அஞ்சல் - எதிர்மறைவியங்கோள். அடுக்கு - உறுதிபற்றியது. எம்பெருமானுக்குத் தேவர்கள்பக்கலுள்ள அபிமானத்தை விளக்குவார், 'உலகெலாம் அளந்தோன்' என்றபெயராற் கூறினார். திரிவிக்கிரமாவதாரம் கூர்மாவதாரத்திற்குப்பின்பு நடந்ததாயினும், தமக்குமுந்தியதாதலால், நூலாசிரியர் இங்கே 'உலகெலாமளந்தோன்' என்றார்; இது, ஒருவகைக் கவிசமயம்: அன்றியும், கல்பந்தோறுந் தசாவதாரங்கள் நிகழ்தல்பற்றிக் கூறினருமாம். (௨௰)

மத்துமந்தரம்வாசுகிகடைகயிறடை தூண்
மெத்துசந்திரன்சுராசுரர்வேறுவேறுள்ள
கொத்திரண்டுபால்வலிப்பவரோடதிகொடுத்துக்
கத்துவாரிதிமறுகுறவமிழ்தெழக்கடைமின்.

இது, திருமால்வார்த்தை.

(இ - ள்.) மந்தரம் - மந்தரமலை, மத்து - மத்தாகவும், வாசுகி - வாசுகியென்னும்பாம்பு, கடைகயிறு - கடைகின்ற கயிறாகவும், மெத்து சந்திரன் - குளிர்ந்ததன்மையையுடைய பூர்ணசந்திரன், அடைதூண் - அடைதூணாகவும், வேறு வேறு கொத்து உள்ள சுர அசுரர் - வெவ்வேறுகூட்டமாகப்பிரிந்துள்ள தேவர்களும் அசுரர்களும், இரண்டு பால் வலிப்பவர் - (வால் தலை என்னும்) இரண்டுபக்கங்களிலும் (கடைகயிற்றைப்) பிடித்திழுத்துக் கடைபவராகவும், ஓடதி கொடுத்து - ஓஷதியைப்பெய்து, கத்து வாரிதி - ஒலிக்கின்றபாற்கடலை, மறுகு உற - கலங்கும்படி, அமிழ்து எழ - அமிருதம் உண்டாக, கடைமின் - கடையுங்கள்; (எ - று.)

மத்து - மந்த்தம்என்னும் வடமொழித் திரிபு; கடைகருவிஎன்றுபொருள். வாசுகி - அஷ்டமகாநாகங்களுள் ஒன்று; அவை - வாசுகி, அனந்தன், தக்ஷகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பன; இவற்றைக் கடவுட்பாம்பென்பர்: இவை - முறையே கிழக்குமுதலிய எட்டுத்திக்குக்களிலும் இருந்து பூமியைத்தாங்குவன; காசியபப்பிரமாவுக்கு அவன்மனைவிமார்களுள் கத்ருஎன்பவளிடம் பிறந்தவை. அடை தூண் - கடைகயிற்றைசார்த்திக்கட்டுந் தூண். தூண் - ஸ்தூணு என்னும் வடமொழித் திரிபு. சுராசுரர் - வடமொழிப்புணர்ச்சி, தீர்க்கசந்தி. அசுரர்என்பதற்கு - பாற்கடலிலுண்டானசுரையைப்பானஞ்செய்யாதவரென்றும், பகைவருயிரைக்கவர்பவரென்றும் பொருள்; அசு - உயிர். ஓடதி - ஓஷதி என்னும் வடமொழித் திரிபு; இங்கே, அமிருதவல்லி என்னும்மூலிகை. வாரிதி - நீர்தங்குமிடம். கடைமின் - ஏவற்பன்மைவினை

முற்று; மின் - விகுதி. "மாயிரு ஞாலந் தாங்கியா மத்து மந்தர மாமதி தறி யாக், காயும்வெவ் விடத்து வாசுகி நாணுக் கடற்புனல் வெண்டயி ராக. வாயிரம் பருவங் கடைதலும்" என்றார் கூர்மபுராணத்தும். (உக)

யாமுமவ்வயின் வருதுநீர்கதுமென வெழுந்து
போமினென்றருள்புரிதலு மிறைஞ்சினர்புகழ்ந்தார்
நாமமின்றெனக்குனித்தனர்நல்குரவொழிந்த
தாமெனும்பெருங்களி துளக்குறுதலாலமரர்.

(இ - ள்.) யாமும் - நாமும், அவ் வயின் - (பாற்கடல்கடைகின்ற அவ் விடத்து) வருதும் - வருவோம்; நீர் - நீங்கள், கதுமென - விரைவாக, எழுந்துபோமின் - புறப்பட்டுப்போங்கள், என்று —, அருள்புரிதலும் - (திருமால்) திருவாய்மலர்ந்தருளினவளவில், அமரர் - தேவர்கள், இறைஞ்சினர் புகழ்ந்தார் - (திருமாலை) வணங்கித் துதித்து, நல்குரவு ஒழிந்தது ஆம் எனும் பெரு களி துளக்குறுதலால் - (நமது) வறுமை (இனிவிரைவில்) நீங்கி யதாய்விடு மென்கிற கருத்தினு லாகிய மிக்க மகிழ்ச்சியானது ஆட்டுத லினால், நாமம் இன்று என - அச்சமில்லையென்று சொல்லிக்கொண்டு, குனித்தனர் - ஆனந்தக்கூத்தாடினார்கள்; (எ - று.)

தேவர்கள் எம்பெருமானருளால் தமக்கு உண்டான பேருவகை ஆட்டுதலால் ஆடினார்க ளென்பதாம். யாமும் வருதும் - தனித்தன்மைப் பன்மை; எம்பெருமானது காம்பீரியத்தை விளக்குகின்றது. உம்மை - உயர்வு சிறப்பு; இறந்ததுதழீஇய எச்சமுமாம். அவ்வயின் - அப்பொழுது என்று மாம். கதுமென - விரைவுக்குறிப்பு. நாமம் - நாம் என்னும் உரிச்சொல்லின் மேல், அம் - சாரியை; நாம்என்பது உரிச்சொல்லாதலை "பேநா முருமென வரூஉங் கிளவி, யாமுறை மூன்று மச்சப் பொருள" என்னுந் தொல்காப்பி யத்தால் அறிக. இனி, நாமம் இன்று என்பதற்கு - இன்றைக்குத்தான் பெருமையுண்டாவது என்றும் பொருள்கொள்ளலாம். நல்குரவு - தொழிற் பெயர்; நல்கூர் - பகுதி, குறுகியது - விகாரம், அ - சாரியை, வு - விகுதி: உ - விகுதி, வ் - சந்தி என்பாரு முளர். 'ஒழிந்தது' என்ற இறந்தகாலமுற்று - 'ஆம்' என்னும் எதிர்காலமுற்றோடு கூடி, தானும் எதிர்காலமாயிற்று. துளங்கு என்னும் முதனிலை திரிந்த துளக்கு என்னுந் தொழிற்பெயரின்மேல் உறு என்னுந் துணைவினை சேர்ந்து இரண்டும் ஒருபகுதியாய் நின்றது. (உஉ)

மலைபிடுங்கினர்வாசுகிபிணித்தனர்மதியந்
நிலைபெறும்படிநட்டனரோடதிநிரைத்தா
ரலைபெறும்படிபயோததிகடைந்தனரவனி
நிலைதளர்ந்திடவனந்தனுங்கிழுறநெளித்தான்.

(இ - ள்.) (பின்பு தேவர்கள் திருமால் நியமனத்தின்படி அசுரர்களையுங் கூட்டிக்கொண்டு), மலை பிடுங்கினர் - (மந்தர) கிரியைப் பேர்த்துவந்து, வாசுகி பிணித்தனர் - வாசுகியென்னும்பாம்பாற்கட்டி, மதியம் நிலை பெறும்படி நட்டனர் - சந்திரனை (த்தூணாக) நிலைத்து நிற்கும்படி நட்டு, ஓடதி நிரைத்தார் - மூலிகைகளைக் கூட்டமாகப்பெய்து, அலை பெறும்படி - (மிக்க) அலைகளை அடையும்படி, பயோததி கடைந்தனர் - திருப்பாற்கடலைக்கடைந்தார்கள்; (அப்பொழுது தேவர்களும் அசுரர்களும் யாவரும் ஓரிடத்திற் கூடி நின்று கடைதலா லுண்டான அதிபாரத்தால்), அவனி நிலை தளர்ந்திட - பூமி நிலைகுலைய, அனந்தனும் - ஆதிசேடனும், கீழ் - பாதாளலோகத்தில், உற - மிகவும், நெளித்தான் - உடம்புநெளித்தான்; (எ - று.)

நட்டனர்-நடு - பகுதி; சினேகித்தாரென்னும்பொருளில், நள் - பகுதி. ஓடதி - காட்டுக்கொடி. பயஸ் - பால்; உததி - கடல், நீர்தங்குமிடம்: இவ்விரண்டும் வடநூல்விதியின்படி 'பயஉததி' எனப் புணரற்பாலது, அதற்கு மாறாக 'பயோததி' எனப் புணர்ந்து, ஜலோததி க்ஷீரோததி என்னும் வாய்பாட்டை யொத்தித் தமிழில்வழங்குகின்றது;பயோதி என்பதுஅல்லவடசொல்லாம். அனந்தன் என்பதற்கு - பிரளயகாலத்தும் அழிவில்லாமல் என்றும் ஒருதன்மையாக நித்தியராயிருப்பவரென்றுபொருள்; இவர் பூமியின்கீழிருந்து ஆயிரந்தலைகளாலும்பூமியைத்தாங்குகின்றனரென அறிக.நெளிதல்-வளைதல். பாரஞ்சுமக்கமாட்டாமல் ஆதிசேஷன் வருந்தினனென்பதாம்.

திறல்கொளாமையாய்முதுகினின்மந்தரந்திரிய
விறல்கொளாயிரந்தடக்கைகள்பரப்பிமீவலிப்ப
மறனிலாமுனிவெகுளியின்மடிந்தனவரவே
யறனிலாமனத்தடையலாநெடுந்தகையமைத்தான்.

(இ-ள்.) அறன் இலா மனத்து - தருமநெறியில்லாதவருள்ளத்திலே, அடையலா - சேராத, நெடுந் தகை - பெருமைக்குணங்களையுடைய திருமால், முதுகினில் மந்தரம் திரிய - தமதுமுதுகின்மேலே மந்தரமலைசுழலும்படி, திறல் கொள் ஆமை ஆய் - வலிமையைக்கொண்டதொரு கூர்மாவதாரமாகியும், மீ வலிப்ப - மந்தரகிரியை மேலே அழுத்தும்படி, விறல் கொள் ஆயிரம் தட கைகள் பரப்பி - பெருமையைக்கொண்ட தமது பெரிய ஆயிரந்திருக்கைகளைப்பரவச்செய்தும், மறன் இலா முனி வெகுளியால் மடிந்தன வர - பாவமில்லாத துருவாசரது கோபத்தால் நீங்கின பொருள்கள் மீண்டுவரும்படி, அமைத்தான் - (அதற்குவேண்டியகாரியங்களைச்) செய்தருளினார்; (எ - று.)

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக்கடையும்போது சுழலாநின்ற மந்தரபருவதத்துக்கு ஸ்ரீமந்நாராயணன் மகாகூர்மரூபத்தைத் தரித்து ஆதாரமாகக்கீழெழுந்தருளியிருந்து அதனைக்கடலினுள்அழுந்திவிடாதபடி செய்தனரென்றும், மிகவும்பெரியதான ஒருதிவ்யரூபத்தினாலே அந்தப் பருவதத்தின்மேற்புறத்தை ஆக்கிரமித்து அதனைப் பலப்படுத்தியருளினரென்றும், வேறொரு திருமேனியைத் தரித்துத் தேவதைகள்பக்கத்திலேயும் மற்றொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள்பக்கத்திலேயும் நின்று வாசுகியினுடைய வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தருளினரென்றும், அப்பால் தந்வந்திரியென்னுந் தேவரூபத்தைத்தரித்து அமிருதபூர்ணமான கமண்டலத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்தக்ஷீரசமுத்திரத்தினின்று உதயமாயினரென்றும், அப்படியிருக்கத் தைத்தியர்கள் தந்வந்திரியின்கையிலிருந்தஅமிருதகலசத்தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக்கொண்டபோது ஜகந்மோகநகரமான ஒருஸ்திரீரூபத்தைத் தரித்து அசுரர்களைவஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்களுக்குப் பிரசாதித்தனரென்றும் புராணங்கூறும். ஆயிரந்தடக்கைகள் என்றது - பகவானுடைய விராட்சொரூபத்தை யுட்கொண்டு. மற்றைமுனிவர்க்குப்போலச் சபிக்கச்சபிக்கத் தவங்குறைவுபடாமல் மேன்மேல் வளர்தலால், துருவாசர் 'மறனிலாமுனி' எனப்பட்டார். இனி, மறன் இல் ஆம் எனப்பிரித்து - கோபத்துக்கு இருப்பிடமான என்றும், மறன் நில்லா எனப் பிரித்து - கோபம் மனத்தில் அடங்கிநிற்கப்பெறாத என்றும், மறன் நிலாம் எனப்பிரித்து - கோபம் உலாவி விளங்குதற்கிடமான என்றும் பொருள்கொள்ளலாம். மடிந்தன - பெயர். நான்காம் அடியில்

அறன் மில்லா என்றும் பதம்பிரிக்கலாம். பக்தியையுடைய அடியவர்களது உள்ளக்கமலத்தில் அவர்கள்நினைத்தவடிவோடு விரைந்துசென்று வீற்றிருத்தலும், அங்ஙனம் அடியவரல்லாதவரது மனத்திற் சென்று சேராமையுங் கடவுளது இயல்பு. (உச)

இறந்துநீங்கினயாவையுமெம்பிரானருளாற்
பிறந்தவவ்வயிற்சுராசுரர்தங்களிற்பிணங்கச்
சிறந்தமோகினிமடந்தையாலவுணர்தஞ்செய்கை
துறந்துமாண்டனராரமிர்தமரர்கடுய்த்தார்.

(இ - ள்.) இறந்து நீங்கின யாவையும் - (முன்னேமுனிவர்சாபத்தாற் கடலிற்)போய் மறைந்து ஒழிந்தபொருள்களெல்லாம், எம்பிரான் அருளால் - எமது தலைவனாகிய திருமாலினது திருவருளினாலே, பிறந்த - (பாற்கடலினின்றும்) உண்டாயின ; அவ் வயின் - அப்பொழுது, சுர அசுரர் - தேவர்களும் அசுரர்களும், தங்களில் பிணங்க -(அங்குஉண்டான பொருள்கள் தத்தமக்குச்சேரற்பாலன என்று) தங்களுள்ளே மாறுபட, சிறந்த மோகினி மடந்தையால் - (அதைக்கண்டு எம்பெருமான்கொண்ட)சிறப்பான கண்டவர்களைமயக்குவதொரு பெண்வடிவத்தால், அவுணர் தம்செய்கை துறந்து மாண்டனர் - அசுரர்கள் (அமுதத்திற்காகப்பிணங்கிய) தமதுசெய்கையொழிந்து மடிந்தார்கள் ; (அந்தச்சமயத்தில்), அமரர்கள்- தேவர்கள், ஆர் அமிர்து - (பெறுவதற்கு) அருமையான அமிருதத்தை, துய்த்தார் - உண்டார்கள் ; (எ - று.)

பிறந்த - முற்று ; இனி, எச்சமாகக்கொண்டு, பிறந்த அந்த இடத்து என்றுமாம். மாண்டனர் - மாள் - பகுதி. ஆரமிர்து - பண்புத்தொகை ; வினைத்தொகையாய், நிறைந்த அமிருத மென்றுமாம். (உரு)

வெருவுமாலமும்பிறையும்வெவ்விடையவற்கீந்து
தருவும்வேறுளதகைமையுஞ்சதமகற்கருளி
மருவுதொல்பெருவளங்களும்வேறுமவழங்கித்
திருவுமாரமுமணிந்தனன்சீதரமூர்த்தி.

(இ - ள்.) வெருவும் - (கண்டவர்) அஞ்சும்படியான, ஆலமும் - (கொடிய) ஹாலாஹலவிஷத்தையும், பிறையும் (குளிர்ந்த) சந்திரனையும், வெவ் விடையவற்கு - பயங்கரமான ரிஷபத்தை வாகனமாகவுடைய சிவனுக்கு, ஈந்து - கொடுத்து, தருவும் - பஞ்சதருக்களையும், வேறு உள தகைமையும் - (தேவமாதர் நிதிகள் உச்சைச்சிரவம் ஐராவதம் சிந்தாமணிமுதலாக) மற்றுமுள்ள பெரும்பொருள்களையும், சதமகற்கு அருளி-நூறுயாகஞ்செய்துள்ளவனாகிய இந்திரனுக்குக் கொடுத்து, மருவு தொல் பெரு வளங்களும் - மற்றும்பொருந்திய (புஷ்பகம்முதலிய) பழமையான பெரிய ஐசுவரியங்களையும், வேறு உறவழங்கி - (குபேரன்முதலிய) வெவ்வேறு தேவர்களுக்குப் பொருந்தக் கொடுத்து, சீதரமூர்த்தி - திருமகளைத்திருமார்பில் தரிக்கின்றதிருமேனியையுடைய திருமால், திருவும் - இலக்குமியையும், ஆரம் - கௌஸ்துபரத்தினத்தையும், அணிந்தனன் - தாம் தரித்துக்கொண்டார் ; (எ - று.)

ஆலம் - வடசொற்றிரிபு. பிறை - பிறப்பது என இளஞ்சந்திரனுக்குக் காரணக்குறி ; பிற - பகுதி, ஐ - விகாரம், ஐ - வினைமுதற்பொருள்விகுதி. விடை, ஆரம், சீதரன் என்பன - முறையே விருஷம், ஹாரம், ஸ்ரீதரன் என்பவற்றின் திரிபுகள். ஆரம் - அதற்குக்கருவியாகின்ற இரத்தினத்திற்குக் காரியவாகுபெயர். (உசா)

அந்தவேலையிற்றிதிபெருந்துயருழந்தழிவாள்
வந்துகாசிபன்மலரடிவணங்கியென்மைந்த
ரிந்திராதியர்புணர்ப்பினாலிறந்தனரெனக்கோர்
மைந்தனீயருளவர்தமைமடித்தலுக்கென்றாள்.

(இ - ள்.) அந்த வேலையில் - அக்காலத்தில், திதி - (அசுரர்களது தாயாகிய) திதியென்பவள், பெரு துயர் உழந்து அழிவாள் - (புத்திரசோகத்தால்) மிக்கதுன்பத்தை அநுபவித்து மனமழிபவளாய், வந்து - (அருகில்) வந்து, காசிபன் மலர் அடி வணங்கி - (தனதுகொழுநராகிய) காசிபப்பிரமாவினது தாமரைமலர்போலுந்திருவடிகளை நமஸ்கரித்து, (அவரைநோக்கி), 'என்மைந்தர் - எனதுமக்களாகிய அசுரர்கள், இந்திர ஆதியர் புணர்ப்பினால் - இந்திரன் முதலான தேவர்களது சூதினால், இறந்தனர் - மரணமடைந்தார்கள்; (ஆதலால்), அவர்தமை மடித்தலுக்கு - அத்தேவர்களை அழிப்பதற்கு, எனக்கு ஓர் மைந்தன் நீ அருள் - எனக்கு ஒருமகனை நீஅளித்தருளுவாயாக,' என்றாள் - என்று பிரார்த்தித்தாள்; (எ - று.)

புணர்ப்பு - தந்திரம், வஞ்சனை; இது உண்டாக்குதலென்னும்பொருளுள்ள தொழிற்பெயர்: புணர் - பகுதி, பு - விகுதி. 'இந்திராதியர் புணர்ப்பினா லிறந்தனர்' என்றது - திருமால் மோகினியவதாரமெடுத்து அசுரர்களைச் செயலொழிந்து மடியச்செய்ததற்குத் தேவர்களது வேண்டுகோள் காரணமாதலால். (உஎ)

என்றுகூறலுமகவுனக்களித்தனமினிநீ
சென்றுபாரிடைப்பருவமோராயிரந்தீர
நின்றுமாதவம்புரிதியேனினைவுமுற்றுதியென்
றன்றுகூறிடப்புரிந்தனளருந்தவமனையாள்.

(இ - ள்.) என்று கூறலும் - இவ்வாறு (திதி) சொன்னவளவில், (காசியபர்), 'உனக்கு மகவு அளித்தனம் - நினக்குப் புத்திரனொருவனைக்கொடுத்தோம்; இனி - இனிமேல், நீ—, பாரிடை சென்று - பூமியிலே போய், பருவம் ஓர் ஆயிரம் தீர - ஒருஆயிரம்வருஷகாலங் கழிய, நின்று மா தவம் புரிதியேல் - நிலைநின்று பெரிய தவத்தைச் செய்வாயானால், நினைவு முற்றுதி - உன் எண்ணம் நிறைவேறப்பெறுவாய்,' என்று—, அன்று கூறிட - அப்பொழுதுசொல்லியருள, அனையாள் - அந்தத்திதி, அரு தவம் புரிந்தனள் - (பிறராற்செய்தற்கு) அருமையான தவத்தைச் செய்தாள்; (எ - று.)

நினைவுமுற்றுதி - சினைவினை முதல்வினைகொண்டது. நினைவு - இந்திராதி தேவரைத் தன்புத்திரனைக்கொண்டு மடித்தல். மனையாள் எனப்பிரித்து, காசியபன்மனைவியான அவள் என்றுமாம். (உஅ)

கேட்டவாசவனன்னவட்கடிமையிற்கிடைத்து
வாட்டமாதவத்துணர்ந்தவள்வயிற்றுறுமகவை
வீட்டியேயெழுகூறுசெய்திடுதலும்விம்மி
நாட்டநீர்தரமருத்தெனுநாமமுநவின்றான்.

(இ - ள்.) கேட்ட - (இச்செய்தியைக்) கேள்வியுற்ற, வாசவன் - இந்திரன், அன்னவட்கு அடிமையில் கிடைத்து - (மாறுவேடங்கொண்டு) அவளுக்கு அடிமைத்தொழில்செய்யும்வேலையிலே அமர்ந்து, மா தவத்து வாட்டம் உணர்ந்து - (அவள்செய்துவரும்) பெருந்தவத்திலே ஒரு சோர்வை அறிந்து, (அச்சமயத்தில்), அவள் வயிறு உறு மகவை வீட்டி - (தான் நுண்ணிய

உருக்கொண்டு அவளது வயிற்றினுள்ளே சென்று) அங்குத்தங்கியகருப்பத்தைப்பிளந்து, எழுகூறுசெய்திடுதலும் - எழுதுண்டாக்கினவளவில், (அவள்), விம்மி-அழுது, நாட்டம் நீர் தர - கண்களில்நீரைப்பெருக்க, மருத்து எனும் நாமமும் நவின்றான் - (இந்திரன் அக்கண்டங்களுக்குச்) சப்தமருத்துக்களென்னும்பெயரையுங் கூறிப்போனான்; (எ - று.)

வாட்டம் - தொழிற்பெயர்; அம் - விகுதி. வீட்டுதல் - விடுவித்தல். நாட்டம் - நாடுதற்குக்கருவியானது எனக் கண்ணுக்குக் காரணப்பெயர்; நாடுதல் - காணுதல், அம் - கருவிப்பொருள்விகுதி. வாட்டம் என்றது - மத்தியான்னகாலத்திலே தலைமயிரைக்காலிற்படும்படி விரித்துக்கொண்டு தூங்கியதனை; இதனைமுதனூலாலறிக. மருத்து - வாயு. சப்தமருத்துக்களின் பெயர் - ஆவகம், பிரவகம், சம்வகம், உத்வகம், விவகம், பரிவகம், பராவகம் என்பன; இவற்றிற்கு இடம் - ஆவகத்திற்கு மேகமண்டலமும், பிரவகத்திற்குச் சூரியமண்டலமும், சம்வகத்துக்குச் சந்திரமண்டலமும், உத்வகத்திற்கு நக்ஷத்திரமண்டலமும், விவகத்திற்குக் கிரகமண்டலமும், பரிவகத்திற்குச் சப்தருஷிமண்டலத்தோடு சுவர்க்கபூமிகளும், பராவகத்திற்குத் துருவமண்டலமும் எனக்காண்க: இனி, பிரமலோகம், இந்திரலோகம், ஆகாயம், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் ஏழும் இடமெனவும்படும். (௨௧)

ஆயதிவ்விடமவ்விடமவிர்மதியணிந்த
தூயவன்றனக்கரிவையிற்றோன்றியதொல்லை
வாயுவும்புனற்கங்கையும்பொறுக்கலாவலத்த
சேய்வளர்ந்தருள்சரவணமென்பதுந்தெரித்தான்.

(இ-ள்.) ஆயது இவ் விடம் - இங்ஙனமாகிய வரலாற்றையுடையது இந்த இடம்; அவ் விடம் - அந்த இடம், அவிர் மதி அணிந்த தூயவன் தனக்கு - விளங்குகின்ற சந்திரனைத் தரித்த பரிசுத்தனாகிய சிவபிரானுக்கு, அரிவையின் - உமாதேவியின்மூலமாக, தோன்றிய - பிறந்த, தொல்லை வாயுவும் புனல் கங்கையும் பொறுக்கலா வலத்த - பழமையான வாயுதேவனாலும் நீர்மயமான கங்காதேவியினாலும் பரிக்கமுடியாத வலிமையையுடைய, சேய் - செம்மைநிறமுடைய சுப்பிரமணியக்கடவுள், வளர்ந்தருள் - வளர்ந்தருளிய, சரவணம் - நாணற்காடாகும், என்பதும் - என்பதையும், தெரித்தான் - (கௌசிகமுனி இராமபிரானுக்குத்) தெரிவித்தார்; (எ-று.)

ஆயது என்னும் ஒன்றன்பால்வினைமுற்றில், ய் - இறந்தகால இடைநிலை. அரிவை - பருவப்பெயராகாமற் பெண்பெயராயிற்று; பருவப்பெயராம்பொழுது, இருபதுவயதுமுதல் இருபத்தைந்தளவும் அரிவை. தொல்லை - பழமை: பண்புப்பெயர்; தொல் - பகுதி, ஐ - விகுதி: இது - மை விகுதிபெற்றுத் தொன்மையெனவும், று விகுதிபெற்றுத் தொன்று எனவும் வரும். தோன்றிய, வலத்த என்னும் பெயரெச்சங்கள் அடுக்கி, 'சேய்' என்னும்பெயரைக்கொள்ளும். செம்மையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு முன்நின்றமகரமெய்யகரமாத்திரிந்து 'சேய்' என நின்றது; இந்நிறத்தின்பெயர், செம்மைநிறமுடைய முருகக்கடவுளைக் குறித்தலால், பண்பாகுபெயர். சர + வணம் = சரவணம்; வடநூல்விதிப்படி, நிலைமொழியில் ரகரம்நின்றதனால் வருமொழியில்நகரம் ணகரமாயிற்று; நாராயணன், ராமாயணம், உத்தராயணம், சூர்ப்பணகை என்பவற்றிற்போல. தெரித்தான் - தன்வினைபிறவினைகளுக்குப் பொதுவான தெரிஎன்னும் பகுதி, இங்கே வல்லெழுத்துமிக்குப் பிறவினையைக்காட்டிற்று. அவ்விடம் என்றது,

எதிரிற் சேய்மையிற் காணப்பட்டதொரு சோலையை. 'வாயுவும்புனற்கங் கையும்பொறுக்கலாவலத்த, சேய்வளர்ந்தருள்சரவணம்' என்பதிலுள்ள சரித்திரத்தைக் கந்தபுராணத்தில் திருவவதாரப்படலத்திலே பரக்கக்காண்க; "விரிபுவன, மெங்கும் பரக்க விமையோர்கண் டஞ்சுதலும், பொங்கு தழற் பிழம்பைப் பொற்கரத்தா லங்க, ணெடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்,கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோ - யடுத்ததொரு, பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள், சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற், றன்னவளுந் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற், சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய்" என்றார் திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பாவிலும். செய்யவனென்னுஞ்சொல் 'சேய்' என விகாரத்தால் நீண்ட தென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இங்கே சுப்பிரமணியக்கடவுளின் பிரஸ்தாபத்தைக்கூறியது பெருங்காப்பியத்தி னிலக்கணங்களுள் ஒன்றாகு மென்பர் ஒருசாரார். (௬௦)

காலன்மேனியிற்கருகிருள்கடிந்துலகளிப்பா
னீலவார்கலித்தேரொடுநிறைகதிர்க்கடவுண்
மாலின்மாமணியுந்தியினயனொடுவந்த
மூலதாமரைமுழுமலர்முளைத்தெனமுளைத்தான்.

இது - சூரியோதயவருணனை.

(இ-ள்.) (பின்பு),காலன்மேனியின்-யமனதுஉடம்பின்நிறம்போல,கருகு-கறுத்துள்ள, இருள் - இருட்டை, கடிந்து - நீக்கி, உலகு அளிப்பான் - உலகத்தைக்காப்பவனாகிய, நிறை கதிர் கடவுள் - நிறைந்த கிரணங்களையுடைய சூரியபகவான், தேரொடும் - தனது இரதத்துடனே, நீலம் ஆர்கலி - நீலநிறமாகியகடலிலே, மாலின் மா மணி உந்தியின் அயனொடு வந்த மூல தாமரை முழு மலர் முளைத்து என - திருமாலினது கரிய அழகிய திருநாபியிலே பிரமனோடு தோன்றிய முதன்மையான பெரிய தாமரைமலர் முளைத்ததுபோல, முளைத்தான் - உதித்தான் ; (எ - று.)

காலன் - பிராணிகளுக்கெல்லாம் விதிப்படி ஆயுள்நாளை வரையறையிடுதல் பற்றிவந்தபெயர். ஆர்கலியில் முளைத்தான் என இயையும். ஆர்கலி-நிறைந்த ஓசையை யுடையது என வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். திருமால் - கருங்கடலுக்கும், திருமாலின் உந்தி - அக்கடலிற் சூரியன்தோன்றுகிற உதயபருவதமுள்ள இடத்துக்கும், பிரமன் - சூரியனுக்கும், தாமரைமலர் - அவனது தேருக்கும் உவமையெனக் காண்க. பிரமன் செந்நிறமுடையவனாதலால், சூரியனுக்கு உவமையாவன். உலகளிப்பான் - உலகத்தைக்காக்கும்பொருட்டு, முளைத்தான் என்றுமாம். 'அயனொடு மலர்ந்த' என்றும் பாடம். (௬௧)

அங்குநின்றெழுந்தயன் முதன் மூவருமனையார்
செங்கணேற்றவன்செறிசடைப்பழுவத்திநிறைதேன்
பொங்குகொன்றையீர்த்தொழுகலாற்பொன்னியைப்பொருவுங்
கங்கையென்னுமக்கனைபொருதிருநதிகண்டார்.

(இ - ள்.) (சூரியோதயமானவுடன்), அயன் முதல் மூவரும் அனையார் - பிரமன்முதலான திரிமூர்த்தியையும் ஒத்தவராகிய விசுவாமித்திரர் முதலிய இம்மூவரும், அங்குநின்று எழுந்து - அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, செம் கண் ஏற்றவன் செறி சடை பழுவத்தில் நிறை தேன் பொங்கு கொன்றை ஈர்த்து ஒழுகலால் பொன்னியை பொருவும் - (கோபத்தாற்)

சிவந்த கண்களையுடைய ரிஷபத்தை வாகனமுங் கொடியுமாக வுடைய சிவபிரானது நெருங்கிய ஜடாடவியிலுள்ள நிறைந்த தேனினால் விளங்குகின்ற (பொன்னிறமுள்ள) கொன்றைமலரை இழுத்துக்கொண்டு பெருகுதலாலே (பொன்னியென்னும் பெயர்பெற்றுப்) பொன்னைக் கொழித்துவருகின்ற காவேரிநதியை ஒக்கின்ற, கங்கைஎன்னும் - கங்கை யென்கிற, அ - அந்த, கரை பொரு - இருகரைகளிலும்மோதுகின்ற, நதி - அழகிய [மேன்மையான] யாற்றை, கண்டார் - பார்த்தார்கள்; (எ - று.)

எழுந்து கங்கை யென்னும் நதியைக் கண்டாரெனக் கூட்டுக. மூவர் - பிரமவிஷ்ணுருத்திரர்களைக் குறித்தலால், தொகைக்குறிப்பு. அம்மூவருட் பிரமன் - இம்மூவருட் பிரமவிருடிப்பட்டத்தை அரிதிற்பெற்ற விசுவாமித்திரருக்கும், விஷ்ணு - அவரது அவதாரவிசேஷமான ஸ்ரீராமனுக்கும், சங்காரக்கடவுளான ருத்திரன் - முன்கோபமுடைய லக்ஷ்மணருக்கும் உவமையென உய்த்துணர்க. படைத்தல் காத்தல் அழித்தல் என்னுந் தொழில்களின் முறைமைபற்றியும், உபமேயத்தின் முறைமைக்கு ஏற்பவும் ‘அயன்முதல் மூவர்’ என்றது. “அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி” [வேறு இந்திரனை உண்டுபண்ணுகிறேன்] என்று பிரமசிருஷ்டிக்குமாறாகத் தாம் ஒரு லோகசிருஷ்டியைச் செய்யத்தொடங்கிய விசுவாமித்திரருக்குப் பிரமதேவனை உவமைகூறுதல் மிகப்பொருத்தமுடையதாதலறிக. ஏறு - பசுவின் ஆண்பெயர்; “எருமையு மரையும் பெற்றமு மன்ன” என்றார் தொல்காப்பியனார். சடைப்பழுவம் - சடைக்காடு; காடுபோலடர்ந்த சடை. பொன்னி என்பதில், இ - பெண்பால்விகுதி. அ என்ற சேய்மைச்சுட்டு, அந்நதியின் சிறப்பை விளக்கிற்று. எவரும் தமதுநாட்டிலுள்ளதைச் சிறப்பித்துக்கூறுதல் இயல்பாதலால், கவி கங்கைக்குக் காவிரியை உவமை கூறினார்; உபமேயத்தினும் உபமானம் சிறந்திருத்தல்வேண்டு மென்பது அலங்காரநூலார்கொள்கை. திருமாலினது உலகமாகிய பரமபதத்திற்கு அருகிலுள்ள விரஜையென்கிற பரிசுத்தமான நதியினது அம்சமாய் நிலவுலகத்தில் திருமாலின் திருப்பதிகளுட் சிறந்த திருவரங்கம் பெரியகோயிலின் இருபாலிலும் மாலைபோலச்சூழ்ந்துள்ள காவேரிநதியைச் சுவர்க்கலோகத்தினின்று பூலோகத்துக்கு வந்த கங்காநதிக்கு உவமையாகக் கூறுதல் சிறப்புடையதாமாறு அறிக. “நலந்திகழ் சடையான் முடிக்கொன்றை மலருந் நாரணன் பாதத் துழாயுங், கலந்திழி புனலாற் புகர்படு கங்கை” என்னும் பெரியார் பாசுரத்துக்கு ஏற்ப, ‘செங்கணேற்றவன் செறிசடைப் பழுவத்தி னிறைதேன், பொங்கு கொன்றையீர்த் தொழுகலால்’ என்றார். (௬௨)

இந்தமாநதிக்குற்றுளதகைமையயாவு
மெந்தைகூறுகென்றிராகவன்வினவுறவெனையாண்
மைந்தநின்திருமரபுளானயோத்திமாநகர்வாழ்
விந்தைசேர்புயன்சகரனிம்மேதினிபுரந்தோன்.

இதுமுதல் இருபத்தொன்பதுகவிகளால், கங்கையின்வரலாறு கூறப்படுகின்றது.

(இ - ள்.) ‘இந்த மா நதிக்கு - இப்பெரிய யாற்றுக்கு, உற்று உள - அமைந்துள்ள, தகைமைய யாவும் - பெருமையையுடைய வரலாறுகளனைத்தையும், எந்தை - எனதுதந்தைபோற் சிறந்த முனிவனே! கூறுக - சொல்வாயாக,’ என்று—, இராவன் - ஸ்ரீராமன், வினவுற - கேட்க, (விசுவாமித்திரர் சொல்லுவார்); எனை ஆள் மைந்த - என்னைக் காத்தருளின [அடி

மைகொண்ட] சக்கரவர்த்திதிருமகனே! நின் திரு மரபு உளான் - உனது [நீ அவதரித்த] மேலான சூரியகுலத்திலே பிறந்துள்ளவனும், அயோத்தி மா நகர் வாழ் - பெரிய அயோத்தியை யென்னும் பட்டணத்திலே அரசாண்டுவாழ்ந்த, விந்தை [illegible] புயன் - ஜயலக்ஷ்மி பொருந்திய தோளுடையவனும் ஆகிய, சகரன் - சகரனென்பவன், இம் மேதினி புரந்தோன் - இந்தப் பூமிமுழுவதையும் ஒருவனாய்அரசாண்ட சக்கரவர்த்தி; (எ - று.)

இக்கவியில் 'வினவுற' என்பது, மேல் அறுபத்திரண்டாங்கவியில் 'என்று கூறலும்' என்பதனோடு முடியும்.

தகைமைய என்பதனை - குறிப்புப்பெயரெச்சமென்றாயினும், பலவின்பால்வினையாலணையும்பெயரென்றாயினுங் கொள்க. விசுவாமித்திரர், தமது வேள்வியை இராமன் மீட்காத்ததனாலும், தாம் தத்துவஞானமுடையவராதலாலும், 'எனையாள்மைந்த' என்றார், ஸ்ரீராமபிரானை. அயோத்தி - அயோத்யா என்னும் வடமொழியின் திரிபு; போரிடுதற்குக்கூடாததென்பது பொருள்: இதனால், அகழி மதில் ஆயுதம் சேனை முதலியவற்றால் தக்ககாவலுடையதென அறியப்படும்; இன்னும் இதனால், அந்நகரத்தை ஆண்ட அரசர்களது பிறரால் வெல்லப்படாத மிக்கவன்மையும் விளங்கும். இந்நகரத்திற்குப் பெருமை-அயோத்தி, (வட)மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் முத்திதரும் நகரம் ஏழனுள் முதன்மைபெற்றிருத்தல் முதலியன. விந்தை - வெற்றித்திரு. சகரன் - விஷத்தோடுகூடப்பிறந்தவன்; காரணப்பெயர்: கரம் - விஷம். பாகுஎன்னும்அரசனது மனைவிகளுளொருத்தி கர்ப்பவதியாயிருக்க, அவளுடைய சக்களத்தி கண்டு அழுக்காறுகொண்டு அக்கருவை அழிக்கும்பொருட்டு அவளுக்குவிஷத்தைக்கொடுக்க, அந்தவிஷம் அக்குழந்தையை அழிக்க ஆற்றலில்லாமல் கூடவேயிருக்க, அதனோடுபிறந்தவனிவனென அறிக. மேதினி என்னும் வடசொல்லுக்கு - (திருமாலால்வதைக்கப்பட்ட மதுகைடபரென்னும் அசுரர்களது உடம்பின்) மேதசினால் [கொழுப்பினால்] நனைந்ததென்பது பொருள்.

விறல்கொள்வேந்தனுக்குரியவரிருவரில்விதர்ப்பை
பொறையினல்கியபோசனனென்றொருபுதல்வன்
பறவைவேந்தனுக்கிளையமென்சுமதிமுற்பயந்த
வறனின்மைந்தராறயுதர்மற்றஞ்சுமானவன்சேய்.

(இ-ள்.) விறல் கொள்-ஜயத்தைக்கொண்ட, வேந்தனுக்கு- அந்தச்சகரமகாராஜனுக்கு, உரியவர் - உரிய மனைவிமார், இருவரில் - இரண்டுபேர்களுள், விதர்ப்பை - விதர்ப்பதேசத்தரசனது மகளாகிய விதர்ப்பையென்னும் முதல்மனைவி, பொறையின் நல்கிய-கருப்பத்திற் சுமந்து [பொறுமையோடு] பெற்ற, போசனன் என்ற ஒரு புதல்வன் - போசனனென்ற புத்திரனொருவன் இருந்தான்; பறவை வேந்தனுக்கு இளைய மென் சுமதி - பக்ஷிகளுக்கு அரசனாகிய கருடனுக்குத் தங்கையான மென்மைக்குணமுடைய சுமதியென்னும் இரண்டாம்மனைவி, முன் பயந்த - முன்னே பெற்ற, அறனின் மைந்தர் - தருமவழியையுடைய குமாரர்கள், ஆறு அயுதர் - அறுபதினாயிரம்பேர்; அவன் சேய்- (இவர்களுட்) போசனனது புத்திரன், அஞ்சுமான்- அம்சுமான் என்பவன் ; (எ - று.)

விதர்ப்பை - நாட்டால் வந்தபெயர்; இவளுக்குக் கேசினியென்பது இயற்பெயர். பொறை என்பதற்கு - கருப்பம் என்கிற அருத்தத்தில், பொறுக்கப்படுவதென்று காரணப்பொருள்; பொறுத்தல் - பரித்தல், ஐ - செயப்படுபொருள்விகுதி: பொறுமை என்னும் பொருளில், ஐ - பண்புப்பெயர்

விகுதி. என்றொரு - விகாரம். சகரசக்கரவர்த்தி மனைவியரிருவரோடும் வனத்திற்சென்று தவம்புரிகையிற் பிருகுமகாமுனி பிரசன்னராகி 'உன்மனைவியரிருவரில் ஒருத்தி வம்சவிருத்திகரனான புத்திரனொருவனையும் மற்றொருத்தி மகாபலசாலிகளான மக்களறுபதினாயிரவரையும் பெறுவள்' என்று அநுக்கிரகிக்க அங்ஙனமே அவரிருவருந் தத்தம் விருப்பத்தின்படி ஒருகுழந்தையையும் பலகுழந்தைகளையும் ஈன்றன ரென்றும், மூத்தாளது மகன்பெயர் அஸமஞ்ஜஸனென்றும், அவன் ஊரிலுள்ளாரது குழந்தைகளைக் கொண்டுபோய்ச் சரயுநதியினீரிற் போகட்டு அது துடித்தமிரிப்பதை க்கண்டு சிரித்து விளையாடுங் கொடுந்தொழிலுடையனாயிருந்ததனால் அவனைத் தந்தை காட்டுக்குத்துரத்திவிட்டா னென்றும் முதனூலிற் கூறப்பட்டுள்ளது. சுமதியென்பதற்கு - நல்லறிவுடையவளென்றும், அம்சுமானென்பதற்கு - ஒளியுடையவனென்றும்பொருள். அஞ்சுமான் - வடசொற்சிதைவு. சுமதி- காசியபருக்கு விநதையினிடம் பிறந்தவள். முன் - ஆதிகாலத்தில். அறனின் மைந்தர், இன் - சாரியை. மூத்தாள்மகன்போல இளையாள்மக்கள் பாவிகளல்ல ரென்பார், அவர்களை 'அறனின்மைந்தர்' என்றார்; இனி, அறன் இல் மைந்தர் எனப் பிரித்து - தருமமில்லாத மக்க ளென்றுமாம்: மேல் கபில முனிவரைக் காரணமில்லாமல் முன்கோபத்தால் ஆராயாது குற்றமுடையராக்கருதி விரைந்து வைகின்றன ராதலின். மற்று - வினைமாற்று; இவ்விடைச்சொல்லின் ஆற்றலால், இங்கே 'அவன்' என்றது போசணனை உணர்த்திற்று. ஆறயுதர் - பண்புத்தொகை; ஆறாகிய அயுத மென்னும் எண்ணுடையார். அயுதம்-பதினாயிரம்; வடசொல். சேய் - முருகக்கடவுளின்பெயர், அவனைப்போன்ற பலபராக்கிரமங்களையுடைய மைந்தனுக்கு உவமையாகுபெயராயிற்று; இது - இருமடியாகுபெயராம். (௯௪)

திண்டிறற்புனைசகரனுந்தனயர்சேவகந்தான்
கண்டுமுற்றியவயமகம்புரிதலுங்கனன்று
வண்டுதுற்றதார்வாசவற்குணர்த்தினர்வானோ
ரொண்டிறற்பரிகபிலனதிடையினிலொளித்தான்.

(இ - ள்.) திண் திறல் புனை சகரனும் - மிக்க வலிமையைப் பொருந்திய சகரமகாராஜனும், தனயர் சேவகம் கண்டு - தன்புத்திரர்களது பராக்கிரமத்தைப் பார்த்து, முற்றிய அயமகம் புரிதலும் - (சிறப்பால்)மிக்கஅசுவமேதயாகத்தைச் செய்யத்தொடங்கிய வளவில், வானோர் - தேவர்கள், கனன்று - (அதனைஅறிந்து) கோபங்கொண்டு, வண்டு துற்ற தார் வாசவற்கு - வண்டுகள் நெருங்கிய பூமாலையையுடைய இந்திரனுக்கு, உணர்த்தினர் - (செய்தியை) அறிவித்தார்கள்; (அவ்விந்திரன் உடனே), ஒண் திறல் பரி - பிரகாசமான வலிமையையுடைய அந்தயாகக்குதிரையை, கபிலனது இடையினில் - பாதாளலோகத்திற் கபிலமுனிவரது ஆச்சிரமத்திலே, ஒளித்தான் - (மாயையாற்கொண்டுபோய்) மறைத்துவைத்தான்; (எ - று.)

பூலோகத்தில் எவனாயினும் ஒருவன் நூறு அசுவமேதயாகஞ்செய்து முடித்துவிட்டால் உடனே அப்பொழுது இருக்கின்ற தேவேந்திரனை அப்பதவியினின்றும் ஒழித்துவிட்டு இவனை இந்திரனாக்கிவிடுவது இயல்பு: ஆனதுபற்றி அசுவமேதயாகத்துக்கு இந்திரன் தன்னாலியன்றவளவு இடையூறுசெய்வது வழக்கம்; அப்படியே சகரன் அம்சுமானைப்பாதுகாப்பவனாக நியமித்துப் பூமிப்பிரதக்ஷிணத்தின்பொருட்டு விடுத்த உத்தம அசுவத்தை இந்திரன் மாயையாற் கவர்ந்துசென்று பாதாளலோகத்திலே பெருந்தவஞ்செய்பவரும் தவஞ்செய்கையில் தான் கண்விழித்து நோக்கினால்

முதற்பார்வையில் [illegible]திர்கின்றவர் எரிந்திறந்துபோம்படி சங்கற்பித்துள்ளவரும் இவ்வரலாற்[illegible]யுணர்ந்தவரெவராலுந் தம் தவத்துக்கு இடையூறு இயற்றப்பெறுத[illegible]வரும் திருமாலின் அம்சாவதாரமா யுள்ளவருமாகிய கபிலரென்னும் முனிவ[illegible]து பின்புறத்தி லுள்ளதொரு மரத்தடியிற் கட்டிப்போயினா னென்[illegible]. திண்டிறல் - ஒருபொருட்பன்மொழி; திண்மை திறல் என்[illegible]ண்டும் வலிமையை உணர்த்தும். சேவகம் - ஸேவகம் என்னும் வடமொழித் திரிபு; அடிமையெனப்பொருள்தருவது: "சார்ங்கவிற் சேவகன்" என்றவிடத்திற்போல வீரமெனப் பொருள்பட்டது. முற்றிய - விதிப்படி இலக்கணங்கள் நிறைந்த என்றுமாம்: செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்காலப்பெயரெச்சமாக் கொண்டு, நிறைவேற்றும்பொருட்டு என்றும் பொருள்கூறலாம். அயமகம் - குதிரையைஉபயோகித்துச்செய்யும்யாகம்; அயம் - ஹயம், குதிரை: அசுவமேதம் என்பதற்கும் பொருள் இதுவே. கனன்று, கனல் - பகுதி. அற்ற என்னும் இறந்தகாலப்பெயரெச்சத்தில் அறு - முதனிலை. தத்காலத்தில் தங்களுக்குத்தலைவனாகவுள்ளவனுக்கு விரோதமானகாரியமாதலால், தேவர்கள் தம்மைநோக்கிச் செய்யப்படுகின்ற அசுவமேதயாகத்தை அறிந்து மகிழாமற் கோபிப்பாராயினர். இனி, (இந்திரன்) கனன்று ஒளித்தான் என இயைத்தலுமாம். (௫௫)

வாவுவாசிபின்சென்றன னஞ்சுமான் மறுகிப்
பூவினோரிடமின்றியேநாடினன் புகுந்து
தேவர்கோமகன்கரந்தமையறிந்திலன் றிகைத்து
மேவுதாதைதன்றாதைபா லுரைத்தனன் மீண்டு.

(இ - ள்.) வாவு வாசி பின் சென்றனன் - தாவிச்செல்கின்ற குதிரையின் பின்னே (காவலனாகப்) போனவனாகிய, அஞ்சுமான் - அம்சுமான், மறுகி - (குதிரையைக் காணாமல்) கலங்கி, தேவர் கோ மகன் கரந்தமை அறிந்திலன் - தேவராசனான இந்திரன் ஒளித்ததை அறியாதவனாய், திகைத்து - மனம்மயங்கி, பூவின் ஓர்இடம் இன்றியே நாடினன் - பூலோகத்தில் ஒரு இடமும் மிச்சமில்லாமல் (முழுவதுஞ் சென்று) தேடிப்பார்த்து, (எங்குங்காணாமல்), மீண்டு புகுந்து - திரும்பி வந்து, மேவு தாதைதன் தாதைபால் - விரும்பிய தன்தந்தையின் தந்தையான சகரனிடத்து, உரைத்தனன் - (செய்தியைச்) சொன்னான்; (எ - று.)

வாசி - வாஜீ; வடசொல். சென்றனன் - வினையாலணையும்பெயர். பூ - வடமொழி. கோமகன் - அரசனாகிய ஆடவன் என்க. தாதை - தாத என்னும் வடமொழித் திரிபு. 'மேவு தாதைதன்தாதை' என்றது - யாகத்தைமுடித்தற்கு மிக்க ஆவலோடு எதிர்பார்த்துநின்றவ னென்றபடி. இனி, மேவு தாதை என இயைத்தால் - தந்தைக்கு மைந்தன்பக்கல் இயல்பாகவுள்ள அன்பையும், மேவு தாதைதன்தாதை என இயைத்தால் - சகரனுக்குப் புத்திரர்களிடத்திலும் பௌத்திரனாகிய அம்சுமானிடத்து அதிகமாகவுள்ள அன்பினையும் நன்குபுலப்படுத்துமாறு காண்க. (௫௬)

கேட்டவேந்தனுமதலையர்க்கம்மொழிகிளத்த
வாட்டமீக்கொளச்சகரர்கள்வடவையின்மறுகி
நாட்டம்வெங்கனல்பொழிதரநானிலந்தடவித்
தோட்டுநுங்கினர்புவியினைப்பாதலந்தோன்ற.

(இ - ள்.) கேட்ட - (அஞ்சுமான்சொன்னதைக்) கேள்வியுற்ற, வேந்தனும் - சகரனும், மதலையர்க்கு - தனது குமாரர் அறுபதினாயிரவருக்கு,

அம்மொழி இளத்த - அந்த வார்த்தையைச் சொல்ல, சகரர்கள் - (அது கேட்ட) சகரகுமாரர்கள், வாட்டம் மீக்கொள - மனவருத்தம் அதிகப்பட, வடவையின் மறுகி - படபாமுகாக்கினிபோலக் கோபித்து, நாட்டம் வெம் கனல் பொழிதர - (அக்கோபத்தால்) கண்கள் கொடிய நெருப்பைச் சொரிய, நானிலம் தடவி - பூமிமுழுவதுந் தேடிப்பார்த்தும், (காணாமையால்), பாதலம் தோன்ற - பாதாளலோகந் தெரியும்படி, புவியினை - பூமியை, தோட்டு நுங்கினர் - தோண்டித் தள்ளினார்கள்; (எ - று.)

இளத்த என்பதில், இள - பகுதி, அ - சாரியை. வடவை - படபா என்னும் வடமொழித் திரிபு; பெண்குதிரை யென்றுபொருள்: அது - இங்கே அதன் முகத்தி லுள்ள நெருப்புக்கு இடவாகுபெயர். கடலினிடையிலே ஒருபெண்குதிரையின் முகத்திலே நெருப்பொன்று எப்பொழுதும் அவியாமலிருக்கின்றதென்றும், அது மழைநீர்முதலியவற்றாற் கடல்பொங்காதபடி அதிகமாய்வருகிறநீரை உறிஞ்சிநிற்கிறதென்றும், அதுவே பிரளயகாலத்துக் கடலினின்றுவெளிப்பட்டு உலகங்களை எரித்து அழிக்குமென்றும் புராணங்கள் கூறும். நானிலம் - நான்காகிய நிலத்தையுடையது: பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; நானிலங்களாவன - குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பவைகளிற் பாலைநீங்க நன்மக்கள் குடியிருத்தற்குரிய மற்றைநான்குமாம்: பாலைக்கு நிலமில்லையாதலால், நீக்கப்பட்டது; "நடுவணைந் திணை நடுவண தொழியப், படுதிரை வையம் பாத்திய பண்பே," "மாயோன் மேய காடுறை யுலகமுஞ், சேயோன் மேய மைவரை யுலகமும், வேந்தன் மேய தீம்புன லுலகமும், வருணன் மேய பெருமண லுலகமு, முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்றார் தொல்காப்பியனார்: "நானிலம் வாய்க்கொண்டு நன்னீ ரறமென்று கோதுகொண்ட, வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை" என்னும் பெரியோரருளிச்செயலும் இக்கருத்தேபற்றியது. தொடு என்னும் பகுதி தன்னொற்றிரட்டி நின்ற 'தொட்டு' என்னும் இறந்தகாலவினையெச்சம், எதுகையியைபு நோக்கி நீட்டல்விகாரம்பெற்று 'தோட்டு' எனநின்றது. நுங்கினர், நுங்கு - பகுதி. வெங்கனல், வெம்மை - கனலுக்கு இயற்கையடைமொழி. 'நாட்டம் வெம்'என்பதிலுள்ள மகரமெய், வகரத்தின்முன் வந்ததனால், கால்மாத்திரைபெற்று, மகரக்குறுக்கமெனப்படும்; [நன் - எழுத்து - சக.]

(நஎ)

நூறியோசனையகலமுமாழமுநுடங்கக்
கூறுசெய்தனரென்பரால்வடகுணதிசையி
னேறுமாதவக்கபிலனிலிவுளிகண்டெரியிற்
சீறிவைதனர்செருக்கினர்நெருக்கினர்செறுத்தார்.

(இ - ள்.) (அச்சகரகுமாரர்கள்), நூறு யோசனை அகலமும் ஆழமும் நுடங்க - நூறுயோசனையவ்வளவு அகற்சியும் (மிக்க) ஆழமுமாய்க்குழியும்படி, வடகுணதிசையின் - வடகிழக்குத்திக்கிலே, கூறு செய்தனர் - பூமியைத் தோண்டுதல்செய்தார்கள், என்பர் - என்று (யாவருஞ்) சொல்வர்; (அங்ஙனந்தோண்டினபின்பு அவர்கள்), ஏறு மா தவம் கபிலனில்-மேன்மேல்வளர்கின்ற பெருந்தவத்தையுடைய கபிலமுனிவரிடத்தில், இவுளி கண்டு - தம்குதிரையைப்பார்த்து, எரியின் சீறி - நெருப்புப்போல (உக்கிரமாக)க் கோபித்து, வைதனர் - (அவரைநோக்கி) வசைச்சொற்கள்சொல்லி,

செருக்கினர் - கர்வமுடையவர்களாய், நெருக்கினர் - அவரைச் சுற்றிலும் நெருங்கச்சூழ்ந்துகொண்டு, செறுத்தார் - வருத்தினார்கள்; (எ - று.)

தவத்திற்கு இடையூறு இயற்றினார்கள் என்றபடி. யோசனை - வடசொற்றிரிபு; யோசனை, காதம் என்பன - ஒருபொருட்சொற்கள்: அது - ஏழரைநாழிகைவழிதூரம்; நான்குகுரோசங்கொண்டது: நாற்காதத்தை யோசனையென்பது ஜைநநூல்வழக்கு. அகலம், ஆழம் - தொழிற்பெயர்; அகல்,ஆழ் - பகுதிகள்: அம்-விகுதி. ஆல்-ஈற்றசை; வாக்கியத்தின்இறுதியில் வந்தது. என்பர் என்பதையும் அசையாகக்கொள்ளலாம். வடக்கு + குணக்கு + திசை = வடகுணதிசை; திசைப்பெயரோடு திசைப்பெயரும்பிறபெயரும் புணருமிடத்து நிலைமொழியிறுதியில் நின்ற உயிர்மெய்யும்ககரமெய்யும் நீங்கிற்று: [நன் - உயிர் - ௧௬.] கபிலன் இல் எனப் பிரித்து - கபிலரது ஆச்சிரமத்தினிடத்தில் என்றுமாம்; இல் - வீடு, இருப்பிடம். (௧௮)

மூளும்வெஞ்சினத்தருந்தவன்முனிந்தெரிவிழிப்பப்
பூளைசூடிதனகையினிலெயில்பொடிந்தனபோ
லாளுமைந்தராறயுதருஞ்சாம்பராயவிந்தார்
வேள்விகண்டநல்வேந்தனுக்குரைத்தனர்வேகர்.

(இ - ள்.) மூளும் வெம் சினத்து - பொங்குகின்ற கொடிய கோபத்தையுடைய, அரு தவன் - அருமையான தவத்தையுடைய அம்முனிவர், முனிந்து - சீறி, எரி விழிப்ப - நெருப்புப்போலக் கண்ணைத்திறந்துபார்த்தவளவில், பூளை சூடி தன் நகையினில் எயில் பொடிந்தன போல் - பூளைப்பூவைத் தரித்த பரமசிவனது புன்சிரிப்பினாலே திரிபுரங்கள் சாம்பராயினபோல, ஆளும் மைந்தர் ஆறு ஆயுதரும் சாம்பர் ஆய் அவிந்தார் - அரசாளுதற்குரிய ராஜகுமாரர்கள் அறுபதினாயிரம்பேரும் சாம்பராகி ஒழிந்தார்கள்; (இச்செய்தியை), வேகர் - விரைந்துசெல்லுந்தூதர்கள், வேள்வி கண்ட நல் வேந்தனுக்கு - யாகத்தைச்செய்துநின்ற நற்குணமுடைய சகரனுக்கு, உரைத்தனர் - (போய்ச்) சொன்னார்கள்; (எ - று.)

பூளைசூடி - பெயர்; இ - ஆண்பாலுணர்த்தும் விகுதி. பூளை என்னுஞ் செடியின் பெயர், அதன்மலருக்கு முதலாகுபெயர். பூளை, கரந்தை, ஊமத்தை, எருக்கு, கூவிளை, கொன்றை என்பவற்றின் மலர்கள் சிவனுக்கு உரியனவென்று உணர்க. 'உரைத்தனர் வேய்கள்' என்றபாடத்துக்கு, ஒற்றர்கள் கூறினார்களென்க; வேய்கள் - வேவுகாரர். (௧௯)

உழைத்துவெந்துயர்க்கூறுகாண்கிலனுணர்வொழியா
தழைத்துமைந்தனன்மைந்தனையவர்கழிந்தனரேல்
விழைத்தவேள்வியின்றிழப்பதோவெனவவனெழுந்து
தழைத்தமாதவக்கபிலன்வாழ்பாதலஞ்சார்ந்தான்.

(இ - ள்.) (அதுகேட்ட சகரன்), உழைத்து - (புத்திரசோகத்தால்) வருந்தி, வெம் துயர்க்கு ஊறு காண்கிலன் - கொடிய தனது துன்பத்திற்கு ஒருதடையைக் காணாதவனாய், உணர்வு ஒழியாது - (அங்ஙனமாயினும் தொடங்கியகாரியத்தை முடிப்பதற்கு வேண்டிய விடாமுயற்சியிற் பின்வாங்காதவனாதலால்) அறிவு நீங்காமல், மைந்தன் நன் மைந்தனை அழைத்து - தனதுபுத்திரனது புத்திரனான அஞ்சுமானைக் கூப்பிட்டு, 'அவர் கழிந்தனரேல் - அப்புத்திரர்கள் இறந்துபோய்விட்டாராயின், இழைத்தவேள்வியை இன்று இழப்பதோ - செய்யத்தொடங்கிய யாகத்தை இப்பொழுது (யான்) செய்யாதுவிடுவதோ?' என - என்று கேட்க, அவன் - அம்சுமான்,

எழுந்து - புறப்பட்டு, தழைத்த மா தவம் கபிலன் வாழ் - மிகுந்த பெருந்தவத்தையுடைய கபிலர் வாழ்கின்ற, பாதலம் - பாதாளலோகத்தினிடத்தை, சார்ந்தான் - அடைந்தான்; (எ - று.)

ஊறு - இடையூறு; கரை, எல்லை என்றபடி. துயர் கூறு எனப்பிரித்து, துன்பத்தின் பங்கு என்னுமாம். கழிந்தனரேல் - கழிந்தனராதலால் என்றபடி; என்னில் என்னும் எதிர்காலவினையெச்சத்தின் திரிபாகிய 'ஏல்' என்றது - இங்கே ஏதுப்பொருளை விளக்கிற்று. இழப்பதோ - இழப்பது தகுதியன்று என்றவாறும். (௪0)

விண்டுநீங்கினருடலுகுபிறங்கல்வெண்ணீறு
கண்டுதுண்ணெனுமனத்தினன்கபிலமாமுனிதன்
புண்டரீகமென்றாடொழுதெழுந்தனன்புகலக்
கொண்டுபோகநின்னிவுளியென்றுற்றதுங்குறித்தான்.

(இ - ள்.) (சேர்ந்த அம்சுமான் அவ்விடத்தில்), விண்டு நீங்கினர் - இறந்தொழிந்த தன் சிறுதாதையரது, உடல் - உடம்புகள், உகு - சிந்தின, பிறங்கல் வெள் நீறு - மலைபோன்ற வெண்ணிறச்சாம்பர்க்குவியலை, கண்டு - பார்த்து, துண்ணெனும் மனத்தினன் - திடுக்கிட்ட நெஞ்சையுடையவனாய், கபில மா முனிதன் புண்டரீகம் மென் தாள் தொழுது - கபிலமகாமுனிவரது தாமரைமலர்போல மென்மையான திருவடிகளிலே விழுந்து வணங்கி, எழுந்தனன் - எழுந்துநின்று, புகல - (தான் குதிரையைக் கொண்டுபோவதற்குவந்த செய்தியைச்) சொல்ல, (கபிலர்), நின் இவுளி கொண்டு போக என்று - உனது குதிரையை அழைத்துக்கொண்டு போவாய் என்று சொல்லி, உற்றதும் குறித்தான் - நடந்தசெய்தியையுஞ் சொன்னார்; (எ - று.)

விண்டு - இறந்தகாலவினையெச்சம்: விள் - பகுதி; விள்ளுதல் - இங்கே, உடம்பினின்று உயிர் நீங்குதல். பிறங்கல் - விளங்குதல்; இத்தொழிற்பெயர், நெடுந்தூரத்திலுள்ளாருங் காணும்படி உயர்ந்துநின்ற மலைக்கு ஆகுபெயர். துண்ணெனல் - விரைவச்சக்குறிப்பு. உற்றது - இந்திரன்குதிரையைக்கொணர்ந்து ஒளித்ததும், அதனை அறியாது தம்மை வைத சகரகுமாரர்கள் தமது கோபத்தீக்கு இலக்கானதும். 'புகழ' என்ற பாடத்துக்கு, துதிக்க வென்று உரை. (௪௧)

பழுதிலாதவனுரைத்தசொற்கேட்டலும்பரிவாற்
றொழுதுவாம்பரிகொணர்ந்தவிசுரர்களுக்கீயா
முழுதும்வேள்வியைமுற்றுவித்தரசனுமுடிந்தா
னெழுதுகீர்த்தியாய்மைந்தனுக்கரசியலீந்து.

(இ - ள்.) எழுது கீர்த்தியாய் - (யாவராலும் நூல்களிலே) எழுதப்படுகின்ற புகழையுடைய ஸ்ரீராமனே! பழுது இலாதவன் உரைத்த சொல் கேட்டலும் - குற்றமில்லாத அம்முனிவர் சொன்ன வார்த்தையைக் கேட்ட பின்பு, பரிவால் தொழுது - (அஞ்சுமான் அவரை) அன்பால் வணங்கி, வாம் பரி கொணர்ந்து - தாவிச்செல்லுந்தன்மையுள்ள அக்குதிரையைக் கொண்டுவர, அரசனும்-சகரனும், சுரர்களுக்கு அவி ஈயா - தேவர்களுக்கு அவிசைக் கொடுத்து, வேள்வியை முழுதும் முற்றுவித்து - யாகத்தை முழுவதும் பூர்த்திசெய்துவிட்டு, (பின்பு), மைந்தனுக்கு அரசு இயல் ஈந்து - அவ்வம்சுமானுக்கு அரசாட்சியுரிமையைக் கொடுத்து, முடிந்தான் - இறந்தான்.

பழுது - காமம் வெகுளி மயக்கம் முதலியன. பரிவால் - இரக்கத்தோடென்றுமாம். கொணர்ந்து - கொணர; இது - எச்சத்திரிபு: கொணு - பகுதி; குறுக்கலும், விரித்தலும் - விகாரங்கள். இங்ஙனங்கொள்ளாவிட்டால் வாக்கியமுடிபு அமையாது. அவி - வடசொற்சிதைவு; அது - தேவர்களின்பொருட்டென்று மந்திரத்தைச்சொல்லி நெருப்பிற்போகடும் நெய்முதலிய உணவு. எழுது கீர்த்தி - யாவரும் அவரவர்மனத்திற் பதியவைத்துக்கொள்ளுங் கீர்த்தியென்றும், ஆங்காங்கு வெற்றித்தம்பம்நாட்டி நிலைநிற்க எழுதிய கீர்த்தியென்றுமாம். 'சீர்த்தி' என்னும் பாடத்துக்குப் பெரும்புகழெனக; "சீர்த்தி மிகுபுகழ்" இது தொல்காப்பியம். (சுஉ)

சகரர்தொட்டலாற்சாகரமெனப்பெயர்தழைப்ப
மகரவாரிதிசிறந்ததுமகிதலமுழுது
நிகரின்மைந்தனைபுரந்தனனிவனெடுமரபிற்
பகிரதன்னெனும்பார்த்திபன்வந்தனன்பரிவால்.

(இ - ள்.) சகரர் தொட்டலால் - சகரகுமாரர்கள் தோண்டியதனால், சாகரம் என பெயர் தழைப்ப - சாகரமென்று பெயர்விளங்க, மகரம் வாரிதி - மீன்களையுடைய கடலானது, சிறந்தது - சிறப்புப்பெற்றது; மகிதலம் முழுதும் - பூமியினிடம்முழுவதையும், நிகர் இல் மைந்தனை - ஒப்பில்லாத குமாரனாகிய அம்சுமானை, புரந்தனன் - காத்துவந்தான்; இவன் நெடு மரபில் - இவனது நீண்ட [பெரிய]வம்சத்திலே, பகிரதன் எனும் பார்த்திபன் - பகீரதனென்னும் அரசன், பரிவால் - அன்போடு, வந்தனன் - தோன்றினான்.

சாகரம் - வடமொழித்தத்திதாந்தநாமம். மகரம் - சுறாமீன்; அல்லது, முதலை: இது - மற்றை நீர்வாழுயிர்களுக்கும் உபலக்ஷணம். வாரிதி - நீர்தங்குமிடம். மகிதலம் - மஹீதலம்; வடசொற்றிரிபு. கீழ்க்கவியிலும் இக்கவியிலும் 'மைந்தன்' என்பதற்குப் போசனனென்று உரைத்தல் முதனூலோடும் பிறநூலோடும் மாறுபடக்கூறலாமென மறுக்க. அம்சுமானதுகுமாரன் திலீபனும், திலீபனது மகன் பகீரதனும் என அறிக. பகிரதன் - எதுகை நோக்கிய குறுக்கல்விகாரம். பார்த்திபன் - பார்த்திவன் என்னும்வடமொழித்திரிபு; வடமொழியில்வகரம் தமிழிற்பகரமாயும், வடமொழியிற்பகரம் தமிழில்வகரமாயும் மாறித்திரியும்: சுக்கிரீபன், தசக்கிரீபன், அபராங்கம் என்பனவும்; பாவம், கோவம், பாதவம் என்பனவுங்காண்க. பார்த்திவனென்பதற்கு - பிருதிவியையாளுபவனென்று பொருள்: பிருதிவி - பூமி; பிருதி என்னுஞ் சக்கரவர்த்தியாற் சீர்திருத்தப்பட்டமைபற்றிவந்த காரணக்குறி. 'பகிரதன் பரிவால்வந்தனன்' என்றது, தனது குலமுன்னோராகிய சகரகுமாரரிடத்து மற்றைஅம்சுமான்முதலியோரினும் இவன் அன்புடையனாய் அவர்களை நற்கதிபெறுத்தும்பொருட்டுத்தான்மிகவருந்திப் பற்பலகாலம் அருந்தவம்புரிந்து கங்கைகொணர்ந்த கருணையுடையோனாதலின்; இனி, பரிவால் திகிரியை உருட்டி [அரசாண்டு] என வருங்கவியில் இயைத்தலுமாம். பகிரதன்னெனும் — ன் - விரித்தல். தொட்டலால், தொடு - பகுதி, டகரவொற்று - விரித்தல்விகாரம். 'தொட்டதால்' என்னும்பாடத்துக்கு, டகரவொற்று இரட்டி இறந்தகாலங் காட்டிற்றென்க. (சுங)

உலகம்யாவையும்பொதுவறத்திகிரியையுருட்டி
யிலகுமன்னவனிருந்துழியிறந்தமைவினவ
வலகிறொன்முனியுரைத்திடக்கேட்டனனரசன்
றிலகமண்ணுறவணங்கினின்றொருமொழிசெப்பும்.

(இ - ள்.) உலகம் யாவையும் - எல்லாவுலகங்களிலும், பொது அற - (அவை பலஅரசர்க்குப்) பொதுவாயிருக்குந்தன்மை நீங்கித் தன்னொருவனுக்கே உரியனவாம்படி, திகிரியை உருட்டி - ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்தி, இலகும் - விளங்குகின்ற, மன்னவன் - பகீரதசக்கரவர்த்தி, இருந்த உழி - அரசாண்டிருந்தபொழுது, (ஒருநாள்), இறந்தமை வினவ - (சகரர்கள்) மரித்தசெய்தியை (என்னென்று) கேட்க, அலகு இல் தொல் முனி உரைத்திட - (தவமகிமைக்கு ஒரு) எல்லையில்லாத பழமையானவசிட்டமுனிவர்(நடந்ததைச்) சொல்ல, அரசன் - பகீரதன், கேட்டனன் - கேட்டு, திலகம் மண் உற வணங்கி நின்று - (தனது நெற்றியிலுள்ள) திலகம் நிலத்திலேபடும்படி (தனதுகுலகுருவாகிய அம்முனிவரைச் சாஷ்டாங்கமாக) நமஸ்கரித்து (எழுந்து) நின்று, ஒரு மொழி செப்பும் - (அவரைநோக்கி) ஒருவார்த்தை கூறுவான்; (எ - று.)—அதனை மேலிற்கவியிற் காண்க.

யாவை - யாவினா எஞ்சாமைப்பொருளது. ஆஜ்ஞையைச் சக்கரமென்றல் கவிமரபு. 'திகிரி' என்றதற்கு ஏற்ப, 'உருட்டி' என்றார். உருட்டி என்பதில், உருட்டு - பகுதி; அது - உருள்என்பதன்பிறவினை: இ - விகுதி. இருந்துழி - விகாரம். அரசன் - ராஜன்என்னும்வடசொல்லின்திரிபு. செப்பு - தெலுங்கினின்றுவந்துவழங்கிய திசைச்சொல். திலகம் - நெற்றிப்பொட்டு.

கொடியமாமுனிவெகுளியின்மடிந்தவெங்குரவர்
முடியநீணிரயத்தினிலழுந்திடுமுறைமை
கடியுமாறெனக்கருந்தவமதற்குறுகரும
மடிகள்சொற்றுகவென்றலுமந்தணனறைவான்.

(இ - ள்.) 'கொடிய மா முனி - கோபத்தாற் கொடுமையையுடைய கபிலமாமுனிவரது, வெகுளியின் - கோபத்தினால், மடிந்த - இறந்துபோன, எம் குரவர் - எமது குலத்து முன்னோர்கள், முடிய - முழுவதும், நீள் நிரயத்தினில் - பெரிய நரகத்திலே, அழுந்திடும் - ஆழ்ந்திவருந்துகிற, முறைமை - தன்மையை, கடியும் ஆறு - நீக்கும்படி, எனக்கு அரு தவமதற்கு - யான் அருமையான தவத்தைச் செய்தற்கு, உறு - இசைந்த, கருமம் - தொழிலை, அடிகள் - சுவாமிகளே! சொற்றுக - சொல்லியருள்வீராக,' என்றலும் - என்று பிரார்த்தித்தவளவில், அந்தணன் - அழகிய அருளையுடைய வசிட்டர், அறைவான் - சொல்பவரானார்; (எ - று.)— அது மேற்கவியிற் கூறுகிறார்.

குரவர் - குருஎன்பதன் பன்மையாகிய குரவஃ என்னும் வடசொல்லின் திரிபு; பெரியோர்என்றுபொருள். முனிவர்களது கோபத்தாலும் சாபத்தாலும் இறந்தவர்களுக்கு நற்கதியில்லையென்பது நூற்றுணிபு. அடிகள் - ஆசாரியர்; பெரியவர் என்று பொருள்: பாதாஃ என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. சொற்றுக என்பதில், சொல் - பகுதி; து - சாரியை, லகரதகரங்கள் சந்தியால் றகரமாத்திரிந்தது. இனி, இக்கவிக்கு - மடிந்த எம் முன்னோர் நரகத்திலழுந்திடுந் தன்மையை நீக்கும்விதமே எனக்கு அருந்தவமாகும் அதற்கு இசைந்தகாரியத்தைச் சொல்லவேண்டும் என்று உரைப்பாருமுளர். அடிகள் - அண்மைவிளி. (௬௫)

வையமாளுடைமன்னவர்மன்னவமடிந்தோ
ருய்பநீடவமொழிவறுபகலெலாமொருங்கே
செய்யநாண்மலர்க்கிழவனைநோக்கிநீசெய்தி
நையலென்றினிதுரைத்தனனவையறுமுனிவன்.

(இ - ள்.) 'வையம் ஆள் உடை மன்னவர் மன்னவ - பூலோகத்தை அரசாளுதலையுடைய அரசர்களுக்கு அரசனே! மடிந்தோர் உய்ய - இறந்த உன்பிரபிதாமகர் நற்கதிபெறும்படி, நீ—, செய்யநாள்மலர்க் கிழவனை நோக்கி - சிவந்த புதிய தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பிரமனைக் குறித்து, ஒழிவு அறு பகல் எலாம் - முடிவில்லாத [அனேக] நாள், ஒருங்க - ஒருசேர [இடைவிடாமல் என்றபடி], நீள் தவம் செய்தி - பெரிய தவத்தைச்செய்வையாக; நையல் - மனம்வருந்தாதே', என்று—, நவை அறு முனிவன் - குற்றமற்ற வசிட்டர், இனிது உரைத்தனன் - இனிமையாகச் சொல்லியருளினார்; (எ - று.)

மலர்க்கிழவன் - நாபீகமலத்திற்கு உரியவன். நையல் - எதிர்மறை யேவலொருமைமுற்று. (சசு)

ஞாலம்யாவையுஞ்சுமந்திரன்றன்வயினல்கிக்
கோலுமாதவத்திமகிரிமருங்கினிற்குறுகிக
காலமோர்பதினாயிரமருந்தவங்கழிப்ப
மூலதாமரைமுழுமுதற்கிழவன்முந்தினனே.

(இ - ள்.) (உடனே பகீரதன்), ஞாலம் யாவையும் - (தான் ஆளுகின்ற) உலகம் முழுவதையும், சுமந்திரன் தன்வயின் - (தனது முதல்மந்திரியான) சுமந்திரனென்பவரிடம், நல்கி - (அரசாளும்படி) கொடுத்து [ஒப்பித்துவிட்டு என்றபடி], கோலும் மா தவத்து - பெரிய தவத்தைச் செய்தற்குரிய இடமாகிய, இமகிரி மருங்கினில் - இமவத்பருவதத்தினிடத்திலே, குறுகி - போய்ச்சேர்ந்து, காலம் ஓர் பதினாயிரம் - ஒருபதினாயிரம் வருஷகாலத்தை, அரு தவம் கழிப்ப - அருமையான தவத்தைச் செய்து கழிக்க, (பின்பு), மூல தாமரை - ஆதியான (விஷ்ணுவினது திருநாபித்) தாமரை மலரிலே தோன்றின, முழு முதல் கிழவன் - (எல்லாப்பிராணிகளுக்கும்) முதல்வனாகிய பிரமதேவன், முந்தினன் - (எதிரிற்) பிரதியக்ஷமானான்; (எ - று.)

'ஞாலம்யாவையும்' எனப் பன்மையாகக் கூறியது, நிலவுலகந்தான் எழுதீவுகளாய் ஐம்பத்தாறுதேசங்களாய் அனந்தநகரங்களாய்ப் பலபகுப்புக்களையுடைமையால். சுமந்திரன் என்பதற்கு - நல்ல ஆலோசனையுடையவனென்று பொருள்; மந்திரியென்னும் பெயரிலும், மந்திரம் - ஆலோசனையேயாம். இமகிரி - பனிமயமான மலை; இமம் - பனி: ஹிமமென்னும் வடசொல்லின் திரிபு. இங்கே 'காலம்' என்றது, அகண்டமாய்ச் செல்லுகின்ற காலத்தினது ஒருகண்டமாகிய வருஷத்தை; மேல் ஐம்பதாங்கவியிலுங் காண்க. முழுமுதல் மூலதாமரைக் கிழவன் என இயைத்து - முதலாவார்யாவர்க்கும் முதலாகிய திருமாலின் திருவுந்தியந்தாமரைக்கு உரியவனென்றுமாம். வயின் - ஏழனுருபு. தவம் கழிப்ப - தவத்திலே கழிக்க. கோலுமாதவத்து - மாதவத்தைக்கோலுமென மாறுக. "பந்திக் கமலத் தடங்குமுரங்கர் படைப்பழிப்பு, சிந்தித் திடுவது மில்லைகண்டீர் திசைமுகனே, உந்திக் கமலம் விரிந்தால் விரியு முகக்கடையின், மூந்திக் குவியிலுடனே குவியும் மூதண்டமே" ஆதலால், 'மூலதாமரை' எனப்பட்டது. கிழவன் - முன்னோன் என்றுமாம். (சஎ)

நின்பெருந்தவம்வியந்தனனினதுநீள்குரவர்
முன்பிறந்தனராருந்தவன்முனிவினாதலினான்
மன்பெரும்புவிதனில்வானதிகடிகணுகி
யென்புதோயுமேலிருங்கதிபெறுவரென்றிசைத்தான்.

இதுவும், மேலைக்கவியும் - பிரமன் வார்த்தை.

(இ - ள்.) (எதிர்ப்பட்ட பிரமன் பகீரதனைநோக்கி), 'நின் பெரு தவம் வியந்தனம் - உனது சிறந்த தவத்தை (க்கண்டு யாம்) ஆச்சரியப்பட்டோம்; நினது நீள் குரவர் - உனது எண்ணில்அதிகமான குலத்துமுன்னோர்கள், முன்பு - முன்காலத்தில், அரு தவன் முனிவின் இறந்தனர் ஆதலால் - பெரிய தவத்தையுடைய கபிலமுனிவரது கோபத்தால் மரணமடைந்தார்களாகையால், மன் பெரு புவியதனில் வான் நதி கடிது அணுகி என்பு தோயுமேல் - நிலைபெற்ற பெரிய பூலோகத்தில் ஆகாசகங்காநதியானது விரைவிலேவந்து (அதன்புண்ணியதீர்த்தத்தில் அவர்கள் துபொடியான) எலும்பு படியுமானால், (அப்பொழுதுதான்), இரு கதி பெறுவர் - பெரிய உயர் கதியை அடைவர்கள்', என்று இசைத்தான் - என்றுசொன்னான்; (எ - று.)

வியந்தனம் - தனித்தன்மைப்பன்மை. மன்புவி-வினைத்தொகை. விரைவுப்பொருளுணர்த்தும் கடிஎன்னும் உரிச்சொல்லின்மேற் பிறந்த கடிதுஎன்னும் ஒன்றன்பாற்குறிப்புமுற்று, இங்கே விரைந்துஎன்னும்பொருளுணர்த்தி வினையுரியாய்நின்றது. கதி - இறந்தபின்புஅடையும்பதவி. (௬௮)

மாகநன்னதிபுவியிடைவருகின்மற்றவடன்
வேகமாற்றுதல்கண்ணுதற்கன்றிவேறரிதாற்
றோகைபாகனைநோக்கிநீயருந்தவந்தொடங்கென்
றேகினானுலகனைத்துமெவ்வுயிர்களுமீந்தான்.

(இ - ள்.) 'மா கம் நல் நதி - பெரிய ஆகாயத்திலுள்ள சிறந்த கங்காநதியானது, புவியிடை வருகின் - பூமியிலே வருமாயின், அவள்தன் வேகம் ஆற்றுதல் - அந்நதியினது வேகத்தைப் பொறுத்துத் தாங்குதல், கண்ணுதற்கு அன்றி - (நெருப்புக்) கண்ணை நெற்றியிலுடைய சிவனுக்கு எளிதாயிருப்பதல்லாமல், வேறு அரிது - மற்றையோருக்கு அருமையுடையதாம்; ஆல் - ஆதலால், தோகைபாகனை நோக்கி - மயில்போலுஞ்சாயலையுடைய உமாதேவியை வாமபாகத்திற்கொண்ட சிவனைக் குறித்து, நீ—, அரு தவம் தொடங்கு- அருமையான தவத்தைச்செய்யத்தொடங்குவாய்', என்று-என்றும் (பகீரதனுக்குச்) சொல்லியருளி, உலகு அனைத்தும் எவ்வுயிர்களும் ஈந்தான் - உலகங்களெல்லாவற்றையும் எல்லாவுயிர்களையும் படைத்தவனாகிய பிரமதேவன், ஏகினான் - (தன்னுலகத்திற்குச்) சென்றான்.

மாகம் - மஹாகம்என்னும்வடமொழித்திரிபு. வருகின், கு - சாரியை. மற்று - அசை. அவள்தன், தன் - சாரியை. கண்ணுதல் - அன்மொழித்தொகை. வேறு - வேற்றோர்க்குப் பண்பாகுபெயர். ஆல் - ஆதலால்; விகாரம். தோகையென்னும் மயிலிறகின்பெயர், அதனையுடைய மயிலுக்குச் சினையாகுபெயரும், அதுபோன்ற பெண்ணுக்கு உவமையாகுபெயருமாதலால், இருமடியாகுபெயர். 'உயிர்கள்' என்றது - பிராணிராசிகளை; ஆன்மாக்களையன்று: ஜீவாத்மாக்கள் பரமாத்மாவைப்போல நித்தியமாதலாலும், அவற்றைப் பிரமன் படைத்தலாவது உடம்பினுட் புகுத்தலேயாதலாலுமென்க. (௬௯)

மங்கைபாகனைநோக்கிமுன்மொழிந்தனவருடந்
தங்குமாதவம்புரிதலுந்தழனிறக்கடவு
ளெங்குதவந்துநின்கருத்தினைமுடித்துமென்றகன்றான்
கங்கையைத்தொழுதகாலமையாயிரங்கழித்தான்.

(இ - ள்.) (அதுகேட்டு உடனே பகீரதன்), மங்கைபாகனைநோக்கி - பார்வதிதேவியை இடப்பக்கத்திலுடைய பரமசிவனைக்குறித்து, முன் மொழிந்தன வருடம் - முன்னேசொல்லப்பட்டவவ்வளவு [பதினாயிரம்] வருஷ காலம் தங்கு மா தவம் புரிதலும் - நிலைபெற்ற பெரிய தவத்தைச் செய்த வளவில், தழல் நிறம் கடவுள் - நெருப்புப்போன்ற செந்நிறத்தையுடைய சிவபிரான், அங்கு வந்து - (அவன் தவஞ்செய்துநின்ற) அவ்விடத்து வந்து, நின் கருத்தினை முடித்தும் என்று - உனது கருத்தை நிறைவேற்றுவோம் என்றுசொல்லி, அகன்றான் - போய்விட்டார்; (அதன்பின்பு), கங்கையை தொழ - கங்காதேவியை (ப்பிரதியக்ஷமாகப்பெற்று)வணங்குதற்கு, காலம் ஐயாயிரம் கழித்தான் - ஐயாயிரம்வருஷகாலம் (தவத்திலே) போக்கினான்.

முன்மொழிந்தன என்றது, கீழ் நாற்பத்தேழாங்கவியில் 'காலமோர்பதினாயிரமருந்தவங்கழிப்ப' என்றதை. மொழிந்தன - அன்சாரியைபெற்ற பலவின்பால்வினையாலணையும்பெயர்; பெயரெச்சமன்று. வருடம் - வடசொற்றிரிபு. சிவபிரானது நிறம் செய்யதாம். வந்து என்பது, என்று என்பதனோடு இயைந்தது; 'முடித்தும்' என்பதனோடு இயைந்ததாக்கி, கங்கை பூலோகத்துக்கு வருகிற அவ்விடத்து யாம்வந்து உன்எண்ணத்தைப் பூர்த்திசெய்வோம் என்றுமாம். 'நின்கருத்து' என்றது - கங்கையைப் பூமிக்குவருங் காலத்துச் சிவன் ஏற்றுக்கொண்டு தாங்கவேண்டும் என்றதை. (ரு0)

ஒருமடக்கொடியாகிவந்துனதுமாதவமென்
பொருபுனற்கொடிவரினவள்வேகமார்பொறுப்பா
ரரனுரைத்தசொல்விநோதமற்றின்னுநீயறிந்து
பெருகுநற்றவம்புரியெனவரநதிபெயர்ந்தாள்.

(இ - ள்.) (பின்பு), வர நதி - (எல்லாநதிகளுள்ளுஞ்)சிறந்தநதியாகிய கங்காதேவி, ஒரு மடம் கொடி ஆகி - இளமையான கொடிபோன்ற ஒருபெண்ணின் வடிவமாய், வந்து - (அவ்வரசனது எதிரில்)தோன்றி, 'உனது மா தவம் என் - (என்னைநோக்கிச் செய்கின்ற) நின் பெருந்தவம் என்னபயன் கருதியது? பொரு புனல் கொடி - (அலைகள்) மோதுகின்ற நீர்மயமான கங்காநதி, வரின் - வந்தால், அவள் வேகம் ஆர் பொறுப்பார் - அவளது விரைவைத் தாங்க வல்லவரார்? [எவருமில்லையென்றபடி]; அரன் உரைத்த சொல் விநோதம் - சிவபிரான் (உன்கருத்தை நிறைவேற்றுவதாகச்) சொன்ன வார்த்தை விளையாட்டாம்; (ஆதலால்), இன்னும் நீ அறிந்து - மீளவும் (அவர்கருத்தை) நீ (நன்றாய்) அறிதற்கு, பெருகு நல் தவம் புரி - மேன்மேல்வளர்கின்ற சிறந்த தவத்தைச் (சிவனைநோக்கிச்) செய்வாய்', என - என்றுசொல்லிவிட்டு, பெயர்ந்தாள் - சென்றாள்; (எ - று.)

கொடி - வல்லி; அதுபோல மெல்லியளாய் ஒல்கி ஒசிகின்ற இளம்பெண்ணுக்குஉவமையாகுபெயர். 'உனதுமாதவம்என்' என்றது - என்வேகத்தைப் பொறுப்பாருண்டானால் யான்வருதற்குத் தடையில்லையென்று அவனது பிரார்த்தனையை அங்கீகரித்தபடியாம். 'பொருபுனற்கொடிவரின் அவள்' என்றது - தன்னைப்பிறர்போற்கூறிய படர்க்கை; தன்மையிற்படர்க்கைவந்த இடவழுவமைதி. யார்என்னும் வினாப்பெயரின் மரூஉவாகிய ஆர்என்றது, இங்கு இன்மைகுறித்துநின்றது. அரன் - ஹரன் என்னும் வடசொற்றிரிபு; (யுகாந்தகாலத்தில் எல்லாப்பிராணிகளையும்) அழித்தற்குரிய கடவுளென்றும், எப்பொழுதும் தம்மைச்சரணமடைந்த அடியார்களது அருந்துயரை அழிப்பவனென்றும் பொருள்கொள்ளப்படும். கங்கை தனதுவேகத்தைப் பொறுக்குமாற்றல் சிவபிரானுக்கு இல்லையென்றுகருதிச் செருக்கி, 'அவன்

சொன்னபடிசெய்யான்' என்றாள். மற்று - வினைமாற்று. இன்னும் - எதிர் காலங்குறிப்பதொருஇடைச்சொல். அறிந்து - அறிய என்னும் எச்சத்தின் திரிபு; இனி, (யான்கூறியதை) உணர்ந்து என்றும் உரைக்கலாம். (நக)

காரந்தைமத்தமொடெருக்கலர்கூவிளைகடுக்கை
நிரந்தபொற்சடைநின்மலக்கொழுந்தினைநினையா
வரந்தையுற்றவனிரண்டரையாயிரமாண்டு
புரிந்துநற்றவம்பொலிதரவரைமகள்புனிதன்.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ-ள்.) அரந்தை உற்றவன் - (தனதுமூதாதையரைக்குறித்தும் கங்கைசொன்னவார்த்தையைக் கேட்டும்) துன்பமடைந்தவனாகிய பகீரதன், காரந்தை - கார்ந்தைச்செடியின்பூவும், மத்தமொடு - ஊமத்தம்பூவும், எருக்கு அலர் - எருக்கம்பூவும், கூவிளை - வில்வபத்திரமும், கடுக்கை - கொன்றைப்பூவும், நிரந்த - கலந்துநிறைந்த, பொன் சடை - பொன்னிறமான(கபர்த்தமென்னுஞ்) சடையினையுடைய, நின்மலம் கொழுந்தினை - குற்றமில்லாத அக்கினி[illegible]லை வடிவமான பரமசிவத்தை, நினையா - தியானித்து, புரிந்து - வி[illegible]வி [பக்தியுடனே யென்றபடி], இரண்டரை ஆயிரம் ஆண்டு - இரண்டா[illegible]தைந்நூறுவருடம், நல் தவம் பொலிதர - நல்ல தவத்திலே விளங்[illegible]ன்பு), வரைமகள் புனிதன் - பார்வதியின்கணவனான பரிசுத்த மூர்த்தியான பரமசிவன், (எ-று.)—'எதிர்ந்து'எனப்பின்கவியோடுஇயையும்.

முதலடியில் காரந்தை மத்தம் கடுக்கை என்னும் மூன்றும் - அதனதன் மலருக்கும், கூவிளை - அதன் இலைக்கும் முதலாகுபெயர்; இனி, அலர் என்பதைக் காரந்தை மத்தம் கடுக்கைகளோடு இயைத்தலுமாம். காரந்தை-ஓர்பூடு; இஃது - அஷ்டாதசமூலத்துள் ஒன்று. மத்தம் - முதற்குறை விகாரம். கூவிளை என்பது - அகரவீறாக 'கூவிள' எனவும், மகரவீறாக 'கூவிளம்' எனவும் வழங்கும். நின்மலம் - நிர்மலம்: விகாரம்; மலரகிதம் என்றபடி. கொழுந்து - அனற்பிழம்பு. பகீரதப்பிரயத்தனமென்று இப்பொழுதும் பிரசித்தமாக யாவராலுஞ் சொல்லப்படுகின்ற அவனது இடையூற்றுக்கஞ்சிஇடையிலேவிடாதபெருமுயற்சியைக் கருதிக் கவி வியந்து இரங்கி 'அரந்தையுற்றவன்' என்ற பெயராற் கூறினார். இமயமலைக்கு உரிய ஆண்தெய்வம் உமாதேவியைநோக்கிப் பலகாலந் தவம்புரிந்து 'எனக்கு ஒருகால் நீ மகளாகத்தோன்றி உனக்குத் தந்தையாகும்பெருமையைத் தந்தருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, அவ்வேண்டுகோளை நிறைவேற்றும்பொருட்டு அம்பிகை தக்ஷன்மகளான உருவத்தை ஒழித்த பொழுது மலையரசனுக்கு மேனையினிடம் மகளாக அவதரித்தனளென்பது புராணகதை; பருவதத்தின் மகளானதனால், கௌரிக்குப் பார்வதியென்று ஒருபெயர். (நூஉ)

எதிர்ந்துநின்னினைவென்னெனவிறைஞ்சியெம்பெரும
வதிர்ந்துகங்கையீதுறைந்தனளென்றனுமஞ்சேல்
பிதிர்ந்திடாவகைகாத்துமென்றேகியபின்னை
முதிர்ந்தமாதவமிரண்டரையாயிரமுடித்தான்.

(இ-ள்.) எதிர்ந்து - (சிவபிரான்) பிரதியக்ஷமாகி, (பகீரதனை நோக்கி), நின் நினைவு என் என - உனது எண்ணம் என்னவென்று கேட்க, (அவ்வரசன்), இறைஞ்சி - வணங்கி, 'எம் பெரும - எமதுதலைவனே! கங்கை-கங்காநதியானவள், அதிர்ந்து - முழங்கிவந்து, ஈது - (யானுரைத்த சொ

ல்வினோதம் என்ற) இவ்வார்த்தையை, அறைந்தனள் - சொல்லினாள்,' என்றலும் - என்றுசொன்னவளவில், (உருத்திரமூர்த்தி அவனைநோக்கி), 'அஞ்சேல் - (நீ) பயப்படாதே; பிதிர்ந்திடாவகை - (கங்கைநீர் சிறிதும்) சிந்தாதபடி, காத்தும் - (அதனைத் தடுத்துப் பூமியை) இரக்ஷித்தருள்வோம்,' என்று - என்றுசொல்லி, ஏகிய பின்றை - சென்றபின்பு, இரண்டரைஆயிரம் - இரண்டாயிரத்தைந்நூறுவருஷம், முதிர்ந்த மா தவம் - சிறந்த பெருந்தவத்தை, முடித்தான் - (மீண்டும் கங்கையைநோக்கிச் செய்து) நிறைவேற்றினான்; (எ - று.)

பெரும - பெருமான் என்பதன்விளி; ஈறுகெட்டு ஈற்றயல் குறுகினது விளியுருபு. அதிர்ந்து - குமுறி; இதனை 'அதிர' என்னும் எச்சத்தின் திரிபாகக்கொண்டால், யான் கேட்டு நடுங்கும்படி கங்கை இதனைக்கூறினளென்று பொருள்படும். இரண்டரையாயிரம் - எண்ணலளவாகுபெயர். (௫௩)

பெருகுநீரொடுபூதியும்வாயுவும்பிறங்கு
சருகும்வெங்கதிரொளியையுந்துய்த்துமற்றதையும்
பருகலின்றியுமுப்பதினாயிரம்பருவ
முருகுகாதலின்மன்னவனருந்தவமுயன்றான்.

இதனால், இங்ஙனம் பகீரதன் பிரமனைக்குறித்துப் பதினாயிரமும் சிவனைக்குறித்துப் பதினாயிரமும் கங்கையைக்குறித்து ஐயாயிரமும் மீண்டும் சிவனைக்குறித்து இரண்டரையாயிரமும் மீண்டும் கங்கையைக் குறித்து இரண்டரையாயிரமும ஆக முப்பதினாயிரம்வருஷகாலம் இடைவிடாது நெடுந்தவம்புரிந்த அருமையைக் கவி வியந்து கூறுகிறார்.

(இ - ள்.) மன்னவன் - பகீரதராசன், பெருகும் நீரொடு - வழியுந்தன்மையுள்ள ஜலத்துடனே பூதியும் - சாம்பலையும், வாயுவும் - காற்றையும், பிறங்கு சருகும் - விளங்குகின்ற உலர்ந்த இலைகளையும், வெம் கதிர் ஒளியையும் - வெவ்விய சூரியகிரணத்தையும், துய்த்தும் - (முதலில்) உண்டுவந்தும், மற்று - பின்பு, அதையும் பருகல் இன்றியும் - (நீர்முதலிய) அவ்வுணவுகளுளொன்றையும் உண்ணுதலில்லாமலும், முப்பதினாயிரம்பருவம் - முப்பதினாயிரம்வருஷகாலம், முருகு காதலின் - முதிர்ந்தஅன்புடனே, அருந்தவம் முயன்றான் - அரிய தவத்தைச் செய்தான்; (எ - று.)

அது - சாதியொருமை. 'அவை' என்றும், 'எதை' என்றும் பாடம். நீருக்குஉரிய குடித்தலென்னும்பொருளைத்தருகிற பருகலென்னுஞ் சிறப்புவினை, இங்குப் பொதுவினையாய்நின்றது; இனி, 'பருகல்' என்றவினைக்கு ஏற்ப, அதையும் என்பதற்கு - நீரையும் என்றும் உரைக்கலாம். (௫௪)

உந்தியம்புயத்துதித்தவனுறைதருமுலகு
மிந்திராதியருலகமுநடுக்குறவிரைத்து
வந்துதோன்றினள்வரநதிமலைமகள்கொழுநன்
சிந்திடாதொருசடையினிற்கரந்தனன்சேர.

(இ - ள்.) (பகீரதன் மீண்டுந் தவமுடித்தபின்பு), வர நதி - சிறந்த நதியான கங்கை, உந்தி அம்புயத்து உதித்தவன் உறைதரும் உலகும் - (திருமாலின்) திருநாபிக்கமலமலரிலேதோன்றின பிரமன் வசிக்கிற சத்தியலோகமும், இந்திர ஆதியர் உலகமும் - இந்திரன்முதலான தேவர்களது (சுவர்க்கமுதலிய) லோகமும், நடுக்கு உற - நடுங்குதலையும்படி, இரைத்து - ஆரவாரித்து, வந்து தோன்றினள் - (பூலோகத்தில்) வந்து சேர்ந்தாள்; (அங்ஙனஞ்சேர்கையில்), மலைமகள் கொழுநன் - பார்வதிபதியான

பரமசிவன், ஒரு சடையினில் - தனது ஒப்பற்ற சடையிலே, சிந்திடாது - (அக்கங்கைநீர் சிறிதும்) வெளிச்சிந்தாதபடி, சோ-முழுவதையும், கரந்தனன் - மறைத்தருளினன்; (எ - று.)

அம்புயம் - அம்புஜம்; நீரிற்பிறப்பது. நடுக்கு - முதனிலைதிரிந்ததொழிற்பெயர். ஒரு சடையினில்-தமதுசடையின் ஒருபாகத்திலே என்றுமாம்.

புன்னுனித்தருபனியெனவரநதிபுனிதன்
சென்னியிற்கரந்தொளிதரவணங்கினன்றிகைத்து
மன்னனிற்றலும்வருந்தனஞ்சடையள்வானநதியின்
றென்னவிட்டனனொருசிறிதவனிபோந்திழிந்தாள்.

(இ - ள்.) புல் நுனி தரு பனி என - புல்லின் நுனியிலே தங்கிய பனியினீர்த்துளிபோல, வர நதி - சிறந்த கங்காநதி, புனிதன் சென்னியில் - பரிசுத்தனான சிவனது சிரசிலே, கரந்து ஒளிதர - மறைந்து ஒளிக்க, மன்னன்-பகீரதன், திகைத்து-(நதியைக் காணாமல்) மனமயங்கி, வணங்கினன் நிற்றலும் - (சிவபிரானை) நமஸ்கரித்து நின்றவளவில், (அக்கடவுள் பகீரதனைநோக்கி), 'வருந்தல் - மனம்வருந்தாதே, வான் நதி - ஆகாசகங்காநதி, இன்று - இப்பொழுது, நம் சடையள் - நமது சடையினிடத்துள்ளாள்' என்ன - என்றுகூறி, ஒரு சிறிது விட்டனன் - மிகச்சிறியதொருபாகத்தை வெளிவிட, அவனி போந்து இழிந்தாள் - (கங்கை) தரையிலே வந்து இறங்கினாள்; (எ - று.)

நிலத்திற் கங்கை இழியாவிட்டால் முன்னே கங்கை தேவலோகத்திலிருந்ததோடு இப்போது சிவபிரான்சடையிலிருக்கிறதோடு வாசியில்லையாதலால், பகீரதன் திகைத்துநிற்பானாயினன். போந்து -புகுந்து; மரூஉமொழி.

இழிந்தகங்கைமுன்மன்னவன்விரைவொடும்ஏகக்
கழிந்தமன்னவர்கதிபெறமுடுகியகதியா
லழுந்துமாதவச்சன்னுவின்வேள்வியையழிப்பக்
கொழுந்துவிட்டெரிவெகுளியன்குடங்கையிற்கொள்ளா.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) இழிந்த கங்கை முன் - (இங்ஙனம்) இறங்கின கங்காநதிக்கு முன்னே, மன்னவன் விரைவொடும் ஏக - பகீரதன் வேகமாய்ச்செல்ல, (அக்கங்கை), கழிந்த மன்னவர் கதி பெற முடுகிய கதியால் - (முன்னே) இறந்த சகராசர்கள் நற்கதியைப்பெறும்பொருட்டுத் தான்விரைந்துசெல்கின்ற நடைவேகத்தால், அழுந்து மா தவம் சன்னுவின் வேள்வியை அழிப்ப - (பெருந்தவத்திலே) மனமபதிந்துள்ள ஜஹ்நு என்னும் முனிவரது யாகத்தை அழிக்க, (அவர்), கொழுந்துவிட்டு எரி வெகுளியன் - சுவாலைவிட்டு எரிகின்ற கோபாக்கினியையுடையவராய், குடங்கையில் கொள்ளா - தமது அகங்கையிலே (அக்கங்கைநீர்முழுவதையும்) முகந்துகொண்டு, (எ - று.)—'உண்டுவந்தனன்' என அடுத்தகவியுடன் இயையும்.

முன் - இடமுன்; காலமுன்னுமாம். சனு வடசொற்றிரிபு. குடங்கை - உள்ளங்கை.

(நின)

உண்டுவந்தனன்மறைமுனிக்கணங்கள்கண[illegible]வப்பக்
கண்டுவேந்தனும்வணங்கிமுனிகழ்ந்தன[illegible]மறக்
கொண்டுபோகெனச்செவிவழிகொடுத்தன[illegible]குதித்து
விண்டுநீங்கினருடனுகுமபொடியின்மேவின[illegible]

(இ - ள்.) (சன்னுமுனிவர் கங்கைநீர்முழுவதையும்), மறை முனி கணங்கள் கண்டு உவப்ப - (தம்முடனிருந்த) வேதம்வல்ல முனிவர்களாகிய கூட்டங்கள் பார்த்து மகிழும்படி, உண்டு உவந்தனன் - குடித்துக் களித்தார்; வேந்தனும் - பகீரதனும், கண்டு - (அதனைப்) பார்த்து, வணங்கி - (முனிவரை) நமஸ்கரித்து, முன் நிகழ்ந்தன கழற - முன்னே நடந்த செய்திகளெல்லாவற்றையும்(ஆதியோடந்தமாய்ச்)சொல்ல,(அதுகேட்டு அம்முனிவர் இரங்கி), கொண்டு போகு என-(ஆனால்)அழைத்துக்கொண்டுபோவாய் என்றுசொல்லி, செவி வழி - காதின்வழியாக, கொடுத்தனன் -(நதியைக்) கொடுத்தருளினர் [நீரைப் பெருகவிட்டாரென்றபடி]; (உடனே கங்கையானவள்), குதித்து-(அவர்செவியினின்றும்) இறங்கி, விண்டு நீங்கினர் உடல் உகு பொடியில் மேவினள் - (முன்) இறந்துபோன சகரர்களது உடம்புகள் சிதைந்த சாம்பலிலே போய்ச் சேர்ந்தாள்; (எ - று.)

உண்டு-பொதுவினை இங்குச்சிறப்பாய்நின்றது. உவப்புக்குக்காரணம், தம்வேள்வியை அழிக்கவந்தயாற்றைத் தாம் அழித்துவிட்டது. மறைமுனி-வேதங்களைத் தாம் ஓதுதலும்,பிறர்க்கு ஓதுவித்தலும், அவற்றின் விதிப்படி ஒழுகுதலும் உடைய முனிவரென்றபடி. குதித்து - மகிழ்ந்து என்றுமாம்.

நிரையமுற்றியசகரர்கணெடுங்கதிசெல்ல
விரைமலர்ப்பொழிந்தார்த்தனவிண்ணவர்குழாங்கள்
முரைசமுற்றியபல்லியமுறைமுறைமுழங்க
வரைசனப்பொழுதணிமதிலயோத்திமீண்டடைந்தான்.

(இ - ள்.) (உடனே), நிரையம் முற்றிய சகரர்கள் - (முன்னே) நரகத்திற்போய் நிரம்பிய சகரகுமாரர்கள், நெடு கதி செல்ல - உயர்ந்த நற்பதவியிலே சென்று சேர, (அதுகண்டு மகிழ்ந்து), விண்ணவர் குழாங்கள்-தேவசமூகங்கள், விரை மலர் பொழிந்து - வாசனையையுடைய (கற்பகவிருக்ஷங்களின்) பூக்களை (ப் பகீரதன்மேற்) சொரிந்து, ஆர்த்தன - ஆரவாரஞ்செய்தன; முரைசம் - பேரிகைகளும், முற்றிய பல் இயம் - நிறைந்த வேறு பலவகைவாத்தியங்களும், முறைமுறை முழங்க - வரிசை வரிசையாகக் கோஷிக்க, அரைசன் - பகீரதன், அப்பொழுது—, அணி மதில் அயோத்தி மீண்டு அடைந்தான் - அழகிய மதில்களையுடைய அயோத்தியாபுரிக்குத் திரும்பிவந்து சேர்ந்தான்; (எ - று.)

நிரையம், முரைசம், அரைசன்-நிரயம், முரசம், அரசன் என்பவற்றின் எதுகைநோக்கிய இடைப்போலிகள். ஊதுவனகொட்டுவனமுதலாகப் பலவகைப்படுதலால், 'பல்லியம்' என்றார். முறைமுறை-அடுக்கு, மிகுதிப்பொருளது.

அண்டகோளகைப்புறத்ததாயகிலமன்றளந்த
புண்டரீகமென்பதத்திடைப்பிறந்துபூமகனார்
கொண்டதீர்த்தமாயரன்கொளப்பகிரதன்கொணர
மண்டலத்துவந்தடைந்ததிம்மாநதிமைந்த.

(இ - ள்.) மைந்த - சக்கரவர்த்திதிருமகனே! இம் மா நதி - இந்தப் பெரிய கங்காநதி, அண்டகோளகை புறத்தது ஆய் அகிலம் அன்று அளந்த புண்டரீகம் மென் பதத்திடை - இவ்வண்டவுருண்டைக்கு அப்புறத்திலுள்ளதாய் உலகமனைத்தையும் (திரிவிக்கிரமனாகிய) அக்காலத்தில் அளந்துசென்ற திருமாலினது தாமரைமலர்போன்ற மென்மையான திருவடியிலே, பூமகனார் கொண்ட தீர்த்தம் ஆய்-(அத்திருமாலின் நாபித்) தாமரைமலரிலே தோன்றிய குமாரராகிய பிரமதேவர் (தன்கைக்கமண்டலத்தினின்று சேர்த்துக்) கொண்ட ஸ்ரீபாததீர்த்தமாகி, பிறந்து - தோன்றி, பகி

ரதன் கொணர - பகீரதன்கொண்டுவர, அரன் கொள - சிவபிரான் ஏற்றுக்கொள்ள, மண்தலத்து - பூலோகத்திலே, வந்து அடைந்தது - வந்துசேர்ந்தது ; (எ - று.)

திருமால் உலகமளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்திலேசென்ற அவரதுதிருவடியைப் பிரமன் தன்கைக்கமண்டலதீர்த்தத்தாற் கழுவிவிளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்காநதியாகப்பெருகியதென்று உணர்க. பெரியாழ்வார் "சதுமுகன் கையிற் சதுப்புயன் றாளிற் சங்கரன் சடையினிற் றங்கிக், கதிர்முக மணிகொண் டிழிபுனற் கங்கை" என்று அருளிச்செய்தவாறுங் காண்க. "உலகந் தாய வுயரடி நின்றிழிந், தலரின் மேலவ னங்கை தவழ்ந்திபொற், றிலக வாணுதல் பங்கன் றிரள்சடை, சுலவி வீழ்ந்தது துநதி யிங்ஙனே" என்றார் பாகவதத்தும். (௬௮)

சகரர்தம்பொருட்டருந்தவம்பெரும்பகறள்ளிப்
பகிரதன்கொணர்ந்திடுதலாற்பகிரதியாகி
மகிதலத்திடைச்சன்னுவின்செவிவழிவரலா
னிகரில்சானவியெனப்பெயர்படைத்ததிந்நீத்தம்.

(இ - ள்.) இந் நீத்தம் - இந்தக் கங்காநதியின் நீர் வெள்ளமானது, சகரர்தம்பொருட்டு - சகரகுமாரர்களை நற்கதிசெலுத்துதனிமித்தம், பெரு பகல் அரு தவம் தள்ளி - அனேக நாட்களை அருமையானதவத்திலே கழித்து, பகிரதன் - பகீரதனால், கொணர்ந்திடுதலால் - கொண்டுவரப்பட்டதனால், பகிரதி ஆகி - பாகீரதியென்னும் பெயருடையதாய், மகிதலத்திடை - பூலோகத்திலே, சன்னுவின் செவிவழி வரலால் - ஜஹ்நுமுனிவரது காதுகளின்வழியாக வந்ததனால், நிகர் இல் சானவி என பெயர் படைத்தது - ஒப்பில்லாத ஜாந்ஹவி என்று ஒருபெயரையும் பெற்றது ; (எ - று.)

சகரர், பகிரதி, சானவி-தத்திதாந்தநாமங்கள். சகரர்-சாகரர்என்றும், பகிரதி-பாகீரதி என்றும் வழங்கும். சானவி - வடசொற்சிதைவு. நீத்தம் நீந்தப்படுவது என நீருக்குக் காரணக்குறி; நீந்து - பகுதி, அம் - செயப்படுபொருள்விகுதி, வலித்தல் - விகாரம். பகல் - நாளுக்கு ஆகுபெயர். (௬௯)

என்றுகூறலும்வியப்பினொடுவந்தனரிறைஞ்சச்
சென்றுதீர்ந்தனர்கங்கையைவிசாலைவாழ்சிகரக்
குன்றுபோற்புயத்தரசன்வந்தடியிணைகுறுக
நின்றுநல்லுரைவிளம்பிமற்றவ்வயினீங்கா.

இதுவும், மேற்கவியும்-குளகம்.

(இ - ள்.) என்று கூறலும் - என்று (விசுவாமித்திரர்) சொல்லியருளியவளவில், வியப்பினொடு உவந்தனர் இறைஞ்ச - (கேட்ட ராமலக்ஷ்மணர்) ஆச்சரியத்துடனே மகிழ்ந்து வணங்க, சென்று - (பின்பு மூவரும்) புறப்பட்டுப்போய், கங்கையை தீர்ந்தனர் - கங்காநதியைக் கடந்து, விசாலை வாழ் சிகரம் குன்று போல் புயத்து அரசன் வந்து அடி இணை குறுக - (அவ்விடத்திலே) விசாலாநகரத்தில் வாழ்கின்ற சிகரத்தையுடைய மலைபோன்ற தோள்களையுடையானொரு அரசன் எதிர்கொண்டுவந்து (விசுவாமித்திரரது) உபயபாதத்திற் சேர்ந்து வணங்க, நின்று - (மூவரும் அங்கே சிறிதுபொழுது) நின்று, நல் உரை விளம்பி - இன்சொற்சொல்லிவிட்டு, மற்று - பின்பு, அவ் வயின் நீங்கா - அவ்விடத்தினின்றும் நீங்கி, (எ - று.) —மிதிலைநாட்டடைந்தார் என வருங்கவியோடு இயையும்.

விய[illegible] தொழிற்பெயர்; பு-விகுதி. சிகரம்-மலையுச்சி. தோளுக்குமலையுவமை-வலிமைக்கும், பருமைக்கும், ஆயுதங்களால் அழித்தற்கு அருமைக்கு

மென்க. இக்ஷ்வாகுமகாராசனுக்கு அலம்புசையென்பவளிடம்பிறந்த விசாலனென்பவனால் ஏற்படுத்தப்பட்டதனாலும்விசாலமாயுள்ளதனாலும், இந்நகரத்துக்கு விசாலையென்று பெயர். அவன்வம்சத்துஅரசனாகிய சுமதியென்பவன் இம்மூவரையும் எதிர்கொண்டழைத்துப்போய் உபசரித்தான். கங்கையென்பதற்கு (விஷ்ணுபாதத்திலிருந்து) பூமியையடைந்ததென்று பொருள்.

பள்ளிநீங்கியபங்கயப்பழனநன்னாரை
வெள்ளவான்களைகளைவுறுகடைசியர்மிளிர்ந்த
கள்ளவாணெடுங்கண்ணிழல்கயலெனக்கருதா
வள்ளிநாணுறுமகன்பணைமிதிலைநாடடைந்தார்.

(இ-ள்.) பள்ளி நீங்கிய - நித்திரை ஒழிந்த [சிறிதும் குவிதலின்றி நன்குமலர்ந்த என்றபடி], பங்கயம் - தாமரைகளையுடைய, பழனம் - கழனிகளிலே, நல் நாரை - நல்ல நாரைகள், வெள்ளம் வான் களை களைவுறு கடைசியர் - நீர்ப்பெருக்கத்திலே தோன்றுகிற சிறந்த களைகளைப் பறிக்கின்ற உழவர்மகளிரது, மிளிர்ந்த கள்ளம் வாள் நெடு கண் - பிறழ்கின்ற வஞ்சனையையுடைய வாளாயுதம்போன்றநீண்டகண்களினது, நிழல்-சாயையை, கயல் என கருதா - கயல்மீன்களென்று நினைத்து, அள்ளி - மூக்கினாற் குத்தியெடுத்து, நாணுறும் - (அவை தாம்நினைத்தபடி மீனல்லாமையால்) வெட்கமடைதற்கு இடமான, அகல் பணை - பரந்த மருதநிலஞ்சூழ்ந்த, மிதிலை நாடு - மிதிலாநகரத்தைத் தன்னுள்ளேகொண்ட விதேகநாட்டை, அடைந்தார் - (மூவரும்) சேர்ந்தார்கள்; (எ - று.)

பங்கயம் - பங்கஜம்; சேற்றில்முளைப்பது: இது-அல்லி ஆம்பல் குவளை நெய்தல்முதலிய நீர்ப்பூங்கொடிகள்பலவற்றிற்கும் உபலக்ஷணம். இச்சிறந்த மலர்களன்றி வேறுகளை இன்மைதலால் 'வான்களை' என்றார். களையாவது-பயிரின்வளர்ச்சிக்குவிரோதமாக் அதனோடு முளைத்தெழுகின்ற புல்பூண்டாதியன; இவை - களையப்படுதலால் 'களை' எனப்பெயர்பெற்றன: செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டது. தாமரைமுதலிய நீர்க்கொடிகளையுடைமைக்கும் நீர்வளத்தின்சிறப்புக்கும் நிழல்விளங்குதற்கும் மீனுண்மைக்கும் நீர்ப்பறவை இருத்தற்கும் இடமாக வெள்ளங்கூறினார். இனி, முதலடிக்கு - பழனங்களிலே பங்கயமலர்களிலே பள்ளிநீங்கிய நாரை என்று இயைத்து - அப்பொழுதுதான் துயில்நீங்கிய நாரைகளாதலால் இன்னமுந் தூக்கத்தெளிவை நன்குபெறாமற் கண்ணிழலைக் கயலெனக்கருதின வென்றும் உரைக்கலாம். நாரைக்கு நன்மை - அழகும், வளர்ச்சியும் முதலியன. களைவுறு - களைதற்றொழிலைப்பொருந்திய என்க. களைவு என்னுந் தொழிற்பெயரும் உறு என்னுந் துணைவினையுஞ் சேர்ந்து ஒருசொற்றன்மைப்பட்டுநின்றது. கடைசியர் - மருதநிலத்துப்பெண்கள்; இது - கடையர் என்பதன்பெண்பால். மிளிர்தல் - ஒளிசெய்துவிளங்குதலுமாம். பெண்கள் கண்களுக்குக் களவுத்தன்மையாவது - ஆடவருள்ளத்தைமயக்கிக் கவர்ந்து கொள்ளைகொள்ளுதல். காதளாவிய கண்களென்பார், 'நெடுங்கண்' என்றார். கண்களுக்குக் கயலுவமை - வடிவமும், பிறழ்ச்சியும் பற்றி. வாள் - ஒளியையுடைய என்றுமாம். உபமேயமாகிய கண்களின் நிழலை உபமானமாகிய கயன்மீனென்று கருதி நாரைகள் மயங்கியதாகக் கூறியதனால், மயக்கவணி; வடநூலார் பிராந்திமதலங்காரமென்பர். அள்ளுதல் - முகத்தல். அகல்+பணை=அகன்பணை; சிறுபான்மை அல்வழியில் வலிவர லகரம் னகரமாகத்திரிந்தது. வெள்ளம் - மிகுதியாகிய, களை எனினுமாம். அந்நாட்டிலுள்ள கீழ்ச்சாதிப்பெண்களது அழகும் இத்தன்மையதென்று இதனாற்கூறி, சீதைமுதலிய கட்டழகுடைமகளிர்

வாழ்தற்கிடமான அந்நகரத்தின் சிறப்பை விளக்குகின்றார். 'கடைச்சியர்' எனவும் பாடம். இரண்டாமடியில் 'மெள்ள' என்றும் பாடமுண்டு. (௯௧)

வரம்பில்வான் சிறைமதகுகண் முழவொலிவழங்க
வரும்புநாண்மலரசோகங்களலர்விளக்கெடுப்ப
நரம்பினான்றதேன்றாரைகொணறுமலர்யாழிற்
சுரும்புபாண்செயத்தோகைநின்றாடுவசோலை.

இதுமுதல் ஆறுபாடல்களால் அந்நாட்டின்வருணனை கூறத்தொடங்கி, இதனாற் சோலைகளின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

(இ - ள்.) வரம்பு இல் - அளவிறந்தனவான, வான் சிறை - பெரிய பக்கத்துஇடங்களையுடைய, மதகுகள் —, முழ ஒலி - மத்தளவோசையை, வழங்க - கொடுக்கவும், அரும்பு நாள் மலர் - தோன்றுகின்ற புதிய பூக்களையுடைய, அசோகங்கள் - அசோகமரங்கள், அலர் விளக்கு எடுப்ப - விளங்குகின்ற விளக்குக்களை ஏந்தவும், நரம்பின் நான்ற தேன் தாரை கொள் - (யாழின்) நரம்புபோல ஒழுகுகின்ற தேனின்ஒழுக்கைக் கொண்ட, நறு மலர் - நன்மணம்வீசும் மலர்களாகிய, யாழில் - வீணைகளிலே, சுரும்பு - வண்டுகள், பாண் செய - பாடுதலைச் செய்யவும், சோலை - அந்நாட்டுச்சோலையில், தோகை - மயில்கள், நின்று ஆடுவ - (நிலைபெற்று) ஆடுவன; (எ-று.)

வழங்க, எடுப்ப, செய்ய, ஆடுவ என வினைமுடிக்க. சோலைகளிலுள்ள குளம்முதலியவற்றின் மதகுகளில் நீர்பாய்தலினாலுண்டாகிற ஒலியை மத்தளகோஷமாகவும், அசோகமலர்களை விளக்கின்ஒளிப்பிழம்பாகவும், தேனதாரையை யாழ்நரம்பாகவும், மலரை யாழாகவும், வண்டுகளைப் பாடகராகவும், மயில்களைக் கூத்தாடுமகளிராகவும் உருவகப்படுத்தினார். முழவொலி - முழா என்னுங் குறியதன்கீழ்ஆக் குறுகிற்று. தனது நிழலினால் தண்மையையுஞ் செழுமையால் இனிமையையுந் தந்து தன்னைக்காண்பவரது மனத்திலுள்ள சோகத்தை [சோர்வை] ஒழித்தலால், அசோகமென்று பெயர். அலர்விளக்கு - வினைத்தொகை; அலராகிய விளக்கு என்று உரைத்து, அரும்புநாண்மலரை அசோகத்திற்கு இயற்கையடையாக்கினும் அமையும். நான்ற, நால் - பகுதி. ஆன்ற என்பிரித்து - சிறந்த என்றுமாம். ஆன்ற என்பதில், அல்என்பதன் மரூஉவாகிய ஆல் - பகுதி. தோகை - மயிலுக்குச் சினையாகுபெயர். தோகைநின்றாடுவ சோலை எனஎடுத்து, மயில்கள் நின்று ஆடப்பெறுவன சோலைகள் என்றுமாம். (௯௨)

பட்டவாணுதன் மடந்தையர்பார்ப்பெனுந்தூதா
லெட்டவாதரித்துழல்பவரிதயங்கள்வெறுப்ப
வட்டநாண்மரைமலரின்மேல்வயலிடைமள்ளர்
கட்டகாவியங்கட்கடைகழிப்பனகழனி.

இதனால், கழனிகளின் சிறப்புக் கூறப்படுகின்றது.

(இ - ள்.) பார்ப்பு எனும் தூதால் - (தங்கள்) பார்வையென்கிற தூதினால், எட்ட - ([illegible]வரைச்) [illegible]தற்கு, ஆதரித்து - விரும்பி, உழல்பவர் - சஞ்சரித்திருப்பவர்களின், பட்டம் - பொற்பட்டமணிந்த, வாள் நுதல் - பிரகாசமான நெற்றியையுடைய, மடந்தையர் - உழவர்மகளிரது, இதயங்கள் - மனங்கள், வெறுப்ப - வெறுப்பையடையும்படி, வயலிடை - வயல்களிலே, மள்ளர் - உழவர்கள், வட்டம் நாள் மரை மலரின்மேல் - வட்டவடிவான புதிய தாமரைமலர்களின்மேல், கட்ட - களைபறித்தெறிந்த, காவி - நீலோற்பலமலர்களாகிய, அம் கண் கடை - அழகிய கண்களின் கடைசிகள், கழிப்பன - மிகப்பெறுவன: கழனி - கழனிகள்; (எ - று.)

83213

End

161

1666

Apply to any of the undermentioned :—

1. P. M. Srinivasachariar,
   Tamil Pandit, Presidency College, Madras.

2. V. M. Satakoparamanujachariar,
   Head Tamil Pandit, Ch. of Scot. Miss. College, Madras.

3. Srinivasa Varadachari & Co.,
   Booksellers, Triplicane, Madras.

4. V. Kalyanarama Iyer,
   Bookseller, Esplanade Row, Madras.

5. Thompson & Co.,
   Popham's Broadway, Madras.

6. N. Vijayaragavachariar,
   Bookseller, Popham's Broadway, Madras.

7. Murugesam Chetti,
   Bookseller, Esplanade Row, Madras.

8. K. Krishnasawmy Aiyer,
   Central Book Depôt, Madras.

9. P. Varadachari & Co.,
   Booksellers, Popham's Broadway, Madras.

10. Vencatasam Chetty & Co,
    Booksellers, Triplicane, Madras.